# பாலகுமாரன்

CPL 647120



# இனிது இனிது காதல் இனிது

பாகம் - 1

24

முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1991
இரண்டாம் பதிப்பு : 1995 விசா வெளியீடு
மூன்றாம் பதிப்பு : ஜூலை, 1997
நான்காம் பதிப்பு : பிப்ரவரி, 1999
ஐந்தாம் பதிப்பு : பிப்ரவரி, 2002
ஆறாம் பதிப்பு : பிப்ரவரி, 2007
உரிமை: ஆசிரியருக்கு ©

INITHU INITHU KAADHAL INITHU

647120

By: **Balakumaran**

894.8113
BAL

Sixth Edition: **Feb, 2007**

No. of Pages: 256

Paper used: 11.6 N.S. Book Print

விலை ரூ. 75/-

VISA PUBLICATIONS
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 044-24342899, 24327696
thirumagal_thirupathi@yahoo.co.in

Available at:
THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 044-24342899, 24327696

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 9282152070
Printed at: Udayam offsets, Ph : 28454808

CONN... 21 FEB 2011 CHENNAI-600 ...

**துரை வரதன்**
ஆட்சி அலுவலர்,
துறைமுக அலுவலகம்.
கடலூர் துறைமுகம்
கடலூர்-3.

காதல் என்பது கருத்தொருமித்தவர் காமம் கழித்து, கனிவினைக் கூட்டி நனிமிகு நட்பினை நாளும் வகுத்து அன்பு செய்தேயாம். அறிவர் யாவரும்.

காதலில், வாழ்வில், அன்பினில், பண்பினில் பேதங்கள் காண்பதை, பிரிவினை செய்வதைக் கதையாய்த் துவங்கி, கருத்தினைத் தெளித்து விதையாய் மேவி, விருஷமாய் நின்றாய்.

சித்தனைப் போல் பலர் சிந்தை மயக்கி இத்தனை வாரங்கள் வித்தைகள் புரிந்தாய்... எத்தனைக் கருத்துக்கள்... எத்தனை உவமைகள். அத்தனைச் சொற்களும் அணிமணி, வைரங்கள்.

எப்படி பாலா இப்படி எழுதினாய்? இப்படி எழுதிட எப்படி முடிந்தது? தமிழே, தேனே, தண்டமிழ் வேளே, அமிழ்தே, வாழி நீ ஆயிரமாண்டு.

*27-6-91*

வியப்புடன்,
**துரை வரதன்**

இது
காதலித்து கடிமணம் புரிந்து அக்காதலை
கடவுள் தேடலாய் மாற்றிய என் அன்பு
நண்பர்கள் ராதாவுக்கும் கிரிதருக்கும்
சமர்ப்பணம்

ஆ.மோகன் குமார்

நீடாமங்கலம்,

அமுதா பார்மஸி.

24-6-91

மதிப்பிற்குரிய பாலகுமாரன் அவர்கட்கு,

வணக்கம். ஜூ.வி.யில் முப்பத்து நான்கு வாரம் தொடர்ந்து வெளியான 'இனிது இனிது காதல் இனிது' இன்றோடு நிறைவு பெற்றிருக்கிறது. ஜூ.வி. பாணியிலிருந்து மிகவும் மாறுபட்ட தொடர் என்றாலும், விகடன் நிறுவனத்தினர் முழு சுதந்திரத்துடன் உங்கள் கருத்துக்களை எழுத அனுமதித்ததற்கு அவர்களைப் பாராட்டியே தீர வேண்டும்.

பாரதியின் கவிதை வரியைத் தலைப்பாகக் கொண்டு பட்டினத்தார் பெண்கள் பற்றி கொண்ட கருத்தின் மறுபக்கத்தை விளக்க ஆரம்பித்த தொடர், உங்களின் அருமையான Touch-டன் முடிவுற்றது.

எத்தனை விதமான காதல்கள் எத்தனை விதமான Character-கள்?

காதலன் கண் இழந்த பின்பும், தன் காதலில் உறுதியாய் நின்ற அந்த மலையாளப் பெண்மணி, 'காதல் பெரிதா... படிப்பு பெரிதா' என்கிற கேள்வி எழுகையில் காதல் பெரிதுதான்... ஆனால் அதனைவிடப் படிப்பு பெரிது என்று தன் காதலியே உணர்த்த, அவளை நினைத்தவாறே மேல் படிப்பிற்காக அவளை விட்டு விலகும் காதலன்... தத்தம் அண்ணனும், அக்காவும் திருமணம் செய்து கொண்டதால் இரு குடும்பத்திற்குள்ளும் மனக் கசப்பு ஏற்பட்டிருந்தாலும் அவர்கள் எதிர்ப்பையும் மீறி மணமுடிக்கும் காதலர்கள்... தனது சிறு வயதுக் காதலை மனசுக்குள்ளேயே வைத்திருந்து பிற்காலத்தில் அந்தப் பெண்ணை அவளது கணவன் மூலமே சந்தித்து, அவளது மகளின் தெளிவைக் கண்டு பிரமிக்கும் பெரியவர்... தியேட்டரில் ஆரம்பிக்கும் கேலி, காதலாய் வளர பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி நண்பர்கள் ஆதரவுடன் புது வாழ்க்கை தொடங்கும் காதலர்கள்...

இத்தொடரில் நீங்கள் வெற்றி பெற்ற காதலர்களை மட்டுமல்ல, தோல்வியடைந்த காதலர்களைக் கூட அங்கங்கே சொல்லியிருக்கிறீர்கள்...

நம் நாட்டில் காதலில் தோல்வியுற்றவர்கள் காதலிக் காதவர்கள் மட்டும்தான் என்று கவிஞர் வைரமுத்து கூறுவதுண்டு. ஆனால், இவ்வாறு பலரும் தோல்வியடை வதன் காரணத்தை நீங்கள் இத்தொடர் மூலம் கூறியிருக் கிறீர்கள். காதலில் தோல்வியுறுபவர்கள் காதலில் தெளி வில்லாதவர்கள் மட்டுமே, காதலில் தெளிவுள்ளவர்கள் காதலில் தோல்வியடைவதேயில்லை என்று, அதற்குத் தீர்வையும் கூறியிருக்கிறீர்கள்.

காதலில் மட்டுமல்ல, சகல விஷயங்களிலும் தெளிவுடன் இருக்க இந்தத் தொடர் அறிவுறுத்துகிறது. விரும்புவதை நல்லது என்றும், வெறுப்பதைக் கெட்டது என்றும் பிரித்துக் கொள்கிறோம். 'விருப்பு வெறுப்பு இல்லையெனில் நல்லது மில்லை, கெட்டதுமில்லை, உள்ளது இருக்கும்' என்ற வரிகள் யோசிக்க வைப்பவை. யோசித்தால் தெளிவு தரக் கூடியவை.

இத்தொடரில் தன் காதலைப் பற்றி தாயிடம் பேசும் மகனைப் பற்றி எழுதியிருந்தீர்கள். தாயிடமே தன் காதலைப் பற்றித் தெளிவுடன் பேசும் ஒருவன் காதலியிடம் எத்தனை தெளிவுடன் பேசுவான்.

காதலில் ஜெயித்தாலும் சரி... தோற்றாலும் சரி... நிச்சயம் தெளிவு பிறக்கும். ஆனால், இத் தெளிவு எல்லா விஷயங் களுக்கும் பரவ வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள்.

CHENNAI-600 005

காதலை மட்டுமல்ல; வாழ்க்கை முழுவதையும், அக்கறையின்மையும் இல்லாமல், ஆழ்ந்த ஈடுபாடும் இல்லாமல் ஒருவித ஒட்டாமையோடு அதே சமயம் கூர்மையாய் கவனிக்கச் சொல்கிறீர்கள். இவ்வாறு கவனிப்பதும், கவனிப்பதில் உள்ள சுகமும் அனுபவித்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

இத்தொடர் முழுதும் கட்டுரை பாணியிலேயே கொண்டு சென்றால் சொல்ல வந்த விஷயங்கள் நிறைய பேரை எட்டாது என்று கதை சொல்லும் பாணியிலேயே கொண்டு சென்று உங்கள் கருத்துக்களை அங்கங்கு தூவியிருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது.

தமிழ் இலக்கிய உலகில் நிச்சயம் இது ஒரு புதிய முயற்சி. புத்தக வடிவில் வரும்போது பெரும் வரவேற்பைப் பெறும் என்று நம்புகிறேன்.

'கயவர்கள் கூட காதலிக்கும்போது இயல்புக்கு மாறாக இனிய பண்பு கொள்கின்றனர்.' என்று ஷேக்ஸ்பியர் சொல்வதுண்டு. ஆனால் காதல் கயவர்களைக்கூட நல்லவர்களாகவும் இனிய பண்பு மிக்கவர்களாகவும் மாற்றி விடுகிறது என்பதே உண்மை.

காதல் மகிழ்ச்சியையும் நிம்மதியையும், தெளிவையும் எல்லாவற்றிற்கும் மேல் ஒரு நல்ல ஸ்நேகிதியையும் கொடுக்குமாயின் சாகும்வரை காதலித்துக் கொண்டேயிருக்கலாம் என்று தோன்றுகிறது.

என்றென்றும் அன்புடன்,

**ஆ. மோகன்குமார்**

CONNEMARA PUBLIC LIBRARY
1 FEB 2009
CHENNAI

# இனிது இனிது காதல் இனிது

## 1

எந்தக் கூர்மையான சிந்தனையுமின்றி நகரத்தின் வாகன நெரிசல்களூடே வண்டி ஓட்டியபடி போய்க் கொண்டிருக்கும்போது சட்டென்று அந்த வாக்கியம் புத்தியைத் தாக்கிற்று. ஒரு ஆட்டோவின் முதுகில் வெள்ளை எழுத்தில் பழுப்பு நிற கேன்வாஸ் மீது எழுதப்பட்டிருந்தது.

*'காதல் என்பது இனிப்பு விஷம்'*

இனிப்பு விஷம் என்கிற அந்த வார்த்தைச் சேர்க்கை சிந்தனையைத் துண்டிற்று. யாரோ தின்று பார்த்து விட்டு 'இனிப்பு விஷம்' என்று எழுதியிருக்கிறார்கள் என்று தோன்றியது எதை? காதலை.

காதல் இனிப்பாம். ஆனால், விஷமாம். அடடா... என்ன கண்டுபிடிப்பு. விஷம் உண்ட பிறகு எப்படி எழுத முடிந்தது? ஒருவேளை இது செத்தவனின் வாக்கியமோ... ஆவி ரூப அசரீரியோ...? செத்தவனுக்கு வாழ்க்கை பற்றிக் கவலையென்ன... காதல், காமம் பற்றி அக்கறையென்ன? இது உயிருள்ளவனின் வாக்கியம்தான். ஒருவேளை மெள்ள மெள்ள செத்துக் கொண்டிருக்கிறவன் வாக்கியமோ... இருக்கலாம்.

காதல் இனிப்பு விஷம். ஆனால், கடும் விஷமல்ல... ஆளைக் கொல்லாது என்கிறபடியாய் இருக்கலாமோ... கொஞ்சம் உடம்பு தேறி எழுதியிருப்பானோ... சிரிப்பு வந்தது.

"வேணாம்பா... எது வேணா சாப்பிடு... காதல் மட்டும் சாப்பிடாதே. துன்றதுக்கு டேஸ்டா இருக்கும். ரெண்டு மணி நேரம் பொறுத்துப் புடுங்கிக்கும்... பேஜாராயிடும்."

எழுதியவன் குரலாய் ஒரு வாக்கியம் என்னுள் ஓடியது. யார் அதை எழுதியது? ஏன் இப்படி? கேள்விகள் படர்ந்தன.

திருப்பத்தில் இன்னொரு ஆட்டோ என்னைத் தாண்டியது. அதிலும் எழுதப்பட்டிருந்தது, அதே சித்திர எழுத்துக்கள்.

*"சீறும் பாம்பைக்கூட நம்பலாம்*
*சிரிக்கும் பெண்ணை நம்பாதே."*

என்னடா இது... நான் வியந்து போனேன். விட்டால் ஆட்டோவில் சிறுகதை எழுதி விடுவார்கள் போலிருக்கிறதே எனச் சிந்தித்தேன்.

'சிரிக்கும் பெண்ணை நம்பாதே'

ஏன் நம்பக்கூடாதா? பெண் மனுஷிதானே... சிரிப்பும் சந்தோஷமும் அவளுக்கும் உண்டே. பெண் சிரித்தால் தவறா? இதை எழுதியவனின் அம்மா சிரிக்கமாட்டாளா? அவள் பெண்ணில்லையா? இவன் அக்கா எப்பவும் அழுதபடியே இருப்பாளா...? இவனுக்குப் பெண் பிறந்தால் என்ன செய்வான்? கிள்ளிக் கிள்ளிக் கதற வைப்பானோ... மனைவிக்குப் பூ வாங்கிப் போனால், அதை அவன் கையில் வாங்குவதற்கு முன் ஓவென்று அலறச் சொல்வானோ... இருக்காது.

அப்படியானால் சிரிக்கும் பெண்ணென்பது அம்மா இல்லை... அக்கா இல்லை, தங்கையில்லை. அண்ணியில்லை. யாரோ... யாரோ என்றால்... எதிர் விட்டுப் பெண்ணா?



எதிர் விட்டுப் பெண் சிரித்தால் என்ன... அழுதால் என்ன...? பார்த்துவிட்டுப் போக வேண்டியதுதானே... நம்பாதே என்று யாரைச் சொல்கிறான்? நம்புகிறவனையா... நம்பலாமா என்று யோசிக்கிறவனையா? இல்லை, இது நம்பிக் கெட்டவன் அனுபவமா?

*'சீறும் சிங்கத்தைக்கூட நம்பலாம்*
*சிந்திக்கும் ஆணை நம்பாதே.'*

இப்படி ஒரு ஆட்டோவில் எழுதினால் என்ன? இன்னும் வேறுவிதமாக யோசிப்போமா? இன்று பெண்களுக்கு இருக்கும் கோபத்துக்கு அவர்கள் இப்படி எழுதுவார்களோ...

❖ *'பொங்கி வரும் கடலைக்கூட நம்பலாம்*
*எந்தவித ஆணையும் நம்பாதே.'*

❖ *'உத்தரத்துக் கட்டையைக்கூட நம்பலாம்*
*உடன்பிறந்த ஆணைக்கூட நம்பாதே.'*

❖ *'கன்னிவெடியில் காலை வைத்துத் தப்பலாம்*
*கல்யாணத்தில் உன்னை வைத்துச் சாகாதே.'*

ஏன், பெண் ஆணை எதிர்ப்பதில்லை? எதிர்த்து எழுதுவதில்லை:? எனக்குத் தோன்றியது... நிறைய பெண்களுக்கு ஆணைப்பற்றி அக்கறையே இல்லை.

ஆண்தான் பெண்ணைப் பற்றி மிகுந்த அக்கறைப் படுகிறான். எழுதி எழுதி அலறுகிறான். பெண்ணைப் பற்றி அக்கறை இருக்கிறது... ஆவல் இருக்கிறது. அறியத்தான் தெரியவில்லை. இது ஆண் புத்தி அலட்டல் புத்தி.

மேஜைக்கு அருகே வேகமாகப் போய் முட்டிக் கொண்டு முட்டிச்சிப்பி வலியில் தவிக்க, மேஜை இடித்துவிட்டது என்று பிறரைக் குற்றம் சொல்லும் புத்தி. 'நான் தெரியாமல் முட்டிக்கொண்டேன்' என்று சொல்லத் தெரியவில்லை. சொல்ல, சொல்லித் தரவில்லை. மேஜை இடித்துவிட்டது என்றுதான் சொல்கிறார்கள்.

யார்?

இந்த ஆட்டோ பெயிண்டர் மட்டுமா? இன்றைய தலைமுறை மட்டும்தான் அலறுகிறதா? முட்டியைப் பிடித்துக்கொண்டு முணகுகிறதா? வலியில் திசை தெரியாது, வசைமாரி பொழிகிறதா?

இல்லை. வேறு சில பாடல்களும் உண்டு. பட்டினத்தாரின் பொதுப் பாடலில் இதோ ஒன்று...

*'சிற்றம்பலமும் சிவனும் அருகிலிருக்க*
*வெற்றம் பலம் தேடிவிட்டோமே நித்தம்*
*பிறந்த இடத்தைத் தேடுதே பேதை மட நெஞ்சம்*
*கறந்த இடத்தை நாடுதே கண்.'*

பட்டினத்தாரே மற்றொரு பாடலில்...

*'எத்தனை பேர்நட்ட குழி? எத்தனை பேர் தொட்ட முலை?*
*எத்தனை பேர் பற்றி இழுத்த இதழ்? நித்த நித்தம்*
*பொய்யடா பேசும் புவியில் மட மாதரைவிட்டு*
*உய்யடா, உய்யடா, உய்...'*

பட்டினத்தார், ஆட்டோ பெயிண்டரா? அவருக்கும் குமுறலா? பெண் என்றால் வெறுப்பா? இல்லையே... அம்மாவை நேசித்த துறவியல்லவா அவர்... அன்னை இறந்த போது அழுதழுது எழுதியவை காவியமாயிற்றே. அவை காமம் தாண்டி நிற்குமே.

*'அரிசியோ நான் இடுவேன்? ஆத்தாள் தனக்கு*
*வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்-உருகியுள்ள*
*தேனே, அமிர்தமே செல்வத் திரவியப்பூ*
*மானே என அழைத்த வாய்க்கு'*

என்கிற புலம்பலில் நேசம் தெரிகிறதே, பாசம் பொழிகிறதே.

*'வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்*
*கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து-முட்டச்*



*சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ*
*விறகிலிட்டு தீ மூட்டுவேன்?'*

எப்படிப்பட்ட விசும்பல், எவ்வளவு இனிய நினைவு. தாய் என்கிற பெண்ணை நினைவுகூரும் நேர்த்திதான் என்ன?

*'வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்*
*வந்தாளோ என்னை மறந்தாளோ-சந்ததமும்*
*உன்னையே நோக்கி உகந்துவரம், கிடந்து என்*
*தன்னையே ஈன்றெடுத்த தாய்?'*

எவ்வளவு உயர்வான அம்மா. இந்த அம்மாவைக் கொண்ட பிள்ளை பெண்ணைத் தூற்றுமா? போ போர் என்று விரட்டுமா?

இல்லை... பட்டினத்தார் பெண்ணைத் திட்டவில்லை. அவளை இகழவில்லை. அவரை அவ்விதம் ஆக்கிய நிலைக்குப் பொருமுகிறார். 'நித்தநித்தம் பொய்யடா பேசும் புவியில்' என்கிறார். இந்த உலகம் பொய் சொல்கிறது. பெண் அருகாமைக்கு ஏக்கம் கொள் என்கிறது. ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு விதம், பத்மினி சித்தினி என்று வகைப்படுத்துகிறது. உலகத்து இன்பமெல்லாவற்றிலும் சிறந்தது பெண்போகம் என்கிறது. இல்லை. பொய். நித்த நித்தம் சொல்லப்படும் பொய். பெண் இனிப்பு இல்லை. துவர்ப்பு இல்லை. கசப்பு இல்லை. உண்ணும் பொருள் இல்லை. நீ உய்ய வேண்டுமெனில் விலகிநட. உன்னை அறி. உன்னை அறிய உலகம் அறிவாய் என்கிறார் பட்டினத்தார்.

பட்டினத்தாரைத் தாண்டி சிவவாக்கியர் என்கிற சித்தர்.

*'மாதர் தோள் சேராத தேவர் மானிலத்தில் இல்லையே*
*மாதர் தோள் புணர்ந்தபோது மனிதர் வாழ்வு சிறக்குமே.'*

என்று தெளிவாக எழுதியிருக்கிறார்.

இது மேஜை இடித்துவிட்டது என்கிற பேதமையில்லை. 'இடிக்காமல் நடந்து போ என்கிற எச்சரிக்கை. போகம் மட்டுமே வாழ்க்கையில்லை என்பதன் வெளிப்பாடு.

'காதல் என்பதில் காமம் இருப்பினும்
காமம் என்பதில் காதலே இல்லை.'

-இது சமீபத்தில் வாழ்ந்த நாமக்கல் கவிஞர் பாட்டு.

வெறு காமம்தான் புளித்துப்போய், காதலை இனிப்பு, விஷம் என்று இகழ்கிறது. பாம்பை நம்பு... பெண்ணை நம்பாதே என்கிறது. காதலிக்கத் தெரியாமல் காதலை வெட்டிக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு இனிப்பு, கசப்பு என்று பெண்ணைத் தின்பண்டமாய் மாற்றுகிறது. செரிமானம் ஆகாமல் தொண்டைக்கு ஏறிய காமம் இது. கண்டபடி தின்றுவிட்டு நெஞ்சைப் பிடித்துக்கொண்டு வெளியேவிட்ட புளியேப்பம். ஏன் செரிக்கவில்லை? என்ன காரணம்?

உடம்பில் கோளாறா... உணவில் குறையா...? யோசிப்போம்...

**யோ**சிக்க, யோசிக்க ஒன்று புலப்படுகிறது. காதல் என்பது பெண்ணைக் குறித்த வார்த்தையாகவே, இங்கு இருக்கிறது. அந்த உணர்வு நிலை பெண் போகம் நோக்கி நகர்ந்து, பெண் அருகாமைக்கு ஏங்கி, அவளை ஆளுமை செய்யும் விஷயமாய்-அடக்கும் ஆயுதமாய் உச்சரிக்கப் படுகிறது. கட்டும் கயிறு. பூட்டும் விலங்கு, தலையில் வைத்த காமம் என்கிற வாழ்வியலுக்குப் போகிறது.

போகட்டும்.



கழுத்தில் கட்டு கட்டி, காதலுக்கு விலங்கு பூட்டி, தலையில் சுமை வைத்து விரட்டுகிறபோது எவரால் காதலிக்க முடியும்? தான் நடுங்கித் திணறும்போது யாரை நேசிக்க முடியும்.

விரும்பிச் சுமக்கிற சுமைதான். தானே ஏற்றுக்கொண்ட கட்டுதான். தான் தனக்கே நிர்ணயித்துக்கொண்ட விதி முறைதான் செயல்படும் சிறப்பாகும்.

தலையைச் சுமையென்று உடல் சொல்லுமா? சிகையைச் சுமை என்று தலை சொல்லுமா? ஒன்றில்லையேல் மற்றதற்கு அர்த்தமில்லை.

இந்த விதமாய் உறவு அமைந்தால் காதல் வளர்ந்தால் கட்டோ சுமையோ, விலங்கோ தெரியுமா? ஏன் தெரிகிறது?

ஆளுமை செய்யவில்லையெனில் அது காதலா? 'எனக்கு நீ, உனக்கு நான்' என்று இருப்பது தவறா...? 'இவன்தான் எனக்கு எல்லாம்' என்று ஆன பிறகு ஆளுமை செய்வதில் என்ன தவறு? உடற்கூற்றின்படி ஆளுமை செய்கிற ஆணைத்தானே பெண்ணுக்குப் பிடிக்கிறது?

உடற்கூற்றின்படி ஆளுமை செய்பவன் ஆண் என்பது பெரும் பொய். இந்தத் தேசத்து இளைஞர்களிடம் தவறாய் நினைப்பில் இருக்கும் விஷயம் இது.

ஆண் எரிமலை. பெண் அலைகடல். உடற்கூற்றியலுக்கு இதுதான் என் உவமானம். தனித்து யோசிக்க இது தெளிவாய்ப் புலப்படும். ஆண் செய்கிற உடற்கூற்று ஆளுமையில் பெண் மயங்கவில்லை. மயக்க வைக்கவும் முடியாது. மயங்கியதுபோல் பெண் நடிக்கலாம். அந்த நடிப்பில் ஆண் இறும்பூது எய்தலாம். உண்மை வேறு.

'என்ன விஷயம் எங்கோ போகிறதே' என்று நினைக்கிறீர்களா?

காதல் என்பது காமத்தின் வெளிப்பாடாய் இருக்க, அந்தக் காமம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உங்களுக்கு இருக்கிறது. பெண் சுகம் என்கிற போது பிரச்னைகள் பல வருகின்றன.

மனித இனப்பெருக்கம் வேண்டும் என்கிற எண்ணத்தில் இயற்கை கொடுத்த கவர்ச்சி காமம். பூவில் தேன்போல், வண்ணம் போல், வாசனைபோல் பெண்ணுக்குக் கிடைத்தது அழகு. வண்டின் இறகுபோல், இடம் பெயரும் வலிவு, இடைவிடாத சுழற்சி இன்னும் சில விஷயங்கள் ஆணுக்குக் கிடைத்தன.

வண்ணம் ஈர்ப்பு, வாசனை கிறக்கம், தேன் உணவு... அங்கே உண்மையாய் நடப்பது மகரந்தப் பரிமாறல். அதன் பொருட்டே இத்தனையும். வண்டுக்கும், பூவுக்கும் இது பற்றிய விஷய ஞானம் இல்லாதிருக்கலாம். மனிதனுக்குத் தெரியாதபோதுதான் மரியாதை குறைகிறது.

அடி வேர் புரிந்து போய்விட்டால் தாவரத்தின் தன்மை தெரிந்துவிடும். அஸ்திவாரம் எப்படி என்று தெரிந்து விட்டால் கட்டடத்தின் யோக்கியதை புரிந்து போகும். வாழ்வின் அடிநாதம் புரிந்து கொள்ள முடியாதபோது, வாழ்வியலில் நடப்புகளைத் தெரிந்துகொள்ள முடியாது.

நம் பேச்சு காமம் பற்றி வெறும் கவர்ச்சியல்ல. அதற்குக் காரணம் இருக்கிறது. இயற்கை எல்லா உயிர்க்கும் கொடுத்த வரம் அது. இந்த இனக்கவர்ச்சிக்கு ஓர் அர்த்தம் இருக்கிறது. இது விளையாட்டல்ல. வெறும் பொழுதுபோக்கு அல்ல. சினிமாப்படம் அல்ல. டிஸ்கோ டான்ஸ் அல்ல. பேசப்படாத விஷயமும் அல்ல...

காமம் என்கிற வடமொழிச் சொல்லுக்கு ஆசை என்று பொருள். ஆசை என்பது எதில் ஏற்படும்? நம்மைக் கவர்கிற பொருளில் ஏற்படும். பெண் ஆணைக் கவர்வதும், ஆண் பெண்ணைக் கவர்வதும் இயல்பு.



இந்த இயல்பு வெளிப்படுகிறபோது சொல்லாய்,செயலாய் மாறுகிறபோது, அந்த ஆசை கிளர்ந்து எழுகிறபோது வளர்ந்துவிட்ட சமூகம் அதை வெறும் காமம், ஆசை, கிளர்ச்சி என்று சொல்லாமல் நாகரிகமாய் சொல்லப் பட்டதே காதல்.

''உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது...''

காதல் முதலில் இதைத்தானே சொல்கிறது...?

எது பிடித்திருக்கிறது? எலும்பா? நரம்பா? ரத்தமா? எல்லாம் மூடிய தோலா... தோலில் போட்ட துணியா? பவுடர் வாசனையா? இல்லை புத்தியா?

எல்லாம்தான்.

ஆணோ, பெண்ணோ பல்லும் பனங்காயுமாய் இருக் கிறது. கொஞ்சம் பைத்தியம் வேறு. பார்வையில்லை. இதை.

''உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது''-சொல்வார் உண்டா?

உண்டு, ஓர் உயிர்நிலை குறித்து எழும் பரிதவிப்பு. அது வேறு விஷயம். ஈர்ப்பு உண்டா? இனக்கவர்ச்சி உண்டா?

'எலிஃபெண்ட் மேன்' என்று ஒரு ஆங்கிலப்படம்.

தொங்கின முகமும், பெரிய காதும், சிரட்டைத் தலையும், இடுங்கிய கண்களுமாய் ஒரு பிறவி. சந்தையில் கூடாரம் போட்டு டிக்கெட் விற்றுக் காட்சிப்பொருளாக்கிச் சம்பாதிக் கிறார்கள். பெண்களுக்கு விளம்பரம் பார்த்து ஒரே பரபரப்பு. இத்தனை அசிங்கமா? கண் கொண்டு பார்க்க முடியாதா? 'நான் பார்க்கணுமே' என்கிற ஆவல்.

தொந்தியும், தொப்பையுமாக, கொஞ்சம் அம்மைத் தழும்பு மூஞ்சியுமாக இருக்கிற கணவன், அழகான மனைவியை உள்ளே கூட்டிப் போகிறான்.

அவள் பார்த்துவிட்டுப் பயத்தில் பேயாய் அலறுகிறாள். அவள் புருஷனை இறுக்கிக் கொண்டு கத்துகிறாள். பன்னி மூஞ்சி என்று அடிக்கடி திட்டும் புருஷனைப் பாய்ந்து பாய்ந்து கட்டிக் கொள்கிறாள்.

'ஐயோ, நீ ஆயிரம் மடங்கு அழகு. நீ கிடைத்தது கடவுள் வரம்' என்கிறாள்.

அலங்கோலம் காண நேரிட, அமைந்துள்ளது அழகாகி விடுகிறது.

கம்பேரிஸனில்-எடை போடலில் விருப்பு-வெறுப்பு மாறிவிடுகிறது. ஆக அழகு என்பது எதோடு யாரோடு ஒப்பிடுகிறோம் என்பதைப் பொறுத்தது. -Relative term.

ராஜா மெச்சினதே ரம்பா.

'உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது' என்பது எதனால்... ஏதோ ஒன்றினால்... எனக்குப் பிடிக்கவில்லை அவளை. அதனால் என்ன... அவனுக்குப் பிடித்திருக்கிறது.

உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது ஏன், எதனால் என்பதுகூட ஒரு சட்டதிட்டத்தில் அடங்காது.

'அந்த யானை முகத்தை'- அலங்கோலத்தை நேசிக்கவும் ஒரு பெண் இருப்பாள், இருந்தாள். இனக்கவர்ச்சி காமமெனில், காமத்தின் நாகரிக வெளிப்பாடு காதல் எனில், எதனால் இது ஏற்பட்டது என்று வரைமுறையில் இது அடங்கவில்லை என்பது புரிகிறதா... எல்லார் மனைவியுமா அழகு? பூவின் அழகும், மணமும் எல்லாரிடமுமா இருக்கிறது? இருப்பினும் மனைவிகள் நேசிக்கப்படுகிறார்களே, எப்படி?

வண்டானது மணம், நிறம், தேன் என்று பார்க்கும். மனிதன், இதை மட்டும் பார்ப்பதில்லை.



அவள், 'நல்லவனா' என்று பார்க்கிறாள். காமம் உடம்பு சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமல்ல. மனசு சம்பந்தப்பட்ட விஷயம். புத்தி சம்பந்தப்பட்ட விஷயம்.

இப்போது சிக்கல் புரிகிறதா?

இரண்டு உடம்பு ஈர்க்கப்படுவது இனக்கவர்ச்சி. இனக்கவர்ச்சி மட்டுமே போதுமா?

போதவில்லை.

போதும் என்று கிட்ட போன பிறகு, முட்டி மோதிய பிறகு நல்ல புத்தி இல்லையே என்கிற குறை பெரிதாகத் தெரிகிறது.

காமம் அடிப்படை. காமத்தின் வெளிப்பாடு காதல் அடுத்தபடி... ஆனால், காதல் படியில் நிற்கும்போது ஆயிரம் கேள்விகள் வருகின்றன.

''உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது பெண்ணே...''

எது? என் உடம்பா? அது தேயும் என் புத்தியா? அதுமாறும் என் மனசு? அது பற்றி எனக்கே தெரியாது. இங்கே காதல் எங்ஙனம்?

காதலைப்பற்றி உண்மையாகவே உங்களுக்குள் விசாரித்தால் வெறும் விரக்தியே மிஞ்சும்.

ஏன்?

## 3

**கா**தல் என்பது இன்றைய வாழ்க்கையில் ஒரு பண்ட மாற்று.

எதிர்பார்ப்பு இல்லாமல் காதல் இல்லை. ஈரம் இல்லாத இடத்தில் புல் முளைப்பதில்லை.

எது ஈர்ப்பு? ஏதோ ஒன்று பணம், படிப்பு, அறிவு அழகு, குணம் ஏதோ ஒன்று... இந்த ஏதோ ஒன்று எனக்குப் பிடித்திருக்கிறது. எனக்குப் பிடித்திருக்கிறது என்றால் என்ன? எனக்கு உபயோகம். உபயோகமற்ற ஒன்றைப் பிடித்திருக் கிறது என்று சொல்லத் தோன்றுமோ?

இது தவிர, காதல் என்பது பாதுகாப்பு உணர்ச்சியின் வெளிப்பாடாகவும் இருக்கிறது. யாரோ தனக்கு வேண்டியவர்கள், தன்னைப்பற்றி அக்கறை கொள்பவர்கள் தனக்கு வேண்டும் என்கிற விழைதலாகவும் இருக்கிறது.

'நான் உன் நலனைக் கவனித்துக் கொள்வேன். என் நலனில் நீ அக்கறை செலுத்து' என்கிற உள்ளடங்கிய ஏக்கமாகவும் காதல் வெளிப்படுகிறது. அல்லது அந்த ஏக்கத்துக்குக் காதல் என்று பெயர் சூட்டப்படுகிறது.

சரஸ்வதி என்கிற அந்தப் பெண்ணுக்கு முப்பத்தாறு வயது. எனது நண்பர் வீட்டில் சமையல் வேலைக்காக அமர்த்தப்பட்டவள். ஆறேழு வருடம் அந்தக் குடும்பத் தோடு ஒன்றிப்போனவள்.

சமையல் வேலை- காலையில் ஒரு மணி நேரம், சாயந் திரம் ஒரு மணிநேரம் தவிர, மற்ற நேரங்களில் அந்த வீட்டில் அந்தக் குடும்பத்தினர் போல் வளைய வருவாள். டி.வி. வீடியோ பார்ப்பாள். குழந்தைக்குத் தலைவாரி விடுவாள். எதிர் வீடு, பக்கத்து வீடுகளில் போய்ப் புழங்கி வருவாள்.

குடும்பத்தினருக்கு உண்டான அதே சாப்பாடு, அதே வகை துணிமணி. குழந்தைகளுக்கு அருகே கட்டில்... சினிமா, டிராமா... அவர்கள் எங்கே போனாலும் உடன் போகும் வசதி. சரஸ்வதி சமையல்காரியே இல்லை. அந்த வீட்டில் ஒருத்தி.

சரஸ்வதி காதல் வயப்பட்டாள். அந்த வீட்டில் உள்ள எவரிடமும் சொல்லாமல் என்னிடம் சொன்னாள்.



சரஸ்வதி காதலித்தது ஐம்பத்தாறு வயது (அரசு) அதிகாரியை, இரண்டு மகன்கள், ஒரு மகள். எல்லோருக்கும் திருமணம் செய்து கொடுத்து, மனைவி இழந்த புருஷனை...

"அவருக்கு அம்பத்தாறு வயசாயிடுச்சே சரஸ்வதி..."

"அதனால என்ன சார்... எனக்குன்னு ஒருத்தர் இந்தப் பூமில வேண்டாமா."

"இந்தக் குடும்பம் உனக்கு ஒரு குறையும் வைக் கலையே...?"

"நிச்சயமா இல்லை. ஆனாலும் எப்ப வேணா வெளியே போ'ன்னு சொல்லலாம். சொன்னா என்ன செய்யறது? சமையல்காரிதானே நான்..."

"சரஸ்வதி... தப்பா நினைக்காதே. இங்க எல்லாம் இருக்கு உனக்கு. ஆனா, செக்ஸ் வடிகால் இல்லை. அதனால் அவர்கிட்டப் போறே..."

"ச்சே... முப்பத்தாறு வயசு. எனக்கு இனி என்ன செக்ஸ்... அதெல்லாம் செத்தே போச்சு..."

"அப்ப அந்த ஆள் ஒரு வருஷம் கழிச்சு வேண்டாம்னா?"

"எப்படி?... அதான் கல்யாணம் பண்ணிக்கிறேங்கறாரே... ரெஜிஸ்தர் மாரேஜ்!" -விழிகள் பெரிதாக்கிப் பேசும் முப்பத் தாறு வயசுப் பெண்ணைப் பார்க்கக் கஷ்டமாய் இருந்தது.

"எனக்குன்னு ஒருத்தர் இந்தப் பூமில வேணாமா?" ஆறுவருடம் பழகி, புழங்கிய இடத்தைவிட ஐம்பத்தாறு வயசு புருஷன்மேல் என்ன கணக்கு இது. செக்ஸ் வடிகால் தேவையில்லை என்று சொல்வது பொய்யா...? என்னிடம் உண்மை சொல்ல வெட்கமா?

"இது செக்ஸ்தான் சரஸ்வதி..."

"இல்லை... நிச்சயமா இல்லை. எனக்கு அந்த விஷயத்துக் கெல்லாம் திராணி இல்லை. நான் இதை அவர்கிட்ட

சொல்லி விட்டேன்...'' சரஸ்வதி தன் உடற்கோளாறுகளை விவரித்தாள்.

''பிறகு...?''

''எனக்குன்னு ஒருத்தர் வேண்டாமா இந்தப் பூமில?''

''மரணம் எவருக்கும் எப்போதும் நேரும் சரஸ்வதி'' எனக்குள் தோன்றியதை சரஸ்வதியிடம் சொல்ல முடியவில்லை. யார் யாருக்குத் துணை...? எக்காலம் எது வரையிலும்... எதன் பொருட்டு... முப்பத்தாறு வயது சரஸ்வதிக்கு... ஐம்பத்தாறு வயது அரசு அதிகாரியைக் காதலிக்க எது நம்பிக்கை?

சரஸ்வதி தனிமையில் தவித்திருக்கிறாள். உணவு, உடை, உறைவிடம் போதவில்லை.

''சரஸ்வதி... பீச்சுக்குப் போலாமா குழந்தைகளோட...?'' ஒன்பது ரூபாய் டிக்கெட்டில் சினிமா பார்த்ததும் தனிமை போகவில்லை. எல்லா இடத்துக்கும் கூட்டிப் போகிறார்கள். எல்லா வசதியும் தருகிறார்கள். ஆயினும், அவள் விருப்பமாய் எதையும் வெளியிட முடியவில்லை. She is not alone but lonely.

கேட்டால் செய்திருப்பார்கள். கேட்கலாமா...? தெரியவில்லை. மாட்டேனுட்டா...

அவளுக்கு வேறு இடம் வேண்டியிருந்தது.

அவள் பேச, கேட்க ஆள் வேண்டும்.

இதுவா... இதுதானா... தன் ஆளுமைக்கு உட்பட்ட பிரதேசம் இந்த வீடு என்று காட்டவா? அப்படி நிலை நிறுத்திய சுகத்தில் மயங்கவா?

சரஸ்வதி என்கிற இந்தப் பெண்ணை மனசுள் வாங்கி எடை போடுங்கள். 'ஏன் தவிக்கிறாள் இப்படி' என்று யோசியுங்கள். காதலைப் பற்றி அறிய மற்ற காதலர்களைக் கவனித்துப் பாருங்கள்.



தனக்கு என்று அந்தப் பேராசை புரியும்.

தனக்கு என்று இறுக்கிக் கொள்வதுதான் காதலா?

நல்லதோ கெட்டதோ... தான், தன் புருஷன்... வசதியோ வசதியின்மையோ... தன் குடும்பம் ஏன் இந்த உணர்ச்சிக் குவியல்? எதனால்...? சரஸ்வதிக்கு ஏன் அந்த வீட்டுவசதி ஒட்டவில்லை.

முப்பத்தாறு வயசுக்கு ஐம்பத்தாறு வயசு மனிதனை 'நல்லாயிருக்கு' ஊர் சிரித்தாலும் சிரிக்கும். சிரிக்கட்டும், கவலையில்லை. எத்தனை நாளைக்குச் சிரிக்கும்...? சரஸ்வதி தீர்மானமாய் இருந்தாள்.

இவன் எழுதுவான், எழுத மனிதர்களைப் புரிந்து கொள்ள முயலுபவன் என்கிற யோக்கியதை எனக்குக் கொடுத்து, சரஸ்வதி என்னிடம் சொன்ன அந்தரங்கத்தை (பெயர் மாற்றி) உங்களிடம் சொல்கிறேன்.

சரஸ்வதியின் பொருட்டு சரஸ்வதி தனக்குள் கேட்காத கேள்வியை எனக்குள் நான் கேட்டுக் கொண்டேன்.

ஐந்து பேர் குடும்பத்தில் ஆறாவது ஆள்தானே சரஸ்வதி... என்ன தனிமை... என்ன பயம்...? ஆயிரம் பேருக்கு நடுவிலேயே தனிமை வரும்.

தன் மனசு மொத்தமும்-விருப்பம், கனவு, வேதனை, வெகுளித்தனம், பரிமாறிக்கொள்ள ஆளே இல்லாத போது, தனிமை வரும்.

யாருமே தனக்கு இல்லை என்கிற ஏக்கம் எழும்.

தான் செத்துப் போய்விட்டால் யார் அழுவார்கள்? யார் தூக்கிப் போட்டுக் கொளுத்திக் கடைசிக் காரியம் செய்வார்கள் என்கிற வரை அந்தப் பயம் போகும்.

தனிமை -மரணத்தின் சாயல் மரணம்- மிரட்சியான விஷயம்.

'தனிமை கண்டதுண்டு அதிலே சாரம் இருக்குதம்மா.'

என்று பாரதி பாடியிருக்கிறானே... அது முற்றி முதிர்ந்த நிலை, மரணம் பற்றியும் புரிந்துகொள்ளும் ஆவல். அதற்குத் தயார் என்கிற ஆயத்தம்.

சாதாரண ஆளுக்கு, சரஸ்வதிக்குத் தனிமை தாங்க முடியாது. இதை சரஸ்வதி ரொம்ப நாசூக்காக எனக்குச் சொன்னாள். அடுத்த சந்திப்பின்போது அழகாக வெளிப் படுத்தினான்.

"அட புதுப்புடவையா... தீபாவளிக்கா...?"

"ஆமாம்." -வெட்கம் முகத்தில் சுழித்துக் கொண்டு நதி மாதிரி ஓடியது.

"இருநூத்து எழுபது ரூபா. கூட கூட்டிண்டு போய் மாமி வாங்கிக் கொடுத்தா. விடிஞ்சதும் கட்டிண்டு அவர்கிட்ட தான் போய்க் காட்டினேன். அப்படியே அசந்து நின்னுட் டார்."

முப்பத்தாறு வயசுப் பெண் ஐம்பத்தாறு வயசு ஆண். மனசுள் படம் மாதிரி ஓடிற்று.

"பிறகு?"

"அவர் தீபாவளிக்குப் புதுசே போட்டுக்கறதில்லையாம். பழக்கம் விட்டுப் போச்சாம். இப்ப தனக்கும் புதுசு போட் டுக்கணும்னு தோன்றதுன்னார்... ரொம்ப சந்தோஷமா இருந்தது."

"அவ்வளவு தூரம் வாங்கித் தந்தாரே மாமி... அவரிடம் நன்னாயிருக்கா? னு கேட்கலையா?"

"நான் கேட்கலை."

"கேட்டிருக்கலாமே-எப்படி இருக்குதுன்னு..."

"கேட்கலாம். இருநூத்து எழுபது ரூபா புடவை யார் கட்டிண்டாலும் நன்னாயிருக்கும்னு சொல்லிட்டா. வேறு



யார் கிட்ட கேட்க முடியும்? மாமா கிட்ட கேட்க முடியுமா... அசிங்கம். குழந்தைகள் சிறுசு, அதுகள் கிட்ட எப்படிக் கேட்க முடியும்...? விடிஞ்சதும் அங்க தான் ஓடினேன். அப்படியே அசந்து போய் நின்னுட்டார்."

ஹார்மோன்கள் பட்டுப்போன சரஸ்வதியின் மனசுள் பொங்கின குதூகலம் என்னையும் நனைத்தது. சரஸ் வதிக்குக் காமம் இல்லை. காமத்தால் விளைந்தது காதல். காமத்தின் வெளிப்பாடு காதல் என்பது இங்கே பொய் யாயிற்று. பெண்மையின் வயசு, வசீகரம் எல்லாம் மங்கிப் போன பெண், தன்னை எட்டு கஜத்துணியால் வசீகரப் படுத்திக் கொண்டு பாராட்ட ஆள் தேடுகிறது. அசந்து போய் நின்றதே பாராட்டாயிற்று.

இதுபோதும். சரஸ்வதி திருமணம் செய்துகொள்கிறாளோ இல்லையோ... செய்த பிறகு சிறக்கிறாளோ இல்லையோ... அவள் காதல் வயப்பட்டுவிட்டாள். இது போதும் அவளுக்கு. இனி அவள் தனியில்லை. அவளுள் யாரோ இருக்கிறார்கள். வெளியே எப்போது சொல்வாள். எப்படிச் சொல்வாள்...? எனக்குத் தெரியாது. ஆனால், அவள் இனி தனிமையில் வாடப்போவதில்லை. அந்த ஆள் கடைசி நேரம் பின் வாங்கினாலும், அன்று தீபாவளிகாலை, அசந்துபோய் நின்ற சந்தோஷம் அகலப் போவதில்லை.

தனிமை தாங்க முடியாமல்தான் காதல் வயப்படுகிறோம். ஏனெனில் தனிமை மரணத்தின் சாயல் போன்றது. மரணம் பற்றி நமக்கு அனுபவமில்லை. இங்கே இத்தனை மனிதர்கள் இருக்கிறார்கள். அங்கே யார் என்று தெரியவில்லை. இந்த உறவெல்லாம் அங்கே சொல்லப்படுமா என்பது புரிய வில்லை. எனவே, மரண பயம் தனிமை தரும்பயம். தனிமை என்பது மரண பயம்.

யாரோ ஒரு ஆள் வேண்டும் என்கிற ஏக்கம்தான் காதலா...?

இந்தக் கட்டுரையில் இதுதான் இது என்கிற தீர்மானம் எதுவும் நான் செய்யப்போவதில்லை. காதல் இது, காமம் இது, கடவுள் இது என்று புட்டுப் புட்டு உங்கள் கையில் போட, நீங்கள் கண்ணில் ஒற்றிக்கொண்டு போகும் எண்ணம் இல்லை. 'என்ன... என்ன' என்று யோசிப்பதே-யோசிக்க வைப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம். சரஸ்வதி பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும் என்பது என் விருப்பம். கேள்விகளை எழுப்பி எழுப்பி, நமக்குள்ளேயே ஒரு பதிலுக்கு அலைவதுதான் நல்லது என்பது என் எண்ணம். இது இல்லை இது என்று ஒவ்வொன்றாய்த் தள்ளிக்கொண்டு போகலாமே என்கிற நோக்கம். என்னோடு கேள்விக் காட்டில் நீங்களும் பயணப்பட வேண்டும்.

தனிமையும், மரண பயமும் தந்த விளைவா காதல்? பதினெட்டு வயதுப் பையனுக்கு மரண பயமா? தனிமையா...? அவனவன் வாழ, லவ் பண்ணிச் சாகறது பத்திப் பேசறீங்களே...?

பேசுவோம். பதினெட்டு வயசு வாழ்க்கை பற்றியும் பேசுவோம்.

## 4

தென் திசையிலிருந்து நானூறு கிலோமீட்டர் தாண்டி அந்த வேன் சென்னைக்கு வந்திருந்தது. மொத்தம் இருபத்தேழு பேர்-டிரைவர் உட்பட அந்த வேனில் வந்தார்களாம். வேனின் கொள்ளளவு பதினைந்து ப்ளஸ் ஒன்று என்று எழுதப்பட்டிருந்தது. வேனின் முன்புறமும் பின்புறமும் பேனர்களும், ஒரு நடிகரின் படங்களும் மாட்டப்பட்டிருந்தன.



நடிகருக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்ல இருபத்தேழு இளைஞர்கள் வெகு தொலைவிலிருந்து வந்திருக்கிறார்கள். ஆனால், அந்த இருபத்தேழு பேருக்கு முன்பு நாலாயிரம் பேர் க்யூவில் நின்றிருந்தனர். கூட்டத்தைப் பார்த்து அந்த இளைஞர்கள் அதிர்ந்தார்கள்.

''ஒரு அரைமணி இருங்கப்பா... தனியா உங்களை உள்ளே அனுப்ப ஏற்பாடு பண்றேன்...'' யாரோ சொல்ல, முகம் மலர்ந்தார்கள். அரை மணிநேரம் எப்படிச் சும்மா இருப்பது? துள்ளலான தமிழ்ப்பாட்டு வேனிலிருந்து ஒலி பெருக்கி வழியே வந்தது. நடுரோட்டில் அவர்களில் நாலுபேர் நடனம் ஆடினார்கள். கையூன்றிக் கரணம் போட்டார்கள். ப்ரேக் டான்ஸ், டப்பாங்குத்து, ஒயிலாட்டம் எல்லாம் கலந்த கலவை. பத்து மணி வெயில். வியர்வை பொங்க தெருவை அடைத்து ஆடினார்கள். தகரத்தைக் காற்றில் வீசியது போல் விசில் அடித்தார்கள்.

நடையில், உடையில், நிற்பதில், ஆடுவதில் அசைவதில் அந்த நடிகரைத் தெளிவாய்க் காட்டினார்கள்.

அந்தப்பக்கம் பஸ்ஸில் போன எல்லா பெண்களும் கழுத்து ஒடிய அவர்களையே பார்த்துக் கொண்டு போனார்கள். வியப்பால் சைக்கிள்கள் நின்றன. கார்கள் மெல்லச் சிரித்த படி ஊர்ந்தன. பார்த்துக் கொண்டே போன ஸ்கூட்டர்கள் இடதும் வலதும் கலைந்தன. பாரா போட்டிருந்த போலீஸ், பூட்ஸ் காலால் தாளம் போட்டது.

அந்த வழியே போன நான் சகலமும் மறந்து அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். என்ன துள்ளல்... என்ன பூரிப்பு... என்ன அலட்சியம்... எவ்வளவு ஆனந்தம். இளமை பொங்கும் வயது என்று அவர்களைப் பார்க்கும் போதே மனசு சந்தோஷப் பட்டது.

நடிகரைச் சுற்றிக்கொண்டு கரும்பச்சை இலைகளாய் முகமெங்கும் வியர்வை முத்துக்களோடு போட்டோ எடுத்துக் கொண்டார்கள்.

பூவை விட்டு இலை எங்கே போகும்? இலை இல்லாது பூ உண்டா? இலைகள் அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தன. பத்து நிமிடம் பொறுத்து, வணங்கி விடைபெற்றன.

வயசு... வயசு... இருபது வயசு. எதையும் நாலு பேருக்காகச் செய்யும் வயசு 'தன்னைப் பற்றி தான் அக்கறைப் படாமல், தன்னைப் பற்றி நாலுபேர் எப்படி அக்கறைப் படுகிறார்கள்' என்று யோசிக்கிற வயசு... நானூறு கிலோ மீட்டர் லட்சியமே இல்லை.

பஸ் பார்க்க, கார் பார்க்க, ஸ்கூட்டர் பார்க்க எல்லோரும் பார்த்துப் பார்த்துப் போவதில் எத்தனை சந்தோஷம். அந்த சந்தோஷத்தில் இடைவிடாத நடனம்.

அவர்கள் தங்களுக்காக ஒரு நிமிடம் கூட இல்லை. நாலுபேர் பார்வையாய், நாலுபேர் கைதட்டலாய், ஒரு ஆளின் வியப்பாய், பல விதமாய் மாறி நிற்கிறார்கள்.

இங்கே பதினெட்டு வயசு வாழ்க்கை வாலிபப் பருவத்தின் ஆரம்பம் தன்னை நாலுபேர் பார்க்க முன்னிலைப் படுத்துவதில் தான் முக்கியம் பெறுகிறது.

இவர்கள் காதலிக்கத் துவங்கினாலும் இந்த வேகம் தான் முதன்மை வகிக்கிறது.

முன்னிலைப்படும் ஆசை தவறா? இல்லை நிச்சயம் இல்லை. இது இயல்பு. ஆனால் காதல் என்பது இன்று இந்தத் தேசத்தில் கல்யாணம் என்பதன் நிலைப்படி. அது பார வண்டி. வெறும் உத்வேகம் உதவுமா என்பதே கேள்வி. துள்ளலைத் தொலைத்துவிடப் போகிறானே என்கிற பயம்.

ஏனெனில், காமமா காதலுக்கு உந்துகிறது...? இல்லை... நாலுபேர் கவனிப்புக்கு வேண்டித்தான் நடைபெறுகிறது.



''அதுங்கிட்ட பேசிடுவியா?''

''ஏன் பேச முடியாது?''

''டின் கட்டிடுவாங்க.''

''பெட்டு...''

''பெட்டு...''

''டேய், மனோகர் அதுங்கிட்ட பேசப் போறானாண்டா...''

''யார் கிட்ட?''

''சரோஜா... தினம் கதம்பம் வாங்கிட்டுப் போவுதே அது...''

''பூசாரி பொண்ணா? வேணாம்... டேஞ்சர்...''

''பூசாரியா?''

''அவங்க வீட்டுல எல்லாரும் டேஞ்சர்...''

''ஆமா... பயங்கர ராங்கி... எங்க சித்தப்பா கேட்டாரு. என்ன படிக்கிறேன்னு'... 'உனக்கென்ன அது பத்தி?' ன்னு கேட்டுச்சு. இவன் என்னடான்னா 'பேசறேன்' னு பெட்டு கட்டறான்.''

''பெட்டா? எத்தினி பேசறானா பார்ப்பம்.''

''பேசிட்டா?''

''நாங்க துட்டுப் போட்டு டீ வாங்கித்தரோம்.''

தேநீருக்காகவா... இல்லை... நாலு பேர் பார்க்க தன்னிலை அறியாது. தன் மனம் தெரியாது. பிறர் நிலையும் புரியாது துள்ளுகிற தன்மை அது.

''என்ன சரோஜா... சீக்கிரம் கிளம்பிட்டே. மணி என்னா...''

''ச்சீ போடா... பொறுக்கி...''

''ஏய்... யாரைப் பார்த்துப் பொறுக்கின்றே.''

''பின்னால வந்தே, செருப்புப் பிஞ்சுடும்.''

''உன் பின்னால யார் வந்தாங்க. நான் பாட்டுக்குப் போறேன். மணி கேட்டா என்னவோ சிலுத்துக்கிறியே...''

''யப்பா...''

அவனும் அவளும் எதிர் எதிராய் ஓடினார்கள். எதற்கு ஓடுகிறோம் என்று தெரியாமல் ஓடினார்கள். என்ன செய்கிறோம் என்று தெரியாது பதட்டத்தில் ஓடினார்கள்.

''டேய்... பேசிட்டேன்.''

''பார்த்தோம். இந்தா டீ துட்டு. நீ போய் குடி...''

''நீங்க வரலையா?''

''வேணாம். உன்கூட சேர்ந்தா எங்களுக்கும் உதை விழும். அது அவங்கப்பனைக் கூட்டிக்கிட்டு வர ஓடியிருக்கு. வரத்துக்குள்ள இடத்தைக் காலி பண்ணுங்கடா...''

எழுபது பைசாவோடு அவன் தனியே நின்றான்.

''அடேய்... தனியா வுட்டுட்டுப் போறீங்களேடா...''

''பஞ்சாயத்துல உன்னை நிக்க வைப்பாங்கல்ல... அப்ப வரோம்.''

அவனை நிற்க வைத்தார்கள். முடியைப் பிடித்து இழுத்து முதுகில் அறைந்து, ''மணியா கேட்கற... நாயே'' என்று போட்டார்கள். அபராதம் ஐந்து ரூபாயும் கடும் எச்சரிக்கையும் தந்தார்கள். அவன் நண்பர்கள் அவனை வேடிக்கை பார்த்தார்கள். அம்மா அபராதம் கட்டினாள் ''துப்புக்கெட்ட பசங்க'' என்று திட்டிக்கொண்டே ஊர் கலைந்தது. ''நீ உண்டு... உன் எலக்ட்ரீஷியன் வேலை உண்டுன்னு இல்லாத, ஏண்டா அது உனக்கு? வாலிபம் கடந்த நடுவயதினர் வருத்தப்பட்டார்கள்.

நண்பர்கள் பழையபடி கூடினார்கள்.

''என்னடா சைலண்டா ஆயிட்டான்.''



பாவம், அவன் மனசுக்குள் கஷ்டமாயிடுச்சு...

''சரோஜாகிட்ட வம்பு வெச்சுக்கலாமா? என்கிட்ட முதல்லியே சொல்லியிருந்தா வேணாம்னு சொல்லியிருப்பேன். பெட்டுன்னதும் 'சரி... போகட்டும்'னு விட்டுட்டேன்...

''சரோஜா கொழுப்பெடுத்தது...''

''ஒன்னுமில்லப்பா... டைம்தான் கேட்டான். அதுக்கே கத்திடுச்சு...''

''டேய். ஊர்ல வேற ஆளே இல்லையா டைம் கேட்கறதுக்கு...''

''சும்மா கேட்டான். சொன்னா என்னவாம்?''

''அது சரி...''

''சரோஜாவை ஒரு நாள் மடக்கிடணும்...''

''எப்படி?''

''சினிமாக்கு வருமில்ல... பின்னால உட்கார்ந்து வாரிக்கணும்...''

''பாப்கார்ன் அடிச்சுடலாமா?''

''கரெக்ட். படம் பார்க்க வுடக்கூடாது...''

மெல்லிய 'ரப்பர் பேண்டு' பிடி மாதிரி ஒரு தடி அட்டை... கிட்டத்தட்ட உள்ளங்கை உண்டிவில். கவண் மாதிரியான அம்கல் பாப்கார்ன். குறி சரோஜா.

''அப்ப புடிச்சு எவனோ சோளம் அடிக்கிறாண்டி... லொட்டு லொட்டுன்னு வுழுது...''

''அன்னிக்கு டைம் கேட்டவன் பின்னால இருக்கான்.''

''எழுந்து கத்திரட்டா...''

''வேணாம்... சும்மா சும்மா கத்தினா உன் மேலயே ஊருக்குச் சந்தேகம் வரும்...''

"சோளப்பொரி வுழுதே..."

"வுழுந்தா என்கிட்ட குடு... நான் சாப்பிடறேன்..."

"ப்ரதர், சரோஜா கூச்சலே போடலையே..."

"நீ பக்கத்துப் பொண்ணு மேலயே அடிக்கற... கொண்டா இப்படி..."

"சரோஜா திரும்பிப் பார்க்குது..."

"கத்தவேயில்லை."

"படிஞ்சிருச்சா..."

"பஞ்சாயத்துல. அடிவாங்கினானில்ல மனசு கஷ்டமா யிருக்கும்."

"ப்ரதர், அப்ப ஒரு ஐடியா..."

"என்ன... என்ன..."

"இன்டர்வெல் டயத்துல நல்ல பாட்டுப் போடச் சொல்லு..."

"போடுவானா?"

"ரெண்டு ரூபா குடு... போடுவான்..."

"போட்டா...?"

"மேடைல போய் ஆடும்மா... பாஸ்கரு, ரவி, கண்ணன் மனோகர் நாலுபேரும் ஆடுங்க... மனோகரை சென்ட்ரா வுடுங்க..."

"மனோகர் ஆடினா..."

"உடனே படியும்..." மனசு உசுப்பப்பட்டது.

ப்ரேக் டான்ஸ் இல்லை... ஒயிலாட்டம் இல்லை. டப்பாங்குத்து இல்லை. எல்லாம் கலந்த் கலவை. ஆடினார்கள். கூட்டம் கைதட்டியது.

சரோஜா சிரித்தாள்.



இடைவேளை முடிந்ததும் கழிப்பறை வாசலில் நண்பர்கள் கைகுலுக்கிக் கொண்டார்கள். 'சரோஜா, மனோகர் வாழ்க' என்று சுவரில் எழுதினார்கள்...

"சரோஜா படிஞ்சுடுச்சுன்றே?"

"கத்தலையே... அது போதும்..."

"சிரிச்சுதுப்பா..."

நாலு பேர் பார்க்க நடனம்... நாலு பேர் பார்க்க அவமானம். நாலு பேர் பார்க்க காதல்.

அவனுக்கு என்று ஒன்றுமில்லை. அவன் யோசனை விருப்பம். வாழ்வு எதுவுமில்லை. இந்தத் தேசத்தின் பதினெட்டு வயசுகள் ஒரு உத்வேகம் மட்டுமே கருதி வியர்க்கின்றன.

வியர்க்க வியர்க்க ஏதாவது செய்ய வேண்டும். அது காதலாயினும் சரி வேறு எதுவாயினும் சரி...

ஆமாம் சரோஜா ஏன் சிரித்தாள்? ஏன் கத்தவில்லை? 'யப்பா' என்று ஏன் எழுந்திருக்கவில்லை?

அவளுக்கும் பதினெட்டு வயசு.

அந்தப் பதினெட்டைப் பார்ப்போம்...

## 5

மனோகர் என்று எழுதிய பெயர் எப்படி உண்மை யில்லையோ, அப்படியே சரோஜா என்கிற பெயரும் உண்மையில்லை.

தமிழ்நாட்டின் தென்திசை சிறு நகரத்தில் பத்தாவது பாஸ் பண்ணி அல்லது ஃபெயிலான பதினெட்டு வயசுப் பெண்... அச்சாபீஸோ, ரெடிமேட் உடைகள் தயாரிக்கும் நிறு

வனமோ, காஸ் ஏஜென்ஸியோ... வேலைக்குப் போகிறாள் என்று கொள்ளுங்கள். வாடகைக்கும், பாலுக்கும் அவள் சம்பாதிக்கிற எண்ணூறு ரூபாய் உதவியாய் இருக்கிறது. சம்பாதிக்கிறது என்பதால் நூறு ரூபாய் பஸ் செலவுக்குத் தருகிறார்கள். பஸ்ஸுக்கு நாற்பது போக அறுபது ரூபாய் மிச்சம். புடவை சீட்டு இருபது போக நாற்பது பாக்கி. மாசம் இரண்டு சினிமா போக முடியும். பஸ் ஸ்டாண்டில் மூன்றாவது முறையாய் விற்பனைக்கு வருகிற மலிவு நாவல் வாங்க முடியும். அவ்வளவுதான் முடியும்.

பஸ் ஸ்டிரைக் என்றால் நடப்பது தவிர வேறு வழியே இல்லை. ஆட்டோ இயலாது. கால் செருப்பைக் கவனமாக கையாள வேண்டும். முதல் முறை அறுந்து தைக்கக் கொடுக்கிற போதே, அடுத்த மாசத்துக்கு அடுத்த மாசம் புதுச்செருப்பு வாங்கக் காசு சேர்க்க வேண்டும். இடையே சளி, இருமல் என்று டாக்டரிடம் போனால் செருப்பு வாங்குவது கஷ்டப்படும்.

ஆனால், இப்படி எத்தனை கஷ்டம் இருந்தாலும் சரோஜாவுக்கும் காதலிக்க ஆசை வரும்.

"சினிமால டக்குன்னு பிரபுவை ரேவதி லவ் பண்ணுது... எப்படி?" என்று ஆச்சரியம் வரும். 'அது பிரபு இது ரேவதி... அதனால என்று ஏக்கம் வரும். பஸ்ஸில், வேலையில் சமையலறையில், படுக்கையில் தன் நிலை பற்றி வருத்தமும், எதிர்காலம் பற்றிச் சந்தேகமும் வரும்.

"தோ பாரு சரோஜா... ஏதோ இல்லாத குறைக்கு வேலைக்கு அனுப்பறோம். எனக்கு இஷ்டமில்லை. அப்பா தான், 'கிட்டதானே இருக்கு. போயிட்டு வரட்டும்' னாரு. அதனால அனுப்பறேன். போனமா, வந்தமான்னு இரு. இங்க நிக்கறது அங்க நிக்கறது எல்லாம் வேணாம். கண்ட சினிமா பார்த்துட்டு மொட்டைப் பசங்க, எவ ஆம்புடு வான்னு அலையறானுங்க. ஊர் உலகம் நல்லா இல்லை.



நாமதான் பார்த்து பதவிசா நடந்து போவணும். முள்ளு வாழையிலையில் பட்டாலும், வாழையிலை முள்ளுல பட்டாலும் -கிழியறது வாழையிலைதான்" -அம்மா எச்சரித்தாள்.

கொல்லைப்புற வாழைமரம் பார்க்கிற போதெல்லாம் தன் நினைவும், தன் நினைவு எழும்போதெல்லாம் வாழை மரமும் சரோஜாவுக்கு நினைவு வரும்.

ஆனால், கொல்லையில் உள்ள வாழை காதலிக்காமல், கல்யாணம் செய்யாமல் குலை தள்ளிக் கன்று ஈன்று விட்டது. பத்தாவது படிக்கிறபோது அம்மா நட்டமரம்... சரிந்து கன்று வளர்ந்து தளதளத்துக் கிடக்கிறது. பக்கத்தில் முள்ளே இல்லை. காற்று பட்டே பல இலைகள் கிழிந்திருக் கின்றன. ஆனாலும், வாழை குலை தள்ளும். கன்று ஈனும். சரோஜாவை விட வாழைமரம் வசதியானது. வாழை மரத்தைவிட சரோஜா நிலை மோசமானது. சரோஜாவின் தனிமை யாருக்கும் புரியாது.

*'காலம் பகைத்தாலும் கணவர் பணிசெய்து*
*காதல் உறவாடுவேன்-உயிர்*
*மானம் பெரிதென்று வாழும் குலமாதர்*
*வாழ்வின் சுவை கூறுவேன்.'*

- சரோஜாவுக்குப் பிடித்த பாட்டு. அப்படி வாழவேண்டும் என்றுதான் ஆசை. அம்மா அப்படித்தான் வாழ்ந்தாள். பாட்டி அப்படித்தான் வாழ்ந்தாள். யாரும் வேலைக்குப் போகவில்லை. வடாம் இட்டு, உளுந்து அரைத்து, சாக்பீஸில் கோலம் கற்று, பல்லாங்குழி ஆடி, உயிர், மானம் பெரிதென்று வாழ்ந்தார்கள். 'கணவர் பணி' செய்தார்கள்.

சரோஜா மட்டும் பஸ் பிடித்து வேலைக்குப் போக வேண்டி வந்து விட்டது.

''லேடீஸ் வந்தா எழுந்துக்கனுமா... ஏன்? நாங்க கொடுக்கறது துட்டா தெரியலையா? போம்மா... போய்ச் சௌகரியமா உக்காரு'' அலுப்புடன் பஸ்ஸில் இடம் தருகிறார்கள்.

''பஸ்ஸு பரவாயில்லை. ஆம்பளைக்கு இடம்தரான். டைமண்ட் தியேட்டர்ல லேடீஸுக்குக் கொடுத்துட்டுத் தான் மிச்சம் புருஷர்களுக்கு. பவுடர் கலையாம டிக்கெட் வாங்கிட்டுப் போயிடறாங்க.'' -இன்னொரு சொல் வரும்.

''ஆம்பளை பொம்பளைன்னு பஸ்ஸுல பிரிச்சுப் பார்க்கறது தப்பு. ஏரோப்ளேன்ல பார்க்கறானா... அங்க லேடீஸுக்குன்னு தனி ஸீட் கிடையாதாமே...''

''ஏரோப்ளேன்ல போற பொம்பளை எங்கியும் உட்காரு வாங்க. நம்ப பொம்பளை உட்காருமா?''

''அப்ப வராதே. வூட்டோட இரு. 'வெளி வாசல்ல இஷ்டத்துக்கு வருவேன். இஷ்டத்துக்குப் போவேன். எனக்குத் தனியா இடம் எழுதி வை' ன்னா என்ன நியாயம்? பதினஞ்சு கிலோ மீட்டர் டிக்கெட் வாங்கி நான் நிக்கிறேன். ரெண்டு கிலோமீட்டர் அது உட்காருது.''

''இப்ப என்னன்ற... வேணா போய்ப் பக்கத்துல உக்காரு. எழுந்திருக்காதே.''

''வேணம்பா வம்பு. அப்புறம் கை பட்டுது... கால் பட்டுதுன்னு கத்தினா அசிங்கம் நமக்கு.''

பஸ்ஸில், வேலையில், தியேட்டரில் ஆணின் கோபமும், வெறுப்பும், ஆங்காரமும்தான் சந்தித்திருக்கிறாள். யாரும் நட்பாய்த் தெரிந்ததேயில்லை. வயசாளிகள் மட்டுமில்லை. அவள் வயசு ஆண்களுக்கும் ஸ்நேகம் தெரிந்ததில்லை.

''ஐயோ அம்மா... அந்த சைக்கிள் ஆளு வுழுந்திடாரு.''



''அடி வாடீ... வுழுந்தா எழுந்துக்கறான். நீ போய்த் தூக்கிவுடப் போறியா? திமிரு புடிச்சவனுங்க ஒரு ஓரமா போனா என்ன?''

'என்ன நடந்தாலும் ஆணோடு ஒட்டாதே' என்கிறதுதான் பாலபாடம்.

அமாவாசை- ஒன் அவர் பர்மிஷன் உண்டு. அன்று காலேஜ் பையன்கள் போகும் பஸ்ஸில் ஏறினாள்.

''யாரடி நீ மோஹினி...''-காதுக்குப் பின்னால் பாடினார்கள். பயத்தில் உயிர் உறைந்து போய் விட்டது.

முகர்ந்து பார்த்தார்கள்.

''என்ன வாசனைடா?''

''புளியோதரை...?''

''இல்லை. எலுமிச்சம்பழம் சாதம்...''

''நோ. புளியோதரை...''

''கேட்டுருவோம்...''

''மேடம்... அது புளியா, எலுமிச்சையா, தயிரா?''

நெஞ்சோடு ஒட்டிக் கொண்டிருந்த டிபன்பாக்ஸ் காட்டிக் கேட்டார்கள்.

''அதானே... அதானே அது பப்பாளி.'' எவனோ கண்டுபிடித்துக் கத்த...

ஒவென்று ஊளையிட்டுச் சிரித்தார்கள். இறங்க அகலமாய் வழிவிட்டுக் கடக்கும்போது சாய்ந்தார்கள்.

சரோஜா ஒரு கணம் செத்துப்போனாள். உடம்பும் மனசும் குறுகிப் போனாள். அமாவாசை பர்மிஷனும் வேண்டாம். ஆம்பளைப் பசங்க பஸ்ஸும் வேண்டாம் என்று பயந்தாள்.

சரோஜா என்கிற பதினெட்டு வயது தமிழ்ப் பெண்ணின் வாழ்க்கையில் எந்த அந்நிய ஆணும் ஒரு நிமிடம் கூட அன்பாய் நட்பாய் நடந்ததில்லை. அவளை மதித்ததில்லை.

பாவம்... வாழ்க்கை. அவளுக்கு எச்சரிக்கப்பட்ட விதமாகத்தான் இருந்தது. பயம் பன்மடங்கு பெருகிற்று, எந்த ஆணைக்கண்டாலும் மிரண்டாள். மிரட்சியுடன் தான் பார்த்தாள்.

எச்சில் பண்ணி டிக்கெட் கிழித்துக் கையில் திணிக்கும் கண்டக்டரைக்கூட அருவருப்புடன் பார்த்தாள். அருவருப்பு எச்சிலுக்கு இல்லை. 'எதுக்குத் தொடறான் திருட்டுப் பயல்?' என்று கோபம் வந்தது. மேலே யாராவது இடித்தால் முறைப்பு வந்தது. வயசாளிகள் மடக்கிப் பேசினால் கூட எரிச்சல் வந்தது.

அந்த சரோஜாவை டைம் கேட்டால்...

"என்ன சரோஜா சீக்கிரம் கிளம்பிட்ட.... மணி என்ன?"

"போடா பொறுக்கி."

சரோஜாவின் ரியாக்ஷன் தவறா? இல்லை. வேறுவிதமாய் ரியாக்ஷன் செய்யச் சொல்லித் தரவில்லை.

பஞ்சாயத்தில் அவன் தலை முடியைப் பிடித்து அடித்துச் சாய்த்த போதுதான் தான் செய்தது தவறோ என்கிற எண்ணம் வந்தது.

"அப்படிப் போட்டாத்தான் சரிப்படுவானுங்க" என்று எல்லோரும் சொன்னது 'சரியோ' என்கிற சந்தேகமும் வந்தது.

பாப்கார்ன் அடித்தபோது கோபம் வந்தது. "சும்மா சும்மா கத்தாதே" என்ற போது, அதுவும் சரிதான் என்று தோன்றியது. சரோஜா அலைமோதினாள். இரண்டாய்ப் பிரிந்தாள்.



அடி வாங்கியவன் தியேட்டரில் ஆடியபோது ஆச்சரியமாய் இருந்தது.

"அட... ஸ்டைலா ஆடறான். ரொம்ப ஜோரா இல்லை." -மனசு வியந்தது.

"யாருடீ அது?" கேட்டாள்.

"அதான் மனோகர் ... நீ மாட்டிவுட்டல்ல... அந்தப் பையன்."

"நல்ல டான்ஸ் ஆடறானில்ல..."

"என்னடீ... ஏன் மாட்டிவுட்டோம்னு இருக்கா."

"அது இல்லை..." சரோஜா பழசு மொத்தமும் யோசித்தாள். அப்படி யோசித்ததைச் சிநேகிதியிடமும் சொல்லப் பயந்தாள்.

ஏதோ போஸ்டரில்... மன்றப் பொருளாளர் மனோகர் என்று போடப்பட்டிருந்தது. 'அதுவா டான்ஸ் ஆடிச்சு...? டான்ஸ் ஆடின மனோகரா இது...' கேள்வி வந்தது.

பொங்கல் திருநாளை முன்னிட்டு மன்றம் இயல், இசை, நாட்டியம் முப்பெரும் விழா நடத்தியது. நல்ல பல காரியங்களை நடத்தியது. அதற்குக் காசு வசூலித்தது.

சரோஜா நாற்பது ரூபாயில் ஐந்து ரூபாய் கொடுத்தாள்.

மனோகர் இரவு பத்து மணிக்குத் தெருமுனை மர மேடையில் ஸோலோ டான்ஸ் ஆடினான். சரோஜா பெண்கள் பகுதியில் இருப்பது தெரிந்து தீவிரமாய் ஆடினான்.

ஏகத்துக்கு விளக்குகள். பளு தாங்காது பட்டென்று ஃப்யூஸ் போய்விட... மனோகர்தான் ஃப்யூஸ் போட்டான். சரோஜா வீட்டுக்கு வந்து தனியே ஒரு வயர் இழுத்து லேடீஸ் பகுதிக்கு ஒரு ஜாக்கிரதைக்காக லைட் போட்டான்.

"யார் நீ... வேலை தெரியுமா உனக்கு...?" அம்மா மடக்கிக் கத்தினாள்.

"இதுதான் வேலை தாயே... ஐ.டி.ஐ படிச்சிருக்கேன்..."

"வீட்ல ட்யூப் லைட் சரியா எரியலை. ரேடியோ கூட சரியா எடுக்கலை..." -அம்மாவுக்கு சரோஜா நினைவூட்டினாள்.

"காலைல வந்து செய்யறேங்க."

ட்யூப் லைட் சோக் மாற்றி, ரேடியோ பெட்டி இடம் மாற்றித் தனி கனெக்ஷன் கொடுத்து ஸ்டூல் விட்டு இறங்கி சொம்பு தண்ணீர் குடித்துவிட்டு, "வேலைக்குக் காசு வேண்டாம்" என்று போய்விட்ட போது சரோஜா மனோகரைக் காதலித்தாள்.

அவளுக்குத் தெரிந்துவிட்டது. அவன் அவளிடம் காசு வாங்க மாட்டான் என்று.

'மௌனம்தான் பேசியதோ
மயக்கம்தான் கூடியதோ...'

மனசு பாடிற்று.

முதன் முறையாய் ஒருவன் அவளை மதித்தான். மாட்டிவிட்டு அவமானப்படுத்திய பிறகும் மதித்தான்.

சரோஜாவுக்கு அது காதல் என்று தெரிந்துவிட்டது. ஆனால், காதலிப்பது சரியா தவறா என்பது தெரியவில்லை.

சரி என்று சினிமா சொல்லியது. தவறு என்று அம்மா சொன்னாள்.

சரி என்று தமிழ்நாவல் சொல்லியது. தவறு என்று தோழி சொன்னாள்.

சரி என்று மனசு சொல்லியது. தவறு என்று உலகம் தடுத்தது.

சரோஜா பாவம்... தவித்தாள்.



கதை மாதிரி எழுதுகிறேனே என்று தோன்றுகிறதா? கதைதான். இந்த மாதிரி லட்சக்கணக்கான கதைகள் இந்த தேசத்தில் தினம்தினம் நடக்கின்றன.

இருபது வயது எலெக்ட்ரீஷியன் மனோகரை, பதினெட்டு வயசு சரோஜா எண்ணூறு ரூபாய் சம்பளக்காரி சரோஜா காதலிக்கலாமா, கூடாதா?

இது காதலா, இல்லையா? இனி அவள் என்ன செய்ய வேண்டும்? எப்படி வெளிப்படுத்த வேண்டும்? யார் இதில் துணை? யார் எதிரி?

நானா... நீங்களா... சரோஜாவின் அப்பாவா-அம்மாவா... யார் அவளை 'வேண்டாம்' என்று மடக்கப் போகிறார்கள்?

காதல் என்பது இது இல்லை, அல்லது இதுதான் என்று யார் கற்றுத் தரப் போகிறீர்கள்?

நானோ நீங்களோ ஏன் சொல்லித் தரக்கூடாது.

சொன்னால் கேட்பாளோ சரோஜா?

யோசியுங்கள். சரோஜா காதலிப்பது சரியா? ஆமெனில் எங்ஙனம்? இது அழிவெனில் எதனால்?

"ஏங்க மொபஸல்ல காதல் சரியில்லை, சிட்டில சரியா இருக்குன்றீங்களா...?"- கேள்வி வரலாம்.

இந்தப் பேதமைக்கு சிட்டி, மொபஸல் என்கிற பேதமே இல்லை. நகரத்தின் நாகரிக வாசனை, இதில் எந்தத் தெளிவும் தரவில்லை.

அங்கேயும் அல்லாடல்தான்.

அது...

# 6

சென்னை நகரத்தின் நெரிசலான பகுதியில் ஒண்டுக் குடித்தனத்தில் வசிக்கிற அந்தப் பையன் பார்க்கப் பளிச்சென்று இருப்பான். மிக ஒல்லியான உருவம். ஆனால், உடம்புச் சட்டத்தில் ஓர் உறுதி தெரியும். இருபது வயசு இருக்கும். கட்டுரை சௌகர்யம் கருதி அவன் பெயரை வாசு என்று வைத்துக் கொள்வோம்.

அவனது பத்தாவது வயசில் அப்பா காலமாகி விட்டார். ப்ளஸ் டூ முடித்த பதினெட்டு வயசில், அம்மா இறந்து விட்டார். ஒரு தங்கை, ஒரு தம்பி, குழந்தைகள் அநாதை யானது பார்த்துத் தாய்மாமன் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டார். ஆனால், அவர் நிலையோ கஷ்ட ஜீவனம். ஒரேயொரு அறை மட்டும் உள்ள குடித்தனம்.

பதினெட்டு வயசில் இரண்டு உயிர்களுக்குச் சகோதரனாய், காவலனாய், பொறுப்பாய் இருக்க வேண்டிய நிலை வாசுவை அதிர வைத்தது.

காசு...காசு...காசு வேண்டும் என்று பரபரக்க வைத்தது. தனக்கு அடைக்கலம் கொடுத்த தாய் மாமனைத் தெய்வத்தைவிட உயர்வாய் பூஜித்தான். ஒரு லெதர் ஃபாக்டரியில் வேலைக்குச் சேர்ந்தான். ஒருவேலையைச் செவ்வனே கற்றுக்கொள்ள இரண்டு நிர்ப்பந்தங்கள் உண்டு. ஒன்று-பொருளாதாரத் தேவை. மற்றது-அத்தொழிலில் உள்ள முன்னேறும் வாய்ப்பு.

அங்கே வரும் எழுநூறு ரூபாய் சம்பளம் அவசியத் தேவையாக இருந்தது. அது தவிர, தாய்மாமன குடும்பத் துக்கு உதவியாய் இருத்தல் கடமையாயிற்று.

விடிகாலை நான்கு மணிக்கு எழுந்திருந்து பத்துக் குடம் தண்ணீர் தெருக்குழாயில் பிடித்து வரவேண்டும். கூட்டத்



துக்கு நடுவே காத்திருந்து நீர் சேர்க்க ஐந்து மணி ஆகும். பிறகு குளித்துவிட்டு மாமிக்கு உதவியாய்ச் சில காரியங்கள் ஏழு மணிக்குக் கிளம்பினால், ஏழரை மணிக்கு லெதர் கம்பெனி.

'பண்டல் எடை போடுவதிலிருந்து தரம் பிரிப்பது எப்படி' என்பது வரை அவனுக்குக் கற்றுத்தரப்பட்டது. அன்றாடச் செலவுக் கணக்கு முதல், வருடாந்திர பேலன்ஸ் ஷீட் வரை விவரம் அறிய முடிந்தது. அலுவலகத்தைச் சுத்தம் செய்வதி லிருந்து போன் வருகைக்குப் பதில் சொல்வது வரை தயக்க மின்றிச் செய்வான். இரவு வீடு திரும்ப எட்டு மணியாகும். கொஞ்ச நேரம் சினிமாப் பாட்டு, உணவு, தூக்கம்.

வங்கியிலிருந்து பத்தாயிரம் ரூபாய் எடுத்து வர அவன் அனுப்பப்பட்டான். லட்ச ரூபாய் பொருளை லாரி டிரான்ஸ்போர்ட்டிலிருந்து பணம் கட்டி எடுத்து வந்தான். முதலாளிக்கு உடம்பு சரியில்லையெனில் மொத்தமும் கவனித்துக் கொண்டான். நம்பிக்கைக்குப் பாத்திரமானான். உண்மையாய் உழைக்க உயர்வோம் என்று நம்பினான். நம்பிக்கை உயர்த்தியது. உயர்வு நம்பிக்கை கொடுத்தது.

வாசு இல்லாமல் அந்த ஃபாக்டரி இல்லை. வாசுவுக்கு வேலை தெரியும். கொஞ்சம் கத்துகிற பார்ட்டியைச் சமாளிக்க வாசுவால் முடியும். ஆறு முறை வந்து, ஒரே வகை சரக்கை விலை கேட்கிறவனுக்கு அயராது மறுபடி மறுபடி அதே பதில் சொல்லத் தெரியும். கூட முந்நூறு ரூபாய் இரண்டாவது வருடத்தில் கிடைத்தது. உடைகளில் ஒரு நறுவிசு வந்தது. லெதர் ஷூவில் பாண்ட்டும் முழுக்கைச் சட்டையும் ஆர்டர் கேட்கப் போகிறவனுக்குத் தேவை தானே... அழுக்காகவா போக முடியும்...?

அதே சமயம் விடியல் நாலு மணிக்கு பனியனும் லுங்கியுமாய் தண்ணீர் எடுப்பதும் செய்ய வேண்டியிருந்தது. நடைபாதையில் குத்திட்டு உட்கார்ந்து அரையிருட்டில்

விடிகாலைக் குளிரில் தண்ணீருக்குக் காத்துக் கொண்டிருந்த போது...

'கொக்கு உக்காந்திருக்குடி' என்று குரல் கேட்டது.

குத்திட்டு-தலை கவிழ்ந்து-அரைக் தூக்கத்தில் இருந்தவன் குரல் கேட்டு நிமிர்ந்தான். இளம் பெண்கள் நாலுபேர் குடங்களோடு கடந்தார்கள். சுற்றும் முற்றும் பார்த்தான்.

அருகே கொக்கு எதுவுமில்லை. குறைந்தபட்சம் கோழி கூட இல்லை.

வேறு யாருமே இல்லாத இடத்தில் இப்படி ஒரு குரல் வந்தால்-அது தன்னையல்ல என்று எப்படிக் கொள்வது... ஆனால், சொன்னது யார்? இருட்டில் முகம் தெரியவில்லை. குரல் மட்டும் நினைவில் பதிந்தது. குழாய் உயிர் பெற முதல் மூன்று தவலைகள் அவன் பிடித்துக் கொண்டான். நாலாவது பக்கெட்டை வரிசைக் கடைசியில் வைத்தான்.

''பாக்கெட்டைக் கொஞ்சம் பார்த்துக்கங்க'' என்று பொதுவாய்ச் சொன்னான். சிரித்தார்கள்.

திரும்பி வரும்போது பக்கெட் காணோம்.

விசாரிக்க, ''எனக்குத் தெரியாது... என்கிட்ட ஏன் கேக்கற, என்கிட்டயா சொல்லிட்டுப் போன?'' என்று நோகடித்தார்கள்.

''சொன்னேனேம்மா...''

''யார் கிட்ட?''

''பொதுவா சொன்னேனே...''

''கும்புடறதாயிருந்தா ஒரே கடவுளைக் கும்புடணும். சொல்றதா இருந்தா ஒரே ஆள்கிட்ட சொல்லணும். எல்லா கடவுளையும் பொதுவா கும்பிட்டா கஷ்ட காலத்துல அவரு பார்த்துக்குவாருன்னு இவரு வுட்ருவாரு ... இவரு பார்த்துக்கட்டும்னு அவரு வுட்ருவாரு. பொத்தாம் பொதுவா சொல்லிட்டுப் போனா யார் பொறுப் பெடுத்துக்கறது.''

''கொக்கு'' என்று கேலி செய்த அதே குரல்.

''யாராவது இவரு பக்கெட்டை எடுத்திருந்தா கொடுத் திடுங்க...'' ஆளில்லாத சாலையில் இருட்டில் சிரிப்போடு உரக்கக் கூவியது பெண் குரல்.

பேசாதிருந்தான்.

தவலையை வைத்து விட்டுக் காத்திருந்தான். உள்ளே பக்கெட் கவலையும், பேச்சு வெட்கமும், என்ன சொல்வது என்று தெரியாத முழிப்பும் திண்டாடின.

தவலையோடு திரும்பும்போது குரல் கேட்டது.

''பக்கெட் வேணாமா?''

''கடவுள் கொடுப்பாரு''-பதில் சொன்னான்.

''எந்தக் கடவுள்?''

''நாகாத்தம்மன்தான் கொண்டு வந்து கொடுக்கும். அதைத்தான் தினமும் கும்புடறேன்.''

விடியும் நேரத்தில் தளும்ப நீரோடு பக்கெட் வீட்டு வாசலில் இருந்தது. நாகத்தம்மன் வந்து போன சுவடே தெரியவில்லை.

அந்த பக்கெட் வாசுவை வேலை நேரத்திலும் தொந்தரவு செய்தது. 'யார் அது?' என்று கேள்வி எழுந்தது.

'என்னிடம் ஏன் ஈடுபாடு... என்னை ஏன் சீண்ட வேண்டும்?' என்கிற வியப்பு மண்டியது.

தன் நிலை, தன் உழைப்பு மேன்மையை நன்கு உணர்ந்த வாசு லேசாய் கனவில் மூழ்கினான். தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

'யார்...யார்... யாரவள் யாரோ' என்று பாடினான்.

''சும்மா கிடறா' என்று இரண்டு முறை தன்னைத் தானே அதட்டிக் கொண்டான். அதட்ட அதட்ட ஆவல் எழுந்தது.

மறுநாள் பரபரப்பாய் எழுந்து குழாய்க்குப் போக, நாலு தவலைகள் முன்னால் இருந்தன. சுற்றிலும் ஆள் இல்லை. அவற்றைப் பின்னால் வைத்து தன் தவலையை முன் வைக்க... ''ஏய்...'' என்று பால் பூத் பின் பக்கமிருந்து குரல் கேட்டது.

''யாரது?''

''நாகத்தம்மா. கொக்குன்னு பேர் வெச்சது கரெக்ட். ஒன்னும் தெரியாத மாதிரி நிக்கும். வுட்டா ஊர்ப்பட்ட திருட்டு வேலை பண்ணும்.''

''என்ன திருட்டு வேலை... நான் என்ன பக்கெட்டா திருடினேன்?''

''பாத்தியா... பாத்தியா... இந்தாள் பக்கெட்ல நான் சொல்லியும் கேட்காம தண்ணி தூக்கியாந்த. இப்ப திருடுன்னுதுபார் கொக்கு.''

''ஏய், சும்மா கொக்குன்னா...''

''கொக்கு...நாரைக் கொக்கு...''

யாரென்று புரிந்து விட்டது.

புனிதா.

குடியிருப்பில் முதல் பகுதியில் இருக்கும் புனிதா. பன்னிரண்டு போர்ஷனில் டி.வி. இருக்கிற ஒரே வீடு. நடையில் உட்கார்ந்து பேன் சீப்பில் தலை வாருவது பார்த்திருக்கிறான். டக் டக்கென்று அம்மிக்கல்லில் மசாலா அரைப்பது கவனித்திருக்கிறான். தைப்பொங்கலுக்கு தெரு அடைத்து அவள் கோலம் போட்டது தெரியும். தன் மாமி யோடு பேசுவதும் கண்டதுண்டு.



'சரி... என் பக்கெட்டை ஒளித்து வைத்து ஏன் என்னைச் சீண்ட வேண்டும்? என்னை ஏன் கொக்கு என்று அழைக்க வேண்டும்.'

அவள் யார் என்று புரிந்து விட்டது. ஊர் பேர் தெரிந்து விட்டது. இனி என்ன? 'சும்மா இரு' மனசு அதட்டியது. 'இந்தப் பேச்சு வீண் வம்பில் முடியும். எவராவது கவனித்தால் புரளியாகும். சும்மா இரு.''

''கொக்கு காவுட்டுருச்சுடி உன்னோட.''

''போட்டும்... எனக்கென்ன?''

''ஒரு பக்கெட் தண்ணிக்கு நன்றிகூடச் சொல்லலை.''

''வேணாம். சொன்னா ஷு போட்டுக்கிட்டுப் போற பவிசு குறைஞ்சிடுமா இருக்கும்.''

''அதுல முழுக்கைச் சட்டை வேற ஆபீஸர் மாதிரி.''

''நீ பத்துக் குடம்... நான் பத்துக் குடம்... அப்புறம் தான் மத்த ஆள் தண்ணி புடிக்கணும்.''

''ஏன்?'' -அதட்டினான்.

''ஏனா...? மூணு மணிலேர்ந்து உட்கார்ந்திருக்கோம். உன்னை மாதிரி நாலுமணிக்கு ஆடி அசைஞ்சு அரைத் தூக்கத்துல வரலே.''

பெண்களுக்கு எதிரே என்ன பேச முடியும். அவள் குடம், இவள் குடம் என்று மாற்றி மாற்றி ஆறாவது நடை போய்க் கொண்டிருந்தது. நாலு மணி கூட்டம் வர...'' என்ன இது... ஒரே ஆளே தண்ணி எடுத்துக்கிட்டு இருக்கீங்க, வுடு குழாய்.''

''இப்பத்தான் முத குடம் போவுது. கேட்டுப் பாரு அவரை.''

''என்னப்பா முத குடமா இது? பொய் சொல்லாத சொல்லு.''

''ஆமாம்.''-பொய் சொன்னான். ஏன் பொய் சொல்கிறோம் என்று தெரியாமல் பொய் சொன்னான். இருளில் கண்கள் பளபளக்க அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவனும் பார்த்தான்.

''கண்மணியே காதல் என்பது
கற்பனையோ காவியமோ
கண்வரைந்த ஓவியமோ
எத்தனை எத்தனை இன்பங்கள்
நெஞ்சினில் பொங்குதம்மா...''

நெஞ்சுள் பாட்டு கிளம்பியது.

வாசு-தாய்-தகப்பன் இல்லாத வாசு, தானே தன் உணவைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய இருபது வயசு வாசு. ஒரு தங்கை. ஒரு தம்பியின் பொறுப்பேற்க வேண்டிய வாசு, தன் தாய் மாமன் வீட்டில் அடைக்கலமாகப் புகுந்தவன். காதல் வயப்பட்டான்.

விடியல் வேளையில் மாநகராட்சிக் குழாயடியில் கிழிசல் பனியனும், பழைய லுங்கியும், கொக்கு மாதிரி உடம்பும் கொண்டிருப்பினும்... ஏழேகாலுக்கு ஓடி ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்க வேண்டியிருப்பினும் காதல் வயப் பட்டான்.

'லவ் பண்றதா, வேண்டாமா?'

வாசுவுக்குப் புரியவில்லை. இது நல்லதா, கெடுதலா? விளங்கவில்லை. இது சரியா, தவறா...? சொல்ல ஆளில்லை. கேட்கத் துணிவில்லை. ஆனால் மனசுள் காதல் பொங்கியது. சாப்பிடும்போது, கையலம்பும் போது பவுடர் போட்டுக் கொள்ளும் போது, உடுத்தும் போது, ஷூ மாட்டும்போது, அவள் போர்ஷனைத் தாண்டும் போது அவளே மனசுள் தோன்றினாள். இருளில் பளபளத்த கண்கள் நெஞ்சில் கல்வெட்டாய் பதிந்தன.



நாகாத்தம்மனை கண்மூடிக் கரம் குவித்து வேண்டினான்.

''அம்மா, எனக்கு நல்லதே கொடு.''

உள்ளே பக்கெட் தண்ணீர் தளும்பியது. புனிதா சிரித்தாள். பயமாய் இருந்தது.

ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்கு வலையில் சிக்கியது. வலைக்கு இடையே உள்ள மீனைக் கொத்தியது.

அது உறுமீனா? ஓடு மீனா?

யாருக்குத் தெரியும்?

வாசு என்கிற கொக்குக்கு வாயில் மீன்.

காலில் வலை.

என்ன செய்வான்?

காதல் என்பது சில சமயம் சிலருக்குக் காக்கை எச்சம் போலத் தலையில் விழும். ஒரு வம்புக்கும் போகாதிருந் தாலும் வம்பு வரும். துடைத்தால் துடைத்த கை நாறும். பட்ட இடம் கறையாகும். குளிக்க வேண்டும். மொத்தமும் அலசிக் குளிக்க வேண்டும்.

'சீ அசிங்கம்' என்று உடனே குளிக்கச் சிலரால் முடியும். சிலர் செய்வதறியாது, நிற்க நேரிடும்.

வாசு இரண்டாவது ரகம்.

புனிதா எந்த ரகம்?

ஏன் சீண்டல் குணம்.

கொக்கு என்று கூப்பிட்டு, ஏன் துள்ளுகிற சந்தோஷம். மொபஸல் மனோகருக்கும், சிட்டி வாசுவுக்கும் ஒரே மாதிரி பிரச்னை. உள்மனசு வேதனை.

அந்தப் புனிதாவுக்கும் பதினெட்டு வயசு. சும்மா இருக்க முடியாத மனசு. அவசரமற்ற பகல் பொழுது. ஆயிரம்

ஆயிரம் சித்திரம் போடுகிற வயசு. புனிதாவுக்கும் பயமில்லையா. உண்டு அது.

## 7

புனிதாவுக்கு முதல் பயம் அவள் சிநேகிதி. அவளுக்குத் தான் புனிதாவின் காதல் பற்றி ஆதியோடு அந்த முமாய்த் தெரியும். அவளிடம் தான் மனசுவிட்டு நிறையப் பேசியிருக் கிறாள்.

விடியல் நேரத்தில் யாருமில்லாத தெருவில் தவலையை வைத்துவிட்டு தண்ணீர் வரும்வரை சும்மாவா நிற்க முடியும்? 'எதுனா பேசலாம்' என்று துவங்கும்போது, எல்லாப் பேச்சும் இதில்தான் வந்து முடிகிறது.

''லவ்வுன்னா என்னாடி...'' சிநேகிதிதான் முதலில் கேட்டாள்.

''ஏய்... என்ன அசிங்கமெல்லாம் பேசறே?'' என்று புனிதா முறைத்த போது...

''இல்லே... நிஜமாவே தெரியலை. அதான் கேட்டேன்'' என்றான்.

''லவ்வுன்னு ஒரு ஆம்பளைய ஒரு பொம்பளை முழு மனசா நேசிக்கிறது. இவன் ஒருத்தன்தான் புருஷன் எனக்குன்னு விடாப்புடியா இருந்துடறது...'' புனிதா பதில் சொன்னாள்.

''அப்படி ஆம்பளைங்க நினைப்பாங்களா?''

''எப்படி?''

''இவ ஒருத்தித்தான் நமக்குன்னு...''



''நினைச்சா நினைக்கிறான், நினைக்காட்டிப் போறான். ஆனா பொம்பளை அப்படித்தான் இருக்கணும். இவன் ஒருத்தன்தான் எனக்குன்னு விடாப்புடியா இருக்கணும்...''

''அப்பன் ஆயி உதைச்சா?''

''வாங்கிக்கணும்.''

''கட்டி வைக்க முடியாதுன்னா?''

''அரளி விதை அரைச்சு முழுங்கிடணும்.''

''ஐயோ...''

''அதான் சொல்றேன். லவ்வுன்றது கஷ்டம்.''

இரண்டு நிமிடம் ஒன்றுமே தோன்றாமல் பிரமித்துக் கிடந்தார்கள்.

''அத்தினி கஷ்டம்னு தெரிஞ்சு ஏன் லவ் பண்றாங்க'' சிநேகிதி மறுபடி பேச்சைத் துவங்கினாள்.

''யாரு?''

''பொதுவா எல்லோரும்...''

''செய்துடலாம்... ஜெயிச்சுடலாம்னுதான்.''

''ஜெயிக்கிறதுன்னா கல்யாணம் கட்டறதா?''

''பின்னே?''

''ஜெயிக்கலேன்னா...? வேற ஒருத்தருக்குக் கட்டி வெச்சுட்டாங்கன்னா...?''

''கஷ்டம்தான். மனசுல ஒருத்தன். உடம்புக்கு ஒருத்தன்னு... வ்வே... நினைக்கிறபோதே குமட்டுது.''

சிநேகிதிக்கும் குமட்டியது.

''ஆனா, டைவர்ஸ் பண்ணிட்டு வேற ஆளைக் கட்டிக் கிட்டாளே அந்தப் பொம்பளை.''

''நாடகமோ, சினிமாவோ, அரசியலோ, சமூக சேவகமோ, சற்று வசதியான இடமோ அங்கே உதாரணமாக வாழ்விலிருந்து ஒரு பெண்மணி காட்டப் பட்டாள்.

''அவங்க செய்வாங்க. நம்ம செய்ய முடியுமா?''

''ஏன்?''

''அசிங்கம்.''

''ஏன்?''

''தெரு காறித் துப்பாதா. கேட்கறியா கேள்வி.'' புனிதா கோபமாகத் திட்டினாள்.

''ஆமா.'' என்று சிநேகிதி ஆமோதித்தாள்.

இந்தப் பேச்சு மாநகராட்சிக் குழாய்க்கும் கேட்டிருக்க வேண்டும். காற்றும் நீரும் கலந்து குமட்டியது 'ஹோ' என்று அழுதது.

அன்றைக்குத் தண்ணீர் எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள்.

மறுநாள் தொடர்ந்தார்கள்.

''நீ சொல்றதுல ஒரு தப்பு புனிதா...''

''என்னா?''

''நம்ம தெருவுல நாலஞ்சு இருக்குது.''

''எது?''

''லவ் பண்ணி வேற கட்டினது. வேற கட்டி அறுத்தட்டு இன்னொண்ணு கட்டினது.''

''கழிசடைங்க.''

''அப்படிச் சொல்ல முடியாது. நல்லாதான் இருக்காங்க. சிரிச்சுப் பேசிக்கிட்டுத்தான் சுத்தறாங்க. பார்த்தா கஷ்டப் படற மாதிரி தெரியலை.''

''இப்ப என்னன்ற...?''



''லவ்வுன்னா என்ன?''

''நீ சொல்லு...'' புனிதா விலகிக்கொண்டாள்.

''ஒரு சந்தோஷம். ஒரு ஆளைப் பிடிச்சிருக்குன்னு அர்த்தம். இந்த மாதிரியான ஆளு எனக்குப் புருஷனா வந்தா என்னன்னு ஒரு இது...''

647120

''எது?''

CPL 647120

''ஏக்கம்.''

''அப்பால...''

''நம்ம ஜாதகம் நல்லா இருந்தா கூடும். இல்லைன்னா கூடாது.''

894.8113
BAL

''நீ யாரையாவது லவ் பண்றியா?''

''தெரியலை.''

''ஏய்...''

''நிசம்மா தெரியலை. அவரு பார்த்துட்டே போவாரு. நானும் பார்ப்பேன். எதுனா கேட்பாரு. கொண்டாந்து தருவேன். ஒருநாள் இந்தச் சட்டை உங்களுக்கு நல்லா இருக்குன்னேன்.''

''அட...''

''உத்துப் பார்த்துட்டுப் போயிட்டாரு.''

''அப்புறம்?''

''பார்க்கறதேயில்லை...''

''ஏன்?''

''அதென்னமோ தெரியலை. மூஞ்சி கொடுக்கறதே யில்லை. பொசுக்குன்னு போயிடுது. ஏண்டா அப்படிச் சொன்னோம்னு ஆயிடுச்சு. சொன்னது தப்போன்னு ஒரு பயம்... எதுனா நம்மப் பத்தி தப்பா நினைச்சுட்டா'னு ஒரு இது. சரி போன்னு நானும் பார்க்கறதில்லை. ஆனா...''

...ONNEMA... PUBLIC LIBRA...

"என்ன ஆனா..."

"ஒரே துக்கமா போயிடுச்சு புனிதா... அழுதுட்டேன் தெரியுமா?"

"உட்டுறு..."

"உட முடியலை. ஏன் என்னைப் புடிக்கலை. ஏன் இப்படி மூஞ்சி திருப்புது. எனக்கு என்ன அழகில்லையா? குண மில்லையா...? எப்பவும் அந்தாளைப் பத்தியே யோசனை... யோசிக்கிற போதெல்லாம் ஒரு வேதனை..."

அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட ஏக்கம், வேதனை இன்று நேற்று விஷயமில்லை. இரண்டாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வேதனை. அதற்கு இந்தக் கவிதை சாட்சி.

"ஒரூர் ஆயினும் சேரிவாரர் சேரி வரினும் ஆரமுயங்கார்
ஏதிலாளர் சுடலைபோலக் காணா கழிபமன்னே
நாணிட்டு நல்லறி வீழுந்த காமம்
வில்லுமிழ் கணை போலச் சேட் படவே"

'அவனுக்கு என்னுடைய ஊர். ஆயினும் என் வீட்டுக்கு வருவதில்லை. வந்தாலும் என்னோடு பேசுவதில்லை. அடுத்த ஊர் சுடுகாட்டைப் பார்ப்பது போல என்னைப் பார்த்ததும் முகம் திருப்பிப் போய் விடுகிறான். (நம்மூர் சுடுகாட்டில் ஏதாவது எரிந்தால் என்ன என்றாவது பார்ப்போம்... அடுத்த ஊர் காடு எனில்...?) வெட்கம் விட்டு நல்லறிவு விட்டு என்னிலிருந்து கிளம்பிய காதல், அதாவது ஆசை, இலக்குத் தப்பிய அம்பு போல வீணாயிற்று' என்று பெண்பாற் கவிஞரால் எழுதப்பட்ட கவிதை இது. குறுந்தொகையில் உள்ளது.

புனிதா சிநேகிதியைத் தேற்றினாள். அவள் துக்கம் மாற்ற ஏதேதோ சிரிக்கப் பேசினாள். அப்படிச் சிரிக்கிற விதமாய் சொன்ன வார்த்தைதான்.

'கொக்கு உக்காந்திருக்குடி."



சிநேகிதிக்குச் சிரிப்புக்குப் பதில் பயம் வந்து விட்டது. "அவன் திட்டப்போறான். எதுக்குடி வம்பு?" முணுமுணுத் தாள்.

"திட்டுவானா... பார்க்கலாமே..." புனிதா மேலும் சீண்டினாள், பக்கெட் ஒளித்து வைத்தாள். அவன் பேசாது போக, தண்ணீரோடு அந்த பக்கெட்டை அவன் வீட்டு வாசலில் வைத்தாள். சிநேகிதிக்கு ஒரே ஆச்சரியம். 'இவ துணிச்சலைப் பாரேன்' என்கிற ஆச்சரியம்.

பக்கெட் தண்ணீர் வைக்கிறபோதுதான் ஏழு மணிக்கு அவன் குளித்துவிட்டு சம்மணமிட்டு கண் மூடி பூஜை செய்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். 'அடடே' என்று தோன்றி யது.

'ஏழே காலுக்கு அவன் பனியனும் லுங்கியுமாய் வெளியே வந்து ஷூ துடைப்பதைப் பார்த்தாள். ஏழு இருபத்தைந்து- அவன் ஷூ அணிந்து, முழுக்கைச் சட்டை போட்டு கையில் ஏதோ பேப்பர் சுருட்டியபடி, "மாமி வரேன்" என்று குரல் கொடுத்து நடைக்கு வந்தான். விநோதமாய் ஷூ சத்தத் துடன் அவளைக் கடந்தான். நின்று திரும்பிப் பார்த்தான்.

"பாக்கெட் நீதானே எடுத்தே... " கேட்டான். கடந்து போய்விட்டான்.

"யாருடி பேசறது?" அம்மா குரல் வந்தது.

"வாசு."

அந்தப் பேர் ஏனோ இனித்தது. நாலு தடவை சொல்லிப் பார்த்துக் கொண்டாள். இடைவிடாது இனித்தது. வாசு திரும்பினது எப்போது என்று தெரியவில்லை.

ஜில்லென்று காற்றுப்பட கண் விழித்தாள். மணி மூன்று முப்பது. விளக்குப் போட்டு தவலை குடம் எடுத்து இரண்டு வீடு தள்ளி தோழியை எழுப்பி சிலுசிலுக்கும் காற்றில் தெருவில் நடக்க, அந்தக் குளிர், அந்த இருள் உள்ளே கிளர்ச்சி ஏற்படுத்தியது.

''பக்கெட் கொண்டுபோய் வெச்சுட்டேன். பேய் முழி முழிச்சுது.''

''ஓ...''

''இன்னிக்கு எதுனா வம்புக்கு வந்ததுன்னா ரெண்டுல ஒண்ணு பாத்துடணும்.'' தவலைய வைத்து விட்டுப் பால் பூத் மறைப்பில் குளிருக்கு இதமாய் உட்கார்ந்து கொண்டார்கள்.

கொக்கு வந்து குடம் நகர்த்த, குரல் கொடுத்தார்கள். அடாவடித்தனமாய் ஆறு குடம் தண்ணீர் எடுத்தார்கள். கொக்கு நிமிரவேயில்லை.

''என்னாடி பேசலை?''

''பேசினா வுட்டுருவேனா... காலி குடத்தாலேயே நாலு போடமாட்டேனா...?

''எதுக்குடி மாங்குமாங்குன்னு அலையற... மூணு குடம் போறாது?''

''தலைக்குக் குளிக்கப் போறேம்மா.''

''அப்படியும் இது ஜாஸ்திதான். விளாவறதுக்குக்கூட காலி பக்கெட் இருக்காது போலிருக்கே.'' நடையில் அவன் பக்கெட் இருந்தது. கொண்டு வந்து குடத்து நீரை பக்கெட்டில் கவிழ்த்தாள். உள்ளே போய் விட்டாள்.

இன்னும் தன் பக்கெட்டில் தண்ணீர் இருப்பது பார்த்துத் திகைத்தான். ''என்னாச்சு இதுக்கு?'' என்று வியந்தான். சந்தோஷப்பட்டான்.

சிநேகிதி பகல்பொழுதில் பேச வந்தாள். ''என்னா சொல்லிச்சு...?'' கேட்டாள்.

''ஒண்ணும் சொல்லலை. நின்னு பார்த்துட்டுப் போயிடுச்சு.''

''லவ்வா?''



'ஆம்' என்று சொல்லவோ, 'இல்லை'யென்று சொல்லவோ இயலவில்லை. பயமாய் இருந்தது. இவளிடம் ஏதாவது சொல்ல, இவள் தெரு முழுக்கச் சொல்லி வம்பா என்கிற யோசனை வந்தது.

''அதுக்கு ஒருவேளை உம்மேல லவ்வோ?''

''யாருக்குத் தெரியும்?''

''இருக்கும்னு தோணுது?''

''எப்படிச் சொல்ற?...''

''அது பாக்கறது அப்படி இருந்தது.''

''வேணாம்ப்பா வம்பு.''

''ஏண்டி?''

''லவ்வு கஷ்டம். மனசு ஓராள்கிட்ட கொடுத்துட்டா எடுக்கறது முடியாத காரியம். சரியுமில்லை.''

''நல்ல ஆள்தானே... ஆயிரம் ரூபாய் சம்பளம். லெதர் வேலை தெரியும்... எங்க போனாலும் வேலை கிடைக்கு மாம். தங்கச்சிய வர வருஷம் கட்டிக் குடுக்கப் போறாங் களாம்.''

''எப்படி... எப்படித் தெரியும்?''

''எங்க வூட்டு வாசல்ல மளிகைக் கடைக்காரர்கிட்ட பேசிட்டிருந்திச்சு.''

''பேசறது பார்த்தியா நீ, இல்லை யார்கிட்டயோ பேசினது கேட்டுச் சொல்றியா?''

''நீ கண்டனையோ... கண்டனவாய் கேட்டனையோ...'' இதுவும் குறுந்தொகைதான். இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தின சமாச்சாரம்.

புனிதா என்கிற பதினெட்டு வயசுப் பெண் இங்கே வெகுளி. அவள் வெகுளி, பொருளாதாரச் சூழல், படிப் பறிவு, சார்ந்திருக்கிறது. சமூகக் கோட்பாடு, மதம், இனம்,

கலாச்சாரம் எல்லாம் காரணமாய் இருந்தன. அவை இங்கே குழப்பமாய் இருந்தன. இவையேதும் காதலிப்பது தவறா. சரியா என்கிற கேள்விக்கு விடை தரவில்லை.

சரி என்று சினிமா சொல்லிற்று.

தவறு என்று அம்மா சொல்கிறாள்.

சரி என்று தமிழ் சொல்லிற்று.

தவறு என்று தோழி சொல்கிறாள்.

சரி என்று மனசு சொல்லிற்று.

தவறு என்று சமூகம் தடுக்கிறது.

புனிதா தவித்தாள்.

'புனிதா கொழுப்பெடுத்தது' என்று கோபத்துடன் நீங்கள் பேச ஆரம்பித்தீர்களேயானால், ஒரு வார்த்தை...

புனிதா உங்கள் குழந்தை... உங்கள் மகள் 'நல்லாயிரும்மா' என்று ஆசீர்வதிக்கப்பட வேண்டிய மகள். யோசியுங்கள். புனிதா காதலிப்பது சரியா?

ஆமெனில் எங்ஙனம்? இது அழிவெனில் எதனால்?

## 8

இரண்டு காதற் கதைகள்; நாலு ஜீவன்கள் இவர்களைப் பற்றி எல்லாம் நமக்குத் தெரிந்துவிட்டது என்கிற பிரமை இருப்பினும், இது எப்படிச் சரி வரும் என்கிற கேள்வி வரினும், 'தேவையா உனக்கு... நீ உண்டு உன் வேலை உண்டுன்னு இல்லாம, எதுக்கு லவ்வு?' என்று உபதேசம் செய்ய விழைவு வரினும் தெரிந்ததை மனசில் நிறுத்தி யோசிப்போம்.



முதலில் வெளியூரில் உள்ள ரசிகர் மன்ற எலக்ட்ரீஷியன் பையன் மனோகர்; அவன் தொடர்ந்த எண்ணூறு ரூபாய் சம்பளக்காரி சரோஜா- மரபுப் பெண். அடுத்ததாய் பட்டணத்தில் உள்ள லெதர் கம்பெனி பிள்ளை வாசு; அவனைக் கொக்கு என்று வம்புக்கிழுத்த முன் போர்ஷன் குடித்தனக்காரப் பெண் புனிதா. இந்த இரண்டு ஜோடிகளுக்கும் பொருளாதாரம் வலுவாய் இருந்தால்... எலக்ட்ரீஷியன் வேலைக்குப் பதில் இன்ஜினீயர் வேலையிருந்தால், லெதர் கம்பெனி வேலைக்குப் பதில் லேலெண்ட் கம்பெனியாய் இருப்பின் வெற்றி வாசல் திறக்குமோ?

"இன்ஜினீயரா? மணி கேட்டாரு..."

"சொன்னா என்னா? ச்சீ போன்னு வர்றதா? தப்பில்லை? மரியாதை தெரியாத நாயே."

சரோஜாவின் அம்மா. நாக்குப் புரட்டிப் பேசியிருக்கக் கூடும்.

"நான் நேரே போய்ப் பார்த்து, 'அது அறியாத பொண்ணு. தப்பு பண்ணிச்சு' ன்னு சொல்லிட்டு வரேன்..." போர்த்திய புடவையோடு இன்ஜினீயரை நோக்கி அம்மா ஓடக்கூடும்.

"எதுக்கும்மா மன்னிப்பு?"

"அந்தாளுக்குப் பொண்ணு தேடறாங்கடி. என்னண்டையே பேசிச்சு அவங்க அம்மா. நல்ல பொண்ணா, நல்ல குடும்பமா இருந்தா சொல்லுன்னு கேட்டது. உடனே எனக்கு உன் ஞாபகம்தான்..."

"ஏம்மா... சரின்னுவாங்களா என்னை? செய்ய முடியுமா நமக்கு?"

"நல்ல பொண்ணுன்னு கேட்கறாங்கடி. நகையிலே பேச்சு ஆரம்பிச்சாங்கன்னா... அப்படி ஒண்ணுமேயில்லாம அனுப்பிருவோமா பொன் வைக்கிற இடத்துல பூ வெச்சாவது அனுப்பிருவோம்'னு சொல்லிடமாட்டேனா. அடுத்த

தடவை மணி கேட்டா... நின்னு பதில் சொல்லு, தப்பில்லை...''

''தப்பில்லைன்னா எப்படிம்மா ஒரு ஆம்பளை நடுரோட்டுல...?''

''நீ பேசாட்டி போடி... நானே பேசறேன், 'அம்மா சவுக்கியமா...? இங்கதான் எங்க வூடு... வாயேன்'னு கூப்பிடறேன்... வந்து நம்ம இடம் பார்க்கட்டும். மனுஷா ளைத் தெரிஞ்சுக்கட்டும். நம்மளைப் புடிச்சு, பேச்சு படிஞ்சா ஆத்தாளுக்கு குளிர குளிர அபிஷேகம் பண்ணிடுவோம்...''

பொருளாதாரம் வலுவானால்... மொத்தமும் மாறியிருக் குமோ?

அடுத்தது-

கொக்கு என்றழைக்கப்பட்ட வாசு வீட்டிலும் இதே பார்வை...

''ஏழு மணிக்கே போவுது வாசு. என்னா கம்பெனி அது?'' -பிற்பகல் அரட்டையில் புனிதாவின் அம்மா புருவம் உயர்த்துவாள்.

''பஸ் பாடி கட்டற கம்பெனி...'' யாரோ பதில் சொல்வார்கள்.

''பஸ் பாடி இல்லை. மொத்த பஸ்ஸும் பண்றாங்க. ஊர்ல ஓடற எல்லா பஸ்ஸும் வாசு கம்பெனி பேர்தான். இரண்டாயிரம் பேர் வேலை செய்யறாங்க. நல்ல சம்பளம். மதிப்பான வேலை...'' -வேறொருவர் விவரமாய் விளக்கு வார்.

''அதான் அழுத்தலா இருக்கு...''

''அழுத்தலான்னா...?''

''தான் உண்டு தன் வேலை உண்டுன்னு இருக்கு. வாசு நல்ல புள்ளை...?''



''உன் பொண்ணாண்ட காலைல தண்ணி பிடிக்கற போது பேசுது. பார்த்தேன்...'' விவரம் சொன்னவரே, விஷம் ஏற்றுவார்.

''போகட்டுமே... என் பொண்ணு கெட்டி. என்னைப் போல...'' மனசு கணக்குப் போடுமோ.. கூட்டிக் கழித்து லாபம் என்னவென்று பார்க்குமோ... விஷம் வேலை செய்யாதோ...''

''ஏண்டி, தெருக் குழாய்ல நின்னு பேசறே...? கண்டவன் பார்க்கறதுக்கா...'' அன்பாய் கோபப்படுவாள் அம்மா.

''வேற எங்க பேசறது?'' -புனிதா வியக்க

''முதல்ல நான் பேசறேன். என்ன ஏதுன்னு தெரிஞ்சுக் கறேன். அப்புறம் உன் விதிப்படி நடக்கட்டும்...'' அம்மாவின் கண்கள் அதீதமாகப் பளபளக்கும்.

''இப்படி நடக்க வாய்ப்பு இருக்குறதில்லையா... பொருளாதாரம், காதல் என்பதில் முதுகு பலம் இல்லையா... முதுகெலும்பு விண்ணென்றிருக்க கம்பீரம் இல்லையா... ஏன் காதல் என்பதில் பொருளாதாரம் முக்கியம்? காதல் என்பது இங்கே இந்தத் தேசத்தில் கல்யாணம் என்கிற விஷயம். திருமண பந்தம் படவில்லையெனில், எதற்கு காதலிக்க? கற்பு சேதமாகவா? கற்பு கல்யாணத்தில்தான் சேதப்பட வேண்டும்.

''சார், உங்களுது அரேன்ஜ்டு மேரேஜா?''

''இல்லை. லவ் மேரேஜ். வீட்ல சொன்னேன். அரேன்ஜ் பண்ணிட்டாங்க...''

''எப்படி? எதனால்?''

''அவனுக்குக் குடித்தனம் பண்ற வயசு, யோக்கியதை வருமானம் இருக்கு. என்னைய அலைய வைக்காம, அவனே இவளைப் புடிச்சுருக்குன்னான். சரி பண்ணிக்கனுட்டேன் எனக்கும் அவமானமில்லை. அவன் மனசும் நோவலை.''

அது அரேன்ஜ்டு லவ் மேரேஜ்.

எலக்டரீஷியனுக்கும், லெதர் கம்பெனி பையனுக்கும் இது நேருமா... சரி என்று வீடு சம்மதம் சொல்லுமா. அம்மா அனுமதிப்பாளா?

அப்பப்ப காசு... ஆயிரம்தான் மாச சம்பளம். காதல் மலருமா, கை விரித்து மடக்காதிருப்பார்களா?

"போதும்டி, நீ தண்ணிக்குப் போனது... பொத்திக் கிட்டு படு... நான் போறேன்..."

"நான் பேசலைம்மா... அவ்வளவுதானே..."

"அவன் பேசுவானே... கண்ணு காட்டுவானே..."

முள்ளு வாழையில் பட்டாலும், வாழை முள்ளுல பட்டாலும் நோகச் செய்துவிடுவார்கள். வசனம் பேசி வதைப்பார்கள். மனசை நொறுக்குவார்கள். ஆனால், காற்றில் கிழிந்த வாழைகூட கன்று ஈன்றுவிட்டது. சரோஜா வின் விடிவுக்குத்தான் போராட்டம் வேண்டியிருக்கிறது.

"ஆயிர ரூவா காசு. ரோட்ல சீக்கு பிடிச்சவன் கூட ஆயிர ரூபா சம்பாதிக்கறான். குப்பை பொறுக்கறவன் சம்பாதிக் கிறான். சம்பளமா அது. அஞ்சு பத்துன்னு சேர்த்து உன் தங்கச்சியைக் கரையேத்தப் பாரு- அப்புறம் கண்ணடிக்க லாம். பொறுப்பத்தது" வாசுவை புனிதா வீடு மடக்கி செவிட்டில் அறையும்...

சொரணை இருப்பின், சொல் சூடு நெஞ்சு பொசுக்கும்.

"பரதேசி, பகல்ல தூங்கற முண்டம்... மணி கேட்க ஆளா இல்லை. அப்படி மணி கேட்டு எந்த ஆபீஸுக்குப் போவப் போற? குளத்து மண்டபத்தைக் கூட்டறதுக்கு மணி என்னா... நாப்பது ரூபாக்கு பஜார்ல கடிகாரம் சிரிப்பா சிரிக்குதே. வாங்கிக் கட்டறதுதானே... சம்பாதிக்கற காசு பீடிக்கே பத்தலை. எங்கே கடிகாரம் கட்டறது?"



காதலே வேண்டாம் என்று கைகூப்பி கும்பிடச் சொல்லும். பேச்சு வீறும்.

காசுதான் காதலின் பயமா? வயசு காதலிக்கவே கூடாதா? அவனுக்கு கனவுகளே கூடாதா? மனோகரன் மனசில் பூக்கள் மலரக் கூடாதா? என்ன செய்ய... என்ன செய்ய...

யோசி மனோகரா. மணி கேட்கிற அலட்டல் நண்பர் களுக்கிடையே நடந்தது. என்ன விருது வாங்கினாய்? உன் சபதம் என்னவாய் முடிந்தது? யார் துணை வந்தார்கள்? ஏன் இது நடந்தது? ஊர் கூடி அபராதம் விதித்த அவமானம் ஏன்? யாரால்?

"அந்தப் பெண் சரோஜா... அதான் காரணம்..."

இல்லை மனோகரா இல்லை நீ காரணம். காதல் என்பது கித்தாப்பு இல்லை. வழிமறித்து கடத்தல் இல்லை வாலிபத்திமிர் இல்லை.

அது நெஞ்சைத் தருதல். மனப்பரிமாற்றம். மதித்து நடத்தல். யாரோ பாராட்ட யாரையோ வம்பு செய்து நோக டிக்கிறது கேவலம். காலர் தூக்கிவிட்டுக் கொள்ளலாம்... முகர்ந்து பார் நாறும். நண்பர்கள் பாராட்ட என்று பெண்ணை அவமதிப்பவன் மடையன். பாராட்டு வேணு மெனிற் கையூன்றாமல் கரணம் அடி. கொம்பு சுற்று. கையில் ஜோதி எடுத்து பொட்டை வெயிலில் களைப்பில்லாது இருபது கிலோ மீட்டர் ஓடு... ரசிகர் மன்றத்துக்கு முதுகு வளைய பலகை தூக்கி வா... காதல் என்று பெண்ணை மடக்காதே... இடுப்பைக் கிள்ளாதே இது இழிவு. அசிங்கம். ஆபாசத்தின் உச்சகட்டம்.

உன் தங்கையும், தாயும் அதே தெருவில் நடப்பார்கள். நான் தொட்டால் விடுவாயா... 'கிழவிக்கு மூஞ்சில பவுடரப் பாரு...' நான் பேச, நீ சிரிப்பாயா?

பின் ஏன் செய்தாய் மனோகரா?

உசுப்பேற்றினார்கள். ஓடினாய். கட்டை வீச, நாய் கவ்விக்கொள்ள ஓடுவதில்லை. அது மாதிரி நடந்தாய். கட்டளை கேட்ட நாய்க்கு கட்டையைக் கவ்வுவதுதான் முக்கியம். நாயா மனோகர நீ? மனிதனல்லவா...

சரோஜாவோடு பேசவேண்டும். அவ்வளவுதானே?

சரோஜாவை உன் அமைதியினால் வசமாக்கு. வீட்டுக்கு ஒயரிங் பண்ணி காசு வாங்காமல் போனது காதலின் முதல்படி. சரோஜா வேலை பார்க்கும் ஆபீஸ் வாசலுக்குப் போ... உன் கார்டைக் காட்டு...

''சார், எலக்ட்ரிக்கல் வேலை எதுனா? இருந்தா என்னைக் கூப்பிடுங்க. சுத்தமா செய்து தருவேன்...'' கை கூப்பு.

''வாசு விளக்கு எரியலை...''

ஏணி போட்டு சரி செய். 'எத்தினிப்பா?' கேட்பார்கள்...' அப்புறம் வாங்கிக்கிறேன் சார் பெரிய வேலையா தர்றபோது...''

''அடட.... எத்தினி?''

அவள் வரும்போது உட்கார்ந்து உரக்கப் பேசாதே. மெள்ள எழுந்து முகம் திருப்பு. சிகரெட்டை அவள் பார்க்கும்படி சட்டென்று அணைத்துவிடு. அவள் அப்பா வுக்கு வந்தனம் சொல். அவள் அம்மா ரேஷன் கடையி லிருந்து சுமையோடு வர, கை கொடு... ஓடு மீன் ஓட, உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு. மன்றம் மூலம் புதுப்படத்துக்கு டிக்கெட் எடுத்து, அவளையும் தோழியையும் அனுப்பு. வரும்போது வரவேற்று தனியே உட்கார வை. அருகே உனக்கு இடம் போடாதே. தவறு அது. இடைவேளையில் ஆரஞ்சு பாட்டில் அனுப்பு.

''நல்லாயிருந்ததா படம்?'' கேள்.

சரோஜா தானாகப் பேசும். உறுமீன் உன்னைச் சுற்றும்.

மனோகரா... இனிதான் வேதனை ஆரம்பம்.



உனக்குப் பிடித்த பெண், உன்னை நேசிப்பதாய்ச் சொன்ன பிறகு சோதனைகள் துவங்கும். ஏனெனில், இங்கு காதல் என்பது கல்யாணம் என்பதாகத்தான் அர்த்தம்.

''ஃப்ளாட் சப்-காண்டராக்ட் எடுத்துட்டேன் சரோஜா... ஆறுநாள் வேலை. ஒண்டியா செஞ்சா ஆயிரத்து நானூறு நிக்கும். கூட ஆள் வெச்சா ஆயிரம் தான் தேறும். ஒண்டியா செய்யப் போறேன் சரோஜா. மாசம் இரண்டு சப்-காண்ட் ராக்ட் கிடைச்சா போதும்...'' போய்ச் சொல்.

சரோஜாவுக்கு சந்தோஷமும் துக்கமும் பொங்கும்.

சந்தோஷம் சப்-காண்ட்ராக்ட் பிடித்ததுக்கு. துக்கம் உன் தனிமைக்கு.

''என்னங்க விரல்ல கட்டு?'' -சரோஜா கேட்பாள்.

''ஆணி அடிக்க சொல்ல, கைல போட்டுக்கிட்டேன்.''

''பார்த்துச் செய்யக்கூடாதா?''

''எங்க பார்க்கறது. உன் முகம் மறைக்குதே... நடு நடுவில் வந்து...''

சரோஜாவின் கண்கள் கிறங்கும். உடனே இளிக்காதே. கம்பீரமாய் இரு. வேலை செய்யுமிடத்துக்கு சரோஜா பிற்பகலில் செங்கல் படியேறி வந்தாலும் வருவாள்.

''மனோகர் பாவம், தனியா வேலை செய்யுது'' என்று பத்து நிமிடம் பேச்சுக்கு வருவாள்.

''இனிமே டைரக்ட்-காண்ட்ராக்ட் இல்லை''

''ஏன்?'' பயப்படுவாள்.

''இனிமே சப்-காண்ராக்ட் கூட ஆள் வெச்சு இரண்டு பில்டிங் செய்யப் போறேன்..''

''எப்படி இது?

''நம்ம வேலை சுத்தம். சரசரன்னு செய்யறேன்னு ஒரு நல்ல பேர்...''

"என் மூஞ்சி மறைக்குதுன்னீங்க?"

"வாணாம் சரோஜான்னு கெஞ்சினா போதும். முகம் மறைஞ்சிடும். பேர் மட்டும் நெஞ்சுலயே நிக்கும். உன் பேரைச் சொல்லிக்கிட்டே அரை அவர்ல ஹால் ஒயரிங் முடிச்சுடுவேன்..."

"நெசம்மாதானா?"

"சத்தியமா..."

"அத்தினி லவ்வா?"

"என் கையைப் பார்... ஒயர் இழுத்து இழுத்துக் காய்த்து சிவந்திருக்கும்..."

அவள் கண்களில் நீர் தளும்பும், "தினம் ஒரு தடவை வாயேன்..."-சரி என்று தலையசைக்கும்.

எது அவமானம் தந்ததோ, அதுவே ஆனந்தம் அள்ளி தரும். எது உதைக்குக் காரணமோ, அதுவே உரமாய் நிற்கும்.

கற்பனையல்ல மனோகரா... இது நிஜம். இப்படி ஜெயித்தவர்கள் அநேகம்.

காற்றிலேறி விண்ணையும் சாடுவோம் என்கிற வார்த்தை பொய்யில்லை. மந்திரம், அவள் உனக்காய் வருந்த வாய்ப்பு நிச்சயம்.

உண்மையாய்... உண்மையாய் நீ காதல் செய். உயர்வு என்பது உன்னுள் பொங்கும் விஷயம்.

அதை விடுத்து-பஸ்ஸில் போகிற பெண்ணையெல்லாம் தடவி, வழியில் போகிற பெண்ணையெல்லாம் மடக்கி, வெம்பிப் போகாதே. இது போதுமா...

மனோகர் ஜெயித்து விட்டானா? இல்லை... காதல் யுத்தம் அத்தனை சீக்கிரம் முடியவில்லை. அது தொடரும்.

## 9

அவளை அவனுக்குப் பிடித்துவிட்டது. அவனுக்கு அவன் மீது நம்பிக்கை வந்துவிட்டது. கண்கள் கலந்தன. கருத்தொருமித்தனர்.

ஒயர் இழுத்து இழுத்துக் காய்த்துப்போன உள்ளங்கையை எந்த ஷணம் சரோஜா கண்டு கண்டு கலங்கினாளோ அந்த ஷணம் மனோகர் பூமியிலேயே இல்லை. சரோஜா கேட்டாள்.

"உங்க வீட்டுல சொல்லிட்டீங்களா?"

"இப்பத்தானே சரோஜா நீயே சரின்னு சொல்லியிருக்க.

"சொல்லிருங்க..."

"என்ன அவசரம்?"

"ஏன் பயமா? உங்க வீட்ல கூடாதுன்னுடுவாங்களா?"

"பயமில்லை சரோஜா. எங்கம்மா கொஞ்சம் ரவுசு புடிச்சது. ரோட்டுல நின்னு கத்தும்."

"என்ன செய்யப் போறீங்க?"

"எங்கின்னா ஓடிடலாமா சரோஜா?"

"முடியாது."

"ஏன்?"

"எதுக்கு ஓடறது... கொலையா... கொள்ளையா? ஊர்ல நாலு பெரிய மனுஷாள்கிட்ட சொல்லுவோம். உங்க நற்பணி மன்றத்து ஆளுங்ககிட்ட பேசுவோம். கல்யாணம் செய்து வெக்கறது நற்பணி இல்லையா?"

அவன் யோசித்தான். நற்பணி நண்பர்களிடம் விஷயம் சொன்னான். வீடு எதிர்த்ததெனில் மன்றம் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டான்.

"உங்க ஆத்தாளை வழிக்குக் கொண்டு வர்றது எங்க வேலை. ஆத்தா முடியவே முடியாதுன்னுட்டா நடக்கறதே வேற. இதே தெருவுல மேடை போட்டு, டபுள் ஸ்பீக்கர்ல பாட்டும் போட்டு... சீரியல் லைட்டு, மாட்டி, ஐயர் முன்னால நீ தாலி கட்டற... மேடை அலங்காரம் மன்றத்தின் செலவு. நீ டிபன் காபி போடு."

விஷயம் அறிந்த மனோகரின் அம்மா அலறினாள்.

"எந்த எடுபட்ட பொம்பளை அவ? உசரமா ரோட்டுல ஒரு ஆம்பளை போவக்கூடாதே? அவ வீடு சொல்லுடா... கிழிச்சுட்டு வந்துடறேன்."

மன்றத்தை அம்மா மதிக்கவேயில்லை. "நான் நாலு பெத்து ரெண்டு சாவக் கொடுத்து நிமிர்ந்து நிக்கறவ. நேத்துப் பொறந்த பசங்ககிட்ட பேசறதா இல்லை."

மன்றம் சீற்றம் கொண்டது.

சரோஜா வீடு வேறு விதமாய் நடந்துகொண்டது.

"ஏண்டி, உனக்கும் அந்த எலக்ட்ரீஷியன் பையனுக்கும் சங்காத்தமாமே?"

"இல்லம்மா அவரைத் தெரியும்."

"எத்தினி வாட்டி தெரியும். திமிரா இடிச்சுட்டான். பேசிட்டான்னு என்கிட்ட வந்து சிலும்புனே. இப்ப என்ன, கை கோத்துக்கிட்டுத் திரியச் சொல்லுதா? வேலையும் வேணாம், ஒரு துடப்பமும் வேண்டாம். வீட்டோ கிட."

மன்றம் தேடி வந்தது.

"சரோஜாவா? அப்படி யாரும் இல்லீங்க. இது குடித் தனக்காரங்க இருக்கிற வீடு. தடால் புடால்ன்னு வராதீங்க.

மன்றம் புழுங்கியது. மனோகர் மனசு தளர்ந்தான். வேலை மீது பிடிப்பு தளர்ந்தான். சிகரெட் கடையில் விநோதமாகச் சிரித்தார்கள். மின்கருவிக் கடையில் உபதேசம் செய்தார்கள். தெருவில் நடக்க, பின் பக்கம்



பேசினார்கள். உல்லாசியாய், ஒருவரும் அடக்க முடியாக் காளையாய் எந்தப் பேட்டையில் வலம் வந்தானோ, அந்தப் பேட்டையில் நடமாட முடியவில்லை.

"ஏங்க, வாசக் கடைக்கு ஒயரிங் செய்யணும். மெயின் உங்க வீட்டுல இருக்காமே?"

"மெயின் இருந்தா வந்துடறதா? இது வயசுப் பொண்ணுங்க இருக்கிற வீடு. வெளியே போ."

"கடைக்காரர் அனுப்புனாருங்க."

"நான் சொல்லிக்கறேன். வெளியே போ."

நெஞ்சில் அடி விழுந்தாலும் தாங்கலாம். வயிற்றில் அடி விழுந்தது. யோசித்தான். கவலைப்பட்டான். உணவு கொள்ளவில்லை. உறக்கம் வரவில்லை.

"உனக்கில்லாத பொண்ணா? இப்பச் சொல்... பத்து சவரனோ... படுக்கை மெத்தையோட கொண்டாரேன்" தாய் மாமன் மடக்கினார்.

"நா மொள்ள... விசாரிச்சேன். சரோஜாவா. என்ன பேரு... அதானா... ஒண்ணும் சரியில்லை அங்க உட்காரத் துக்குக்கூட ஒரு நாற்காலி இல்லை போயேன் 'எட்டு நாறு ரூபா சம்பளமாமே' ன்னு கேட்டேன். சம்பாதிக்கிறதுல பாதி சினிமாவுக்குப் போயிடுதாம். சரிப்படுமா நமக்கு அது. உன்னைப் பொம்பளைப் பொறுக்கின்னா அவங்கம்மா... அதுவும் கேட்டுக்கிட்டுத் தான் இருந்தது." இன்னொரு உறவு பேசும். உள்ளே ஆட்டம் காணும். பத்துநாட்கள் பார்க்காத சரோஜாவின் முகம் மெள்ளத் தேயும்.

சரோஜா வீடு அவளை வேறுவிதமாய் வதை செய்தது.

"அவனைத்தான் கட்டிக்குவேன்னு அடம்புடிச்சே... ஒரே அடில மண்டை உடைச்சுடுவேன். வேணாம். எனக்குப் பொண்ணே வேணாம். எங்களுக்கு மானம்தான் பெரிசு. கஞ்சியோ கூழோ தெருவுல மரியாதையோட நடந்தோம்.

இப்ப அதையும் இல்லேன்னு பண்ணியேட்டியேடி. உனக்குப் போட்ட சோறை நாய்க்குப் போட்டாலும் நன்றியா இருக்குமே, சண்டாளி, என்னைத் தலைகுனிய வெச்சுட்டியே.''

முடி பிடித்து அடித்து.... சுவரில் நெத்தி... வதை செய்தது. யாரும் பேச மறுத்தார்கள். வரன் தேடத் துவங்கினார்கள். காசே இல்லாது பேரம் பேசினார்கள். இரண்டாம் தாரமோ... நிறம் கம்மியோ எதுவானாலும் பரவாயில்லை என்று தேடினார்கள்.

நாலு நாட்கள் சரியாகச் சாப்பிடாத சரோஜா, ஒரு உச்சிவேளையில் மன்றத்துப் பக்கம் ஓடி, ''இன்னும் ரெண்டு நாளில் என்னை மனோகர் மீட்க வேண்டும். இல்லையேல் மரணம்தான் வழி'' என்றாள்.

மனோகர் கேள்விப்பட்டு மனசுள் பிறர் போட்ட விலங்குகளை உடைத்தெறிந்தான். மன்ற மறவர்கள் தனிக் கூட்டம் போட்டார்கள். போலீஸுக்குத் தகவல் தந்தார்கள். தலைமை மன்றத்துக்கு விவரம் சொல்லி அனுமதி கேட்டார்கள்.

ஒருநாள் விடியலில் சரோஜா வாசல் பக்கம் கோலம் போட வந்து. அப்படியே மனோகர் இருந்த ஆட்டோவில் ஏறினாள்.

மன்றம் அவளை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போயிற்று. விவரம் சொல்லிற்று. தான் மேஜர் என்பதையும், தன்னை எவரும் வலியுறுத்தவில்லை என்பதையும், அவள் தெரிவிக்க... உதவி செய்ய உறுதி தந்தது போலீஸ்.

மன்றத் தலைமைச் செயலகத்தில் மாலை மாற்றி மங்கல நாண் பூட்டி, கையெழுத்திட்டுக் கடிமணம் நடந்தது. சரோஜா வீடு போலீஸுக்கு ஓடியது அங்கே புறக்கணிக்கப் பட்டது. மண் வாரித் தூற்றியது. மன்றத்தின் மீது கல் எடுத்து எறிந்தது.



''சரோஜா மனோகரோட ஓடிப்போயிட்டாளாம்'' ஊர் முழுக்கப் பேச்சாயிற்று.

பத்து நாட்கள் பாதி உணவோடு அதிகம் யோசித்த சரோஜா, திருப்பதிக்கு மனோகருடன் பஸ் ஏறி மனசு திறந்து விவாதித்தாள்.

''இதுவரை நடந்த காரியம் எவரும் செய்யலாம். இனிதான் செயற்கரிய செய்ய வேண்டும்'' என்றாள்.

''அதென்ன செயற்கரிய காரியம்?''

''உனக்கும் எனக்கும் இனி சண்டையே வரக்கூடாது என்று சத்தியம் செய்.''

செய்தான்.

''உன் மனசில் என்னைத்தவிர எவளுக்கும் இடமில்லை என்று சொல்.''

சொன்னான்.

''நமக்கிடையே எந்த ரகசியமும் இருக்கக் கூடாது என்று உறுதி கொள்.''

கொண்டான்.

''உழைத்து உயர்ந்து நிற்பது தவிர, வேறு எந்த வேலையும் நமக்கில்லை என்பது தெரிந்துகொள்.''

தெரிந்தான்.

''மனோகர், இதில் ஒன்று பிசகினாலும் நான் தாய் வீட்டுக்குக் கோபித்துக் கொண்டு போகமாட்டேன். இனி எனக்குத் தாய்வீடு என்று ஒன்று இல்லை. உன் வீடே என்வீடு, என் வீடே உன் வீடு. என் வாழ்வும் சாவும் நம் வீட்டில் -உன் கையில்.''

ஏழு மலைகள் சூழ்ந்த பசும் பள்ளத்தாக்கில் இருபத்தைந்து ரூபாய் கியூவில் கைபிடித்தபடி பேசாது கவலையோடு நகர்ந்தார்கள்.

இனி மனோகர் டான்ஸ் ஆடுகிற வாலிபன் இல்லை. வீடு வீடாய் பொங்கல் திருநாளுக்குக் காசு கலெக்ட் பண்ணுகிற விடலை இல்லை. முதல் ஷோ முதல் நாள் பார்க்கப் பரபரக்கும் ஆள் இல்லை. போதும், அவை போதும்.

இனி உள்ளங்கை எரிய எரிய ஒயர் இழுத்து, ரீப்பர் அடித்து... சிமெண்ட் சுவரில் தோள்பட்டை நெரிய டிரில்லிங் செய்து, சுள்ளென்ற ஷாக் வாங்கி, கை உதறி அடுத்த வேலை, அடுத்த வேலை என்ற ஓடுகிற எலக்ட்ஷியன் குடித் தனக்காரன்.

அடுத்த வருடம் கடை போடவேண்டும். 'சரோஜா மின் தொழில் நிலையம்' போர்டு மாட்டவேண்டும். ப்ளாட் காண்டராக்டரிடம் கைகட்டி நிற்க வேண்டும். அவர் வீட்டு விசேஷத்துக்கு வெள்ளி டம்ளர் கொடுத்து சரோஜாவுடன் போய் வணங்கி வரவேண்டும். ஒரு அடிக்குப் பத்து மார்க் கெட் ரேட். எட்டுரூபாய்க்கு ஒப்புக் கொள்ள வேண்டும். ஒரே வேலையில் நிறைய லாபம் என்பதைவிட, நிறைய வேலைகளில் நிறைய லாபம் என்று பார்க்க வேண்டும்.

காலை ஏழு மணிக்கு டூல்பாக்ஸைப் பிரித்தால், இரவு ஏழு மணிக்குத்தான் மூடவேண்டும். மாடாய் உழைக்க வேண்டும்.

மனோகர் மாறிப்போனான்.

சரோஜாவும் மாறிப்போனாள்.

அவளுக்கு ஆண்கள் என்றால், இப்போது அருவருப்பு இல்லை.

மன்றத்தில் உள்ள ஆண்கள் இல்லையெனில் இந்தக் குடும்ப வாழ்க்கை இல்லை. இந்தக் கடி மணம் இல்லை. யாரோ, யார் பெற்ற பிள்ளைகளோ... 'சிஸ்டர் சிஸ்டர்' என்று சுற்றி வந்தார்கள். தோள் கனக்கும் மாலையைச் சொந்தச் செலவில் கொண்டு வந்து மனோகரைப் போடச் சொன்னார்கள். போலீஸ் ஆட்களும் மரியாதையாகப் பேசினார்கள். அப்பா கை ஓங்கி வந்தபோது, அதட்டிப் பிரித்தார்கள். கழுத்தில் புதுச் சரடும் காலில் மெட்டியும் இடுப்பில் காக்கைப் பொன் சரிகைப் புடவையுமாய் பஸ் ஏறியபோது கண்டக்டர் முதல் இரண்டு ஸீட்டுகளை ஒழித்துக் கொடுத்தார்.

''புதுசா கல்யாணமானவங்களா... உட்காருங்க. மலைல கூட்டம் இல்லை. நான் ஆள்கிட்ட சொல்லி அனுப்பறேன். ரூம் கிடைக்கும்.'' டிரைவர் உபசரித்தார்.

காதலை உலகம் எதிர்க்கிறது. கடிமனத்தை மதிக்கிறது. 'வாழ்க்கை முழுவதும் சுமக்கத் தயார்' என்று அறிவித்து விட்டால், எழுந்து நின்று மதிக்கிறது.

இந்த மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். எப்படி?

காதலைத் தொடரவேண்டும். மனோகர், மனோகர் என்று பத்து நாட்கள் பாதிச் சாப்பாட்டில் கூட அவன் உருவம் நின்றதே, அது வாழ்நாள் முழுவதும் நிற்க வேண்டும்.

'வெளியே வருகிறேன்' என்று சரோஜா அறிவித்ததும், அவன் உள்ளே ஒரு வேகம் பிறந்ததே, இது எல்லா நேரமும் இருக்க வேண்டும்.

இனி மனோகர்தான் சரோஜா, சரோஜாதான் மனோகர்.

குறைகள் இருக்காதா? இருக்கும்.

எட்டடிக்குப் பத்தடி ஒரு ரூம். ஆறடிக்கு எட்டடி சமையலறை. பொதுக் கிணறு, பொது பாத்ரூம்... போதுமே. கொஞ்சம் வேலை சூடு பிடிக்கட்டும் மாத்திடலாம்.

''குழம்பு ரொம்ப காரம் சரோஜா... வாய்ல வெக்கவே முடியலை.''

''உனக்கு உடம்பு சூட்டுல வாய்ப்புண்ணு வந்துருச்சு. அதான் கத்தற. இரு நல்லெண்ணெய் ஊத்தறேன்.''

ஐந்தாம் கிளாஸ் படிக்கற நாலு பசங்களுக்குப் பாடம் சொல்லித் தந்து, பிற்பகலில் ஒயர் கூடை பின்னி, மாலையில் சோறாக்கி நிமிரத்தான் நேரம் உண்டு.

சினிமா நாடகம்... மறந்தே போயிற்று.

''காப்பர்-டி, மாலா மாத்திரை எல்லாம் உபயோகம் தான். அதைவிட நல்லது. மரியாதையா இருக்கறது... காலண்டர்ல புள்ளி வெக்கறது. அப்புறம் உன் இஷ்டம்.''

''ஏண்டி, அப்ப என்னதான் செய்யறது?''

''பேசுவோம்.''

''என்ன பேசறது?''

''மாசம் ஆயிரம் ரூபா சீட்டு. முடியச்சொல்லகூடக் கிடைக்கும். ஐயோன்னுதான் இருக்கும். என்னு தில்லைன்னு எடுத்து வெச்சுடணும். சின்ன ஒயரிங் துட்டெல்லாம் என்கிட்ட கொடுத்துடணும்.''

''நீ புடவையா உடுத்திக்கவா?''

''எங்கப்பராணை, ஆறு புடவைக்கு மேல வருஷத்துக்கு வாங்க மாட்டேன்.''

பேசினார்கள். கொஞ்சங்கூடப் பொய் சொல்லாது பேசினார்கள்... அலட்டல் இல்லாமல், அகம்பாவம் காட்டாமல்.

''காட்டான் மாதிரி மீசை. இதை மாத்து முதல்ல உங்க நடிகரு எப்படி அழுத்தலா மீசை வெச்சிருக்காரு. அதுமாதிரி வை...நெத்தில துன்னாரு வெச்சிட்டுப் போறது தப்பில்லை. பார்க்க மரியாதையா இருக்கும். கால் பரப்பி நிக்காத... அது அலட்டலா தெரியுது.''

''நீ கூடத்தான் முதுகு தெரிய ரவிக்கை மாட்டற.''

''அப்பறம்...''



''கீச்சுக் கீச்சுன்னு கத்தற. மெள்ளப் பேசேன்.''

''அப்பறம்?''

''எழுப்பறபோது தடால்புடால்ன்னு எழுப்பாதே. கோவம் வரும். இதமா, ஒரு குரல் கொடு.''

மாற்றிக் கொண்டார்கள். விட்டுக் கொடுத்தார்கள். மாறுவது தெரியாமல் மாறினார்கள். 'சரோஜா மின்தொழில் நிலையம்' -ஓர் அமாவாசையன்று திறந்த போது, முழங்கை உயரக் குத்துவிளக்கு ஒன்றை சரோஜா வீடு பரிசளித்தது. மாலை மரியாதை செய்தது. மனோகர் அம்மா கேள்விப் பட்டு பெருமூச்செறிந்தாள்.

''அவனைப் பார்க்கணும் போல இருக்கு'' என்றாள்.

உறவுகள் கூடின, அதே எட்டடிக்குப் பத்தடியில் வந்து சாப்பிட்டுவிட்டுப் போயின.

''யப்பா... கணக்குத் தப்பிடுச்சு. இந்தத் தரம் உட் காரலை.''

''அடடே...''

''வேணாம்ன்னு செய்துடலாமா...''

''இல்லை, சரோஜா அப்படிச் செய்யாதே.''

''உனக்குக் கஷ்டம்பா.''

''தாங்குவேன், அப்படிச் செய்யாதே.''

''செலவு ஆவும்பா.''

''ஆவட்டும். அப்படி ஏதும் செய்துடாதே...''

''நெசம்மாவா?''

''நெசம்...''

''உனக்குச் சந்தோஷமா?''

''சந்தோஷம்.''

''பிள்ளைக்கு என்னா பேர் வைக்கறது?''

''நம்ம நடிகர் பேரு...''-இரண்டு பேரும் ஒரே நேரத்தில் சொல்லிக் கரங்கள் கோத்துக் கொண்டார்கள்.

காதல் அங்கே ஜெயித்தது.

அவன் கைகள் எரிய எரிய அதிகம் ஓயர் இழுத்தான்... அவள் பிள்ளை சுமந்து சமையல் செய்தாள். இடுப்புச் சுண்டி இழுத்தபோதும் துணி துவைத்தாள்.

அத்தனைக்கும் அடிப்படை காதல்.

காதல் என்பது மதித்தல். விட்டுக் கொடுத்தல். பரஸ்பரம், எந்த எதிர்ப்பும் இன்றி,

இது ஜெயித்த கதை.

மற்ற கதை...

## 10

**தோ**ல்வியை விலாவாரியாகச் சொல்ல வேண்டாம். என்று தோன்றுகிறது.

'கொக்கு' என்றழைக்கப்பட்ட வாசு ஆழ்ந்து யோசித்தான். அவனையும் சினிமா பாட்டு மயக்கியது. தங்கையை, அடைக்கலம் கொடுத்த மாமாவைச் சிந்தித்தான். உதறினான்.

''இதோ பார், இனிமே என்கிட்ட பேச்சு வெச்சுக்காதே... எனக்கு இதெல்லாம் புடிக்காது. தண்ணித் தவலையோட வந்தமா போனமான்னு இருக்கிறது எனக்கும் நல்லது. உனக்கும் நல்லது'' புனிதாவிடம் இரைந்தான்.

அவளைத் தனியே அழைத்து தாழ்ந்த குரலில் பேசியிருக்கலாம். உரத்த குரலில், உதற வேண்டும் என்கிற வேகத்தில் தன்னால் அவள் காதலை ஏற்று வளர்க்க முடியவில்லையே என்கிற ஆதங்கத்தில், தன்னை ஏன் இப்படி வேதனைப்படுத்



தினாள் என்கிற கடுப்பில்- புனிதாவின் தோழி அருகேயிருக்க... உரத்துக் கத்தினான். புனிதா அதிர்ந்து போனாள். அந்த விடியல் நேரத்து இருட்டில் அவன் கத்தியதைக் கேட்டவர்கள் நாலுபேர் புனிதா, அவளது தோழி, ஒரு மலட்டுப் பசு, தெருமுனையின் வினைதீர்க்கும் விநாயகர்.

''என்ன பண்ணிட்டாங்க உன்னை... என்னமோ ரேங்கற.''

''கடைசி வார்னிங்... பேசாதே ப்ளீஸ்.''

''உன் தஸ்ஸு புஸ்ஸு இங்கிலீஷ் எல்லாம் வேற எங்கியாவது வெச்சுக்க... 'ஐயோ பாவம்... ஒண்டி ஆளா இத்தினி தவலை தூக்கறியே' ன்னு ஒருநடை பக்கெட் எடுத்தாந்தா இல்லாது பொல்லாது பேசறியே.''

உன்னைய கேட்டேனா பக்கெட்ல தண்ணி எடுத்தாரச் சொல்லி?''

''என்னடி புனிதா... என்னா சண்டை அங்கே?'' யாரோ கேட்டார்கள்.

''காலங்காலைல தண்ணி புடிக்கிற இடத்தாண்ட வந்து சத்தாய்க்கிறாங்கம்மா.''

''யார்ரா அது?''

''இரண்டு குடத்துக்கு மேல் புடிச்சா இடிப்பானாம். இடிச்சுத்தான் பாரேன்.'' அவளுக்கு ஆத்திரம். அன்பை அசிங்கப்படுத்திவிட்டான் என்று ஆத்திரம். தோழி எதிரே கேவலப்பட்டோம் என்கிற குமுறல். பொம்பளை குமுறல். பொம்பளை குரல் கொடுத்தா ஆம்பளை அதோகதி தெரியுமா' என்கிற அலட்டல்.

அவனும் ரௌத்திரமானான்.

''ஏய், என்னா கொழுப்பா. யார் அப்படிச் சொன்னது?'' எகிறினான்.

"கொழுப்பு கிழுப்புன்னா, வண்டை வண்டையாத் திட்டிருவேன்."

"என்ன... என்ன...?" நிறைய பேர் விழித்து ஓடிவந்தார்கள்.

"கொழுப்பு அது இதுன்னு அசிங்கமா பேசறாம்பா..." வந்த ஆளிடம் கெஞ்சலாய் அதிக மிரட்சியாய் முறையிட்டாள்.

"யோவ் போ அப்பால்... லேடீஸ்கிட்ட என்னா பேச்சு..."

நெஞ்சில் கைவைத்துத் தள்ள... தள்ளின கையை அவன் தட்டிவிட... முப்பத்தேழு விநாடிகளுக்குள் பொத்பொத்தென்று இருளில் அடி உதைகள் பரிமாறப்பட்டன. யார் யாரை அடித்தார்கள் என்று தெரியாமல் போயிற்று. விடிந்ததும் சண்டை வேகமாய் தொடர்ந்தது. கபடி விளையாட்டுக்குக் கட்சி பிரிந்தது போல தெரு இரண்டாயிற்று. ஏசிக்கொண்டது.

"அத்தினி உடம்புக் கமுறுலா இருந்தா உங்க மாமி மேலயே கை வைடா. ஏன் எங்க பொண்ணான்டை பேசறே?" ஆத்திரத்தில் சாக்கடையாய் வார்த்தைகள் பொங்கின. தெருவே நாறியது.

கடை திறக்கப் பயந்த நாடார், போலீஸுக்கு போன் செய்ய... சைக்கிளில் சாவகாசமாய் வந்து போலீஸ் வாசுவை பனியனோடு கேரியரில் உட்கார வைத்து ஸ்டேஷனுக்குக் கூட்டிப் போனது.

"என்னப்பா இது?"

"ஈவ் டீஸிங் சார். காலைல தண்ணி புடிக்க வர்ற லேடீஸைக் கண்ணடிச்சுப் பேசறானாம்."

"அடி செருப்பால நாயே, குடிக்கத் தண்ணியில்லாம, வெட்கத்தவுட்டு ராவுன்னு பகல்ன்னு பார்க்காம லேடீஸ்



அலையறாங்க. பாவம். அங்ஙன போய் கேலியா?" பளீர் பளீரென்று விசாரிக்குமுன் அறைந்தார்கள்.

"சார்...சார்...சார்...சார்..." கெஞ்சினார்கள்.

மௌனமானான். வட்டச் செயலாளரின் காலில் விழுந்து மாமா அழைத்து வர, எச்சரித்து விடுவிக்கப் பட்டான்.

வீங்கின கன்னம் பார்த்து தெரு சிரித்தது. எவரும் பேசவில்லை. இவனாலும் நிமிர முடியவில்லை. ஷூ போட்டு நடக்க வெட்கமாய் இருந்தது. புருஷனை இடைவிடாது மாமி திட்டினாள். தங்கை பேசவேயில்லை.

வாசு தனிமையில் அழுதான். வெட்கப்பட்டான். நீலக் கடலிடையே நெஞ்சு செலுத்தித் தனித்திருந்தான். வேலை நேரத்தில் திடீர் திடீரென்று ஒரு கருமை சூழ்ந்தது. சினம் மூண்டது.

புனிதாவுக்குச் சத்தியமாய் எதுவும் புரியவில்லை. அவனைக் காதலித்தோமோ இல்லையா என்பதே தெரியவில்லை. ஒரு சமயம் அவன் செய்தது நியாயமாய்ப் பட்டது. மறுசமயம் தவறு என்று தோன்றியது. தண்ணீர் எடுக்கக் கூடாது என்று தோழியை அவர்கள் வீட்டில் தடுத்து விட்டார்கள். தனியே தண்ணீர் எடுக்கப்போனாள் புனிதா. குழாயடியில் உட்கார்ந்து கொக்கு என்று கூப்பிட்டுச் சிரித்ததை நினைத்துக் கொண்டாள்.

'சண்டை போட்டு ஆபீஸ் போற ஆள் எல்லாம் எனக்குக் கிடைக்கமாட்டான். யாராவது பழ வண்டி, கோலமாவு விக்கிறவன், கொலுத்து மேஸ்திரி' நொந்து போனாள். உணவு செல்லவில்லை. உறக்கம் கொள்ள வில்லை. இனம் புரியாத வேதனை வதைத்தது.

ஏன் இவர்கள் ஜெயிக்கவில்லை? காதல், விளையாட்டு என்கிறதாய் போனது... அப்படித்தான் ஆரம்பித்தது. நேசிக்கத் தெரியவில்லை. வளைக்க முற்பட்டார்கள். வகை தொகை தெரியாமல் வளைத்தார்கள். உடைந்துவிட்டது.

காதல் கேலியல்ல... கிண்டல் அல்ல. நான் உசத்தியா, நீ உசத்தியா என்கிற போட்டியல்ல, 'உரசிப் பார்ப்போம், சிக்கினா சிக்கினதோட சார்த்தி, இல்லாட்டா உரசின வரைக்கும் ஒரு நிம்மதி' என்கிற சூதாட்டம் அல்ல. காதல் மனதின் வெளிப்பாடு. திடசிந்தனையின் இயக்கம். உண்மை யின் செயல். பரஸ்பரம் குற்றம் சாட்டவா காதலிப்பார்கள்? தூற்றிக்கொள்ளவா பேசிச் சிரிப்பார்கள். பேசத் தெரிய வில்லை.

"வேணாங்க புனிதா. எனக்கு இந்த நேரம் இதெல்லாம் முடியாது" இதமாய் பேசியிருக்கலாம். ஏன் பேச வில்லை? இரண்டான புத்தி. ஆசையும், அதே சமயம் இயலாமையும் தெரிந்த சூழல். எதை ஏற்பது என்று தெரியாத தெளிவின்மை. குழப்பம். குழப்பம் தந்த ஆத்திரம். ஆத்திரத்தால் வந்த அவஸ்தை, இழிசொல், அவப்பெயர். அவை உள்ளே பூச்சிகளாய் நினைவுப் பூக்களை மெல்லுகின்றன. மலர ஒட்டாமல் செய்கின்றன.

யாரையும் இழிவாய் நினைக்காதிருக்கத் தெரிய வேண்டும். எல்லோரையும் விட தான் உயர்வு என்கிற மமதை மறைய வேண்டும். தன்னை அறிந்துகொள்ள-தன் சூழ்நிலை புரிந்துகொள்ள- இந்தக் குணங்களே முதல்படி. தன்னை அறிய முடிவெடுத்தல் எளிது.

தன்னை அறிந்து கொள்ள வாசு முற்பட்டான்.

"நிறைய புரியலை சார்."

அலுவலகத்தில் உள்ள பெரியவரைக் கேட்டு விழிக்க, "கேள்" என்றார். புத்தகங்கள் பெயர் சொன்னார். ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி என்று அறிமுகப்படுத்தினார்.

லோக்கல் லைப்ரரியில் அட்டை கிழிந்த புத்தகம் கிடைத்தது. கேள்வியும் பதிலுமாய் புத்தகம் துவங்கியது.



"துக்கம் என்பது என்ன? இந்தத் தேசத்தில் அதற்கு என்ன அர்த்தம்? எப்படி துக்கத்தை இந்தத் தேசம் எதிர்கொள்கிறது? கர்மா, முன்வினை என்று தப்பித்துக் கொள்கிறதா? துக்கம் எனக்கு இல்லை என்று எதிர்க்கிறதா? எனக்கு வரக்கூடாது என்று சண்டையிடுகிறதா? எவ்விதமாய் துக்கத்தை நாம் பார்க்கிறோம்."

அவரே கேள்வி கேட்டு, அவரே பதில் சொன்னார். வாசு ஆழ்ந்து யோசிக்கத் துவங்கினான். எந்நேரமும் கேள்வி யுடன் அலைந்தான். விடாது அந்தப் புத்தகம் படித்தான். குழம்பினான்.

அழகு என்பது எங்கேயிருக்கிறது? அழகு என்பதன் உள் ளார்த்தம் என்ன? அழகு என்பது பொருளில் இருக்கிறதா... மனசா?

பூ, இலை, கொடி, வானம், மலை, மேகம் மட்டுமா அழகு குத்துச்சண்டை, கராத்தே, குழந்தை சுக்கல் சுக்கலாய் புத்தகம் கிழிப்பது இவற்றை நாம் ரசிப்பதில்லையா. கண்ணிமைக்காது மனம் ஒன்றிப் பார்ப்பதில்லையா. அழகு அமைதியில் இருக்கிறதா...? ஆரவாரத்தில் உள்ளதா?

அழகு என்பது மனசின் காரியம்.

வாசு சகலமும் மறந்து ஆயிரக்கணக்கான கேள்விகளுடன் சங்கமமானான். அவன் புத்தி குஷன் முழுவதும் கேள்வி குண்டூசிகள் தைக்கப்பட்டன.

வாசு மாறினான். அவன் காதல் புத்தக ரூபமாயிற்று. அவன் நட்புகள் வயதில் முதிர்ந்தவர்களாய்ப் போனார்கள்.

அற்பமான தோல்விகளால் வீரன் துவண்டு விடுவ தில்லை. அறிந்து கொள்ளத் தோல்விகளே துணை செய் கின்றன. தோல்வியை ஏற்றுக்கொள். அவமானம் அருந்து... துக்கம் விழுங்கி ஜீரணம் செய். தீதும் நன்றும் பிறர் தர வாரா. உன் வேதனைகளுக்கு நீயே காரணம்.

ஆக, காதல் செய்ய மனமுதிர்ச்சி வேண்டும் என்கிறீர்கள். எப்ப வரும் முதிர்ச்சி? முப்பதா, நாப்பதா, ஐம்பதா? முதலில் இந்த முப்பதைப் பார்ப்போம்...

## 11

வயது என்பது அனுபவம்... அனுபவம் என்பது நடந்த நிகழ்வுகளிலிருந்து புத்திக்கு வரும் தெளிவு. தெளிவின் வெளிப்பாடு அமைதி. பதினெட்டு வயதில் பரபரப்பாய் இருக்கும் காதல் அனுபவம், முப்பது வயதில் நிதானமாய் ஒரு புன்னமுறுவலோடு இருக்க வேண்டும். முப்பதிலும் பதினெட்டாய்த் துள்ளுவதும் பரபரப்பதும் பேதமை.

''நீங்கள் சொல்வது புரியவில்லை. பனி மூட்டமாய் இருக்கிறது. எந்த வயதிலும் காதல் பரபரப்பான விஷயம் தானே... கனவுகள் கவிழ்ப்பதுதானே. கண் கிறங்க வைக்கும் விஷயம்தானே. எப்படிக் காதலைப் புன் முறுவலாய் வெளிப்படுத்துவது?''-கேள்வி வரலாம். துள்ளலாய், பரபரப்பாய் இருப்பது தவறா?

கணேசன் பி.எஸ்.ஸி கெமிஸ்ட்ரி கடைசி வருடம் படித்துக் கொண்டிருக்கும்போது மாலதியைச் சந்தித்தான். நாலு வீடு தள்ளி வசிக்கிற பெண், அம்மாவைத் தேடிக் கொண்டு வந்திருந்தாள். ஏதோ பேசினாள். அம்மா ''என் பிள்ளை கணேசன்'' என்று இவனை அறிமுகப்படுத்தியதும், ''ஹலோ'' என்று சிரித்தாள். ''கெமிஸ்ட்ரியா?'' -பெரிதாய்க் கும்பிட்டாள். சுட்டுப் போட்டாலும் அவளுக்கு வராதாம். ஆங்கில இலக்கியம் படிக்கிறாளாம். ''எந்த காலேஜ்? உங்களை பஸ் ஸ்டாண்டில் பார்த்ததே இல்லையே?'' -விசாரித்தாள். கணேசன், தான் சைக்கிளில் போவதைச் சொன்னான். தினசரி பஸ்ஸில் போவது பெரிய வதை என்று



அலுத்துக் கொண்டாள். கணேசன் அவளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். சென்னைக்கு மேற்குப் பக்கம் நகர விளிம்பை ஒட்டிப் புதிதாய் உருவாகிய காலனியில் அவர்கள் குடியிருந்தார்கள்.

நகரத்துக்குப் போய் வருவது கொஞ்சம் கடினமான சமாசாரம்தான். அந்தப் பெண் அம்மாவிடம் சிறிது பேசி விட்டுப் போய்விட்டாள்.

''யாரும்மா இந்தப் பொண்ணு? அழகா இருக்கே.'' இரண்டாவது வரி மனசு தப்பி வந்துவிட்டது.

அம்மா கணேசனைத் திரும்பிப் பார்த்தாள். சிரித்தாள். கணேசனின் அம்மா ஒரு டீச்சர். கெமிஸ்ட்ரி டீச்சர். அப்பாவுக்கு கம்பெனி உத்தியோகம்; கஷ்டப்பட்டுக் கடன் வாங்கி, காசு சேர்த்து நகர எல்லையில் வீடு கட்டி ஐந்து வருடங்கள் ஆகின்றன. இரண்டு பிள்ளைகள். மூத்தவன் வடக்கே வேலையில் இருக்கிறான். இரண்டாவதான கணேசன் பி.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி கடைசி வருடம்.

''என்னம்மா சிரிக்கிறே?''

''வயசு...''

''வயசு...''

''என்ன வயசு...?''

''ஹான்னு விழி விரிய பொம்மனாட்டியைப் பார்க்கற வயசு.''

''அப்படியா பார்த்தேன்?''

''பார்க்கறது தப்பில்லை. கொஞ்சம் நாசுக்கு வேணும். உறுத்துப் பார்க்கறது பொம்மனாட்டிக்குப் பிடிக்காது. 'ஏன் இப்படிப் பார்க்கறான்? மனசுல கெட்ட எண்ணம் ஓடறதோ... தொந்தரவு வருமோ?' ன்னு பயப்படலாம். பயத்துல உன்னை அவாய்ட் பண்ணலாம். நீ பேச முயற்சித்தாலும் 'ச்சீ போ' ன்னு நகர்ந்துடலாம்.

''எப்படிப் பார்க்கணும்?''

''சாதாரணமா... காஷுவலா...''

கணேசனின் அம்மா நிறைவோடு தன் புருஷனிடம் வாழ்பவள். உலகம் தெரிந்தவள். படித்தவள். ஆழ்ந்து யோசிப்பவள். சுயமான பெண்மணி. அந்த வீட்டில் புருஷனும் மனைவியும் சிநேகிதம்... அம்மாவும் பிள்ளையும் நண்பர்கள், இலக்கிய-சமூக விவாதங்களுக்குத் தவிர, அந்த வீட்டில் உரத்த குரல் எழுவதில்லை.

கணேசன் தலையில் அடித்துக்கொண்டான்.

''சே, ஆமாம்... நான் உறுத்துதான் பார்த்தேன். ரொம்ப கெட்ட பழக்கம் இல்லையா அது... என்னவோ புத்தி நழுவிட்டது.''

''போனாப் போறது... அடுத்த தடவை பார்த்தால், சாதாரணமாகப் பேசு. லேடீசுக்கு அது பிடிக்கும்.''

அடுத்த தடவை, அடுத்த தடவை என்று மனசு துடித்தது. பார்த்தபோது சாதாரணமாய் இருக்கப் பிரயனத்தனப்பட வேண்டியிருந்தது. 'ஸ்டன்னிங் ப்யூட்டி' என்று தோன்றியது. 'தோள் கண்டார் தோளே கண்டார், தாள் கண்டார் தாளே கண்டார்' என்று அவள் சுண்டு விரல் நுனியைக்கூட வியக்கத் தோன்றியது. 'ஏன் இப்படி மனசு தாறுமாறாக ஓடுகிறது...''

கணேசன் கவலைப்பட்டான். பார்க்கவே வேண்டாம் என்று முடிவு செய்தான். அம்மா இந்த மாற்றத்தைக் கவனித்து விட்டாள்.

''அந்தப் பெண் வரும்போது ஏன் ஒளிஞ்சுக்கறே கணேசா?''

''நான் சரியில்லையம்மா.''

''என்ன விஷயம்?''

''ஹான்னு பார்க்கறதை விட முடியலை.''



''வயசுடா.''

''போம்மா...''

''அவ வயசு... அது அழகிட்டு இருக்கு. வயசு ஏற ஏற அழகு கரையும். இவளையா ஹான்னு பார்த்தோம்னு பத்து வருஷத்துல தோணும். அவளுடைய புத்திசாலித்தனம். நடவடிக்கைதான் முக்கியம். அழகான பெண் திருடினா, கோள் சொன்னா பொறுத்துக்க முடியுமா?''

''அவ புத்திசாலியா?''

''பேசிப் பார். அழகை மறந்துட்டுப் பேசு.''

''எனக்கு வேணாம். அப்படிப் பார்க்க முடியும்னு தோணலை.'' -கணேசன் உண்மையைச் சொன்னான். அம்மா அவன் கவலையை அப்பாவிடம் சொன்னாள்.

காதலைப் பற்றி, மனித உறவுகள் பற்றி அப்பாவோடு கலந்துரையாடல் நடத்தினான். சிறிது வெளிச்சம் வந்தது.

''செக்ஸ் தப்பா?'' அப்பாவைக் கேட்டான்.

''யார் சொன்னது?'' தேவை, அத்தியாவசியத் தேவை. உணவு, உடை, உறைவிடம்போல் அதுவும் முக்கியம். உணவைத் திருடலாமா? உடைக்குப் பிச்சை எடுக்கலாமா? உறைவிடம் வேண்டுமென்று ஆக்கிரமிப்பு செய்யலாமா? அதேபோல்தான் செக்ஸுக்கும். மேற்சொன்னவற்றை உழைத்துப் பெறுவது உயர்வு அல்லவா? செக்ஸும் உழைத்துப் பெற வேண்டிய மரியாதையான விஷயம். மரியாதையான செக்ஸ் என்பது என்ன? திருமணம். எப்போது திருமணம் மரியாதையாகும்? உனக்கு அதற்குண்டான யோக்கியதை வரும் போது. ஒருவனுக்கு எது திருமண யோக்கியதை? யோசி நீயே யோசி...''

பதினைந்து விநாடியில் கணேசனின் மூளை கணக்குப் போட்டு பி.எஸ்ஸி. கெமிஸ்ட்ரியில் முதலாவதாகத் தேர்வதே தலையாய வேலை என்று விடை சொன்னது.

கரெக்ட் இப்போது சொல். மாலதி என்கிற பெண்ணின் அழகை வியப்பது முக்கியமா, கெமிஸ்ட்ரி முக்கியமா? இப்படி வியந்து கொண்டே போனால் கெமிஸ்ட்ரி என்ன ஆகும்?

சுழித்துக்கொள்ளும். சுழித்துக் கொண்டால் எதிர் காலம் இருட்டாகும். எம்.எஸ்.ஸி. இல்லையென்று போகும். வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாகும். எடுபிடி வேலையில் என்ன மரியாதை? இல்லை. நான் படிக்க வேண்டும். மும்முரமாய் முழு மூச்சாய்...' முடிவு செய்தான்.

முடிவு அவனிடம் திணிக்கப்படவில்லை. உணர்த்தப் பட்டது. திணிக்கப்படுவது துப்பப்படும். உணர்த்தப் படுவது உள்ளே உறையும்.

மாலதி வரும்போது மரியாதைக்கு இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுப் படிப்பில் மூழ்குவான். கனகன ருஸிரா கனக வஸன நின்னு...' நவராத்திரியில் அவள் பாட, காது கொடுத்துக் கேட்டான்.

"நல்லா இருந்தது பாட்டு... என்ன அர்த்தம் இதுக்கு?" கேட்டான்.

"தெரியலையே" மாலதி நகம் கடித்தாள். "கேட்டு வந்து சொல்கிறேன்." என்றாள். சொன்னாள்.

"உன்னைப் பார்க்கப் பார்க்க இன்பமடா

பொன்னாடை அணிந்தவனே..."

"இது தியாகய்யரின் தெலுங்குக் கீர்த்தனை" என்றாள் விவரித்தாள்.

"தினந்தோறும் பாசம் கலந்த உரிமையுடன் உள்ளத்தில் உன்னை, பால் வடியும் முகத்தில் எல்லையற்ற அழகுடன் விளங்கும் உன்னை, உள்ளத்தில் தூய்மை உள்ளவர்கள் தனதாக்கிக் கொள்வார்கள்.



ஸ்ரீராமனை நோக்கிப் பாடிய பாடல் வேறு விதமாய் அவர்களுக்கு இடையே த்வனித்தது. கிறக்கம் தந்தது. கிறக்கம் ஒதுக்கிப் படிப்பில் மூழ்கிப் பழகினான் தேறினான். முதல் வகுப்பு என்று தெரிந்தது. எம்.எஸ்.ஸியா? வேலையா?

"எது வேணா செய்... நீயே முடிவு செய்" விடு அவன் தலையில் பொறுப்பு சுமத்தியது. அவளோடு கலந்து பேசினான்.

"எம்.எஸ்.ஸி. படிங்க கணேசன். வேலைக்குப் போகணும்னு என்ன நிர்ப்பந்தம்?"

"எல்லாப் படிப்புக்கும் ஒரே 'சம்பளம்தான் மாலதி."

"நோ... ஆரம்பத்துல அப்படி இருக்கும். ரோஜா ரோஜா தான். எம்.எஸ்.ஸி தான்."

"நொய் நொய்ன்னு படிக்கறதைவிட, சட்டுன்னு வேலை கிடைச்சு... அங்கே முன்னுக்கு வந்து..."

"வேணாம், படிங்க..."

"எதுக்கு வற்புறுத்தற?"

"நீங்க எம்.எஸ்.ஸி. படிக்கணும்னு என் விருப்பம்."

"ஏன்?" வியந்தான்.

"என்னமோ ஒரு ஆசை..."

"அதான் ஏன்?"

அவள் பதில் சொல்லவில்லை. உறுத்துப் பார்த்து விட்டுப் போய்விட்டாள். கணேசனுக்கு எம்.எஸ்.ஸி கிடைத்தது. அவளுக்கும் படிப்பு தொடர்ந்தது.

"நீ பாடினியே கனகன ருஸிரா... நேத்து டேப்புல கேட்டேன் கிறங்கிப் போச்சு. என்னா குரல்"-ஒருநாள் அவள் வீட்டுக்குப் போய்ப் பேசினான்.

"நான் சுமாராதான் பாடுவேன்" முகம் தூக்கினாள்.

"அதுக்குச் சொல்லல..."

''எனக்குச் சரியா அர்த்தம்கூடத் தெரியாது...''

''ச்சு... அதுக்குச் சொல்லலை. உன்னால கர்னாட்டிக் மியூஸிக்ல ஒரு பிடிப்பு வந்துருக்கு... நிறைய கச்சேரி கேட்கணும்னு தோணுது.''

கேட்டார்கள். வீட்டில் அனுமதி வாங்கி சைக்கிளில் டபிள்ஸ் போய் அர்த்தத்துடன் உள்ள தியாகராஜர் கீர்த்தனைப் புத்தகத்தைக் கையில் எடுத்துப்போய் வரிக்கு வரி அர்த்தம் புரிந்து கேட்டார்கள்.

கணேசன் ஆர்வம், அவளையும் அதிகம் அறியத் தூண்டியது. உளறாமல், உறுத்து உறுத்து அங்கங்களைப் பார்க்காமல், உதவியாய், உண்மையாய், உன் அறிவைப் பகிர்ந்து கொடு என்கிற தன்மையாய், நட்பாய் அவனிருக்க, அவளுக்கும் அவன் மீது பிடிப்பு விழுந்தது.

'உன்மனசுள் என்ன சொல்'-கேட்க விரும்பினான். கேட்கவில்லை.

மாலதி அப்பா இறந்து போனார். அவள் வீடு உருண்டு கதறியது.

பதின்மூன்று நாளும் அவன்தான் உதவி, எடுபிடி ஊன் உறக்கமின்றி அலைந்தான்.

*'இங்கிவனை யான் பெறவே*
*என்ன தவம் செய்துவிட்டேன்'*

அத்தனை துக்கத்திலும் மாலதி மனசு அவனை நோக்கிப் பாடியது.

*'துன்பம் சேர்க்கையில் யாழெடுத்து நீ*
*இன்பம் சேர்க்க மாட்டாயா*
*அந்தி நற்றமிழ் கூத்தின் முறையினால்*
*ஆடிக்காட்ட மாட்டாயா'*

ஒரு மாதம் கழித்து மனசு கனத்தபோது, அவன் அருகே அமர்ந்து அடிக்குரலில் பாடினாள்.



''என்னம்மா... இன்னும் துக்கம் திரலையா?'' -விரலால் மெள்ள அவள் புறங்கையைத் தொட்டான். அவள் அவன் தோள் பற்றிக் கதறினாள்.

''எதுக்கு அழுகை...?''

''மேல படிக்கணும்னு ஆசைப்பட்டேன். முடியாது வேலைக்குப் போகணும்.''

''போ...''

''தம்பி-தங்கையைக் கரையேத்தணும்.''

''செய்...''

''பொறுப்பு அதிகமாறது எனக்கு. இனி இப்படிப் பாடி ஆடி இருக்க முடியாது.''

''வேண்டாம்.''

''அப்பா இல்லாத பொண்ணு தத்தாரியா சுத்தறது யார் கூடவோன்னு பேச்சு வரும்.''

''ஐஸி. அப்ப ஒண்ணு செய். யாராவது கேட்டா கணேசனைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்.''

அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

## 12

கணேசன் தொடர்ந்தான்.

''என்னடா இவன் சரியான நேரம் பார்த்துக் கல்யாணப் பேச்சு எடுக்கறானே... இத்தனை நாள் வாயைத் திறக்காம இருந்துட்டு, இப்ப தடால்னு ஒரு வெட்டுப் போடறானேன்னு தோணும்.

''இந்த ஆசை உன்னைப் பார்த்த இரண்டாம் நாளே வந்தது மாலதி. இதை உன்கிட்ட சொல்ல பயமா இருந்தது. 'என்ன யோக்கியதை உனக்கு? ன்னு கேட்டா, பதில் சொல்ல முடியுமான்னு தோணித்து.

''இப்பவும் இந்த வார்த்தையை, எந்த யோக்கியதையும் இல்லாம சொல்றேன். என் காசுன்னு சம்பாதிச்சு உனக்கு முழம் பூ கூட வாங்கித்தர முடியாது. ஆனா ஒரு நாள் முடியும்னு நம்பிக்கை வருது. நீ சொன்னேன்னு எம்.எஸ்.ஸி படிக்கிறேன். ஸோ, எனக்கு இந்த நட்பைத் தொடரணும். அம்மாகிட்ட பேசப் போறேன்.''

''என்னன்னு?''

''மாலதியைக் கல்யாணம் பண்ணிக்கட்டுமான்னு.''

''கூடாதுன்னா...?''

''என் எம்.எஸ்.ஸி. பாதில நிக்கும்.''

''புரியலை.''

''நானும் உன்கூட வேலை தேட வேண்டியதுதான்.''

''முட்டாள்தனம்.'' -அவள் சீறினாள்.

''ஏன்.''

''உன் மொத்த எதிர்காலத்தையும் எனக்காகப் பாழாக்கிக்கணுமா? உன் அம்மாவைப் பகைச்சுக்கணுமா? வேணாம். உன் அம்மா ரொம்ப நல்ல மாதிரி.''

''பகை முறிவு. பாழ்னு இப்பவே பயப்படுவானேன். ஏன் நெகடிவ்வா யோசனை பண்ணனும்... அம்மாகிட்ட பேசறேன் முதல்ல.''

''வெயிட். தீர்மானம் பண்ணிட்டுப் போகாதே.''

''புரியலை...''

''நான் தான்னு தீர்மானம் செஞ்சுண்டு போக வேண்டாம். பேசு. சண்டை போட வேண்டாம். முயற்சி



பண்ணு... யார் உறவையும் முறிச்சுக்க வேண்டாம். லவ் ப்ளான் பண்ணு. படிப்பைப் பாதில எந்தக் காரணம் கொண்டும் நிறுத்த வேண்டாம்.''

''ஏன்?''

''என்னாலதான் நீ எம்.எஸ்.ஸி படிக்கறேன்னு எனக்குப் பெருமை. அது பூர்த்தியாகணும்.''

''புரியறது.''

''ஸோ... கோபமில்லாம, படபடப்பு இல்லாம... அவதான் வேணும்'னு கத்தாதே. 'எனக்குப் புடிச்சிருக்கு. உன் அபிப்ராயம் என்ன' ன்னு அம்மாகிட்டே கேளு.''

''நெகடிவ் பதில் வந்தா?''

''யோசிப்போம்.''

அரை மணி நேரம் அமைதியாய் உட்கார்ந்து விட்டுப் பிரிந்து போனார்கள்.

அவனுக்கு அம்மாவிடம் பேசப் பயமாய் இருந்தது. கடிதம் எழுதினான். வீட்டுக்குள்ளேயே இருக்கும் அம்மாவுக்கு வீட்டுக்குள்ளிருந்து கடிதம் எழுதினான்.

*'அன்புள்ள அம்மா,*

*மூன்று வருடம் முன்பு உன்னால் அறிமுகப்படுத்தப் பட்ட மாலதி என்கிற பெண்ணை நான் நேசிக்கிறேன். அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன். திருமணம் எவ்வளவு சுமை, எவ்வளவு பெரியது என்று எனக்குத் தெரியும். நீ சொல்லிக் கொடுத்திருக்கிறாய். வாழ்ந்து வழிகாட்டியிருக்கிறாய். நான் தப்பு ஏதும் செய்துவிட்டுக் கெஞ்சவில்லை. இது ஒரு ஆலோசனை. இவளோடு என் வாழ்வு நன்றாய் இருக்கும் என்பது என் எண்ணம். அவளுக்கும் விருப்பம் இருக்கிறது.*

*இருவருடைய கடமைகளைப் பற்றி முழுவதுமாய் உணர்ந்திருக்கிறோம். வெறும் காதல் மயக்கத்தில் எதைப்*

பற்றியும் யோசிக்காமல் ஓடி விடவோ, உன்னை மீறவோ மாட்டோம். அது எங்கள் எதிர்கால வாழ்க்கையைப் பாதிக்கும் என்பதை உணர்ந்தே இருக்கிறோம். நான் அவளை விரும்புகிறேன் என்கிற உண்மையையும், அதற்கான காரணத்தையும் உன்னிடம் வெளிப்படை யாகச் சொல்கிறேன். கூடாது என்பது உன் முடிவானால் அதற்குக் காரணம் சொல்வாய் என்று நம்புகிறேன்... மறுக்க உனக்கு உரிமை உண்டு. ஆனால் மீண்டும் உன் மனசை மாற்ற முயற்சிப்பேன். உன் சம்மதத்தை மிக முக்கியமாகக் கருதுவதால், உன்னைச் சம்மதிக்க மீண்டும் பேசுவேன்.

உன் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்
கணேசன்.

கடிதத்தை போஸ்ட் செய்தான்.

அம்மாதான் வாங்கினாள். பிரித்துப் படித்தாள். நிதான மாய் வெங்காயம், உருளைக்கிழங்கு நறுக்கத் துவங்கினாள்.

''சாப்பிடவா'' என்று அழைத்தாள்.

''காபில சர்க்கரை போதுமா?'' என்று கேட்டாள்.

''ரேஷன்ல கெரஸின் தரானா...? கேளு...'' கட்டளை யிட்டாள். கடிதம் பற்றிப் பேசவேயில்லை. மூன்று நாளாகியும் விவாதிக்கவில்லை. மனசும் முகமும் இருண்டு தவித்தான். தாங்க முடியவில்லை.

''அம்மா, என் லெட்டர் வந்ததா?''

''வந்தது...''

''என்ன பதில்?''

''போஸ்ட் பண்ணிட்டேனே... வரலையா?''

''வரலையே...'' நகம் கடித்தான்.



''நேரே சொல்லேன்.''

''அவசரமா?'' திரும்பி நிதானமாய்க் கேட்டாள். அவள் அமைதி பயமுறுத்தியது.

''அம்மா ஏழு நாளாச்சு லெட்டரே வரலை.''

''அவசரமா?'' மறுபடி அம்மா நிதானமாய் கேட்டாள்.

''எப்ப போஸ்ட் பண்ணினே?''

''பண்ணலை.''

''ஏன்?''

''ஒரு வருத்தம்.''

''எதனால?''

''நீ யோசி...''

''நான் உனக்கு தபால்ல அனுப்பிச்சது வருத்தமா?''

''இருக்காதா பின்னே?''

''மாலதி கூட அதான் சொன்னா.''

''அப்புறம்...''

''பேசறது பெட்டர். அப்பதான் உடனுக்குடன் என்ன நினைக்கிறான்னு தெரிந்து சமாதானம் செய்ய முடியும்... மன்னிப்புக் கேட்டு நேரே பேசுங்கன்னா.''

''நீ ஏன் பேசலை?''

''உன் பதிலைப் படிச்சுட்டு நேர பேசலாம்னு நினைச் சேன்.''

''ஸோ, நீ அவசரப்படலை.''

''இல்லை.''

''நிச்சயமா?''

பிள்ளை தலை குனிந்தது. தவறை உணர்ந்தது. ''ஸாரிம்மா...''

''நீ ஸாரியெல்லாம் சொல்ல வேண்டாம். கணேசா உன் கல்யாணம் உன் விஷயம். நீ யாரைக் கல்யாணம் பண்ணிண்டா எனக்கு என்னடா? கோவமா சொல்லலை. திரும்பவும் சொல்றேன். உன் கல்யாணத்துல உன் விருப்பம் தான் முக்கியம். நீ எவளைக் கல்யாணம் பண்ணிண்டாலும் நான் உனக்கு அம்மாதான். எப்பவும் எல்லாக் காலமும் உன் அம்மாதான் இல்லையா...''

''ஆம்'' எனத் தலையாட்டினான்.

''அம்மா சாதம் போடுன்னு கத்திண்டு வருவியே... அம்மா ஃபர்ஸ்ட் கிளாஸ் வாங்கிட்டேன்னு கூச்சல் போடுவியே... நூறு ரூபா கொடு. ஃப்ரெண்ட்டோட மகா பலிபுரம் போறேன்னு அடம் பிடிப்பியே... உன் சமையல் போர்னு குத்தம் சொல்லியே... எதனால... இதெல்லாம் ஒரு உரிமை இல்லையா? ஏன் உரிமை? அம்மா பிடிக்கும்... அதனால... அப்படித்தானே... அம்மாவுக்குப் புரியும். அதானே... உன் ரசனை உன் ஆசை. உன் விருப்பம் புரிஞ்ச அம்மா, உன் கல்யாணத்தை உன் காதலைப் புரிஞ்சுக்க மாட்டாளா? அடுத்த ரூம்ல உட்கார்ந்து லெட்டர் எழுத எப்படி மனசு வந்தது? அம்மா நிச்சயமா எதிர்த்து சண்டை போடுவானு எப்படி எதிர்பார்த்தே...? எதுக்குப் பயப்பட்டே? இத்தனை வருஷம் அம்மாவோட பழகி அம்மாவைப் புரிஞ்சுண்டது இவ்வளவுதானா? ஒருவேளை உன்னை நான் பயமுறுத்தி வெச்சிருக்கேனோ...? சரியா வளர்க்கலையோன்னு எனக்குள்ளே ஒரு துக்கம் வேதனை. அன்னிக்கு ரொம்ப கலங்கிப் போயிட்டேண்டா...''

துக்கத்தில் கணேசன் முகம் பொத்திக்கொண்டான்.

அம்மா சுதாரித்துக் கொண்டாள். ''இப்ப பதில் சொல்லட்டா... இங்கே பாரு. நிமிர்ந்து பாரு கணேசன்.''

''நீ எவளைக் கூட்டிண்டு வந்தாலும், எப்படிக் கூட்டிண்டு வந்தாலும், எப்பக் கூட்டிண்டு வந்தாலும் நான் திங்கற



சோறு அவளுக்கும் இந்த வீட்டுல உண்டு. வரவ என்னை மதிக்கணும்னு அவசியமில்லை. என் மதிப்பைக் காப்பாத் திக்க எனக்குத் தெரியும். உன்னை மதிக்கணும். அதுக்கு நீ தயாராகணும். எம்.எஸ்.ஸி முடி. வேலை தேடு. உன்னைத் தயார்படுத்திக்க... எல்லாம் நல்லபடியா முடிஞ்சா, மாலதி வீட்டுல போய் பெண் கேட்கறேன். அவளும் கெட்டிக்காரி தான்.''

''அம்மா...''

''போய் வேலையைப் பாருடா. மடையா... சாம்பிராணி...''

எங்கும் போகவில்லை. வராண்டாவில் அழுந்திக் கிடந் தான். 'மாலதி நினைத்தது போலவே அம்மா காயப்பட் டிருக்கிறாள். எனக்கு இது ஏன் தெரியவில்லை. மாலதிக்கு மட்டும் எப்படித் தெரிந்தது? எனக்கு இன்னும் வாழ்க்கை பிடிபடவில்லையோ... அனுபவம் இன்னும் தேவையோ...' யோசித்தான்.

அப்பா இரவு சாப்பிடும்போது ஒரே ஒரு வார்த்தை சொன்னார்.

''கங்கிராட்ஸ்.''

நிமிர்ந்து அவரை வியந்துவிட்டு உணவை முடித்தான். மாடிக்குப் போய் உலாவினான். ஆழ்ந்து ஆழ்ந்து யோசித் தான்.

அப்பா ஈஸிசேரில் சாய்ந்து டீபாயில் கால் நீட்டியிருக்க, அம்மா அவர் கால் விரல்களைச் சொடக்கு எடுத்தபடி மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தாள்.

''கன கன ருஸிரா
கனக வஸன நின்னு...''

''பொன்னாடை அணிந்தவனே, உன்னைப் பார்க்கப் பார்க்க இன்பமடா.''

எது பார்க்கப்படும் பொருள் உடம்பா? உழைத்துக் கொடுத்த காசா...? அப்பா கட்டிய வீடா? வாங்கிக் கொடுத்த புடவையா? போட்ட நகையா? இல்லை.

அப்பாவின் நடவடிக்கை... ப்ரேமை காட்டிய அன்பு தெரிந்த தெளிவு வாழும் வாழ்க்கை.

நாற்பது வயது அம்மாவும் நாற்பத்தைந்து வயது அப்பாவும் ஹால் குழல் ஒளியில் தள்ளி நின்று பார்க்கும் போது அவர்களின் அன்பு நெஞ்சில் படர்ந்தது.

கணேசனுக்குக் குழப்பம் போய் தெளிவு வந்துவிட்டது.

திருமணம் என்பது நம்பிக்கை. பரஸ்பர நம்பிக்கை. அந்த நம்பிக்கை வர ஆழ்ந்த காதல், ஆரவாரமற்ற அன்பு முக்கியம். நேசம் உண்மையெனில் ஆடாது. அதிராது. ஆவேசப்படாது.

மறுபடி மாடிக்குப் போனான். வெட்ட வெளியில் மாலதி இருக்கும் திசை பார்த்து, ''மாலதி ஐ லவ் யூ'' என்றான்.

காதல் என்பது வார்த்தையல்ல, வெறும்வெட்ட வெளி நிகழ்வல்ல, செயல் முக்கியம். செயல் என்பதில் வேதனைகள் எதிர்ப்படும். அவமானங்கள் குறுக்கிடும்.... அடங்கிப் போக வேண்டியிருக்கும்.

காதலுக்காக கணேசன் அவமானம் தாங்கியது தனிக்கதை.

அது...

## 13

அம்மாவுக்கு ஆட்சேபனை இல்லை. அப்பா 'வாழ்த்துக்கள்' என்று ஒதுங்கிவிட்டார். மாலதிக்கோ கணேசன் மீது கொள்ளை ஆசை. அசாத்திய நம்பிக்கை. கணேசனுக்கு



என்ன குறை? பட்டப்படிப்பு படிக்கிற எந்தப் பையனுக்கு இப்படி உள்ளங்கையில் காதல் உட்காரும்.

''அம்மா! நானும் மாலதியும் சினிமாவுக்குப் போயிட்டு வர்றோம்...'' -எவர் வீட்டில் இப்படி விடை பெற்று வெளியே போக முடியும்.

''யார் கண்ணா, குட்டி... டக்கரா இருக்கே... எங்கே பிடிச்சே...?''

''என் வுட் பி... நான் திருமணம் செய்துக்கொள்ளப் போகும் பெண். பெயர் மாலதி. மாலதி, இவங்க என் கிளாஸ்மேட்ஸ்... பாலு, ராஜு, சேகர், மாறன், வேலுச்சாமி, ஸ்டெல்லா, புவனா, தமிழ்கொடி...''

கூட்டம் கலகலத்து எழுந்து நிற்கும். முகமன் கூறும் வியப்புடன் வெறிக்கும்.

'நேற்று நீர் விட்டது, இன்று வேர் விட்டது...
நெஞ்சில் அம்மாடியோ, நூறு பூ பூத்தது...'

சினிமா பாட்டு உள்ளே துவம்சம் பண்ணியது. அமலாவுக்குப் பதில் மாலதி ஆடினாள். கெமிஸ்டரி புத்தகம் மல்லாக்கச் சீண்டுவாரற்றுக் கிடந்தது.

மாலதி புரிந்து கொண்டாள். சவுக்கால் விளாறினாள்.

''இதென்ன மார்க் கணேசன்...? நாற்பத்தெட்டு, நாற்பது, முப்பத்தேழு...''

''மிட்டேர்ம் தானே. டெஸ்ட்மாதிரியான பரீட்சை... செமஸ்டர் இல்லை.''

''என்னை ஏமாத்தறியா, உன்னை ஏமாத்திக்கிறியா...? நீ ஃபர்ஸ்ட் கிளாஸ் வாங்கலை, அத்தனை கவிதைகளையும் கிழிச்சு உன் வீட்டு வாசல்ல போட்டுப் போயிடுவேன்.''

''எங்க... எங்க போக முடியும்...?''

"எனக்கு வேணுங்கறது நீ இல்லை... உன் முதல் வகுப்பு. உன் முதல் வகுப்புங்கறது உடனடி உத்தியோகம்... உன் உத்தியோகமே உன் லட்சணம்...உன் பாட்டு, கவிதை, ஹேர் ஸ்டைல், பவுடர் இல்லை..."

வலித்தது.

அவன் விடவில்லை. "பச்சைக்கொடி காட்டிட்டா தண்டவாளத்திலேருந்து இறங்குவியா... சரின்னு சொல் விட்டதாலே சேறு எடுத்து அப்பிப்பியா, ஏன் முட்டாளா இருக்கே கணேசன்...?"

"உனக்கு லவ் கிக்கே இல்லையா...? பொய் சொல்லாம சொல்..."

"இருக்கு... நான் பசிச்சுச் சாப்பிடறவ... ருசிக்குச் சாப்பிடறவ இல்லை. போக வரத் தின்னா பேதியாகும். கஞ்சி குடிச்சாக்கூட வயிறு புரட்டும். ப்ளீஸ், ஒரு வரைமுறை வேணும். உறுதி இல்லாதவன் ஆம்பளையா...?"

கோபம் வந்தது. விலுக்கென்று எழுந்து போனான். நாலு வாரம் பேசாதிருந்தான். அவள் முன் அடுத்த டெஸ்ட் மார்க்கை நீட்டினான்.

"எல்லாம் எழுபதுக்கு மேல்... குட், கீப் இட் அப்" மடித்துக் கொடுத்து விட்டு மளிகைக் கடைக்குப் போனாள்.

எம்.எஸ்.ஸி. பரீட்சையின் போது வெகுநேரம் கை பிடித்துப் பாராட்டினாள். உற்சாகம் தந்தாள். "இது நம்ம எதிர்காலம் கணேசன்... ஞாபகம் இருக்கட்டும்."

பரீட்சை முடிந்ததும் சினிமா போனார்கள். தினமும் காலையில் 'ஹிண்டு' பேப்பரில் வேலை தேடினார்கள். எழுதிப் போட்டார்கள்.

பரோடாவிலிருந்தும் ரெய்ச்சூரிலிருந்தும் பாண்டிச் சேரியிலிருந்தும் இன்டர்வியூக்குக் கடிதங்கள்...



"பரோடா வேலையில் காசு அதிகம்! ஆனா, ஊர் பிடிக்கலை. பாண்டிச்சேரின்னா அடிக்கடி வந்துட்டுப் போகலாம்."

"நோ பரோடா பெரிய கம்பெனி பே அதிகம்."

"ரொம்ப ஏங்கிடுவேன் மாலதி..."

"ஏங்கு... நல்லது."

"அடிமனசுல உன்னைப் பத்தி ஒரு சின்னச் சந்தேகம்..."

"என்ன?"

"வேற யாரையாவது உங்க ஆபீஸ்ல லவ் பண்றியோன்னு."

"எதனால இந்தச் சந்தேகம்...?"

"என்னை வெளியூருக்குத் துரத்துறதுலயே மும்முரமா இருக்கியே..."

"வெரிகுட்... இதை உங்கம்மாகிட்ட சொல்லு..."

"ஏன்..."

"சொல்லேன்..."

"முட்டாள்... ஏண்டா, எல்லா ஆம்பளைங்களும் இப்படி ஒரே மாதிரி மக்கா இருக்கீங்க... இந்தா லிஸ்ட் அவ கொடுத்த லிஸ்ட். 'எனக்குக் கட்டின புடவையோட வர இஷ்டமில்லை. மாமி பதினாறு பவுன் நகை, பத்து கிலோ வெள்ளி, இந்தந்த சாமான் வாங்கட்டுமா' ன்னு எழுதிக் காட்டினா. நான் நிறைய குறைச்சேன். கட்டில், பீரோ வேண்டாம். பித்தளை எதுவும் வேண்டாம். குக்கர் வேண்டாம்... இதெல்லாம் என்கிட்ட இரண்டிரண்டு இருக்கு... வாஷிங் மெஷின் வாங்கு. சமையல் காஸுக்கு அப்ளை பண்ணுன்னு அவகிட்டே பேசினேன்.

"டேய்... அந்தப் பொண்ணு தனக்குக் கல்யாணம் ஆயிடுத்துங்கற மாதிரி நிக்கறதுடா... தோள் குழி விழுந்து,

உடம்பு இளைச்சு, கன்னம் தட்டிப் போய் எப்பவும் ஒரு கவலையா இருக்குடா... இந்த மாறுதல் உனக்குப் புரியலையா...?

''ஏண்டி, இப்படி இளைச்சுப் போறே...? சரியா சாப்பிடற தில்லையா? ன்னு கேட்டேன்... 'சாப்பிட முடியலை மாமி... கழுத்துல தாலி ஏறுற வரைக்கும் எனக்குக் கவலை தான்'னு சொல்றது. இப்படிப் போய்ப் பேசறியே அவகிட்ட! இது தப்பு மகா பாபம். நல்ல பொம்மனாட்டியை வேதனைப் படுத்தினே, நீ நன்னாயிருக்கமாட்டே...''

மாலதி பற்றி பயம் வந்தது. தான் அவளுக்கு நிகர் இல்லையோ என்ற கவலை வந்தது. 'இன்னும் விடலைப் புத்தி விடவில்லையோ'-சந்தேகம் வந்தது.

அம்மா- அப்பா- மாலதி வழியனுப்ப, பரோடாவுக்கு வண்டியேறினான்.

-சென்ட்ரல் ஸ்டேஷனில்...

''பழம் வாங்கிண்டு வரலாமா...? வா...'' அம்மாவுடன் அப்பா ஸ்டாலுக்கு நகர... தனியே தரை பார்த்து நின்று கொண்டிருந்தார்கள்.

''நான் முட்டாள் மாலதி...''

''இல்லை...''

''தப்பா பேசிட்டேன்...''

''இல்லை... என்னை நீ ரொம்ப நேசிக்கறே... 'மாலதி, மாலதி' ன்னு மனசுல அலையறே... ஜெயிக்கறதுக்கு முன்னாடி கிரீடம் சூட்டிக்கணும்னு ஆசைப்படறே...''

''உனக்கு நான் பேசினது கஷ்டமா இருந்திருக்கும்... ச்சேன்னு... போயிருக்கும்...''

''இல்லை... இல்லவே இல்லை... எனக்கு பிடிச்சிருந்தது யப்பா எத்தனை ஆங்காரம்... இத்தனை ஆங்காரத்துக்கு எவ்வளவு ஆசை இருக்கும்னு கணக்குப் போட்டேன்...''



''கொஞ்சங்கூட கோபம் வரலையா...?''

''நான் தப்புப் பண்ணியிருந்தா குத்தல் கோபமா வரும்.... என் மனசுலகூட தப்பு இல்லை. எதுக்குக் கோவம்?''

''நான் ரொம்ப சுயநலம்...''

''என்னை விடவா...? ஊர் தெரியாத ஊர்க்கு உன்னை எதுக்கு துரத்தறேன்? என் வாழ்க்கைக்குத்தானே, என்ன சாப்பிடுவே, எங்கே தங்குவே, எப்படி இருப்பே, கவலையே படாம விரட்டறேனே என்னை விடவா... சுயநலம்...?''

''லெட்டர் எழுதலாமா?''

''எழுது...''

''பதில் போடுவியா?''

''நிச்சயம்... இந்தா இது என் நினைவா...'' பார்சலை நீட்டினாள் மாலதி.

''என்னது?''

''இரண்டு தலைகாணி உறை... ஒரு ஸ்வெட்டர்... ஒரு வாட்டர் ஜக், ஆறு பனியன்... ஒரு டைம்பீஸ்... ஒரு வாட்ச் ஸ்ட்ராப்... பாரதியார் கவிதைகள் புஸ்தகம்...''

''எதுக்கு மாலதி?''

''நானும் முட்டாள் தான்... எமோஷனல்தான்... நீ என்னை எப்பவும் ஞாபகம் வெச்சக்கணும்ங்கற வெறி தான்... 'மாலதி' 'மாலதி' ன்னு உள்ளே நீ கத்தின்டே இருக்கணுங்கற ஆசையில்தான்.''

உதடு கடித்து கண்ணில் நீர் கோத்து நின்றாள்.

''ஏய், மாலதி'' நெருங்கினான்.

''அப்பா வர்றார்...'' அப்பா புஸ்தகம் பார்க்க நின்றார்.

''மாலதி, என் நினைவா உனக்கு ஒன்றுமே...'' மோதிரம் அவிழ்த்தான். அவள் இடது கை பற்றினான். விரல் தேடி அணிவித்தான்.

ரயில் கூவிற்று.

''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்...''

அம்மா திரும்பிப் பார்த்தாள். சிரித்தாள்.

வண்டி நகர... முகம் நகர... தரை நகர... கம்பங்கள் நகர... விளங்குகள் நகர, அவன் பொருள் தேடித் தலைவியைப் பிரிந்தான்.

வண்டி இருட்டைக் கிழித்துக் கொண்டு போயிற்று.

''கிழக்கு வெளுக்காது இருக்காது வானம்
விடியும் நான் பார்த்து இருப்பேனே நானும்...
வருங்காலம் இன்பம் என்று
நிகழ்காலம் கூறும் கண்ணே.''

'எது நம்பிக்கை, மரணமா? இல்லை. வாழ்வு... பிறப்பு, எது உத்வேகம், தோல்வியா? இல்லை. வெற்றி... எது விடிதல், அண்டங்காகமாய்ப் பெண்ணைச் சுற்றி வருதலா? இல்லை, ராஜாளியாய் உயரே உயரே பறந்து உணவு தேடல்... காடு, மலை தாண்டி பறத்தல், எது காதல், ஒட்டி ஒட்டி நடக்கும் உறவா? இல்லை. பிரிவும்.''

பரோடா வரவேற்றது.

சப்பாத்தி, சாகு, வயிற்றைப் பிசைந்தது. மொழி, விரட்டி, விரட்டி விழிக்க வைத்தது. 'இந்த லாபில் துடைத்துக் கொண்டிரு... சுத்தம் செய்...' முதலில் அவமானப்படுத்தியது. 'சாலா மதராஸி' முறைத்தது.

சுடும் வெயில், பனி, ஒருவேளை உணவுக்கு ஒரு மைல் தூரம் நடக்க வேண்டிய நிலை, பாதி நாள் பிரெட் பட்டர்-ஜாம்தான் உணவு. இவையெதுவும் எவருக்கும் தெரிவிக்கப் படவில்லை. சகலமும் உள்ளே வைத்து அனுபவித்தான்.

''எம்.எஸ்.ஸி. பாஸ்-முதல் வகுப்பு' என்று அப்பா அடித்த தந்தி, மறுபடி நம்பிக்கை தந்தது. அலுவலகத்தில் விவரம் சொல்ல பலர் புருவம் உயர்ந்தது. 'இந்த ஒரு கலவையைச்



சோதிக்கும் பொறுப்பு எடுத்துக் கொள்' என்றது. வேறு யாரோ வேலையை விட அந்தப் பொறுப்பும் இவனுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தி புரிந்தது. இரண்டு மலையாளிகள் சிநேகமானார்கள்.

அம்மாவின் கைச்சோற்றை, மலையாளி வீட்டுக் கூட்டு ஞாபகப்படுத்தியது.

''குடிக்க மாட்டாயா... கொஞ்சம் கூடவா... பிறகு ஏன் இப்புவியில் பிறந்தாய்?'' சர்தார்ஜி கேட்டார்.

''நடனமாட மாட்டாயா, பிறகு எது உன் சந்தோஷம்? மசால் தோசை மட்டுமா?'' சர்தாரிணி கேட்டாள்.

இந்தியாவுக்குப் பல கோடி முகம், பல கோடி குரல்.

வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு ரசனைகள்... தெற்கே வெள்ளை நிறம், விதவைச் சின்னம்... வடக்கே மங்கலம். இங்கே சங்கொலி பயம் தரும்... அங்கே 'ஹரி... ஹரி' என்றார்கள். இங்கே கடவுளை விலகி வணங்கினார்கள்...அங்கே தொட்டுத் தழுவினார்கள்.

''பெங்களூரில் புதிய கிளை திறக்கப்படும்... உதவி மானேஜராகப் போகிறாயா? விற்பனையையும் கவனிக்க முடியுமா?'' கேட்டார்கள்.

உடுத்திய பாண்ட்-சட்டையோடு ''தயார்'' என்றான்.

தீபாவளி, பொங்கல் எதன் பொருட்டும் தென்திசை வராதவன், புதிய கிளைக்குப் பொறுப்பேற்கும் முன் சென்னைக்கு வந்தான்.

அம்மாவை நமஸ்கரித்தான்.

''வரேன்னு லெட்டரே போடலையே.''

''உம்ம்...''

''மாலதிக்கு மட்டும் எழுதினியா?''

''இல்லை... மாலதி சௌக்கியமா?''

CONNEMARA PUBLIC LIBR
21 FEB 20

"இருக்கா. வேலை பிடிச்சிருக்கா?"

"ரொம்ப."

தனியே மேல் மாடியில் இருக்கும் அவனை நோக்கி மாலதி ஓடினாள்.

அருகே போய் நின்றாள்.

திரும்பி அவளைப் பார்த்தான். முகம் நிமிர்த்தினான். இழுத்து அணைத்தான். உதட்டில் முத்தமிட்டான். மாலதியால் பேச முடியவில்லை.

அவன் காசு சம்பாதித்த திமிரில் இல்லை... அனுபவம் சம்பாதித்த தெளிவில் இருந்தான். வேலைதானே... 'இந்த மடம் விட்டா சந்தை மடம்...' என்கிற தெம்பில் இருந்தான்.

தெளிவு உள்ளவனிடம் பெண் சண்டையிடுவதில்லை. மாறாய் சரணடைகிறாள்.

"எப்ப கல்யாணம் வெச்சிக்கலாம் கணேசன்?"

"நாலு வருஷம் போகட்டும்."

"ஏன்?"

"மெட்ராஸ்ல ஒரு ஃப்ளாட் வாங்கணும். என்கிட்ட ஒண்ணரை இருக்கு. ஆபீஸ் ஒண்ணரை தரும்... இன்னும் வெளியே கடன் வாங்கி..."

அவளுக்கு உள்ளே பொங்கியது. உடனே இவனைப் புருஷனாய் அடையவேண்டும் என்று தோன்றியது.

காத்திருக்கச் சம்மதம் சொன்னாள்.

ஆனால் காத்திருந்தாள் காதல் என்று வசப்பட்ட பிறகு, பெண் காத்திருத்தல் எளிதல்ல... அதுவே வேதனை நரகம்... உடலும் மனசும் பெண்ணை வதைக்கும் விஷயம்.

அப்படி ஒரு சிக்கலான இடம் வேறு கதையில்... அது...

# 14

காத்திருத்தல் பெண்ணுக்கு வேதனையானது என்று நான் சொன்ன கூற்றுக்கு, 'ஓஷோ' என்று அழைக்கப்படும் பகவான் ரஜனீஷின் 'காமக்கலை' என்கிற புத்தகம் துணையாய் இருந்தது.

'சிற்றின்பத்தை நான் கண்டிக்கக் காரணம், அது மிருகத் தனமானது என்பதால்தான். ஏதாவது ஒருவகையில், ஏதாவது ஒன்று மிருகத்துடன் தொடர்புடையதாக்க முடிந்தால், அதையெல்லாம் நாம் தவறு என்கிறோம்.

நமது மிருகத்தனத்தை நாம் கண்டிக்கத் துவங்க, அந்தக் கண்டிப்பு அடக்கி வைத்த என்னும் அவஸ்தையை உண் டாக்கி விட்டது. மனிதனும் ஒரு மிருகமே அவன் மிருகத் தனத்துக்கு அப்பால் செல்ல முடியும். ஆனால், மிருகப் பாரம்பரியத்தை மறுக்க முடியாது. தான் மிருகத்திலிருந்து வேறுபட்டவன் என்றே எண்ணமே அவனுள் ஒரு பிரிவை ஏற்படுத்திவிட்டது. ஒவ்வொரு மனிதனும் இரண்டு பட்டவனாகவே இருக்கிறான்.

மிருகத்தனம் என்று கூறும்போது, ஓர் உண்மை நிலையைக் கூறும் வார்த்தையே அன்றி, அதைக் கண்டிக்கும் வார்த்தையல்ல.

எதை நீ கண்டிக்க ஆரம்பிக்கிறாயோ, அந்தப் பகுதி தன்னறிவற்றதாக ஆகிறது. ஆனால் அது அங்கே இருக்கிறது. மறையவில்லை, வெளியேறவில்லை.

'Holy' என்கிற சொல்லுக்குப் புனிதம் என்று பொருள் மட்டுமில்லை... முழுமை என்ற பொருளும் உண்டு. எப்போது நீ முழுமையாக முடியும்? உன்னை உன் மிருகத் தனத்தை மறுக்காதபோது, அது இருக்கிறது என்று ஏற்றுக் கொள்கிறபோது...'

வெட்கமின்றி, போர்வையின்றி நம்மை நாம் பார்த்துக் கொள்ள ரஜனீஷ் அதிகம் உதவுகிறார்.

மனிதன் என்று அவர் அழைக்கும்போது ஆணை மட்டும் சொல்லவில்லை. பெண்ணுக்கும் அதே நியதியை, நீதியைச் சொல்கிறார். ரஜனீஷ் வேறு கட்டுரையில் பேசுகிறார்.

'ஒரு ஆண் என்பவன் பெண்ணுக்குப் பிறந்தவன். அவனுள் பெண் தன்மை நிச்சயம் உண்டு.

ஒரு பெண் என்பவள் ஆணின் வித்து, அவளுள்ளும் ஆண்மை உண்டு. ஒரு மனிதருக்கு வாழ்க்கை என்பது, ஆண் பெண் குணங்கள் இரண்டும் கொண்டது.

ஆண் என்பவன் அழக்கூடாது, பயப்படக்கூடாது. திட எண்ணம் வேண்டும், பலவீனம் கூடாது என்று கற்பிதம் செய்யப்படுகிறது.

பெண் என்பவள் அன்புடன் கனிவுடன் இருத்தல் வேண்டும். அவள் கொடுமையானவளாக, கிளர்ச்சி செய்ப வளாக இருக்கக் கூடாது என்று நினைக்கப் படுகிறது.

இரண்டும் தவறு.

உண்மையில் ஒரு பெண் கிளர்ச்சி செய்தால், எந்த ஒரு ஆணும் அவளோடு போட்டி போட முடியாது. ஏனெனில், ஆணின் கிளர்ச்சிகளெல்லாம் உபயோகப்படுத்தப்பட்டு விட்டன. ஆனால், பெண், ஆணின் தேவையை இன்னும் வெளிப்படுத்தவில்லை. அவள் கோபமும் வன்முறையும் கொண்டால், ஆண் வெளிறிப் போவான்.

இதுபோலத்தான் ஆணின் கதையும், ஆண் என்பவன் அன்பு செலுத்தத் துவங்கினால் ஒரு பெண்ணும் அவனோடு போட்டியிட முடியாது. ஏனெனில், அவனுள் உள்ள பெண்மை புத்துணர்வு மிக்கது.

உன்னுள் இருக்கும் இரண்டு பகுதியையும் ஏற்றுக் கொள். பிளவுபட்ட மனிதனாய் வாழாதே.



நீ இரண்டுமானவன் என்கிற அறிவே, உன்னை முழுமைக்கு இட்டுச் செல்லும்...

கோபமின்றி, சார்புகளின்றி ரஜனீஷின் மேற் சொன்ன பகுதியை அறிதலின் பொருட்டுப் பலமுறை படியுங்கள்... யோசியுங்கள். 'எவர் உதவியும் இன்றி இவர் இப்படிச் சொல்றாரே, இது சரியா?' என்று எங்கேயும் கேள்வி கேட்டுக் கை காட்டாமல், உங்களை நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள். சுயமாய் யோசியுங்கள்... புதிதாய் யோசி யுங்கள்.

ஆட்டு மந்தைக்கு மேய்ப்பன் வேண்டும். நீ மனிதன் தேடு... உன்னைத் தேடு. வழியில் இடர்படும் முட்செடி களுக்கும் புதை குழிக்கும் பயப்படாமல் தேடு.

மாலதியைக் 'காத்திரு' என்றான் கணேசன். காத்திருக்கும் வசதிகள் அவளுக்கு இருந்தன. மறைவுகள் மாலதிக்கு இல்லை. அவள் கணேசனின் எதிர்கால மனைவி என்று தெரு முழுக்கப் பேசிற்று.

அவர்களை இரண்டு வீடுகளும் ஏற்றுக் கொண்டதால் ஊர் முழுவதும் ஏற்றுக் கொண்டது. உள்ளும் புறமும் வேடமில்லாமல் மாலதி இருந்தாள்.

வெளியே காதலைச் சொல்ல முடியாது தவிக்கும் பெண்களுக்கு இடையே மாலதியின் வாழ்க்கை ஒரு வரப் பிரசாதம். பெரிய கொடுப்பினை. அம்மாவை விட அன் புள்ள மாமியார், மாமியாரைவிட உயர்வான மாமனார்.

'மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தடே' அவள் பிறந்த நாளுக்கு நூறு இன்லாண்ட் கடிதங்கள் கொண்ட உறையை மாமனார் பரிசளித்தார்.

'உபயோகப்படும்னு நினைக்கிறேன்'-கண் சிமிட்டினார் வெட்கப்படுவதா, வியப்பதா. தெரியாமல் மாலதி விழித் தாள். 'பிள்ளைக்கு எழுது' என்று கடிதம் தருகிற மாமனார்...

அதாவது, மாமனாராகப் போகிறவர் உண்டா உலகில். மாலதி அதிர்ஷ்டக்காரி.

மேடேறுகிற சைக்கிள் ரிக்ஷாவாய் சிறிது நாள் வாழ்க்கை இருப்பினும், தள்ள ஆட்கள் இருந்தார்கள். வண்டி மேடேறியது. இனி சறுக்கி ஓடும். சுகம்தான்.

ஆனால் பள்ளத்தில் நொடித்துக் கிடக்கும் வண்டியாய் இங்கு பலர் வாழ்க்கை இருக்கிறது. முன்னும் போகாது பின்னும் போகாது. நெளிந்த சக்கரமாய் மனசு மாறி, அசையாது மாட்டிக் கொண்ட பெண்கள் இங்கு உண்டு.

விஜயலட்சுமிக்குத் திருமணம் நடந்துவிட்டது. அதே சமயம் திருமணம் நடக்கவும் இல்லை. விநோதமாய் இருக்கிறதா?

விநோதம்தான்.

திருமணம் என்பதென்ன... இன்னாருக்கு இன்னார் என்று ஊருக்கு அறிவித்தால், விஜயலட்சுமி தன்னை இன்னாருக்கென்று வரித்துக்கொண்டாள். ஆனால், ஊருக்குச் சொல்லவில்லை.

விஜயலட்சுமிக்குத் தான் திருமணமானவள் என்று தெரியும். அவள் அப்பாவுக்கு, அம்மாவுக்கு அண்ணனுக்கு, தங்கைக்குத் தெரியாது. உயிர்த் தோழிக்குக் கூடத் தெரியாது.

அரசு அதிகாரி ஒருவர்-இரண்டு குமாஸ்தாக்கள்- ஒரு ப்யூன்- ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் ஒருவர்- அவளுக்கு மோதிரம் போட்ட சாரங்கன் என்று சிலருக்கே தெரியும்.

*''நால்திசை தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி,*
*பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாரெடுத் தேத்தி*
*பூப்புனை கண்ணிப் புனிதனோடு என்றென்னை*
*காப்புநாண் கட்டக் கனாக் கண்டேன் தோழீ நான்*
*இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்.*
*நம்மை உடையவன் நாரணன் நம்பி*



*செம்மை உடைத் திருக்கையால் தாள்பற்றி*
*அம்மி மிதிக்க கனாக் கண்டேன் தோழீ நான்...''*

கனவுதான். ஆண்டாளை, அதெல்லாம் கூடாது என்று யாரும் தடுக்கவில்லை. விஜயலட்சுமியைத் தடுத்தார்கள். ஆண்டாளுக்கு, வருவான் நாரணன் நம்பி என்கிற நம்பிக்கை இருந்தது. பலிதமும் ஆயிற்று. விஜயலட்சுமிக்கு வந்த பின்பும் நம்பிக்கையில்லை. காபந்துக்கு ரெஜிஸ்டர் மேரேஜ் செய்து கொண்ட பிறகும் பயம் குறையவில்லை. கவலை தீரவில்லை.

காதலிக்கிற வரை காமம் பெரிய விஷயமாய் இல்லை. கல்யாணம் என்று ஆனபிறகு உடம்பு வேதனைப் பட்டது. மனது அலை பாய்ந்தது. நெஞ்சுக்கூட்டில் சூடு பரவி, விம்மி விம்மித் தணிந்தது. 'சாரங்கன்... சாரங்கன்' என்று மனசு அழுதது.

*'என்பு உருகின, வேல்நெடுங்கண்களிமை*
*பொருந்தா பலநாளும்*
*துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர்*
*தோணி பெறாது உழல்கிறேன்...*
*அன்பு டையாரை பிரிவுறு நோயது*
*நீயுமறிதி குயிலே...*
*பொன்புரை மேனிக் கருடக் கொடியுடைப்*
*புண்ணியனை வரக் கூவுவாய்''*

பிரிவு நோய்தான் மன நோய். மனம் உடலை ஆட்சி செய்யும் விஷயம். மனம் நோய்ப்பட்டால் உடம்பும் உருகும். உடம்பும் மனசும் உருகி நின்ற பெண்ணை சிறு விஷயமும் உடைக்கும். ஒருநாள், கோபித்துக் கொண்டா லும் ஐயோ என்று அழும். பிரிவால்தானே இந்தப் பிணக்கு. வா, வந்து என்னை இறுக்கித் தழுவு. இதம் சொல் என்று கெஞ்சும்.

சிற்றின்பத்தை நாம் கண்டிக்கக் காரணம், அது மிருகத்தனமானது என்கிற காரணத்தால்...

மனிதன் உடலால் ஆனவன். மனசால் வாழ்பவன். இவை இரண்டும் பிரிக்க முடியாதவை. புறக்கணிக்க முடியாதவை.

புறக்கணிக்க, பிரிக்க...

விபரீதம் நிகழும் அது...

## 15

**வி**ஜயலட்சுமியின் வீடு வசதியானது. வாசலில் பாரிஜாத மரமும், இரண்டு கார்களும் நிற்கும் பங்களா.

அப்பாவுக்குத் தேக்குமர வியாபாரம். நவீன ப்ளைவுட்... மைக்கா ஷீட் வருஷாந்தர 'டேர்ன் ஓவர்' ஒண்ணரைக் கோடி சுலபமாய் நடக்கும். முப்பது சதவிகிதம் நிகர லாபம் கிடைக்கும்.

விஜயலட்சுமி அழகி, கெட்டிக்காரி. அவள் சிரித்தால் வீடு சந்தோஷப்படும். அவள் அழ, கலங்கும். அவள் பிறந்த பிறகே வீட்டில் லட்சுமி வாசம் என்பதாக ஒரு யூகம். வீணை, வாய்ப்பாட்டு என்று நல்ல கலைகள் சொல்லித் தரப்பட்டன.

*'பாடசாலை போக வேண்டும்*
*பாப்பா எழுந்திரு*
*செல்லப் பாப்பா எழுந்திரு'*

-ஒரு சிறந்த இசைக்குழுவில் சுருள் முடியோடு விஜயலட்சுமி பாடினாள். முதல் வரிசைப் பெண்ணாய் நின்றாள்.

இசைக்குழுவில் சாரங்கன் கடைசி வரிசை.

'நல்ல காலம் வருகுது. நல்ல காலம் வருகுது'- பாரதியின் வசன கவிதையை இசைக்கு பாட்டா மாற்றியிருந்தது. குரல்



கோர்த்து மடக்கிப் பிரித்து, பாட்டுக்குக் கனம் ஏற்றி இசைக் குழு வித்தை காட்டும். கடும் பயிற்சி இதற்கு முக்கியம். எல்லா ஞாயிறும் காலை பத்திலிருந்து மாலை நான்குவரை இருபத்து மூன்று இளைஞர்களும் யுவதிகளும் ஒரு பள்ளி ஹாலில் கூடி சுருதி சேர்த்துப் பயிற்சி செய்வார்கள். பிற்பகல் ஒன்றிலிருந்து இரண்டு வரை ஓய்வெடுப்பார்கள் உணவு கொள்வார்கள்.

சாரங்கனுக்கு பாங்க் உத்தியோகம். எட்டிலிருந்து இரண்டு வரை வங்கி. பிறகு வீதியில் நின்று அரட்டை அடிக்காமல், உண்டுவிட்டு உருண்டு புரளாது, ஏதேனும் செய்து நிற்க உயர ஆசைப்பட்டான். பாட்டு, கதை, பேட்டி, ஓவியம் என்று நாலா பக்கமும் பரவினான். எப்போதும் துடிப்பாக இருந்தான்.

சாரங்கனுக்கு மேன்ஷன் வாசம். மெஸ்ஸில் சாப்பாடு. சாரங்கன் ரூம்மேட் மணிவாசகமும் வங்கி ஆள். ஆனால் திருமணமானவன். ''பசங்க மதுரைல படிக்குது. அதும் தவிர வீட்ல அவங்களுக்கு மெட்ராஸ் புடிக்கலை. ரெண்டு பெத்தாச்சு. நாலு வருஷம் பெரிய ஸிடில போடுவான். நார்த்துக்கு அனுப்புவான். போற இடமெல்லாம் கூட்டிக்கிட்டுப் போக முடியுமா? வாரம் ஒரு தபா போய்ட்டு வரேன். அவளுக்கும் நிம்மதி எனக்கும் சுவாரஸ்யமா இருக்குது.''

இருபத்தோரு அறைகள் கொண்ட மேன்ஷனில் சாரங்கன் செல்லப்பிள்ளை. காரணம்... பாட்டு. கேட்ட போது அவன் தரும் வட்டி இல்லாத கடன்.

'மணிவாசகம் அப்பா கவலைக்கிடம்' என்ற தந்தி வந்தது. போன் தொடர்புகொள்ள மறைவு தெரிந்தது. அப்பாவின் மறைவை மணிவாசகத்துக்குச் சொல்லாமல் நண்பர்கள் அவனை விமானமேற்றினார்கள். ஏர் போர்ட் வாசலில் கவரில் நாலாயிரம் ரூபாய் போட்டு மணிவாசகத்திடம்

சிற்றின்பத்தை நாம் கண்டிக்கக் காரணம், அது மிருகத் தனமானது என்கிற காரணத்தால்...

மனிதன் உடலால் ஆனவன். மனசால் வாழ்பவன். இவை இரண்டும் பிரிக்க முடியாதவை. புறக்கணிக்க முடியாதவை.

புறக்கணிக்க, பிரிக்க...

விபரீதம் நிகழும் அது...

## 15

**வி**ஜயலட்சுமியின் வீடு வசதியானது. வாசலில் பாரிஜாத மரமும், இரண்டு கார்களும் நிற்கும் பங்களா.

அப்பாவுக்குத் தேக்குமர வியாபாரம். நவீன ப்ளைவுட்... மைக்கா ஷீட் வருஷாந்தர 'டேர்ன் ஓவர்' ஓண்ணரைக் கோடி சுலபமாய் நடக்கும். முப்பது சதவிகிதம் நிகர லாபம் கிடைக்கும்.

விஜயலட்சுமி அழகி, கெட்டிக்காரி. அவள் சிரித்தால் வீடு சந்தோஷப்படும். அவள் அழ, கலங்கும். அவள் பிறந்த பிறகே வீட்டில் லட்சுமி வாசம் என்பதாக ஒரு யூகம். வீணை, வாய்ப்பாட்டு என்று நல்ல கலைகள் சொல்லித் தரப்பட்டன.

'பாடசாலை போக வேண்டும்
பாப்பா எழுந்திரு
செல்லப் பாப்பா எழுந்திரு'

-ஒரு சிறந்த இசைக்குழுவில் சுருள் முடியோடு விஜயலட்சுமி பாடினாள். முதல் வரிசைப் பெண்ணாய் நின்றாள்.

இசைக்குழுவில் சாரங்கன் கடைசி வரிசை.

'நல்ல காலம் வருகுது. நல்ல காலம் வருகுது'- பாரதியின் வசன கவிதையை இசைக்கு பாட்டா மாற்றியிருந்தது. குரல்



கோர்த்து மடக்கிப் பிரித்து, பாட்டுக்குக் கனம் ஏற்றி இசைக் குழு வித்தை காட்டும். கடும் பயிற்சி இதற்கு முக்கியம். எல்லா ஞாயிறும் காலை பத்திலிருந்து மாலை நான்குவரை இருபத்து மூன்று இளைஞர்களும் யுவதிகளும் ஒரு பள்ளி ஹாலில் கூடி சுருதி சேர்த்துப் பயிற்சி செய்வார்கள். பிற்பகல் ஒன்றிலிருந்து இரண்டு வரை ஓய்வெடுப்பார்கள் உணவு கொள்வார்கள்.

சாரங்கனுக்கு பாங்க் உத்தியோகம். எட்டிலிருந்து இரண்டு வரை வங்கி. பிறகு வீதியில் நின்று அரட்டை அடிக்காமல், உண்டுவிட்டு உருண்டு புரளாது, ஏதேனும் செய்து நிற்க உயர ஆசைப்பட்டான். பாட்டு, கதை, பேட்டி, ஓவியம் என்று நாலா பக்கமும் பரவினான். எப்போதும் துடிப்பாக இருந்தான்.

சாரங்கனுக்கு மேன்ஷன் வாசம். மெஸ்ஸில் சாப்பாடு. சாரங்கன் ரூம்மேட் மணிவாசகமும் வங்கி ஆள். ஆனால் திருமணமானவன். ''பசங்க மதுரைல படிக்குது. அதும் தவிர வீட்ல அவங்களுக்கு மெட்ராஸ் புடிக்கலை. ரெண்டு பெத்தாச்சு. நாலு வருஷம் பெரிய ஸிடில போடுவான். நார்த் துக்கு அனுப்புவான். போற இடமெல்லாம் கூட்டிக்கிட்டுப் போக முடியுமா? வாரம் ஒரு தபா போய்ட்டு வரேன். அவளுக்கும் நிம்மதி எனக்கும் சுவாரஸ்யமா இருக்குது.''

இருபத்தோரு அறைகள் கொண்ட மேன்ஷனில் சாரங்கன் செல்லப்பிள்ளை. காரணம்... பாட்டு. கேட்ட போது அவன் தரும் வட்டி இல்லாத கடன்.

'மணிவாசகம் அப்பா கவலைக்கிடம்' என்ற தந்தி வந்தது. போன் தொடர்புகொள்ள மறைவு தெரிந்தது. அப்பாவின் மறைவை மணிவாசகத்துக்குச் சொல்லாமல் நண்பர்கள் அவனை விமானமேற்றினார்கள். ஏர் போர்ட் வாசலில் கவரில் நாலாயிரம் ரூபாய் போட்டு மணிவாசகத்திடம்

தந்தான், சாரங்கன். "அவசரமின்னு போற... தேவைப்படு மில்லே?"

"டேய், போன்ல எதுனா தப்பா சொன்னாங்களா?" ... மணிவாசகம் கலங்கினான்.

"ச்சீ... சும்மா ஒரு ஜாக்கிரதைக்குடா. டாக்டர் ஆஸ்பத்திரிச் செலவு இருக்குமில்லே."

ஏர்போர்ட்டிலிருந்தே அவன் வருகையை போனில் மதுரைக்குச் சொன்னார்கள். விஷயம் மறைத்து அனுப்பி யதை விவரித்தார்கள்.

நாலாயிரம் ஒரே நாளில் செலவாயிற்று. பூவிலிருந்து காடு வரைக்கும் காசு எடுத்துக் கொடுத்த போது சாரங்கன் நினைவு வந்தது. கையெழுத்தா சாட்சியா... காதும் காதும் வைத்தாற் போல், தந்தானே இந்த அன்புவருமா? கொடுத்த விதமும், மறைத்த பக்குவமும் சிநேகத்தை வளர்த்தன.

உதவி செய்தல்தான் உறவின் துவக்கம். அங்கே உண்மையிருப்பின் பலப்படும்.

ஒரு மாதம் பொறுத்து வந்த மணிவாசகம் அதிரசமும் முறுக்கும் தன் மனைவி பரிசாக சாரங்கனுக்குக் கொடுத் தான். அன்புடன் செய்த பண்டமல்லவா... வாஞ்சையில் தோய்த்த பரிசல்லவா...? சுவைத்தது.

ஞாயிறு ஷாம்பூ போட்டுக் குளித்துவிட்டு இசைக் குழுவுக்குப் போய் சாரங்கன் பயிற்சி துவங்க, விஜயலட்சுமி சிறிது தாமதமாக வந்தாள். இசைக்குழு மாஸ்டர் சுள்ளென்று கோபிக்க முகம் வாடி பாட்டில் கலந்து கொண்டாள். அழகிய முகமல்லவா, வாடல் அதிகமாகவே தெரிந்தது.

இடைவேளையில் 'ப்ரட் -சான்ட்விச்' கடித்தபடி தனியே இருந்த பெண்ணைக் கவனித்தான். பேச பயந்தான். நண்பர் களுக்கு நடுவே சும்மா ஒரு சினிமாப் பாட்டுப் பாடினான்.



'உன் மலர்க்கூந்தல் அலைபாய
அவர் என்ன சொன்னார்...
உன் வளை கொஞ்சம் கரம் மீது
பரிசென்ன தந்தார்...'

அவள் திரும்பினாள். புருவம் உயர்த்தினாள். "நல்லா பாடறீங்களே."

"பழைய பாட்டு பழைய பாட்டுத்தான் இல்லே" சமீபமா கேட்டேன்."

'என்ன செய்தாலும் எந்தன்
துணை நீயே
என் அன்னையே உமையே
என்னை... நீ...'

முழுவதும் அவள் பாடினாள்.

"யப்பா, என்ன குரல் மேடம் உங்களுக்கு" அவன் பாராட்ட, நாணினாள்.

"எங்க இருக்கீங்க சாரங்கன்?"

"திருவல்லிக்கேணி மேன்ஷன். நீங்க?"

"அடையார்...நீங்க பாட்டு கத்துக்கிட்டீங்களா?"

"இல்லை, கேள்வி ஞானம்தான். கத்துக்கணும்."

"திருவல்லிக்கேணில எனக்குத் தெரிஞ்சுவங்க உண்டு. கத்துக்கறீங்களா?"

"இல்லை மேடம், வேற வேலைகள் ஒப்புக்கிட்டு இருக்கேன்."

"என்ன வேலை, பார்ட் டயமா?"

"பார்ட் டயமில்லை. வாரப் பத்திரிகைக்கு எழுதறேன். பேட்டி, கட்டுரை..."

"எதுல?" -குரலில் வியப்பு இருந்தது.

பெயர் சொன்னான்.

''போன வாரம்கூட டைரக்டர் பாலசந்தரோட...''

''நான்தான்''

''அடேயப்பா... நீங்களா அது. வேற என்னவோ கூடப் படிச்சேன்.''

''அதெல்லாம் படிப்பீங்களா?''

''இதென்ன கேள்வி...''

''உங்களுக்குத் தமிழ் தெரியாதுன்னு நினைச்சேன்.''

''ஏன்?''

''என்னவோ உங்களைப் பார்த்தா அப்படித் தோணும்.''

''கமான்... கேலி பண்ணாதீங்க. கொஞ்சம் இங்கிலீஷ் பேசினா தமிழ் தெரியாதுன்னுடுவீங்களா?''

''நீங்க எந்த காலேஜ்?''

பெயர் சொன்னாள். எம். ஏ. ஆங்கில இலக்கியம் என்று விவரம் சொன்னாள். இன்னொரு பாட்டுப் பாடச் சொன்னாள்.

*''தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு*
*சூழ்கலை வாணர்களும்-இவள்*
*என்று பிறந்தவ ளென்றுண ராத*
*இயல்பின ளாமெங்கள்தாய்''*

அவளுக்குத் தமிழ் தெரியத்தான் இல்லை. நிகழ்ந்தது அனைத்தும் என்று பிரித்துச் சொல்லிக் கொடுத்தான். 'என்று உணராத இயல்பினள்' அர்த்தம் சொன்னான்.

''நல்லாருக்கு... கவிதை யாருது?''-கேட்டாள்.

''விளையாட நீங்களா மேடம்?''

''இல்லையே.''

''பாரதியார்.''



''ஓ''

''என்ன ஓ...''

''சிலது படிச்சிருக்கேன். டென்த்ல ப்ளஸ்டுல பொயட்ரி வந்தது.''

''கொடுமையடா.''

''ஏங்க சாரங்கன்?''

''பாரதியார் தெரியாத தமிழ்ப் பெண்ணா... வளர்ந்து...''

''அப்பவே 'மக்கப்' பண்ணி பரீட்சை எழுதினேன். இவரு கவிதை கஷ்டமா இருக்கு.''

''உங்க சங்காத்தமே வேணாம்''-கை கூப்பினான். காயம்பட்டவளாய் நகர்ந்தாள்.

'அதிகம் அலட்டிக் கொண்டு விட்டோமோ'-அவன் கவலைப்பட்டான்.

''ச்சே... பாரதியார் கூடத் தெரியவில்லை... எவ்வளவு பெரிய அறிவிலி நான்'' -அவள் வேதனைப்பட்டாள்.

மறுபடி பயிற்சி துவங்க, மாஸ்டர் பாட்டு நிறுத்தினார்.

''விஜயலட்சுமி என்ன பாடற?''

''சேர்வது நாடி வருபவரைத் தொழ.''

''சேர்வது இல்லை, செருவது... செருவது நாடி... தப்புத் தப்பா பாடாதீங்க. புரிஞ்சுக்கிட்டுப் பாடுங்க... தமிழே தகராறுன்னா பஞ்சாபி, மராத்தி பாட்டெல்லாம் கொலை தான் செய்வீங்க.''

அவள் கண நேரம் அவனைப் பார்த்தாள்.

''சாரங்கா... உன் கோபம் சரி...'' என்று அந்தப் பார்வை பேசியது.

'செருவது நாடின்னா... என்ன?' யோசித்தாள்.

அவளுக்கு கார் வந்தது... அவள் பின் ஸீட்டில் உட்கார்ந்து சரிந்து சிரித்த விதம் அசத்தியது.

மேகம் நிலாவைத் தூக்கிக் கொண்டது போல அவள் காரோடு மறைந்தாள்.

## 16

மறுநாள் காலை காலேஜ் வாசலில் அவன் 'பாரதியார் கவிதைகள்' கொடுத்தான். ஸ்கூட்டரில் மறைந்தான். உள்ளே...

'அன்பினிய தோழி விஜயலட்சுமிக்கு...' -கீழே கையெழுத்திடாமல் எழுதப்பட்டிருந்தது.

"ஏன் கையெழுத்துப் போடவில்லை?"-கேட்டாள்.

அவன் சொன்ன விளக்கம்...

"யாருடி அது?" -தோழிகள் கேட்டார்கள்.

"இசைக் குழுவில கூட பாடறவர். என்னோட புக் ரிடர்ன் பண்ணாரு..." சாதாரணமாய் பொய் சொன்னாள்.

"டக்கரா ஒரு பையன் காலேஜ் வாசலுக்கு வந்து புக் கொடுத்துட்டுப் போறான். லவ்வோன்னு நினைச்சேன்."

"உனக்கு அலையற புத்தி. அதான் எல்லோரையும் மட்டமா எடை போடற. எங்க இசைக்குழுவில் எல்லோரும் நல்லாப் பேசுவோம் வழியறதில்லை. புரியுதா."-கம்பீரமாய் சொன்னாள். பலர் முகம் சுருங்கியது.

அதே கம்பீரமாய் வகுப்புக்குள் போக... பளிச் சென்று புரிபட்டது. இப்படிச் சந்தேகப்பட்டு யாராவது புத்தகம் பிரித்துப் பார்த்தாலும் சங்கடம் வரக்கூடாது என்று எதிர்பார்த்தே, தன் பெயர் எழுதாமல் விட்டிருக்கிறான்.



சாரங்கனை அந்த க்ஷணம் விஜயலட்சுமிக்கு மிகவும் பிடித்து விட்டது.

பெண்ணுக்கு இங்கே சந்தேக முட்புதர்களும், சங்கடப் பள்ளங்களும், அவதூறு சேறும் அதிகம். காதல் என்கிற பெயரில் வேதனை தருபவனைப் பெண் விரும்புவதில்லை. நாலு பேருக்கு முன் எள்ளி நகையாடும் விதமாய் பேசுபவனை அவள் நேசிப்பதில்லை. ஊர் உலகம் இழித்துப் பழி தூற்றிவிடும் ஆணை மறந்தும் நேசிப்பதில்லை.

மாறாய் அதனின்றும் காபந்து செய்பவனை அதிகம் அலட்டாதவனை, அனுசரணையாய் இருப்பவனை அதிகம் நேசிக்கிறாள்.

'அவனுக்கு ஏதாவது பரிசளிக்க வேண்டுமே...'- மனசு பரபரத்தது. சட்டென்று பரிசளிப்பில் ஒரு சந்தோஷமும், அதே சமயம் அதைச் செம்மையாய்ச் செய்த கெட்டிக் காரத்தனத்தைப் பாராட்ட வேண்டுமே என்கிற ஆவலும் மிகுந்தது. கல்லூரி வங்கியில் ஆயிரம் ரூபாய் எடுத்தாள். தொள்ளாயிரம் ரூபாய்க்கு வாட்ச் வாங்கினாள். நூறு ரூபாய்க்கு சாக்லெட் பெட்டி வாங்கினாள். மெல்ல சீல் பிரித்து உள்ளே வாட்ச் வைத்து சீல் ஒட்டி, ஞாயிறு, எடுத்துப் போனாள்.

இடைவேளையின் போது... "புத்தகத்துக்கு நன்றி. என் பரிசு இது..."-நீட்டினாள்.

மடையன். உடனே பிரித்து "எல்லோரும் வாங்க" என்று கத்தினான். ஆளுக்கு இரண்டு மூன்று என்று எடுத்தார்கள். அவள் தவித்தாள்... நகம் கடித்தாள்.

"எனக்கு இரண்டு கொடுங்க... " அவன் சட்டைக் கையை இழுத்துத் திருப்பி இரண்டு சாக்லெட் எடுத்த அடிக்குரலில் "முட்டைகோஸு, முட்டைகோஸு..." என்று திட்டினாள். அவன் விழித்தான். அவள் எடுத்த சாக்லெட்டுக்கு அடியில் கைக்கடிகாரம் தேதி தெரிந்தது. டப்பாவை

உறையில் போட்டான். கேட்டவர்களுக்குக் கவனமாய் எடுத்துக் கொடுத்தான்.

'நல்ல காலம் வருகுது
நல்ல காலம் வருகுது...'

-பாரதியின்

''குடுகுடுப்பைக்காரன் பயிற்சி செய்தார்கள்.

''கார் வரலையா?''

''வராது.''

''ஏன்?''

''வேணாம்னுட்டேன்.''

''ஏன்?''

''பஸ்ல போகணும்னு ரொம்ப நாள் ஆசை.''

''ஓ...''

''பஸ் ஸ்டாண்ட் எங்கே?''

'போய் இடது பக்கம் திரும்பி, வலது பக்கம் நடந்தா...'' -வழி சொன்னான்.

''நான் கூட வரேன்.'' -வண்டி நகர்த்தி கூட வந்தான்.

''முட்டை கோஸுன்னு திட்டினீங்களே... முட்டை கோஸுன்னா என்ன?''

''முட்டை கோஸுங்கறது பூப்பதற்கு முன் பருவம்... ஆனா, அதை மலரவே விடுவதில்லை...''

''அப்படியா.''

''என்ன அப்படியா?''

''இல்லை... நான் எப்படி கோஸுன்னு...''

''செடில விட்டா மலரும். மலர விடமாட்டாங்க. மொட்டா பறிச்சு மார்க்கெட்ல போட்டுருவாங்க. சில



ஜென்மங்கள் அந்த மாதிரி மொட்டா சந்தைக்கு வந்துடும். எல்லோரும் வாங்க' ன்னு கத்தி மிதிபடும்.''

''அத்தினி சாக்லெட்டும் நான் மட்டும் எப்படிச் சாப்பிடறது?''

''அதானே... தினம் ஒண்ணு தின்னா கசக்குமில்லை சாக்லெட்?''

''உள்ளே வாட்ச் இருக்குன்னு எனக்கு எப்படித் தெரியும்?''

''நானும் புதுசா பரிசு தரலாம்னு நினைச்சேன்.''

''நானும்னா...''

''நீங்க பேர் எழுதாம பாரதி புத்தகம் கொடுத்த மாதிரி.''

''பேர் எழுதணும்னுதான் முதல்ல தோணிச்சு. ஆனா...''

''ஆனா?''

''யாராவது பார்த்துட்டா நீங்க கேலிக்கு ஆளாக வேண்டியிருக்குமேனுதான்... அப்படிப் பேர் எழுதாம...''

அந்த அனுசரணையான பதில் அவளுக்குப் பிடித்திருந்தது.

''அட அது அடையார்-பிராட்வே பஸ்தானே.''

''ஆமாம்...''

வரேன்... ஓடிப்போய் ஏறினாள்.

அவன் விழித்தான், பஸ் கிளம்பியது. ''ஏங்க...'' சாரங்கன் கத்தினான். ஸ்கூட்டர் உதைத்துப் பின் தொடர்ந்தான்.

கண்டக்டர் கேட்டார்.

''எங்கம்மா போகணும்?''

''ஒரு அடையார்.''

''என்ன?''

''அடையார்.''

''எங்கே ஏறினே?''

''பஸ் ஸ்டாண்ட்ல...''

''பஸ்ஸு ஸ்டாண்ட்லதான் நிக்கும், ஏர் போர்ட்லியா நிக்கும். இந்த பஸ்ஸுக்கு இன்னும் இறக்கை போடலம்மா.''

''என்ன சொல்றீங்க?''

''இது பிராட்வே போற பஸ்.''

''அடையாறுனு பஸ்ல எழுதியிருந்ததே?''

''பஸ்ஸுல ஆயிரம் எழுதியிருக்கும். ஆண்கள், பெண்கள் எல்லாம் எழுதியிருக்கும். உடனே, 'ஆண்களுக்கு ஒரு டிக்கெட்'னு கேப்பியா? இவங்களெல்லாம் படிச்சவங்க... கஷ்டம்டா சாமி'' -பஸ் சிரிப்புடன் குலுங்கியது.

''அம்மாடி... இது அடையாறுலேருந்து பிராட்வே போற பஸ்ஸு.''

''ஓ...''

''அப்பாடா... அம்மா பூமிக்கு வந்துட்டாங்க... இறங்குங்க.''

''அடையார் பஸ் எங்கே வரும்?''

''எதிர்ப்பக்கம் பஸ்ஸு ஏறினதே இல்லையா?''

இறங்கினாள்.

அவன், காலடியில் ஸ்கூட்டர் நிறுத்தினான்.

''என்னங்க, தப்பு பஸ்ல ஏறிட்டீங்க.'' அவசரமாய் சொன்னான்.

அவள் வாய்விட்டு நடுத்தெருவில் சங்கீதம் போல் சிரித்தாள். 'உடனே ஆண்களுக்கு ஒரு டிக்கெட்னு கேப்பியா...' மறுபடி சிரித்தாள்.

''என்னங்க... சிரிச்சீங்க?''

கண்டக்டர் சொன்னதை அவனிடம் சொன்னாள்.

அதைக் கேட்ட அவனும் சிரித்தான்.



''என்னை அடையாறுல ட்ராப் பண்ணுவீங்களா?''

''நானே கேட்கணும்னு நினைச்சேன்...''

''ஏன் கேட்கலை...''

''முட்டை கோஸ்? திட்டுவீங்களோன்னு.''

''முட்டைகோஸ்? கிக் யுவர் வெஹிகிள்...

வண்டி அவளோடு அடையாறு திரும்பியது. வழியெல்லாம் சிரித்தாள். வீடு வந்தது சிரித்தாள். காலேஜில் சிரித்தாள். மறுபடி சாரங்கனிடம் சொல்லிச் சொல்லிச் சிரித்தாள்.

''மச்சி...பொண்ணு உன்னை டாவடிக்குது. கோயான் மாதிரி பேசிட்டு வரியே. மூவ் பண்ணுடா...'' -மணிவாசகம் மொத்தமும் கேட்டுவிட்டு வியந்தான்.

''பெரிய இடத்துப் பொண்ணு மணி.''

''ஏன்? எனக்கென்ன குறைச்சல்?''

''லவ் யூ''ன்னு சொல்லவேயில்லையே...''

''தொள்ளாயிர ரூபா வாட்சு கொடுத்திருக்கு. இதைவிட என்னடா வேணும்?''

''இதுக்கு ஈக்வலா நான் ஏதாவது கொடுக்கணும் மணிவாசகம்.''

''வா, கடைக்குப் போகலாம்.''

-போனார்கள். எதுவும் புரியாமல் திரும்பினார்கள்.

*''கடிகாரம் கையிறுக்கும்*
*நிமிட முள் நெஞ்சு குத்தும்-இரவில்*
*தேதி புரண்டு புறம் காட்டும்*
*வட்ட டயல்*
*முட்டை கோஸ்*
*என முணுமுணுக்கும்*
*கனம் தாங்காது கழற்றி*
*பையிலே வைத்துக் கொள்ள*

வெறுங்கை உன்னை
நினைவுபடுத்தும்
பரிசென்பது-இருந்தாலும் வதை
இல்லாதிருப்பினும் வதை
இந்த முட்டை கோஸைச் சிறிதுநாள்
செடியில் விடு... மலரட்டும்...
நீர் விடு வளரட்டும்...
எவரும் நறுக்கி...நாறாது
பூவாகும் ஒருநாள்
முழுசாய்
உனக்காக''

''இதைவிடப் பெரிய பரிசு எதுவுமில்லை சாரங்கா. இதைக்கொடு... போதும்...''

''பயமாயிருக்குடா.''

''பத்திரிகைல போடு.''

''அவள் கொடுத்த கடிகாரம் என்று வாரப் பத்திரிகையில் கவிதை வந்தது.

படித்துவிட்டு வங்கிக்கு போன் செய்தாள். 'உடனே பார்க்கவேண்டும்.' என்றாள்.

''எனக்குத் தமிழ் அவ்வளோ நல்லாத் தெரியாது... உண்மைதான். ஆனா, இந்தக் கவிதை என்னன்னு தெரியுது. இதை ஏன் நேர சொல்லலை...?''

''வெறும் ஆசை தானே ஒழிய...''

''அவ்வளவோ சீரியஸா லவ் பண்ணலைன்னு சொல்றீங் களா?''

''இல்லையில்லை. ஒரு பயம்.''

''என்ன பயம்? கார்ல வந்து இறங்கறாளேன்னா? காரையா கல்யாணம் செய்துக்க முடியும். அசடோ- கெட்டியோ, ஏழையோ- பணக்காரனோ எல்லோருக்கும் நல்ல புருஷன் வேணும்னு ஆசை உண்டு.''



''எனக்கு இரண்டாயிரத்து நானூத்தி நாப்பது சம்பளம். இது போதாது.''

''நான் போதும்னு சொல்லிட்டா.''

''நான் எமோஷனலா டிஸைட் பண்றவனில்லை. 'கிக்' குல பேசமாட்டேன்.

''எப்ப டிசைட் பண்ணிப் பேசுவீங்க?''

''ஆறு மாசம் ஆகும்.''

''ஆகட்டும்.''

வருஷமாயிற்று. அவன் தெளிவும் அமைதியும் அவளைக் கவர்ந்தன.

''நானாயிருந்தா இந்நேரம் முடிச்சுருப்பேம்மா...'' -மேன்ஷன் நண்பர்கள் கூறினார்கள். அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

அவளுக்குத் திருமணம் 'பெண் பார்க்க வருகிறார்கள். பிடித்திருந்தால் முடித்துவிடுவார்கள்' -என்று சொன்ன போது-மெள்ள அழுத போது, முதன் முறையாய் அவள் முதுகு தொட்டான்.

''அடுத்தவாரம் நமக்குக் கல்யாணம்.''

''கல்யாணமா? அடுத்த வாரமா? என்ன மாதிரி கல்யாணம்?''

-கேட்டாள்.

அவன் பதில் சொன்னான்.

# 17

"என்ன மாதிரி கல்யாணம்?" என்று விஜயலட்சுமி கேட்ட கேள்விக்கு சாரங்கன் சொல்ல ஆரம்பித்தான்.

"இது புது மாதிரியான கல்யாணம், ஒரு சிறிய அறை. அதில் முப்பத்து முக்கோடி தேவர்களும் நெருக்கடித்து நிற்பார்கள். பிரம்மா பெரிய ரெஜிஸ்டர் பிரித்து வைப்பார். விஷ்ணு நமது பெயரைக் கேட்டு எழுதுவார். சிவபெருமான் உன்னையும் என்னையும் 'இந்தத் திருமணத்துக்கு மனப்பூர்வமாய் சம்மதமா?' என்று கேட்பார். சம்மதமென்றதும் பிரம்மாவின் பேனாவால் நாம் கையெழுத்திட வேண்டும். தேவர்கள் மலர்மாரி பொழிவார்கள். சரஸ்வதி வீணை மீட்ட. நந்தி மிருதங்கம் வாசிக்க, லட்சுமி பானகம் பரிமாற, முனிவர்கள் வேதம் சொல்ல, கந்தர்வர்கள் கானம் பாட, இந்திர சபை நடனமாதர் நடனமாடி முன்னே போக, சபையைவிட்டு வெளியே வருவோம். பூமியை நமஸ்கரிப்போம். கடற்கரைக்குப் போவோம், எதிரே சூரியன் சுற்றிலும் காற்று மேலே வானவெளி, காலின் கீழ் மண்சுற்றி ஆரத்தி எடுக்கும் நீர்."

விஜயலட்சுமி அவன் கவிதைப் பேச்சில் கிறங்கிப் போனாள். ரெஜிஸ்டரார் ஆபீஸில் கையெழுத்துப் போட்டாள். அங்கே இருந்த நாற்காலி, மேஜை, காகிதம், ஒட்டடை, மனிதர்களாய் நின்ற அத்தனை தேவர்களையும் வணங்கினாள். வங்காள விரிகுடாக்கடலில் அவனோடு பின்னிக் கொண்டு நின்றாள். குளிரக் குளிர நின்றாள். திரும்பக் கரையேறும் போது ஒரு அலை மூர்க்கமாய் அவர்களைத் தாக்கிப் பிரித்துப் போட்டது. அவள் கீழே விழுந்தாள். அவன் தடுமாறினான். வாரி எடுத்துக் கரை சேர்த்தான்.



திருமணம் என்கிற விஷயம் புனிதம் என்கிற வார்த்தையோடு எப்படித் தொடர்பாயிற்று? சடங்கு புனிதமா? சந்தித்தது புனிதமா? சம்மதம் புனிதமா? யோசித்துப் பார்க்கையில் சந்தித்து, சம்மதமாகி, சம்மதத்தைச் சடங்காக்கியதே திருமணம், சந்தித்ததும் சடங்கும் செயல்கள். சம்மதம் என்பது எண்ணம்- ஓர் உணர்வு. சம்மதம் எதற்கு? எதன் பொருட்டு? வாழ்வதற்கு திருமணச் சம்மதம் என்பது ஆணும் பெண்ணும் ஒரு கூரைக்குக் கீழ் உணர்வுகளைப் பரிமாறி வாழ்வது. எந்த உணர்வுகளை? காதல், காமம், தாபம், சோகம், மகிழ்வு, நல்லது கெட்டது எல்லா உணர்வுகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறி வாழ்வது.

சந்தித்த பிறகே சம்மதம்... சம்மதம் பொருட்டே சடங்கு, இவர்கள் மனம் திருமணம் செய்ய, உணர்வுகளைப் பரிமாறச் சம்மதப்பட்டுவிட்டது என்பதை ஊருக்கு அறிவிக்கும் விஷயம் திருமணம்.

சரி. 'இதை ரகசியமாய் வைத்துக் கொள்' என்று எவரும் சொன்னால், எப்படித் தாங்கமுடியும்? எதை ரகசியமாய் வைத்துக்கொள்வது? சடங்கையா, சம்மதித்தையா, உணர்வுகளையா? பிறந்த நாளை ரகசியமாய் வைத்துக் கொள்ளலாம். தானே தனக்குள் கொண்டாடி கோயிலுக்குப் போய் கண்மூடித் தியானித்து விட்டு வரலாம். மூத்தோர் கிரியைகளை, திதி காரியங்களை அடுத்த வீட்டுக்குக்கூட அழைப்பில்லாது நம் வீட்டு விஷயம் என்று செய்யலாம். திருமணத்தைச் செய்து கொண்டு நெஞ்சுக்குள் பூட்டி வைத்துக்கொள் என்றால் எப்படி, எவ்விதம்?

திருமணம் செய்து பத்தாவது நிமிடம் விஜி காலேஜுக்கும், சாரங்கன் ஆபீஸுக்கும் போவது என்ன வேதனை? எத்தனை பெரிய குழப்பம். சார்ந்திருக்கச் சம்மதம் தெரிவித்துவிட்டுப் பிரிந்து போக வேண்டும் உடனே எனில், எவ்வளவு கொடுமை.

''தாலி இல்லையே... என்ன பயம்?''

''மோதிரம் தானே போட்டேன்... ஏன் கவலை?''

''பேப்பர்ல இருக்கு. ஒரு ஜாக்கிரதைக்கு... பொறுத்து இரு.''

எப்படி இயலும்? பொங்கிப் பொங்கி வழியும் உணர்வு களை எந்த மூடியால் மூட?

''சொல்லத்தான் நினைக்கிறேன்
உள்ளத்தால் துடிக்கிறேன்
வாயிருந்தும் சொல்வதற்கு
வார்த்தையின்றி தவிக்கிறேன்.''

விஜயலட்சுமிக்கு வாயும் இல்லை. வார்த்தையும் இல்லை. வாய் தைக்கப்பட்டுவிட்டது. வார்த்தை உபயோகமில் லாமல் போயிற்று. வெளிறினாள். எப்போதும் கனவுக்கும் நினைவுக்கும் ஊசலாடினாள். கணநேரம் கனவிலும், கணநேரம் நினைவிலும் இருந்தாள். பேசிக்கொண்டே இருக்கும் போது உள்ளே போனாள். உள்ளேயிருந்தபடியே வெளியே ஏதோ பேசினாள்.

காதல் என்று பேசிக்கொண்டிருந்த வரை தெளிவாய் இருந்த பெண், கடிமணம் என்ற நிலையில் தவித்துத் தண்ணீ ராய்ப் படர்ந்தது. சிந்தனைகள் திசைகளற்றுப் பறந்தன. தண்ணீர்கூடப் பள்ளம் பார்த்துப் பரவும். அவள் நால் திசையும் பரவினாள்.

''என்னடி என்னமோ போல உட்கார்ந்துருக்கே. எங் களோட நீ சினிமாவுக்கு வரலையா?''

''வரேன்'' வரவில்லையெனில் கேள்வி வரும்.

சினிமா இன்று சோதனை செய்தது.

'கோயில் மணி ஓசைதன்னை
கேட்டதாரோ



இங்கு வந்ததாரோ
பாட்டுப் பாடும் கூட்டத்தாரோ...'

ஒற்றை வரி கொன்று போட்டது. பாட்டுக் கூட்டம் தானே அவன்.

'ஏழைக்குயில் கீதம்,
தரும் நாதம்'

ஏழைதானே அவள். அன்புக்கு ஏங்கும் ஏழை. அக் கறைக்கு ஏங்கும் ஜீவன். 'யப்பா... எல்லா வரியும் எனக்கே எழுதினா மாதிரி என்ன பாட்டு இது.'

விஜயலட்சுமி அழுதாள்.

'என்னடி இந்த சினிமாவுக்குப் போய் அழறே? ஹாப்பி எண்டிங்தானே?

அவள் அழுதது, 'தனக்கு ஹாப்பி எண்டிங் வருமா என்கிற கவலையில் எவரிடம் இதைச் சொல்ல?

சினிமா நெஞ்சைத் துளைத்தன.

கதைகள் கழுத்தை அறுத்தன.

கவிதை ஒரே அடியில் உயிர் பிரிந்தது.

காதல் பலவீனத்தை இவையனைத்தும் மேலும் பலவீனப்படுத்தின.

வெறுப்பில் பெண்ணுக்கு மனவலிவு மிகும். பொங்கும் காதலில் லேசாகும்... வேதனை வந்தால் ஆணுக்குத் தொய்வு வரும். சோதனையெனில் தாங்கும் வெறி எழும்? பிரிவில் பெண் பின்னமாவாள் ஆண் ஒன்றாவான். ஒரு முகப்படு வான்.

அது ஜெயிக்க அசுர பலம் வேண்டும். ஆழ்ந்து ஆழ்ந்து யோசிக்க வேண்டும். என்ன செய்கிறேன். என் நிலை என்ன என்று கேள்வியும் பதிலுமாய் இருக்க வேண்டும். கேட்டுக் கேட்டுத் தெளிய வேண்டும்.

தெளிவே திடம்.

விஜி திடமிழந்தாள். அவன் இரண்டாய் இங்கும் அங்குமாய் பலமாய்- பலவீனமாய் இருந்தான்.

'ஒரு மணி நேரம் பார்க்கலாம்' என்றார்கள். ஒரு மணி நேரம் பார்த்துக் கொண்டே யிருந்தார்கள். இரண்டு மணி நேரம் பேசினார்கள். பேசி மறுபடி ஒரு மணிநேரம் பார்த்தார்கள்.

வீடு திட்டியது.

'ஞாயிறு ஒரு நாள் மீட்டிங் போதும்' என்றார்கள். வாரம் நாலுநாள் சந்தித்தார்கள்.

அவசியமெனில் எப்பவாவது போனில் பேசலாம் என்றார்கள். தினம் அவசியம் என்று நினைத்தார்கள்.

வீடு விழித்துக் கொண்டது. 'யார் என்ன?' என்று கேட்டது. பொய் மேல் பொய்யாய் சொன்னாள். "அதெல் லாம் ஒன்றுமில்லை" என்றாள். வீடு விழித்துக் கொண்ட தைச் சொல்ல, அவனைத் தேடிப் போனாள்.

கையும் களவுமாய் அகப்பட்டு...

கன்னத்தில் அடித்தது. "கள்ளத்தனமா பண்றே, யாருடி அவன்?" மொத்தமும் வாங்கிக் கூடத்தில் இறைத்தது.

"கூடப் பாடறவனா? இனிமே பாட்டு கிளாஸ் நோ... காலேஜ் பக்கத்து வங்கியா? காலேஜ் நோ. டெலிபோன்ல பேசவேம்பியா... இதுக்குன்னு பூட்டுசாவி இருக்கு.

"அடுத்த வீட்டுக்குப் போய் பேசுவியா? அவ இருக்கற அறையைப் பூட்டு, இரண்டு வேளை சோறுக்கு மட்டும் கதவைத் திற?" -அப்பா கட்டளை யிட்டார்.

"அடியே, உனக்கு ஆம்பளையா கிடைக்கலை? எதோ லவ்வன்னு சொன்னே. நடக்கறதுதான். இப்படி உருகி வழிவியா? நம்ம காசுக்கு நாலு பேரை லவ் பண்ணலாம்.



கிஸ் அடிச்சான்... அவ்வளவுதானே துடைச்சுக்க" அம்மா ஊசி குத்தினாள்.

"உடனே கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணு. காலேஜுக்கு அனுப்பினது நம்ம தப்பு. வயசுப் பெண்ணை வெச்சுக்கறது நெருப்பை மடியில எடுத்துக் கிட்டுப் போற மாதிரி எங்கனா பக்குவமா இறக்கி வை. நீயும் சுட்டு நெருப்பும் சிதறி... தேவையா? உறவு உபதேசித்தது.

"என்னடா, ஏதோ லவ்வாம். அடிதடி வரைக்கும் போச்சாம். யாரும்மா, விஜியா? அந்த மாருதிதானே... என எவனோ போவானே அதை ஒட்டிக்கிட்டு" காரா, பெண்ணா என்று சொல்லாமல் அவன் நண்பர்கள் கமெண்ட் அடித்தார்கள்.

நமது துக்கத்தைப் பிறரிடம் சொல்வதில் அர்த்தமில்லை. பாதிப்பேருக்கு அதில் சந்தோஷம்...

மீதிப் பேருக்கு அக்கறையில்லை.

"மாட்டிக்கிட்டியா வம்புல... இதெல்லாம் பண்ணா அப்படித்தான்..." சொல்லிவிட்டுப் புறம் போனார்கள்.

"விஷயம் தெரியுமா? நம்ம சாரங்கன் மாட்டிக்கினான். விஜின்னு ஒரு டக்கர் ஃபிகர். அப்படி இப்படிக் கஷ்டப் பட்டு லெவல் பண்ணான். இப்ப புட்டுக்கிச்சு. போலீஸ் கேஸ் வரைக்கும் போயிடுச்சு. பின்னிட்டாங்க."

காதலுக்குத் துணை சில சமயம் நண்பர்கள்... எதிரி-பல சமயம் நண்பர்கள். நண்பர்கள்தான். தெரிந்தவர்கள்தான் எதிரியாக முடியும். தெரியாதவரா எதிரி?

"நான் எவ்வளவோ சொன்னேன் சார். சாரங்கன் கேட் கலை. வெரி புவர் ஃபேமிலி கம்போர்ட் டு யூ. என்னவோ ஆசை. கல்யாணம் பண்ணிக்கிட்டான்."

"என்ன?" அவள் வீடு அதிர்ந்தது.

"தெரியாதா. ரெஜிஸ்டர் மேரேஜ் நடந்துடுச்சே..."

"எப்போ?" கூச்சலிட்டது.

"இங்கே... இன்ன தேதியில்... இன்னார் வைத்து... உங்க டாட்டரைக் கேட்டுப் பாருங்கள்."

விஜயலட்சுமியின் தலைமுடியைப் பிடித்துச் சுவர் மீது மோதி, பெல்ட்டால் அடித்து, எட்டி இடுப்பில் உதைத்துக் கேட்டார்கள். பெட்டியில் காசு எடுத்து பெரிய அதிகாரி களைப் பார்க்கப் போனார்கள். "என் மகளை ஏமாத்திக் கெடுத்துட்டான்" என்று புகார் செய்தார்கள். அவளை அடித்து அடித்து எழுதி வாங்கினார்கள்.

சாரங்கன் நாயாய் அடிபட்டான்.

"உன் தங்கச்சி தோள்ல கை போட்டு ஜாக்கெட் கிழிக்க நேரமாவாது. பொம்பளை பாவம் வேணாம்னு பார்க் கறேன்..." மிரட்டினார்கள்.

சாரங்கன் தான் யாரையும் திருமணம் செய்யவில்லை. அப்படி எதும் எங்கும் போட்டிருந்தால் அது சுயநினை வின்றி, போதையில், சித்த சுவாதீனமற்ற போது போட்டது" என்று எழுதி கொடுத்தான்.

அழுதான்.

எழுதினதைப் படித்த விஜயலட்சுமி, விவரம் முழுவதும் தெரியாமல் எழுபத்திநாலு மாத்திரைகளை மெள்ள மெள்ள சாப்பிட்டாள். சீராய் உடுத்திப் பொட்டிட்டு பூ வைத்துச் செத்துப் போனாள். தானே கட்டிக்கொண்ட தாலி நெஞ்சி லிருந்தது.

சாரங்கன்... பாரதி புத்தகம் கொடுத்த சாரங்கன்... 'நல்ல காலம் வருகுது' என்று இசைக்குழுவில் பாடிய சாரங்கன்...

என்னவானான்?

## 18

தூற்கொலை என்றதும் அவள் வீடு அதிர்ந்தது போயிற்று.

"மகாபாவி. கொன்னுட்டியே அந்தப் பெண்ணை" பெற்றவனை ஏசிற்று.

"ஆயிரம் ஆனாலும் அவன்தான் புருஷன்... சட்டப்படி புருஷன். போ, போய் கூட்டிக்கிட்டு வா. இல்லை வம்பு வரும். அவன் ஒரு பெட்டிஷன் போட்டு நீதான் கொன்னுட் டேன்னு சொன்னா உன்னைக் கைது பண்ண வேண்டி வரும். பேப்பர்ல அசிங்கமா உன்னைப் பத்தி செய்தி வரும். இந்த மாதிரி நியூஸை உப்பு மொளகா வோட எழுதறதுக்கே பத்திரிகைங்க இருக்கு. மாட்டாதே போ... போய் சாரங் கனைக் கூட்டிக்கிட்டு வா... ராசி பண்ணிக்க."

பாதி செத்துப்போன சாரங்கனை ஒரு கூட்டம் மேன்ஷனில் சந்தித்துச் சமாதானம் பேசிற்று.

மணிவாசகம் முதற்கொண்டு எல்லா நண்பர்களும் அழுதார்கள்.

"அடச் சண்டாளப் பாவிகளா, இப்ப சந்தோஷம் தானா" என்று கத்தினார்கள்.

உட்கார்ந்திருந்தவனை உலுக்கி விஷயம் சொன்னார்கள். அவனைக் கைத்தாங்கலாக அவள் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள்.

கூடத்தில் அவள் உடல் கிடத்தப்பட்டிருந்தது.

முகம் மட்டும் விட்டு, உடம்பு முழுவதும் அறுத்து அது தற்கொலை என்று சான்றிதழ் தந்திருந்தது.

ஏழு அடி தூரம் அவளை நோக்கி நடந்தான். நின்றான். வெறித்தான்.

'நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை சொல்வாரடி-கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி'

-மனசுக்குள்ளே செத்துப் போன கிளியைப் பார்த்துப் பாட்டுப் பாடினான்.

'சொந்தச் சகோதரர்கள்
துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி-கிளியே
செம்மை மறந்தாரடி...'

முப்பத்து முக்கோடி தேவர்களும் அழுதார்கள்.

நண்பர்கள் ஆவேசப்பட்டார்கள்.

''என்னடா சாதிச்சுட்டே...? என்ன கண்டுட்டே இப்போ...? உங்க வூட்டு எழவுத் தவிர என்னா மிச்சம் இப்போ?'' -கேட்டார்கள்.

சாரங்கன் அவர்களை அமைதியாக்கினான். அப்பாவும், அம்மாவும், தங்கையும் அடித்துப் புரண்டு ஓடிவர, அவர்களுக்கு அமைதியாய் தூங்கும் விஜயலட்சுமியை அறிமுகப் படுத்தினான்.

''அம்மா நீ 'வத்தக்குழம்பு நன்னா பண்ணுவே'ன்னு சொன்னேன். 'கத்துக்கணும்'னா.''

''அழுதுடு சாரங்கா... பேசிண்டே இருக்கியே.''

''அப்பா, உனக்கு 'ஹிஸ்டரின்னா ரொம்பப் பிடிக்கும்'னு சொன்னேன். புக்ஸ் வாங்கி வெச்சுருக்கா.

''அழுதுரு சாரங்கா... துக்கத்தைக் குறை.''

''எதுக்கு அழணும்? என்ன நடந்து போச்சு இப்ப கல்யாணம் ஆயிடுத்தே. இவ என் மனைவிதான்... நான் வெளிப்படையாகவே சொல்றேன்... எதுக்கு அழணும்?



குடித்தனம் பண்ணியிருந்தாதானா...? நூறு வருஷம் குடித்தனம் நெஞ்சுல பண்ணியாச்சு. மனசு தானே வாழ்க்கை. வாழ்க்கை மனசுல நடந்தாச்சு. எனக்கு யார் மேலயும் கோவம் இல்லை. கொள்ளி போடற உரிமையை எனக்கு வெளிப்படையா கொடுத்தாங்களே... ரொம்ப சந்தோஷம்...''

'அக்னியே என் பத்தினியினுடைய சரீரத்தை உன்னிடம் தருகிறேன். அதை சுபிட்சமாய் ஸ்வீகரித்து வானுலகத்துக்கு அனுப்புவாயாக.

அக்னியே அவளுக்கென்று இடப்படும் இந்த நெருப்பில் ஈயோ, எறும்போ வேறு ஏதும் உயிர்களோடு விழுந்து தகனமானால் அந்தப் பாபம் என்னையோ அவளையோ சாராதிருக்கட்டும். அந்த ஜீவராசிகளின் ஆத்மாவும் சாந்தியடையட்டும்.''

நெருப்புச் சுழலிட்டு தழல் விட்டு எரிந்தது.

கடைசிவரை விஜயலட்சுமி என்று சாரங்கன் நின்றுவிட்டான். செத்த பிறகும் அவளே மனைவி என்று மனசுள் ஏற்றான்.

'நான் காதலித்ததும் கடிமணம் செய்ததும் உண்மையெனில், எதன் பொருட்டு அழுகை? எதன் பொருட்டுப் பொருமல்? எனக்கு எந்தக் கேடும் இல்லை. என் அன்பு விரியும்... உலகம் மொத்தமும் பரவும். எவருக்கு எங்கே எந்த உதவி வேண்டியிருப்பினும் அங்கே நிற்பேன்.''

காதலும் சாதலும் சாரங்கனைக் கனியப் பண்ணிற்று. எல்லா சமூகக் கூட்டங்களிலும் சாரங்கன் முன்னிலையில் நின்றான். நிற்கிறான். பத்தில் இரண்டு பங்கு வருவாயைத் தானம் செய்கிறான். வாழ்வில் பாதியை சமூக சேவையாகச் செய்கிறான். வாழ்கிறான் தன்னைத் துறந்தவன் துறவி. சாரங்கன் தன்னைத் துறந்தான்.

உற்றுப் பார்த்தாலும் சாரங்கனின் முகத்தில் வேதனையில்லை. வளையம் விழாத கண்கள், குறுகத் தரித்த குறள் பேச்சு. சாரங்கனிடம் அமைதி வந்து விட்டது. இப்போது அவன் விஜயலட்சுமியை மட்டும் நேசிக்கவில்லை... எல்லா உயிர்களையும் நேசிக்கிற சாரங்கன். தன்னைப் பற்றி யோசிக்க மறந்துபோன சாரங்கன்.

காதலால் உருவான சாதலும் காதலைத்தான் வளர்த்தது.

கேட்கிறபோது- இதைப் படிக்கிறபோது-துக்கம் பொங்கும்... ''ஐயோ, இப்படி ஆயிற்றே' என்று தோன்றும். காதலைப் பண்டமாற்றாய் நினைக்கிற போதுதான் நஷ்டக் கணக்கு வரும்.

அது வித்து, விதை, முளை கிளம்பி வேர் பிடித்த பிறகு விதையை உதிர்த்துவிட்டு செடியாய், மரமாய் தழைத்து விட்டது தெரியாது.

தன்னை அகௌரவப்படுத்திக் கொள்வது காதலல்ல. தன்னைத்தானே ஹிம்ஸித்துக் கொள்வது நேசமல்ல.

தேவதாஸ்... ஒரு தவறு. மாபெரும் தவறு. எக்ஸிபிஷனிசம்... 'நான் எத்தனை துக்கப்படறேன் பார்' என்கிற அலட்டல். தாடி வளர்ப்பது... சாராயம் குடித்து 'உலகே மாயம்' என்பது சீக்குப் பிடித்த மனசு. சீரழிந்த புத்தி.

செத்த பிறகு தான் மாயை என்று தெரிகிறதா? வாழும் போதே மாயை தெரிய வேண்டும்.

உங்கள் மரபு, சட்டதிட்டம், ஜாதி, மொழி, நாகரிகம் எல்லாம் மாயை என்று தெரிய வேண்டும். நமது கற்பிதங்கள் எதுவும் நிலையானதல்ல என்று புரியவேண்டும். மானம்-அவமானம் என்பது தற்காலிகமானது என்பதை மனிதர்கள் அறியவேண்டும்.

விஜயலட்சுமி முட்டாள். அவள் மரணம், எதையும் நிலை நிறுத்தவில்லை. காதல் உயர்வு என்று எவர் மரணமும்



சொல்லாது. செத்த பிறகு காதல் என்பதற்கு அர்த்தம் இராது. காதல் வாழ்வதின் நறுமணம், அது துர்கந்தம் இல்லை.

'அடியும் உதையும் வாங்கிய பெண்... அவமானப் படுத்தப்பட்ட பெண் என்ன செய்வாள். சாவதைத் தவிர' என்று உங்களில் சிலர் யோசிக்கலாம்.

பதினாலு வருடங்கள் வனவாசம்போல் காதலுக்குக் காத்திருந்தவர்களை எனக்குத் தெரியும்.

முயற்சி செய்து, காதல் கைகூட முடியாது என்று தெரிந்த பிறகு, 'நம்மால் பிறருக்கு வேதனை எதற்கு... பிரிவோம்' என்று மெள்ளப் பிரிந்தவர்களைத் தெரியும்.

இது கோழைத்தனம் இல்லை. நெல் முனையளவும் இதில் கேவலம் இல்லை.

காதல் ஒரு அனுபவம். அதில் கிஞ்சித்தும் கட்டாயமில்லை. வன்முறையில்லை. 'தோற்றுப் போவதற்கு காதல் செய்வானேன்?' என்கிற கேள்வி வரலாம். தோல்வி, வெற்றி என்பதல்ல முக்கியம். கடிமணம் தோல்வியை, வெற்றியைச் சொல்லவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

தோற்றவர்களைத்தானே உலகம் 'புகழ்பெற்ற காதலர்கள்' என்று கொண்டாடுகிறது என்கிற கேள்வி வரும். வெற்றி பெற்று வாழ்ந்தவர்களின் கதை பேசப்பட மாட்டாது. அது தொடரும். அடுத்த தலை முறைக்குப் பரவும். அது முடியாத கதை. முடிந்து முற்றுப் புள்ளி வைத்த கதை தான் பேசப்படும். இது கதையல்ல. வாழ்வின் தொடர்ச்சி வளர்ச்சி? எல்லையில்லாது விழுது விழுதாய் வளரும் ஆலமரம் வளர்ச்சி. சாகாத வளர்ச்சிக்கு எவ்விதம் முடிவு சொல்லப்படும்?

எழுத்தில் புரியவைக்க முடியாத சூட்சுமம் இது. சொல்லித் தெரியாத கலை இது. இது யோசிக்கப்பட வேண்டிய விஷயம். வெற்றி எது என்பது கேள்வியாய்க் கேட்டு

யோசியுங்கள்... சாவா வெற்றியைச் சொல்லும் என்று சிந்தியுங்கள்.

கல்யாணத்தில் முடியாத காதலர்கள் சுகமாக வாழ்ந்தார்கள். வெவ்வேறு ஆண் பெண்ணை முறையே மணந்து வயதான பிறகு சந்தித்தும் பேசினார்கள்.

தங்கள் பிள்ளைக்கும் பெண்ணுக்கும்-தங்கள் கதை சொன்னார்கள்.

அவர்கள் கதை-

## 19

பல வருடங்களுக்கு முன்பு ஒரு மார்கழி மாதம். விடியலில் சல்லாத்துணி மாதிரி பனி தரையில் இறங்கும் ஒரு காவிரிக்கரை கிராமம். கிழக்கு நோக்கி சூரியனைக் கும்பிட்டால் கிராமத்தின் இடப்புறம் காவிரி வலப்பக்கம் அரசலாறு. நடுவே தீபகற்பம் மாதிரி பசேல் என்கிற வயல்வெளி. வயல் வெளிக்குத் திலகமிட்டது போல் அந்தக் கிராமம், எல்லார் வீட்டிலும் நாலு மணிக்கு கொல்லைப்புற படலைத் திறந்துவிட்டு விடுவார்கள். தூசு பரப்பி இடுப்புயர தஞ்சாவூர் கோழைகள் தலையாட்டிப் போகும். பனிக்கு நடுவே தூசு பறக்கும். அந்தத் தூசு பட்டால் மகா புண்யம். கறவைகளின் பாதத்துளி உடம்பில் படருவது விசேஷம்.

'மந்தை போயிடுத்தா...' குரல் கொடுத்தபடி பெண்கள் வாசலுக்குக் கோலம் போட வருவார்கள்.

துர்காதான் முதலில் வருவாள். மாடுகள் கலைத்த மண்ணை தண்ணீர் தெளித்து, சமன் செய்து, பெரிய கோல மாய்ப் போட உட்காருவாள். அடுத்த வீட்டில் எதிர்வீட்டில் உள்ள அபயா, லட்சுமி, தரமி, குஞ்சா, பொன்னு என்று நிறைய பேர் கோலம் போடுவார்கள். அங்கே பேசாது



போட்டி நடக்கும். அபயாவுக்கு அவள் அண்ணன் லாந்தர் பிடித்து நிற்பான். துர்கா தலை தூக்கிக் கேட்பாள்.

''நாணா, இந்தப் பக்கமும் செத்த வெளிச்சம் காட்டேன்?' நாணா என்கிற நாராயணசாமி தோள் உயரம் கையைத் தூக்கி லாந்தரைத் தொங்கவிட்டு நிற்பான். உடல் வலிக்கும். ஆனாலும், துர்காவுக்காக அப்படி நிற்பது சுகம், தங்கை அபயாவுக்கு புள்ளிக் கோலம்தான் வரும். கருடன், பத்மம், எண்கோண முக்கோணம்தான் தெரியும். துர்கா காம்பஸே இல்லாது வளைத்து வளைத்து எட்டடிக்கு எட்டடி பதினாறடி தாமரைகள் பூத்த சக்கரம் வரைவாள்.

நாராயணசாமி பி.ஏ பரீட்சை கொடுத்திருந்தான். இந்த வார்த்தையே இப்போது வேடிக்கையாக இருக்கிறது. ஆனால், அங்கெல்லாம் அப்போது இப்படித்தான் சொல்வார்கள். அது விநோதமான கட்டுப்பாடுகள், பேச்சுகள் உள்ள காலம், விநோதமான கிராமம். காதல் என்பது கெட்ட வார்த்தை, நீசத்தனம், காவாலிகள் விஷயம். பெண்ணுக்கு அழகு கற்பு, நாணம், சமையல், ஆணுக்கு அழகு பிரம்மச்சரியம், படிப்பு, விவசாயம். வெளியூர் போக வேண்டுமெனில் வீட்டுத்தலைவர் முதலில் இறங்கிப் போக, பின்னால் இருபதடி இடைவெளிவிட்டு பெண்கள் கூட்டம் படலைத் திறந்த மாட்டு மந்தைபோல புஸுபுஸுவென்று உரசிப் போகும். அப்படிப் போவதே சந்தோஷம். அந்த சந்தோஷத்தில் சிரிக்கக்கூடாது. ''பட்டிச் சிறுக்கி என்ன சிரிப்பு?'' பாட்டி கத்துவாள்.

''எங்க, ஊருக்கா?'' வழி முழுக்க நிச்சயம் மடக்கிக் கேட்பார்கள். பட்டும் படாமலும் பதில் சொல்லியாக வேண்டும். விதவைகள் நிரம்பிய ஊர் அது. தலைமழித்து நார்மடி உடுத்திய அவர்கள் பேச்சு தனி உலகம்.

''நம்ம எதிர்வீட்டு நாணா விளக்குப் பிடிச்சுண்டு நிக்கறான். ஒரு நாளைப் போல பார்த்தியோடி''

"அது வயசு, கோலம் போடற பொம்மனாட்டின்னா ஒரு குஷி."

"துர்காவுக்கு மூத்தவன் உண்டே, அபயாவுக்குக் கேட்கலாமே."

"ம்ம்... நாணாவுக்கும் வயசாச்சு. துர்காவப் பேசலாம்."

"அது சரி, குண்டுமாத்தி, குழிமாத்தி, குழிமாத்தி, குண்டு மாத்தி ஏதோ நடக்கட்டும். ஈஸ்வர கிருபை."

"நாணாவோட தோப்பன் மூர்க்கனாச்சே. நேத்தி கூட பொண்டாட்டிய வாசப்படிலியே அறைஞ்சானாம்."

"மடை திறந்ததுக்குக் கூலி நெல்லு வாங்க வந்தாளாம் எவளோ. ரொம்ப நேரம் அவளோட பேச்சு. அனுப்புங் களேன் நெல்ல குடுத்துன்னாளாம் பொண்டாட்டி. படேர்ன்னு போட்டான்.

"தப்பு இருக்குமோடி?"

"வந்தவ நல்ல சேப்பு."

"யாரு அது, தெரியலையே."

"எவ எக்கேடு கெட்டா என்ன உனக்கு. உனக்கும் எனக்கும் இந்தத் திண்ணைதான்னு எழுதியிருக்கு..."

உள்ளர்த்தம். உள்ளுக்குள் உள்ளர்த்தம் வைத்துப் பேசும் பேச்சு புரியவே அதிக புத்தி வேண்டும். அவர்களின் கண் பார்வையிலிருந்து எதுவும் தப்பாது. கையால் மீன் பிடிக்கிற வேகமாய் அந்த விதவைகள் எதிராளி மனசைப் பிடித்து விடுவார்கள். அவர்கள் பேச்சு சரி கணக்கு சரி.

நாணா, துர்காவிடம் கிறங்கினான். தங்கை கோலம் போட விளக்குப் பிடிப்பது சாக்கு, அது அபயாவுக்கு என்று உதவினாலும் உள்ளே வேறு ஆவல். குடம் மாதிரி இடுப்பு. கங்கை சொம்புகள் போல நெஞ்சு, காவிரியிலிருந்து பிரிந்த வாய்க்கால் மாதிரி முதுகுப் பள்ளம். இழுத்துக்கட்டின



தோல், கூர் நாசி, தஞ்சாவூர் கூம்பின் முகவாய். படல் படலாய் கண்கள்.

பனிநேரத்தில் தேவதை மாதிரி துர்கா, துர்காவுக்கு கிறக்கம் உண்டு.

"மடிச்சுக்கட்டின வேட்டில மதுரைவீரன் மாதிரி நிக்கறது பார். வாத்துக்காலன். இத்தனை பட்டையாவா பாதம் இருக்கும் ஒருத்தனுக்கு? கணுக்கால்லேர்ந்து புஸுபுஸுன்னு ரோமம். யப்பா பார்க்கவே என்னவோ பண்றது. சிரியேன். உர்ன்னு நிக்கறே? எப்படி என் கோலம்? அபயாவுக்கு கத்துத் தரட்டா? மத்யானம் குழம்பு சாதம் எனக்கு உருட்டிப் போடச் சொல்லு. இரண்டே நாள்ல கத்துத் தரேன்."

"இன்னிக்கு கூடாரை வெல்லும் ஸ்ரீகோவிந்தா, அக்கார வடிசல் பண்ணி இறக்கப் போறேன். வாசனை பிச்சுக்கும், ஒரு வாய் சாப்பிடறியா?" அவள் மனசு தான் பேசும்.

நிவேதனம் செய்த அக்காரவடிசலை பானையோடு பிரசாதம் என்று மந்தாரை இலையுடன் வாசலுக்கு வந்து தோழிகளைக் கூப்பிட, பெரிதும் சிறிதுமாய் ஊர் திரண்டது.

உள்ளங்கையில் இலையை எடுத்தால் சுட்டை விரலால் அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டாமோ... ஆ...ன்னு எப்பவும் ஒரு பார்வை. வடிசலைக் கரண்டியிலிருந்து துர்கா உதற, இலை காற்றில் பறக்க-சொத்தென்று சுடச்சுட உள்ளங் கையில் வடிசல் விழுந்தது நாணா அலறி கை உதறினான். துர்கா மீது, பக்கத்தில் நின்ற கிழவர் மீது, ஒருநாய் மீது வடிசல் தாக்க...

'முன்பரப்பிய ரேழி' என்கிற த்வனியில் கிழவர் வசவு கத்த, ஊர், பசு மூத்திரம் குடித்த காளை மாதிரி பல்தெரியச் சிரித்தது. துர்கா மட்டும் விசனப்பட்டாள்.

"மன்னிச்சுக்கோங்கோ" அன்று இரவில் கொல்லைப் புறத்தில் சொன்னாள்.

''அதுனால பரவாயில்லை.'' அவன் வெட்கப் பட்டான். அக்காரவடிசல் கடைசி வரைக்கும் சாப்பிடலை. வலி. ''அடுத்த வருஷம் தட்டுல போட்டுத் தரணும்' கேட்டான்...

மறுநாளே மறுபடி செய்தாள். கொல்லைச் சுவரில் தட்டில் வைத்துவிட்டு 'அபயா அபயா' என்றாள். ஒளிந்து கொண்டாள். குரல் கேட்டு அவன் வருவதற்குள் காக்கை இரண்டு வாய் கொத்திவிட்டது. அதுவும் கிடைக்கவில்லை.

அக்காரவடிசலா முக்கியம்? மனசுதானே? இனிப்பானது உணவா, இல்லை. பார்வைதானே? மதுவகை குடித்த பிறகுதான் மயக்கும். காதலோ பார்த்தவுடனே மயக்கும்.

''நாளைக்கு இன்னொரு தடவ வடிசல் பண்ணட்டா?''

''வேண்டாம், நீ இன்னிக்கு பண்ணதே போதும்.''

''கை எப்படி இருக்கு?''

''ஆறிடுத்து... துர்கா... ஆமா, உன் புறங்கையிலேயும் சூடு பட்டுதே.''

''கொப்புளிச்சுடுத்து.''

''ஏன்?''

''நீங்க உடனே உதறிட்டேள். நான் உதறலை. உதற மனசில்லை.''

புரிகிறதா, புரிகிறதா? முப்பது வருடங்களுக்கு முன்பு ஒரு காவிரிக்கரை கிராமத்தில் பேசப்பட்ட காதல் வசனம் இது. காதல் இன்று நேற்று விஷயமல்ல. அது நிரந்தரம். உங்களுக்கு என்ன தெரியும். எங்க காதலைப் பற்றி? எவரிடமும் மறந்தும் பேசிவிடாதீர்கள். காதலித்து, பிரிந்து, காதலுக்கு மனசுக்குள்ளே கல்லறை கட்டி கல்லாய் வாழ்பவர்கள், வயசானவர்கள் உண்டு இங்கே.



கொப்பளித்த புறங்கையில் நாணா முத்தம் கொடுத்தான். இரவில் தூங்கி வழிந்த காக்கையும், தூங்காத பாட்டியும் பார்த்து விட்டார்கள்.

ஒரே ஜாதி. ஒரே கிராமம். தூரத்து உறவு முறை. கொடுக்கலாம். கொடுத்து வாங்கலாம். கொள்வினை கொடுப்பனை நிகழலாம்.

''படுவா நாயே. எத்தனை திமிர் உனக்கு? வெளியே போ... போ வெளியே.''

''எடுறி துடைப்பத்தை. இடுக்குலியே ''நாலு போட்டாத் தான் பொட்டை சிறுக்கிக்கு புத்தி வரும்.''

அது விநோதமான கிராமம். அவள் அடி வாங்கி அழுதாள். அவன் புசியோடு வெளியேறினான். பட்டணம் போனான். பி.ஏ. முதல் வகுப்பு பாஸ் என்கிற செய்தி வந்தது. எங்கோ கணக்கு எழுதி வயிறு கழுவி, காசு சேர்த்து காலேஜுக்கு வந்து சர்டிபிகேட் வாங்க கிராமம் தொடாது போனான். போகும் முன் நண்பனிடம் சொன்னான்.

'மணந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி' இது ஊர் முழுவதும் பரவிற்று.

சின்னஞ்சிறுசுகள் ஆசைப்படறதுல என்ன தப்பு? இத்தனை நிஷ்டூரமா பெத்தவனுக்கு?'' திண்ணை பேசிற்று. அவன் ஓஹோன்னு வரப்போறான் பாரு. குறி சொல்லிற்று. 'ஆண்டாளை வில்லிபுத்தூர்லேர்ந்து ஸ்ரீரங்கம் தூக்கிண்டு போனா மாதிரி துர்காவ மெட்ராஸுக்குக் கூட்டிண்டு போய்...''

துர்கா நாணா பேச்சில் கண் சொருகினாள். உறுதியானாள். பதினேழு வயசில் நோன்பு பூண்டாள். வேறு வழி? ஊர் சிரிச்சுடுத்தே. அக்காரவடிசல் வருடாவருடம் செய்தாள். அழுதாள்.

அவன் படிப்புக்கு, ஆங்கில அறிவுக்கு மத்திய அரசில் வேலை கிடைத்தது. டெல்லிக்கு மாற்றலாயிற்று.

'அபயாவுக்கு வரன் வந்திருக்கிறது... உன் உதவி வேண்டும்.' கிராமத்திலிருந்து கடிதம் வந்தது.

காசு ஐயாயிரம் அனுப்பினான். திருமணத்துக்குப் போகவில்லை.

''அவனுக்கு வரமுடியலை. டெல்லில வேலை பிரஷர்'' அதேதான் தங்கைக்கும். காசு அனுப்பினான். திருமணத்துக்குப் போகவில்லை.

''உனக்குப் பெண் பார்த்திருக்கிறது. வந்து பார்த்து பெண் பிடித்தால் மேற்கொண்டு நடத்தலாம். எனக்கு தள்ளாமை அதிகமாகிறது. பெண் பெரிய மிராசு தாரன் பெண். கொர நாட்டு கருப்பூர் ஏழு வேலி நிலம், தோப்பு எல்லாமிருக்கிறது உடனே வா''

''ரெஸ்பெக்ட்ட ஃபாதர்'' ஆங்கிலத்தில் பதில் கடிதம் எழுதினான்.

''துர்காவை மட்டுமே மணம் செய்வேன். சம்மதமெனில் அழையுங்கள். எனக்கு கல்வி இலாக்காவில் உதவி இயக்குனர் பதவியாகியிருக்கிறது. உடம்பைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

அப்பா-அம்மா டெல்லிக்கு வந்தார்கள். வீடு பார்த்து மலைத்தார்கள். காசிக்குப் போனார்கள். கருமம் தொலைத்தார்கள். ''துர்காவோட அப்பா நொடிச்சுப் போயிட்டான். அவன் நிலம் விலைக்கு வருது வாங்கட்டுமா?'' என்றார்கள். அவன் காசோலை தர வாங்கினார்கள்.

துர்காவின் அக்காவுக்குக் கல்யாணமாயிற்று. வீட்டுக் காசு கரைந்தது. அண்ணனுக்குத் திருமணம் செய்து, வந்தவள் நகையை அடகு வைத்து ஏதோ பிஸினஸ் நடந்தது. அதுவும் ஒழிந்தது. அறுபதுக்கு நாற்பது என்கிற குத்தகைப் பணம்



காலம் மாற பத்துக்கலம் நெல் கூட வரவில்லை. கால வேகத்தில் அக்கிரஹார ஆட்டம் முடிந்து போயிற்று. திண்ணைக் கிழவிகள் ஒவ்வொருவராய் செத்துப் போனார்கள்.

இப்போதெல்லாம் படியில் மட்டும் முழங்கை நீளக் கோலம்தான் துர்கா போடுகிறாள். இருவத்தெட்டு வயசுப் பெண் திருமணம் ஆகாத பெண் எவ்வளவு பெரிய கோலம் போட முடியும்? அப்பாவுக்கு இருதய நோய். அம்மாவுக்கு இருமல். அண்ணன் வேறு கிராமத்தில் தனிக்குடித்தனம், அக்கா உயிரோடு இருக்கிறார்களா, இல்லையா? தெரியவில்லை. தஞ்சாவூர் மோழைகள் மட்டும் தினம் தூசு பறக்க மேய்ச்சலுக்குப் போகின்றன. துர்கா தூசுபட வெறுமே நிற்கிறாள்.

ஒருநாள் திடீரென்று தன் வயசு உறைத்து, அடுத்த வீடு போய் கட்டிலில் கிடந்த நாணா அப்பாவை நமஸ்கரித்தாள்.

''எனக்கு ஒருவழி சொல்லுங்கோ'' என்றாள்.

கிழவர் துர்காவிடம் பேசவில்லை. மனைவியிடம் கத்தினார்.

''வாசக்கதவை 'பா'ன்னு தெறந்து வைச்சியா? பீடை உன்னை அடிச்சுக் கொல்லணும்'' சீறினார். அது விநோதமான கிராமம்.

காரணமில்லாத இந்த நிஷ்டூரத்தில் துர்கா கருகினாள்.

அடுத்த கிராமத்தில் உள்ள பள்ளிக்கூட வாத்தியார் திருமணமான முதல் வருடமே பிரசவத்தில் மனைவி சாக, செத்த ஒரு வருடத்துக்குள் மறுபடி திருமணம் என்று தேட, அவருக்கு இரண்டாம் தாரமாய் துர்கா வாழ்க்கைப் பட்டாள். அவள் வீடு 'அப்பாடா, கடன் தீர்ந்தது' என்று சுகப்பட்டது.

நாணா டெல்லியில் இயக்குனர் ஆனான்.

'அப்பா கவலைக்கிடம்' என்றபோது கிராமம் வந்தான். ரேழியில் போட்டிருந்தது. மேல் சுவாசம் இழுத்தது. கர்ண மந்திரம் ஓதப்பட்டது. ஸ்பூன் ஸ்பூனாய் பால் தந்தார்கள். நாலு மிடறு உள்ளே போயிற்று. ஐந்தாம் மிடறு தொண்டையில் நின்றது. ஆறாம் மிடறு வாயில் வழிந்தது. இருதயம் நின்றது. நாடி அடங்கிற்று. உடல் சூடு தணிந்தது. ஓடை மூங்கில் பிளந்து வாசலில் கட்டினார்கள்.

"ராம் நாம சத்யஹ..." தூக்கினார்கள்.

அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்று பார்வையில் காதல் கொண்ட ராமசரித்திரம் தெரிந்தவர்கள். தெரியாதது மாதிரி அவன் பெயர் சொல்லித் தூக்கினார்கள் மதம் மனித வாழ்க்கையைப் பண்படுத்தவேயில்லை. இங்கே மதம்-தனி, வாழ்க்கை தனி. அது விநோதமான கிராமம்.

பத்தாம் நாள் பேச்சோடு பேச்சாய் துர்கா கல்யாணம் பற்றி நாணாவுக்குச் சொல்லப்பட்டது. உப்பில்லாத தோசையை, சோறை குவித்துப் படையலாக்கிவிட்டு நாணா அழுதான். 'அப்பாவுக்கு அழுகிறான்' என்று நினைத்தார்கள். 'தான் ஆடா விட்டாலும் சதையாடும் என்றார்கள்.

காதல் செத்துப் போனதுக்கு நாணா அழுதான்.

'இத்தனை நாள் இருந்தியே இன்னும் கொஞ்சநாள் இருந்திருக்கப்படாதா' என்று அழுதான்.

அந்தப் பேச்சின் உண்மை யாருக்கும் புரியவில்லை. இனி புரிய வைத்தும் பயனில்லை.

டெல்லியிலேயே உத்தியோகமாய் தங்கிய வீட்டுப் பெரியவர் குடும்பம் நாணாவை விசாரித்தது. "என் பெண்ணுக்குத் தமிழ் அவ்வளவா தெரியாது. ஹிந்தில கதை எழுதுவா, இங்கிலீஷ்ல கவிதை எழுதுவா... நார்த் சௌத் எல்லா டிஷ்ஷும் பண்ணுவா... நாப்பது பேர் டின்னர் ஒருத்தியா நடத்துவா. க்ளவர். நல்ல கம்பெனி மாடர்ன் திங்கிங்..."



முப்பத்தி நாலு வயசு. நாணா பெண்ணைப் பார்த்தார்... பேசினார்... திருமணம் செய்து கொண்டார்... மனைவி நார்த் சௌத் டிஷ் செய்ய விதவிதமாய் உண்டார். பிள்ளை பெற்றார். வெளிநாடு போனார். அண்டர் செகரட்டரியாய் உயர்ந்தார். இந்தியப் பள்ளிக் கல்வித் தர நிர்ணயம் அவரால் சீர் செய்யப்பட்டது. பெரிய பெயர் கிடைத்தது.

ஹிந்தியை தென் மாநிலங்களில் பரப்ப திட்டம் வகுக்கப்பட்டது.

பள்ளிப் பிள்ளைகள் ஆர்வமுடன் ஹிந்தி கற்க, ஆசிரியர் மூலமாக முயற்சி செய்ய வேண்டும். ஆசிரியர்களைக் கற்க ஊக்குவிக்க வேண்டும். மாநாடு நடந்தது.

முதற்கட்டமாய் ஹிந்தி தெரியாது போயினும், ஆவலுடன் ஹிந்தி கற்ற ஆசிரியர்களுக்குப் பாராட்டு-பரிசு விழா சென்னையில் நடந்தது.

முதல் பரிசு- கே.மகாலிங்கம், கும்பகோணம்.

கறுப்பாய், உயரமாய், வெள்ளை பல்லாய், விபூதிக் கீற்றோடு காவிரித் தண்ணீர் களையோடு ஒருவர் மேடையேறினார், காமிரா மின்னிற்று.

"உங்களுக்கு கும்பகோணம் ப்ராப்பரா? நானும் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்" நாணா முகமன் செய்தார்.

"உங்களைத் தெரியும் சார்."

"எப்படி?"

"துர்கா நிறையச் சொல்லியிருக்கா. தினம் சொல்லுவா உங்களைப்பத்தி."

"துர்கா... எந்த துர்கா?' அண்டர் செகரெட்டரி அரண்டார்.

மறுபடி காமிரா மின்னிற்று.

"உங்க பக்கத்து வீட்டு துர்கா. அப்புறம் தனியா பேசணுமே."

"சரி"

மனசு புரண்டது. 'நீயா... நீயா... என் துர்காவின் ஆள் நீயா...' தவித்தது. நாணாவின் அம்பத்தி நாலு வயசில் வேதனைப்பொறுக்கு உடைந்து ரத்தம் வழிந்தது. வலித்தது.

அவர்கள் விழா வாசலில் ஒதுங்கிப் பேசினார்கள்.

"துர்கா கூட்டிண்டு வரச் சொன்னா சார்."

"எங்கே மகாலிங்கம்?"

"வீட்டுக்கு."

"கும்பகோணமா?"

"இல்லை... இல்லை... மெட்ராஸ் பழவந்தாங்கல்."

"இனி எதுக்கு. வேண்டாமே."

"வருத்தப்படுவா."

"என்னவோ... விளையாட்டாய்... வாலிபத்துல..."

"இல்லை விளையாட்டில்லை. ஒரு வருஷம் என்கூட குடித்தனம் பண்ணவள். மனசுல பச்சின்னு இன்னும் இருக்கு. மறக்கல. பதினாறு வருஷம் ஒருத்தருக்கொருத்தர் கிடைக்கும்னு காத்திருந்து எத்தனை வேதனை, எவ்வளவு துக்கம்? எனக்குப் புரியறது." மகாலிங்கம் நிதானமாய் தெளிவாய்ப் பேசினார்.

ஒரு பிற்பகல் ரயிலில் முதல் வகுப்பில் நாணா என்கிற இவர் இந்தக் கதை சொல்ல, நான் கண் கலங்கினேன். துர்காவை மனசுள் வணங்கினேன். அவர் கண்ணில் நீர் வழிய கதை தொடர்ந்தார்.

# 20

"பழவந்தாங்கல் போயிருக்கீங்களா? சில இடங்கள் நம்ம காவிரிக்கரை கிராமம் மாதிரி இருக்கும்... பார்த்திருக் கீங்களா?" என்னிடம் நாணா என்கிற நாராயணசாமி கேட்டார்.

பிறகு அவரே விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்.

மறுநாள் மகாலிங்கம் அழைச்சுக்கிட்டுப் போனார் அவர் வீட்டுக்கு. உடம்புல ஒரே பரபரப்பு வேதனை. திரும்பிட லாமான்னு ஒரு யோசனை. பார்க்கணும்ன்னு ஆசை. படிப்பு ஒண்ணுமேயில்ல சார். மனுஷா உணர்ச்சி எல்லாப் படிப்பையும் விழுங்கி சாப்பிட்டுரும்." உணர்ச்சி வசப் பட்டார்.

கார் தெருவுக்குள் திரும்பி நுழைய, வாசலில் துர்கா நின்று கொண்டிருந்தாள். அதே துர்கா... பதினெட்டு வயசு துர்கா... சிற்றாடை கட்டிய துர்கா... என்ன இது. எப்படி இது? இது பழவந்தாங்கலா, நம்மூரா? துர்கா மாறவேயில்லையா? எப்படி?

துர்கா தோட்டக்கதவு திறந்துவிட்டாள்... சிரித்தாள் நாணாவுக்குத் தலை சுழன்றது.

"இது..இது"

"என் மகள் சுபாஷிணி. பி.எஸ்.ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கறா."

"ஓ..." அதிர்ச்சி சரசரவென்று உடம்பிலிருந்து வழிந்து மறைந்தது.

காலம் மாறிவிட்டது. வெகுதூரம் வந்துவிட்டது மரம் விழுது விட்டு விழுது நின்று... நிறைய நடந்து விட்டது.

''சுபாஷிணி, சார் நாராயணசாமி. டெல்லில பெரிய ஆபீஸர்.''

பெண் கை குவித்தது. சிரித்தது. அடுத்து கதவையும் திறந்து 'வாங்கோ' என்றழைத்தது. நாணா தனக்குள்ளே ஒரு வாஞ்சை பொங்கி பிரவாகமாய் ஓடுவதை உணர்ந்தார். 'மகளே' என்று அந்தக் குழந்தையை அழைக்க ஆசைப் பட்டார். நிதானமாய் உள்ளே நுழைந்தார்.

உள்ளே மெல்லிய இருள். வெளிச்சத்திலிருந்து வந்ததால் உண்டான இருட்டா, இல்லை வீடே இருட்டா ஹாலில் சோபாக்கள், சுவரில் திருமணத் தம்பதியர் படம். மகா லிங்கமும் துர்காவும் உள்ள படம். குழந்தைகளின் இளம் வயது படங்கள். வெங்கடாஜலபதி படம். தஞ்சை பங்காரு காமாட்சி படம். எதிர் அறையில் திரைச்சீலை போட்டு மறைந்திருந்தது.

''வாங்கோ''-வலது பக்க சமையல் கட்டிலிருந்து குரல் கேட்டது. பின்னே கொல்லைப்புற வெளிச்சம் கண்ணைத் தாக்க நிழலுருவாய் ஒரு பெண்மணி வெளியே வந்தாள்.

''துர்காவா, துர்காவா அது?''

பிறன்மனை நோக்கா பேராண்மை நினைவுக்கு வந்தது. பனி பெய்யும் மார்கழி நினைவுக்கு வந்தது. கோலம் விரிந்தது.

'நாணா செத்த இந்தப் பக்கம் வெளிச்சம் காட்டேன்' குரல் காதில் ஒலித்தது.

சில விநாடிகளில் சரியானார்.

'சௌக்கியமா' கேட்டார்.

என்ன அபத்தமான கேள்வி? ஆனால் வேறு என்ன கேட்பது? மகாலிங்கம் எழுந்து குழல் விளக்குப் போட்டார், மின்னி மின்னி ஒளியாயிற்று.



வீட்டில் சற்று இருட்டு இருக்கிறது. வெளியே ரொம்ப வெளிச்சமாகவும் இருக்கிறது.

துர்கா முன்னே வந்தாள். சொம்பு தண்ணீரை தம்ளரை டீபாயில் வைத்தாள்.

தலை நரைத்திருந்தது. உடம்பில் உறுதியான மெலிவு தெரிந்தது. கண்களின் கீழ் வளையங்கள் வந்து விட்டன. அந்த நாசி முகவாய், 'அது துர்கா' என்றன.

''சௌக்கியம்'' என்றாள்.

''உட்காரேன் இப்படி'' மகாலிங்கம் எதிர் நாற்காலியை மனைவிக்குக் காட்டினார்.

''இருக்கட்டும்'' அவள் சமையலறை விளிம்புக்கு நகர்ந்தாள்.

பேச்சு ஓடவில்லை. சேற்றில் விழுந்த பந்து மாதிரி அப்படியே அமுங்கிற்று. மௌனம், நேரம் தின்றது. பழைய நினைவுகள் சேறு, மன உணர்வு பந்து. அங்கே வேறென்ன நிகழும்?

''டெல்லியில் எல்லாரும் சௌக்கியமா?'' துர்கா கேட்டாள்.

''சௌக்கியம்.''

''இரண்டு குழந்தைகளா?''

''ஆமா ஒரு பெண், ஒரு பிள்ளை. பெண் ப்ளஸ்டூ படிக்கறா... பையன் டென்த்.''

''காப்பி போடட்டுமா? இல்லை. டீ பழக்கமாயிடுத்தா?''

''தஞ்சாவூர்காரன் என்னிக்கு காப்பியை விட்டான்? ஃபில்டர் காபியா இருந்தா சரி... இன்ஸ்டன்ட் வேண்டாம்.''

''உங்களுக்கு எத்தனை குழந்தைகள். மகாலிங்கம்.?''

''பெரியவன் பையன். மூத்தாள் குழந்தை. இவ பெண். துர்காவுக்குப் பொறந்தவள்.''

"எல்லாம் என் குழந்தேள்தான்." துர்கா இடைமறித்தாள்.

"அப்படியே, அச்சா அம்மா மாதிரியே இருக்கா. உன் பேர் என்ன சுபாஷிணியா?"

பெண் சிரித்து தலையாட்டி நின்றது.

"வந்தது ரொம்ப சந்தோஷம்."

"எனக்கும் மகாலிங்கம் கூப்பிட்டபோது தடுமாறிப் போய்ட்டேன். எதுக்கு வீணான்னு சஞ்சலப்பட்டேன். வெரி நைஸ் மேன். நம்மூர்ப் பக்கம் இத்தனை பாந்தமா வெளிப்படையா மனுஷா கிடையாது."

"என்னை நைஸ் மேனா பண்ணது துர்காதான். பெரியவனை அவ பெத்த குழந்தை மாதிரி வளர்த்தா. இப்ப பிலானில பி.ஈ படிக்கறான்."

"அப்பா காலமாய்ட்டார் போலருக்கு" துர்கா விசாரித்தாள். அது முறை.

"ம்ம்... வந்திருந்தேன். பேச்சு இல்லை."

"பத்தன்னிக்கு ரொம்ப துக்கமாமே."

"துக்கம் அவர்பத்தி இல்லை. பொதுவா மனுஷாளைப் பத்தி. ஏன் இத்தனை கடுமையா இருக்கான்னு ஒரு வருத்தம். என்ன சாதிச்சா இதனாலேன்னு ஒரு துக்கம்."

மறுபடி பந்து சேற்றில் சிக்கிக் கொண்டது.

"இந்த அங்கிள் நமக்கு ரிலேடிவ்வாமா?" சுபாஷிணி கேட்டாள்.

நாணா வாய்விட்டுச் சிரித்தார்.

"ச்சு. பெரியவா பேசிண்டுருக்கறபோது என்ன இது?" துர்கா மகளை அதட்டினாள்.

"இங்கவா, என் பக்கத்துல உட்கார். இது உன்னை விட துறுதுறுன்னு இருக்கு துர்கா."



பல வருடங்கள் கழித்து பெயர் சொல்லிப் பேசினார். அவளுக்கு உடம்பு நடுங்கிப் போட்டது.

"கம்ப்யூட்டர் சயன்ஸ் முடிச்சுட்டு என்ன பண்ணப் போற?"

"தெரியாது."

"தெரியாதுன்னா..."

"முதல்ல இதை முடிப்போம். இதுல ஃபர்ஸ்ட் கிளாஸ் வாங்கினா யோசிக்கலாம்."

"ஒரு ஐடியா இருக்குமில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"எதுக்கு வீண் கனா? அப்புறம் மேல போக முடிய லைன்னா வருத்தமாயிடும். ஐ டோன்ட் ட்ரீம்"

கொஞ்சம் கூட குழப்பமில்லாது பதில் வந்தது. அவரை மல்லாக்கத் தள்ளிற்று. இதைத்தான், இந்த நிலையைத்தான் தவற விட்டோமா? தவற விட்டது துர்காவை இல்லை. இந்தத் தெளிவையோ...?

"அசடு மாதிரி பேசாத சுபா."

"இவளா... இவளா அசடு. இல்லை துர்கா. நானும் நீயும்தான் அசடுகள்." தீர்மானமாய் துர்காவைப் பார்த்துத் தலையாட்டினார். பெண்ணின் நெற்றியை வருடிக் கொடுத்தார். உள்ளே மீண்டும் வாஞ்சை பரவியது.

"ஏம்மா, இந்த அங்கிள் நமக்கு ரிலேடிவ்வா?" மறுபடி சுபாஷிணி கேட்டாள்.

என்ன சொல்வது?

மகாலிங்கம் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"இவர் பேர் நாணா. நாராயணசாமி... அம்மாவோட ஊர். பக்கத்து வீடு... அம்மாவும் இவரும் கல்யாணம்

பண்ணிக்க ஆசைப்பட்டா... பெரியவா சம்மதிக்கலை. பதினாலு வருஷம் வெயிட் பண்ணி பார்த்து முடியாத அம்மா, என்னைக் கல்யாணம் பண்ணிண்டா, இரண்டாம் தாரமா. நீ பொறந்தே.''

''என்ன... என்ன?'' பெண் வியப்பாய் பேசாது விழி விரித்தது. துர்கா சுவரின் பக்கம் முகம் திருப்பிக் கொண்டாள். நாணா முகம் குழம்பியது. மகாலிங்கம் கலக்கமில்லாது இருந்தார்.

''என்ன இது, குழந்தைகிட்ட போய்...''

''ஏம்மா, சொன்ன என்ன? நீ சொல்லியே... 'அம்மா கிட்ட எதையும் மறைக்காதேன்னு... நான் மறைக்கக் கூடாது, நீ மறைக்கலாமா? ஏன் பெரியவா சம்மதிக்கலை அங்கிள்?''

''தெரியலைம்மா.''

''நிஜம்மாவா?''

''இதெல்லாம் தப்புன்னு அவா எண்ணம். அது கிராமம் இல்லையா. சின்ன வட்டம், கட்டுப்பாடு.''

''பதினாலு வருஷமா?'' மறுபடி பெண் வியந்தது. துர்கா பேச்சு மாற்றினாள்.

சிறிய உணவு, காப்பி... முடிந்தது... ''மடையன் வெறுங் கையோட வந்திருக்கேன்... ஒரு தட்டு வேணுமே'' மகாலிங்கம் பெயருக்கு ஆயிரத்தொன்றுக்கு செக் எழுதி சரெட்டென்று கிழித்து, ''சுபாஷிணி வா...''

அது நமஸ்கரித்தது. வாங்கிக் கொண்டது.

''உன் எல்லா நல்ல அபிலாஷைகளும் பூர்த்தி யாகட்டும். தீர்க்க சுமங்கலி பவ...'' மனசு முழுமையாய் ஆசீர்வதித்தது.

''ஊர்ல இருப்பேளா?''

''இல்லை. நேர ஏர்போர்ட். டெல்லி போறேன்.''



''முடிஞ்சபோது வாங்கோ.''

''எதற்கு?'' அந்த துர்கா மறைந்து விட்டாள். அவருடைய மனசில் சுபாஷிணி இடம் பிடித்தாள். அது காதல், இது வாஞ்சை.

''மகாலிங்கம், இவளை டெல்லிக்கு அனுப்புங்கோ... நான் மேற்கொண்டு படிப்புக்கு ஏற்பாடு பண்றேன். சுபா, ஃபர்ஸ்ட் கிளாஸ் வருமோன்னோ.''

''வரும். நான் உங்களோட ஏர்போர்ட் வரட்டா?''

''வாயேன்.''

''எதுக்குடி?''

''வரட்டும் நீங்க வரேளா, மகாலிங்கம்?''

''இல்லை எனக்கு வேலை இருக்கு... ஸாரி.''

பெண் உள்ளே ஓடி சுடிதாரில் வெளியே வந்தது. இன்னும் சுந்தரியாய் காட்சி தந்தது.

''எனக்கு இவளை ரொம்ப பிடிச்சுருக்கு துர்கா. ஸோ க்யூட். டெல்லிக்கு ஒரு நடை வாங்கோ இரண்டு பேரும். நான் வரேன்.''

கை கூப்பினார்.

கை கூப்பினாள்.

ஒரு காதல் கதை அங்கே நிறைவாயிற்று.

ஏர்போர்ட் லௌஞ்சில் சுபாஷிணியும், அண்டர் செகரட்டரி நாராயணசாமியும் காப்பி குடித்தார்கள். அதிகாரிகள் வரிசை அவருக்கு சல்யூட் அடித்தது.

''உங்க டாட்டரா சார்?''

''யெஸ்... என் டாட்டர் மாதிரி.''

''அங்கிள். ஒரு கேள்வி.''

''கேளும்மா.''

''இன்னும் எங்கம்மாவை நேசிக்கிறேளா?''

''இல்லையம்மா.''

''ஏன்''

''வேற ஒருத்தர் மனைவி இல்லையா, அது தவறில்லையா?''

''பதினாலு வருஷம் லவ் என்ன ஆச்சு அப்போ?''

''மாறிடுத்து.''

''எப்படி?''

''உன் மேல, என் குழந்தைகள் மேல. அன்பா மாறிடுத்து.''

''இவ்வளவு பெரிய லவ் ஃபெயிலியரா...''

''அது ஃபெயிலியர் இல்லம்மா. சக்ஸஸ்ஃபுல் லவ். காதல் சாகலை. அன்பு என்பது ஒரு உணர்வு. உணர்வு சாகுமா? பரவும்.''

''அங்கிள்.''

''சொல்.''

''உங்களுக்கு நான் ஒரு ப்ரஸண்ட் எடுத்துட்டு வந்திருக்கேன்.''

''எங்கம்மா படம். எங்க ஃபேமிலி படம். எனக்கென்னமோ சட்டுன்னு கஷ்டமாயிடுத்து... ட்ரஸ் மாத்தற போது புக்ல வச்சு...''

''எனக்கு இது போதும்.'' ஃபேமிலி படம் எடுத்துக் கொண்டார். மகாலிங்கம், துர்கா, அப்பாவின் அணைப்பில் சுபாஷிணி... துர்கா அணைப்பில் மூத்தாள் பையன்... படம் சிரித்தது.

''இது ஒரு நல்ல குடும்பம் சுபா.''

''ஆமா அங்கிள். அப்பா ரொம்ப நல்லவர்.''



''க்ரேட். வெரி க்ரேட் மேன்.''

''எங்கம்மாவும் க்ரேட் வுமன் அங்கிள்.''

''பயணிகள் கவனிக்கவும். சென்னையிலிருந்து டெல்லிக்குச் செல்லும் விமானம்...''

''சுபாஷிணி, உன் படிப்பு பத்தின கவலையை என்கிட்ட விடு. நன்னா படி. நான் பார்த்துக்கறேன். இந்தா, என் கார்டு, லெட்டர் போடு...''

''எதுக்கு அங்கிள் சிரமம்?''

''இது கடமை துர்கா... சாரி சுபாஷிணி.''

''ஐ... அம்மாவை நீங்க மறக்கலை.''

அவர் பேசாது நின்றார். கண்ணில் நீர் திரண்டது.

பெண் அவர் கன்னத்தில் எக்கி முத்தமிட்டது. ''ஐ லவ் யூ அங்கிள். லவ் யூ ஸோ மச்.''

இது இன்னொரு முத்தம்.

ஆனால் எத்தனை வித்தியாசம்.

''பை...''

''பை...''

நடக்க, மனசு லேசாயிற்று. திறந்தவெளிக்கு வர, எங்கும் வெளிச்சம். விமானம் ஏற, ஒரு சந்தோஷம் வந்தது.

'பட்டணத்துக்குப் போய் கடலில் விழுந்து சாகலாம்' என்று ஒரு கணம் தோன்றியது. அந்தக் காலம். நல்ல வேளை சாகவில்லை.

செத்திருந்தால் துக்கம் மட்டுமே மிஞ்சும்.

இந்த சந்தோஷம் வராது போயிருக்கும்.

தற்கொலை கோழைத்தனம். வாழ்தல் விவேகம். காதல் பொருட்டு தன்னை மாய்த்துக் கொள்ள நினைப்பவன் சுயநலம் எனக்கு எத்தனை துக்கம் பார் என்று காட்டுகிற

தான்தோன்றி அலட்டல். பழிவாங்கும் ஊமைக் குசும்பு. மரணமும் அவனுக்கு விடுதலை தராது. நாணா காதலில் ஜெயித்தார் என்பது உங்களுக்குப் புரிகிறதா? யோசியுங்கள். புரியும். வயசு விவேகம் தரும். தரவேண்டும். நாணாவுக்குத் தந்தது. வயசு விவேகம் தராதவர் உண்டு. பெறாதவர் உண்டு.

## 21

வயதுக்கும் விவேகத்துக்கும் என்ன சம்பந்தம். வயது என்பது அனுபவம். அனுபவ அறிவு விவேகம் தரும் தர வேண்டும். அந்த விவேகம் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள உதவும்.

அனுபவம் என்பது வயதானால் வருமோ? வயசாளியெல்லாம் விவேகியா?

அனுபவமில்லாத வயசாளியும் அனுபவமிருந்தும் அதை அலசி ஜீரணிக்காத மந்த புத்தியும் மனிதரிடையே உண்டு.

அனுபவமில்லாதது கூட கொடுமையல்ல. அனுபவமிருந்தும் அதிலிருந்து கற்றுக்கொள்ளாதது கொடுமை.

அமலநாதனுக்கு நாற்பத்து நாலு வயசு. அமலனின் அப்பாவுக்கு ஓட்டல் பிஸினஸ். கந்து வட்டி வியாபாரம். ஓட்டல் வாசலில் லெண்டிங் லைப்ரரி ஆடியோ காஸெட், பிறகு வீடியோ காஸெட். நிலம் வாங்கி நிலம் விற்கும் விளையாட்டு. எல்லாவற்றிலும் காசு, ஓட்டல், எதிர்ப்பக்கக் கடை முழுக்க அவருடையது. மேலே மேன்ஷன்.

முத்து எடுத்துக் கொண்டிருந்த தூத்துக்குடி- பொட்டல் காடாய் இருந்தபோது வளைத்துப் போட்டார். வளைத்துப் போட்ட இடம் இன்று தங்கமாயிற்று.



''என்னம்ல பைப்பா வருது.?''

''ஃபாக்டரி வருதாமில்ல.''

''தூத்துக்குடிக்கா?''

''பின்ன... இந்த முட்டுச்சந்தாருக்குச் சுத்திட்டுப் போவா வரும். இங்கனதான் ஃபாக்டரி...''

''இரும்பா?''

''உரம்...''

''கெட்ட கேடு சாண உரத்துக்கு இத்தேனி பைப்பா?''

''சாண உரமில்லடே''-விவரம் சொல்ல, உள்ளே வெளிச்சம் படர்ந்தது. தொழிற்சாலை வந்தால் குடியிருப்புகள் வரும். குடியிருப்புகள் வந்ததெனில் கடைகள் வரும். கடைகள் வருமெனில் சகலமும் வரும்.

பிறவி வியாபாரி. பரம்பரை ஞானம். நெடுநேரம் யோசித்து மனைவியின் நகையனைத்தும் வாங்கி காசாக்கி, நிலமாக்கி, நிலத்தில் கட்டடம் எழுப்பி ஓட்டல் நிறுத்தி, கடைகளைப் பரப்பி... அவர் வேகத்துக்குத் தொழிற்சாலை எழும்பவில்லை. கூட இரண்டு வருடங்களாயிற்று.

''என்னம்ல, எழுவது சவரனையும் வெச்சிட்டீரு. பொட்டக் காட்டுல... குட்டிச்சுவர் எழுப்பவா'' அடகுக்கு வாங்கினவர் வியந்தார்.

''மீட்டுறுவேனில்ல...''

''எப்பம்?''

''ஓடு மீன் ஓட, உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு.' வாளை மீனாய்த் தொழிற்சாலை துவங்க, அதன் பயனைக் கொக்கும் கொத்திப் பறந்தது. பெரும் சிறகு விரித்து 'அடிச்சது யோகம்' என்று உயர எழும்பிற்று.

யோகமா கணக்கா... இரண்டும் தேன். ஒன்றுக்குப் பத்து... ஒன்றுக்கு இருபது... ஒன்றுக்கு முப்பது லாபம் கண்டது. கண்டு கொண்டிருக்கிறது. இன்னும் காணும்.

முத்துக் குளிக்கும் பொட்டல்வெளிக் கடற்கரையில் உப்பு வாரிக் கொண்டிருந்த ஆள் காசு வாரினார். கனவான் ஆனார். பிள்ளைகளைப் படிக்க வைத்தார்.

அமலநாதன் ஒரு பிள்ளை அப்பாவுக்குப் பயந்த பிள்ளை. "கிறிஸ்துமஸுக்குப் புள்ளேளுக்கு டிரஸ் எடுக்கணுமில்லா... படிக்கிற புள்ளேகளில்லா"-அம்மா தயங்கிக் கேட்டாள்.

"எடுத்துருவம்... ஒன்றுக்கு நாலுசோடி எடுத்துருவம்" நாலு சோடியும் பள்ளிச் சீருடை... வெள்ளை மேலுடுப்பு காக்கிக் கால்சட்டை வேறு கேட்டால் அடி விழும்.

"உன் வயசுக்கு எனக்குக் கோவணம் தாண்டா இருந்தது. இது போதும்" என்கிற கூப்பாடு வரும். அமலநாதன் முழுக் கால் சட்டை போட்டது கல்லூரியின் போது? சரிகை வேட்டி எட்டு முழம், மேல் துண்டு போட்டது பெண் பார்க்கப் போன போது, கூட்டை முதல் முதல் அணிந்தது கல்யாணத் தின் போது.

இருபது வயதில் படிப்பு முடித்தான். பிறகு ஒட்டலுக்கு வந்து கல்லாவில் ஒருநாள் அமர... " இங்க வேணாம் நீ சாப்புட்டு நா சொல்ற இடத்துக்குப் போ."

விலாசம் கொடுத்தார். அமலநாதன் எதற்கு என்று தெரி யாது போனான். அது நகைக் கடை "உள்ள வாம்ல..." -குரல் கேட்டது. "உக்காரு கிடந்து."

ஒரு மணிநேரம் ஒன்றும் பேசாது நகைக் கடையில் உட்கார்ந்தான்.

"என்னா மாப்பிள்ளை. எதுக்கு வந்திருக்கீரு?" -கல்லா கேட்டது.

"அப்பா அனுப்புனாக..."



"அதான் எதுக்குங்கறேன்?"

"தெரியல."

"இங்கனதான் உமக்குச் சோலி."

"என்ன சோலி?"

"உம் உட்கார்ந்து முழிப்பா விவரம் தெரிஞ்சுக்க." மூன்று மாதங்கள் தெரு வெயிலைப் பார்த்து உட்கார்ந்திருந்தான்.

"ஏலே. இங்கனவா."

இடது கையில் கல் எடுத்து வலது கையில் தங்கம் பிடித்து உரசிக் காட்டினார். உரசச் சொன்னார். உரசி விட்டுத் துகள் ஊதினான். ஓங்கித் தலையில் அடித்தார்.

"தூசாம்ல அது... முட்டா...." ஏச்சும் இழித்தலும் சில சமயம் சுள்ளென்ற தட்டும் கிடைத்தன. அங்கும் இங்கும் நகை கொடுத்துக் காசு வாங்கி, காசு கொடுத்து நகை வாங்கி வர அனுப்பப்பட்டான்.

"நகைக்கடையார் மருமகனா, வாங்க."

"புரியலை. வெறும் பேச்சா- நிசமா... தெரியவில்லை. நாலு வருடங்கள் பொறுத்து நிசம் என்பது தெரிந்தது.

பதினைஞ்சு வருஷம் முன்னே உங்கய்யன் எழுவது சவரன் நகை வெச்சு என்கிட்டே காசு வாங்கி ஏழு வருஷத்துல ஒவ்வொண்ணா மீட்டான். 'முதலு முழுகிப் போச்சுன்னு வித்துராதையா... அத்தினியும் திருப்பி வேணும்'னான். அவன் சம்பாத்தியத்தில் நல்ல நேரம். மூக்குப் பொட்டு முதக்கொண்டுத் திருப்பி எடுத்துட்டான். இருந்தாலும் நான் விக்காதது அவனுக்கு ரொம்ப சந்தோஷம். குடும்ப நகையை அழிக்காதது ஆனந்தம். 'உனக்கென்னா செய்ய'ன்னு கேட்டான்.

'என் பொண்ணை உம் புள்ளைக்கு எடுத்துக்க' ன்னேன். 'நா எடுத்துக்குவானேன். எம்புள்ளையை நீ எடுத்துக்க'ன் னான். சொன்னபடி கடைக்கு அனுப்பிட்டான். .

''மாப்பிள, இது ஆம்பளை இல்லாத சொத்து. எம் பொண்ணு கண் கலங்காம இருக்கணும்னுதான் உம்மைக் கடிஞ்சு பலவிதமா வேலை கத்துக் கொடுத்தது... இன்னும் அஞ்சு வருஷமோ ஆறு வருஷமோ... அப்புறம் இது எல்லாம் உம்மதுதான். சொல்லும். எம் பொண்ணைக் கண் கலங்காம வெச்சுப்பியளா?''

அமலநாதன் தலையாட்டினான். விமரிசையான கல்யாணம். தூத்துக்குடி தூள் கிளப்பியது. கழுத்து முழுக்க நகை, முழங்கை வரை வளையல், காதும் மூக்கும் நெற்றியும் விரலும் வைரம்.

''தேவதை மாதிரியிருக்குல்ல...''-அம்மா கேட்டாள்.

அமலநாதன் தலையாட்டினான். தாலி கட்டினான். விருந்து அனுபவித்துச் சாப்பிட்டான். தலைக்கறிகூடக் கேட்டான். தொடைக்கறியாய்க் கோழி சாப்பிட்டான். கூட பாயாசம் குடித்தான். பார்த்துப் பார்த்துப் போட்டார்கள். கேட்கக் கேட்கப் பரிமாறினார்கள். 'போறும் போடா எந்திரிச்சு' என்று சொல்லாமல் உபசரித்தார்கள். அவனை ஒருவர் உபசரிப்பது அதுவே முதல் முறை.

அதன் பிறகு தலையில் மாமா அடிக்கவில்லை. எப்பவாவது திட்டுமட்டும் விழும். மாமா செத்ததும், தங்க மார்க்கெட் கலகலத்ததும் ஒன்றாய் நடந்தன.

'ஒத்தைப் பொண்ணை வெச்சுக்கிட்டு இருக்கான். ஒருநாள் இல்லாட்டி ஒருநாள் கூப்புட்டுக்கலாம்னுதான். உன்னைய அங்கனே கொடுத்தேன். போறும் சீராடினது வா.''

''மாமி தனியா இருக்காங்களே...''

''அட... வாடா''

கிட்டத்தட்ட எடைக்கு எடை நகைகளோடும் மனைவியோடும் அமலநாதன் வீடு வந்தான். அப்பா உதவியுடன் இன்னும் நிலம் வாங்கி பிளாட் பிரித்துக் கட்டடம் கட்டித் தொழிற்சாலை இன்ஜினீயர்களுக்கு விற்றான். வாடகைக்கு விட்டான்.



''சரியான சோம்பேறி ஆடு நீ...'' -மனைவி தனிமையில் மறைமுகமாய்த் திட்டினாள். 'அதென்ன சோம்பேறி ஆடு?' எக்கித் தின்னத் தெரியாதாம். இடையன் வளைத்துக் கொடுத்தால்-அறுத்துப் போட்டால் தின்னுமாம்.

''போடா, நொள்ள மடையன்'' -அப்பா திட்டினார்.

''அதென்ன, இருட்டினா வூடு வந்துடணுமா? மூஞ்சிய ரவிக்கைக்குள்ள போய் ரா முச்சூடும் உட்கார்றதா? ராத்திரி ஜல்லியடிக்கிறபோது போய் பார்க்கவேணாம்...?

நாப்பது வூடு கட்டியிருக்கு... இன்னும் வகை தொகை புரிபடலை. நீயா எப்ப இதைச் செய்வே?''

அமலநாதனின் நாற்பத்து நாலு வயசில்-அப்பா செத்துப் போனபோது பயமாகவும் இருந்தது. சந்தோஷமாகவும் இருந்தது. வேலை தெரியும் என்றும் தோன்றியது. தெரியாது என்றும் தோன்றியது. கட்டின வீடு சிலவும் ஒரு காரும் நகைக் கடையும் உட்கார்ந்து சாப்பிடலாம் என்கிற பாங்க் பேலன்ஸூம் இருந்தன. இனி என்ன என்கிற பயமும் இருந்தது.

''ஒண்ணு கவனிச்சியா... தூத்துக்குடில பொம்பளை யாளுக்குன்னு ஷாப்பே இல்லை. ஒட்டற பொட்டு பவுடர் மாவு அது இதுன்னு விக்கிற பெரிய கடை இல்லை. போட்டம்னா பிச்சுக்கும்...'' -யாரோ யாரிடமோ பேச, அமலநாதனுக்கு முதன்முறையாய் சுயமாய் ஒரு சிந்தனை ஆரம்பித்தது.

தனக்கென்று இருந்த இடத்தில் உள்ள வாடகை நூல் நிலையத்தை வெளியேறச் சொல்லிவிட்டு ஜெனரல் ஸ்டோர்ஸ் துவங்கினான்.

போட்ட காசை வட்டிக்கு விட்டால்கூட அதிகம் வரும். புரியாது தொழில் துவங்கினான். தூத்துக்குடிக்கு அந்தக் கடை தேவையாய் இருந்தது. ஒரு உண்மைக் கூட்டம் சேர்ந்தது நிஜம். வியாபாரம் ஆயிற்று என்பது ஒரு சாதாரண விஷயம்.

அவனுக்கே உடம்பெல்லாம் புல்லரித்தது. வாழ்வின் முதல் வெற்றி. எவருமின்றித் தானே சாதித்த வெற்றி. மனைவி அதைப் பகிர்ந்து கொள்ளவில்லை. ''மொத்த லாபம் என்னா... நானூத்து நாப்பதா? நாலாயிரம் காமி... அப்புறம் பேசு, எங்கய்யா நகைக்கடைல வியாபாரம் எப்ப டின்னு சொல்லட்டா?'' -அவன் விலகினான். கடையிலேயே இருந்தான். கடைக்குப் பெண்கள் வந்ததும் இதற்குக் காரணம்.

ஒரு பிற்பகலில் கடை ஆட்கள் இரண்டு பேரும் உணவுக் குப் போக, பையன் ஒருவன் மட்டும் தடுமாற, தான் கல் லாவை விட்டு இறங்கி வியாபாரம் செய்தான் அமலநாதன்.

''ஹலோ...'' -இருபது வயதுப் பெண் சிரித்தது.

''வாங்கம்மா...''

''ஃபேஸ்பேக் இருக்கா?''

''இருக்கும்மா...'' -பதில் சொல்லி விட்டுத் தேடினான். 'என்ன அது-ஃபேஸ்பேக்'. யோசித்தான்.

''டப்பாவா? ட்யூப்பா? எண்ணெயா? பவுடரா?''

-தடுமாறினான்.

''ஹலோ...''

''சொல்லுங்கம்மா...''

''நான் அம்மா இல்லை. ஃபேஸ்பேக்னா என்னான்னு தெரியுமா?''

''தெரியலைங்க...''



''அப்ப என்ன தேடறீங்க?''

''அப்படி எதுனா எனக்கும் தெரியாம வாங்கி வெச்சுட்ட மான்னு தேடறேன்...''

சிரித்தாள்.

''அது என்னா, எங்க கிடைக்கும்னு எழுதிக் கொடுங்க... ரெண்டு நாள்ல தருவிக்கிறேன்''-பழைய ட்யூப்பும் கொடுத் தாள். பத்திரிகை விளம்பரம் காட்டினாள்.

அருகே பத்திரிகை பிரித்துப்பேசும்போது வாசனை வீசிற்று. விரல்கள் உரசின.

இரண்டாவது நாளில் ஃபேஸ்பேக் வந்தது. அவள் வரவில்லை.

'தூத்துக்குடில எங்க இருக்கு. அந்தப் பொண்ணு... தெரியலையே?''

-மோட்டார் சைக்கிளில் தேடினான். கிடைக்கவில்லை.

''ஏங்க... யாரோ பொண்ணு எதுவோ கேட்டுதாமே... வந்துட்டுப் போச்சு.''

''ஐயோ...''

''நீங்க வந்தா, அது கேட்டது வாங்கியிருந்தா- இந்த அட்ரஸ்ல என்னைக் கொண்டாந்து கொடுக்கச் சொல்லிச்சு...''

என்னவோ ஒரு பரபரப்பு. மூலிகை தேடும் பரபரப்பு காலில் ஏதோ சிக்கிய பரபரப்பு... நாற்பத்து நாலு வயதில் வந்தது.

பெண் பற்றிய பரபரப்பு நாற்பது வயதுக்குப் பிறகு வருவதில் ஆணுக்கு நஷ்டம் உண்டு. என்ன நஷ்டம் அது...?

## 22

நாற்பது வயசுக்குள் ஒரு ஆண் மகனின் வாழ்க்கை ஒரு நிலைக்கு வந்துவிட வேண்டும். வந்து விடுவது நல்லது. இருபது வயதில் போர் துவங்கி, அந்தப் போரின் முடிவு நாற்பதில் வெற்றியாய் வந்துவிட வேண்டும்.

எதை நோக்கிப் போர்? யாரோடு, எவ்விதம் என்பதெல்லாம் இருபதில் தெளிவாகிவிட வேண்டும். சரியோ தவறோ-களத்தில் இறங்கி, அடியோ உதையோ வாங்கி, தன்னைப் பற்றிய தெளிவு இருபத்தைந்தில் வரவேண்டும்.

வாழ்வுப் போரின் தந்திரம், சூட்சுமம், வலி தாங்கும் உறுதி. அவமானம் தாங்கும் பக்குவம். அஞ்சுவது. அஞ்சாதது பற்றிய ஞானம் முப்பதில் கிடைக்கும்.

முப்பதிலிருந்து முப்பத்தைந்து வயதுவரை போர் உக்கிரமடையும். இரவு பகல் தெரியாது மூர்க்கமாய் போர் செய்யும் தருணம். 'செய் அல்லது செத்து மடி' என்கிற மூர்க்கம் வரவேண்டிய நேரம்.

முப்பத்தைந்திலிருந்து நாற்பதுக்குள் ஒரு மனிதனுக்கு அடையாளம் கிடைத்துவிட வேண்டும். அவர் ஒரு 'நல்ல எழுத்தாளர்' 'சிறந்த ஓவியர்' 'திறமையான வியாபாரி'' 'அருமையான நடிகர்' 'கெட்டிக்கார குமாஸ்தா' 'செருப்புத் தைத்தாலும் சிலை செய்தாலும் எது செய்தாலும் அதில் திறமை தெளிவு உள்ளவர் என்பது வந்து விடவேண்டும்.

இப்படி ஒரு பாராட்டு வரும்போது வயிறு 'சில்' லென்று குளிரும், தோளில் திமிர் பரவும்.

நாற்பத்து நாலு வயசான அமலநாதனுக்கும் இப்படிக்கு அனுபவம் கிடைத்தது-அந்த இருபது வயசுப் பெண் அவளுடைய அம்மாவிடம் இவனை அறிமுகப்படுத்தும் போது...



''தாங்க் யூ அமலநாதன் சார். தாங்க் யூ ஸோமச். உட்காருங்க. அம்மா இவரு அமலநாதன். பஜார்ல கடை வெச்சுருக்காரு. நான் ஒரு பொருள் கேட்டேன்... இரண்டே நாள்ல வாங்கிக் கொடுத்துட்டாரு. நான் என்ன கேட்டாலும் அடுத்த நிமிஷம் வீட்டுக்கு அனுப்பிடுவாரு... தாங்க் யூ ஸோ மச்'' பெருமையுடன் சொல்லியது அந்த இருபது வயசுப் பெண்.

''அது இருக்கட்டுங்க. வேற எதுனா வேணுங்களா? கடைக்கு போன் பண்ணுங்க.''

''சண்டே லீவுதானே கடைக்கு?''

''அதனால என்ன... வீட்டுல போன் இருக்கு. அங்கேயும் செய்யலாம்.''

''சின்ன மெழுகு வர்த்தி இருக்கா?''

''ஆறு அங்குல மெழுகுவர்த்திங்களா?''

''இல்லீங்க... அதைவிடச் சின்னது, எனக்கு வர்ற வாரம் பர்த்டே. சரி. நான் மெட்ராஸ்லேர்ந்து வர வழைச்சுக்கிறேன்.''

''இருக்குங்களே... சாயந்தரம் அனுப்பறேன். அப்பறம்...?''

''கலர் கலரா பலூன் வேணும்... மெட்ராஸ்ல டக்கர் கேக் கிடைக்கும். இங்க நல்ல கேக் கிடைக்குங்களா?''

''பண்ணச் சொல்லலாம்.''

''பேப்பர் ப்ளேட்...''

''எத்தினி வேணுங்க? ஒருபேனா பேப்பர் தரீங்களா''

அமலநாதன் உட்கார்ந்து எழுதினான். மதுரைக்கும் சென்னைக்கும் போன் போட்டு வரவழைத்தான்.

'சுண்டைக்காய் காப்பணம் சுமைக்கூலி முக்கால் பணம்' ஆனால் சுண்டைக்காய் இனித்தது.

இறுக்கமாய் டி ஷர்ட் போட்ட பெண் இதுவரை பக்கத்தில் உட்கார்ந்ததேயில்லை. இப்போது அருகில் அமர்ந்தது. அதனால் தித்தித்தது.

அமலநாதன் வீட்டின் போன் ஒலித்தது.

''ஸாரி டு டிஸ்டர்ப் யூ. என்கிட்ட மஸ்காரா இல்லை. அது இல்லாத என் முகம் நல்லாவே இருக்காது. நாளைக்கு பர்த்டே. எங்கே கிடைக்கும்?''

''சாயந்தர் கொண்டாரேம்மா.''

சுண்டைக்காய் கால் பணம். சுமைக்கூலி மூணு பணம்.

''மஸ்கரா என்ன விலை?''

''எழுதியிருக்கிற விலை. ஆனா வேணாம்.''

''ஏன்?''

''என் ப்ரஸண்ட்டா இருக்கட்டும்.''

''ரியலி? தாங்க்யூ. தாங்க் யூ ஸோ மச். நாளைக்கு நீங்களும் பார்ட்டிக்கு வரணும்... மூணு மணிக்கு கேக் வெட்டறேன்.. ஆறு மணிக்கு எல்லாரோடவும் சினிமா போறேன்.''

பரிசு கொடுத்த பிறகுதான் அழைப்பே வந்தது. அதனால் என்ன? இண்டிமேட் மணக்க போனபோது கை குலுக்கி வரவேற்பு கிடைத்தது.

''இது போதாது... இத்தினி பேர் ஒரு கார்ல எப்படி சினிமா போறது?''

''என் கார் இருக்கு. அதுல பாதி பேர் வாங்க.''

''நீங்களும் வாங்களேன் சினிமாவுக்கு.''

''சரிங்க...''

இருட்டில் இருபது வயசுப் பெண் அருகே உட்கார்ந்து கொண்டது சாதாரண செய்கை. வயசாளிதானே என்கிற எண்ணம்.



உடம்பு முதிர்ந்த அளவு மனசு முதிரவில்லை. கை பட்டது. கால்பட்டது. கேசம் பட்டது. பட்ட இடமெல்லாம் சுட்டது.

''யார் அது?''

இடைவேளையில் பதினாறு பேருக்கு கூல்டிரிங்ஸ் ஆர்டர் செய்தான்.

''ஜெனரல் ஸ்டோர்ஸ் ஓனர். ஃபேமிலி ஃப்ரெண்ட்'' மரியாதை தரப்பட்டது. இதைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாது போயிற்று.

இரவு படுக்கையில் மனசு அலைந்தது. உடம்பு புரண்டது. என்னென்னவோ விழிப்பு நிலைக் கனவுகள் வந்தன. அந்தக் கனவுகள் கதை மாதிரி தொடர்ந்தன.

''ஐ லவ் யூ அமலநாதன்''

''இல்லீங்க, நான் கல்யாணமானவன்.''

''அதனால என்ன? ஐ லவ் யூ.''

''எனக்கு வயசாயிடுச்சுங்க.''

''ஸோ வாட்? யூ லுக் யெங்.''

''நிசங்களா?''

''ப்ராமிஸ்.''

''வேற ஜாதி ஆச்சுங்களே.''

''எனக்கு உங்க ஜாதியைத்தான் புடிக்கும்.''

''நான் என்ன ஜாதி தெரியுங்களா?''

''தெரியுமா, பணக்கார. ரிச்... ரிச் மேன்.''

அவனே அவனாகவும் அவளாகவும் பிரித்தான். தானே இருவருக்கும் வசனமெழுதினான்.

'கண்மணி நீ வரக் காத்திருந்தேன்
ஜன்னலில் பார்த்திருந்தேன்'

"என்னா தூக்கம்? விடிஞ்சுடுச்சே" மனைவி எழுப்பினாள்.

"சும்மா கிடடி"

"யாரைச் சொல்றீங்க?"

"உன்னையத்தான். போ அந்தாண்ட."

கனவு எதனாலும் கலைய விரும்பவில்லை. எவரும் இடைஞ்சலாக வருவதையும் விரும்பவில்லை.

அவள் கேட்ட கொண்டை ஊசி, தலைவலி மாத்திரைக்குக் கூட வீட்டுக்குப் போனான்.

"தாங்க் யூ. தாங்க் யூ ஸோ மச்" அவள் குரல் பிரணவ மந்திரம் போல், காதில், நெஞ்சில் ரீங்காரித்துக் கொண்டே இருந்தது.

"அடிக்கடி அந்த வீட்டுக்குப் போறீங்களாமே எதுக்கு?" மனைவி கேட்டாள்.

"வியாபாரம்னா அப்படித்தான்."

"என்ன வியாபாரம்?" மறுபடி கேட்டாள்.

கோபம் வந்தது.

"போ அந்தாண்ட... போன் பேசறப்ப தொந்தரவு பண்ணிக்கிட்டு."

அந்தக் கோபம் ஏதோ தவறு நடக்கிறதென்று காட்டிக் கொடுத்தது.

என்ன தவறு என்று மனைவிக்குத் தெரியவில்லை. அமலநாதனுக்கும் தெரியவில்லை. இதை யாரோடும் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. கடைப் பையன்கள் கண்ணுக்குள் சிரித்தார்கள். முதலாளி பரபரத்து எழுந்திருப்பதைக் கண்டு விஷமமாய் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

அமலநாதன் தன் உடம்பில் இளமை திரும்ப பல பிரயத்தனங்கள் செய்தான். குறைவாகச் சாப்பிட்டான்.



அதிகம் உடற்பயிற்சிகள் செய்தான். சருமம் பொலிவுற பலவித பசைகள் தடவிக் கொண்டான். எந்நேரமும் வாசனையாய் இருக்க முயற்சித்தான். கட்டம் போட்ட சட்டையிலிருந்து காலர் இல்லாத கோட்டு வரை தைத்துக் கொண்டான்.

அவள் மீது உள்ள ஈடுபாடு என்ன என்று தெரியாது வேதனைப்பட்டான்.

ஒரு ஞாயிறு விடுமுறை நாளில் கடை திறந்து, பாதி மூடி "நல்லா இருக்கீங்களா?" என்று சும்மா போன் செய்தான்.

"இன்னிக்குக் கடை உண்டா?"

"சும்மா. உங்களுக்குன்னு திறந்து வெச்சிருக்கேன். காதுல மாட்டற அயிட்டம்ஸ் நூறு வந்துருக்கு. அடுக்கணும்."

"நூறா... நான் பார்க்கணும்."

"வாங்களேன்."

வந்த பிறகு ஷட்டர் மொத்தத்தையும் உள்ளே யிருந்தபடி கீழிறக்க, அவள் எதிலும் கவனமில்லாது காதுத் தோடுகளை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

ஒருவேளை அவளுக்கும் விருப்பமோ?

"இந்த நாலு எடுத்துக்கட்டா?"

"மீதி தொண்ணூத்தாறு வேணாமா?"

"ஐயோ, காசு எங்க இருக்கு?"

"காசு எதுக்கு?"

"வாட்?" குரலில் அந்நியம் வந்தது.

அவன் தன் மனசைச் சொன்னான்

அவள் ஓரக்கண்ணால் ஷட்டர் அடைபட்டதைப் பார்த்தாள்.

"கதவு மூடிக்கிட்டுப் பேசினா தப்பாயிரும் திறந்துருங்க. நிதானமா உட்கார்ந்து பேசலாம்..." சிரித்தாள்.

கதவு திறக்க, சட்டென்று சகலமும் உதறிவிட்டுக் குருவி மாதிரி வெளியே ஓடிவிட்டாள்.

முதல் வேலையாய் வீட்டில் போய் நடந்தது அனைத்தும் சொன்னாள்.

''ஓடிட்டே இல்லே. உன்னையப் பத்தி தப்பா ஊர் முழுக்க விஷயம் பரப்பிடுவேன். இன்னிக்குச் சாயந்திரத்துக்குள்ள கடைக்கு வரலே... அசிங்கப்படுத்திடுவேன்.''

அமலநாதன் பேசியது அவள் அம்மாவுக்கும் கேட்டது. வீட்டுத் தலைவரிடம் விவரிக்கப்பட்டது.

இரவு மறுபடி அவளுக்கு போன் செய்து மிரட்ட, அது பதிவு செய்யப்பட்டது. போலீஸ் துணை நாடப்பட்டது.

மறுநாள் அவனை, அவள் வீட்டுக்கு அழைத்தாள். அவனுக்காகப் பத்து பதினைந்து பேர் காத்திருந்தார்கள்.

அவன் படியேறியதும் உள்ளே இழுத்துக்கொண்டு போய் அழுத்தினார்கள்.

''உங்கப்பா எப்பேர்ப்பட்ட உத்தமன். அவருக்குப் போய் இப்படி ஒரு புள்ளையா? ஒழுங்கா இருந்தே பொழைச்சே. இல்லே... வெளியே தலைகாட்ட முடியாது'' என்ன சொல்றே?''

விழித்தான்.

மன்னிப்புக் கேட்கச் சொன்னார்கள்.

மன்னிப்புக் கேட்டான்.

வெளியே வந்து மோட்டார் சைக்கிளில் ஏறி, பேய் மாதிரி திசை தெரியாது பறந்தான். அழுதுகொண்டே ஓட்டினான். தொண்ணூறு கிலோ மீட்டர் வேகத்தில் சென்று பெரிய மரமாய்ப் பார்த்து வண்டியை மோதினான். ஊருக்குள் விஷயம் பரவும் முன்பு தானே முட்டிக் கொண்டு செத்துப்போனான்.



அடி வாங்காது வளர்ந்த பிள்ளை இல்லையா? சின்ன அவமானம் கூட தாங்காமல் தன்னை மாய்த்துக் கொண்டது.

இளமையில் புத்தியை-கண்களை மூடிக்கொண்டிருந்துவிட்டு, நடுவயதில் தானே திறந்து, மாறுகண் பார்வையில் தவறு செய்துவிட்டது.

''அப்ப இதெல்லாம் சின்ன வயசுல ஆடிடறது பெட்டர்... வயசாய்ட்டு வெச்சுக்கிட்டா அவமானம் அதானே' கேள்வி வரலாம்.

'ஆடு... ஆடாதே' என்கிற அறிவுரையெல்லாம் யாரும் சொல்லித் தர முடியாது. சொல்லி எவரும் புரிந்து கொள்ள முடியாது. அப்பாவின் ஆளுமையின் கீழ் அடங்கி விழி பிதுங்கிய அமலநாதன். நாற்பத்து நாலாவது வயதில் ஆடத் துவங்கி அமைதியான விஷயம் இது.

ஆளுமையே இல்லாமல் அடங்கி, இளமையில் சுயமாய் தனக்கு விலங்கு போட்டுக் கொண்ட நிறையபேரைத் தெரியும். அவர்களின், அவசியம் கருதி மனசை, உடம்பைப் பூட்டிக் கொண்ட ஒரு நண்பர் கடைசிவரை தன் விலங்கை அறுக்கவில்லை.

''எப்படிங்க?'' என்று அவரிடம் கேட்டேன்.

''பழக்கமாயிடுச்சு பாலு'' என்றார். அந்த நண்பர் அவர் அனுபவம்..

## 23

'ஓஷோ' என்று அன்புடன் அழைக்கப்படும் பகவான் ஸ்ரீ ரஜனீஷ் சொல்கிறார்:

''உண்மையில் மனித வர்க்கத்தைத் தவிர, வேறு எந்த மிருகமும் காமவெறி கொள்வதில்லை. பாலுணர்வு மிருகங்

களுக்கும் உள்ளது. ஆசை எப்போது எழுகிறதோ அப்போது அவை-இயற்கை நிர்ணயித்தபடி அனுபவிக்கின்றன.

ஆனால், மனிதனோ பாலுணர்வை அடக்கி வைப்பதன் மூலம் காமம் மிகுந்த மனத்தை உருவாக்குகின்றான்... அவன் அதிகம் அடக்கி வைக்க... அதிக காமவெறி பிடித்தவனாக ஆகிறான். ஏனெனில், நீ எதையெல்லாம் அடக்கி வைக்கிறாயோ, அது உனது ரத்தத்துக்குச் செல்கிறது. உனது எலும்பினுள் செல்கிறது. அது உனது உருவத்தின் பகுதியாக மாறுகிறது...

நீ எதை அடக்கி வைக்கிறாயோ, அதுதான் முன்னால் வந்து உன் மனத்தில் நிற்கும். உனது அன்புக்குரியவள் அருகே இல்லாதபோது, நிலவில் அவளுடைய முகத்தைப் பார்ப்பாய். அவள் உன்னுடன் இருந்தால், நீ ஏன் நிலவில் அவளைப் பார்க்கப் போகிறாய்?

எப்போது நிலவை வெறுமே நிலவாகப் பார்க்கிறாமோ, அப்போதுதான் நீ ஆரோக்கியமாக இருக்கிறாய் என்று பொருள். உன்னுள் அடக்கி வைத்திருப்பது உன்னிலிருந்து வெளிப்பட்டு ஏதோ ஒரு மாயை உன்னைத் தடுமாற வைக்கிறது. இந்தத் தடுமாற்றம் இன்னும் அடக்கி வைக்கும் பயத்தைத் தருகிறது. அதிகம் அடக்கி வைக்க... தடுமாறுதல் மிக உக்கிரமாகிறது...''

காமம் என்பது தவறு என்று எந்த மதமும் சொல்லவில்லையே? திருமணம் என்கிற அமைப்பை எல்லா மதங்களும் ஆதரிக்கின்றனவே? ஒரு அழகான வரைமுறையை வகுத்திருக்கிறதே, அதற்குச் சட்டதிட்டங்கள் உள்ளனவே? இவை நன்மை பயப்பன அல்லவா...? கேள்வி வரும்.

இப்படிக் கேள்விகள், யோசனைகள், எது சரி, எவ்விதம், எப்படித் தவறு... இவற்றையெல்லாம் யோசிக்கவே ஓஷோ



பேச்சு மொழிபெயர்ப்பிலிருந்து சிலவற்றைத் தந்திருக்கிறேன்.

''இஷ்டத்துக்கு விளையாடு... யார் கை வேணா பிடிச்சு இழு' என்று ரஜனீஷ் சொல்லவேயில்லை. 'காமம் தவறு, மோசம், கேவலம் என்று தயவு செய்து நினைக்காதே. அது மிகக்கடும் விளைவுகளை ஏற்படுத்திவிடும்... அடக்கி வைத்தல் தீமை தரும்' என்கிறார் அவர்.

அடக்கி வைத்தலில் ஜெயித்தவர் உண்டு என்று எவரேனும் உதாரணங்கள் காட்டக் கூடும் உங்களுக்கு. பெரிய மதத் தலைவர்களை, ரிஷிகளை, முனிவர்களை, சித்தர்களை அடையாளம் காட்டலாம்.

அவர்களை மறுப்பது நமது வேலையல்ல. ஒரு விஷயத்தின் சகல முகங்களையும் பார்க்க முயற்சி செய்வோம். வைராக்கிய புருஷர்களையும் கவனம் கொள்வோம்.

ஆனால், மகா விரதர்களை உதாரணம் காட்டுவதற்குப் பதிலாக, நான் நமது சமூகத்திலிருந்து சாதாரணமாகப் படித்து, மத்தியதர வாழ்க்கையிலிருந்து பலவகையான இன்னல்கள் அனுபவித்து, இன்று நல்ல நிலையில் இருக்கும் ஒரு சினிமா நடிகரை உதாரணம் காட்டலாம் என்று கருதுகிறேன். அவசியம் கருதி இளமையிலேயே தன் மனசை, உடம்பைப் பூட்டிக் கொண்ட அந்த நண்பரிடம் பேசி, அவர் அனுபவத்தை அவர் அனுமதியுடனே எழுதுகிறேன்...

தென் தமிழ்நாட்டின் சிறிய கிராமத்திலிருந்து வந்தவர் அவர். பெயர் ராமு என்று வைத்துக்கொள்வோம்.

ராமுவுக்கு வாழ்க்கையில் ஏதாவது சாதித்தாக வேண்டும் என்கிற வெறி. இளம் வயதிலேயே ஏற்பட்டுவிட்டது. சென்னைக்கு வந்து குடியேறி தனது அக்காவிடமும், அக்கா புருஷனிடமும் அதீத அன்பை-மரியாதையைத் தன் நல்ல நடத்தையால் பெற்று, சினிமாவுக்குக் கடுமையாய் முயற்சித்துக் கொண்டிருந்தான்.

அக்கா புருஷனுக்கு விருப்பமில்லை.

"என்னாத்துக்கு ஒரு கேடுகெட்ட சமாச்சாரத்துக்காக உன் நேரத்தையும் புத்தியையும் செலவழிக்கற?"

"என்ன கேடு அத்தான் அதில்?"

"தப்பான இடம் மைத்துனனே. மது, மாது போன்ற சகல தீங்குகளும் உள்ள இடம் சினிமா."

"சினிமால மட்டும்தான் இவை உண்டா? வேறு இடத்தில் இல்லையா?"

"இருக்கலாம்... அங்கே அதிகம்."

"நமக்கு சினிமா தெரிஞ்சு அளவுக்கு ஹார்பர் பத்தித் தெரியாது. ரயில்வே பத்தித் தெரியாது. எல்லா இடத்துலயும் நல்லது கெட்டது இருக்கு அத்தான் நாம சரியா நிக்கணும்."

"அதான் என் கவலை."

"உங்களுக்கு என்ன கவலை?"

"ஊர்ல பேசுவாங்க-இங்க மெட்ராஸுக்கு வந்து அக்கா வீட்டுல இருந்து கெட்டுப் போயிட்டான்னு... உனக்கு சின்ன வயசு ராமு."

"அப்ப ஒண்ணு செய்யலாம். நான் கெட்டுப் போகாம இருந்தா, நம்ம வீட்ல இருந்தே சினிமாவுக்கு ட்ரை பண்ணலாமா? என்னிக்கு நான் கெட்டுப் போனதா நீங்க நினைக்கிறீங்களோ, அன்னிக்கு நான் வெளியே போயிட லாமா?"

"அடே போப்பா."

"அத்தான்... என்னால உங்களுக்கோ அக்காவுக்கோ ஒரு கெட்ட பேர் வராது. இது என் தாய் மேல சத்தியம்."

"அடட...என்ன இது? ஒரு பேச்சுக்குச் சொன்னா...?"

"அப்படி உங்க மனசு நோகும்படியா நான் நடந்துட் டேன்னா ஊர் திரும்பமாட்டேன். ஓடற லாரிலயோ,



ட்ரெயின்லயோ தலையைக் கொடுத்துட்டு ஒரேயடியா போயிடுவேன்."

"ராமு" -அக்காவும், அத்தானும் சேர்ந்து கத்தினார்கள்.

"பயப்படாதீங்க. அது இல்லை என் நோக்கம். என் நோக்கத்துக்கு நீங்க இடைஞ்சலா இருந்துடக் கூடாதுன்ற துக்காக இத்தனையும் சொல்றேன். ஒருவேளை எவனாவது பொறாமை பிடிச்சவன் 'ராமு குடிக்கிறான்... பொண்ணு கூடச் சுத்தறான்' னு சொன்னா அப்படியும் இருக்கு மோன்னு நீங்க நம்பிடக் கூடாதுங்கறதுக்குச் சொல்றேன்."

இனி-

இளமையில் சுயமாய்த் தனக்கு விலங்கு போட்டுக் கொண்ட அந்த அனுபவத்தை, ராமுவின் வாயிலாகவே சொல்கிறேன்.

"இருபத்திரண்டு வயசு. நல்ல உடல்வாகு. மாடு மாதிரி இருப்பேன். தினமும் 'எக்ஸர்ஸைஸ்' பண்ணுவேன். ஓடுவேன். முகம் அழகு கெட்டுறக் கூடாதுன்னு அடிக்கடி ஈரத் துணில முகம் துடைச்சுக்குவேன். கெட்ட எண்ணம் தான் முகத்தைப் பாழாக்குதுன்னு. எந்தக் கெட்ட எண்ணமும் வராம இருக்க முயற்சி செய்வேன்.

ஒரு படத்துல நடிக்க வாய்ப்புக் கிடைச்சது. சின்ன ரோல். மனசு சிதறினா 'டயலாக்' மனப்பாடம் பண்ண முடியா துன்னு தனியா ஒரு மரத்தடில போய் உட்கார்ந்து பொட்ட நெட்டுரு பண்ணுவேன். மத்தவங்க கிட்டே டெக்னிக்கல் விவரங்கள் கேட்டுத் தெரிஞ்சுக்குவேனே தவிர, இந்த அம்மா யாரு?' 'அந்த நடிகையாரு?' ன்னு மறந்துபோய் கூடக் கேட்க மாட்டேன். அறிமுகப்படுத்துவாங்க. 'வணக் கம்மா...' -இந்த ஒரே வார்த்தை. அதோட சரி.

நான் ராஜா வேஷம். அந்தம்மா ராணிவேஷம் நெருங்கி உட்காரணும். அப்போ, பக்கத்துல உட்கார்ந்திருக்கிறது பொம்பளை இல்லை... மரம்னு நினைச்சுக்குவேன்.

'இன்னும் நெருக்கமா லவ் சீன்ல நடிக்கணும் ராமு...' -டைரக்டர் சொல்வார்.

நானும் நடிப்பேன்.

ஷூட்டிங் முடிஞ்சு வீட்டுக்கு வந்து பச்சத் தண்ணில குளிச்சுட்டு 'ராமாராமா' ன்னு கண்களை மூடி உட்கார்ந் துடுவேன். மனசுக்குள்ள அந்தம்மா உருவம் முகம் வராப்ல இருந்தா, எழுந்து விறுவிறுன்னு நாலு தெருவேகமா நடப் பேன்... இனி நடக்க முடியாதுன்னு நினைக்கறப்ப தூங்கப் போயிடுவேன். கட்டை மாதிரி தூங்கிப் போயிடுவேன்.

காலைல எழுந்தா உலகத்தையே ஜெயிச்சுட்டம்னு படும். 'ஊரையே கலக்கற லேடி அந்தம்மா... என்னை ஒண்ணும் பண்ண முடியலை' ன்னு கர்வம் வரும்.

ரெண்டு மூணு படம் வந்தது. ரோட்ல நடந்தா அட...ராமுன்னு வாங்க.

எனக்குச் சோதனை வந்தது.

நடிகையால வரலை.

ரசிகையால வந்தது.

அது, எங்க அக்காவைவிட ரெண்டு வயசு மூத்தது.

'தம்பி நல்லாயிருக்கீங்களா... உங்க படம் பார்த்தேன். ரொம்ப நல்லா செய்திருந்தீங்க' ன்னு வந்தது.

படங்கள் நிறைய வர ஆரம்பிச்ச நேரம்... நான் தனியா ஒரு வீடு எடுத்துக்கிட்டு அடிக்கடி அக்கா வீட்டுக்குப் போய் வந்துட்டிருந்தேன்.

அந்தம்மா ஒரு நாள் என் வீட்டுக்கு வந்தது. டிபன் பாக்ஸ்ல எனக்குப் புடிச்ச பலகாரம் கொண்டாந்திருந்தது.

'ஏம்மா. எதுக்கு இதெல்லாம்னு?' கேட்டேன்.

'எனக்குக் குழந்தைங்க இல்லை. உன்னை என் புள்ளையா நினைக்கிறேன்'னு சொன்னது.



என் அம்மா வயசு அதுக்கு இல்லை. ஆனாலும் அம்மான்ற யோக்யதையோட பேசறப்ப பிடிச்சிருந்தது.

எல்லோரையும் தாயாரா நினைக்கிறது நல்லாவிஷயம். ஆனா, நடைமுறையில முடியுமா?

எனக்கோ இருபத்துநாலு வயசு. மனசு குரங்கு, பேய். நெல்லு கீறினா அரிசி வராப்ல, எங்கியோ உடம்புக்குள்ள சின்னூண்டா ஒளிஞ்சுட்டிருக்கறதைக் கீறி விட்டா, பெரிசா பேய் வரும், வந்தது. என் உள்ள இருக்கற பேய் பிரமாண்டமா வந்தது.

அது என்னை அடிச்சுத் தின்னு கவுத்துப் போட்டுருக்கும். 'யப்பா... பொழைச்சேன்' என்று ராமு சொன்னபோது அவர் உடம்பு சிலிர்த்தது. கண்கள் எங்கோ பரவ...

விட்ட இடத்திலிருந்து மறுபடியும் அவர் தொடர்ந்தார்...

## 24

**ச**ந்தைக்குப் போகிற வண்டியில் ஏறிக்கொண்டு வெட்டிப் பேச்சுகள் பேசிச் சிரித்தபடி மலை முகடுகளைப் பார்த்தபடி தொலைதூரத்தில் கோட்டை வாசல் மாதிரி வளைந்திருக்கும் மரங்கள் அடர்ந்த குளுமையான சாலை யில் கதைகளைக் கேட்டுக் கொண்டே போகின்ற சுகம் இனி வாழ்க்கையில் வரவே போவதில்லை என்று ராமுவுக்குத் தெரிந்துவிட்டது. மோரில் பிசைந்த கம்பஞ் சோறு, கடுக் கென்ற காரமாங்காய் பசி வேளையில் எத்தனை சுவை. அதை நாக்கு அறியவே போவதில்லை இனி என்று தோன்றியது.

விடிகாலை ஐந்து மணிக்கு கார் வரும், ஏழு மணிக்கு மேக்கப் முடியும். எட்டு மணிக்கு ஷூட்டிங் துவங்கும்.

இரண்டு ஷாட் எடுத்துவிட்டுப் பெரிய நடிகர்கள் வந்த வுடன், 'இருங்க தம்பி' என்று உட்கார வைத்து விடுவார்கள். கண் சொருகுகிற நேரத்தில் 'வாங்க வாங்க' என்று கூப்பிடு வார்கள்.

''வெரிகுட். நல்லா பண்ற இன்னும் இம்ப்ரூவ் பண்ணிச் செய் ராமு. டேக் டு''

''ஏதாவது மாத்தம் உண்டா சார்?''

''ஒரு மாத்தமும் இல்லை. இம்ப்ரூவ் பண்ணிச் செய்...'' -அதட்டல் வரும்.

''என்ன இம்ப்ரூவ்மெண்ட்?'' -விழிப்பான், இன்னும் உயிர்த் துடிப்பாய் நடிப்பான்.

''ப்ரேக்... சோறு தின்னுட்டு வா. முத ஷாட் உன்னுது.''

சோறு தொண்டையில் இறங்காது, நடித்த டென்ஷன் குறையவே பதினைந்து நிமிஷங்கள் ஆகும். படுத்துத் தூங்கி விடலாமா என்று தோன்றும். ஓர் அயர்ச்சி, படபடப்பில் வந்த வேதனை வதைத்தபடி இருக்கும்.

''ராமு ஏன் நெர்வஸா இருக்கே? ரிலாக்ஸ் பண்ணிக்க.''

''எப்படிங்க?''

''தம் அடி.''

''சிகரெட்டா? விஷமில்லையா அது? உயிர்க்கொல்லி இல்லையா? கடவுளே... வேண்டாங்க.''

அரை வயிறு சோறு உண்டு, மறுபடி மேக்கப் போட்டுப் படபடப்பாய்ப் பேசி நடிக்க, அழுது புரண்டு சண்டையிட்டு, எட்டு மணிக்கு இரவு 'பேக்கப்' என்று கத்தியதும், உடம்பில் காற்று சில்லென்று படுவது கொஞ்சம் உறைக்கும். இரவு கொஞ்சம் வாய்க்கு ருசியாய்ச் சாப்பிட்டுவிட்டுப் படுக்க, பகல் சூட்டில் கண் எரியும். உடம்பு கணுக்கணுவாய் வலிக்கும். மூலச் சூடும், மூத்திரச் சூடும், மண்டைக் கொதிப்பும் தெரியும்.



''அரை பாட்டில் சோடா சேர்த்து மடமடன்னு கோழிக் கறியோட சாப்பிடு. காலைல பளிச்சுன்னு எழுந்திருக்க லாம்.''

''ஐயோ- குடியா... மகாபாவம். அது உடம்பை, புத்தியைக் கெடுக்கும் விஷயம்.''

''அட்லீஸ்ட் புகையிலை போடேன்... ஒரு அமைதிக்கு.''

''நான் நடிகன். எனக்குச் சிரிப்பு முக்கியம். பல் வரிசை பிரதானம். உச்சரிப்புத் தெளிவு, உயிர் நாடி, புகையிலை தொழில் துரோகம். அது தவிர இதுவும் விஷம் உயிர்கொல்லி வேண்டாம்.''

''ஒண்ணுசெய். ரிலாக்ஸ் வித் வுமன். நம்ம பாபு கிட்ட கேட்டா...''

''ராமா... திருச்செந்தூர் முருகா... என் சிவனே... உடம்பு கெடுதல் மட்டுமில்லை. ஊர் பழிக்கிற அவமானம் இதில் உண்டா... ராமு வரமாட்டான். இதற்கு ஒரு நாளும் வரமாட்டான்.

ராமு யாகசாலை நெருப்பு மாதிரி வளர்ந்தான். ஒளி யுடன் மிளிர்ந்தான்.

*'அக்னயே ஸ்வாஹா...*
*உழைப்பே பசும் நெய்*
*ஒழுக்கமுள்ள வாழ்வே சமித்து*
*ஸ்டூடியோவே யாக குண்டம்*
*வசனங்களே வேதமந்திரம்*
*டைரக்டரே ரிஷி*
*புரோட்யூசரே அரசன்*
*தமிழ்நாட்டு மக்களே முப்பத்து முக்கோடி தேவர்கள்'*

தழல் கொழுந்துவிட்டு வலம் சுழன்று தகதகவென்று எரிந்தது.

''ராமு தம்பிதானே... அற்புதமான ஆளு. தொந்தரவே வராது. ஜூனியர் ஆர்ட்டிஸ்ட் பேமெண்ட் தொந்தரவு... தவிச்சேன். டக்குன்னு கழுத்துச் சங்கிலியைக் கழட்டிக் கொடுத்தது. 'வெச்சு சமாளிங்கண்ணே படம் முடிஞ்சு தாங்க'ன்னுச்சு. நாலு சவரன் சங்கிலி. படம் ரிலீஸ் அன்னிக்கு அஞ்சு சவரனா போட்டேன். சவரனை வுடு. இப்படிக்கழட்டி எந்த நடிகன் தருவான்? போடு. ஹீரோவா போடு, நல்லா ஓடும் படம்.''

அந்தக் கிராமத்து இளைஞனைத் திரையுலகம் உயர்ந்த ஹீரோவாய் வாரி அணைத்துக்கொள்ள பல காரணங்கள். அதில் அவனுடைய ஒழுக்கமும் ஒன்று.

''ஏன் ராமு. அம்மா அடிக்கடி வருதே... அது யாரு? டிபன்பாக்ஸ் சாப்பாடு எல்லாம் எடுத்தாருதே?''

''எங்க அம்மா மாதிரி...''

''சின்ன வயசா தெரியுது.''

''சித்தி... ஒண்ணுவிட்ட சித்தி.''

''அதான் பார்த்தேன். ராமு தப்புத் தண்டாவுக்கெல்லாம் போவாதுன்னு தெரியும். இருந்தாலும் கேட்டேன். தப்பா நினைச்சுக்காதே.''

எல்லா நாளுமா ஷூட்டிங்? எதனாலோ சில நாள் கான்சல் ஆகும். நல்ல தூக்கம் போட நேரம் கிடைக்கும், தாண்டல், பஸ்கி... வியர்க்க வியர்க்க செய்ய முடியும். சமையலுக்கு ஆள் போட்டிருந்தது. நண்பர்கள் சிலர் உதவிக்கு இருந்தார்கள். செய்யும் வேலை பிடித்திருந்தது. காசும், மதிப்பும் இருந்தது.

எட்டு வயது மூத்த சுப்பையா அண்ணாச்சி நல்ல துணை. ஆலோசகர். விவாதம் பண்ணுவதில் நிபுணர். இலக்கிய வாசனை உள்ளவர். அரசியல் ஈடுபாடும் செல்வாக்கும் உள்ளவர்.



''ஏன் ராமு... இந்தப் படத்துல கணவன்-மனைவியா கட்டில்ல படுத்து நெருங்கி நடிச்சியே... கஷ்டமா இல்ல...?''

''என்ன கஷ்டம் அண்ணே?''

''உணர்ச்சி வசப்படலை?''

''படலாம், ஆனா கால் ஜோடு பிஞ்சிடும்.''

''முறைப்பான பெண்ணோ?''

''முனைப்பான பொண்ணு. அது டைரக்டர் ஆளுண்ணே.''

''போச்சுடா... இப்ப நடிக்கற படத்துல உள்ளது கொஞ்சம் படிச்ச புள்ளே... சோஷியல் டைப்.''

''அண்ணாச்சி, எனக்குக் கல்யாணத்துல விருப்பம் இல்லை இப்போதைக்கு.''

''யாருடா கல்யாணம் கட்டச் சொல்றாங்க?''

''அப்ப எதுக்கு இந்தச் சிந்தனை?''

''சும்மா ஒரு சந்தோஷம்தான்.''

''அண்ணாச்சி... நாளைக்குக் கட்டற பொண்ணு இப்ப எங்கனையோ யாரோடோ சந்தோஷமா இருக்கறதா வெச்சுக்கலாமா.''

''எலேய்?''

''பொங்குது இல்ல... நாம கட்டற பொண்ணு அப்படி இருக்கணும்னு நாம எதிர்பார்க்கறோம். அப்ப நாமும் அதே மாதிரி இருக்கணும் இல்லை?''

''டேய்... நீ வயசுல சின்னவன். இல்லைன்னா கால்ல விழுந்துருவேன்.''

''அண்ணாச்சி... நான் பொசும்பன் இல்லை. எனக்கு ஆவலாதி உண்டுதான். நம்மூர்ல சூதாடின்னா தலை எழுத்து' ன்னு வுட்டுருவான். திருடன்னா 'வறுமை' ன்னு மன்னிச்சிருவான். குடிகாரன்னா 'ஏண்டா இது' ன்னு

அலுத்துக்குவான். கொலை கிலை பண்ணினா 'கோவக் காரன்' னு ஒதுக்கிடுவான். பொம்பளை விஷயத்துல அத்துமீறினா மட்டும் இந்த ஊரு ஜனம் மன்னிக்கவே மன்னிக்காது. 'சண்டாளப்பாவி' ன்னுடும். உடனே 'கேடு கெட்ட நாய்'னு சொல்லும், செக்ஸ் அடுத்தாளோட- அவங்க வாழ்க்கையோட சம்பந்தப்பட்டதுண்ணே. இன்னொரு ஜீவன் சம்பந்தப்பட்டது அது அழிக்க, கலைக்க நமக்கு உரிமையில்லை. இந்த ராமு எது செய்தாலும் இந்தப் பாவம் பண்ணமாட்டான்.''

அண்ணாச்சி இடுப்பில் துண்டுகட்டி, கை தூக்கித் தொழ... ராமு தாவியணைத்து அவரை உட்கார வைத்தான்.

''பெரிய பெரிய சாமியார் எல்லாம் கவுந்த இடம், இத்தினி உறுதி உனக்கு எப்படி ராமு? புரியலை.''

''மலைல. குகைல சாமியாரா இருந்துடலாம். சினிமால சாமியாரா இருக்கறது கஷ்டம். இருக்கக் காரணம் அக்காவுக்கு, அத்தானுக்குக் கொடுத்த வாக்கு. என்னைய நாட்டுப்புறத்துலேர்ந்து கொண்டாந்து சோறு போட்டு மனுஷனா மாத்தினவங்களுக்குக் கொடுத்த வாக்கு.''

''ஒண்ணு சொல்லட்டுமா ராமு.''

''சொல்லுங்க அண்ணாச்சி.''

''அந்தம்மா சித்தின்னு ஊரெல்லாம் சொல்லியிருக் கியே... அந்தம்மா உன்னைவிட ஆறு வயசு பெரிசு. அது கிட்ட சிரிச்சுப் பேசறியே.''

''அவங்களுக்குக் குழந்தையே இல்லை.''

''சரி. அதுக்கு தினமும் உனக்கு தின்பண்டம் தரணுமா?''

''என்ன தப்பு?''

''அந்தம்மா மனசுல உன் மேல ஒரு பிரியம் இருக் கோன்னு சின்னதா ஒரு சந்தேகம். கூட நாங்க இருக்கறதால, புள்ளை இல்லேன்னு ஒருநாடகம்.''



''என்ன அண்ணே இப்படிச் சொல்றீங்க?''

''புள்ளை இல்லேன்னா பத்து வயசுப் புள்ளைய புள்ளையா நினைக்க வேண்டியதுதான்... ஏன் இருபத்திநாலு வயசு ஆளை?''

''குறிப்பிட்ட வயசுக்கப்புறம் எல்லாப் பொம்பளையும் அம்மாதானே அண்ணாச்சி?''

''அந்த வயசு இந்தப் பொம்பளைக்கு இன்னும் வரலை.''

''அவங்க புருஷன் நல்ல அழகா-நல்ல பதவில, இருக்காரு.''

''அப்ப நீ ஏன்... எதுக்கு?''

''நாம பெண்களை மட்டமாவே நினைக்கறோம் அண்ணாச்சி.''

''சரி நான் நினைக்கலை... ஒரு சமயம்.''

''இருக்காதுண்ணே.''

''ஒரு சம்சயம்தான்.''

''தப்பா பேசறீங்கண்ணே.''

''அட சம்சயம் தாம்பா.''

''இல்லண்ணே. அவங்க நல்லவங்க.''

பேசப் பேச சம்சயம் இடம் மாறிற்று. சொன்னவர் தூங்கப் போக, கேட்டவன் கேள்வியோடு நின்றான். தூக்கம் இழந்தான்.

காமம் என்பது கூடல்மட்டுமில்லை. கூடல் தவறு என்று விலக்க, காமம் பேச்சாய், பாட்டாய், ஓவியமாய் கெட்ட வார்த்தைகளாய் ஏதோ ஒரு ரூபத்தில் வெளிவரும். எந்த ரூபத்தில் அனுமதிக்கப்பட்டதோ அந்த ரூபத்தில் விடுதலை காண முயற்சிக்கும்.

ராமுவைப் பேச்சு கவிழ்த்தது. சிந்தனை தடம் புரண்டது. 'அண்ணாச்சி சொல்றது உண்மையா' என்று யோசிக்க

வைத்தது. 'ஒரு டெஸ்ட் பண்ணலாமா?' என்கிற நினைப்பு வந்தது.

காமம் இயல்பு. இயற்கை. இயற்கையை ஜெயிக்க மனிதனால் முடியாது. அது சீறியதெனில் சிதறிப்போக நேரிடும். ஒருவேளை 'ஆமாம் அந்த ஆசையிலதான் இப்படி வந்தேன்...' என்று அந்தப் பெண்மணி சொல்லிவிட்டால்? ராமு பயந்தான்.

'யோக பலம் தா... ஞான பலம்தா...'

சோதனை செய்யவும், சோதனையிலிருந்து மீளவும் தன் மனசை செம்மைப்படுத்திக் கொண்டான். ராமுவுக்கு சினிமாவில் வெற்றி. அதில் உயரப் போக வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. சினிமாவில் ஜெயிக்க புலனடக்கம் முக்கியம் என்கிற ஸேஃப்டி பெல்ட் இருந்தது.

அந்தப் பெண்மணி மறுநாள் வந்தபோது திட்டமிட்டது போல் அண்ணாச்சி வெளியே போனார். ராமுவும் அந்தப் பெண்மணியும் மட்டுமே இருந்தார்கள். ராமு பேச்சின் திசை மாற்றினான்-

மாறிய திசை...

## 25

ஓஷோ என்கிற ரஜனீஷ், ''பெண் சார்ந்து இருக்கும் இயல்புள்ளவள்' என்று சொல்கிறார். ''கருப்பை இருப்ப தாலும் உதிரப்பெருக்காலும் கருவைச் சுமக்கும் போது ஏற்படும் மனமாற்றங்களும் அவளை அன்புமயமானவளாக எப்போதும் யாரிடமாவது அன்பு செலுத்தவே முயலும், முயற்சிக்க விரும்பும் தன்மையுடைய வளாய் மாற்றி விடுகின்றன...'' என்கிறார்.



ஆணை நேசிக்க பெண்ணுக்கு மிகுந்த விருப்பமுண்டு. இந்த உலகத்து ஆண்கள் அவளைப் புரிந்து கொண்டு நேசிப்பு வழங்க மறுத்தாலும் பெண் நேசிப்பதை விடுவதில்லை. அவள் தனக்குள்ளேயே ஓர் உருவகம் ஏற்படுத்தி அன்பு செலுத்துகிறாள். அந்த அன்பு அவளை ஓர் உச்ச நிலைக்கு- ஞான நிலைக்கு அழைத்துப் போகிறது. அன்பே தியானமாக, ஞானமாக மாறுகிறது.

இதற்கு உதாரணம்-மீரா, ஆண்டாள்...

ஆனால் ஆண்... தனித்திருப்பவன், பெண் போகம் தான் அவனுக்கு. தின்ற பிறகு, தின்னப்பட்ட உணவு பற்றி யார் நினைக்கிறார்கள்? பெண் உணவு, பசி தீர்க்கும் உணவு... ஆண் அகங்காரம் கொள்வதற்குரிய அலட்டுதற்குரிய வஸ்து. 'அவள் இல்லையெனில் நானில்லை' என்பது அவனுள் இல்லை. அனுபவித்த பிறகு விலகி ஓடும் விழைவே அதிகம்.

மனத்தில் அமைதியில்லாத ஆணுக்குள் அன்பு இருக்காது. அகந்தை மட்டுமே இருக்கும். அன்பு செய்யாத, செய்யப் படாத பெண்ணுக்குள்ளும் அவஸ்தைகள் வந்துவிடும். தனிமை அவளைப் பித்தாக்கும். பயம் தரும். இது அடிப் படை விதி. இயற்கை நியதி.

யாரோ ரசிகை மாம்பழக்கூடை அனுப்ப, ''அதுல மயக்க மருந்து கலந்து கொடுத்திருப்பாளோ...' என்று மொத்தப் பழத்தையும் வெளியே எறிந்தவன் ராமு. பரிசுப் பொருட் களில் வசியம் வைத்திருக்கலாம் என்று புறக்கணித்தவன் ராமு.

'அண்ணாச்சி...இந்த லேடி சம்சயம்... சம்சயம். என்கிறாரே... இதுவும் இப்படி இருக்குமோ? அலையுமோ...' என்று அந்தப் பெண்மணி மீது சந்தேகப்பட்டவன் ராமு. 'இதுவும் இப்படி இருப்பின்... ஆண்டவா இனி பெண் இருக்கும் திசை பக்கமே திரும்பக் கூடாது...' என்கிற எண்ணத்துடன் பேசத் துவங்கினான்.

அந்தப் பெண்மணியிடம் ராமு தன் கடும் உழைப்பைப் பற்றிச் சொன்னான். விளக்கு வெளிச்சத்தின் சூட்டால் உண்டான உடல் உபத்திரங்களைக் காட்டினான். சினிமா உலகில் பெண்களின் பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை வேதனைகளையும் விவரித்தான். செக்ஸ் எவ்வளவு சுலபம், அங்கே என்கிற கதையை, அந்தப் பெண்மணியிடம் ராமு அளந்தான்.

''நேரே வந்து இடுப்புல கை போட்டுப் பேசறா ஒருத்தி... எனக்குப் புரியவேயில்லை அது'' என்றான் ராமு.

''பாவம்...'' என்று பரிதாபப்பட்டது அந்தப் பெண்.

''என்ன பாவம்... போங்க.''

''இவ்வளவு நெருக்கமா உட்காரணும்கிறது அவங்களுக்கு அவசியம்... தலையெழுத்து அதுங்களுக்கு.''

''இல்லை... கொழுப்புன்னு நினைக்கிறேன். பக்கத்துல உட்கார்ந்து வசனம் சொல்றேன். தன் கால் கட்டை விரலால் என் ஆடு கால் தசைக்கு மேல் இப்படி வருடுது...''

ராமு எங்கேயோ என்னவோ நடந்ததைச் சொல்வது போல் இப்போது இங்கேயும் நடந்தது.

''அப்படி இருக்கிற பொண்ணை, இப்படி ஸீன்ல கட்டியிழுக்கறப்போ என்னவெல்லாம் பண்ணும்?'' -ராமு அந்தப் பெண்மணியை அணைத்தான்.

அந்தப் பெண்மணி ஒரு நிமிடம் பேசாது இருந்தாள். முகம் சிவந்தாள். மெள்ள ராமு விடுவிக்க ''இதுல நானே செய்த ரசகுல்லா இருக்கு... சாப்பிடு ராமு'' -சொல்லி விட்டுப் போனாள்.

''அப்போ... அப்போ அண்ணாச்சி சொன்னது கரெக்ட். பெண் என்றதும் மாயப் பிசாசுன்றது கரெக்ட், அம்மா, சித்தி, புள்ளையில்லை... எல்லாம் பொய். எல்லாப் பொம்பளையும்... கடைசில அதான்.



தெரிந்த பிறகு இனி ரசகுல்லா சாப்பிடுவேனா?

அப்படியே சாக்கடையில் அத்தனை ரசகுல்லாவும் கொட்டப்பட்டது.

''என்ன ஆச்சு ராமு?''

''அதான் அண்ணாச்சி...''

''நான் அப்பவே சொன்னேனே.... சரி ரசகுல்லாவை என்ன செய்தே?''

''கொட்டிட்டேன்...''

''நல்ல காரியம்... துடப்பம் எடுத்தா.''

''ஏன் அண்ணாச்சி?''

''வீடு மொத்தமும் ஒரு தடவை பெருக்கிடறது நல்லது.''

''எதுக்காக?''

''முடியில் மந்திரிச்சுப் போட்டுடுவாங்க. அது எப்பனா கால் கைல சுத்துச்சுன்னா மாட்டிக்குவம்... சோத்துல விழுந்திச்சு அவ்ளோதான்... சுத்தம்.''

''ஐயோ...'

''சப்ஜாடா பெருக்கிடணும்.''

பேய் பிடித்தது போல் பெருக்கினார்கள். எங்கோ கிடந்த தலைமுடிகளைக் கண்டுபிடித்துச் சந்தேகப்பட்டார்கள். தீ மூட்டி எரித்தார்கள்.

மறுபடி அந்த அம்மாள் வர... ராமு கொல்லைப்புறத்து மரத்தில் ஏறி ஒளிந்துகொள்வான், பரணில் படுத்துக் கொள்வான். தொடர்ந்து வந்து ஒரு நாள் சிக்கிவிட்டால்...? அச்சம் வந்தது.

அக்காவிடம் போய் அண்ணாச்சியும் ராமுவும் விலாவாரியாய் அவளைப்பற்றிக் குறை சொன்னார்கள். தங்கள் பயத்தைச் சொன்னார்கள்.

அக்கா அந்தப் பெண்மணியை அழைத்தாள். யாருமில்லாத போது தன் வீட்டில் அவளிடம் வெகுநேரம் பேசினாள்.

'இனிமே வராதே'ன்னு சொல்லிட்டேன் ராமு.''

''அப்படியா அக்கா. வெரிகுட்... வேற என்ன விஷயம்?''

''அந்த அம்மா நல்லவங்க ராமு.''

''எப்படி... எப்படி நல்லவங்கன்னு சொல்றே அக்கா.''

''ராமு என்னைக் கட்டினப்போ ஒரு ஷணம் நானும் தடுமாறிட்டேன், சரி. ஊட்டு ஆசை போல... அதட்ட வேணாம். மெள்ளச் சொல்லுவோம்னு நினைச்சு சும்மா இருந்துட்டேன். இப்பப் புரியுது... அது மனசுல இத்தனை குழப்பம் இருக்குன்னு. நான் புள்ளைன்னு நினைச்சுக்க லாம். அது என்னை அம்மான்னு நினைக்க முடியுமா? அது நிலைமைல அப்படி நினைக்கிறது சுலபமா? என் நட்பு அதுக்கு உற்சாகம் தரும்னு நினைச்சேன். குழம்பிருச்சு. நான் இனிமே வரலை. அது நல்லா இருந்தா போதும். ஆனா, அது நடிக்கற படம் ஒண்ணுகூடப் பார்க்காம விடமாட்டேன். அதை மட்டும் சொல்லிடுங்க. எனக்கு அது பேர்ல கோவமே இல்லை. அதையும் சொல்லிடுங்க'னு -அந்த அம்மா சொல்லிடுச்சு.''

-ராமுவின் அக்கா நிதானமாகச் சொன்னாள். ''அது நல்ல பொம்பளை ராமு'' -மறுபடி சொன்னாள்.

இடி தலையில் இறங்கியது போலாயிற்று. வெட்கம் கவிழ்ந்தது... வேதனை பெருகிற்று. தன் கற்பனைப் பயங்கள் எல்லாம் சுழித்துக் கொண்டு மனசுள் ஓடுவது தெரிந்தது. ஒரு மனத்தை நோகடித்த மகாபாவம் சில்லிட வைத்தது.

''ராமு, உனக்குன்னு மாம்பழம் வாங்கியாந்தேன்.''

''ராமு, உனக்குன்னு ரசகுல்லா செய்தாந்தேன்.''



''ராமு, உனக்குன்னு பன்னெண்டு கர்ச்சீப்ல பூ வேலை செய்து...''

அன்பை ஸ்வீகரிக்கவும் ஒரு அருகதை வேண்டும். ராமுவுக்கு இல்லாது போயிற்று. இதற்கு என்ன காரணம்? பயம்.

புலனடக்கம், மன அடக்கம் எல்லாம் பயத்தின் அடிப்படையில் எழுந்ததுதான் காரணம்.

சினிமா வேலைக்கு அதிக சக்தி வேண்டும் என்று புலனடக்கம் வந்திருந்தால் இது சரியாய் இருந்திருக்கும். வேலைக்குக் குந்தகம் வரலாகாது என்ற மன அடக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

பிரண்டு விட்டது.

குற்றம் ராமுவின் மீது இல்லை. அண்ணாச்சி காரண மில்லை. இந்தச் சமூகம் 'நொந்து கெடுவர்' என்று ஏகமாய் அச்சுறுத்த- ''வெளியே போய் விளையாடாதே பேய் புடிச்சுக்கும்'' என்று பிள்ளையைப் பயமுறுத்துவது போல வாலிபனுக்கும் பெண் பற்றிய பேதமைக் கதைகள் சொன்ன காரணம்.

''வுட்டுருந்தா பத்திக்கிட்டு இருக்கும்... தெரியுமா?'' என்று யாரேனும் உரக்க வாதிடலாம்...

-வீடு பற்றி எரிகிற வரை உறங்குபவன் மரணமடை யட்டும். சிறு உஷ்ணம் பட்டதும். துள்ளி எழுந்து நெருப்பை அணைப்பவனே உயிர் வாழ முடியும்.

புலனடக்கம் ராமுவிடம் இன்னும் தொடர்கிறது. ஆனால், பேதமையுடன் இறுக்கிக் கொள்ளவில்லை. புரிந்து செயல்படத்துவங்க இந்த நிகழ்ச்சி காரணமாய் இருந்தது. ராமுவுக்குப் பெண்கள் மீது வெறுப்பு இல்லை. பயம் இல்லை. அதே நேரம் அவர்கள் போகப் பொருட்கள் இல்லை. இனி யார் மாம்பழம் கொடுத்தாலும் கை கூப்பி

வாங்கி கனிவோடு உபசரித்து, மறுவாரம் ஒரு கூடை ஆப்பிள் அனுப்புகிற மனப்பக்குவம் வந்துவிட்டது. தன்னைப்பற்றிய தெளிவு வந்துவிட்டது.

புலனடக்கம் என்று சகலரையும் புறக்கணிக்கும் குணம் போய்... சகலரையும் அன்போடு பார்க்கும் பெருந்தன்மை வந்துவிட்டது. ராமுவின் வளர்ச்சி, வளர்ச்சியின் மகிழ்ச்சி எல்லாவற்றுக்கும் இந்தத் தெளிவான அடக்கம் காரணம்.

இயற்கையோடு சண்டை போடுவது எளிதல்ல... வடிகால் அற்ற நீர் சாக்கடையாகும். நாறும்.

'எது வடிகால்?' என்று தெளிவதே ஞானம்.

இதற்கு அகக்கண் வேண்டும்.

தன்னோடு தான் பேச வேண்டும்.

ஊர் சொன்ன கதையை வாய் பிளந்து கேட்டு அதன் படி குருட்டுத்தனமாய் நடக்க, முட்டிக்கொண்டு சாக நேரிடும்.

முகக்கண் இல்லாது போனாலும் அகக்கண் தெளிவாய் இருந்தால் ஒரு நண்பர் காதலில் எளிதாய் ஜெயித்தார்...

அந்தக் கதை-

## 26

**அ**கக்கண் தெளிவாய் இருந்தால், காதலில் எளிதாய் ஜெயித்த நம்பியின் கதை...

தாமிரபரணி ஆற்றில் நம்பி குளித்துக் கொண்டிருக்கும் போது அவன் தலை 'ணங்' என்று ஏதோ ஒன்றின் மீது மோதிற்று. பாறையோ, ஊத்துக்கிணறு சிமெண்ட் கட்டையோ நச்சென்று மோதிற்று.



நம்பிக்குக் கண்கள் இருண்டன, மயக்கம் மாதிரி ஏற்பட்டது. வலி உடம்பு பூராவும் படர்ந்தது. கைகள் மெள்ள தலையைப் பிடித்துக் கொள்ள, கரையை நோக்கி வந்தான்.

''என்னவோய் திரும்பிட்டீரு?''

''இடிச்சுருச்சு.''

''எங்கன?''

''தலைல...நச்சுனு... ரத்தம் வருதா பார்.''

பார்த்தார்கள்.

''ஒன்னுமில்லையே... லேசா புடைப்பு இருக்கு... அழுத்தித் தேச்சு வுடும். நான் தேய்க்கட்டா?'' -தேய்த்தார்கள்.

''குத்தாலத்துல இப்படித்தான் அரக்கி அரக்கி எண்ணெய் தேய்ப்பான். தலைச் சூடுன்னு தேச்சுட்டு தபதபன்னு தட்டுவான்...'' -தட்டினார்கள்.

''வேணாம்... நோவுது.''

விட்டு விட்டு அவர்கள் ஆற்றில் முங்கினார்கள்.

நம்பிக்கு மனசில் என்னவோ ஒரு சங்கடம்... ரத்தம் வரவில்லை. ஆயினும் தலைக்குள்ளே என்னவோ படருகிறது... உள்காயமோ?

துண்டால் உடம்பைத் துடைத்துக் கொண்டு வேட்டி உடுத்திக் கொண்டான். நாளை சென்னைக்குப் போக வேண்டும். அப்பாவின் தெவசத்துக்கு லீவு போட்டு தான் வந்ததில், அம்மா, அண்ணா எல்லோருக்கும் சந்தோஷம்.

மறுநாள்...

''தீபாவளிக்கு வருவியா?''-அம்மா கேட்டாள். கூடவே, ''அவஸ்யம் வா...'' ஆறு மாதங்களுக்கு முன்பே மகனுக்கு அழைப்பு விடுத்தாள்.

"அவன்தான் வரானேம்மா... என்ன கேள்வி இது?" அண்ணா அலுத்துக் கொண்டான்.

"யாரும் வரச்சொல்லலைன்னு அவன் நினைச்சுக்கப் படாதே."

"இது அவன் வீடு."

"சரி, பட்டணத்து மோகம் இன்னும் நம்பிக்கு வரலை."

"அவனுக்கு மோகம் தாமிரபரணிலதான்... என்னடா வரயா, ஆத்துக்குப் போலாம் குளிக்க?"

"வரேன்."

போகிற வழியில் அண்ணா ஒரு வீடு காட்டினான்.

"இந்த வீட்டுலேர்ந்து உன்னோட ஜாதகத்தைக் கேட்டு வந்தா."

"யாரு?"

"சாரதான்னு பேரு. எம்.ஏ. படிச்சிருக்கா. நில நீச்சு உள்ளவா. இது தவிர, நாலைஞ்சு வரன் வந்தது. ஒன்னைக் கேட்காம ஒண்ணும் செய்யக்கூடாதுன்னு பேசலை பேசட்டா."

"எதுக்கு இப்போ? ஒரு வருஷம் போகட்டும்."

"போன வருஷமும் நீ இதே தான் சொன்னே."

"இப்ப வெறும் கிளார்க்தான். எனக்கு பிரமோஷன் வரட்டுமே."

"வருமா?"

"நிச்சயம். கூட சம்பளம், அலவன்ஸ், செம ஜம்ப் அது."

"அப்ப சரி..." -அண்ணா பேச்சை நிறுத்திக் கொண்டான்.

"இது தவிர, வேற ஒரு விஷயம் அண்ணா."

"என்ன?"



"எங்க ஆபீஸ்லியே தீபான்னு ஒரு பொண்ணு சிநேகமாச்சு."

அண்ணா கலவரத்துடன் திரும்பினான்.

"பயப்படாதே. கொஞ்சம் பேசிப் பழகற சிநேகம் அவ்வளவுதான்... எனக்குப் பிடிச்சிருக்கு அவளை. ஆனா நான் கேக்கலை."

"யாரை?"

"தீபாவை."

"எதுக்குடா வம்பு?"

"ஒரு தடவை நீ அவளைப் பார்த்துப் பேசினா... 'ஹா'ன்னுடுவே..."

"பிராமினா?"

"இல்லை. மலையாளி கிறிஸ்டியன்."

"ஐயோ... அம்மா உசிரை வுட்டுடுவா"

"அம்மாவை நினைச்சுத்தான் பயப்படறேன்... நீ தான் ஏதாவது பேசி..."

"அந்தப் பொண் என்ன நினைக்கறது?"

"இருக்குமோன்னு சந்தேகம்."

"லவ் இருக்குமோன்னா?"

"யெஸ்."

"எப்படி?"

"உன்னைப் பத்தி நிறைய சொல்லியிருக்கேன். எங் கண்ணா பாங்க் ஆபீஸர். பெரிய ரைட்டர். பிலாஸஃபர்... என் எல்லா முன்னேற்றத்துக்கும் அவர்தான்'னு சொல்லியிருக்கேன். உனக்கு ஒரு லெட்டர் தந்துருக்கா. கவர்ல ஒட்டி..."

"எனக்கா...? லெட்டரா? என்னடா இது. எனக்கு ஏன்?"

"உன் கதையெல்லாம் அவ படிச்சிருக்கா. இந்தா. சட்டைப் பையில் உள்ள கவரை அண்ணாவிடம் கொடுத்தான் நம்பி. அண்ணா தயங்கி வாங்கி வைத்துக் கொண்டான். துறையில் அமர்ந்து கடிதம் கிழித்தான். முகத்தில் கவலை அப்பியிருந்தது.

நம்பி சற்றுத் தள்ளி ஆற்று விளிம்பில் அமர்ந்து பொடிக் கற்களை எடுத்து ஆற்றில் எறிந்தான்.

அண்ணா கடிதம் படித்துவிட்டு எழுந்தான்.

"என்ன அண்ணா?"

"என்னடா இது விநோதமா இருக்கு? உங்க லவ்வை லெட்டர்ல சொல்லிட்டா தீர்ந்து போச்சா... நீங்க புரிஞ்சிக்க வேண்டாமா?"

"என்ன சொல்லியிருக்கா?"

"படி"

"வேண்டாம்."

"ஏன்?"

"உனக்கு வந்த லெட்டர் அது."

"கஷ்டம், அவ அதுக்கு மேல கஷ்டம். லவ்வுன்னா கண் கிறங்கி- கால் தளர்ந்து-வாய் குழறும் காதல் இல்லையாம். 'நம்பியின் பேச்சு, செயல், வாழ்வு, உறுதி எனக்குப் பிடித்திருக்கிறது. உங்கள் மீதும் உங்கள் தாயார் மீதும் அவர் மாறா காதல் உள்ளவர். நீங்கள் அனுமதித்தால் அவரைத் திருமணம் செய்து நல்ல இல்லறம் அமைக்க விரும்புகிறேன். ஒரு முறை நீங்கள் சென்னைக்கு வரவோ அல்லது நான் நெல்லைக்கு வரவோ நேர்ந்தால், என் எண்ணம் உங்களுக்குப் புரியும். மற்றபடி என் சுற்றம், சூழல் முழுவதும் நம்பிக்குத் தெரியும்.



நேரில் உங்கள் எழுத்துக்கள் பற்றிப் பேசவும் ஆசை. வணக்கத்துடன்- இவ்வளவுதான். "ஏண்டா இது உன் ஐடியாவா?"

"ஏது?"

"அவ எனக்கு லெட்டர் எழுதறது."

"ஐயோ... சத்தியம்..."

"போதும். நா மாட்டேன்னுட்டா?"

"விட்டுடுவேன்."

"அவ பேர்ல லவ் இல்லையா?"

"அண்ணா, அவ பேர்ல ஆசை உண்டு. ஈர்ப்பு உண்டு. அவ அழகி, கெட்டிக்காரி, காசு பணம் நாட்டமில்லை. நல்லவள், அதுக்காக, டகார்ன்னு அவதான் உலகம்னு உன்னை, அம்மாவைவிட்டு உதற என்னால் முடியாது. நீ சொன்ன மாதிரி எனக்கு மோகம் தாமிரபரணிலதான். ஏன்னா அது ஓடற இடத்துல என் ஊர் இருக்கு. என் ஊர்ல என் வீடு இருக்கு. என் வீட்டுல என் அம்மா, அண்ணா, மன்னி, அண்ணா குழந்தைகள் எல்லாம் இருக்கா. உன் காசுல படிச்சு... மன்னி சமையல்ல உடம்பு வளர்த்து... அம்மா பட்ட கஷ்டங்களைக் கண்ணெதிர்க்கப் பார்த்து... நான் 'லவ் யூன்'னு வேற யாரைச் சொல்வேன். யாரைச் சொல்ல முடியும்?"

"என்னடா... என்னடா நம்பி. இது ஏதோ என் கடமை, செஞ்சேன்."

"இதைத்தான் நான் அவகிட்ட சொன்னேன். அவளுக்குப் பிடிச்சுடுத்து, 'என் அழகுக்கு ஆயிரம் பேர் கால்ல விழுவான். என் புத்திக்கு நூறு பேர் கிறங்குவான். உன் கூட பேசினா மாதிரி வேற யார் கூடயாவது பேசியிருந்தா நாற்பத்தெட்டு தடவை 'லவ் யூ' சொல்லியிருப்பா' ன்னு சொன்னா..."

"அதென்ன நாப்பத்தெட்டுத் தடவை?"

''நாற்பத்தெட்டுத் தடவை தனியா ஒரு ரூம்ல நாங்க எதிரும் புதிருமா உட்கார்ந்து ஆடிட் பண்ணியிருக்கோம்.''

''கணக்கு வேறயா இதுக்கெல்லாம்... உம்... சொல்லு.''

''நீ லவ் யூ னு சொல்லலை. சொல்லாததுக்கு இதான் காரணம்' ன்னு ஒண்ணு சொல்ற பாரு... 'உண்மையைப் பேசற பாரு... யூ ஆர் கிரேட்' அப்படீன்னா...''

''அப்புறம்?''

''தனக்கு வரப்போற புருஷன் எப்படியிருக்கணும்னு அவ நினைச்சதைச் சொன்னா.''

''உம்ம்.''

''அது என்னைச் சொன்ன மாதிரி எனக்கு இருந்தது.''

''ஒரு கிறிஸ்தவப் பெண்ணுக்குப் பிராமணப் பையனா வேணும்னு நினைச்சாளாக்கும்.''

''அது மட்டும் நாங்க பேசலை.''

''ஏன்?''

''மதம் ஜாதி முக்கியமில்லை, உனக்கு முக்கியமா அண்ணா?''

''இல்லை உட்கார்ந்து சாப்பிட, நின்று பேச, வியாபாரம் பண்ண, உதவி கேட்க, உதவி செய்ய, ஜாதி மதம் தேவை யில்லை, ஆனா...''

''கல்யாணத்துல தேவையா?''

''மதம்-ஜாதிங்கற உயர்வு-இழிவான பிரிவு இல்லை. அது ஒரு மாதிரி கலாச்சாரப் பிரிவு. குலத்தாழ்ச்சி சொல்லல் மிகப் பாபம். குலம் பாபமில்லை. மாமிசம் சாப்பிடறது ஒரு கலாச்சாரம்... கூடாதுங்கறது இன்னொரு கலாச்சாரம். மாமிசம் சாப்பிடறவங்கள்லேயே இந்தக் கலாச்சாரம் வேறுபடும், ஆடு மட்டும்னு சில பேர். மாடு சாப்பிடலா மேன்னு சில பேர். பன்றிதான் ருசின்னு சிலபேர். எப்பவும்



சாப்பிடலாம்னு சில பேர். இப்ப சாப்பிடலாம். இன்னிக்குக் கூடவே கூடாதுன்னு சில பேர். இது மாதிரி பிரிவுகள் உள்ள கலாச்சாரம். ஏன்னு கேட்டா தொழில், சூழ்நிலை, இடம்னு பலது காரணம். இந்த கிளாஷ் சிலரால் தாங்க முடியும். சிலரால் முடியாது.''

''புரியலை.''

''அம்மாவால முடியாது.''

''நீ?''

''அம்மாவை விட முடியாது.''

நம்பி கண்களை மூடிக் கொண்டான்.

''என்னடா... இவன் பெரிய ரைட்டர். கடைசில நாசூக்கா ஜாதிதானே பேசறான்'னு தோணும். நான் பிரிவு களைப் பத்திப் பேசறேனே தவிர பிரிவினை பேசலை... எனக்கு என் கலாச்சாரத்துல பிடிப்பு உண்டு. பிடிப்பு இல்லாதவர்கள் மாறலாம். மாறி கலந்து, புதிய கலாச்சாரம் உண்டு பண்ணலாம். இப்படி நடந்திருக்கு. இது புதுசு இல்லை. உனக்கு தீபா தேவைன்னா சொல்லு. நான் அம்மா கிட்ட நான் பேசறேன்.''

''இப்ப வேண்டாம்.''

''எப்ப?''

''ஒரு வருஷம் கழிச்சு.''

''அந்தப் பெண் பேசிடுத்தேடா... பாவி.''

''என்ன அதனால?''

''காக்க வெச்சுக் கழுத்தை அறுக்காதே. அது வேதனை. முடியும் முடியாதுன்னு நீ முடிவு பண்ணு.''

''அண்ணா. மாட்டேன்னா அவ செத்துறமாட்டா.''

''அப்படியில்லை நம்பி. சாவுங்கறது உடம்பு மட்டு மில்லை... எல்லா இழப்பும் மரணம் மாதிரிதான்,

'நாலாயிரம் ரூபா நோட்டுக் கட்டை தொலைச்சுட்டேன்'னு நேத்து ஒரு ஆள் பாங்க்ல உட்கார்ந்து அழுதான். அவனைப் பார்த்தா பொண்டாட்டியைப் பறிகொடுத்தவன் மாதிரி இருந்தது. அப்பா எனக்குக் கொடுத்த பேனாவைத் தொலைச்சுட்டேன். இரண்டு மாசம் முன்னாடி காணவே காணோம்.''

''ஐயோ...''

''பாத்தியா... இது மரண ஓலம். பிரிவுத் துக்கம். நீ இல்லைன்னா அவ அழுவா. அவளுக்கு இழப்பு. மரணம் மாதிரி இழப்பு... ஸோ... நான் அந்த தீபாவை ஒரு தடவை பார்க்கிறேன். மெட்ராஸ் வரேன். மீட்டிங் இருக்கு. அப்புறம் யோசிப்போம், மேற்கொண்டு... நீ குளிக்கலை?''

அண்ணா கரையில் உட்கார்ந்து வேட்டி சட்டை தோய்த்துவிட்டுத் துண்டு கட்டிக் குளித்தான். ஊர்க் கதை, தான் எழுதும் புதிய கதை பேசினான். நம்பியின் உடைகளைத் தோய்த்துக் காயப் போட்டுவிட்டு, ''குளிச்சிட்டு வா'' என்று வீட்டுக்குப் போனான்.

ஆற்றில் குளித்துவிட்டு நம்பி தெருவில் நடந்து வந்து கொண்டிருந்த போது இடது கண் இருட்டியது.

வீட்டில் ஒருமுறை கண் இருட்டியது. மெட்ராஸுக்குக் கிளம்பும் போது இடது கண் சற்று 'மங்கலாக, இருந்தது. எக்மோரில் வந்து இறங்கிய போது எல்லாம் மங்கலாய் இருந்தது. ஜுரம் வந்தது. லீவு போட்டான். தூங்கினான்.

**மா**லை நாலு மணிக்கு எழுந்தான்.

கண்கள் தெரியவில்லை.

இருள்... இருள்... இருள்...

அலறினான். அறையில் நண்பர்கள் சூழ்ந்தார்கள். டாக்டரிடம் போனார்கள். டாக்டர் சோதித்துவிட்டு கட்டிலில் படுக்க வைத்தார். 'இவருக்கு நெருங்கினவங்க யார்?''



தீபாவுக்குத் தெரிவிக்கப்பட்டு, ஓடிவந்தாள். ''என்ன ப்ராப்ளம் டாக்டர்?''

''அவருக்குக் கண் வராதும்மா. அது அவ்வளவு தான். நீங்க அவருக்கு என்ன வேணும்?''

''அவரு கண்...நா...அவருக்கு... கண் வரவே வராதா ஃபாரின் போனா?''

''ப்ளீஸ்... பதறாதீங்க... இப்ப அவர்கிட்ட போய்ச் சொல்லாதீங்க. ஜுரம் குறையட்டும்.''

தீபா மெள்ள நம்பிக்கு அருகே நடந்தாள். அவனைப் பார்த்தாள். பேசினாள்.

அவள் பேசியது...

## 27

''நம்பி... நான்...''

அவன் விரல்கள் பற்றிக் கொண்டாள்.

''தீபா...'' -ஸ்பரிசத்தில் அவளைக் கண்டு கொண்டான் நம்பி.

இதற்கு முன்பு இப்படித் தொட்டதில்லை. விரல்களை இவ்விதம் இறுகப் பற்றியதில்லை. நடக்கும் போது எதேச்சையாகத் தோள்கள் உரசியதுண்டு. பொருட்களை வாங்கும் போதும். கொடுக்கும் போதும் கவனப்பிசகாகப் பட்டதோடு சரி, அவளைவிட அவன் 'தொட்டு விடக்கூடாது' என்பதில் கவனமாக இருந்தவன் 'ஏதாவது கையைக் காலைத் தொடப்போய், அவ தப்பா நினைச்சுட்டா... சரி, அவ நினைக்கலை... நமக்குள்ள தப்பா எதுனா வந்துட்டா... நல்ல ஃப்ரெண்ட்ஷிப் இல்லையா இது... கெடுத்துக்கலாமா?''

"நம்பி... பேனா"

"தாங்க்யூ..."

"உன் பேனா நான் கடன் வாங்கிக் கையெழுத்துப் போட்டுத் திருப்பித்தரேன். இதுக்கு ஏன் தாங்க்யூ?"

"வாங்கின பேனாவைத் திருப்பிக் கொடுத்தியேம்மா, அதுக்கு தாங்க்ஸ் சொல்ல வேணாமா?"

"இனிமே உன்கிட்ட பேனா வாங்கினேன்... என்பேர் தீபா இல்லை."

"ச்சு... சும்மா தமாஷுக்கு தீபா..."

"களியோ... என்னோடோ... ஹெ... அடப்போடா..." என்பது மாதிரி நகர்ந்து விட்டாள். நம்பிக்கு எங்கோ வலித்தது. 'அதென்ன அலட்டல்?' என்பது மாதிரி கோபமும் வந்தது.

"ஹாப்பினஸ் என்ன ஸ்பெல்லிங் தீபா?"

"எச்.ஏ.பி.பி... ஹேய்... நம்பிக்கு ஏதோ விசாரம்..."

"எனக்கு ஒரு விசாரமும் இல்லை. உனக்கு இதுக்கு ஸ்பெல்லிங்காவது தெரியுமான்னு கேட்டேன்..."

வெறித்த அரை நிமிடப் பார்வை.

"தெரியாது. அப்புறம்?"

"நான் சொல்லித் தரேன்."

"எனக்கா?"

"ஏன்... என்ன சந்தேகம்?"

"உனக்கு வேற வேலையே இல்லையோன்னு சந்தேகம்."

"யெஸ். ஏழுமணி நேர ஆபீஸ்ல மூணுமணி நேரம் வேலை. ஆபீஸ் விட்டா ரூம், ரூம் விட்டா ஆபீஸ்..."

"கல்யாணம் பண்ணிக்கறதுதானே?"

"நான் ஹாப்பியா இருக்கேன் தீபா, எதுக்கு...?"



"அப்ப சாயந்திரம் என்னோட வா."

"ஹேய்..."

"ஹ... எந்தாவொரு அவசரம்..."

மாலையில் பஸ் பிடித்து நகரின் தென்கோடிக்குப் போனார்கள். நூற்றுக்கணக்கான அநாதைக் குழந்தைகள்... நாலு நாள் பெண் குழந்தையிலிருந்து பதினேழு வயசுப் பையன் வரை வெவ்வேறு முகங்களாக-வெவ்வேறு ஜாடைகளாக-வெவ்வேறு வயசில்...

அது அரசு நிர்வாகமல்ல. தனியார் இடம். தனிப்பட்ட ஒரு மனிதரின் முயற்சி.

தனக்கு நேர்ந்தது- தன் கண்பட பார்த்தது- தான் கேள்விப்பட்டது- எதுவும் வேறொரு குழந்தைக்கு நேரக் கூடாது என்று கங்கணம் கட்டிய ஓர் இளைஞரின் உன்னதமான ரௌத்திரத்தில் விளைந்த அமைப்பு.

"இத்தனை பேர் அநாதையா? இவர்களுக்கு யாருமே இல்லையா? ஏன், எப்படி? எதனால?" இந்தக் குழந்தை கூடவா அநாதை" -நம்பியின் வியப்புக்கு அந்த இளைஞர் சிரித்தார்.

"யெஸ்... இவ மங்கையர்க்கரசி. இப்ப தேர்ட் ஸ்டாண்டர்ட். எட்டு வருஷம் முன்னாடி குப்பைத் தொட்டியிலேர்ந்து எடுத்துக்கிட்டு வந்தேன். உடம்புல ஒரு துணி கூடச் சுத்தி வைக்கலை. ஒரு பத்திரிகைல கவர் பண்ணியிருந்தது. நல்ல ஜுரம். இரண்டு நாள்ல செத்துரும்னு நினைச்சேன். ஆனா, கடவுள் புண்ணியத்துல தப்பிச்சது. இப்ப எட்டு வயசு.

"இவன் மனோகர். இவன் நடராஜ். இது சுந்தரி... இந்தப் பையன் கணேசன். இவங்க அம்மா இவனை வாசல்ல கொண்டுவந்து விட்டுட்டுப் போய்ட்டாங்க. பத்து வருஷம்

முன்னாடி இரண்டு குழந்தையோட ஆரம்பிச்சேன். இப்ப நாத்து இருவத்தாறு பேர்.'' என்றார், அந்த இளைஞர்.

தீபா இடையில் புகுந்தாள். ''இது தவிர, தனியா மன நிலை சரியில்லாத நாப்பது குழந்தைங்க. ஆதரவில்லாத வயசானவங்க எழுவது பேர்.''

''எப்படி எல்லோருக்கும், ஒரு தனி ஆளா?''

''உங்க மாதிரி இருக்கறவங்க ஹெல்ப் பண்றாங்க. ஐ நோ தீபா ஃபார் ஃபைவ் இயர்ஸ்.''

''நான் ஏதாவது செய்யறேங்க.''-நெகிழ்ந்து கரகரத்த குரலில் உடனே கேட்டான் நம்பி.

''தாங்க் யூ.''

''வேண்டாங்களா?''

''இப்படிக் கேட்டதுக்கு என் நன்றி. தாராளமா செய்யுங்க.''

''என்ன?''

''தீபா சொல்வாங்க. எனக்குக் கொஞ்சம் அவசரமா போகணும். ஒரு மூட்டை அரிசி டொனேஷனா தரேன்னாங்க... வாங்கிட்டு வரணும்.''

''நா வேணா அரிசி டொனேஷனா தரேனே தீபா.''

''ஒரு நாளைக்கு ஒண்ணரை மூட்டை அரிசி வேணும்.''

''ஒரு நாளைக்கா?''

''நீங்க கண்டிப்பா தரணும்னு இல்லை. உங்களுக்குத் தெரிஞ்சவங்க யார்கிட்டயாவது சொல்லலாம். நேரம் கிடைச்சப்போ வந்து பசங்களுக்குப் பாடம் சொல்லித் தரலாம். வெறும வந்து பேசிட்டு இருக்கலாம். நான் அதான் செய்யறேன்.''

''ஏன் தீபா, ஏன் இந்த மாதிரி நீங்க?''



''இதை யாராவது செய்ய வேணாமா?''

''ரைட்... இப்படி ஒரு உதவும் எண்ணம் ஏன்?''

''ஹாப்பினஸ்ஸுக்கு ஸ்பெல்லிங் தெரியாது. அதனால... இப்பத்தான்... இங்க வந்து பார்த்துட்டுத்தான்... இவங்களோட பழகிட்ட பிறகுதான் மெள்ள மெள்ள ஹாப்பினஸ்ன்னா என்னன்னு...''

கல்லிடுக்கில் நசுங்கின புழு மாதிரி. அவள் சொல்லிடுக்குகளில் அவன் மனம் நசுங்கிக் கூழாயிற்று. வெட்கம் துடிக்க வைத்தது. விளையாட்டுப் பேச்சு வெற்றுச் சீண்டல் காணாமற் போயிற்று. தானே ஐந்து நிமிட இடைவெளியில் தெளிந்தான்.

''உங்களுக்கு ஒரு கதை சொல்லட்டா. விக்கிரமாதித்தன்னு ஒரு ராஜா.''

''இந்தக் கதை எங்களுக்குத் தெரியும் அங்கிள்... குழந்தைகள் கோரஸாகப் பேசின.

''எல்லாம் படுகெட்டி, ஒரு கதைக்கு நூறு கேள்வி வரும். ஜாக்கிரதை...'' அன்று ஏதோ சமாளித்து, மறுநாள் அவர்களுக்குச் சொல்ல கதைப் புத்தகம் தேடிப் படித்து...

'பாடசாலை போக வேண்டும்
பாப்பா எழுந்திரு-நல்ல
பாப்பா எழுந்திரு...'

குழந்தைகள் மறுநாள் பாடிக் காட்டின. கண்களில் நீர் சுரக்க வைத்தன. படித்த படிப்பு அத்தனையும் மறந்து புதிய பள்ளிக்கு நம்பியின் மனசு எழுந்தது. புதிய அனுபவம் படித்தது. 'வாட் ஆஸ் ஹாப்பினஸ்?-சந்தோஷம் என்றால் என்ன?'

'இவ்வையகம் இன்புற்று இருப்பதல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே.'

புரிந்தது.

சாந்தமே சந்தோஷம் என்பதை உணர முடிந்தது. எது சாந்தம்? எப்போது சாந்தம்? எதனால் சாந்தம்?

எதனால் ஆசைகள் கிளறப்படவில்லையோ அதுவே சாந்தம். சூரிய உதயம் பார்க்கும்போது அது எனக்கு வேண்டும் என்று சொல்பவர் யார்?

எப்போது முழு ஈடுபாட்டுடன் தன்னை இழந்து தானே அதுவாக முடிகிறதோ அந்த நிலையே சாந்தம்.

எதனால் சாந்தம்?

'ஐயனே. நிலவு பார்க்கவும், சூரியனைத் தொழவும், காற்றை ஸ்பரிசிக்கவும், நீரை அருந்தவும், பூமியில் நிற்கவும் என்னை வைத்திருக்கிறாயே... அதற்கு நன்றி என்று தன்னுள் தன் பெருமை தாழ, தான் துரும்பாகி, தூசாகிப் போகும் நெகிழ்வுத் தன்மையான-தன்னுள் அடங்கிய-நிலை வர, சாந்தம்.

வந்தது. சாந்தமும் சாந்தத்தால் சந்தோஷமும் வந்தது.

''தீபா தாங்க்யூ...'' -நாலுமாதம் கழித்துக் குழந்தைகளோடு பேசித் திரும்புகையில் சொன்னான்.

''பறையண்டாம்...''

''ஏன்?''

''உலகத்துல தேவையில்லாத-அடிக்கடி சொல்லப் பட்டுக் கிழிந்து போன வார்த்தையிது. தாங்க்யூவைச் சொல்லாமல் சொல்ல முடியும்...''

''எப்படி?''

''அமைதியா பேசாம வந்தாலே உங்க நன்றி, அன்பு புரிஞ்சுடும்.''

அவனுக்குப் புரிந்து போக. அவர்களிடையே பேச்சுக் குறைந்து போயிற்று. அன்பு தகதகவென்று மலைச்சாரல்



செடி மாதிரி தழைத்து வளர்ந்தது. சிற்றோடை மாதிரி சத்தமில்லாது மின்னி ஓடிற்று. மரங்களிடையே நழுவும் மேகம் மாதிரி குளிர் மிகுந்த நட்பு. சத்தமின்றி எங்கணும் பரவியது.

''பசிக்கலை?''

''இரண்டு நாளா வயித்து வலி... லேசா. இன்னிக்குப் பட்டினி போட்டுறப் போறேன்.''

''நோ அப்படி இருக்காதீங்க''-தான் சாப்பிட்ட தயிர் சாதம் பாதி வழித்து மூடியில் வைத்துக் கொடுத்தாள்.

சாப்பிட்டான்.

'அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்...'

எச்சில் தயிர் சாதம்.

டேபிள் மாறிற்று.

அலுவலகத்தில் கேலி செய்தார்கள்.

அவள் புருவம் நெரித்தாள். அவன் பேசாது இருந்தான்.

''ரப்பர் மாதிரி இருக்கா மலையாளத்துக் குட்டி என்னமோ பண்ணி மயக்கிட்டாளே.''

''ஏண்டா நம்பி... ஊனு கழிஞ்சோ?''-அவர்கள் கேலியாகக் கேட்ட கேள்வி வேறு.

''ஐயரு அவளோட ஜதை போட்டுக்கினு எங்கனையோ போறான். எங்க போறான்னு தெரியலை...''

''இவன் ப்ரஹசரணம்... அவ சத்தோலிக்கம். சரிப்படுமா...'' கவலையின்றிக் கவலைப்பட்டார்கள்.

உலகமே இவ்விதம்தான். இது போக்கிரி உலகம். அவர்களோடு அவர்கள் மாதிரி இல்லாது போனால், உங்களைப் புறம் தள்ளிப் பேசும்.

உலகத்தில் நிறைய பேர் காதலிப்பதே இல்லை. அதனால் தான் வேறு யார் காதலித்தாலும் அவர்களுக்குப் பிடிப்ப தில்லை.

காதலிக்க சுத்த மனசு வேண்டும். சுத்த மனசு தன்னை இழத்தலில் வரும்.

காமம் தீர்க்கக் காதல் நாடகமாடியவர்களுக்கும் காமம் காதல் இரண்டுமே தவறு என்றவர்களுக்கு தன்னை இழத்தல் இராது... தான் என்கிற கர்வமே இருக்கும்.

நூறு அநாதைக் குழந்தைகளை ஒரு சேரப் பார்த்த நம்பி மனசு மாறினான். ஒற்றை ஆளாய் நின்று நடத்தும் இளை ஞர் எதிரே தான் ஒன்றுமேயில்லை என்று உணர்ந்தான். காதல் பரவசமோ படபடப்போ நிறைந்ததல்ல, அன்பு ததும்பிய நிறைவு என்பது உணர்ந்தான். இதற்கு வழி காட்டிய தீபாவை அவ்வித நிறைவோடு நடத்தினான்.

பெண்ணுக்குத் திமிரானவன் மீது பயம் வரும். திட மானவன் மீது வியப்பு வரும். தெளிவானவன் மீதே காதல் வரும்.

தீபாவுக்கு நம்பியின் மீது காதல் வந்தது.

தன்னுடைய நிறம் பார்த்தும், உடல் பார்த்தும், குரல் பார்த்தும், பணம் பார்த்ததும், பதவி பார்த்தும் வியப்பவர் களைவிட, தன் குணம் பார்த்து வியந்தவன் மீது காதல் வந்தது.

படித்த பெண்ணான அவளுக்குக் கல்யாணம் என்கிற சிஸ்டத்தின் மீது அவநம்பிக்கையிருப்பினும் தெரியாத பிசாசைவிட தெரிந்த பூதம் தேவலாம் என்கிற எண்ணம் இருந்தது.

இது காவல் பூதம் என்கிற நம்பிக்கை வந்தது. நிறைய இவனோடு கைகோத்து நிறைய சோஷியல் ஒர்க் பண்ண லாம் என்கிற எண்ணம் வந்தது.



அவன் வீடு பற்றி விசாரித்தாள்.

தெரிந்த பிறகு பயந்தாள்.

பிறகு வேறு யாரோடு வாழ முடியும்?

யோசித்தாள்.

அவன் வீடு சம்மதித்தால் பார்க்கலாம். இல்லையெனில் இப்படியே... இப்படியே...

கடிதம் எழுதினாள்.

ஊருக்குப் போய் பதிலோடு வருவான் என்று நினைத்த போது, அவன் உடல் வேதனையோடு வந்தான்.

இவனால் தன் எண்ணங்களுக்கு வழி பிறக்கும் என்று அவள் நினைத்தபோது இருட்டாகக் கிடந்தான். கண்ணில் லாமல் கதறினான்.

''நம்பி... நான் தீபா... நான் இருக்கேன். நான் இருக் கேன்... பயப்படாதே. பேடிக்கண்டாம் நம்பி...''

அவன் அவளை விடவேயில்லை.

அவளும்... அவனை விடவில்லை.

அன்பே தகளியாய், ஆர்வமே நெய்யாய், இன்புறு சொல்லே இடுதரியாய் அந்த இளைஞனுக்கு அவள். சுடரானாள். திட்டமிட்ட பாதையில் தொடர்ந்தாள்.

எப்படி?

## 28

**நா**னிருக்கிறேன் என்று சொல்லிவிட்டாளே தவிர, தீபாவுக்குக் குழப்பமாக இருந்தது.

மனசுக்கு இதமான ஒரு புருஷன். தனக்கு உள்ள சேவை மனப்பான்மையோடு ஒரு புருஷன் தனக்குக் கிடைப்பின் வாழ்க்கை பற்றிய ஒரு தெளிவு, நிம்மதி கிடைக்கும் என்று நினைத்திருந்தாள். குழந்தைகள் பெறாத திருமணமாக இருப்பின் அது நல்லது. தன் புருஷனுக்குக் குழந்தை ஆசை உண்டெனில் அதற்காக ஒன்றோடு ஒன்று போதும். அதுவும் வீடு என்கிற விஷயம், குடும்பம் சரியாய் அமைந்த பிறகு தான். அவசரமேதுமில்லை.

-இப்படிப் பல கனவுகள் உண்டு அவளுக்குள்.

ஆனால், எல்லா கனவுகளும் இப்போது ஆட்டம் கண்டுவிட்டன. வெட்கப்பட்டவனைப் பார்த்து, வியந்து, தானே வெட்கம் விட்டு நம்பியின் அண்ணனுக்குக் கடிதம் எழுதி, ''நான் உங்கள் தம்பியைத் திருமணம் செய்து கொள்ளலாமா' என்று கேட்டு... சிக்கலாகி விட்டது.

ஆமாம். கேட்டேன். நம்பிக்குப் பார்வை உள்ள போது கேட்டேன். நம்பி முழு மனிதனாக உள்ள போது கேட்டேன். இப்போது அது சரிவராது. மறுத்து விடலாம். யாரும் கட்டாயப்படுத்த மாட்டார்கள். 'நியாயம் தானே இவள் சொல்வது' என்று சொல்வார்கள்.

அடுத்தவர் நியாயம் சொல்வது கிடக்கட்டும். தனக்கு இது நியாயம்தானா? ஆபீஸ் விட்டு பிறகு அநாதைக் குழந்தைகள் இல்லத்துக்குப் போனதும் அங்கே சந்தோஷம் கண்டதும் பொய்யாகாதா? 'நான் என் ஓய்வு நேரத்தை எப்படிச் செலவு செய்கிறேன் பார்...' என்று அலட்டிக் கொண்டது பேதமையாகாதா?

ஒருவேளை அந்த அலட்டலுக்குச் சோதனை வந்து விட்டதோ...? 'சேவை மனசு நிஜமா?' என்ற சோதனை வந்து விட்டதோ?



நம்பி கேட்கவில்லை. ஊரில் தமையன் என்ன சொன்னார் என்று சொல்லவேயில்லை. கண் வருமா? விசாரித்துச் சொல். வராதா? தைரியமாகச் சொல். ஏற்கிறேன்.

வராது என்பதாகத்தான் தெரிகிறது. நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டுப் பார்வை போயிருக்கிறது. மூளையிலுள்ள கண் பகுதி பாறையில் மோதியதில் பழுதுபட்டு விட்டது. இனி பார்வை வருவது கடினம். பழக்கப்படுத்திக் கொள்வதே நலம்.

எதை?

பார்வையற்றவனாக இருப்பதை...

ப்ரெய்லி எழுத்துக்களை...

குச்சி வைத்து தடம் தெரிந்து நடப்பதை...

இதற்குக் கோபப்படாமல் 'அட... இது ஒரு மாதிரி வாழ்க்கை...' என்று வாழ்வதைப் பழக்கப்படுத்திக் கொள்வதே நலம்.

''உங்களுக்கு ஏதாவது ஹெல்ப் பண்ணணுமா?''-நிறைய பேர் வந்தார்கள். செய்தார்கள். ''பாட்டு நிறைய கேளு நம்பி'' -ஒரு நண்பன் டேப்ரிக்கார்டரும் காஸெட்டுகளும் பரிசளித்தான். 'இனி இதுதான் உனக்கு'' என்பது போல் இருந்தது. வேதனை தந்தது. ஜேசுதாஸ் குரல். தனிப்பாடல். மலையாளம்.

*'கரளின் கிளிமரத்தில்*
*காணாத கூடு கட்டி*
*கவித பாடி யென்னை*
*களியாக்கும் கிளிமகளே*
*களி வீடு ஆகிறதே*
*என் ஹிருதயம்*
*காத்திருக்கும் காம்புகளில்*
*கண்ணீரின் பாடுகளில்*

கூர்த்தச் சுண்டுகளால்
கொத்தி நீ ரசிச்சில்லே'

"என் நெஞ்சமென்னும் மரத்தில் கண்ணுக்குப் புலனாகாத கூடு ஒன்று கட்டி கவிதை பாடி என்னை மகிழ்விக்கும் என் கிளி மகளே, என் மனசு வீட்டைக் கேலிக்கூத்தாக்கி விடாதே..."

தீபா வந்தாள். "என்ன இது, மலையாளப் பாட்டு?"

"கத்துக்கணும்."

"எதுக்கு?"

"உன் பாஷை மலையாளமில்லையா?"

"அதனால?"

"இனிமே உன் முகத்தைப் பார்த்து உன் மனசு புரிஞ்சுக்க முடியாது. பார்வை இல்லாதவனுக்குப் பாஷை முக்கியம். ரொம்ப முக்கியம். உன் மனசை, நீ உன் பாஷை பேசுகிற போது புரிஞ்சுக்கணுமே..."

"நான் தமிழ் பேசறேனே..."

"என்ன பேசறே...? நாளைக்கு அவன் வந்தானாங்கறே. பாஸ்ட், ப்ரசென்ட். ஃப்யூச்சர் எல்லாம் குழம்பி போறது..."

அவள் சிரித்தாள்.

"சரி, நான் மலையாளம் சொல்லித் தரேன்."

"அந்தப் பாட்டுல.

'காத்திருக்கும் கம்புகளில்
கண்ணீரின் பாடுகளில்
கூர்த்துச் சுண்டுகளால்
கொத்தி நீ ரசிச்சில்லே...'

அதுக்கு என்ன அர்த்தம்?"



"-என் ஹிருதயக் கிளைகளில் கண்ணீர் தடங்களைக் கூர்மையான உன் அலகால் கொத்தி ரசித்தாயல்லவா?"

"இந்தப் பாட்டுப் புடிச்சிருக்கா?"

"உம்..."

"ஏன்?"

"ஒரு சோகம், பிரிவு. வேதனை தெளிவா இருக்கே."

"இப்ப சோகம். பிரிவு, வேதனை எதுனால?"

"சும்மா ஒரு ரசனை."

"பொய். என்ன பிரிவு, வேதனை?"

"உலகம் என்கிட்டேருந்து பிரிஞ்சுபோச்சில்லையா தீபா? எல்லோரும் இருந்தாலும் என்கூட இல்லை. எங்கேயோ இருக்காங்கன்னு ஒரு பிரிவு. வேதனை இருக்கில்லையா? மனுஷாளைத் தொட்டாத்தானே அவங்க இருக்கறது தெரியுது."

"குரல்?"

"அந்நியமா இருக்கு. தள்ளி இருக்கு. குரலோட பார்வை இருந்தா பார்வை தழுவும். தொடும் மனுஷாளோட உடம்பெல்லாம் உணரும். பார்வை இல்லாத குரல் மட்டும் நாலடி தூரத்துல கேட்கறபோது. எத்தனை அன்பு இருந்தாலும் டெலிபோன்ல பேசற மாதிரிதான் இருக்கு."

"உங்களைத் தொடணுமா நம்பி?"

"தொடு. ஆனா... அதுக்கு வேற அர்த்தம் வரும். தீபா."

"வராது."

"ஒழிஞ்சு போறான். கண்ணில்லாதவன் தானேன்னு சரின்னு சொல்றியா?"

"இல்லை. உனக்கு அதிகாரம் இருக்கு தொடு."

"அதிகாரமா? எனக்கா? வேலை போயிடுத்து. வேற வழியில்லை. யாரை நான் அதிகாரம் பண்ண முடியும்? என்னன்னு செய்ய முடியும்?"

"நீ என் ஆள். என் புருஷன்."

"உணர்ச்சிவசப்படாதே தீபா. நான் ஒரு குருடன்."

"இத்தனைநாள் யோசிச்சேன் நம்பி. ஒரு புருஷன் துணையோட ஊருக்குச் சேவை செய்யணும்னு நினைச்சேன். இப்ப உனக்கும் உன்னால ஊருக்கும் பண்ணப் போறேன். கண்ணு தெரியாதவங்க தமிழ் நாட்டில் நிறையப் பேர் இருக்காங்க நம்பி."

"நான் என்ன செய்ய முடியும்?"

"ப்ரெய்லி கத்துத் தரலாம்."

"எனக்கே தெரியாதே..."

"நீ கத்துக்கும் போதே எப்படிக் கத்துக் கொடுக்கறதுன்னு கத்துக்கோ."

"கரெக்ட். ப்ரெய்லி எங்கே கத்துத்தராங்க?"

"வா. போகலாம்..."

கை நீட்டினாள். அவன் தடவிப் பற்றிக் கொண்டான். தொடர்ந்தான்.

பார்வை தெரிந்து அனுபவித்தது. பார்வை போனதில் வருத்தமிருந்தது. அதுவே வேகமும் கொடுத்தது.

ப்ரெய்லி முறையைத் தமிழ்நாட்டில் எளிதாகக் கற்றுத்தர-யோசித்தான். ப்ரெய்லி பத்திரிகை நடத்த உதவி செய்தான்.

அரசு அவனுக்கு ஆசிரியர் வேலை தந்தது. அந்த ஆசிரியனுக்கு அவன் குடும்ப சுகம் கற்பித்தாள்.

ஒரு குழந்தை, சிறிய வீடு, அருமையான மனைவி வாழ்க்கை ரம்மியமாக ஓடுகிறது.



ஆனால், எத்தனை பேசியும் யோசித்தும் அவனது உள் உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சம்பவங்கள் தெரிந்த அளவு, பார்வையற்றவரின் மன நிலையை உணர முடியவில்லை. அமெரிக்கா போகாம லேயே அமெரிக்காவைப்பற்றி எழுதுவது போல, அவர்கள் உணர்வு எனக்கு அந்நியமாய் இருக்கிறது.

ஆனால், பார்வையற்றவர்களிடம் அவன் பேசித்தரும் உற்சாகம் அளவிட முடியாதது. வாழ்தல் ஒரு சிரமமும் இல்லை என்கிற சித்தாந்தம் உயர்வானது.

"இது எங்க ஊருங்க. நான் இங்க பொறக்கறதுக்கு யார்கிட்டேயும் அனுமதி வாங்கவில்லை. பொறந்துட்டேன். நான் உசிரோட இருக்க வேணாமா? அதுக்கு மரம் வெட்டறேன்."

"இல்லீங்க... மரம் வளர்க்கறது..."

"எனக்குத் தெரியுங்க. அதுங்க என் குழந்தைங்க மாதிரி. தினம் இந்தக் காத்துக்கு நாலு மரம் வுழும்" அதைத்தான் வெட்டுவோம். பச்ச மரம் வெட்டறவன் பட்டணத்து லேர்ந்து வரான்."

"வீடு எங்கே?"

போனேன். சிறிய, உறுதியான குடிசை. குழந்தைகள் மனைவி. அங்கு எனக்கு அவரின் காதல் கதை சொல்லப் பட்டது.

புருஷன் மனைவி இருவருமே படிப்பில்லாதவர்கள். காதலில் போராடி இருக்கிறார்கள். போராட படிப்பு அவசியமில்லை என்று புரிந்தது.

காட்டில் வளர்ந்த காதல் கதை...

2735
848
3583
500
4083 77

## 29

காட்டில் நடந்த அந்தக் காதல் போராட்டக் கதையின் நாயகி-வெள்ளி...

எல்லோரும் வெள்ளியைத் திமிர் பிடித்த பெண்பிள்ளை என்றார்கள். அவள் தகப்பன் மட்டும் அவளை 'வன தேவதை' என்றான். அதற்கொரு காரணமும் உண்டு.

அவன் மனைவி பூவாத்தாள். பைன் மரம் வெட்டி இருபதடி நீளத் துண்டுகளாய் இருபது துண்டுகளைக் கோரையில் முறுக்கிக் கட்டி பத்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாயுடுபுரம் விறகுத் தொட்டியில் போட்டு, எட்டு ரூபாய் கூலியோடு திரும்பும்போது வழியில் பூவாத்தாளுக்குப் பிரசவ வலி கண்டுவிட்டது.

நான்கு பெண்கள் மலைச்சரிவில் இருந்த அந்தச் சோலைக்குள் அவளை அழைத்துச் சென்றார்கள். நல்ல வேளை, அலுமினியப் பாத்திரம் ஒருத்தியிடம் இருந்தது.

பூவாத்தாளைப் படுக்க வைத்தனர். பின்னால், ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் நடந்து வந்து கொண்டிருந்த பூவாத்தாளின் புருஷனிடம் நெருப்புப் பெட்டி கேட்டு, சுள்ளி பொறுக்கி தீ மூட்டி, சுடுநீர் போட்டு, அடுப்பைச் சுற்றி உட்கார்ந்து இன்னொரு வலிக்குக் காத்திருந்தார்கள்.

போதை லேசாக இருப்பினும், பெண்கள் கூப்பிட்ட குரலுக்கு வரவேண்டும் என்பதாலும், காட்டெருமைகள் வருகிறதா என்று பார்க்க வேண்டியும், எதிர்க்குன்றின் விளிம்பில் பூவாத்தாளின் புருஷன் உட்கார்ந்திருந்தான்.

சூரியன் மேற்கே- மலைக்குப் பின்பக்கம் மறைந்து விட்டான். வானம் மட்டும் வெளிச்சமாக இருந்தது. அந்த வெளிச்ச நிழலில் காடு கரும்பச்சையாகத் தெரிந்தது. கூதல்



பகல் இரண்டு மணிக்கே துவங்கி விட்டது. மேகம் மலை இறங்கிச் செடிகளூடே உரசிக் கொண்டு போவதை உணர முடிந்தது. காலின் கீழ் உள்ள தவிட்டுக் கோரையைத் தடவ, கையில் ஈரம் வந்தது. சோலையிலிருந்து சத்தமே இல்லை. புகை மட்டும் மூட்டிக்கொண்டு சோம்பலாக மேலே போயிற்று.

திடீரென்று பூவாத்தாள் அலறும் சத்தமும், பெண்கள் குரலும் கேட்டன. 'ஊ... ஊ... ஊ...' என்று குலவை சத்தம் கேட்டது. பிறகு குழந்தைச் சத்தம் கேட்டது.

பூவாத்தாளின் புருஷன் எழுந்து நின்றான். சோலை நடுவிலிருந்து ஒரு பெண், புடவைக் கந்தையில் உள்ள குழந்தையை எதிர்க்குன்றில் அமர்ந்திருந்த அவனுக்கு உயர்த்திக் காட்டினாள்.

பளீரென்று அவன் கண்ணுக்குப் பெண்ணும் குழந்தையும் வயிற்றிலிருந்து வனதேவதை வெளியே வந்ததுபோல்... வன தேவதை படுத்திருப்பது போல்... இரண்டு மலைச்சரிவுக்கு நடுவே ஒரு முதிர்ந்த பெண் மல்லாந்து கிடப்பதுபோல் தெரிந்தது. சரிவில் எல்லா மரமும் காட்டுப் பூவரசு. குட்டையான முரட்டு மரம். இரண்டங்குல உயரக் கன்றில பத்து ஆள் பிடித்துத் தொங்கலாம். சரிவில் ஏற நம்பி கால் வைக்கலாம். அசையாது.

அங்கிருந்து ஆறு கிலோமீட்டர் சரிவில் இறங்கி ஊருக்குப் போய்ப் பெரிசுகளிடம் சொல்லி ஆள் கூட்டிக் கட்டில் கொண்டுவந்து தாயையும் மகளையும் அலாக்காக... விடிய விடிய ஊருக்கு வந்து விட்டார்கள்.

''வெள்ளிக்கிழமை பிறந்துருக்கு பொண்ணு. 'வெள்ளி'ன்னு பேர் வை.''

''நல்ல பிறப்புங்களா?''

''வெள்ளிக்கிழமை பொறந்த எந்தப் பொம்பளையும் எவனுக்கும் அடங்காதவ. அப்பனாவது ஆத்தாளாவது... எட்டி உதைச்சுட்டுப் போய்டுவா. ஆரவல்லி, சூரவல்லி ஆருக்கும் அடங்காத வல்லிதான்.''

''அடங்காம போனா என்னா? அவ பொழப்ப அவ பார்த்துக்குவா இல்லே...? எடுபட்ட சிறுக்கியா இல்லா திருக்கணும்.''

''அசிங்கமெல்லாம் பண்ணாது. அது பாட்டுக்குப் போவும், வரும்-'' பெரிசு அடித்துச் சொன்னார்.

தஞ்சைமிராசுகள் உயில் எழுதும்போது, ''என்ன உத்யோகம்?'' என்றால் ''சுகஜீவனம்'' என்று எழுதுவார்கள். அதாவது, உத்யோகமே இல்லை. ஆனால், சுகஜீவனம். இங்கே மலையில் எதிர்ப்பதம். சகலருக்கும் கடின ஜீவிதம். தேனடையும் விறகும், காட்டெருமைத் தோலும், நரிப் பல்லும், சில கிழங்குவகையும் விற்பவர்கள்... கஞ்சா பயிர் பண்ணத் துவங்கிய பிறகு சிறிதளவு சௌக்கியமானார்கள்.

நெட்டுக்குத்தாகத் தரையிலிருந்து ஐந்நூறு அடி உயரம் ஏறவேண்டும். பிறகு மலைப்பாதை... கடல் மட்டத்திலிருந்து இரண்டாயிரம் மீட்டர் உயரம் சுழல் காற்றும், பேய் மழையும், எலும்பு உருக்கும் குளிரும் சகஜம். காளான் சிலதைக் கரைத்துக் குடித்தால் குளிர் தாங்க முடியும். மழை, அதை யாரும் எதிர்க்க முடியாது. நனையத்தான் வேண்டும். தவிட்டுக் கோரை வீட்டில், காய்ந்த சுள்ளி போட்டு நெருப்பு மூட்டிக் குந்திக் கொண்டிருக்க வேண்டும். ''கஞ்சா பயிர் பண்ணலாம். லாபம்...'' என்று யாரோ கண்டுபிடித்துச் சொல்ல ஊரே பயிர் பண்ண இறங்கியது. யார் யார் மூலமாகவோ உரம் வந்தது. அரிசி வந்தது. பணம் வந்தது.

வெள்ளி பிறந்த பிறகு அவள் தகப்பனும் தாயும் மரம் சுமக்கவில்லை. மூட்டை சுமந்தார்கள். உலர்ந்த கஞ்சாவை அமுத்தி அமுத்திக் கட்டுகளாக்கித் தரைக்குக் கொண்டு



போய்க் கொடுத்து நாற்பது ரூபாய் சுமைகூலி வாங்கினார்கள். பத்து ரூபாய்க்குப் புத்தம் புதுகவுன் வெள்ளிக்கு எடுத்தார்கள்.

இப்படி வளர்ந்த திமிர்தான் வெள்ளியை யாருக்கும் அடங்காத வல்லியாக்கி விட்டது. பழைய ஆடை உடுத்த மாட்டாள். புத்தம் புதுசுதான் கேட்பாள்.

ஊருக்காகக் கஞ்சாபயிர் பண்ணுவார்களே தவிர, அந்தப்பீடையைத் தின்னவோ, புகைக்கவோ மாட்டார்கள். அப்படிச் செய்தால் கால் ஊன்றி மலையேற முடியாது. குளிரை நெஞ்சுக்கூடு தாங்காது. இரண்டு தடவை மலை யேறி முயல்கறியும், காளான் வடையும் சமைத்து உண்டால் அடித்துப் போட்டாற் போலத் தூக்கம் வரும். எழுந்து வாய் கொப்பளித்துச் செடிகளுக்குப் பின்னே போனால் வயிறு சுத்தமாகும். தூக்கம் கலையவில்லையா? தேன் கொஞ்சம் குடிக்க... உற்சாகம் பிறக்கும்.

உணவே பிரச்னையாக இருந்த வாழ்க்கை மாறி, உணவுக்கப்பால் வேறு விஷயங்கள் தேடும் சூழ்நிலையில் வெள்ளி வளர்ந்தாள். தலைக்கு எண்ணெய் தடவிக் கொண்டை முடியும் 'ஸ்டெயிலும்' வந்துவிட்டது. தாலி கூடத் தேவையில்லாத திருமணம் அவர்களுடையது. எந் நேரமும் வெள்ளி கழுத்தில் எதாவது ஒரு மாலை இருந்தது. இருட்டினால்தான் பயாஸ்கோப்பு. இருட்டிய பிறகு படம் பார்த்துவிட்டு எப்படி மலை ஏறுவது? ''ஏறலாம்... வாங்கடி தினம் போற தடம்தானே எங்கன குழப்பமா இருக்கோ அங்க செடி உடைச்சுத் திசை காட்டி மடக்கி வெச்சுருவம். வந்து திசை பார்த்து நடப்பம்... வாங்கடி'' நிலா ஒளியில் பன்னிரண்டு பெண்களுடன் படம் பார்த்துவிட்டுத் தனியே மலையேறி வந்திருக்கிறாள்.

''எருமை சீறினாத் தெரியும்''- பெரிசு பயமுறுத்தினார்.

இருபதடி தொலைவில் எருமைகள் மேய, இரண்டிரண்டு பேராகக் கூச்சல் போடாது பாதை தாண்டியிருக்கிறார்கள். எருமை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தது. தாக்கவும் இல்லை. தடுக்கவும் இல்லை.

உண்பது, உழைப்பது, உறங்குவது இதைத் தவிர வேறு, எந்த வேலையும் அவர்களுக்கு இல்லை. எது பற்றியும் கவலை இல்லை. அவ்வப்போது குடிவெறியில் சண்டை நடக்கும், ஆற அமர சமரசம் நடக்கும். 'காட்டுக்குள் இவனும் அவளும் போனார்கள்... அவளும் இவனும் ஒதுங்கினார்கள்... ' என்று பேச்சுவரும். பெரிது படுத்துவதில்லை.

வெள்ளிக்கு பயாஸ்கோப்பைவிட கொடைக்கானலுக்கு வரும் டூரிஸ்ட்டுகளைப் பார்த்து வியப்பு... கடற்கரைப் பட்டினத்திலிருந்து இங்கே கோடைக்கு வருகிறவர்கள் என்பது ஆச்சரியம். காரில் வந்த குழந்தைகள் புத்தகம் படிப்பதும்... பாட்டுப் பாடுவதும்... யாரோ ஒரு தலைவனுக்கு அடிபடுவதும்... வெட்டுக்கிளி துள்ள அலறுவதும்... "காட்டு எருமை உண்டா... புலி, சிங்கம் உண்டா?" என்று கேட்டுக் காட்டுக்குள் வந்து எருமையைப் பார்த்துப் பயத்தில் உறைவதும் அதிசயம்.

நாயுடுபுரம் போவதற்கு முன்னால் அமைதிப் பள்ளத் தாக்கில் விறகுச் சுமை இறக்கிவிட்டு வெள்ளி உட்கார்ந்திருந்தபோது எதிரே கார் இருந்தது. உள்ளே அவள் வயசில் ஒரு பெண். ஒரு அம்மாள். அவளுக்குக் கணவன் போல ஒருவன், இன்னும் பொடிசாய் நாலைந்து குழந்தைகள்.

கம்பியில் சாய்ந்தபடி போட்டோ எடுத்துக் கொண்டார்கள். ஏதோ தின்று பேசினார்கள்.

"வாங்க வாங்க.. " பெரிய ஆள் அதட்டினான்.

குழந்தைகள் ஓடிவந்து வண்டியில் ஏறின.



அந்த அம்மாள் மட்டும் 'இந்த இடம் பிடித்திருக்கிறது' என்பதுபோல் அங்கேயே நின்றாள்.

"வா..." ஏதோ திட்டிக் கூப்பிட்டான்.

"வரேன். இருங்க..." -அந்த அம்மாள் சலிப்புடன் அவனைப் பார்த்துக் கத்தினாள், முணுமுணுத்தாள்.

"வரப்போறியா இல்லையா?" கதவு திடீரென்று சாத்தி அந்த ஆள் இறங்கினான்.

குழந்தைகள் மிரண்டன.

"வர முடியாது, என்ன இப்ப?"

"நாயே..." நாலு தாவலில் அவளை நோக்கி ஓடினான். அந்தப் பெண்மணி கீழே கிடந்த மண் எடுத்து அவன் மீது அடித்தாள். சொத்தென்று முகம் முழுவதும் செம்மண் விழுந்தது.

"ஏய், ஏய்..." அவன் கண் பொத்தித் தடுமாறினான்.

அவள் கம்பியில் கால் வைத்து ஏறினாள். குழந்தைகள் கூவின. வெள்ளி பயத்தில் எழுந்து நின்றாள்.

அந்த ஆண் கண் திறக்காமல் நிறைய கெட்ட வார்த்தைகள் சொன்னான்.

"அம்மா குதிக்கப் போறாங்கப்பா..." -பெண் கத்தியது.

அந்த ஆள் பேசாது, கண் திறக்காது நின்றான்.

அந்தப் பெண்மணி, குழந்தைகளைப் பார்த்துக் கையாட்டினாள்.

எகிறிப் பள்ளத்தாக்கில் குதித்தாள்.

வெள்ளிக்கு உடம்பு உதறியது.

குழந்தைகள் கம்பி தாண்டி ஓடின. தொலைவில் இருந்த சில ஆண்கள் அருகே வந்து குழந்தைகளைப் பிடித்துக் கொண்டார்கள்.

குழந்தைகள் திமிறின.

அந்த ஆள் இன்னமும் கண் திறக்க முடியாமல் பெரும் குரல் எடுத்துத்தரையில் உட்கார்ந்து அழுதான்.

வெள்ளி சரிவில் கால் ஊன்ற முடிந்த மட்டும் இறங்கி எட்டிப் பார்த்தாள்.

குதித்த அந்தப் பெண்மணியின் கதி...?

## 30

அந்தப் பெண்மணி குதித்த செய்தி போலீஸுக்குப் போயிற்று. கட்டைகளைக் காட்டுப் புதர்களில் போட்டு விட்டு வெள்ளியைச் சார்ந்த கூட்டம் ஆணும் பெண்ணுமாக நின்று பார்த்தது.

அந்த ஆண்களில் மேலூர் ஆண்களும் இருந்தார்கள். மேலூர் இன்னொரு மலை. வெள்ளி வாழும் கீழூரை விட உயரமான மலை.

''இறங்கி எடுக்க வேண்டும்'' என்று போலீஸ் ஃபாரஸ்ட் ஆபீஸ்-சார்ந்தவர்கள் கேட்டார்கள்.

மூவாயிரம் கொடுப்பதாகச் சொன்னார்கள்.

ஆறு பேர் கிளம்பினார்கள்.

''ஒண்ணா கிடைக்காது. துண்டுதுண்டா இருக்கும். இருக்கிறதை எடுத்துக்கிட்டு வர்றோம். நகைநட்டெல்லாம் சிதறிவிட்டிருக்கும். கிடைக்காது. அப்புறம் எங்களை எங்கே எங்கே' ன்னு குடையக்கூடாது. சரிதானா?'' அவர்கள் முன்னமே இப்படி இறங்கி சடலங்களை எடுத்தவர்கள் போலிருக்கிறது.



''கூட ஒரு லேடி போனா நல்லது. ஏம்மா நீ போறியா... கீழே...''- ஃபாரஸ்ட் ஆள் வெள்ளியிடம் கேட்டான். காட்டுச் சவுக்கு வெட்டப் போகையில் வழி மறித்து வம்பு பண்ணுகிறவன் அவன்.

தற்கொலை செய்து கொண்டவளின் மகள், வெள்ளி யிடம் கெஞ்சினாள். ''எங்கம்மாவைக் கொண்டாந் துரும்மா... எப்படியாவது கொண்டாந்துரும்மா.''

ஏழாவதாக வெள்ளி கிளம்பினாள்.

அந்தச் சரிவில் அவள் இறங்கியதே இல்லை. அது தவிர, கண்ணெதிரே பார்த்த நிகழ்ச்சியின் பாதிப்பில் ஏதோ ஒன்று அவளை இறங்கத் தூண்டியது. வெட்டுக் கத்தி இடுப்பில் சொருகி, கடைசி ஆளாகக் கீழிறங்கினாள்.

நெட்டுக்குத்துதான். சில இடங்களில் உட்கார்ந்து நகர வேண்டியிருந்தது. அடிவாரம் போக இரண்டுமணியாயிற்று.

உடம்பு தேட நாலு மணியாயிற்று. தலை கிடைக்க வில்லை. ஆறு மணியாயிற்று.

''இப்ப இங்க இருந்துட்டுக் காலைல ஏறலாம்'' என் றார்கள். நெருப்பு மூட்டி ஆண்கள் உட்கார, தொலைவில் வெள்ளி உட்கார்ந்தாள். அவளுக்கு ஒரு கொலுசும், இரண்டு கை வளையல்களும் கிடைத்திருந்தன.

அவள் கொலுசு போட்டுப் பார்த்தாள். கைவளையல் களை நிமிர்த்திக் கையில் போட்டுக் கொண்டாள். ஒரு ஆள் அருகே வந்து உட்கார்ந்தான்.

பெரிய செயின் காட்டினான்.

''என்ன இது?''

''தாலி.''

''தங்கமா?''

''ஆமா''

''நாம தாலி கட்டறதில்லை. இல்லே?''

''இல்லை.''

''இந்தம்மாவுக்கு அந்தாள் கட்டின செயினா அது?''

''ஆமா.''

''அறுத்து மூஞ்சில வீசாம பள்ளத்துல ஏன் வுழுந்திருக்கு?''

''இப்பத்தான் பள்ளத்துல வுழுந்துதா? பார்த்தியா நீ?''

''கண்ணால பார்த்தேன். பசங்க அழுவுது. அந்த அம்மா கையாட்டிக் குதிச்சுருச்சு.''

''என்ன கஷ்டமோ?''

''கஷ்டம் என்னா-புடிக்கலைன்னா போயிற வேண்டிது தானே...''

''அவங்களாலே போக முடியாது.''

''ஏன்?''

''அப்படித்தான்.''

அவனும் அவளும் இரவில் மற்ற ஊர் மக்கள் வாழ்வு பற்றிப் பேசினார்கள். அவனுக்கு நிறையத் தெரிந்திருந்தது.

''நாய் வருது...'' எழுந்து நின்று திடீரென்று கூவினாள்.

எல்லா ஆட்களும் எழுந்து நின்றார்கள். திக்குக்கு ஒருவராகத் திரும்பிக் கொண்டு இருட்டை உற்றுப் பார்த்தார்கள். நீண்ட மரக் கிளைகளை வீசி ''ஹே ஹேய்'' என்றார்கள்.

செடிகளூடே நீல நிறக்கண்கள் நெருப்பு வெளிச்சத்தில் தெரிந்தன. இருபது முப்பது செந்நாய்கள் அவர்களைச் சுற்றிக் கொண்டன.

காட்டெருமையைக் கூடச் சமாளித்து விடலாம். செந்நாய்க் கூட்டம் மிக பயங்கரம்.



அவன், இறந்து போன அந்த அம்மாவின் ஒரு கையை கோணியிலிருந்து எடுத்து ஒரு புதருள் போட... நிறைய செந்நாய்கள் புதர் நோக்கி பறந்தன.

அவன் மரக்கிளை எடுத்து சரமாரியாக வீசினான்.

நாய்கள் கலைந்து ஓடின.

இடம் அமைதியாயிற்று.

நெருப்பைத் தூண்டிவிட்டார்கள். இன்னொரு முறை நாய்கள் வரும் என்று தெரிந்து காத்திருந்தார்கள்.

''நெருப்பைக் கவனிச்சுக்க வெள்ளி'' என்று குரல் கொடுத்தார்கள். நெருப்பு தூண்டிவிட்டாள். சில்லென்று காற்று வீசியது. வானம் பார்த்தாள். கறுப்புத் திட்டுக்கள் நிறைய இருந்தன. மழை வரலாம். வந்தால் நெருப்பு அணையலாம். நெருப்பு அணைந்தால்...? பயந்தாள்.

மழை வந்தது.

அவர்கள் கவலையானார்கள். ''நாய்கள் ஏற முடியாத வழுக்குப் பாறைக்குப் போய்விடலாமா... என்று பேசினார்கள்.

செந்நாய்களும் தொடர்ந்தன.

சுற்றிலும் காடு... பலத்த மழை... கடும் இருட்டு இடுப்பில் பெண்மணியின் பிணம்... பின்னே செந்நாய்க் கூட்டம்...

வெள்ளி மரண பயத்துக்கு நடுவே மரணம் பற்றி யோசிக்கத் துவங்கினாள்.

மரணம் தரும் பயத்தினால்தான் உணவு, உடை உறைவிடம் எல்லாம். பசி மரணம் தரும் என்பதால் உணவு. குளிர் மரணம் தரும் என்பதால் உடை. கொடிய விலங்குகள் மரணம் தரும் என்பதால் உறைவிடம். துணை தேடலும் கூட்டமாகச் சுற்றலும் கூட்டத்தை உருவாக்கிக் கொண்டதும் மரணம் தள்ளிப் போகும் வழிகள். பிள்ளை பெறுதலும்

மரண எதிர்ப்பே. நான் சாகவில்லை. என் சாயல் இங்கு உண்டு. சாயலுக்குச் சாயல் பிறக்கும் வழி உண்டு என்ற கட்டமைப்பு வைத்ததும் மரணத்தோடு போட்ட சண்டை. ஆயினும் மரணம் தவறாது வருகிறது தாக்குகிறது.

ஆனால், நகர வாழ்க்கையைவிட காட்டுவாழ்க்கையில் மரணம் எந்நேரமும் சம்பவிக்கும் நிலை அதிகம். குளவி கொட்டும். பாம்புகொத்தும், பன்றியும் எருமையும் கிழித்து மிதிக்கும். செந்நாயும், கரும்புலியும் வழி மறித்து மரணம் காட்டும். இவை ஏதுமில்லையெனினும் கால் வைத்த கல் உருண்டு பெரும் சரிவில் தள்ளிவிடும். இடி இடித்து மின்னல் இறங்கி பச்சை மரத்தோடு ஆளையும் எரிக்கும். இடை விடாத குளிரில் விஷ ஜுரம் பரவி மலை இறங்கும் முன் மரித்துப் போக நேரிடும். பிள்ளைப்பேறில் வைத்தியம் சரியில்லாது செத்துப் போன பெண்கள் அநேகம். வேக வைத்த காளானில் ஒரு காளான் தவறானதாக இருந்தாலும் விஷம் பரவி நெஞ்சு அடைக்கும். ஆவி பிரிக்கும். மலையின் இரண்டு பிளவுக்கு நடுவே சருகு விழுந்து விழுந்து... விழுந்து சருகில் காற்றில் மண் பரவி, மழையில் இறுகி... இறுகிய இடத்தில் புல் முளைத்துப் பச்சென்று இருக்கும். புல் தரை தானே என்று கால் வைக்க, ஆள் கனம் தாளாது புல்லும் மண்ணும் பொத்துக்கொண்டு பளிச்சென்று பிளக்க சிரித்துக் கொண்டே முன்னே போன ஆள் கூட என்ற கூவலுடன் மலைப்பிளவுக்கு இடையே ஐந்நூறு அடி பள்ளத்தில் விழுந்து இறந்ததும் உண்டு.

ஆள் விழுந்த இடத்தில் ஆழம் பார்க்கக் கல் போட்டால் ஒரு நிமிட நேரம் பொறுத்துக் கல் தரையில் மோதிய சத்தம் மெல்லியதாகக் கேட்கும். 'தினம் போகும் வழியில் இவ்வளவு பெரிய பாதாளமா? இவ்வழியில் எப்படிப் போனோம் இதுநாள் வரை?' -வியப்பு வரும்.



வெள்ளிக்கு இந்த நேரம் அந்த வியப்பு அதிகம் வந்தது. இப்படி எந்த நேரமும் மரணம் வந்து கொத்திக் கொண்டு போகிற வாழ்வில், வெட்டும் குத்தும் சண்டையும் சச்சரவும் ஏன்?

கேள்வி வந்தது.

''என்ன தவறு? யாரிடம்?'' ஆச்சரியம் வந்தது.

எருமையின் வலிவு இல்லை. செந்நாயிடம் இருக்கும் ஒற்றுமையில்லை. புலியின் விரைவு இல்லை. குளவியின் சுறுசுறுப்பு இல்லை. பாம்பின் கவனம் இல்லை, ஆயினும் மனிதனுக்குக் கர்வம் மட்டும் ஏன் இருக்கிறது? இறுமாப்பு ஏன் வருகிறது?

எவ்வளவு நொய்மையான பிராணி மனிதன், கொம்பின்றி, விஷமின்றி, கூரிய பல்இன்றி, சிறகின்றி, மெல்லிய தோலும், துவண்டு விழும் இடுப்பும், புல் தடுக்கிக் கவிழ்ந்து போகும் நடையும்... தாவி கிளைபற்றிப் போகத் துணையாய் வாலில்லாத நிலைமையும் கொண்டு... இன்னும் கர்வம் ஏன்...? சாகடிக்கும் ஆசை எதற்கு? செத்துப் போகும் விழைவு எதற்கு?

காட்டெருமை தற்கொலை செய்து கொள்ளுமா? புலி தூக்குமாட்டிக்கொள்ளுமா? பாம்பு தன் விஷத்தால் சாகுமா? அந்த அம்மாள் ஏன் குழந்தைகளுக்குக் கைகாட்டி விட்டுச் செத்தார்கள்? ஏன் புருஷன் மீது மண் தூற்றினார்கள்! அத்தனை வெறுத்துப் போய்விட்டது. அத்தனை வெறுப்பென்றால், அந்த அம்மாள் என்ன வேதனை அனுபவித்திருக்க வேண்டும்?

வெள்ளி கொலுசு எடுத்து இருட்டில் உற்றுப் பார்த்தாள். எத்தனை அழகு இந்தக் கொலுசு. எவ்வளவு இனிய சத்தம். எத்தனை ஆசையாகப் போட்டிருக்கும் அந்தப் பெண் பிள்ளை. சாகும்போது கடைசியாக அந்தக் கொலுசுதான் அவளைப் பார்த்திருக்குமோ?

அவளுக்குக் கொலுசு பிடித்திருக்கிறது. புருஷன் பிடிக்க வில்லை.

ஏன்? என்ன கொடுமை? என்ன வெறுப்பு? அடித் திருப்பானா? குடித்துவிட்டு அவமானப்படுத்தியிருப்பானா? வேறு ஏதாவது கொடுமையா?

எனக்கும் இது நேருமா? புருஷன் என்பவனோடு பிணக்கு நேர்ந்தால், மரணம்தான் வழியா?

அருகே இருந்த அவன் தொண்டையைச் செருமி அசந்து உட்கார்ந்தான்.

''எனக்கு மூத்ததுகூட இப்படித்தான் செத்துப் போச்சு.''

''மலைலேர்ந்து வுழுந்தா?''

''இல்லை... அதை தரைல கொடுத்தோம். ரொம்ப ரோதனை புருஷனால... கிணத்துல வுழுந்து செத்துப் போச்சு. கால் தவறி வுழுந்துருச்சுன்னு சொல்ல வெச்சுட் டாங்க.''

''என்ன ரோதனை?''

அவன் தமக்கை செத்த வேதனை பற்றி விவரித்தான். நடுவே வாய்விட்டு அழுதான். வெள்ளிக்கு உலகம் புரிந்தது. பயம் வந்தது. காட்டைவிட, இருட்டைவிட, செந்நாய்களை விட, நகரம், வெளிச்சம், மனிதர்கள் மீது பயம் வந்தது.

அழுது கொண்டிருந்த அவன் முதுகை மெள்ளத் தட வினாள். ''வேணாம்... விட்டுறு'' என்று சமாதானப் படுத்தினாள்.

மீண்டும் செந்நாய்கள் கூடின.

இம்முறை தாக்கின.

வழுக்குப் பாறைக்கு மேல் ஏறி ஒவ்வொன்றும் ஒவ்வொரு திக்காகக் குதித்தன.



கம்பை வீசி வீசி அடித்துக்கொண்டு அவர்கள் நடந் தார்கள். அவன் முதுகோடு ஒட்டிக்கொண்டு அவள் முன்னேறினாள்.

கழியை உடைத்துக் கூராக்கி காட்டுப் பூவரசில் அவளை ஏற்றிவிட்டு, அடியில் நின்று கொண்டான்.

''தூக்கிப் போட்டுட்டு வாங்க டேய்...'' பெரிசு குரல் கொடுக்க, எடுத்த அந்தப் பெண்மணியின் அவயவங்களை புதர்கள் நோக்கி வீசிவிட்டு, அவர்கள் மரம் ஏறிக் கொண்டார்கள்.

நாய்கள் குதறுவது தொலைவில் கேட்டது. அவன் மரம் ஏறி அவள் அருகே நின்றான். பயத்தில் அவள் அவனை இறுகத் தழுவிக் கொண்டாள்.

''எனக்கு என்னமோ நீங்க சொன்ன உங்க அக்கா கதை ஞாபகம் வருது...'' என்றாள்.

அவன் இருட்டை வெறித்துக் கொண்டிருந்தான். பெரும் துக்கத்தில், வேதனையில் பயத்தில் நாய் பிணம் தின்னும் அருவருப்பில், தாலி கையில் இருந்த கனத்தில் இருப்பினும், அவர்கள் தங்களுக்கு இடையே காதல் வருவதைக் கண்டார்கள்.

விடியும்வரை ஒருவரை ஒருவர் இறுக்கிக் கொண்டிருந் தார்கள்.

விடிந்தது.

அவர்கள் வெட்கப்பட்டார்கள். கூட வந்தவர்கள் கோபப்பட்டார்கள். அந்தக் கோபமும் அவர்களுக்கு உதவியது.

அது-

# 31

'அது கீழூர் பொம்பளைன்னு தெரிஞ்சும் அதும் பக்கத்துல உட்கார்ந்து கட்டிப்பிடிச்சுக்கிட்டு இருக்கியே இது என்ன நியாயம்?''

''ஊர் விட்டு ஊரு பொண்ணு கட்டறது நம்ம தொழிலுக்குச் சரிப்படுமா?''

''வேத்தாள் உள்ளே வராம இருக்கணும்னுதானே நல்லது கெட்டது, சரி தப்பு எல்லாம் கட்டுமானமாய் போறோம்.''

''நம்ம இடம்... பொண்ணு கேட்டுப் போற மாதிரியா இல்லை-புள்ளே கேட்டு வர மாதிரியா...''

''ஆடு மாடு விழுந்தாலும் பரவாலைன்னு அங்கங்க புதைகுழி வெட்டி வெச்சுருக்கறது எதுக்கு? நடமாட்டம் குறையணும்னுதானே...''

''சரி, அவனுங்களும்தான் செடி போடறானுங்க...''

''உள்ளே வுடுவாங்களா... வளர்க்கறதும் தெரியாது... பறிக்கறதும் தெரியாது.''

கஞ்சாப் பயிர்த் தொழில் நசிக்காது இருக்க இவர்கள் கொண்ட பல விஷயங்களில் இவ்விதக் கட்டுமானமும் உண்டு. பெண் எடுத்துப் பெண் கொடுத்து... கொடுத்து எடுத்ததில் மனத்தாங்கல் வர, வந்த கோபத்தில் காட்டிக் கொடுத்துவிட்டால்...?

''சரி... குளிருக்கு ஒட்டிக்கிட்டான்... வுட்டுட்டு வாடா.''

விடிய மலையேறினார்கள். திட்டிக்கொண்டே வந்தார்கள். ஒரு இடத்தில் கிளைமுறிவு பார்த்தார்கள். சந்தேகப்பட்டுத் தேட, அங்கே தலை கிடைத்தது.

நேர்குத்தாய் உடம்பு விழுந்து தலை துண்டாகி உடம்பு மட்டும் எகிறி இன்னும் பள்ளத்துக்குப் போய் விட்டது.



நல்லவேளை, தலையாவது கிடைத்ததே... இதைக் காட்டி ஆறாயிரம் ரூபாய் வாங்கலாம்.

உடம்பை நாய்கள் தின்றதாகச் சொல்லி, தலையைத் தரையில் வைக்க... கூட்டம் முகம் திருப்பிக் கொண்டது. அந்தப் பெண் குழந்தைகள் தாயின் தலையைப் பார்த்துப் பேய் பிடித்ததுபோல் அலறின.

அலறும் பெண் குழந்தைகளையே வெள்ளி உற்றுப் பார்த்தாள், கொலுசை எடுத்து தரையில் வைத்தாள். குழந்தைகள் தலையைத் தொடப் பயந்து, கொலுசை வாரி கண்ணில் ஒத்திக் கொண்டன... முத்தமிட்டன. ''அம்மா... அம்மா'' என்று நெஞ்சில் கொலுசை அழுத்திக் கொண்டன.

அவன் தாலியை எடுத்துத் தரையில் வைத்தான். பெரிய பெண் குழந்தை தாலியை வெறித்துப் பார்த்தது. எடுத்து உள்ளங்கையில் வைத்துத் தேம்பியது. அவனை நோக்கிக் கும்பிட்டது.

கூட வந்தவர்கள் கோபப்பட்டார்கள். ''எல்லோருக்கும் பங்கு இருக்கில்ல அதுல... நீங்க பாட்டுக்கு எடுத்துக் கொடுத்திட்டா என்ன அர்த்தம்?''

''கொலுசு போவுது... ஆறுபவுன் தாலியாச்சே.''

''எனக்குப் பங்கு வேணாம்'' -அவன் காசுப்பங்கை மறுத்தான். அவளும் மறுத்தாள். கூட்டமும் போலீசும் காட்டுப் பகுதியை விட்டுப் போன பிறகு, அவர்கள் அவனைத் தாக்க முயன்றார்கள்.

அவன் வாலிபன். மரக்கிளை உடைத்து நின்றான்.

பின் வாங்கினார்கள்.

''ஊருக்குள்ளாற வருவே இல்லை... அப்ப பேசிக்கிறோம். அவளை இட்டுக்கிட்டு வருவே இல்லே... அப்பப் பங்கு போடறோம்'' -பயமுறுத்தினார்கள்.

அவள் ஊருக்குப் போக முடியவில்லை... வெளியே நிறுத்தப்பட்டார்கள். "மேலூர் ஆளு கீழூருக்கு வரது கூடப் பொறுத்துக்கலாம். மேலூர் கோவமா இருக்குதே. மேலூர் கோவப்பட்டா வீண் சண்டை வரும். தொழில் போவும். போ...மேலூர் போ... அங்கன மாப்புக் கொடுத்தா இங்கன வா."

தனித்து விடப்பட்டார்கள்.

வேறு மலையில் விறகு வெட்டி இரண்டு நடை கீழே போய் விற்றுக் கொஞ்சங் கொஞ்சமாகக் காசு சேர்த்து, ஓலை வாங்கி வீடுகட்டி, பாத்திரம் பண்டம் சேர்த்து, யாருமற்ற காட்டில் அவனும் அவளும் மட்டுமே நாலு வருடங்கள் வாழ்ந்து விட்டார்கள்.

"நீங்க பயிர் பண்ணலையா?"

"இல்லீங்க. அது தப்புப் பயிர். அது தவிர, இங்கன மனுஷர் வர முடியும். அது வளர்த்தா தப்பாவும்."

"விறகு வெட்டறதுதானா?"

"தேனீ வளர்க்கறோம். கோழி வளர்க்கறோம். காட்டுக்கு நடுவே புல் திடலில் பெட்டி பெட்டியாகத் தேன் கூடுகள். பத்து ரூபாய்க்கு விக்கறோம். முட்டை அறுபது பைசா. கோழி பன்னிரண்டு பதினாறு ரூவா. கொடைக்கானல்ல ஒரு அம்மா காஞ்ச பூவுல தங்க கலர் பெயிண்ட் அடிச்சு விக்குது. அதுக்குப் பூ பறிச்சுத் தரோம். செடியோட காம்போட உதிராமக் கொடுத்தா ஒரு ரூபா தரும்."

"பூ எங்கே கிடைக்கும்?"

"எங்கனா பள்ளத்துல. அந்தப் பக்கம் போனா பத்து இருபது ஆம்புடும். பக்குவமா வெட்டி பைல போட்டு எடுத்தாருவோம்."

"உங்களுக்கு இந்த அம்மா, ஊரைவிட ரொம்ப முக்கியம்னு எப்படி தோணுச்சு?"



"கஞ்சாப் பயிரு வளர்க்க ஊர் கட்டுமானம்னு எல்லாரும் ஊருக்குள்ளேயே இடதும் வலதுமா அலைஞ்சது பிடிக்கலைங்க. அண்ணன் பொண்டாட்டி தம்பி பொண்டாட்டின்னு கூட இல்லாம காட்டு ஜனமா இருக்க பிடிக்கலைங்க. பிரியமாவே இல்லீங்க யாரும். காசு பிரியம் பெரிசாப் போச்சு. அப்படி காசு வந்து என்ன? கறி, கள்ளு, நோவுநொடி இதானே."

"ஒரு நா இந்த இடம் ஊராயிடுமா?"

"நிச்சயமா இந்த இடம் ஊரா ஆயிடுங்க... எம் பக்கம் நம்மூர் பசங்க வரேன்னிருக்காங்க. அவங்களுக்குக் கூடு போட்டுத் தேனீ வளர்க்க சொல்லித் தரேனிருக்கேன். கீழூர் பசங்களும் வந்துரும். அப்படி ஆனதுதான் மேலூரு கீழூரு எல்லாம். கீழூர்ல போலீஸ் தொந்தரவு வந்துருச்சு. பல்லு கடிச்சுப் பல அவமானம் தாங்கிட்டு இருக்குது ஊர். ரொம்ப நா தாங்காது. பசங்க வந்துரும்."

"உங்க ஊருக்கு என்ன பேர்?"

"வெள்ளி ஏதோ பேர் சொல்லிச்சு... சரியான்னு தெரியலை."

"என்ன பேரு?"

"தாண்டிக்குதித்தாள் சோலை."

"ரொம்ப நல்லாருக்கே..."

"நெசமாங்களா?"

"பல அர்த்தம் வருதே..."

"நெசமாங்களா?"

காதல் ஒரு ஊரை உருவாக்கப் போகிறது... ஒரு காரணப் பெயரோடு மலரப் போகிறது. யார் பேச்சும் கேட்டு அவர்கள் பெயர் மாற்றாது இருக்க வேண்டும்.

இந்தச் சந்திப்பில் வெள்ளி என்னோடு பேசவேயில்லை.

"அந்த அம்மா ஏதும் பேசமாட்டேன்றாங்க. ஏன்?"

"ஆ... என்கிட்டகூட அதிகமா பேசறதில்லைங்க... பேசினாத்தானே சண்டை வருது... எதுக்குப் பேச்சு அநாவசியமான்னு."

"புருஷன் பெண்டாட்டிக்குள்ளயும்?"

"கூட்டம் வருது சினிமா புடிக்க, வாறியா'ன்னு கேட்டேன். இருவது தேன் பாட்டில் எடுத்துப் பைல போட்டுக் கொடுத்தது. வழக்கமா நாலு ரெண்டுதான் எடுப்பம். எனக்கு முன்னாடியே மனசுல கூட்டம் பார்த்துட்டு இருவது எடுத்து வெச்சுடுச்சு. ஒண்ணுகூட மிஞ்சல..."

வெள்ளி அந்தப் பாராட்டுக்குக்கூட முகம் மாறவில்லை. காதல் என்பது கும்மாளமாய், சிரிப்பாய், கொஞ்சலாய், கெஞ்சலாய், பிணங்கலாய், விரல் பின்னி நிற்பதாய்க் கண்டிருக்கிறேன். இத்தனை மௌனம் இவ்வளவு உறுதி கண்டதில்லை.

ஒரு மரணத்திலிருந்தும் துக்கத்திலிருந்தும் வெளிப்பட்ட காதல் ஒருவேளை இப்படித்தான் இருக்குமோ... ஊராரைப் புறக்கணித்துத் தனக்குப் பிடித்தவனை மட்டும் இறுக்கித் தனித்துக் காட்டில் குடித்தனம் பண்ணும் காதல் வாய் திறந்து பேசாதோ?

பேசிப் பேசி காதலானவர்கள் அதிகம் உள்ள இடத்தில், அதிகம் பேசாத வெள்ளி ஒரு விசித்திரம். அதிகம் பேசினால் காதல் வந்துவிடுமா?

என்ன பேசுகிறோம் என்பதைப் பொறுத்தது அது. எப்படிப் பேசுகிறோம் என்பதைக் கொண்டு வளரும் அது... பேச்சு மட்டும் போதுமா, செயலுமா என்கிற கேள்வியுடன் வருவது அது.

**வே**றோர் இடத்தில்-நகரத்தில்.



சொக்கலிங்கம்-மஞ்சு பேசினார்கள்.

எங்கே?

சொக்கலிங்கம் தன் அண்ணனுக்கு மஞ்சுவின் அக்காவைத் திருமணம் நிச்சயம் பண்ணும் இடத்தில் பேசினார்கள்.

என்ன பேச்சு முதன் முதலில்...

"என்னங்க, கை கழுவுணும்... தண்ணி எங்கன இருக்கு?"

"இதோ இங்கே வாங்க... வாசப்படி சிறுசு, கொஞ்சம் குனிந்து வாங்க..." -கவனமாக வந்தான். அவள் நீர் வார்க்க... கை கழுவினான்.

"நல்லாருக்குங்க வீடு"

"தாங்க்ஸ்."

"படிக்கறீங்களா?"

"முடிச்சுட்டேன். எம்.ஈ.எஸ். ல வேலை."

"நீங்கதானா அது... கல்யாண பொண் சிஸ்டரா... அவங்க நிறமா இருக்காங்க... நீங்க கொஞ்சம்..."

"கறுப்பு... எங்கய்யா மாதிரி."

"அதனால என்ன... எம் பேர் சொக்கலிங்கம். நா..."

"அவங்களுக்குத் தம்பி... தெரியும்... பல்கலைக்கழகத்துல என்னவோ சொன்னாங்க?"

"என்னவோ இல்லை, அசிஸ்டென்ட்."

"எல்லாம் நல்லபடியா முடியணும்... கவலையா இருக்கு."

"என்னங்க கவலை... பேசி ஒரு முடிவுக்கு வந்துட்டமே."

"இழுத்தாப்பலயும் சிலது நிக்குது."

"சரியாய்டும்."

"அண்ணார் நல்ல மாதிரியா?"

"ரொம்ப நல்ல மாதிரி, அண்ணார்ன்றதுக்காகச் சொல்லலை... அதிகம் பேசமாட்டாரு, ஒரு வார்த்தை ரெண்டு வார்த்தைதான். நான் கொஞ்சம் அரட்டை."

"தெரியுது."

"அக்கா எப்படி?"

"மிரளும். எதுவும் ஒரு தடவைக்கு இரண்டு தடவை சொல்லணும். சமைச்சுச் சோறாக்கற வரைக்கும் கெட்டி. அதுக்கப்புறம் ஒரு மண்ணும் தெரியாது. அப்பாவி... எட்டாவதோட நிறுத்திட்டமா... வெளிவாசல் தெரியாது."

"லேடீஸ்... படிக்கணும் வீட்டுல இருந்தாவது பல புஸ்தகங்கள் படிக்கணும். நம்ம வீட்டுக்கு வரட்டும் நான் படிக்க வைக்கிறேன்."

"ஏய் மஞ்சு, மாப்பிள்ளை வீட்டாரு கிளம்புறாங்க" உள்ளிருந்து குரல் கேட்டது.

"அப்ப வரேங்க" -அவன் பதட்டமாகக் கைகூப்பி விரைந்தான். வரும்போது எச்சரிக்கப்பட்டுக் குனிந்து வந்தவன், போகும்போது கொல்லை வாசல் உயரம் தெரியாது. நகர.. நச்சென்று முன் நெற்றியில் இடி வாங்கினான். இடித்த வலியில் அதிர்ந்து நின்றான்.

"ஐயோ..." -அவள் துடித்து வாய் பொத்தினாள்.

அவன் மிகவும் குனிந்து படியைக் கடந்து விடை பெற்றுப் போனான்.

அவளுக்கு அவன் இடித்துக்கொண்டதே நினைவாக இருந்தது.

அவனுக்கு அவள் 'ஐயோ' என்று துடித்தது மனசுள் படமாய் உறைந்துவிட்டது.

"மஞ்சுவா...? இந்த ஆபீஸ்லயா... அப்படி யாரும் இல்லீங்களே. நீங்க யாரு? பொண் பார்த்தீங்களா... நேத்தா... அது



விஷயமா பேசணுமா, ஸாரி சார்... மஞ்சுன்னு யாரும் நிச்சயமாய் இல்லை."

அவன் சோர்வாக டெலிபோன் வைத்தான்.

சரியான கல்பாஜிக் குடும்பம், அதும் முகரக்கட்டையைப் பார்த்தா எம்.ஈ.எஸ்.-ல வேலை செய்யற மாதிரியா தெரியுது? அக்கா அப்பாவியாம். ஒரு விதத்துல நல்லது. இப்படி வாய் கூசாத பொய் பேசறதுக்கு அப்பாவிப் பெண் பெட்டர்.

சொக்கலிங்கம் மறுநாள் நகம் கடித்தான்.

"நம்ம ஆபீஸ்ல யாருடி மஞ்சு... நேத்துப் பொண் பார்த்தாளாமே. யூனிவர்ஸிடில வேலை செய்யறாராம் ... சொக்கலிங்கமாம்.

நீண்ட சாப்பாடு மேஜையில் ஆப்ரேட்டர் கேட்க" பளிச்சென்று புரைக்கேறிற்று. 'அடடா... நான்தான் மஞ்சு' வாய் வரை வந்தது... அடக்கிக் கொண்டாள். "அந்தாள் என்னையா பொண் பார்த்தான். மடையன்... கொஞ்சம் பேசினா இஷ்டத்துக்கு உளறிடறதா?"

அவன் ஆபீஸ் நம்பர் தேடினாள்.

"சொக்கலிங்கம் இருக்காரா?"

"அரை நாள் லீவுமா... ஏம்பா சொக்கலிங்கம் லீவு தானே. யாரோ லேடி கேட்கறாங்களே."

"இன்னிக்கு வெள்ளிக்கிழமை. பைலட்... படம் மாத்தறான். சொக்கலிங்கம் இங்கிலீஷ் பிஸ்தா... போய்ட்டாரு" -விவரம் காதில் கேட்டது.

"மேடம், நீங்க யாரு?"

போனை வைத்துவிட்டாள். மாலை ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் ஸ்டாப்பில் பஸ் நிற்கும்போது, சொக்கலிங்கம் சிகரெட் வாங்குவதைப் பார்த்தாள். கீழே இறங்கினாள்.

''மணி அஞ்சு அம்பது. ஏழு மணிக்குத்தான் படம். உடுப்பி ஓட்டலுக்குப் போய் டிபன் பண்ணிட்டு...''-யாரோ நண்பனிடம் பேசிக்கொண்டிருந்த சொக்கலிங்கம் சட்டென்று நின்றான்.

கொஞ்சம் கோபமாக அவளைப் பார்த்தான்.

பதிலுக்கு அவளும் கோபமாகப் பார்த்தாள். மரண பயத்தில், துக்கத்தில் காதல் முளைக்குமெனில், கோபத்தில் காதல் முளைக்காதா... முளைத்தது! எப்படி...?

## 32

ராயப்பேட்டை நெடுஞ்சாலை மாலை நெரிசலில் புகை முட்டிய வெப்பக் காற்றில் தகித்துக் கொண்டிருந்தது. பின்னே மார்க்கெட் கூச்சல். படம் பார்த்து வந்த கூட்டத்தின் எக்காளச் சிரிப்பு.

''என்னங்க இங்க நிக்கறீங்க?''-சொக்கலிங்கம் கேட்டான்.

''ஆபீஸ் போய்ட்டு வரேன்...''-அவள் பதில் சொன்னாள்.

''எந்த ஆபீஸ்?''

''ஏன்...? எம். ஈ. எஸ். தான்.''

''நான் போன் போட்டுக் கேட்டேனே? உங்க ஆபீஸுக்கு.''

''எதுக்கு?''

''சும்மா பேசத்தான்.''

''சும்மா பேசவா ஆபீஸ்ல டெலிபோன் வெச்சிருக்கு?''

''ஆளே இல்லைன்னுட்டாங்க.''



''எந்த ஆள்?''

''உங்களைத்தான் கேட்டேன்.''

''என்னன்னு கேட்டீங்க?''

''மஞ்சுன்னு... இல்லேன்னுட்டாங்க.''

''வேற என்ன கேட்டீங்க?''

''பெண் பார்க்க வந்தோம்... அது விஷயமா பேசணும்னு.''

''நீங்களா பெண் பார்க்க வந்தீங்க?''

''நான் இல்லை... அண்ணன். நான் கூட வந்தேன்.''

''என்னையா பெண் பார்க்க வந்தீங்க?''

''நான் அப்படிச் சொல்லலீங்க.''

''அப்படிச் சொன்னதா ஆபீஸ்ல நினைச்சுக்கிட்டாங்க.''

''ஐயோ...'' -அவன் பதட்டப்பட்டான். தவறு உணர்ந்தான்... அந்தப் பதட்டம் அவளுக்குப் பிடித்திருந்தது. நல்லவன் என்று காட்டிக் கொடுத்தது.

''ஸாரிங்க... ரொம்ப ஸாரி.''

''நல்லவேளை... எம் பேர் மஞ்சு இல்லை.''

''வீட்டுல கூப்பிட்டாங்களே.''

''வீட்ல நான் மஞ்சு.''

''ஸாரி... நிஜமாவே ஸாரி. உங்க நிஜப் பேரு?''

''எதுக்கு? மறுபடி போன் பண்ணி உளறி... நான் மாட்டவா?''

''இல்லீங்க... சத்திரம் கிடைக்கறது கஷ்டம். என் ப்ரெண்டு ஒருத்தன் பாம்குரோவ்ல டேட் ஒதுக்கித் தரேன்னான். ரெண்டு நாள்ல சொன்னா அவன்கிட்ட சொல்லி ஏற்பாடு பண்ணிடலாம்னு...''

''ரொம்ப செலவாகுமே?''

"நீங்க சொல்ற சத்திரம்... சாப்பாட்டு ஆளுக்கு ஒட்டல் சீப். இலைக்கணக்கு. ஒரு இலை பதினெட்டு ரூபா-பீடாவோட. இந்த விவரமெல்லாம் பேப்பர்ல எழுதி வெச்சுக்கிட்டுச் சொல்லலாம்னு கூப்பிட்டேன்."

அவள் அந்தப் பேப்பர் வாங்கிப் பார்த்தாள்.

"ரொம்ப நன்றிங்க. தலை எப்படி இருக்கு?"

"என்னங்க?"

"நெற்றி. இடிச்சுக்கிட்டீங்களே..."

"அதுவா... கொஞ்சம் புடைச்சா மாதிரி... ஆனா வலியில்லை..."

"வரேங்க. பஸ் வந்துருச்சு. ரொம்ப நன்றி."

"சரிங்க... ஏங்க..."

"என்ன?"

"உங்க பேர் சொல்லலையே."

"எதிராஜநாதவல்லி."

"என்னங்க?"

"எதிராஜநாதவல்லி."

பஸ் புகை கக்கிப் புறப்பட்டது.

"என்னடா பேர் அது?" -நண்பன், சொக்கலிங்கத்தைக் கேட்டான்.

"எதிராஜநாதவல்லி."

"ஒரு மாதிரியா இல்ல பேரு..."

சொக்கு பதில் சொல்லவில்லை.

இடி இடித்து தலை நிமிர, மின்னல் மின்னியதைப் பார்த்தது போல் இருந்தது. ஆனால், மின்னல் கறுப்பாய் இருக்குமோ.



இடி காதிலேயே இருந்தது. 'கறுப்புக் குட்டி செம தடாலடி. அக்கா நூறு மடங்கு தேவலாம். நேற்று அக்கா அடக்கமாய் வந்தது... வணங்கிற்று. காபி கொடுத்தது... போய்விட்டது. இது வாயாடி, விட்டால் ஆபீஸையே வேற ஸ்டேட்டுக்கு வித்துரும்."

"வீட்டுல மஞ்சு..."-மறுபடி அவள் குரல் கேட்டது. வெளியே... எதிராஜநாதவல்லி. என்ன பேர் இது. மஞ்சுவே பெட்டர்.

"ஏண்டா அவங்க வீட்டுக்கு ஒரு நடை போய் வரியா ஒண்ணும் சத்தமே காணோம்..."-இரவு அம்மா கேட்டாள்.

"சத்தமே காணோமா... போட்ட அதட்டல்ல ராயப் பேட்டை ஹைரோடு ரெண்டா போயிருச்சு போ."

"ஏண்டா வாயத் திறந்து பேசேன். அவங்க வீட்டுக்குப் போய் வர்றியா?"

"வேணாம்... என்னைக் கூப்புடாதே."

"வேற யாரைக் கூப்புடறது?"

"உனக்கு என்ன வேணும்?"

"சாத்திரம் சாவடி பார்த்தாங்களா... என்னா ஏது ஒரே குசும்பக் கூட்டமா இருக்குதே கண்டி வேலைல ஒண்ணும் காணோம்."

"அது என்ன குசும்பக் கூட்டம்?"

"உள்ள ஒண்ணு வெளிய ஒண்ணு பேசறது... 'பொட்டப் புள்ளைக்குப் படிப்பு என்னாத்துக்குன்னு நாங்க வீட்டோட வெச்சிட்டம். உங்க பொண்ணு படிச்சிருக்குதா? படிச்ச பொண்ணுங்களை நம்ப முடியலைம்மா'ன் றாளுங்க நம்ம பொண்ணு பி.ஏ.ன்னு சொல்றதா அங்க போயி. நான் தலையாட்டிட்டு விட்டேன். பதினாறு பவுன் போடறம். நீங்க எதுனா போடறீங்களா? எங்க புள்ளைக்குப் பேர்பாதி செய்றோம்னாங்க. எட்டு பவுனு நாம போடணுமாம்...

கல்யாணச் செலவு பேர் பாதி பேர் பாதின்றாங்களே... அவங்க சொல்றதுதானே செலவு... கூடவா குறைச்சலான்னு நாம கூட இருந்தாத்தான் பார்க்க முடியும்...''

''ஓட்டல்ல போட்டுற சொல்லு. கணக்கு கரெக்டா தருவான்... ரெண்டா பிரிச்சுக்கலாம்.''

''அடச்சீ... ஓட்டல்லியா கல்யாணம்?''

''அது சாதாரண ஓட்டல் இல்லம்மா... நம்ம வரதப் பிள்ளை பொண்ணுக்கு நடந்துச்சே அந்த இடம்.''

''புல்வெளி இல்லே அது.''

''உள்ள மண்டபம் இருக்கு... நீ மொய் எழுத வெட்கப் பட்டு வெறும் தேங்காய் பையோட திரும்பிட்டே...''

வீடு யோசித்தது. ஓட்டல்தான் என்று அடித்துச் சொன்னது.

''ரெண்டு நாள் இன்னும் டைம் கொடுப்போம். வெயிட் பண்ணு'' -சொக்கலிங்கம் தீவிரமாக யோசித்தான்.

மறுநாளே போன் வந்தது.

''சொக்கலிங்கம்... யாரோ லேடி பேசறாப்பா. நேத்தே கேட்டாங்க. உன்னை மறந்து போச்சு சொல்ல.''

''ஹலோ, சொக்கலிங்கம் ஹியர்.''

''வணக்கங்க.''

''வணக்கம்.''

''ஓட்டல்ல போய்ப் பேசிப் பார்த்தாங்களாம்... கொஞ்சம் கூடுதலா ஆவுது...''

''எத்தினி இலைங்க விழும்?''

''நீங்க சொல்லணும்.''

''எங்க பக்கம் ஐந்நூறு விழும்.''



''எங்க பக்கம் இருநூறு விழும். வாடகை அதிகமா இருக்குதே. சத்திரம் தேவலாம்னு பேசறாங்களே...''

''லைட், க்ளீனிங், ஜெனரேட்டர், சர்வீஸ் எல்லாம் சேர்ந்தது. ரிசப்ஷன் வேணுமா, வேணாமா?''

''நீங்க சொல்லணும்.''

''வேணுங்க... எங்க வீட்டுல முதல் கல்யாணம்.''

''எங்க வீட்டுலயும் முத இதுதான். புரியலீங்க ஒண்ணும்.''

''வாங்க, போய் பேசுவோம்.''

''எப்ப வர?''

''நீங்க சொல்லுங்க.''

''மூணு மணிக்கு.''

''எங்க, உங்க ஆபீஸ் வரட்டா?''

''வேணாங்க... ஓட்டல் வாசல்ல... பார்ப்போம்... ஆபீஸ்கூட வேணாம்.''

''சரி... நா வரேங்க.''

ஓட்டல் வாசலில் சந்தித்தார்கள். வணக்கம் சொன் னார்கள். நண்பனிடம் தனியே பேசி, தள்ளுபடி கேட்டான் சொக்கலிங்கம். ஓட்டல் வாசல் பக்கம் மேடைப் பக்கம் மட்டும் வண்ண விளக்குகள். பிற இடம் கட் செய்து ஒரு ரேட் தந்தது. டேபிள் போடாமல் ரிசப்ஷனில் தட்டுவாங்கிப் போய் நின்று தின்றால் குறைவு என்று காட்டியது, பேசிப் பேசி சில ஆயிரம் குறைத்தான். தேதி நிச்சயம்செய்ய அட் வான்ஸ் கேட்டார்கள்.

அவள் விழித்தாள்.

அவன் ஆயிரம் கொடுத்தான்.

அங்கே காபி சாப்பிட்டார்கள்... பேசினார்கள்.

''அது என்னங்க எதிராஜநாதவல்லி. வடமொழி தமிழ் கலந்தா மாதிரி.''

''எங்க அப்பாவுக்கு ஸ்ரீபெரும்புதூர், அந்த ஊர் கோயில் தாயார் பேரு. நல்லா இல்லையா பேரு?''

''நல்லா இருக்கு. நான் மஞ்சுன்னு கூப்பிடட்டா...''

''உங்க இஷ்டம்... நிறைய சினிமா போவீங்களா?''

''நிறைய.''

''ரஜினி படமா?''

''கஷ்டம்... இங்கிலீஷ் படம், கன்னடப் படம். பெங்காலிப் படம் பார்ப்பேன்.''

''பைலட்ல என்ன படம் அது?''

''செகண்ட் வேர்ல்ட் வார் படம்... 'லாங்கஸ்ட்' டேன்னு.

''சண்டைப் படமா?''

''இல்லீங்க. வார்.''

''வார்னா சண்டைதானே?''

''இது ட்ஷ்யூம் ட்ஷ்யூம் சண்டை இல்லை. அது உலக யுத்தம். யுத்தமே தெரியாம போனாலும் இந்தப் படம் பார்க்கச் சொல்ல, உடம்பு நடுங்கிப் போவுது. யுத்தம் வரணுங்க?''

''எங்க வரணும்?''

''இந்தியாவுல.''

''ஏன்?''

''அப்பத்தான் சாவு பத்தி தெரியும்?''

''எதுக்கு சாவு பத்தி தெரியணும்.?''

''வாழறதுக்கு.''

''புரியலை?''



அவன் புரிய வைத்தான்.

அது-

## 33

அவள் வியந்து போனாள்.

''எப்படிங்க... செகண்ட் வோல்ட் வார்பத்தி இத்தினி விவரம் தெரியுது உங்களுக்கு?''

''படிச்சேங்க... நாப்பது அம்பது புஸ்தகம் படிச்சேன்.''

''எப்படி நேரம்...?''

''ஒன்பதே முக்கால்லேருந்து அஞ்சரைதானே ஆபீஸ் நேரம்... மிச்சம்நேரம் லைப்ரரி போயிடுவேன். அங்கன உட்கார்ந்து படிப்பேன். வீட்டுக்குச் சிலது எடுத்துக் கிட்டுப் போய்ப் படிப்பேன்...''

''எனக்கு வாரப் பத்திரிகை படிக்கவே நேரம் போதலை... சரியா இருக்கு.''

''இது பொய்... நீங்களா சமையல் செய்யறீங்க... நீங்களா பாத்திரம் தேய்க்கிறீங்க? நீங்களா துணி தோய்க்கிறது?''

''நானும் செய்யறது உண்டு.''

''அரட்டைல நிறைய நேரம் போவுது. சும்மா உட்கார்ந்து ரோடு பார்க்கறதுலயும், டி.வி. பார்க்கறதுலயும் போவுது. நியூஸ், வேர்ல்ட் திஸ் வீக் தவிர, வேறு எதுவும் டி.வி ல நான் பார்க்கறதில்லை. சும்மா தெரு முனைல நின்னு அரட்டை அடிக்கிறதில்லை. சினிமாவுக்குக்கூட சிநேகிதங்களைக் கூட்டிக்கிட்டுப் போறதில்லை. கவனம் சிதறிடுது.''

''நான் படிக்கவேண்டிய புஸ்தகம் எதுனா இருக்கா? பேர் சொல்லுங்க...''

''நான் தரேன்...''

''வேணாம்...''

''ஏன்?''

''நான் காசு கொடுத்து வாங்கறேன். இல்லை, லைப்ரரி போறேன்... இப்படி ரொம்ப நாளா ஆசை... ஆனா, தள்ளிக்கிட்டே போவுது. பேர் சொல்லுங்க...''-நாலைந்து பெயர்கள் குறித்துக்கொண்டு போனாள்.

இரண்டு நாள் கழித்து போன் செய்தான். ''ஆயிரம் ரூபாய் ஒட்டலுக்குக் கட்டினது திருப்பித் தரணும்.'' என்றாள். மறுபடி சந்தித்தார்கள்.

''லாங்கஸ்ட் டே பிக்சர் போலாம்னு கூப்பிட்டேன்... ஆபீஸ்லே எவளும் வரலை... தனியா எப்படிப் போறது?''

''நான் வரட்டுங்களா... தப்பா நினைக்கலைன்னா...''

''பார்த்துட்டீங்களே...''

''அட வாங்க... உங்களைச் சாக்கு வெச்சு இன்னொரு தரம்...''

இடம் இடமாய், ஸீன் ஸீனாய் அவன் படத்தை விவரிக்க, அதுவே அவள் புரிந்து பார்த்த முதல் ஆங்கிலப் படம்.

''அக்காவுக்குப் புடவை எடுக்க காஞ்சிபுரம் போயிருக்காங்க... உங்க அண்ணன் துணி எடுத்துட்டாரா?''

''தெரியலை... நான் எதும் காதுலயே போட்டுக்கறதில்லை...''

''நகைக்குத்தான் கஷ்டப்படறாங்க...''

''படட்டும்... இப்படி ஒரு கல்யாணம் தப்புங்க...''

''என்ன?''

''நகை போடு... சோறு போடுன்னு... ஆயிரம் ரூபாய்க்கு மேல செலவு செய்யக்கூடாது...''



''வீடியோ படம் வேணும்னு உங்க வூட்டுல சொல்லி அனுப்பியிருக்காங்க. அதுக்கே ஆயிரம் ஆவும்...''

''எப்படியாச்சும் உங்க அக்காவைத் தள்ளியாவணும். நீங்களும் சரின்னுட்டுருப்பீங்களே...''

''வேற வழி?''

''அதைப் படிக்க வெச்சுருக்கணும். அது புருஷனை அதுதேட வெச்சுருக்கணும். என் கௌரவத்துக்கு என் புள்ளை கல்யாணம்... அலட்டலுக்குத் துணி, நகை... அகம்பாவத்துக்கு கார், பங்களா... வெளி வேஷத்துக்குக் கோவம், சிரிப்பு... எல்லாம் பொய்...''

''உங்க கல்யாணம் எப்படி?''

''இந்தப் பொண்ணு எனக்குப் பிடிச்சிருக்குன்னு வீட்டுல சொல்வேன். சரின்னா, அவங்களை முன்னால வெச்சுக் கல்யாணம்...''

''முடியாதுன்னா...''

''அவங்க இல்லாத கல்யாணம்...''

''இத்தினி நாள் காப்பாத்திப் படிக்க வெச்ச அப்பாவுக்கு இதுதான் நன்றியா?''

''கடைசி வரைக்கும் சோறு போடலாம். துணி எடுத்துத் தரலாம்... உட்கார்ந்து பேசலாம்... கோயில், குளம் கூட்டிக்கிட்டுப் போகலாம். நான் அவங்க அகம்பாவத்துக்குத் துணையாவணுமா? இது முட்டாள்தனம். அப்பா சந்தோஷத்துக்காக என் கல்யாணமா? அவரு வேணா இன்னொண்ணு பண்ணிக்கட்டுமே...''

''இப்ப பேசுவீங்க... கிட்டிமுட்டி வந்தா, நீங்களும் முப்பது நாப்பது சவரன்னு...''

''இல்லை... நிச்சயம் இல்லை. நகை ஒரு சேமிப்பு திமிராயிடக்கூடாது. வூடு ஒரு வசதி. அலட்டலாகக் கூடாது.

''ஜனங்ககிட்டே அறிவைவிட அகங்காரம் ஜாஸ்தியா யிடுச்சு. தானே தன்னைக் கடிச்சு, தன் ரத்தம் உறிஞ்சற மிருகமாயிட்டாங்க...''

''காரணம்?''

''கம்பேரிஸன்... அவனை மாதிரி நான். அவன் சட்டை மாதிரி என் சட்டை. அவன் தலைமுடி மாதிரி என் தலைமுடி. பொய் வேஷம்... தன் யோக்கியதை என்னான்னு தெரியவே யில்லை. தன் சந்தோஷம் எதுன்னு தெரியலை...''

''எது சந்தோஷம்?''

''நிம்மதி.''

''எது நிம்மதி.''

''இயல்பாய் வரும் அடக்கம்...''

''இயல்பான அடக்கம் எப்படி வரும்?''

''தன் நிலை மட்டும்... தானே யோசிக்க வரும்...''

''இதை எப்படிப் புரிஞ்சுக்கறது?''

''சத்சங்கம்...''

''தெளிவானவர்களோடு நட்பு கொள்ளுதல். ஒரு அகம்பாவிகளோடு சேர அகம்பாவமும், வெறியனோடு சேர வெறியும் வரும்... செலக்ட் கேர்ஃபுலி யுவர் ஃப்ரெண்ட்ஸ்...''

''காசுதானே மதிப்பு...?''

''பொய்... காசு மட்டும் சந்தோஷமில்லை. காசால் அன்பை- நட்பை வாங்க முடிவதில்லை.

நல்ல சொல், கருணை, நேர்மை இவை அழிவதே இல்லை...''

''அப்படியில்லீங்க... காசு உள்ளவன் பெரிய ஆளா எப்பவும் இருக்கான்....''



''பின்னால் தூற்றுவார்கள். பொய்யாய்ப் பாராட்டு வார்கள். காரியம் ஆகும் வரை கவனிப்பார்கள். காக கறக்கவே முயற்சிப்பார்கள். சகலரையும் இதனால் சந்தேகிக் கும் தன்மை வளர, அவன் மனசு பட்டுப் போகும்...வெறும் காய்ந்த முள்ளாய் நிற்கும்...''

''வர வாரம் அக்கா கல்யாணம்... சண்டையில்லாம நடக்கணும்...''

''நிச்சயம் சண்டை நடக்கும்...''

''ஐயோ...''

''நீங்க சம்பந்தப்படாதீங்க...''

''எப்படிங்க?''

''எல்லாச் சண்டையிலும் எத்தினி திமிர், அலட்டல்னு பாருங்க...''

''என்னப்பா... இந்த மெட்ராஸ்ல ஒரு சத்திரம் கிடைக் கலையா... ஓட்டல்ல வெச்சுட்டே... என்கிட்ட சொல்லி யிருந்தா நான் சத்திரம் பார்த்திருப்பேனே...''

''பொண்ணு ரொம்ப தாட்டிமா இருக்குது... இதுக்கு நம்ம அன்னம்மா பொண்ணு தேவலாம்... கூட பத்துப் பவுனு போட்டுருப்பாங்க...''

''மாப்பிள்ள உர்ருன்னு இருக்கறான்...''

''கல்யாணப் பத்திரிக்கை நானூறு குடுத்தம்... போறலை யாம்.''

''போஸ்டரு அடிச்சுக் கொடுக்கணும்... எங்க வேணா ஒட்டிக்கடான்னு... புள்ளை பார்த்தே பாரு...''

''மாப்பிள்ளை வூடு சாப்பிட உட்காரல அது யாரு, அங்க பத்துப் பேரு...''

''பொண்ணு பக்கம்... சீக்கிரம் போகணுமாம்.''

''அது யாரு, கொஞ்சம் 'தண்ணி' யில பேசறது? ஒரே வீச்சம்...''

''மாப்பிள்ளை வீட்டு மாப்பிள்ளை...''

''அந்தாளைத் தள்ளி நிற்க வை... வாசல்ல வந்து ஆடறான்...''

''பாதி பழைய நகை... பாலீஷ் போட்டுருக்குது...''

''தங்கமான்னு போனவுடனே ஊட்ல உரசிப் பார்த்துக்க...''

''மறுவீட்டுக்கு வந்தவன் சிரிக்கக்கூட இல்லை. மொய் எழுதின நோட்டு எங்க? அன்னிக்கு வந்த மொத்தத் துட்டும் 'எங்க ஊட்டுக்கு வரணும்' னானாம்... எப்படிப் பேச்சு முதமுதல்ல...''

''அவனா பேசறான்... அவன் ஆத்தா பேசறா...''

''பாவம், உன் பொண்ணு...''

-அவளும் அவனும் சகலமும் கேட்டுக்கொண்டு வலம் வந்தார்கள்.

அவள் அக்கா அழுதுகொண்டு கணவன் வீடு வந்தாள்.

கணவன் திருமண நடப்புப் பற்றிக் கேலி செய்ய... முகம் தூக்கினாள். மாமி திட்ட, பட்டினி கிடந்தாள்.

''தின்னு தொலையேன் பீடை...'' என்று புருஷன் கை ஓங்க, தன் தாய் வீடு போனாள்.

''அதெப்படி போகலாம்?''

''வேற எப்படிப் போவதாம்...''

''புருஷனை முந்தானையில முடிஞ்சு வெச்சுக்கணுமா?''

''புருஷனா அவன்? பொட்டை .... அம்மா பொட்டை.''



கல்கண்டு தட்டை எட்டி உதைத்தாற்போல, நாலா பக்கமும் வார்த்தைகள் இரைப்பட்டன. இரைபட்ட வார்த்தைகளை மனசு ஈக்கள் மெய்த்தன.

''உங்க அண்ணன் படிச்சவர்தானே?''

''படிப்புக்கும் தெளிவுக்கும் சம்பந்தமில்லை.''

''இப்ப என்ன செய்யறது?''

''பொண்டாட்டி தேவைப்படறபோது தானா வெட்கம் விட்டு உங்க வீட்டுக்கு வருவான்.''

''எங்க ஊடு அவரைச் சுழட்டி உள்ளே போட்டுடும்.''

''எங்க ஊடு சுத்தும்.''

''எது பலமோ அது ஜெயிக்கும்.''

''என்ன வாழ்க்கை இது?''

''புருஷனுக்கும் மனைவிக்கும் இடையில் ஆயிரம் ஆட்கள்... பிறர் பேச்சு பொருட்டே தன் வாழ்க்கை.''

''எனக்குக் கல்யாணமே வேணாம்.''

''அது தப்பு.''

''வேற?''

''உங்களுக்குத் தகுந்த ஆளைத் தேடுங்க.''

''நீங்க தேடிட்டீங்களா?''

''மனசுக்குப் பிடிச்சவங்க ஒரு...மூணு நாலு பேர் உண்டு.''

திக்கென்றது அவளுக்கு

''யாரு யாரு?''

''நீங்க முதல்.''

''அப்பாடா.''

''இன்னும் சிலர்.''

''அவங்களோட சினிமா போயிருக்கீங்களா?''

"போயிருக்கேன்."

"என்னை விட அழகோ?"

அவன் சிரித்தான்.

"எதுக்கு ஒப்பிடல்?"

"தப்புத்தான்... எனக்கு அவங்களைக் காட்டுங்களேன்."

"ஓ யெஸ்."

ஒரு டெலிபோன் ஆப்ரேட்டர், ஒரு லைப்ரரியன் டாக்டரேட் செய்த ஒரு பெண்மணி.

"நல்ல குரூப் அது... அந்த அம்மா மொழி பத்தி எத்தனை பேசுது... டெலிபோன் ஆபரேட்டர் நல்ல மாதிரி... ரொம்ப சூட்டிகை... லைப்ரரியன் உங்களுக்கு ஏத்த ஜோடி... நான் இந்த லைன்ல கடைசி."

"ஏன்?"

"இப்பத்தானே கண் முழிச்சுப் பார்க்கறேன். அவங்க வளர்ந்தப்பவே நல்ல சூழ்நிலையில..."

"அவங்களை விட வேகமா உங்களால வர முடியும்... நிறையப் படிங்க... தனியா யோசனை செய்யுங்க..."

"லைப்ரரியனைக் கேட்டீங்களா கல்யாணத்துக்கு?"

"இல்லை."

"ஏன்?"

"அவங்க மேல் படிப்புக்கு வெளிதேசம் போற ஆசையில இருக்காங்க."

"அடடே... ரொம்ப நல்ல பொண்ணுங்க அது. சிநேகி தின்னு சொன்னீங்க. "அப்படியா? னு கை குலுக்கினாங்க. கண்ணால தப்பாவே பார்க்கவேயில்லை. என்னைப்பத்தி எதுனா சொன்னாங்களா?"

"ஆமா."



"என்னா?"

"இதை விடாதே... கல்யாணம் செய்னாங்க"

"எதை?"

"உன்னை?"

"நெசமாவா... உங்களுக்கு அப்படி..."

"எண்ணம் உண்டு. ஆனா என் கல்யாணம்."

"ஆயிரம் ரூபாய்."

"கரெட்..."

யோசித்தார்கள். ஒரு வருடம் இது பற்றிப் பேசினார்கள். அவள் அக்காள் கர்ப்பமானாள். குழந்தை பெற்றாள். 'என்னா அவசரம் மொள்ள வரேன்' என்று தாய் வீட்டில் இருந்தாள்.

இருவர் வீடுகளும் ஏதாவது சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

"தெரியாம பொண் எடுத்துட்டேன்..."

"கிளியை வளர்த்துப் பூனை கையில கொடுத் துட்டேன்..."

-திட்டிக் கொண்டிருந்தது.

அவன் வீட்டில் தன் விருப்பம் சொன்னான்.

"மறுபடி அந்த வூட்டுலயா... இந்தத் தடவை நாப்பது பவுனுக்குக் குறைய மாட்டேன்."

"அந்த வூட்டுப் புள்ளையா? பைத்தியமா உனக்கு... நீயும் அழுதுக்கினு... வூடு தாங்காதுடி."

அவர்கள் காத்திருந்தார்கள்.

நாலு நண்பர்கள் சாட்சி வைத்து பதிவுத் திருமணம் செய்து கொண்டார்கள். அப்படியே தனி வீடு போனார்கள்.

செலவு தொள்ளாயிரத்துப் பத்து ரூபாய்.

இரண்டு பக்கமும் நெருப்பு மழை பொழிந்தது. இழி சொற்கள் இரைக்கப்பட்டன.

அவன் அசையவில்லை.

அவள் தளரவில்லை.

அவர்கள் முந்தைய சேமிப்பில் சிறிய இரு சக்கர வண்டி வாங்கினார்கள். லைப்ரரிகளுக்கும் தியேட்டர்களுக்கும் போனார்கள்.

இரவு பகலும் நிறையப் பேசினார்கள்.

'இது ஏன்? அது ஏன்? இது எப்படி? அது எப்படி? கேட்டுக் கொண்டார்கள்.

இலக்கியம் படிக்கப் படிக்க வாழ்க்கை பற்றி தெளிவு வந்தது.

மனித விசாரங்களைப் புரிந்து கொள்ள முடிந்தது.

புரிந்து கொள்ள-நிதானம் வந்தது. நிதானம். வர... பேச்சு குறைந்தது.

மூன்று வருடங்கள் கழித்து அவள் ஒரு பெண் குழந்தைக் குத் தாயானாள். போதும் என்று அவள் ஆபரேஷன் செய்து கொண்டாள். அவன் துணையாய்ச் சீராட்டினான்.

தங்களில் வழிந்த அன்பைக் குழந்தையிடம் கொட்டினார்கள்.

"உன் பொண்ணை என் புள்ளைக்குக் கொடுடி..." அவனுடைய அக்கா முறை கேட்டு வந்து ஒரு வயசு மருமகளை அணைத்துக் கொள்ள...

"எனக்கு ஆட்சேபணை இல்லை. என் பொண்ணு உங்க புள்ளையைக் கல்யாணம் செய்ய சரின்னா, எனக்கும் சரி."

"இப்பவே சேர்த்து வை"-அக்கா அதட்டினாள்.

"நிறைய புஸ்தகம் வெச்சிருக்கேன்..."



"பொம்பளைக்குப் புஸ்தகம் எதற்கு? எம்புள்ளைக்குச் சோறாக்கிப் போடுவியாடி..." -அக்கா கொஞ்சினாள்.

"அதுவும் உங்க தம்பி கத்துக் கொடுப்பாரு..." -அக்காவுக்குப் புரியவேயில்லை.

அவனுக்கும் அவளுக்குமே அந்த உரையாடல்கள் புரிந்தன.

இங்கே வாழ்க்கை இரண்டு விதம்-புரிந்து வாழ்வது... புரியாது வாழ்வது.

மிக உன்னிப்பாகப் படித்தால், இந்தப் பெண்ணின் வாழ்க்கை புரியும்.

மீக உன்னிப்பாகப் படித்தால், உங்கள் வாழ்க்கையும் தெளியும்.

"நீங்கள் எவ்விதம்?"

புரிந்து வாழ்தலா?

புரியாது வாழ்தலா?

கேட்டுக் கொள்ளுங்கள்.

கேள்வியும் பதிலும் நீங்களே... இங்கே உங்கள் பதில் யாருக்கும் தேவையில்லை. உங்களுக்குத் தேவை.

காதல் என்பது கருத்தொருமித்தல்... இதைத்தான் இத்தனை அத்தியாயங்களிலும் சொன்னேன். இதற்கெல்லாம்...

## 34

**சி**ற்பல உதாரணக் கதைகளோடு காதல் என்கிற விஷயம் பற்றி இதுவரை இந்தத் தலைப்பின் கீழ் எழுதியது அனைத்தையும் ஒருமுறை படித்துவிட்டு அமைதியாய் உட்கார்ந் தேன்.

எழுதத் தெரிந்ததால் எழுதினேன் என்பதற்கப்பால் இவர்களை-இவர்களால் விளைத்தவற்றைப் பற்றி நான் அக்கறையோடு யோசித்திருப்பதும் புரிகிறது.

இவர்களை வெவ்வேறு சமயத்தில் சந்தித்துப் பேசிய போது இருந்த பரவசம்... பதட்டம் கூடக் குறைந்து போய், எழுதும் போது ஒரு விலகல் நிலை எனக்குள் வந்திருந்ததை உணர முடிந்தது.

இந்த விலகல் நிலைமையை- ஒரு விஷயம் குறித்து உணர்ச்சிவசப்படாத ஒரு நடு நிலைமையை- எப்படிக் கற்றேன் என்று யோசிக்க, சில புரிந்தன.

எனக்கு இவர்கள் விஷயத்தில் பாதிப்பு ஏதும் இல்லை. சாத பாதகம் என்னைத் தாக்குவதில்லை. அதனால் எதிர்ப்போ இழைவோ எழாது, விஷயத்தின் உக்கிரம் மட்டுமே வருகிறது.

விஷயம் உள் மனசுக்குப் போகிறது.

அதென்ன உள் மனசு?

கொஞ்சம் விளக்க வேண்டியிருக்கிறது. ஒரு வெற்றி ஊர்வலம் போகிறது. நீங்கள் ஊர்வலத்தில் ஓர் ஆளாய் இருப்பீர்கள் அல்லது அந்த ஊர்வலத்தின் சார்பாய் இருப்பீர்கள். அந்த வெற்றிக் களிப்பு உங்களைத் தாக்கிப் பரவசப்படுத்தி அதில் பங்குகொள்ளச் செய்கிறது. உங்க ளுக்குள்ளேயும் ஆடல் பாடல், வாண வேடிக்கைகளில் பங்கு பெறுதல் நிகழ்கிறது. ஊர்வலத்தால் பாதிக்கப்பட்டு அதற்கு எதிராய் இருப்பின் கடும் கசப்பும் வெறுப்பும் விரக்தியும் தோன்றுகின்றன. வெறும் காட்சியாய் மட்டும் இருப்பின் ஊர்வலம் கும்மாளம் முழுவதும் அதன் நல்லது கெட்டது அனைத்தும் மனசுள் படும். அப்படி துக்கம், ஆனந்தம் எல்லாம் பார்த்தபடி நிற்பது உள் மனசு. ஒரு



அமைதியான மனசு. உள்ளடங்கி இருக்கிற மனசு. விருப்பு வெறுப்பின்றி இருக்கிற மனசு.

எதில் விருப்பு எதில் வெறுப்பு?

இருள்-ஒளி, மயக்கம்-தெளிவு, அழுகை-சிரிப்பு, பயம்-துணிவு, அறிவு-அறியாமை, இனிப்பு-கசப்பு, இன்பம் துன்பம் இவையுள் ஒன்றை மட்டும் விரும்பினால், அதற்கு எதிரான தன்மீது வெறுப்புப் பிறக்கும். விரும்புவதை நல்லது என்றும், வெறுப்பதைக் கெட்டது என்றும் பிரித்துக் கொள் கிறோம். விருப்பு வெறுப்பு இல்லையெனில் நல்லதுமில்லை; கெட்டதுமில்லை; உள்ளது இருக்கும்.

உள்ளத்தை உள்ளபடி பார்ப்பது என்பது உயர்வான இடம். காது கொடுத்துக் கேட்பதும், கண் திறந்து பார்ப்ப தும், கலந்து போகாமல் தனித்திருந்து சிந்திப்பது விலகலை உங்களுக்குத் தரும்.

விலக விலக உலக விஷயங்கள் மிகச் சுலபமாய்ப் பிடிபடும்.

"சரி, ஒரு அக்கறையின்மையோடு இருக்கவேண்டும். என்கிறாயா, பாலகுமாரா?" என்கிற கேள்வி வரலாம்.

அக்கறையின்மை என்பது அறியாமை. அது காதலற்ற நிலை. எல்லாக் கதைகளையும் காதலோடு, அக்கறையோடு கேளுங்கள். ஆனந்தப்படாமல், துக்கப் படாமல் பாருங்கள். அதே சமயம் உன்னிப்பாய் பாருங்கள். பிறர் துக்கம், சந்தோஷம், சகலமும் பாருங்கள்.

உங்களுக்கும் இவை நேரலாம் என்று பாருங்கள். 'நான் பொழச்சேம்பா' என்று ஓடாது பாருங்கள். 'நல்ல வேளை எனக்கு நடக்கலை' என்ற குதூகலம் இல்லாது பாருங்கள். 'போடு இன்னும் நாலு போடு லவ்வா பண்றே..." என்பதி லும் பங்கு பெறாமல், 'லவ்தானே பண்ணான். அதுக்கு இத்தினி அடியா' என்கிற பதட்டமும் இல்லாது பாருங்கள்.

காதலின் பொருட்டு இல்லையெனினும், வேறு எதன் பொருட்டோ அடியும் உதையும் அவமானமும், துக்கமும் உங்களுக்கும் வரலாம். அடி வாங்காத குழந்தையோ, அவமானப்படாத மனிதரோ உண்டா இங்கு? நமக்கும் நேரலாம் என்கிற அக்கறை மனித நேயத்தின் முதல்படி.

தனக்கு நேரும்போது தாங்கி, அமைதியாவது இரண்டாவது படி.

கட்டுரைக்கென்று காதல் என்பதை ஆணும் பெண்ணும் நேசிப்பதாக நான் சிறிய வட்டம் போட்டுக் கொண்டேன்.

காதல் என்பது ஒரு ஆண் பெண் சம்பந்தப்பட்டது மட்டுமில்லை... ஒருவனிடமிருந்து சகலரிடமும் பரவ வேண்டிய உன்னத உணர்வு. அதில் ஆணுக்குப் பெண் ஓர் ஆரம்பம். பெண்ணுக்கு ஓர் ஆண் ஆரம்பம். ஈர்ப்பதில் ஈடுபட்டு மலர, ஈர்க்காத இடத்திலும் மலரின் வாசம் பரவும்.

சகலமும் நேசிக்கத் தகுந்தவையே என்பது புரியும்.

விவகாரங்கள் நேரடியாய் நமக்கு எதிர்ப்படும்போது, இந்தக் கதைகள் மூலம் கற்ற தெளிவு பயன்படும்.

இந்தப் பயிற்சி எல்லா இடங்களிலும் பயன்படும். நமது மனசு எப்படிச் செயல்படுகிறது என்கிற கவனம் சகல நேரமும் இருக்கும்.

மனசு சலனப்படுவது உடனே தெரியும். மனசிலிருந்து சலனம், அந்த விருப்பு, வெறுப்பு பிறக்கிற போதே அதைக் கவனித்துவிட முடியும்.

நீ கவனிக்கிறாய், உன்னையே நீ ஆழ்ந்து கவனிக்கிறாய் என்கிற நிலையில், அந்த உள் மனசு நிலையில் உலகமே வேறு விதமாய் பிடிபடும்.

எனவே தெளிவாய் இருத்தல் நம் நன்மைக்கும், நாம் சார்ந்த சமூக நன்மைக்கும் தேவையாய் இருக்கிறது.



வெற்றியும், தோல்வியும், நல்லதும் கெட்டதுமாய் இங்கே பல கட்டுரைகள் பிரிவு பட்டது போல் இருப்பினும், ஒட்டுமொத்தமாய் வாசிக்க, அவ்விதம் இல்லை என்பதை உணர்வீர்கள்.

இவை ஓர் அனுபவம் என்கிற இடத்தில் திண்மையாய் உங்களுக்குள் வருவதைக் காண்பீர்கள்.

சொல்லவும், கேட்கவும் சுகமாய் இருக்கும் என்பதால் கவிதைப் போக்கு உத்தியை இக்கட்டுரையில் கையாண்டேனே தவிர, 'அப்பால என்ன ஆச்சு?'' என்கிற ஆர்வத்தைத் தூண்ட எழுதவில்லை.

இங்கே கட்டுரையில் நடமாடிய மனிதர்களுக்கு ஒரு கால கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட ஆண் அல்லது பெண் மீது காதல் பிறந்தது. அந்த ஆணோ பெண்ணோ கிடைத்ததும் வேறு ஒரு நிலையடைந்து அன்பு செய்தல் பரவலாயிற்று.

எல்லா அனுபவங்களும் தனிப்பட்ட நபரோடு தோன்றி தன்னுள் பிரதிபலித்துப் பெரிதாகி எல்லாஇடங்களிலும் பரவும் குணம் கொண்டவைதான்.

'கதையாச் சொன்னது நல்லா இருந்தது. இப்படிக் கட்டுரையாச் சொல்றது புரியலையே' என்று யோசிக்கலாம்.

புரிந்து கொள்ள இஷ்டமில்லை, ஈடுபாடு இல்லை. யோசிப்பு இல்லை. யோசிப்புக்கு வேண்டிய தனிமை இல்லை. தனிமையில் 'தான் யார்? தனக்கு என்ன வேண்டும்?' என்று சிந்திப்பதில்லை.

வெற்றி ஊர்வலத்தில் கோஷமிடும் ஆளாய் அல்லது ஓரம் நின்று வெதும்பும் ஆளாய் மட்டுமே இருக்கிறீர்கள்.

கோஷமின்றி கோபமின்றி, 'என்ன? எதற்கு? ஏன்? எதனால்? என்று தனித்து யோசிப்பின் சகலமும் புரியும்.

இதைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய கட்டாயம் கூட இல்லாது போகும். எனக்குப் புரிந்து விட்டது என்று வீடு

வீடாய்ச் சொல்ல வேண்டிய அவசியமில்லாத ஓர் அமைதி வரும்.

வார்த்தைக்கு ஆட்படாத அமைதி அது. அந்த அமைதியே காதலின் பிறப்பிடம்.

கனிவும் கண்டிப்பும், அன்பும் ஆசையும் இந்தக் காதலோடு வந்தால்-அமைதியோடு வெளிப்பட்டால் அபத்தங்கள் வராது போகும்.

உங்கள் மனத்தைப் பிறருக்கு வெளிப்படுத்தல் சுலபமாகும். வெளிப்படுத்தியும் புரியாதவர் மீது கோபம் வராது போகும். புரிந்தவர் மீது மிகுந்த இணக்கம் வரும்.

பிறகு கூச்சலே இல்லை, பதட்டம் இல்லை. ஆத்திரம் இல்லை. ஆவேசம் இல்லை.

வாழ்வு மகா நதியாய் மாறி கடலில் சங்கமிக்கும் நாள்வரை எல்லோருக்கும் விதம் விதமாய் உதவிகள் செய்து முடிவுறும்.

இங்கே பிறந்தது வேறு எதற்காக? வாழ்வின் கடைசி நாள் வரை பிரியமுள்ளவராய், பிரியப்பட்டவராய் வாழ்தல் கைகூடும்.

இனிது இனிது
காதல் இனிது
அதனினும் இனிது
காதலில் அமைதி.

P-256
21/2/08

CONNEMARA PUBLIC LIBRARY
21 FEB 2000

# பாலகுமாரன்

# இனிது இனிது காதல் இனிது

## பாகம் இரண்டு

CPL 694753



# இனிது இனிது காதல் இனிது

## (இரண்டாம் பாகம்)

## 1

உலகம் உருண்டை அதனால்தான் சந்தித்தவர்களையே மீண்டும் சந்தித்துக் கொள்கிறோம் என்பதான பழமொழியை கமலவல்லி கல்லூரியில் கேட்டிருக்கிறாள்.

ஆனால், நாமக்கல் டவுன் உருண்டையா என்று தெரியவில்லை. இன்று காலையிலிருந்து பிற்பகலுக்குள் ஏழாவது முறையாக இந்த மனிதனை சந்தித்ததற்கு அர்த்தம் இந்த பழமொழியா என்று தெரியவில்லை.

காலையில் வாசல் தெளிக்க போனபோது கொஞ்சம் கூடுதலான சத்தத்துடன் ஒரு மொபெட் தாண்டிப் போயிற்று. இருள் பிரியும் நேரத்தில் இந்த மனிதன் முன்விளக்கு எரிய பின்னே நிழலுருவமாய் உட்கார்ந்து கொண்டு போனான்.

காய்கறிக்கு தெருமுனை கடைக்குப் போகும்போது காலையில் போன அதே வேகத்திலேயே திரும்ப வந்தான்.

குழந்தைகள் பள்ளிக்கூடம் போற நேரத்துல இந்தத் தெருவுல இவ்வளவு வேகமா போகணுமா - நினைத்துக் கொண்டாள் மறந்து போனாள்.

பிறகு கல்லூரித் தோழியுடன் கோயில் போகும் போது ஒருமுறையும், வரும்போது ஒருமுறையும் வாசல் பக்கம் குப்பை கொட்டப் போகும்போது ஒரு முறையும் அப்பாவுக்கு கடையாளிடம் சோறு கொடுத்தனுப்பும் போதும் சும்மா தெருவை வேடிக்கை பார்க்கலாம் என்று வந்து உட்கார்ந்தபோதும் கொஞ்சம் தள்ளி உள்ள கார் ஷெட்டில் நிற்பதையும் பார்த்தாள்.

ஏன் இந்தப் பக்கமே சுத்தறான்? ஜொள்ளு விடறானா- யாரைப் பார்த்து- நானா... நான் காரணமாக இருக்குமா- என்னைப் போய் யாராவது சுற்ற முயல்வார்களா என்ன?

அழகு என்று எடுத்துக் கொண்டால் கமலவல்லி சுமார் ரகம். விதம் விதமாய் உடுத்துகிற ஜாதியும் இல்லை. சுடிதார் கேட்டால் வாங்கித் தருவார்கள். போட்டுக்கிட்டு போகலாம். ஒண்ணும் தப்பில்லை என்று தீர்மானமே போட்டார்கள்.

ஆனால், கமலவல்லிக்கு சுடிதார் பிடிக்கவில்லை. புடவைக்குள்தான் தான் பத்திரமாய் இருப்பதாக அவளுக்கு தோன்றியது. துப்பட்டா போட்டாலும் சுடிதார் பிடுங்கித் தெரிகிறது என்று எண்ணினாள். புடவை கட்டிக் கொண்டால்தான் இடுப்புக்குக் கீழே புடவை வளையம் போட்டு காக்கிறது சுடிதார் காட்டிக் கொடுக்கிறது.

உடம்பைக் காட்டிக் கொடுக்கிற உடையை ஒரு பெண் எப்படி அணிய முடியும்? இந்த வீடு முன்னும் பேசும், பின்னும் பேசும். இந்த வீட்டுக்கு சுயபுத்தி கிடையாது.



'என்னா.... கமலவல்லி சுடிதார் போட்டுட்டு போவுது. அது உருவத்துக்கு சுடிதார் நல்லா இல்ல' என்று யாராவது சொன்னால் போதும். அவுத்துருடி- போடாதடி இந்த டிரஸ்ஸே வேணாம்னு புலம்ப ஆரம்பிச்சிரும்.

வீட்ல அம்மா, பாட்டி, சித்தி என்று மூன்று பேர் இருப்பது ஒரு இளம் பெண்ணுக்கு சில சமயம் நல்லது, பல சமயம் கெடுதல்தான்.

பாட்டி அப்பாவுக்கு பெரியம்மா. கனகவல்லி பிறந்ததிலிருந்து இந்த வீட்டில்தான் இருக்கிறாள். சித்தி இரண்டு வருடங்கள் முன்பு விதவையாகி பையன்களோடு வட இந்தியாவில் தங்க முடியாமல் இங்கு வந்து விட்டாள்.

இந்த மூவரும் கமலவல்லியை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டார்கள். இவர்கள் ஆட்சி இங்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் இயங்கி கொண்டிருந்தது. சும்மா ஒரு வார்த்தை சொன்னால் போதும். எவனோ வாசல்ல அடிக்கடி வந்து உத்துப் பாக்கறாம்மா- மெல்லியதாய் புகார் கொடுத்தால் போதும். எவன் அவன். பாட்டி தெருவில் இறங்கி விடுவாள். அம்மா அப்பாவுக்கு உடனே போன் செய்வாள். த்த- நீ இங்க வா. உடனே வா- கத்துவாள்.

இந்த மூன்று பேரைத் தாண்டி இந்த வீட்டிலிருக்கிற கமலவல்லியை யாரும் பார்த்து ஜொள்ளுவிட்டுவிட முடியாது. அப்படி யாராவது நெருங்கி வந்தால் இவர்கள் அறியாமல் கமலவல்லி அவனை நிமிர்ந்துகூட பார்க்க முடியாது.

இதில் சித்தி மட்டும் சற்று மரபு மீறிய குணம் கொண்டவள், அதை வெளியே காட்டிக் கொள்ளாதவள்.

அப்படி காட்டிக்கொண்டால் அம்மாவும், பாட்டியும் சித்தியைக் குதறியடித்து விடுவார்கள்.

"கமலவல்லி எதுனா சினிமாவுக்கு போலாமடீ..." சித்திதான் ஆரம்பிப்பாள். "ஆனா எம்பேர் சொல்லாதடி நீயா கேக்கற மாதிரி கேளு." தூண்டிவிடுவாள்.

சித்தி கேட்கிறாள் என்று ஒரு முறை சொல்ல பாட்டி பிய்த்து எடுத்து விட்டாள். கண்டமேனிக்கு பேசினாள்.

"என்னா, ஆசை அடங்கலியாடி. பொண்ணுக்கு பொண்ணு பொறக்கற வயசாவுது. இன்னும் சினிமா கேக்குதோ" என்று கூச்சலிட்டாள்.

"மனசு அடக்க வேணும் இல்லைன்னா, தேவையில்லாது ஊர் வாயில் விழுந்து எழுந்திருக்கணும்." அம்மா ஒத்துப் பாடினாள்.

கமலவல்லி சமாதானத்திற்கு போனபோது, "உனக்கு ஒண்ணும் தெரியாது. சும்மா இரு" என்று அதட்டி அமர்த்தி விடுவார்கள்.

இதே சினிமா ஆசையை கமலவல்லி வெளிப்படுத்தியபோது, "இதுக்கு உங்கப்பாவைக் கேக்கணும். நீயே கேளு" என்றார்கள்.

"ஏன்டா, குழந்தைய சினிமாக்கு போயிட்டுவான்னியாமே. வயசுப் பொண்ணைத் தனியா அனுப்பலாமா... கூட நானும் போயிட்டு வரேன், இருட்டுலே எனக்கு கண்ணு தெரியாது. அதனால எனக்குத் தொணையா உம் பொண்டாட்டி வரட்டும்."

"சரி, போங்க. இந்த பொம்பளை என்னா பாவம் பண்ணினா... இவளையும் கூட்டிட்டுப் போங்க." அப்பா சித்தியைக் காட்டுவார்.

பெரும் ஆரவாரத்தோடு வீடு சினிமாவுக்கு கிளம்பும் அப்பா வேண்டாம் என்றால் "நான் அப்பமே சொன்னேன் வேணாம்னு. இவளுங்கதான் கேக்கலை" என்று நாக்கு புரட்டி பேசும்.



கமலவல்லியை சுற்றி உள்ள யாரும் கெட்டவர்கள் அல்ல. ஆனால், இரண்டுங்கெட்டான்கள். சுதந்திர உணர்வு அரைகுறையாக உள்ள பெண்கள். எல்லா அரைகுறைகளும் ஆபத்தானவர்கள்.

இந்த ஆளை ஏழாவது முறையாக இன்று பார்க்கிறேன் என்று சொன்னால் எவன் அவன் என்று கூச்சலோடு வெளியே பாயும். சமயத்திற்கு ஏற்றாற்போல் நடந்து கொள்ளும் அவனை மடக்கி திட்டும். அவன் தப்பிவிட்டால் இவள் முகத்தில் இடிக்கும்.

"உட்கார்றபோது என்னிக்கினா ஒழுங்கா உட்கார்றியா... ஒட்டடை அடிக்கச்சேன்னு வராந்தாவுல கையத் தூக்கினு நின்னா ஏழு தடவை வராத என்னா செய்வான். எங்காத்தாலேர்ந்து உங்காத்தா வரைக்கும் எல்லாம் உருளை திரளையா இருக்கிற ஜாதி. பார்க்கறான்-பாக்கறான்னா..." பாட்டி கத்துவாள்.

எனவே மனம் பகிர்ந்துகொள்ள முடியாத இந்த வீட்டில் மௌனமாக இருப்பதுதான் நல்லது. சித்தியிடம் மெல்ல இந்த ஆளை அடையாளம் காட்டலாம்.

சித்திக்கு நாற்பது வயது. கிழவியுமில்லை. யுவதியுமில்லை. ஆனால், புருஷனின் இழப்பை ஒரு நல்ல விடுதலையாகக் கொண்டாடிக் கொண்டிருந்தாள். பெரிய பொறுப்புகள் இல்லாததாலும் காசுக்கு பெரிய கஷ்டங்கள் இல்லாததாலும் உணர்விலும் பேச்சிலும் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

எட்டாவது முறை அவன் எதிர்வீட்டு டெலிபோன் பூத்திற்குள் நுழைந்து தவிப்போடு எண்கள் சுற்றிக் கொண்டிருந்தபோது சித்தியைக் கூப்பிட்டுக் காட்டினாள்.

"சித்தி... அந்தாள் ஏன் நம்ம வீட்டையே சுத்தறான்."

"அது மகேஸ்வரன். நம்ம தெருவுலதான் இருக்கிறான். அதனால நம்ம வீட்டைத் தாண்டி போறான். தாண்டி வரான். உடனே உன்னையே சுத்தறான்னு நினைச்சுட்டியா... நாலு தடவை ஒரு ஆளைப் பார்த்ததும் நம்மையே சுத்தறான்னு நினைக்காத. எல்லா ஆம்பளையும் கெட்டவன் இல்லை. எல்லோரையும் தப்பா யோசனை பண்ணி உங்க பாட்டி மாதிரி ஆயிடாத."

"அந்தாளை உனக்குத் தெரியுமா?"

"ஏன், உனக்கு தெரிஞ்சுக்கணுமா?"

"அப்படி ஒண்ணும் அவசியமில்லை."

"அப்ப சும்மா இரு."

"சனியனே, அவன் யாருன்னு சொல்லு."

"எப்ப அவன் யாரு– இவன் யாருன்னு கேக்கறியோ அப்ப உனக்கு ஆம்பளை ஆசை வந்துடுச்சுனுதான் அர்த்தம்."

"இதுக்கு மேல பேசினே– நீ வாசல்ல காய்கறிகாரனோட ரொம்ப நேரம் பேசறேன்னு சொல்லிடுவேன். அப்புறம் நீ ரெண்டு நாளைக்கு என்ன பண்ணினாலும் திட்டுதான்."

கமலவல்லி சித்தியை பழிப்பு காட்டினாள்.

சித்தி அவளையே முறைத்துக் கொண்டிருந்தாள்.

"அந்தாள் யாருன்னு சொல்லு. இல்லன்னா மாட்டி விட்ருவேன்."

அவர்கள் வராண்டா மறைப்பில் நின்று பேச, எதிரே ஒரு கார் கிறீச்சிட்டு நின்றது.

டெலிபோன் பேசிக் கொண்டிருந்த மகேஸ்வரன் வெளியே வந்தான். காரில் வந்தவர்கள் அவன் சட்டையைப்



பிடித்துக் கொண்டார்கள். திமிறினான். முகத்தில் குத்தினார்கள். அவன் பதிலுக்கு தாக்க முயற்சிக்க, இன்னும் அடித்தார்கள்.

காரிலிருந்து ஒரு பெரிய உருளைக் கட்டையை ஒருவன் எடுக்க, அவன் உதறி ஓடினான். அவன் கீழிருந்த செங்கற்களை பொறுக்கிக் கொண்டு, பின்தொடர்ந்தவர்களை அடித்தான். இ 'னும் கற்களைப் பொறுக்கிக் கொண்டு சரமாரியாக எறிந்தான். ஒரு கல் கார்மீது பட்டுச் சிதறியது. ஒரு கல் அவர்கள் வீட்டு வாயிலில் பட்டு நொறுங்கியது. வந்தவர்கள் கல்வீச்சுக்குப் பின்வாங்க, அவன் தெரு நெடுக ஓடி, ஒரு வீட்டுக்குள் புகுந்து கொண்டான்.

"அவன் பொறுக்கின்னு காட்டிட்டான். நீ ஒண்ணும் அவனைப் பத்தி சொல்லவேணாம்."

"ச்சீ... ச்சீ... அவன் நல்ல புள்ளைடீ ஏதோ இன்ஷூரன்ஸ் கம்பெனில இருக்கான், எதுக்கு அவனைப் போட்டு அடிக்கறாங்கன்னு தெரியலையே."

"எதுனா பொம்பளைத் தகராறா இருக்கும்."

கமலவல்லி வேண்டுமென்றே கேலி செய்தாள். ஆனால், அவளுக்கும் அந்த அடிதடி விஷயம் ஆச்சரியமாக இருந்தது.

பாட்டி கூடத்தில் சுருண்டு தூங்க, அம்மா அறையை இருட்டாக்கி கட்டிலில் தூங்க, சித்தியும் அவளும் மருதாணி அரைக்க கொல்லைப்புறம் போனார்கள். ஒரு இருட்டு ரேழி தாண்டிப் போனதும், "ஊ..ழ்.." என்று விநோதமாக குரல் கொடுத்தாள். "யாழு..யாழு.." என்று உளறினாள்.

"நான்தாங்க மகேஸ்வரன். தயவு செய்து சுத்தாதீங்க."

அந்த ஆள் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டிருந்தான். அவனைத் தாண்டி ஓட முயற்சித்தபோது குறுக்கே கை நீட்டி தடுத்தான்.

“கொஞ்சம் நான் சொல்றதைக் கேளுங்க. வெளியே இப்ப போய் சொன்னீங்கன்னா என்னை வெட்டி எறிஞ்சிருவாங்க. என் உயிரு உங்க கைல இருக்கு. தயவு செய்து காப்பாத்துங்க.”

“என்னா ஆச்சு” சித்தி கேட்க, அவன் விவரிக்கத் துவங்கினான்.

அவனுக்கு இன்ஷூரன்ஸ் கம்பெனி வேலை இல்லை. இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காக துப்பறியும் வேலை. மகேஸ்வரன் தனியார் செக்யூரிட்டி. இன்ஷூரன்ஸ் கம்பெனி அவனுக்கு வேலைகள் தரும்.

“இந்தக் க்ளெய்ம் ஏமாற்று வேலை போல் தெரிகிறது. உண்மை என்ன... விசாரி...” ரகசிய தகவல் அனுப்பும், கடிதம் எழுதி கேட்கும். மொத்த விவரங்களையும் அவனுக்கு பிரதி எடுத்து அனுப்பி வைக்கும். விபத்தே நடக்காமல் அதிகாரிகளை உள்கையாய் வைத்து விபத்து நடந்தது போல் ஏமாற்றுவார்கள். இரண்டு லட்சம் மூன்று லட்சம் என்று காசு சுருட்டுவார்கள். சந்தேகம் வந்தவற்றை மகேஸ்வரனை அனுப்பி இன்ஷூரன்ஸ் கம்பெனி கண்டுபிடித்துவிடும்.

மகேஸ்வரன் இந்த வேலையைச் சிறப்பாக செய்து வந்ததால் அடுத்த மாவட்டங்களின் விபத்துகளைக் கூட இன்ஷூரன்ஸ் கம்பெனி அவனுக்கு அனுப்பி வந்தது. ஆதாரத்தோடு விபத்து பொய் என்று நிரூபித்தால் அவனை உற்சாகப்படுத்தி நல்ல காசு கொடுத்தது.

கம்பெனி உற்சாகமூட்டும். ஆனால், சம்பந்தப் பட்டவர்கள் சட்டையைப் பிடிப்பார்கள் பத்து பேர்



போகவேண்டிய ஒரு மினி வேனில் இருபத்தோரு பேர் அடைத்துக்கொண்டு போக, குறுக்கே ஓடிய ஆட்டுக் குட்டிக்கு டிரைவர் சடன் பிரேக் போட, இருபத்தோரு பேரில் ஏழுபேர் மூன்று பெண்கள் உள்பட டிரைவருடைய கால் சந்தில் அலங்கோலமாய் விழுந்தார்கள்.

ஆட்டுக்குட்டி ஓடிவிட, வண்டி புளிய மரத்தின் மீது மோதியது. இடித்த வேகத்தில் நாலு பக்கங்களும் நசுங்கின. டிரைவர் உட்பட எல்லோருக்கும் காயம் ஏற்பட்டது. இன்ஜின், ஆக்ஸில் ஹவுஸிங் எல்லாம் பாழாகியது. கியர் பாக்ஸ் நொறுங்கிப் போனது. கடவுள் கிருபையால் மரணம் ஏற்படவில்லை. நால்வருக்கு பலத்த அடி மூவருக்கு லேசான காயம். மற்றவர்களுக்கு சிராய்ப்புகள்.

பத்து பேர் வேனில் இருபத்தோரு பேர் போனால் அதைக் காரணம் காட்டி க்ளெய்ம் மறுக்கப்படும். எனவே பத்து பேர் மட்டுமே பயணம் செய்ததாய் எழுதிக் கொடுத்துவிட்டு சிராய்ப்பு காயம் பட்டவருக்கு அந்த வேன் ஓனர் எவர்சில்வர் குடம் கொடுத்து சமாதானம் செய்துகொண்டார்.

தொழில் போட்டியால் இருபத்தோரு பேர் வேனில் போனதாக யாரோ மொட்டை கடுதாசி எழுதிவிட, இன்ஷூரன்ஸ் கம்பெனி இதனை வேவு பார்க்கும்படி மகேஸ்வரனை ஏவ, மகேஸ்வரன் அதை வெளியே கொண்டு வந்து விட்டான்.

“ஆளுக்கு ஏழாயிரம் ரூபா கிடைக்கும். வெறும் எவர்சில்வர் குடத்தோட கையெழுத்து போட்டு முடிச்சிட்டீங்களே... உங்க பேப்பரைக் காட்டி வேன் ஓனர் நிறைய சம்பாதிச்சிருவாரு இருபத்தோரு பேர் போனோம்னு எழுதிக் கொடுங்க.”

பயணிகளை அவன் தூண்டிவிட, அவர்கள் காசுக்கு ஆசைப்பட்டு கையெழுத்து போட்டுக் கொடுத்து விட்டார்கள்.

அந்தக் காகிதத்தை தபாலில் அனுப்பினாலும் ஆள் வைத்து மடக்கி விடுவார்கள் என்பதால் மகேஸ்வரன் சென்னைக்குப் போய் நேரே கொடுத்துவிட்டு வந்தான். அதன் பிரதிகளை டெல்லிக்கு தபாலில் அனுப்பினான். நாமக்கல்லுக்கு க்ளெய்ம் மறுப்பு வந்ததும் வேன் ஓனர் விழித்துக் கொண்டார்.

"எந்த பேமானி அவன்" என்று வேட்டி மடித்து வெளியே இறங்கினார்.

வேன் லாரி டூரிஸ்ட் டாக்ஸி ஓனர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கிடையே வியாபாரம் செய்கிறவர்கள், அது போட்டி மிகுந்த வியாபாரம். பத்து பேர் வண்டியில் இருபத்தோரு பேர் ஏற்றாவிட்டால் வேன் ஓடாது. வேறு வேன்காரன் பார்ட்டியை வாரிக் கொண்டு போய்விடு வான்.

நடக்காத விபத்தையா நடந்தது என்று எழுதினோம். அப்படி எழுதி க்ளெய்ம் வாங்கினவனையெல்லாம் விட்டுவிட்டு என்னை மடக்குகிறானே என்று ஆத்திரப் பட்டார்.

மகேஸ்வரனை தேடினார். அடித்தார். அவரிட மிருந்து தப்பிக்கத்தான் மகேஸ்வரன் இவர்கள் வீட்டுக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறான்.

தம்பியை போலீஸுக்கு அனுப்பியிருக்கிறான். போலீஸ் வந்து பாதுகாப்பு தரும் வரையில் அங்கிருக்க அனுமதி வேண்டினான்.

"இல்லீங்க... எங்க வீட்டுக் கிழவி கொன்னுடும். வயசுப் பொண்ணு இருக்கிற இடம். யாருன்னா தப்பா



பேசிட்டா வாழ்க்கையே கெட்டுப் போயிடும். தயவு செய்து போயிடுங்க."

சித்தி கொல்லைக் கதவு திறக்க, கமலவல்லி அவனை ஆசுவாசப்படுத்தினாள்.

"ஒருவேளை இந்தாளு வெளிய போயி அடிபட்டு செத்துட்டாருன்னு வச்சுக்க... நாம நல்லா இருப்பமா..."

"மாட்டோம்..."

"இவரப் பாத்தா உனக்கு தப்பா தெரியுதா..."

"தெரியலை..."

"கிழவி அஞ்சு மணிக்கு குறைஞ்சு எழுந்திருக்காது. ஆத்தாளுக்குத் தலைவலி... அவளும் கண்ணு தொறக்க மாட்டா... இவரு இங்கயே இருக்கட்டும். சத்தம் போடாத. காபி போட்டுக் கொடு."

கமலவல்லி கட்டளையிட்டாள்.

"தெரிஞ்சா உன்னை ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. என்னை அசிங்கப்படுத்துவாங்க."

"உனக்குத் தெரியாதுன்னு சொல்லிடு. போய் அடுப்பு மூட்டு."

'அப்பாகிட்டே சொல்லி போலீஸை வரவழைச்சிரு வோம்டி..."

"அதான் வம்பாகும். போலீஸ் நம்ம வீட்டுக்குள்ள நுழைஞ்சா ஊரு ஒண்ணுக்கு இரண்டா பேசும். இருட்டின பிறகு காதும் காதும் வச்சா மாதிரி..."

"எங்கடி இருக்க வக்கிறது...?"

"இங்கயே... இந்த பாத்ரூம்லயே..."

"வேணாம்டி... வம்பு வரும்டி"

"நான் மறுபடியும் சொல்றேன் சித்தி. இவரு சரியா தப்பான்னு எனக்குத் தெரியலை. இவரு வெளிய போய்

உருட்டுக் கட்டைல அடிவாங்கி செத்துட்டா உன்னால தூங்க முடியுமா? நம்மால ஒருத்தர் செத்துட்டா நம்மால நிம்மதியா வாழ முடியுமா... பாட்டியை எழுப்பினா மாட்டிவிட்டுரும். அந்தப் பாவம் நமக்கு வேணாம். நாம இவரைப் பார்க்கலை. வா- உள்ள போயிருவம்."

"ஐயய்யோ- உங்கம்மா எழுந்து வராடி."

சித்தி பதற, அவன் இருந்த சிறிய பாத்ருமுக்குள் தானும் புகுந்து கதவு சாத்திக் கொண்டாள். குழாய் திறந்து முகம் கழுவினாள், அம்மா மறுபடி கட்டிலுக்குப் போகும் வரை கழுவிக் கொண்டேயிருந்தாள். அவன் அசையாமல் சுவரோடு ஒட்டிக் கொண்டிருந்தான்.

அவன் முகத்தில் முழங்கையில் அடிவாங்கிய காயங்கள் இருந்தன.

அம்மா போனதும் வெளியே வந்தாள். இருட்டியதும் அவன் நன்றி சொல்லிவிட்டு வந்த வழியே சுவரேறி குதித்து வீட்டுக்குப் போனான்.

அவளும் சித்தியும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

"எப்படிடி உனக்கு இவ்வளவு தைரியம் வந்தது."

"நீ கூட இருக்கிற தைரியம்தான், சித்தி."

"அந்தப் பையன் நல்லவன்."

"ஆமா- அப்படித்தான் தெரியுது."

"எப்படிச் சொல்றே?"

"பாத்ரூம்ல மூஞ்சி கழுவுறப்ப, தப்பா பார்க்கலையே."

பெண்ணுக்கு ஆணின் பார்வைதான் முதல் அபிப்பிராயம். முதல் அபிப்பிராயம்தான் முற்றிய அபிப்பிராயம்.

பார்வையில் கள்ளம் உள்ள ஆண்களைப் பெண் நம்புவதில்லை. பார்வையில் கள்ளம் இல்லாமல் இருக்க



வேண்டுமெனில் மனதில் பெண் பற்றிய தெளிவு இருக்க வேண்டும்.

உலகம் உருண்டையானது. ஒரு மாதத்திற்குப் பிறகு மகேஸ்வரனும், கமலவல்லியும் வழியில் சந்தித்துக் கொண்டார்கள்.

அவன் உண்மையாக நன்றி சொன்னான்.

அது அவள் மனதைத் தொட்டது.

## 2

உலகம் பணத்திற்குப் பிறகு அதிகம் விரும்புவது புகழைத்தான். புகழ்ச்சி என்பது பாராட்டின் இன்னொரு வடிவம். பாராட்டினால் எல்லோருக்கும் பிடிக்கிறது.

பாராட்டு என்பது நன்றியின் குழந்தை.

அவன் கடைத்தெரு என்று பார்க்காமல் அவள் முன்பு கை குவித்தான்.

கனிவான வார்த்தைகளால் அவளுக்கு நன்றி சொன்னான்.

"நான் இன்னைக்கு உயிரோடு இருக்கேன்னா அதுக்கு நீங்கதான் காரணம்.

கொஞ்சங்கூட வெட்கமே படாம இந்தக் கடைத்தெருவுல மண்ணுபட உங்க கால்ல விழுந்துருவேன். அப்படி விழுந்தா நீங்க பயந்துருவீங்க. உங்களுக்கு தொந்தரவாயிரும்.

அதனாலதான் விலகி நின்று நன்றியோட கை கூப்புகிறேன்.

'ஐயோ என் வீட்டுல பூந்துட்டான். யாருனு தெரியலை'ன்னு கத்தியிருந்தா புதுசா பத்துபேரு சேர்ந்து என்னை அடிச்சிருப்பாங்க. துரத்துறவனை எதுத்தாவது

சண்டை போடலாம். ஏன்னா... நியாயம் நம்ம பக்கம் இருக்கு. ஏன்டா கமலவல்லி வீட்டுக்குள்ள போனேன்னு அடிச்சா என்ன பண்றது?

முதல்ல கடவுள் காப்பாத்திட்டாருனு நினைச்சேன். வீட்டுக்குப் போய் நிதானமா யோசிச்சபோது, நம்மள கடவுள் காப்பாத்தல. கமலவல்லிங்கற லேடி காப்பாத்திருக்காங்க. அப்படினு தெளிவா புரிஞ்சு போச்சு.

உங்க அம்மா நுழைஞ்சபோது டக்குனு பாத்ரூம் குள்ள புகுந்து, இடுப்புப் புடவையைத் தூக்கி மேல சொருகிக்கிட்டு குனிஞ்சு முகம் கழுவினீங்களே... ஆடிட்டேன். எவ்வளவு பெரிய ரிஸ்க்.

தடுக்குனு தாப்பா கழண்டு, அந்த பாத்ரூம் கதவு திறந்திருந்தா, என் கதிய விடுங்க, உங்க கதி என்னா யிருக்கும்?

என்னான்னு விசாரிக்காம, ஏதுன்னு தெரியாம என்னை வெளிய துரத்தினா நான் அடிபட்டு செத்துருவேன்னு தெளிவாய் புரிஞ்சு அமைதியா அடைக்கலம் கொடுத்தீங்களே, பொதுவா பெண்ணுங்க யாருக்கும் இந்த புத்தி வராது. நெஜம்மா சொல்றேன் உங்களுக்கு பெரிய மனசு, தெளிஞ்ச புத்தி.

உங்க நட்சத்திரம் தெரியல. நாமக்கல் ஆஞ்சநேயர் சாமிகிட்ட போயி, சாமி பேருல அர்ச்சனைனேன். ஆனா சத்தியமா உங்களையேதாங்க நெனைச்சுட்டு இருந்தேன். 'கடவுளே! அவங்க நல்லா இருக்கணும்'னு உங்களையே நெனைச்சுட்டுருந்தேங்க.

இதுக்குப் பிறவு வேற ஒண்ணுமில்லைங்க. இது சொல்லத்தான் மடக்கி நிறுத்துனேன்."

அவளுக்கு காதெல்லாம் இனித்தது. மனம் நிரம்பித் ததும்பியது. புகழ் போதையில் கண்கள் சொருகின.



ஆமா ஏன் அடிக்க வந்தாங்க அப்புறம் என்னாச்சு?" அவள் கேட்டாள்.

"இந்த உலகத்தில் நல்லவனையும், நேர்மையான ஆளையும் அடிக்கத்தான் செய்வாங்க மேடம். இது கூட்டுக் களவாணிக் காலம். நான் நியாயத்துப் பக்கந்தான் நிப்பேன்னா இந்த நாமக்கல்ல நமக்கு முட்டாப் பயன்னுதான் பேரு கிடைக்கும்.

சரி, நாம முட்டாளாவே இருப்போம். நம்ம விட தர்மம் முக்கியம்னா, உன் தர்மத்தால நாலணா நஷ்டம் டானு அடிக்க வருவாங்க. ஒரு வியாபாரிக்கு நாலணாக் கூட நஷ்டம் வந்துடக்கூடாது. வந்தா கொன்னுடுவான்."

"புரியலியே..." அவள் கேட்க, அவன் சம்பவத்தை விளக்கினான்.

அந்த மினி பஸ் ஓனரின் கோபத்தை தெரிவித்தான்.

"அன்னிக்கு நைட்டே நான் சேலம் உயர் போலீஸ் அதிகாரிகிட்ட, என் உயிருக்குப் பாதுகாப்பு வேணும், என்னைக் கொலை பண்ண முயற்சிக்கிறாங்க. அப்படினு விலாவாரியா புகார் கொடுத்தேன். சேலத்திலிருந்தே சீஃப் மினிஸ்டருக்கு ஒரு டெலிகிராம் கொடுத்தேன். அதுக்கப்புறந்தான் சரியா ஆக்ஷன் எடுத்தாங்க. எனக்கு நாமக்கல்லுக்கு ஒரு கான்ஸ்டபிள் போட்டு அனுப்பினாங்க. லோக்கல் இன்ஸ்பெக்டருக்கு போன் பண்ணச் சொன்னாங்க. லோக்கல் இன்ஸ்பெக்டருக்கு பேஜாராய் போச்சு. பார்ட்டி டென்ஷனாகி அந்த ஓனர ஏறுஏறுனு ஏறிட்டாரு.

இன்ஷூரன்ஸ் கம்பெனி மேனேஜரு வந்து சத்தம் போட்டாரு. அதனால எல்லாம் சைலெண்ட்டாயிருச்சு."

அவர்கள் சற்றுநேரம் பேசிவிட்டுப் பிரிந்தார்கள்.

நாமக்கல்லில் பெரிய விஷயம்.

அதற்குப் பிறகு அவனை அவள் பல இடங்களில் பலமுறை பார்த்தாள்.

ஒரு முறை பஸ்ஸில் இடம் பிடித்துக் கொடுத்தான். ஒரு முறை கோவில் வாசலில் கைநிறைய பூவும், பழமும் வைத்திருக்கின்ற பொழுது, பிளாஸ்டிக் பை வாங்கி விரித்து நீட்டினான்.

ஒரு கோடை மழையில் வேகமாய் ரோட்டில் நடந்தபோது ஒரு கடையிலிருந்து ஓடிவந்து குடை நீட்டினான்.

மறுநாள் காலை சட்டென்று அதைத் திரும்ப வாங்கிப் போனான்.

மாரியம்மன் கோவிலில் அவன் தீ மிதித்ததாகக் கேள்விப்பட்டாள். ஐயப்பன் கோவிலுக்கு மாலை போட்டு அவன் சுற்றியதைப் பார்த்தாள்.

"என்னங்க இன்னிக்கு ரிசல்ட்டாமே. பாஸாயிட்டீங்களா? அடடே, பாஸா. ஸ்வீட்டே கொடுக்கல. மேற்கொண்டு என்ன பண்ணப் போறீங்க. வீட்டோட தானா?"

அவள், ஆமாம் என்றதும் நின்று ஆவலோடு ஒரு முறை பார்த்துவிட்டு விலகிப் போனான்.

"யாரும்மா இந்த மகேஸ்வரன்?" ஒரு நாள் அப்பா உள்ளே நுழைந்ததும் கேட்டார்.

"ஏம்ப்பா?"

"உன்னைப் பெண் கேட்டு அவன் சார்பா நாலு பேரு வந்தாங்க. அவங்க நாடாரு, நாம வன்னியரு. இது சரிப்படாதுங்களேன்னு சொல்லி அனுப்பிச்சுட்டேன். வந்தவங்கள்ளாம் ஐயரு, முதலியாரு, தேவமாரு, அவங்களுக்கு நம்ம ஜாதியப்பத்தி என்ன அக்கறை?



வந்தவங்க ஊர்ப் பெரிய மனுஷங்கிறதால நான் பெருசா சத்தம் போடல. விசாரிச்சதுல அந்தப் பையங்கிட்ட பெரிய தப்பும் எதுவும் இல்ல. நெறையப் பேரு நல்லாத்தான் சொன்னாங்க. ஆனாலும் ஜாதிய எப்படி விட்டுக் கொடுக்கிறது."

"ஜாதி, பெரிய ஜாதி." சித்தி பின்னாலிருந்து முணுமுணுத்தாள்.

அது யார் காதுக்கும் எட்டவில்லை.

"அது எப்படி ஜாதிவிட்டு ஜாதி கொடுக்கிறது? அதெப்படி நாக்குமேல் பல்லப் போட்டு ஒருத்தன் கேப்பான்? வந்த பெரிய மனுஷாளு வீட்டுல பொண்ணே இல்லயா? அவங்கெல்லாம் சொந்த ஜாதில செய்துக்கு வாங்க, நாங்க ஜாதி விட்டு ஜாதி நாறணுமா. வந்து கேட்ட பெரிய மனுஷாள நீ செருப்பாலே அடிச்சிருக்கணும் அப்பதான் பொண்ணு கேட்ட பேமானிக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்."

"ஏண்டி இங்க வா. அவனை உனக்குத் தெரியுமா? எங்கித்துப் பழக்கம்? எத்தினி நாளா பழக்கம்?" பாட்டி துளைத்தெடுத்துவிட்டாள். அம்மா தூண்டிவிட்டாள்.

"பொட்டி முன்னாடி உக்காந்து ஆட்டம் பாக்கா தீங்கன்னா கேக்கறீங்களா டான்ஸ் ஆடறேன். டான்ஸ் ஆடறேன்னு அசிங்க அசிங்கமா ஆடறான். ஆம்பள பொம்பள சங்கதியெல்லாம் பச்ச பச்சயாக் காட்டறான்.

ஒரு பொண்ணு எகிறி எகிறி மாரால இடிக்குது. இவன் பச்சரி மாங்கான்னு பாடறான். பாக்கற பொண்ணுக்கு உடம்பு எப்பிடி பத்திக்கும். எல்லாம் பிஞ்சிலே வெம்பித் தொங்குதுங்க.

'திருப்பதி மலைவாழும் வெங்கடேசா'ன்னு பாட்டு ஆரம்பிச்சா இவ டொக்குனு அணைச்சுட்டுப் போறா. இது நல்லதுக்கு ஆகுமா?

ஒரு பொண்ணு இடதோ, வலதோ ஒருக்களிச்சுப் படுக்கலாம். வேலை செஞ்சு ரொம்ப அலுப்பா இருந்தா மல்லாக்க படுக்கலாம். எப்பவும் இவ குப்புறப் படுக்கறாளே, இவ மனசுல என்னதான் இருக்கு?" அம்மா நடுவே புகுந்து கூவினாள்.

"அட நிறுத்துங்க ரெண்டு பேரு எவனோ வந்து பொண்ணு கேட்டதுக்கு இவள ஏன் காய்றீங்க? இவ என்னா தப்புப் பண்ணினா."

"அவ என்ன மரமா, கல்லா? பொம்பளதானே. அவ ரூம்குள்ள அவ எப்படி படுத்தா என்ன? உங்க சின்ன வயசு மறந்து போச்சா?

அன்னிக்கு இருட்டுல நடந்து பெட்ரோமாக்ஸ் லைட் வெளிச்சத்துல தியாகராஜ பாகவதரைப் போய் பார்த்துட்டு வந்தீங்க. 'என்னா அழகு; என்னா அழகு'ன்னு பேசினீங்க. இன்னைக்கு வீட்டுக்குள்ளே இருட்டுப் பண்ணி டிவி. பாக்குறோம். எல்லாம் ஒண்ணுதான்." சித்தி சமாதானப்படுத்தினாள்.

"தப்பு நம்ம பேருல. சமஞ்ச உடனே வரன் பார்த்திருக்கணும். சட்டப்படி. குத்தம்னாங்க, விட்டுட்டோம். பதினெட்டு வயசுல கல்யாணம் முடிச்சிருக்கணும். இருபத்தோரு வயசு வரைக்கும் இதோ அதோனு இழுத்துட்டோம்."

"டேய், நாளைக்கே நம்ம உறவுக்காரங்ககிட்டே போய் பேசு. எல்லார்கிட்டேயும் பொண்ணு தயாருன்னு போய் சொல்லு. இன்னும் மூணு மாசத்துல அவ கல்யாணத்த முடி."

அவன் மறுநாள் அவளுக்காக காத்திருந்து கடைத்தெருவில் நிறுத்தினான்.

"என்னங்க தப்பாயிருச்சுங்களா?"



"ஆமாம்."

"உங்களுக்கு கஷ்டம் வந்திருச்சுங்களா?"

"தெரியல."

"எனக்கு உங்கள கட்டித்தர மாட்டாங்களா?"

"மாட்டாங்க."

"இன்னொருவாட்டி பேச ஆள அனுப்பட்டுங்களா?"

"வேணாம்."

"ஏன் வேணாங்கறீங்க. என்னை உங்களுக்குப் புடிக்கலீங்களா?"

"அது காரணமில்லை."

"என்னைய உங்களுக்குப் புடிச்சிருக்குங்களா?"

"சொல்லத் தெரியல."

"நான் உங்களை விரும்புறேன். காதலிக்கறேனுகூட சொல்ல வரலீங்க. உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறணும்னு ஆசைப்படறேன்."

"ஆசைங்கறது எல்லார்கிட்டயும் இருக்கும். எல்லாத்தையும் வெளில சொல்லிற முடியாது"- அவள் பதில் சொன்னாள்.

"உங்களுக்கும் ஆசையிருக்குன்னு சொல்ல வர்றீங்களா?"

"எனக்கு ஆசை இருக்கலாம். இல்லாமப் போகலாம். எனக்கு என் வீடு முக்கியம். எங்க அப்பா ரொம்ப நல்லவரு."

"எனக்குப் புரியதுங்க. நான் வரட்டுங்களா?" கை கூப்பினான்.

"உங்க ஜாதியிலே ஒரு நல்ல பொண்ணா பார்க்கச் சொல்லுங்க."

"சரிங்க."

"ஜாதி ஒண்ணாயிருந்தாக்கூட சரியா வந்திருக்கும். சேலத்துல உக்கார்ந்து ஜாதி மாறி கட்டினா ஊர்ல பெரிய சிரிப்பாயிருக்கும்."

"ஆமாங்க. உங்களுக்கு கல்யாணம் வச்சா எனக்கு பத்திரிகை அனுப்புங்க."

"நான் பத்திரிகை அனுப்பிச்சுரலாம். நீங்க வந்தா நல்லாயிருக்காது."

"ஏங்க?"

"மேடையில் எனக்குப் பதறும். யாராவது எதனாச்சும் உங்களை சொல்லிறப் போறாங்களோன்னு பயமா இருக்கும். உன்னை யாருய்யா கூப்பிட்டதுன்னு கத்தினா, எனக்கு அழுகை வந்துரும். யாரோ ஒரு மாப்பிள்ளைய பக்கத்துல வச்சுகிட்டு உங்கள நெனச்சு அழுதா நல்லா இருக்குமா."

அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"எனக்கு இது போதும்ங்க. சாகற மட்டும் உங்கள நான் மறக்க மாட்டேன். லவ்வுன்னா என்னான்னு எனக்கு புரிஞ்சு போச்சு. நீங்க நல்லா இருக்கணும். ரொம்ப நல்லா இருக்கணும். உங்க கல்யாணம் வரைக்கும் தினம் உங்களுக்காக நாமக்கல் ஆஞ்சநேயரை சுத்துறேன். விடியற நேத்துல அஞ்சுமணிக்கு தினம் எழுந்து சுத்தறேன்."

அவன் அவளை விட்டு விருட்டென்று நகர்ந்தான். அவள் மனசுக்குள்ளேயே வாய்விட்டு அலறி அழுதாள்.

இதற்குப் பெயர்தான் - ஊமைக்காதல். கனவுத் துயரம். நீர்க் கோலம் அல்லது இந்தியப் பெண்களின் மனம்.



# 3

ஐரோப்பியர்களின் வாழ்க்கை அகந்தையின் வடிவம். அங்கு காதல் என்பது காமப் பேயாட்டம். காதல் காமத்தில்தானே முடிகிறது. அதனால் காமத்திலேயே உறவை ஆரம்பித்துவிடுவோமே என்று ஐரோப்பியர்கள் நினைக்கிறார்கள்.

எல்லா உணவும் மலமாகிறது என்பதால் மலத்தை யாரும் தின்ன முடியுமோ? ஆனால், மலம் மண்ணாகி, மண் உரமாகி, உரம் தாவரத்தின் வழியே உணவாகிறது.

காமம் ஓர் அடி உரம். காதலின் விளைவு. காதலை வெளிப்படுத்தும் வகை.

மரியாதை இல்லாமல் பரிமாறப்பட்ட எந்த காமமும் ருசிக்காது. எல்லா விஷயங்களிலும் ஒரு ருசியோடு ஒரு ரசனையோடு வாழ்க்கை நடத்த முயற்சிக்கிறவர்களுக்கு காதல் மிக முக்கியமான விஷயம். மிருக புத்தி கொண்ட போதுதான் காமம் ஆட்டம் போடுகிறது. கற்பழித்தல் நடக்கிறது. பரஸ்பரம் ஏமாற்றவும் முற்படுகிறார்கள்.

நீயும், நானும் சேர்ந்து வாழ்ந்தால் நன்றாகத்தானிருக்கும். விவரமே தெரியாமல் கழுத்தை நீட்டுவதற்கு பதிலாக, விரும்பிப் பழகி திருமணம் செய்துகொள்ளுவது மேல். ஆனால் இயலாது. இதற்கு பெரும் விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

எனவே, விலகி விடுவோம். நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று வாய்விட்டு சொன்னால்தானா... தமிழ் மொழியில் பரிமாறினால்தானா... என் கண்கள் சொல்லவில்லையா? என் முகம் சொல்லவில்லையா? என் உடை சொல்லவில்லையா? என் நடை சொல்லவில்லையா?

'உனக்காக அஞ்சு மணிக்கு ஆஞ்சநேயர் கோயில் சுத்தவில்லையா?' என்று அவன் சொன்னதும் அவள் உடல் தளர்ந்தது.

"தயவுசெய்து வேணாம்பா, இதெல்லாம் பண்ணாதே. இந்த கமலவல்லிக்கு இவ்வளவு பெரிய மரியாதை வேணாம், தாங்காது.

தின்னமா, தூங்கினமா, காலேஜ் போனோமா, பொண்ணு பாக்கறவங்களை கும்பிட்டு பெரிய ஜரிகை பார்டர் புடவையைக் கட்டி தாலிய கழுத்துல ஏத்திக்கிட்டு தலை குனிஞ்சு இருந்தோமான்னு இருந்துர வேண்டியதுதான்."

'அது யாரு? அது யாரு?'... தாலி கட்டினவனைச் சுட்டிக் காட்டி கூக்குரலாய்க் கேட்பார்கள். அப்பொழுது கூட நேரே பார்க்காமல் என் புருஷன் என்று சொல்ல வேண்டும்.

இந்த தேசத்தின் பெண்களின் உடைகள் மாறினாலும், படிப்பு கூட ஏறினாலும், எங்கேயாவது வேலை செய்து இரண்டாயிரம் ரூபாய் சம்பாதித்தாலும் காதல் என்பது அனுமதிக்கப்பட்டதில்லை.

காதலிக்கின்ற பெண்ணுக்கு மரியாதை இல்லை, காதல் என்பது கள்ளத்தனமாகப் போய்விட்டது.

அன்பு செய்வது யாருக்கும் தெரியாமல் செய்யும் அசிங்கமாக மாறிவிட்டது.

ஒரு பெண் நள்ளிரவில் நிறைய நகைகள் பூண்டு தன்னந்தனியாய் எந்த தேசத்தில் நடந்து வரமுடியுமோ அந்த தேசம்தான் அற்புதம் என்கிறார்கள். அதைத்தான் ராம ராஜ்ஜியம் என்கிறார்கள்.

இதில் ஒரு பெரிய தவறு இருக்கிறது. பெண்ணின் நகைகளுக்கும் உடம்புக்கும் மட்டுமே பாதுகாப்பு



தருவது பற்றி யோசிக்கிறார்கள், அவளுக்கு மனம் என்று ஒன்றிருக்கும் என்பதை மறந்து விட்டார்கள்.

இந்த வாக்கியத்தை மாற்றி எழுத வேண்டும்.

எந்த தேசத்தில் ஒரு கன்னிப்பெண் அச்சமின்றி தன் புருஷனை அவளே தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியுமோ, அப்படித் தேர்ந்தெடுத்துக் கொள்ள அறிவுபூர்வமாய் சிந்திக்க எந்த தேசம் ஒரு பெண்ணை தயார் செய்கிறதோ அந்த தேசமே முன்னுக்கு வரும். முழு மகிழ்ச்சியோடு இருக்கும்.

பெண்களை இழிவுபடுத்திய தேசத்தில் போர் நிகழ்ந்தவண்ணம் இருக்கும். இனக்கலவரம் அதிகமாகும்.

பெண் தந்திரம் மிக்கவள். தனக்கு அடங்காத ஆணை அவள் தூண்டிவிட்டு, இன்னொரு ஆணோடு போர் செய்யச் சொல்கிறாள். போரில் ஜெயித்தவன் போரில் மடிவான். போர் என்பது சுவரில் எறிந்த பந்து. கிளை நுனியில் உட்கார்ந்துகொண்டு வெட்டும் முட்டாள்தனம். குரங்கு அசைத்த ஆப்பு.

பெண்ணிற்கு துரோகம் இழைத்த ஆண்கள் போரில் தண்டிக்கப்படுகிறார்கள்.

காதல் என்பது உலகம் முழுவதையும் அரவணைத்துக் கொள்ளும் மலர்ச்சி, அந்த மலர்ச்சி பெற, பெண் ஒரு பயிற்சிக்கூடம், பள்ளிக்கூடம்.

பெண் காதல் பள்ளிக்கூடமெனில், குடும்பம் சர்வகலாசாலை.

நல்ல பெண்ணை நல்லவிதமாய் காதலித்தவன், நல்ல குடும்பியாய் இருக்கிறான். நல்ல குடும்பி, நிறைவான வாழ்க்கை வாழ்கிறான்.

பிரச்சினைகள் அவன் முன்பு பெரிதாவதில்லை. அப்படிப் பெரிதாகும் பிரச்சினையை அவனுக்குப்

பிரியமான குடும்ப அங்கத்தினர்கள் ஒன்றுசேர்ந்து ஒழித்துவிடுகிறார்கள்.

வாழ்க்கை லகுவாய், ரம்மியமாய், பயனுள்ளதாய் அப்போது இருக்கிறது.

இதற்கு காதல்தான் காரணம் என்று எவ்வளவு கத்தி சொன்னாலும் புரியவில்லை.

'காதல் செய்வீர் உலகத்தீரே, காதல் செய்வீர்' என்று யார் கூவினாலும் காதில் விழுவதே இல்லை.

காரணம், காமத்தைக் காதல் என்று பொய் சொல்லிப் பரிமாறிவிட்டு பெண்ணை ஆணோ, ஆணைப் பெண்ணோ ஏமாற்றிப் போய்விடுவது இடைவிடாது நடப்பதால்தான்.

நூறு பேர் உள்ள கிராமத்தில் இரண்டு பேர் ஏமாற்றினால்கூட, அந்த கிராமத்திலுள்ள எல்லோரும் காதலை எதிர்க்க ஆரம்பித்துவிடுகிறார்கள்.

எனவே வாழ்ந்து காட்டுபவர்கள் வேண்டும். வாழ்ந்து காட்டுதலுக்கு அடிப்படை நேர்மை, பொறுமை.

மகேஸ்வரன் தான் விருப்பப்பட்ட பெண்ணிடம் மிக நேர்மையாக நடந்துகொண்டான். உடனே வேகமாக முடிவுகள் எடுக்காமல், தன்னை சோதித்துக் கொள்ள விலகிப் போனான்.

"இவ்வளவு உயரம் நிக்கற. இவ்வளவு உயரம் நின்னாலும் கைகூப்பி நிக்கற. அதனால உங்கூடப் பேசறேன்." மகேஸ்வரன் அனுமாரோடு பேசினான்.

"மலையையே தூக்கி வந்த ஆளு நீ. கெட்ட ஜனங்களையெல்லாம் ஒத்த கையால அழிச்ச ஆளு நீ. நீ சிரஞ்சீவி. உன்னால முடியாத காரியமே இல்லை. இருந்தாலும் நீ கைகூப்பி நான் உனக்கு என்னா செய்யட்டும்னு நிக்கற?



இதனாலேயே உங்கிட்ட கேக்கறேன். நான் சரியில்லையா? அந்த பொண்ணுக்கு நான் புருஷனாக முடியாதா?

என்னடா இதுக்குத்தான் என்னைச் சுத்தினியான்னு கேட்காதே. அவ ஒண்ணும் எனக்குத் தேவையில்லை. அவதான் வேணும்னு அவசியமில்லை. ஆனால், அவ இருந்தா நல்லா இருக்கும். ஒரு நிமிஷம் கூவியிருந்தா எங்கதி என்னாயிருக்கும். 'எனக்குத் தெரியாது. நீ வெளியே போ'ன்னு கோபப்பட்டிருந்தா என்னாயிருக்கும்? பயந்து கத்தாத, வெளிய துரத்தாத அந்தப் பொண்ணு எவ்வளவு அழகா சுதாரிச்சது.

பிரச்சினைக்கு மிரளாத பொண்ணு எவ்வளவு பெரிய சந்தோஷம். எதுக்கெடுத்தாலும் அழுவாத பொண்ணு எவ்வளவு பெரிய நிம்மதி.

என் வேலை, நாலு விதமான ஆட்களுக்கு நடுவுல இருக்கே, நமக்கு துணையா இருக்கறவ கெட்டிக்காரியா இருந்தா நல்லா இருக்குமே. அப்படின்னு யோசிப்பேன்.

சரி, கிடைக்காட்டி என்ன? அவளுக்கு ஒரு நல்ல புருஷன் கிடைக்கட்டும். எனக்கும் அவள மாதிரி ஒரு நல்ல பொண்டாட்டி கிடைக்கட்டும்.

ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் செய்யறதுல பிரச்சினை இருக்கத்தான் செய்யுது. கல்யாணத்துக்கு அப்புறம் நல்லா இருந்தா போச்சு. இல்லைன்னா நாசம் பண்ணிடுவாங்க. நாசம் பண்றதுக்குன்னே அலைவாங்க.

என்னைக் கல்யாணம் பண்ணி சொந்த ஜாதிக் காரனுங்ககிட்ட திட்டு வாங்கறதவிட, சொந்த ஜாதிக் காரனை கல்யாணம் பண்ணி எங்கிட்ட ஆசீர்வாதம் வாங்கறது மேல்.

அவ எனக்கு வேணாம் ஆஞ்சநேயா. ஆனால், அவளை ஒரு நல்ல இடத்துல கல்யாணம் பண்ண வை." அவன் நாள் தவறாது ஆஞ்சநேயரை சுற்றினான். மனம் உருக வேண்டினான்.

யார் யாரையோ விரட்டி அவளுக்கு ஜாதகம் பார்த்தார்கள். நாலைந்து பேர் வந்து பெண் பார்த்தார்கள்.

"ரயில்வேயில வேலை. நாலாயிரத்து நானூறு சம்பளம். உருளைக்கிழங்கு, வெங்காயம், கருவாடு, அடுப்புக் கரி எல்லாம் இனாமா கிடைக்கும், சரக்கேத்துற இடத்துல எப்பப் போனாலும் எம்புள்ளையப் பார்க்கலாம்."

"என்னா கேட்கறீங்க."

"உங்களால எவ்வளவு முடிஞ்சதோ அவ்வளவு கொடுங்க."

அவர்கள் கடைசி வரை சொல்லவே இல்லை. சீர் செனத்தி பற்றி பேசவே இல்லை.

"எம்புள்ள குடித்தனம் பண்ண நல்ல பொண்ணு வேணும். அவளுக்கு அவன் செய்து போடுகிறான். மேல் வரும்படிய பொண்டாட்டிக்கின்னு திருப்பி விட்டான்னா ரெண்டு வருஷத்துல உடம்பெல்லாம் தங்கமா நிக்க மாட்டாளா? நீங்க போட்டாலும் சரி, போடாட்டியும் சரி. எங்களுக்கு ரெண்டும் ஒண்ணுதான்."

வீடு அவர்கள் பேச்சிற்கு மயங்கிப் போனது. அவளும் சரியென்று சொன்னாள்.

ஆனாலும் இருபது பவுன் போடுவதாக வீடு சொல்லிற்று.

ஆனால், நாள் நெருங்க நெருங்க அவர்கள் அதிகம் கேட்டார்கள். சென்னையில் இருந்து சேலத்திற்கு தனி பஸ் வேண்டும் என்றார்கள்.



மாப்பிள்ளையின் அக்காவிற்கும், அண்ணனுக்கும் தனி உடுப்புகள் எடுக்க வேண்டும் என்றார்கள்.

"ஸ்கூட்டர் கேட்டே ஆகணும்ங்கறாங்க. இவன், கேட்காதம்மா. வேணாங்கறான்." என்ன என்னவோ பேசினார்கள். அப்பாவிற்கு கொஞ்சம் கோபம் வந்தது.

"நீங்க பேசறது நல்லாயில்லையே."

சட்டென்று அடங்கிப் போனார்கள்.

ஏதோ ஒரு வேதனை அவளுக்கு வயிறு பிசைந்தது. மெஷினிற்கு மாவு அரைக்கப் போயிருந்த சித்தி பதட்டமாக ஓடிவந்தாள்.

"இவங்க அம்மாப்பேட்டையில பொண்ணு பார்த்திருக்காங்கடி. பாக்கு வெத்தலை மாத்துறபோது தடங்கலாயிருச்சாம். கல்யாணத்த கொஞ்சம் தள்ளி வச்சுக்கலாம்னு சொன்னபோது ரொம்பக் கோபப் பட்டாங்களாம். அப்புறம் சமாதானத்திற்கு மெட்ராஸ் போனா, அவங்களப்பத்தி அக்கம்பக்கத்துல நல்லதே சொல்லலையாம். அவன் ஏஜெண்டாம். ரயில்வேயிலேயே இல்லையாம். எனக்கு ஒண்ணும் புரியலடி."

"இப்ப என்ன சித்தி பண்றது?"

"எதுனாலும் செய்யணும்டி. உங்க அப்பா காதுல போடுவமா?"

"வேணாம். மகேஸ்வரனிடம் போய் சொல்லிவிட்டு வருவோம்."

"நீயா போய் சொல்லப் போற?"

"ஆமாம், நான் சொன்னாத்தான் நல்லாயிருக்கும்."

அவள் அனுமார் கோயில் போக அனுமதி பெற்று, விடியற்காலையில் அவனை அங்கு சந்தித்து சித்தியின் சந்தேகம் சொன்னாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அவன் சென்னைக்குப் பஸ் ஏறினான்.

அங்கிருந்த தனியார் துப்பறியும் நிறுவனத்தோடு கலந்து, மொத்த விவரமும் வாங்கினான்.

"அந்த ஆள் வன்னியரே இல்ல. அந்த ஆளுக்கு கல்யாணம் ஆயிருச்சு. பொண்டாட்டிய தள்ளி வச்சிருக்கான். அவனுக்கு ரயில்வே உத்தியோகம் கிடையாது. அங்கே சும்மா எடுபிடி மூட்டையைத் தூக்கற கூலியா சேர்த்துட்டு, லஞ்சம் வாங்கிக் கொடுக்கறதுக்காக ஏஜெண்டு மாதிரி பேசுவான். உலகத்துல உள்ள எல்லா கெட்ட பழக்கமும் இருக்கு. எதுனாலும் சொல்லி கல்யாணத்த நிறுத்திடுங்க. இல்ல உம் பொண்ண நீயே கெரஸின் வச்சு கொன்னுரு. எப்படியும் அவன் நெருப்பு வச்சு கொளுத்தப் போறான். அதுக்கு நீங்களே செய்துரலாம்." மறுபடி மறுபடி விசாரிக்க, நாற்றம் குடலைப் பிடுங்கியது. அவனைவிட ஒரு மோசமான வரன் இருக்க முடியாது என்று தோன்றியது. மகேஸ்வரன் வந்து அவள் சித்தியிடம் சொன்னான். அவள் சித்தி அவனை வீட்டில் வந்து சொல்லச் சொன்னாள்.

"நீ ஏன் போன? உன்னை யார் போகச் சொன்னது? அவனைப் பத்தி இல்லாத பொல்லாது சொல்றியே... அதுமாதிரிதான் எங்களப் பத்தி அங்க சொல்லுவ? நாங்க விசாரிச்சுக்கறோம். நீ வெளியே போ..." அவனை அவர்கள் வாசலுக்கு அனுப்பினார்கள். அவளது சித்தியை வீட்டை விட்டு வெளியிலே அனுப்பினார்கள்.

அந்த பையனுக்குஅவர்கள் விசாரித்தது தெரிந்து போயிற்று.

"யார் மகேஸ்வரன்?" என்று அவன் சேலத்திற்கு தேடி வந்தான்.



விடியற்காலையில் மகேஸ்வரன் கோயில் சுற்றப் போகும்போது மடக்கி வாயில் குத்தினான். வயிற்றில் எட்டி உதைத்தான். தலையில் போட்டு அடித்து, வாயில் சாராயம் ஊற்றினான்.

ஆஞ்சநேயர் கோயில் வாசலருகே இரண்டு காலி புட்டிகளை அடித்தான்.

கல்லால் ஆன அந்த தெய்வம், உள்ளே விழித்துக் கொண்டது.

மனிதர்களின் சாமர்த்தியங்கள் மிகச் சாதாரணம் என்பதை நினைவுபடுத்த எழுந்தது.

ஆனால், மகேஸ்வரனை ஊரார் வளைத்துக் கொண்டார்கள். என்ன நடந்தது என்று உலுக்கிக் கேட்டார்கள். அவனால் ஒன்றும் பேச முடியவில்லை.

ஊர் இரண்டு விதமாய் பேசியது.

# 4

'**கா**தலா? கூடவே கூடாது' என்று கூறும் காலம் தமிழ்நாட்டிலிருந்து போய்விட்டது. 'காதலிக்கலாம், தவறில்லை, என்று பேசும் காலம் வந்துவிட்டது. ஆனால், காதலிக்கத் தெரியாதவர்கள் அதிகம் பேர் இருக்கிற காரணத்தால் காதலிக்கிறவர்களைக் கண்டால் காதலிக்கத் தெரியாதவர்களுக்கு ஒரு பொறாமை ஏற்பட்டு விடுகிறது.

"அட... இவங்க ரெண்டு பேரும் லவ்வர்ஸா? இவங்க ரெண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் தொட்டுக்கு வாங்க இல்ல... ஒருத்தரையொருத்தர் விழுங்கற மாதிரி பார்த்துக்குவாங்க இல்ல... சினிமா பாட்டு கேட்டு உருகுவாங்க இல்ல..."

"நானும் ஒரு பார்ட்டி பிடிக்கணும்னு பார்க்கறேன். முடிய மாட்டேங்குதுப்பா... நம்மளப் பார்த்தாலே

பொண்ணுங்க ஓடுதுங்க. இவன்லாம் எப்படி மடக்கறான்னே தெரியலையே?"

ஒரு பத்து சதவிகிதம் ஆச்சரியப்படும்.

"லவ்வுங்கறதெல்லாம் ஒண்ணுமில்லம்மா. எல்லாம் கரென்ஸிதான். வெள்ளைச் சட்டைல தெரியறாப்பல ஒரு ரெண்டாயிரம் ரூபா முடிச்சு வச்சுக்க. அப்பமே உன்னை உத்துப் பார்ப்பாங்க."

"'இந்தப் புடவை உங்களுக்கு நல்லால்ல'ங்கற மாதிரி, தைரியமா பேசு. குமரன்ல ஒரு புடவை பார்த்தேன். ஆயிரத்து நானூறு ரூபா. யார் கட்டினாலும் சொக்க வைக்கும்னு சொல்லு. பொம்பளைங்க தானா மணி கேப்பாங்க. உன் பேர் கேப்பாங்க. பேசிப் பழகி ஒரு வாரத்துல ஒரு புடவை எடுத்து வுடு. கேட்டா என் பார்த்டே, உன் பர்த்டேனு எதுனா சொல்லு. இருநூறு ரூபா, முந்நூறு ரூபாய்க்கு விதவிதமா தோடு கிடைக்கும். பொய்க்கல்லு, பித்தளை திருகுன்னு சரக்கு மட்டமா இருந்தாலும், அட்டகாசமா இருக்கும். ஒரு ஆறு ஜதை வாங்கி வச்சுக்க, மேல் பாக்கெட்ல, பின் பாக்கெட்ல தனித்தனியா போட்டுக்க. ஒவ்வொண்ணா எடுத்து விடு, 'புடிச்சிருக்கா? புடிச்சிருக்கா?'ன்னு கேட்டு கேட்டு பரிசு குடு. மூணாவது தோடு எடுக்கறபோது, நேருக்கு நேர் பார்ப்பாங்க, நாலாவது தோடு எடுக்கும்போது, நெருங்கி வந்து உட்கார்ந்துக்குவாங்க. அஞ்சாவது போடும்போது நீ எங்க வேணா கை வைக்கலாம். ஆறாவது தோடு பரிசு கொடுத்தா நீ அழிச்சி நாசம் பண்ணலாம். பொம்பளைங்களைக் கவுக்கறது ஈஸி பிரதர். என்னா.. கொஞ்சம் காசு செலவாகும்.."

- காதலைக் கொச்சையாக்கி, கேவலமான வியாபாரமாக்கி பத்து சதவிகிதத்தினர் இப்படிப் பேசுவார்கள்.



காதல்ங்கிறது ஆரம்பத்துல நல்லாயிருக்கும் சார், வளர்த்து ஆளாக்கின அப்பா, அம்மாவை விட்டுட்டு புதுசா வந்த ஒரு பொண்ணுக்கு ஏதாவது மயக்கத்தில பிராமிஸ் பண்ணிடுவோம். அந்த பிராமிஸ் நம் வீட்டுக்கு ஒத்து வராது. ப்ராமிஸை கீப்-அப் பண்ணலேன்னா, அந்த லேடிகிட்ட நமக்கு மரியாதை இருக்காது.

எதுக்கு ப்ராப்ளம்? பெற்றோர்கள் யாரைச் சொல்றாங்களோ அவங்களை அந்த லேடியையே கல்யாணம் பண்ணிக்கலாம்.

அப்படி கல்யாணம் பண்ணிட்ட பிறகும் 'லவ் யூ'ன்னெல்லாம் சொல்லக்கூடாது. ஃபர்ஸ்ட் நைட்லயே சொல்லிடணும். 'எனக்குப் பிடித்தமா நடந்துக்கறதை விட, எங்கப்பாம்மாவுக்குப் பிடித்தமா நடந்துக்க. அதான் எனக்கும் நல்லது. உனக்கும் நல்லதுன்னு சொல்லிடணும்.

லவ்வுல்லாம் டேஞ்சரஸ் சார். வாழ்க்கையை நாசம் பண்ணிடும்.

முப்பது வயதாகியும் அம்மாவின் பால்குடி மறக்காத முட்டாள்கள் ஒரு பத்து சதவிகிதத்தினர் இப்படிப் பேசுவார்கள். பௌருஷம் என்கிற கம்பீர சால்வையைக் களைந்துவிட்டு, கல்யாணத்தன்றும் வெறும் கௌபீன தாரியாய் நிற்பார்கள்.

கோழைகளுக்கு வாழ்வுமில்லை. வாக்குமில்லை. உலகம் காதலைப் பற்றி பல நூறு விதமாய் அபிப்பிராயம் சொல்லிக் கொண்டுதான் இருக்கும்.

வாழ்க்கை அனுபவம் ஒருவருக்கு கிடைப்பது போல், மற்றவருக்கு கிடைப்பதில்லை, காதலால் வாழ்ந்தவரும் உண்டு. தீய்ந்தவர்களும் உண்டு.

"சும்மா அடிக்கலப்பா. சொல்லி சொல்லிதான் அடிச்சாங்க. 'என்னைப் பத்தி தப்பா அந்தப் பொண்ணு

கிட்ட சொன்னா, விட்ருவமா? உன்னைப் பத்தி நாங்க சொல்ல மாட்டமா? உனக்கு கிடைக்கணும்னுதான் என்னைப் போட்டுக கொடுத்த, உனக்குகிடைக்க நாங்க விட்டுருவமா? எனக்கு இல்லன்னா, உனக்கும் இல்ல. எங்களுக்கு கிடைக்காதது, வேற எவனுக்கும் கிடைக்கக் கூடாது. அந்தப் பெண்ணுக்கு கல்யாணம் ஆக விட்ருவமா' அப்படீன்னுதாங்க அடிச்சான்."

"இது ஏதோ லேடீஸ் மேட்டர்தான். இவரு 'பெப்பே'ன்னாரே தவிர, முறைப்பா சரியா பதில் சொல்லலை."

"அதெல்லாம் இல்லப்பா. இருட்டுல அடையாளம் தெரியாது. அடிச்சிருக்கான். ஆஞ்சநேயா, ஆஞ்சநேயா அப்படீன்னு தினம் முதல் ஆளா கோயில் சுத்துவாரு. இவரைப் போய் யாரு அடிப்பா? எனக்குத் தெரிஞ்சு இவரு எந்த லேடீஸ்கிட்டயும் பேசறதில்லை சார்."

"இல்லீங்க. இவருதான், தெருவுல இருக்கற ஒரு பொண்ணுகிட்ட பேசறாரு. நான் பார்த்திருக்கேன்."

"அட, எதுனா தகவல் சொல்லி தகவல் கேட்டிருப் பாரு. தப்பா சொல்லாத. நீ எந்த வீட்டுப் பொண்ணைச் சொல்ற- அந்தப் பொண்ணா.. அந்தப் பொண்ணா..? ஜாதி வேற போலிருக்கு. எப்படி பேச்சு வார்த்தைன்ற?"

"அந்த பொண்ணுக்கு நிச்சயமாயிடுச்சுப்பா. அது வெளியூர்ல வாழ்க்கைப்படப் போற பொண்ணு. தேவை யில்லாம பேசாதீங்க."

"அடிச்சவன் வெளியூர்க்காரன்தானா..." இதுல என்னவோ இருக்குதுப்பா...

ஒருவரின் துன்பம் ஊருக்கு சர்க்கரைப் பொங்கல். துன்பத்தில் உழல்பவரை ஊர், கரும்பு போல விரும்பித்



தின்னும், ஊரின் கடைவாயில் மாட்டாதிருப்பது, மிகப் பெரிய விஷயம். மகேஸ்வரன் மாட்டினான்.

"உனக்குப் பார்த்த வரனைப் பத்தி குத்தம் சொன்னானே... அந்த பேமானி ஆஞ்சநேயர் கோயில் வாசல்ல குடிச்சுட்டு உருண்டிட்டிருக்கான். காலி பாட்ல ரோட்டில் அடிச்சு ஒடைச்சு சுத்தறானாம். அந்தப் பையனை உங்களுக்குத் தெரியுமான்னு என்கிட்ட வந்து கேட்டாங்க. நான் சுத்தமா தெரியாதுன்னுட்டேன். நமக்கென்னத்துக்கு இந்த ரோதனை."

"ஏண்டி... அவன் கூட வழியில் நின்னு பேசினா யாமே? உன்னைப் போலத்தான் இருந்ததுன்னு சொன்னாங்க. அதனால விடறேன். நீதான்னு தெரிஞ்சது- உள்ளங்கால்ல கொள்ளிக்கட்டையால தேச்சுருவேன். எத்தினி அழகியா இருந்தாலும் நொண்டற பொண்ணை எவனுக்கும் புடிக்காது."

வீட்டை விட்டு விரட்டப்பட்ட சித்தி, வேறு ஒரு உறவினர் வீட்டில் தஞ்சமடைந்தாள். 'கண்ணுக்கு தெரிஞ்சு ஒரு பொண்ணு வாழ்க்கை பலியாகப் போவுது' என்று அங்கே புலம்பினாள்.

அந்த வீட்டில் அனுமதி வாங்கி மகேஸ்வரனோடு போய் பேசினாள்.

"உண்மையிலேயே அந்த ஆள் தப்பானவன்தானா?" என்று நேரடியாய் விசாரித்தாள். அவன் பார்த்த, கேட்ட விவரங்கள் சொன்னதும் பதறினாள்.

"ஐயோ.. என் குழந்தை தாங்காதே. ஒரு சொல்லு தாங்காதே. அவளைப் போய் வல்லடியா கல்யாணம் பண்ணி வைக்கிறாங்களே. குறுக்க விழுந்து எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்திடணும்."

அவள் பல்வேறு உறவுகளிடம் போய் சொல்லி, ஒவ்வொருவராய் தூதனுப்பி அந்தக் கல்யாணம் நடைபெறக் கூடாதென்று தடுத்தாள்.

அந்தச் சம்பந்தம் முறிந்தது.

அடுத்தபடி வேறொரு இடத்தில் பெண் கொடுக்க முயற்சித்தபோது அவர்களுக்கு மொட்டைக் கடுதாசு வந்தது; கெட்ட டெலிபோன் வந்தது.

கமலவல்லியின் அப்பாவுக்கும், சித்திக்கும் முடிச்சு போடப்பட்டது.

ஒன்றல்ல- மூன்று வரன்கள், பேச ஆரம்பித்ததும் தட்டிப் போயின. வீடு இடிந்து போனது. மனங்கள் குழம்பி தவித்தன. எல்லாவற்றிற்கும் அவன்தான் காரணம். அவனால்தான் வாழ்க்கை நாசமாயிற்று என்று சபித்தன.

சரி. விசாரிச்சதை பொறுப்பா, அமைதியா விசாரிச்சிருக்க வேண்டாமா? பொல்லாதவனை தூண்டி விட்டுட்ட. உனக்கென்ன போச்சு. இப்ப நாங்கயில்ல மாட்டிட்டிருக்கோம்? எங்க வீட்டுப் பொண்ணில்ல அவஸ்தைப் பட்டிட்டிருக்கு?

"இவ அவன் கூட பேசறாளாமே? அது நிஜம் தானாமே? ஏண்டி- நீ பேசினியா?"

நூற்று ஏழாவது தடவையாய் வீடு உலுக்கினபோது கமலவல்லி 'ஆமாம்' என்றாள்.

அவள் வீடு, உரக்கக் கூவி ரகளை செய்தது.

"என் பொண்ணு கல்யாணத்தை நிறுத்தினே இல்லை?.. உன் வியாபாரத்தை நிறுத்தறேன். உன்னைப் பத்தின அபிப்பிராயத்தை மாத்தறேன். உன்னை உண்டு இல்லைன்னு பண்ணிடறேன்."



அவள் அப்பா சபதம் செய்தார். அவள் ஓடிப்போய் இதை சித்தியிடம் சொன்னாள். சித்தி அவனை உஷார் படுத்தினாள்.

"ஏன் இதுக்கெல்லாம் பயப்படறீங்க? வீட்டை விட்டு என் கூட வரத் தயாரா? கமலவல்லிகிட்ட கேளுங்க. இதே ஊர்ல நாலு பேர் முன்னிலையில் நாலு பேர் கொண்டாட நான் கல்யாணம் கட்டறேன். உங்க எல்லாருக்கும் முன்னாடி, பிரமாதமா வாழ்ந்து காட்டறேன். அவளை என் கூட பேசச் சொல்லுங்க. கமலவல்லி 'சரி'ன்னு என் முன்னாடி சொல்லிட்டா, கல்யாணத்துக்கு நான் பொறுப்பு. அவளைக் கண் கலங்காம வாழ வைக்கிறது என் கடமை. என்னாலதானே கெட்டுப் போச்சு?.. என்னா லேயே சரியாகும்."

ஆனால், கமலவல்லியை நேருக்கு நேர் சந்திப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

சேலத்தில் சினிமா தியேட்டரும் இன்ஷூரன்ஸ் கம்பெனியும் அருகருகே இருந்தன. சிநேகிதிகளோடு சினிமா போவதாக சொல்லிவிட்டு அவள் இன்ஷூரன்ஸ் கம்பெனிக்குள் நுழைந்தாள். அவன் பேசுவதை அமைதியாக கேட்டாள்.

பிறகு சொன்னாள்: "நான் ரெடி! சேலத்துல கல்யாணம் முடிக்க முடியுமா? இங்க அடிதடி ரகளை ஆச்சுன்னா, உங்களை காப்பாத்த ஆள் இருக்கா? வெளியூர் போறதுல எனக்கு விருப்பமில்லை. இங்கேயே நம்ம ஊர்லயே நாம நிக்கணும்."

மகேஸ்வரன் மூன்று நாட்களில் பதில் சொல்வதாகச் சொன்னான். இரவும் பகலுமாய் யோசித்தான். சேலம் லாரி உரிமையாளர்களின் கோட்டை எனவே யாரோடு சண்டையிட்டானோ அவர் வீட்டு வாசலில்

போய் நின்றான். எவருடைய வேன் ஓவர்லோடு ஏற்றி மரத்தில் மோதி பெரும் நஷ்டமாயிற்றோ. அவர் எதிரே கைகூப்பினான்.

"என்னடா குடி கெடுத்தவனே?.." அவர் கோபமாய் சீறினார்.

அவன் தன்னிலை விளக்கம் அளித்தான்.

அந்த மனிதர் யோசித்தார். வந்து நின்றவன் பணிவைக் கவனித்தார்.

"அந்தப் பொண்ணு 'சரி'ன்னு சொல்லுதா? அது மேஜர்தானா..? எல்லாம் கேட்டார்."

"டக்குன்னு போட்டு கொடுத்தியே.. இப்ப மனுஷா தேவைப்படுதுல்ல.." கிண்டலாய் கேட்டார்.

"அது வேற.. இது வேற ஐயா. உங்களைத் தப்பா யாரோ வழிகாட்டியிருக்காங்க.

ரொம்ப சுலபமா முடிய வேண்டிய ஒரு விஷயத்தை, கூட வாங்கலாம்னு பொய் சொல்லி ஏமாத்தியிருக்காங்க. பத்து பேருக்கு நீங்க காசு கொடுத்துட்டு வண்டி ரிப்பேர் பண்ற காசுல அதை சரி செய்திருக்கலாம். ஒரு பத்து பேரை மட்டும் காமிச்சு, கூடுதலா க்ளெய்ம் வாங்கி அதைப் பகிர்ந்து கொடுத்திருக்கலாம். கம்பெனிய ஏமாத்தாம நல்லவிதமா க்ளெய்ம் செட்டில் செய்திருக்கலாம். இனிமே உங்க இன்ஷூரன்ஸ் விஷயத்தை என்கிட்ட விட்டுறங்க. நான் பார்த்துக்கறேன்."

"உன் கல்யாணத்தை நான் பார்த்துக்கறேன்" அவர் பதிலுக்கு உறுதியளித்தார்.

ஒரு விடியல் நேரத்தில் கமலவல்லி கிளம்பி நாமக்கல் குடவரைக் கோயிலுக்கு வர, பெருமாளுக்கு முன்னால் மகேஸ்வரன் தாலி கட்டினான்.



சென்னைக்கு பஸ் ஏறினான். அருகே நின்று திருமணம் முடித்தவர்கள், கமலவல்லியின் அப்பாவின் முன்னால் போய் நின்றவர்கள். தாங்கள் நடத்திய திருமணத்தை தெரிவித்தார்கள். அவரைச் சமாதானப் படுத்தினார்கள்.

லாரி உரிமையாளர்களும், இன்ஷூரன்ஸ் கம்பெனி மேனேஜர்களும், மகேஸ்வரனைப் பற்றி பல உறுதி மொழிகள் கொடுத்தார்கள்.

ஒரு வாரம் கழித்து மகேஸ்வரன் ஊருக்கு வந்தபோது ஊரும், கமலவல்லியின் வீடும் அவர்களை ஆரத்தி கரைத்து வரவேற்றது. கமலவல்லி சேலத்திலேயே தனிக்குடித்தனம் போனாள். மகேஸ்வரனை அந்த வீடு முழுமையாய் ஏற்க மூன்று வருடங்களாயின.

அதுவரை இரண்டு பேருமே எதையும் பெரிது படுத்தாமல் அமைதியாய் குடித்தனம் செய்தார்கள். சிக்கனமாய் வாழ்க்கை நடத்தினார்கள். ஜாதி சங்கங் களுக்குப் போகாமல், சேவை மையங்களுக்கு ஜோடியாய் போனார்கள்.

அவர்கள் வீடு அவளை முழுமையாய் ஏற்ற பிறகே, அவள் கர்ப்பம் தாங்கினாள். அவனை எங்கே முதன் முதலாய் நெருக்கமாய் பார்த்தாளே. அங்கே நிற்க வைத்து முத்தமிட்டாள்.

'நாம ஜெயிச்சுட்டமில்ல..?' என்று கேட்டாள்.

"இல்லை. ஜெயிக்கலை..' அவன் நிதானமாய் பதில் சொன்னான்.

"எங்க வீடு உங்களை ஏத்துக்கிச்சே.."

"உண்மைதான். ஆனா நீ ஏத்துக்குவியா? உன் வயத்துல இருக்கற குழந்தை ஆணோ, பெண்ணோ நாளைக்கு கல்யாணம்னு செய்துட்டு வந்து நின்னா,

ஏத்துக்குவியா? 'காதலிக்கிறேன்'னு சொன்னா. புரிஞ்சுக்குவியா? என்னிக்கு உன்னுடைய மகளுடைய லவ்வை நீ புரிஞ்சுக்கறயோ, அன்னிக்குதான் உனக்கு காதல் புரிஞ்சதுன்னு அர்த்தம். அன்னிக்குத்தான் நீ காதலை மதிக்கிறேன்னு அர்த்தம். இல்லேன்னா, நீயும் சினிமா லவ்வை மட்டும் ஆதரிக்கறவன்னு ஆயிடும். நாளைக்கு உனக்குப் பொண்ணு பொறந்தா, அவளை லவ் பண்ண விடுவியா? 'நான் லவ் பண்றேம்மா'ன்னா, 'யாரைடி?'ன்னு கேப்பியா.."

அவன் கேள்விக்கு அவள் யோசித்தாள்.

"யோசிக்கணும்" என்றாள்.

அவன் சிரித்தான்.

காதல் என்பதை முற்றிலும் புரிந்து கொண்டவர்கள் வெகு சிலரே, 'காதலித்தவர்கள் எல்லாம், காதலைப் புரிந்து கொண்டவர்கள்' என்று சொல்ல முடியாது. காதலில் ஜெயித்தவர்கள் காதலை நன்கு அறிந்தவர்கள் என்பது நிச்சயமில்லை.

ஆனால், காதல் உலகில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

# 5

"மேல நாலாவது சாரத்தில நிக்கிறாரே காக்கி பேண்ட், அவரையா நீ லவ் பண்றே? அவரு ஆர்ட்டிஸ்ட் இல்லடி.. போர்டு எழுதறவரு."

"போர்டு எழுதறவங்க வேற, ஓவியருங்க வேற. நீ 'ஓவியர்'னவுடன் நான் ஏதோ மணியம் செல்வன், ஜெயராஜ் மாதிரின்னு நினைச்சேன். போர்டு எழுதறதுல



வருமானம் ஒண்ணும் வராது. போர்டு எழுதறவங்களுக்கு டிராயிங் போடத் தெரியாது."

694753

"எவ்வளவு உயரத்துலே உயிரைக் கைல புடிச்சிக்கிட் வேலை செய்றாங்க பாரு. உடம்பெல்லாம் பெயிண்டும் தூசுமா மெக்கானிக் மாதிரி இருக்காரு. லவ் பண்ணது தான் பண்ணினே- ஒரு நல்ல ஆளை பண்ணக்கூடாது. ஒரு டீஸண்ட்டான வேலைல இருக்கற ஆளா பார்க்கக் கூடாது."

894.8113 BAL

"வேணாம். அந்தாளைக் கூப்பிடாத. உன்னைப் பார்த்து அந்தாள் எங்கன்னா காலை வெச்சு கட்டை சறுக்கி தலைகுப்புற விழுந்துட்டான்னா, என் பேர் ரிப்பேராயிடும்."

"அதெல்லாம் விட, ரொம்ப அழுக்கான ஆளுங்களோட நான் பேசறது இல்ல. அவங்களோட நான் பேசறபோதே எனக்கு குமட்டிட்டு வந்துரும். நீ நின்னு பேசிட்டு வா. நான் போறேன்."

வானதியின் அக்கா பூங்குழலி. சொல்லிவிட்டு ஓடியே போனாள்.

வானதி என்ன நினைத்தாளோ, கிட்டத்தட்ட அதுவே நடந்தது. பூங்குழலி எப்போதுமே இப்படித்தான் அலட்டலும் கூச்சலும் நிறைந்த பெண் அவள்- வினாடி நேரத்தில் முடிவு செய்து விடுவாள்.

'பார்த்தாலே பிடிக்கலை', 'பேசினா புரியலை', 'நிக்கறதே சரியில்லை', 'பாக்கறதே தப்பா இருக்கு' என்று பல்வேறு விதமாய் மிக வேகமாய் அபிப்பிராயங்களை இறுகப் பற்றிக் கொள்வார்கள்.

ஆனால், வானதி வேறு விதம். எது பற்றியும் ஆற அமர யோசிக்கும் விதம். உடனடியாக தீர்மானத்திற்கு வராத விதம்.

CPL 694753
PUBLIC LIBRARY

ஒரே குடும்பத்தில் இரண்டு வித வார்ப்புகள். இரண்டும் வெவ்வேறு விதமான வார்ப்புகள். "என்னால லவ்வுல்லாம் பண்ண முடியாது. நீங்க பார்த்து யாரை சொன்னாலும் கல்யாணம் பண்ணிக்கிறேன்." அக்கா நிலம் பார்த்து அப்பாவிடம் பேசினாள்.

அந்த வீட்டில் அப்படிப் பேச வேண்டிய அவசிய மில்லை. யாரும் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசிய மில்லை. வெட்கப்பட வேண்டிய தேவையில்லை.

வானதியும் பூங்குழலியும் வளர்ந்த வீடு இனிமையான வீடு. குளுமையான சூழல். அவர்களின் அப்பா படைப்பாளி. எட்டாவது படித்திருந்தாலும், இலக்கியம் தெரிந்த அறிவாளி. பொன்னியின் செல்வனில் மோகித்து அப்பா 'வானதி', 'பூங்குழலி' என்று பெயர் வைத்திருந்தார். சிறு வயதில் அவரும் எழுத முயற்சித்து முடியாது போய், படிப்பதும் பேசுவதும் மிகுந்த பொறுமையோடு நடந்து கொள்வதுமே இலக்கியத் தரமான வாழ்க்கை என்பதைப் புரிந்து கொண்டார்.

தர்ம நியாயத்தோடு நடக்க வேண்டும் என்பதே அந்த வீட்டின் விதி. அக்காவின் இந்த நாடகங்களெல்லாம் அப்பாவுக்கு ரசமானவை.

"உங்கக்கா, எங்கம்மா மாதிரி. எங்கம்மாவுக்கு எப்போதுமே டிராமா வேணும்; 'ஒ'ன்னு கத்தணும். எல்லோரும் இடது பக்கம் போனா, அவங்க வலது பக்கம் போகணும்.

நான் ஏதோ லவ் பண்ணா வெட்டிடுவேங்கிற மாதிரியும் அவ அதுக்கு பயந்துகிட்டு மாட்டேங்கிற மாதிரியும் வசனம் சொல்லிட்டுப் போறா, நீ பண்ணாலும் சந்தோஷம். பண்ணாட்டியும் சந்தோஷம். பொய் சொன்னாத்தான் வருத்தமாயிடும். நம்மகிட்ட வந்து ஏன்



பொய் சொல்றாங்க? என் குழந்தைகளே என்கிட்ட பொய் சொன்னா, நான் சரியில்லைன்னுதான் அர்த்தம், ஐம்பது வயசில என் குழந்தைகளே எனக்கு நெருக்கமா இல்லேன்னா, வேற யார் நெருக்கமா இருக்கப்போறாங்க வேற யார் உண்மையா இருக்கப்போறாங்க.. அப்படீன்னு வெட்கம்தான் வரும். ஆனா இதெல்லாம் சொன்னா, உங்கக்காவுக்குப் புரியாது. இன்னும் ஏதாவது உளறுவா. கூடுதலா டிராமா போடுவா.

இதுக்குக் காரணம் தனக்குத்தானே பேசிக்கறது தான். எப்பவும் தனக்குத்தானே பேசிக்கறவங்களுக்கு, எதிராளி பேசறபோது காது கேட்காது. தானே பேசறவங் களுக்கு மத்தவங்க பேசறது புரியாது.

இதுபத்தி அவளுக்கு நான் சொல்லிக் கொடுத்தேன். அவளுக்கு புரியலை. உனக்கு சொலலித் தரேன், கேளு. முதல்ல கேட்க கத்துக்கோ. எனக்கு காது நல்லா கேட்கு துன்னு பதில் சொல்லாதே. நான் சொல்றது கேக்கற முறை. என்ன சொல்றாங்கங்கிறதை மட்டுமே மனசுல வாங்கணும். கேட்கறபோதே நமக்கு ஒரு அபிப்பிராயம் வரும். அதை ஒதுக்கிட்டு நாம கேட்கணும்.

கேட்கறபோதே பார்க்கவும் கத்துக்கணும். பார்க்கற போதும் உள்ள அபிப்பிராயம் சொல்லாத இருக்கணும். கேட்ட பிறகு, பார்த்தபிறகு அபிப்பிராயம் வெச்சுக்கணும். இந்தா முழுசா கேட்கறது, பார்க்கறதுக்கு ஒரு கால அளவு இருக்கு. அந்த அளவு தெரிஞ்சு போச்சுன்னா அபிப் பிராயம் நிதானமா வரும். அந்த அபிப்பிராயம் நல்லா இருக்கும். அநேகமா தப்பு செய்யாது. இவ்வளவுதான் சொல்ல முடியும்.

நான் சொன்னதை நீ புரிஞ்சவிதமா வாழ்க்கைல போட்டுப் பார். புரிஞ்சிடும்."

- அப்பா உற்சாகமாகப் பலதும் சொல்லித் தருவார். அப்பா கொடுத்த இந்த மறைமுக உற்சாகம்தான் காதலிக்க வைத்தது.

அது மட்டும் காரணமில்லை. அக்கா நாணி கோணி 'நீங்க கல்யாணம் பண்ணி வைங்க' அப்படீன்னு சொல்லி, அப்பாவும், இங்கே அங்கே அலைஞ்சு கல்யாணம் பண்ணி வெச்சாரு. அந்தக் கல்யாணம் அவ்வளவு சந்தோஷமா இல்லை.

சந்தோஷமா இல்லைன்னு அக்கா சொல்றா. ஆனா அப்பாவும் அம்மாவும், 'அது ஒரு நல்ல வீடு, இவளுக்கு அனுசரிச்சுப் போகத் தெரியவில்லையே' என்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

“அந்த வீடு பரபரன்னு இருக்கிற வீடு. உங்கக்கா மாதிரி கற்பனையான பொண்ணுங்க, அங்க இருக்கறவங்களை எரிச்சல்படுத்திடுவாங்க.

யாராவது எரிச்சல்பட்டு சீறினா, உங்கக்கா இன்னும் கற்பனைக்கு போய்டுவா, கற்பனைக்கு போயிட்டாள்னா எதிரே இருக்கிறது ஆணா, பெண்ணான்னு அவளுக்குத் தெரியாது. ஒரு பொண்ணுகிட்ட இதுக்குமேல ஒரு அப்பன் பேச முடியாது. உங்கம்மா, பேசற ஜாதியில்லை. அதனால நீ பேசு. மெள்ள அவளுக்குப் புரிய வை.

ஆனா புரிஞ்சுக்கணும்னு ஆசைப்பட்டாதான் புரிஞ்சுக்க முடியும். உங்கக்கா காதலால புரிஞ்சுக்க முடியலை... பட்டுன்னு அறுத்துட்டு வந்துரு. உன் தலையெழுத்துப்படி இருக்குன்னு விட்டுட்டு வந்துரு.”

அப்பா சொல்ல... வானதி, பூங்குழலியிடம் பேச முயற்சித்தாள். வழக்கம் போல் அக்கா அவளைப் பார்த்தவுடன் அழுதாள்.



“ஒரே ஒரு உதவி செய்யறியா, வானதி? ஒருவேளை நான் செத்துட்டா, கபாலி கோயில்ல மோட்சதீபம் ஏத்திரும்மா.”

வானதிக்கு சிரிப்பு வந்தது. “ஏத்திடலாம். எண்ணெய் தீபமா, நெய் தீபமா, எலெக்ட்ரிசிடியான்னு சொல்லிடு.”

“ஏண்டி, யாருமே என்னைப் புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க.”

“நான் புரிஞ்சுக்கறேன். சொல்லு.”

“எங்க மாமியாருக்கு என்னை கண்டாலே புடிக்கலைடி.”

“ஏன்?”

“நான் எது செய்தாலும் குறை சொல்றாங்க.”

“ஏன்?”

“அவங்க இன்னும் பணக்காரப் பொண்ணாப் பாத்திருப்பாங்க போல. எதனாலேயோ அது தட்டிப் போயிடுச்சு போல. நாம அத்தினி செய்யலைன்னு ஒரு ஆதங்கம் போல அதனால படுத்தறாங்க.”

“அப்படியா சொல்றாங்க. அப்ப விடக்கூடாது கேட்டுரணும். நீங்க கேட்டது பண்ணியாச்சு. இன்னும் என்ன வேணும்னு கேட்டுரணும்.”

“ஐயோ கேட்காதே.”

“பின்ன என்னதான் முடிவு?”

“மோட்ச தீபம்தான் முடிவு.”

“இத்தினி செலவு பண்ணி உன்னைக் கட்டிக் கொடுத்தது நீ சாவறதுக்கா. நாங்க விடமாட்டோம்.”

“வேணாம் விட்டுருடி. உன்கிட்ட துட்டு இருக்கா? எனக்கு ஒரு மசால் தோசை வாங்கிக் கொடு. சாப்பிட்டு

எவ்வளவோ நாளாச்சு. மேற்கொண்டு இது பத்தி பேசாதே. என் தலையெழுத்துபடி நடக்கட்டும்."

அக்கா அறுத்துக்கொண்டதுபோல் தோசை சாப்பிட்டுவிட்டு ஓடுவாள்.

"முதல்ல எனக்கு புரியலை வானதி." அத்தான் தெளிவாகப் பேசினார். "அப்புறம்தான் தெரிஞ்சுது, இது டிராமா கேஸ்"ன்னு. நம்ம ஊர்ல நூத்துக்கு தொண்ணூறு பொண்ணுங்க, டிராமாதான். எதனாலேயோ அது அப்படி நடந்துடும். காரணம் சொல்ல முடியாது. உங்கக்கா, திருத்தமுடியாத கேஸ். அதனால அவ போக்குலயே விட்டுட்டேன். அவ மாதிரியே நானும் அவகிட்ட ஆரம்பிச்சுட்டேன்.

'எவ்வளவு அழகா இருக்க தெரியுமா, நீ? ரொம்ப நல்லா சமைக்கிறியே. நீ பக்கத்துல இருந்தா உலகமே மயங்குது' அப்படீன்னு நாலு பொங்கல் போட்டுடுவேன்.

உங்கக்காவுக்கு பொங்கல் வேணும். அள்ளி அள்ளி சாப்பிட்டுட்டு சும்மா இருந்துடும். ஆனா, எங்கம்மா இருப்பாங்களா அப்படி? அவங்க என்னைவிட வேகமானவங்க. 'ஒரு சினிமாவுக்குப் போகணும்னா. ஒரு பொம்பளை மூணு நிமிஷத்துல கிளம்பணும்'னுவாங்க 'அதிகபட்சம் அஞ்சு நிமிஷம்.'

முத பஸ் வரும்போதே அடுத்த பஸ்ஸு" வருதா, அது என்ன நம்பர் அப்படீன்னு பார்ப்பாங்க. 'தெருக்கோடியில வர்ற பஸ் பத்தியும் கவனம் வச்சுக்கணும்பாங்க. ஆட்டோல ஏறினா, நம்பர் பார்த்துக்குவாங்க. உள்ளே இருக்கும்போது டிரைவர் மூஞ்சியை பார்த்துக்குவாங்க.

இறங்கறபோது என்னா கொண்டு வந்தோம்னு பார்த்துக்குவாங்க. ரொம்ப உஷார் பொம்பளை.



இவளை ஸ்கூட்டர் பின்னாடி வெச்சுக்கிட்டு ஒரு வீடு தேடறேன்.

அட்ரஸ் கைல இருக்கு. ஆனா, வீடு சரியா புரிபடலை. இவ திடீர்னு என் முதுகைக் கிள்ளி, 'அங்க ஒரு குழந்தை பாருங்களேன். எவ்வளவு அழகா இருக்குது'ன்னா எனக்கு வெறுப்பாயிடுச்சு. சள்ளுன்னு திட்டிட்டேன். எந்த வீட்டுக்கு போனோமோ அந்த வீட்டுல உட்கார்ந்து விக்கி விக்கி அழுவுறா. அவங்க பதறிப் போயிட்டாங்க. எனக்கு ரொம்ப அசிங்கமா போயிடுச்சு.

அப்புறம் ரொம்ப யோசனை பண்ணி சரி- நமக்கு வாய்ச்சது அவ்வளவுதான். இவளுக்கு ஏத்த மாதிரி ஆடிட்டு போகணும்னு முடிவு பண்ணிட்டேன். இனிமே இவளையெல்லாம் மாத்த முடியாது. வானதி உனக்கு ஒரு நல்ல ஜோடி கிடைக்கணும். அதான் என் ஆசை. நீ ஒரு மக்கு. மண்ணாந்தைக்கிட்டே மாட்டிடக் கூடாது. எனக்குத் தெரிஞ்ச பசங்க இருந்தா சொல்லட்டுமா?

உனக்கு நல்லதா கல்யாணம் பண்ணி வச்ச புண்ணியம், அடுத்த ஜென்மத்திலயாவது நல்ல பொண்டாட்டியா எனக்கு அமையணும்.

சொல்லு. உனக்கு நான் மாப்பிள்ளை பார்க்கட்டுமா?"

"ஒரு வருஷம் கழிச்சுப் பாருங்க எனக்கு வேலை உறுதியாகட்டும் உங்களுக்கு யாராவது ஓவியர் தெரியுமா?"

'தெரியுமே. என் கடைக்கு அடுத்த கடை ஓவியம் வரையறவங்கதான். எதுக்கு கேட்கறே?"

"எங்க பள்ளிக்கூடத்துல வருஷாந்திர விழா நடத்தறோம். குழந்தைகளுக்கு தேசத் தலைவர்கள் பத்தி

சொல்லித் தரலாம்னு தோணுது. ஒரு பதினாறு படம் வச்சிருக்கேன். ரெண்டடிக்கு மூணடியா வரைஞ்சு தரணும்".

"அந்த வேலைங்கள்லாம் செய்வாங்களான்னு தெரியலையே, பெரிசு பெரிசால்ல வரையறாங்க. கேட்டுப் பார்க்கலாம். நாளைக்கு வா."

அவர்கள் போனபோது "சார், வெளி வேலைக்கு போயிருக்கிறார்" என்று சொன்னார்கள்.

அந்த ஓவியர் சாரைத் தேடிக் கொண்டு போன போது, அவர் நாற்பதடி உயரத்தில் இருந்தார்.

கலைந்த தலையும் கையெல்லாம் வர்ணமும் காக்கி பேண்ட்டும் வெள்ளை பனியனுமாய் கை கூப்பினார்.

"வாங்கண்ணே! என்ன சமாசாரம்?" கைகுவித்து வணக்கம் சொன்னார்.

"இவங்க என் மச்சினி..."

"தெரியுமே... பேர் வானதி." சிரித்தபடி சொன்னார்.

இருவரும் திகைத்தார்கள்.

"பேர் வித்தியாசமா இருக்கு இல்ல? உங்க கல்யாணத்துல இவங்களை நூறு பேர் நூறு தடவை கூப்பிட்டு கேட்டிருக்கேனில்ல? எப்படி மறக்க முடியும்."

"எனக்கு கல்யாணம் நடந்து ரெண்டு வருஷம் ஆச்சேப்பா."

"அதனால என்ன? உங்களைப் பார்க்கறபோது எனக்கு இவங்க ஞாபகம் வரத்தான் செய்யுது, நீங்க பக்கத்துக் கடை உங்களை தினம் பார்க்கிறேன். உங்களைப் பார்க்கிறபோதெல்லாம் வானதின்னு ஒரு பேர் வரதை மறக்கமுடியலையே. வானதி யாரு... சாமானியப்பட்டவங்களா? பெரிய ராணியில்லையா?... ராணி பேரை மறக்க முடியுங்களா? என்னா வேணும் சொல்லுங்க?"



வானதி தயங்கித் தயங்கி சொல்ல...

"நாளைக்கு காலைலே பதினாறு படமும் வாங்கிக்கங்க."

"ஒரே நாள்ல முடிஞ்சிருங்களா?"

"வியாபாரமா இருந்தா பத்துநாள் இழுத்தடிப்பேன். இது உதவி. ஒரே நாளில் செய்துடலாம்."

"இல்லீங்க, இதுக்கு காசு கொடுத்துடுவோம்."

"அப்படியா... அப்ப வேற எங்கேயாவது செய்துக்குங்க." வானதி அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்.

"ஆயிரம் குழந்தைங்க படிக்கிற இடத்தில, என் படத்து மூலமா பசங்க கத்துக்கப் போவுது. இதுக்கு நான் காசு வாங்க முடியுமா? தரேன்னு சொல்றது ஒரு மரியாதை, வேணாம்னு சொல்றது இன்னொரு மரியாதை. வற்புறுத்தாதீங்க. நாளைக்கு வந்து படம் வாங்கிக்கங்க. இன்னிக்கு சாயந்திரத்துக்குள்ள இந்த போர்டு முடிக்கணும். நான் வரட்டுமா."

அவன் மறுபடியும் உச்சியில ஏறியபோது அவனை வியப்போடு பார்த்தாள்.

வியப்புதான் காதலின் ஆரம்பம்.

## 6

பதினாறு படங்களும் அப்பழுக்கின்றி இருந்தன. க்ரேயான் கட்டியில் வேகமான கோடுகளோடு கறுப்பு வெளுப்பில் தலைவர்கள் படங்கள் மின்னின.

"ஒரு ஓவியத்தை அப்படிப் பார்க்கக் கூடாது." அவன் அந்தப் படத்தை அவளிடமிருந்து மெல்ல வாங்கினான்.

அட்டையில் ஒட்டி, அவளைத் தொலைவே நிற்க வைத்துப் பார்க்கச் சொன்னான். இப்போது கோடுகள்

கண்ணுக்குத் தெரியவில்லை. ஒரு அசாதாரண முகபாவம் அந்தப் படங்களில் தென்பட்டது.

மகாத்மா காந்தியின் பொக்கை வாய்ச் சிரிப்பும், ஜவஹர்லால் நேருவின் தீவிரமான யோசனையும், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் தொலைதூர பார்வையும், வல்லபாய் பட்டேலின் இரும்பு முகமும் அற்புதமாய் அமைந்திருந்தன.

"ரொம்ப நல்லா இருக்கு. ரொம்ப நல்லாயிருக்கு." அவள் பள்ளிக்கூடம் குதித்தது.

"ஒரு ஓவியத்தை அப்படிப் பார்க்கக் கூடாது." வானதி தமிழ் பண்டிட்டிடம் இருந்து படத்தை மெல்ல வாங்கினாள். ஒரு காலண்டரில் ஜெம் கிளிப்பால் இணைத்து தொங்கவிட்டாள்.

"ஐயோ... அச்சா காந்தி மாதிரியே இருக்கு." ஆசிரியைகள் குழந்தைகள் போல் பரவசப்பட்டார்கள்.

"பதினாறு படங்களா? நிறைய துட்டு செலவாகியிருக்குமே" தலைமை ஆசிரியை பயந்தாள்.

"அது பரவாயில்லை மேடம்." வானதி நாணிக் கோணினாள்.

"ஒரு படத்துக்கு சர்தாரண் லேமினேஷன் பண்ண என்ன ஆவும்னு கேளு. இருபது முப்பது ரூபா சொல்வான். பசங்ககிட்ட ஆளுக்கு எட்டணா கலெக்ட் பண்ணி ஒவ்வொரு கிளாஸில ஒவ்வொரு படம் மாட்டிடு. இப்பவே செய்.

நீ சின்னப் பொண்ணு. நீ மட்டும் செய்யாதே. கூட ரெண்டு பெரிய டீச்சரைக் கூப்பிட்டுக்க."

பெரிய டீச்சர்கள் ஆட்டோவில் அவளோடு பயணப்பட்டு லேமினேட் பண்ண வந்தார்கள். போகும் போதும், வரும்போதும், 'யார் வரைந்தது?', 'எங்கிருக்கிறார்கள்?', 'எப்படி தெரியும்?' என்றெல்லாம் கேட்டார்கள்.



வானதி வெகுளி. தனக்கு பாராட்டு கிடைத்த சந்தோஷத்தில். தான் செய்த காரியம் சரியாக வந்துவிட்டது என்கிற ஆனந்தத்தில். இரண்டு டீச்சர்களிடமும் சகலமும் சொன்னாள்.

இரண்டு டீச்சர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"மகாத்மா காந்தி நமது தேசத்தந்தை எனப்படுவார், அவர்தான் நமது இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார்."

குழந்தைகள் படத்துக்குப் படம் நின்று ஒப்பிக்க, பள்ளிக்கூட கலைவிழா கனஜோராய் நடந்து முடிந்தது. வேறு எதுவுமே அந்தப் பொருட்காட்சியில் சரியாக இல்லை, அந்தப் படங்கள் மட்டுமே அனைவரது கவனத்தையும் ஈர்த்தன.

விழா நடந்து ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு படம் என்று மாட்டப்பட்ட போது குழந்தைகள் கை தட்டி வரவேற்றார்கள்.

வானதி ஒரு நிறைவில் திக்குமுக்காடினாள். ஒரு செப்புக்காசு கூட வாங்காமல் அந்த ஓவியர் செய்த உதவி, மிகப் பெரிய நன்றியை அவளுக்குள் கவிழ்த்தது.

"அவர் காசு வாங்காமல் இருக்கலாம், நாம கொடுக்காம இருக்கலாமா? நாம ஏதாவது கொடுக்கணும். என்ன கொடுக்கறது?"

"பெயிண்ட்டா, பிரஷ்ஷா?"

"இதெல்லாம் அவங்ககிட்டேயே இருக்கும்."

"ஓவியம் வரைவது எப்படி புஸ்தகம் வாங்கலாமா?"

"ச்சீ - பைத்தியமா புடிச்சிருக்கு உனக்கு?"

"சட்டைத் துணி, பேண்ட் வாங்கலாமா?"

"யார், யாருக்கு சட்டை வாங்கறது? அதெல்லாம் நல்லா இருக்காது. புஸ்தகம் வாங்கலாம். அதான் மரியாதை, அதான் கம்பீரம்."

"ரொம்ப நாள் வச்சுக்கற மாதிரி என்ன புஸ்தகம் இருக்கு சத்திய சோதனையா?"

"அவங்களுக்கு புடிக்குமோ, புடிக்காதோ."

'அவள் நாலைந்து கடைகளில் ஏறி இறங்கி 'தெய்வத்தின் குரல்' முதல் பாகம் வாங்கினாள்.

ஒரு சனிக்கிழமை பிற்பகலில் அக்காள் கணவரின் கடை தேடிப் போனாள்.

"வா.. வானதி.." அக்காள் கணவர் தியாகராஜன் முகம் தாமரையாய் மலர்ந்தது.

"என்னம்மா. இவ்வளவு தூரம்?"

"அவருக்கு எதுனா ப்ரஸண்ட் பண்ணலாம்னு இந்த புஸ்தகம் வாங்கினேன்."

"எதுக்கு வானதி இவ்வளவு சிரமம்?"

"தப்புங்களா அத்தான்?"

"தப்பே இல்லை. இது நியாயம். ஆனா, அந்தாள் சுருக்குன்னுடுவான்."

"ஏன் அப்படி?"

"ரொம்ப நல்ல மனுஷன். ஆனா, எப்பவாவது வேதாளம் முருங்கை மரம் ஏறிக்கும்."

"திரும்பி எடுத்துட்டுப் போயிடுன்றீங்களா?" தயங்கினாள்.

"அவரு கடைலேயே கொடுத்துட்டுப் போயிடு. அந்தாள் எங்கேயோ வெளியூர் போயிருக்காப்ல. வந்து



பார்த்துக்கட்டும். அப்படி ஏதாவது வேணாம்னா, புஸ்தகத்தை நான் வாங்கிக்கறேன்."

"நான் எப்ப வரட்டும்?"

"எதுக்கு?"

"அவரு புஸ்தகம் வாங்கினாரா, வாங்கலையான்னு தெரிய வேணாமா?"

"எங்கிருந்தாவது கடைக்கு போன் பண்ணு. நான் சொல்றேன்."

ஆனால், அக்காள் புருஷன் தியாகராஜனுக்கு போன் செய்ய தயக்கமாக இருந்தது.

என்னதான் நல்லவராக இருந்தாலும் ஒரு அந்நிய ஆண் பற்றி, உறவான அவரிடம் அதிகம் விசாரிக்க முடியவில்லை. அதேசமயம், அந்த புத்தகத்தை அந்த ஓவியர் ரகுநந்தன் வாங்கிக்கொண்டாரா என்றும் தெரியவில்லை.

இடைவிடாது அந்த ரகுநந்தனின் முகமே வானதியின் மனதுக்குள் மிதந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு வகுப்பறையைக் கடக்கும்போதும் அந்தப் படங்கள் ரகுநந்தனை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தன.

ஒரு நாள் பள்ளிக்கூடம் விட்டு பஸ்ஸில் நசுங்கி களைப்போடு வீடு வந்து சேர்ந்தபோது, ரகுநந்தன் வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பாவோடு பேசிக் கொண்டிருந்தான்.

"வாங்க. நாம மானசரோவரும், கைலாஷும் போவோம். வயசெல்லாம் மேட்டரே இல்லை. இப்ப ரொம்ப தூரம் நடக்க வேண்டிய அவசியமும் இல்லை. டிராக்டர் மாதிரி ஒரு வினோதமான வண்டில ஏத்திட்டு போறாங்க. பார்க்கவேண்டிய இடங்க. மனசு அப்படியே

திகைச்சு நின்னுடுது. இப்ப உங்ககிட்ட சொல்றபோது கூட, முழுசா அந்த மலையை அனுபவிக்கிறேன்."

அவள் உள்ளே நுழைந்ததும், பேச்சை நிறுத்திவிட்டு எழுந்து கை கூப்பினான்.

அவள் பயந்தாள். என்னதென்று தெரியாமல் உள்ளே ஒரு நடுக்கம் ஓடியது.

"வாம்மா... ரகுநந்தன் உனக்கு நன்றி சொல்ல வந்திருக்கார் 'தெய்வத்தின் குரல்' வாங்கணும்னு நினைச்சிகிட்டே மெட்ராஸ் திரும்பினாராம். கடைல பார்த்ததும் ஆடிப் போயிட்டாராம்."

"அது ஒண்ணுமில்லீங்க. ஒரு பத்து வருஷம் முன்னாடி பெரியவரு படம் வரைஞ்சு அந்த மடத்து ஹால்ல மாட்டினேன். ஓவியருங்களுக்கெல்லாம், வயசான வங்க படம் வரையறதுக்கு ஆசை இருக்கும். வயசானவங்க படம் வரையறது கஷ்டம். பரமாச்சார்யார் வயசானவர் மட்டுமில்லை. நடமாடற தெய்வம். அவரு முகத்துல, ஒரு கூர்மை வேற இருக்கும். உத்துப் பார்த்தா, இருதயத்துக் கடைசி ஆழம் வரை அவர் பார்வை போகும். அந்தப் பார்வையோட அவரு படம் வரையணும்னு ஆசைப்பட்டு வரைஞ்சேன். எல்லோரும் ரொம்ப நல்லாருக்குன்னாங்க. 'எனக்குக் கொடு, உனக்குக் கொடு'ன்னாங்க. முதப் படத்தை விலை பேச வேண்டாமேன்னு கொண்டு போய் மாட்டிட்டேன்.

நான் மாட்டின பத்தாவது நிமிஷம் அந்தப் பக்கமா வந்து அந்தப் படத்தை உத்துப் பார்த்து சிரிச்சுட்டு நகர்ந்துட்டாரு. கழுத்து நிறைய தங்க நகை போட்ட மாதிரி ஆயிப்போச்சு எனக்கு.

இனி பிரஷ்தான் வாழ்க்கைன்னு அன்னிக்கு முடிவு பண்ணினேன். ஆனா, அவரைப் பத்தி ஒண்ணுமே



தெரியாது எனக்கு. இந்தப் புத்தகம் இருக்கிறது தெரியும். ஆனா, வாங்க வணங்காது.

புத்தக கண்காட்சில ஒரு போர்டு எழுதி மாட்டிட்டு வர்றபோது, இந்தப் புஸ்தகத்தை காசு கொடுத்து வாங்கினேன். 'போர்டு சரியா மாட்டலை'ன்னான். இதைக் கீழ வச்சுட்டு போர்டு சரியா மாட்டறதுக்குள்ள, எவனோ புஸ்தகத்தை எடுத்துட்டுப் போயிட்டான். கொஞ்சம் வெறுப்பாயிடுச்சு.

மறுபடி படிக்கணும்னு நினைப்பு வந்தப்ப, என் கடை டேபிள்ல இருந்தது. நீங்க கொண்டாந்து கொடுத்ததா தியாகராஜன் சொன்னாரு. ரெண்டு அத்தியாயம் படிச்சுட்டேன். நன்றி சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்.

உங்க ஐயாவோட பேச ஆரம்பிச்சு, பேச்சு எங்கேயோ இழுத்துட்டுப் போயிடுச்சு. உங்க பரிசு எனக்கு ரொம்ப சந்தோஷம், நாம எதை நினைக்கிறோமோ, அந்தப் பொருள் நமக்குப் பரிசா கிடைக்கறது ரொம்ப விசேஷம்னு நான் நினைக்கிறேன். உங்க பள்ளிக் கூடத்துக்கு டிராயிங் சம்பந்தமா என்ன உதவி வேணும் னாலும் இலவசமா பண்ணித் தரேன்.

அப்ப நான் வரட்டுங்களா?"

அவன் கைகூப்பி விடைபெற்றுப் போனான். ஓடத்தில் ஆற்றைக் கடக்கும்போது மழை பெய்து நின்றது போல், அவளால் வெறுமே திகைக்க மட்டுமே முடிந்தது. ஆனால், இதெல்லாம், காதல் என்ற வட்டத்துக்குள் விழாத விஷயமாக இருந்தது.

அவன், மனம் கவர்ந்தவனாக இருந்தான். ஆனால், காதலிக்க உகந்தவனா என்று தெரியாமல் இருந்தது.

"வானதி..." அக்காவின் புருஷன் தியாகராஜன் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியே வரும்போது, மோட்டார் சைக்கிளை நிறுத்திக் கூப்பிட்டார்.

"கொஞ்சம் கடை வரைக்கும் வாடா கண்ணு."

"என்ன அத்தான் திடீர்னு"

"ரகு உன்னைப் புடிச்சிருக்குன்றான். 'வானதி என்னைக் கல்யாணம் பண்ணிக்குமான்னு கேட்டு சொல்லுங்க'ன்றான். பெங்களூர் பக்கம் போர்டு வேலைக்கு போயிருக்கான். வா.. கடைக்குப் போய் பேசலாம்."

"நான் என்ன அத்தான் பேசப் போறேன். அப்பா அம்மா மீறி நான் ஒண்ணும் சொல்லமுடியாதே."

"உனக்குப் பிடித்திருந்தா, அவங்க வீட்டுலேர்ந்து கூட்டிட்டு வந்து பேசறேன்றான்."

"நீங்க என்ன சொல்றீங்க, அத்தான்?"

"ரொம்ப நல்ல பையன்மா, உன்னை மாதிரி பொண்ணு கிடைச்சா, உற்சாகமா மேல வருவான்."

"அப்ப நீங்களே முறைப்படி பேசுங்களேன்."

"நீங்க பேசிக்க வேண்டாமா?"

"வேணாம் அத்தான். அப்படி நான் என்ன பேசப் போறேன்."

"ரகு பேசணும்னான்?"

"அதுவும் வேணாம்னுதான் நினைக்கிறேன். ரொம்ப அவசியம்னா, உங்க கடைல உட்கார்ந்து பேசலாம்."

"ஏன் வானதி பயப்படறே?"

"பெரிசா சிக்கலில்லாம கல்யாணம் முடியணுமேன்னுதான்.."

"சரி, ஒருவேளை அவன் ஆசைப்பட்டாலும், 'வேணாம். நல்லாயிருக்காது'ன்னு சொல்லிடட்டுமா?"

"ஆமா அத்தான். அதான் நல்லது. என்னால அப்பாவோ, அம்மாவோ கலவரப்பட வேணாம். நீங்க நின்று பேசி முடிங்க, அவரை எனக்கு முன்னாடியே



தெரியும். பேசிப் பழக்கம். ஆனாலும், இது அரேன்ஜ்டு மேரேஜாவே இருக்கட்டும். அத்தான், உங்களுக்கு ஒண்ணும் வருத்தமில்லையே?"

"ச்சே... ச்சே... எனக்கு ஒரு வருத்தமும் இல்லை வானதி. உனக்கு ஒரு நல்ல இடம் அமையுது. அதுவும் என்னால அமையுதுன்றதுல, எனக்கு சந்தோஷம். கல்யாணம் முடியற வரையில எனக்கு கவலையாக இருக்கும். ஒரு கல்யாணத்துக்குத் தடை எந்த உருவில் வரும். யாரால் வரும்னு சொல்லமுடியாது."

உற்சாக மிகுதியில் தியாகராஜன் பூங்குழலியுடன் இதைப் பற்றிப் பேசிவிட, பூங்குழலி சட்டென்று பொறாமைப்பட்டாள்.

'அவளுக்கு ஓவியரா? எனக்கு மட்டும் எலெக்ட்ரிக் கடைக்காரனா? ஏன்... எங்களுக்கு ஒரு நடிகரைக் கல்யாணம் பண்ணி வெச்சா, நாங்க குடித்தனம் பண்ண மாட்டோமா? ஒரு பாட்டு பாடறவரோட சேர்ந்து வாழ மாட்டோமா.

அவரு படம் வரைஞ்சு பள்ளிக்கூடத்துக்குக் கொடுத்தாராம்; இந்தம்மா பரமாச்சார்யார் புஸ்தகம் கொடுத்தாங்களாம். கேட்டா, லவ் இல்லையாம்; அரேன்ஜ்ட் மேரேஜாம். லவ்வன்னா சீர் குறைச்சிருவாங்களோன்னு, திட்டம் போட்டு பெண் பார்க்க வர்றீங்களா? இதுக்கு எங்க வீட்டுக்காரர் உள்கையா?

மச்சினி மேல காட்டற கரிசனத்தை எம்மேல காட்டினா என்ன? என்னைப் பைத்தியம், ரெண்டாங் கெட்டான்னுதான் கூப்பிடறே? நான் எது செய்தாலும் எடக்கு மடக்காதானப் பேசறே? எனக்குப் புடிக்கலை. எனக்கு என் புருஷனைப் புடிக்கலை. இந்தக் கல்யாணம் நடக்கறது புடிக்கலை.'

கூனிக்கு ராமனின் அம்பு முதுகில் பட்டது கோப மில்லை, அதற்காகப் பழிவாங்கவில்லை. அது ஒரு சாக்கு. கூனியின் இயல்பு. பொறாமை. யார் சந்தோஷமாகச் சிரித்தாலும் 'ஐய-சிரிப்பைப் பாரு' என்கிற ஆத்திரம். யார் அழகாக இருந்தாலும், 'இத்தினி அழகா இருக்காளே. இவ கெட்டுப் போனவளா இருப்பாளோ?' என்று யோசிக்கிற வக்கிரம்.

இந்த மனக்கோணல் மிகச் சிறு வயதிலேயே துவங்கியிருக்க வேண்டும். அப்படித் துவங்கியதும் ஒரு விபத்தாயிருக்க வேண்டும். மன விகாரங்களில் இருந்து மீள எல்லோருக்கும் தெரிவதே இல்லை. மாறாய் விலக்கவே முடியாத அளவுக்கு வளர்த்துக் கொண்டு விடுகிறார்கள்.

வானதி, பூங்குழலியைவிட அழகு. வானதி, பூங்குழலியைவிட படிப்பில் கெட்டி. வானதி, பூங்குழலியைவிட சாமர்த்தியம். வானதி, பூங்குழலியைவிட பொறுமை. வானதி, பூங்குழலியின் புருஷனுக்குப் பிடித்த பெண். இயல்பாகவே பொறாமை கொண்ட பூங்குழலிக்கு, இந்தக் காரணங்கள் அந்தப் பொறாமையை வளர்க்கப் போதுமானவைகளாய் இருந்தன.

அவள் இரவு மல்லாக்கப் படுத்துக்கொண்டு யோசிக்கத் துவங்கினாள்.

மொட்டைக் கடிதம் எண்ணம்தான் அவளுக்கு முதலில் வந்தது. அதுதான் நிச்சயமான ஆயுதம், எளிதான அணுகுண்டு.

பூங்குழலி தான் ஏன் இதைச் செய்கிறோம் என்று கேட்டுக் கொள்ளவேயில்லை.



# 7

**ஆ**த்திரம் ஏன் அஞ்சத் தக்கது தெரியுமா?- அது அழிவைத் தருவது.

ஆத்திரம் ஏன் விபரீத முடிவுகளைக் கொடுக்கிறது தெரியுமா- அது பார்வையற்றது.

ஆத்திரத்தை ஏன் கைவிட வேண்டும் தெரியுமா?- அது பிடியற்ற வாள். வீசியவனையே வெட்டிச் சாய்க்கும் ஆயுதம்.

பூங்குழலியின் மனம் சுறுசுறுப்பாகியது. 'தங்கையைப் பற்றிய மொட்டைக் கடிதம் யாருக்கு எழுத வேண்டும், என்ன எழுத வேண்டும்?' என்று விரைவாய் கணக்குப் போட்டது.

ஒரு மொட்டைக் கடுதாசி எழுதினால் பத்து பேராவது படிக்க வேண்டும். எங்கே எழுதினால் படிப்பார்கள்? யாருக்கு அனுப்பினால் நன்கு பரவும்?

பூங்குழலி ஒரு தபால் கார்டு வாங்கினாள். பச்சை இங்க் பால்பாயிண்ட் வாங்கினாள். அந்த ஓவியனின் கடை விலாசத்திற்கு எழுதிப் போட்டாள்.

'அன்புடையீர்! நீங்கள் நேசிக்கும் பெண் நல்ல குணம் உடையவள் அல்ல. அவள் ஏற்கெனவே ஒருவனை காதல் செய்தவள். அவனோடு சினிமா, டிராமா என்று ஜல்சா செய்தவள். மோசமான நடத்தை உடையவள். அவளைக் காதலித்து ஏமாற வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன். குடும்பப்பாங்கான பெண்கள் எத்தனையோ பேர் இருக்க, ஒரு குடி கேடியை நம்ப வேண்டாம். உங்கள் நலம் நாடும், உண்மை விரும்பி'

பச்சை இங்க் போஸ்ட் கார்டு தினம் ஒன்றாக வெவ்வேறு இடத்திலிருந்து அனுப்பினாள்.

அந்த அஞ்சலட்டை மொட்டைக் கடிதாசி எல்லோராலும் படிக்கப்பட்டது. அந்தக் கடையில் வேலை செய்த, பெருக்குகிற பெண் உள்பட விஷயம் தெரிந்தது.

ரகுநந்தன், திகைத்துப் போனான். உலகம் பொறாமை மிக்கது என்று அவனுக்குத் தெரியும். எனவே புறக்கணித்தான்.

ஆனால், தொடர்ந்து ஏழு கடிதங்கள் வந்தபோது எழுதுவது யார் என்று கண்டுபிடிக்க ஆசைப்பட்டான். அதை வானதியின் அக்காள் புருஷனிடம் காட்டினான்.

தியாகராஜனுக்கு குழப்பமாக இருந்தது.

வானதி என்கிற அருமையான பெண்ணுக்கு யார் இப்படி ஒரு துரோகத்தைச் செய்ய முடியும்?

"எனக்குப் புரியுது தியாகராஜன். எனக்குத் தெரிஞ்சு மொட்டைக் கடிதாசு ஒரு நல்ல குவாலிஃபிகேஷன். சரக்கு இல்லாத ஆள்கிட்ட இந்த மாதிரி சங்கடங்கள் வராது. நல்லவங்க மேலதான் அவதூறு வரும்.

எவனோ ஒரு தகுதியில்லாத சோம்பேறி தனக்கு வேணும்னு ஆசைப்பட்டிருக்கான். கிடைக்காதுன்னு தெரிஞ்சவுடனே அசிங்கம் பண்றான்.

ஏழு லெட்டர் வந்திருச்சு, தியாகராஜன். இந்த சோம்பேறி வேற ஏதாவது பண்றதுக்கு முன்ன, நாம பிடிக்க வேண்டாமா?"

"வானதிக்கு தெரிஞ்சா ஆடிப்போயிடுவா. வேற எந்த வேலையும் செய்யாம இதிலேயே மாட்டி தவிச்சுப் போயிடுவா."

"வேணாம். சொல்ல வேணாம். எனக்கு உங்க மச்சினி மேல கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. இதைவிட பெரிசா ஏதாவது தீம்பு பண்ணிடப் போறாங்களேன்னுதான் கவலையா இருக்கு."



"அதனாலதான் சொல்றேன். வானதி ஜாக்கிரதையா இருக்கணும். தன்னைச் சுத்தி இருக்கிறவங்க யாருன்னு உத்துப் பார்க்கணும். சொல்லிடறது பெட்டர்."

"வேணாம், தியாகராஜன்."

"தடுக்காதீங்க ரகு. நான் ரொம்ப மனப்பூர்வமா வானதி நல்லா இருக்கணும்னு நினைச்சு இந்த சம்பந்தம் ஏற்படுத்தியிருக்கேன். உங்களைப் பத்தி நல்லா தெரிஞ்சு நீங்க அவளுக்கு புருஷனா வரணும்னு ஆசைப்பட்டிருக்கேன். அவ வேலை செய்யற இடத்திலயோ, வீட்டுப் பக்கத்திலேயோ அவளை யாரும் விரும்பறதுக்கு வாய்ப்பு உண்டு."

"எப்படிச் சொல்றீங்க?"

"பத்து நிமிஷம் பழகினாப் போதும். அவமேல வச்ச கண்ணை மாத்த முடியாது. ஒருநாள் பழகினாப்போதும், அவளை நினைக்காம இருக்க முடியாது. பழகினவங்க மேல ரொம்ப அக்கறை இருக்கற பெண். எம்மேல அதுக்கு உசிரு.

நான் உள்ள நுழைஞ்ச உடனே சில்லுனு ஒரு டம்ளர் தண்ணி எடுத்தாந்துரும். இந்த விஷயத்தையும் பொண்டாட்டிக்கிட்ட நூறு தடவை சொல்லியிருக்கேன். வெளியே கிளம்பும்போது தண்ணி கொடு, உள்ளே நுழைஞ்சதும் குடிக்கத் தண்ணி கொடுன்னு சொல்லியிருக்கேன், அந்த பொம்பளைக்கு அறிவே இல்லை. புருஷன்கிற மரியாதையே இல்லை.

மாடு மாதிரி எகிறி எகிறிப் பேசுமே தவிர, பிரியமே இல்லை. வானதி பிரியம் இருக்கிற பெண். சிலசமயம் அது பிரியத்துல, மனசு அப்படியே நெக்குவிட்டுப் போயிடும். அவளைப் போய் ஒருத்தன் தூஷணையாச் சொன்னா அவன் நல்லா இருக்க மாட்டான்."

"எழுதறது ஆம்பளைதானா?"

"தெரியலை."

"ஆம்பளைதான்ற மாதிரி பேசறீங்க?"

"பொம்பளை ஏன் இவளைப் பத்தி தப்பா எழுதப் போறா?"

"இல்லை, தியாகராஜன், உலகத்துல, மோசமான பொம்பளை நிறைய பேர் இருக்காங்க. எதுக்கும் துணிஞ்ச பொம்பளையும் உண்டு."

"பொம்பளைங்கதான் எழுதியிருப்பாங்கங் கிறீங்களா?"

"எங்கம்மாவைப் பாராட்டினா எங்கப்பாவுக்குப் பிடிக்காது. எங்கப்பாவைப் பாராட்டினா எங்கம்மா வுக்குப் பிடிக்காது. வானதியை யாராவது பாராட்டு வாங்க. பாராட்டறவன் சிநேகிதத்திற்கு இந்தப் பாராட்டுதல் பிடிக்கலை."

"அப்படியும் இருக்கலாம். நீங்க யாரையாவது சந்தேகப்படறீங்களா ரகு?"

"இந்த மாதிரி ஒரு விஷயத்தில் மாட்டிட்டா, மனசு எல்லாரையும் சந்தேகப்படும். திரும்பத் திரும்ப சந்தேகப் பட்டு எதையாவது தப்பா ஒரு விஷயத்தை உறுதிப் படுத்திக்கும்."

"இப்ப என்ன செய்யறது, ரகுநந்தன்?"

"உங்களுக்குத்தான் அவளைச் சுத்தி இருக்கற வங்களைத் தெரியும். யாருன்னு கொஞ்சம் கவனிச்சுப் பார்த்துக்கிட்டிருங்க."

இரண்டு நாள் கழித்து இன்னொரு கடிதம் வந்தது.

'அக்காள் புருஷனுடன் கள்ளத் தொடர்பு இருப்பதை இப்போதுதான் கண்டுபிடித்தோம். வாரப் பத்திரிகைக்கும் இதைப் பற்றி எழுதிப் போட்டிருக்கோம். விரைவில் அவள் பெயர் சந்தி சிரிக்கும். எனவே அவளை விட்டு விடுவது நல்லது. நலம் நாடும், உண்மை விரும்பி.'

அந்தக் கடிதத்தை ரகுநந்தன் எவருக்கும் காட்ட வில்லை. மாறாய் அவன் தியாகராஜன் மீது சந்தேகப்படத் துவங்கினான். யாரிடம் இதைக் காட்டுவது என்று யோசித்தான்.

'வானதியின் அக்கா பூங்குழலியிடம் போனால் என்ன?... உன் புருஷன் தியாகராஜன் நல்லவனா, கெட்டவனா என்று கேட்டால் என்ன?_'

அவன் கடிதத்தைப் பாக்கெட்டில் மடித்து வைத்துக் கொண்டு பூங்குழலியின் அலுவலகம் தேடிப் போனான். அது ஒரு தையல் கூடம். அங்கே பூங்குழலி ஒரு சூப்பர் வைஸர்.

மாடியில் நின்றபடி பூங்குழலி அவன் விசாரிப்பதைப் பார்த்ததும், அவன் தன்னைக் கண்டுபிடித்து விட்டானோ என்று பயம் வந்தது. ஆள் அனுப்பி எதற்கு வந்திருக்கிறான் என்று விசாரித்தாள்.

அவன் விவரம் சொல்ல மறுத்ததும், அதிகம் கலவரப்பட்டாள்.

"நிறைய வேலை இருக்குங்க. என்ன விஷயம். சீக்கிரம் சொல்லுங்க."

- அவன் எதிரே வந்து பரபரத்தாள்.

"யாரோ மொட்டைக் கடுதாசி எழுதறாங்க."

"என்னைப் பத்தியா?_" - ஏமாற்றினாள்.

"இல்லீங்க... உங்க தங்கை பத்தி."

"வானதி ரொம்ப நல்லவளாச்சே?"

"யாரோ பொறாமை பிடிச்சவங்க எழுதியிருக்காங்க. யாருன்னு உங்களால ஊகிக்க முடியுமா?"

"முடியாதுங்களே. இதை விட்டுருங்க. பெரிசுபடுத்தாதீங்க."

"அப்படி விட முடியாதுங்க."

"அப்ப நம்பிட்டீங்களா?"

"நம்பலை. ஆனாலும் எட்டு லெட்டர் எழுதற அளவுக்கு அப்படி என்ன பொறாமைன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?"

"என்ன எழுதியிருக்கு?"

"உங்க புருஷனோடு நெருக்கமா இருக்கிறதா."

"ச்சீ... ச்சீ... எம் புருஷன் நல்லவர்."

"ஆனா, அவருக்கு வானதி மேல பிரியம் இருக்கு."

"ஒரு குழந்தை மேல இருக்கிற பிரியம். நீங்க அவரை சந்தேகப்படறீங்களா?"

"கொஞ்சம் குழப்பமா இருக்குங்க."

"என்னையும் குழப்பறீங்களே."

"என்ன சொல்றீங்க?"

"வெளியே ரெண்டு, மூணு பேர் சொன்னபோது கூட நான் அப்படியெல்லாம் இருக்காதுன்னு நம்பினேனே?"

"என்ன சொல்றாங்க?"

"'உன் தங்கச்சி, ஏன் உன் புருஷன் கடைக்குப் போறா'ன்னு கேக்கறாங்க. அவரோடு மோட்டார் சைக்கிள்ல இவ ஏன் போறான்னு கேக்கறாங்க."

"தியாகராஜன் உங்க மேல பிரியமாதானே இருக்கார்?"

"ஏதோ இருக்காரு."

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"எல்லாத்தையும் எப்படிச் சொல்றது?"



"வானதியோடு நெருக்கம் இருக்கும்னு நினைக்கறீங்களா?"

"நான் எதுவுமே நினைக்கலீங்க. நினைச்சா ஏதாவது செய்யணும். செய்யத் துப்பு இல்லாதவ. எதுவுமே நினைக்கக் கூடாது."

"சரீங்க, நான் வந்ததை நீங்க யாருக்கும் சொல்ல வேண்டாம்."

"இதுக்காக நீங்க வானதியை தப்பா நினைக்காதீங்க. எங்க வீட்டுக்காரர் யாரை வேணா எப்படி வேணா சாய்ப்பாரு. அவரு கெட்டிக்காரத்தனத்தால என் வாழ்க்கைப் பாழானது போதும். வானதி வாழ்க்கை வேற பாழாகக் கூடாது. அவளாவது சந்தோஷமா இருக்கட்டும்."

ரகுநந்தன் வெளியே வந்தான்.

அவள் பேசியது முழுவதும் யோசித்தான்.

சீக்கிரம் போக வேண்டும் என்று பரபரத்தவள் போவது பற்றி அறவே மறந்து நின்றாள். அவளை யாரும் தேடவும் இல்லை. அவளுக்கு எந்த அவசரமும் இல்லை. ஆனால், அவசரம் என்பதான நடிப்பு மட்டும் இருந்தது. இந்த நடிப்பு ஒரு மோசமான விஷயம். இவ்வளவு தெளிவாக நடிப்பவர்களிடம் ஜாக்கிரதையாக நடிக்க வேண்டும்.

ச்சீ... ச்சீ... என்று புருஷனுக்கு ஆதரவாக ஆரம்பித்தவள் அதற்கு மூன்றாவது வாக்கியத்திலேயே குறை சொல்ல ஆரம்பித்து விட்டாள்.

இவ்வளவு பெரிய விஷயம் திகைப்பைக் கொடுக்கவேயில்லை. மலங்க விழிக்கவேயில்லை. தயங்கவேயில்லை. விஷயத்தை உள்வாங்கவேயில்லை.

மொட்டைக் கடுதாசி வரத்தான் செய்யும் என்பது போலவே பேச்சும், முகபாவமும் இருந்தன. ஒரு

ஆணிடமிருந்த திகைப்புக்கூட இந்தப் பெண்ணிடம் இல்லை. ஒரு ஐம்பது சதவிகிதம் வாய்ப்பு இவளிடம் இருக்கிறது. இவளைப் பின்தொடர்ந்து போனால் பிடித்து விடலாம்.

அவன் தெருமுனையில் காத்திருந்தான். அவள் வந்ததும், பெட்டிக்கடை மறைப்புத் துணிக்குள் ஒளிந்து கொண்டான். அவளைப் பின்தொடர்ந்தான். அவள் பையிலிருந்து கார்டு எடுத்து எக்மோர் ரயில்வே ஸ்டேஷனில் போஸ்ட் செய்தாள்.

அவன் திகைத்தான். கடைக்குப் போய் வாட்டர் கலர் வாங்கினான். மஞ்சள் கலரை நீர் விட்டுக் குழைத்தான். போஸ்ட் பாக்ஸிற்குள் கைவிட்டு மூன்று முறை தெளித்தான். வெகு நிச்சயமாய் உள்ளே இருக்கிற எல்லா காகிதங்களிலும் மஞ்சள் வர்ணம் பட்டிருக்கும் என்று உறுதி செய்து கொண்டான். வீடு திரும்பினான்.

மறுநாள் தபால் ஆபீஸுக்குப் போய் அந்த கார்டை கேட்டு வாங்கிக் கொண்டான். அதில் மஞ்சள் வர்ணம் இருந்தது.

வானதி பத்தாவது படிக்கும்போது அவளுக்கு பள்ளிக்கூட ஆசிரியரோடு காதல் ஏற்பட்டது என்று எழுதியிருந்தது.

வானதியின் பள்ளிக்கூடத்திற்குப் போய் அவளைத் தன் வீட்டிற்கு வரச் சொன்னான்.

வந்தவளிடம் எல்லாக் கடிதங்களையும் காட்டினான்.

அவள் கண்கள் நிலைகுத்தி நின்றன. பயத்திலும் துக்கத்திலும் மூச்சு அதிகம் இரைத்தது. நாக்கு குழறியது.

"இது அநியாயம். நான் யாருக்கும் கெடுதல் பண்ணலியே- நான் ஒரு பாவமும் அறியாதவள்."



"உங்க அக்காவுக்கு ஏதாவது கெடுதல் பண்ணியிருக்கீங்களா?"

"எங்கக்காவா? அவளா எழுதினா?"

"ஏன் சட்டுன்னு அப்படிக் கேக்கறீங்க?"

"ஒரு பத்து நாளா பாசம் பொங்கி வழியுது."

"என்ன சொல்றாங்க?"

"எனக்குத்தான் வாழ்க்கை ஒரு மாதிரி ஆயிப் போச்சு. நீ ரொம்ப நல்லா இருக்கணும். அப்படீன்னு ரெண்டு மூணு தடவை சொல்லிட்டா. 'ரெண்டு புடவை எடுத்தேன், ஒண்ணு நீ வச்சுக்க'ன்னு கொடுத்தா. ஏன் எங்கக்காவைச் சொல்றீங்க."

"இது அவங்க போட்ட கடைசி லெட்டர். இதுல நான் அடையாளத்துக்கு மஞ்சள் கலர் தெளிச்சேன்.

இந்த அடையாளத்தோட என்கிட்ட வந்திருக்கு பாருங்க". அவன் விளக்கினான்.

"இப்ப என்ன பண்றது?"

"நான் உள்ள வந்தா நல்ல இருக்காது. நீங்கதான் உங்கக்காகிட்ட கடுமையா பேசி நிறுத்திடணும். தியாகராஜன் ரொம்ப நல்லவர். அவர் மனசு நோகக் கூடாது."

"இதுக்கப்புறமும் எங்க வீட்டோட சம்பந்தம் வச்சுக்கறேன்றீங்களே?"

"அஞ்சு விரலும் ஒண்ணாவா இருக்கு? வீடுன்னா வாசலும் இருக்கும். கொல்லைப்புறமும் இருக்கும்."

"ஏன் இப்படிச் செய்தா?"

"தியாகராஜன் உங்களைப் பாராட்டறது அவங்களுக்குப் பிடிக்கலை."

"அத்தான் வந்து- எனக்கு குரு மாதிரி."

"எனக்குப் புரியுது. எல்லாருக்கும் புரியாது."

"நாம இப்ப என்ன பண்ணனும்?"

"நான் யோசனை பண்ணி ரெண்டு நாளில சொல்றேன். அதுவரைக்கும் என்னன்னு சொல்லாம மிரட்டிக்கிட்டிரு."

அவள் வருத்தத்தோடு தலை குனிந்து அழுதபோது அவன் மெல்ல தோளில் தட்டி தேற்றினான்.

# 8

"**வா**யே திறக்காதீங்க" இரண்டு நாட்கள் பொறுத்து அவன் வேண்டிக் கொண்டான்.

"ஏன், ஏன்?" அவள் பதற்றமாய் கேட்டாள்.

"உங்க அத்தான் தூள் தூளா உடைஞ்சு போயிடுவார்."

"ஐயோ, எங்க அக்கா கல்யாணம் வரைக்கும் இத்த, அத்த எதையாவது செய்தக்கிட்டு இருப்பா."

"என்ன வேணா செய்யட்டும். இனிமே நம்மள அவங்க பிரிக்க முடியாது."

"அத்தான் கண்டிச்சாதாங்க, அவ அடங்குவா."

"அவங்க, கண்டிச்சு திருந்தறவங்க இல்லை. உங்க அக்கா ஒரு மன நோயாளி. அவங்களைக் கண்டிச்சா அவங்களுக்குப் புரியாது. நாம ஏதோ வல்லடியா வம்பு பண்றோம்னு நினைச்சுக்குவாங்க. ஆனா, உங்க அத்தான் தடுக்குனு கலைஞ்சு போயிடுவார்."

அவள் ஏதும் புரியாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ரெண்டு விஷயம் நடக்கலாம். உங்க அத்தான் கடுமையா உங்க அக்காவை தண்டிக்கலாம். இல்லேன்னா 'ச்சீ', போ.. உன் சங்காத்தமே வேணாம்'னு ஒதுக்கி



வச்சுடலாம். நாம் சேர்றதுக்கு யாரையும் கலைக்கணுமா? நம்ம கல்யாணத்துக்காக யாராவது பிரியணுமா? வேணாம்.

உங்க அத்தான் ரொம்பப் பெரிய மனுஷன். பொண்டாட்டி சரியில்லைன்னு நினைச்சிருந்தா அவர் உன்னை வளைக்க முயற்சி பண்ணியிருக்கலாம். மச்சினி அழகா, கெட்டிக்காரியா இருக்காளே, அவளையும் உடமையாக்கிக்கலாமேன்னு ஆசைப்பட்டிருக்கலாம். ஆனா தனக்கு சரியான ஜோடி கிடைக்காதது போல உனக்கு நேர்ந்துடக்கூடாதுன்னு அவர் வருத்தப்பட்டிருக்கார். கவலைப்பட்டிருக்கார். இதெல்லாம் பெரிய மனுஷாளுக்குத்தான் வரும். இந்த மனுஷனை நாம நோகடிக்கக் கூடாது."

"அப்ப என்ன செய்யணும்?"

"நீ நினைக்கற மாதிரி உங்க அக்கா தொடர்ந்து பிரச்சினை பண்ணாம இருக்கறதுக்கு ஒரே வழி, நம்ம கல்யாணத்தை நாமே நடத்திக்கறதுதான்."

அவள் மிரண்டு அவனைப் பார்த்தாள்.

"சத்திரம், வாழைமரம், ஐயர், பட்டுப்புடவை, சீர் செனத்தின்னு போனோம்னா இதுல பிரச்சினை பண்றது சுலபம். அதைத் தவிர அப்படி ஒரு செலவு இவ்வளவு பேசினபிறகு அவசியமில்லை.

உங்க வீட்ல ஒரு அரேன்ஜ்டு மேரேஜ் நடந்துருச்சு. ஒரு காதல் கல்யாணம் நடக்கட்டுமே."

"அத்தான் வருத்தப்பட மாட்டாரா?"

"மாட்டார். அவருக்கு இது பிடிக்கும். ஆனா கடைசி வரைக்கும் உங்க அக்காவை நாம காட்டிக் கொடுக்கக் கூடாது."

"எப்படி எங்க அக்கா மேல சந்தேகம் வந்தது."

"உங்க அத்தானுக்கு உம்மேல ஆசையோன்னு யோசனை பண்ணிக்கிட்டே வந்தேன். அவர் என்கிட்டே பேசினதெல்லாம் ஒவ்வொண்ணா நினைச்சுப் பார்த்தேன். ஒரு இடத்திலேயும் பிசிறு தட்டலை. ஒரு துளிகூட ரஸக் குறைவா வரலை.

'இத்தினி பிரியம் மச்சினி மேல இருந்தா, பொண்டாட்டிக்குப் பிடிக்குமா'ன்னு யோசனை பண்ணினேன். அப்பதான் பட்டுன்னு பிடிபட்டுது. அந்தம்மாவ அவர் நொந்து போய் சொன்னது எனக்குத் தெரியும். அந்தம்மாவை 'ரெண்டுங் கெட்டான்'னு அவர் நினைக்கிறது எனக்குப் புரியும். ஸோ, உங்க அக்கா மேல புள்ளி வச்சேன்."

"சரி... 'ஏன் இப்படிக் கல்யாணம் பண்ணிட்டே?'ன்னா என்ன சொல்றது?"

"எம்மேல பழி போடு. எங்க வீட்டுமேல பழிபோடு."

"புரியலையே."

"ரகுநந்தனுக்கு ஒரு அக்கா இருக்கா. அவளுக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கலை. தடுக்கற மாதிரி பேச ஆரம்பிச்சா, மொட்டைக் கடுதாசி எழுதிடுவேன்னு பயமுறுத்தினா. கல்யாணத்தை நிறுத்திடுவாளோ, யார் மனசையாவது புண்படுத்திடுவாளோன்னு நினைச்சு, நாங்க இப்படிக் கல்யாணம் பண்ணிக்கிட்டோம்-அப்படீன்னு சொல்லிடு."

"இன்னும் ஒரே ஒரு கேள்வி கேட்கட்டுமா."

"நிறைய கேளு."

"உங்களுக்கு ஏன் நான்?... எதுக்கு இந்தச் சம்பந்தம்? ஒரு பைத்தியக்கார வீட்டுக்கு ஏன் மாப்பிள்ளையா வரணும்? இதைவிட நல்ல இடமா உங்களுக்குக் கிடைக் காதா?"



அழுகையால் அவளுக்கு உதடு துடித்தது.

"உடனே உணர்ச்சிவசப்பட்டுட்டீங்களா? இதை விட நல்ல இடம் எனக்குக் கிடைக்கலாம். ஆனா நீங்க நல்ல இடம். ஒவ்வொரு குடும்பத்திலயும் இந்த மாதிரி ரெண்டு மாத்து குறைவான ஆளுங்க இருக்கத்தான் செய்வாங்க. புட்டுப் பார்த்தா எல்லா அத்திப் பழத்திலயும் புழு இருக்கத்தான் செய்யும்.

எங்கப்பா ரொம்ப கோபமானவரு. எங்கம்மாவைக் கொடுமைப்படுத்தினவரு. நான் கொஞ்சம் குணமுள்ள வனா இருக்கறதுக்கு எங்கப்பாதான் காரணம். உங்க அக்காவை உத்துப் பார்த்து, இப்படி இருக்கக் கூடாதுன்னு நீ தெரிஞ்சுட்டியோ என்னவோ, எதுனா குறை இருந்தா, எதுனா நிறையும் இருக்கும்."

"அத்தான் பாவம் இல்லை?..."

"அவரைப்பத்திக் கவலைப்படாத. இதை விதின்னு அவரு புரிஞ்சுக்கிட்டாரு கொஞ்ச நாள்ல, பழுத்த பழமாயிடுவாரு."

"எப்படிச் சொல்றீங்க?"

"மச்சினியை மகளா நினைக்க எல்லாருக்கும் ஆவுமா? அவளுக்கு நல்ல வரன் வேணும்னு ஆசையா தேட முடியுமா? அந்த மனசு, விசாலமாயிடுச்சு. ஊர் மொத்தத்தையும், உலக மொத்தத்தையும் அணைச்சுக்கற மனசா அது மாறும்."

"நமக்கு என்னிக்குக் கல்யாணம்?"

"வெரிகுட். பதிவு பண்ணிட்டு வந்துடறேன், தேதி சொல்றேன். என்கூட வந்து புடவை, நகையெல்லாம் வாங்கிக்கிட்டீங்கன்னா-நானே பத்திரமா வச்சிருப்பேன்."

தாலி கட்டிக் கொண்ட அன்று, அவள் கண்களில் முப்பது நொடிகள் கண்ணீர் துளிர்த்தது. அவள் மூக் குறிஞ்சி அடக்கிக் கொண்டாள்.

"நமக்குத் தேவைப்பட்டவங்க நல்லாருக்கனும்னு தானே நாம இப்படி கல்யாணம் பண்றோம்? 'ஏன்டி இப்படிப் பண்ணினே?'ன்னு கேட்டா ஒண்ணும் சொல்ல முடியாது. எப்பன்னா இருபது வருஷம் கழிச்சு எங்க அத்தான்கிட்ட, 'இதனாலதான் இப்படிப் பண்ணினேன். இதுதான் நடந்துச்சு' அப்படீன்னு சொல்லிட்டா போறும்... எங்கே. என்னைப் பிடிச்சிருக்கா?"

"தயவு செய்து இப்படி கேக்காதே. இந்தக் கேள்வியே சந்தேகத்துல வர்றதுதான். இப்படி கேள்வி கேட்டா உங்கக்கா கதிதான் உனக்கும். உன்னை விட்டா எனக்கு வேற கதி இல்லை, தாயே. எனக்கு நீ. உனக்கு நான். ரெண்டு ஜெம் க்ளிப் மாதிரி கோத்திட்டிருக்கோம். இனி சரசர சரன்னு மேலே போவோம். டீச்சர் வேலையை விட்டுட்டு, கடைக்கு வந்துரு. என்னை கவனிச்சுக்க. இது உன்னோட கடைதான். நீதான் மேனேஜிங் டைரக்டர். இன்னிக்கு ராத்திரி உக்கார்றியா? உன்னை ஒரு படம் வரையறேன்."

"நல்லவேளை... 'போர்டு எழுதணும். காபி எடுத்துட்டு கம்பில வாடி'ன்னு சொல்லாம இருந்தீங்களே."

அவன் சிரித்தான்.

அவள், பெருமை பொங்க அவனைப் பார்த்தாள்.

தடுமாற்றமில்லாத மனிதர்கள் யார் இடைஞ்சல் செய்தாலும் தாண்டி வந்துவிடுவார்கள். தாண்டி வந்ததைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறார்கள்.

**கா**தலில் ஜெயிக்க தெளிவு மட்டுமில்லை, வைராக்கியமும் தேவை.



காதலி பேரழகி. ஆனா காதலில் ஜெயிப்பதற்காக ஐந்து நிமிடத்தில் தன் அழகைத் துறந்தாள். மொட்டையடித்துக் கொண்டாள்.

மொட்டையடித்துக் கொண்டதை அவளுக்கு பிரியமானவளிடம் சொன்னாள்.

"நீ என்பது உன் தலைமுடி அல்ல. அதுபோனது பற்றி நான் கவலைப்படவில்லை. நான் காதலித்தது உன் புத்தியை. உனது நட்பான குணத்தை எதுவானாலும் நான் உன்னை நேசிக்கிறேன். உயிருக்குயிராய் காதலிக்கிறேன்.

கண்ணன்-வாஷிங்மெஷின் இன்ஜினியர்... அவர் கம்பெனியில் ஒரு நாளைக்கு முந்நூறு வாஷிங்மெஷின் தயாரிக்கிறார்கள் தென்னிந்தியா முழுவதும் விற்கிறார்கள்.

இடைவிடாது விளம்பரம் செய்து மார்க்கெட்டில் முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விளம்பரம் மட்டும் போதாது, கஸ்டமர்களை தெய்வம் போல் கருத வேண்டும் என்று வற்புறுத்துவார்கள்.

"விளம்பரத்தால் வாஷிங்மெஷின் விற்பனை பெருகாது. விளம்பரம் நம் கம்பெனியை நினைவூட்டத் தான் உபயோகமாகிறது.

உண்மையான விளம்பரம், உபயோகிப்பவர்கள் தான்.

'இந்த வாஷிங்மெஷின் வாங்கினேன். வாங்கி ரெண்டு வருஷம் ஆச்சு. ஒரு ப்ராப்ளம்கூட இல்லை.'

ஒரு குடும்பத் தலைவியின் இந்த வார்த்தை பெற, அவள் வாயிலிருந்து இந்த வாசகம் வர இந்தக் கம்பெனி என்ன வேண்டுமானாலும் செய்யும். செய்ய வேண்டும் என்பது இந்தக் கம்பெனியின் கட்டளை.

'என்ன வாஷிங்மெஷின் இது? உங்கள் எம்டியைக் கூப்பிடு' என்று கத்தினால், உடனே அந்த வீட்டிலிருந்து

போன் செய். நான் வருகிறேன். நிச்சயம் வருகிறேன். நான் உனக்குத்தான் எம்டி. ஒரு கஸ்டமருக்கு முன் வியாபாரி.

கஸ்டமர்கள் அவ்வளவு முக்கியமானவர்கள். விற்பனை மிக, மிக எளிது. டி.வி. விளம்பரம், பத்திரிகை விளம்பரம், ரேடியோ விளம்பரம் கண்ணையும், காதையும் தாக்கித் தாக்கி கஸ்டமரின் மண்டைக்குள் புகுந்து விடலாம். ஏமாற்றி வாஷிங்மெஷினை விற்றுவிடலாம். ஆனால், விற்ற பிறகுதான் இருக்கிறது, உண்மையான சோதனை.

இந்த நம் வாஷிங்மெஷின். ஒரு வீட்டின் கொல்லைப் புறத்தில் போய் உட்கார்ந்து, அதில் நீர் நிரப்பப்பட்டு புடவை, ரவிக்கை என்று போடப்பட்டு, இயங்கத் துவங்கி ஸ்விட்சில் நீர் தெறித்து எங்கேயோ லீக்காகி சுள்ளென்று ஷாக் அடித்தால்.. என் கதை முடிந்தது. பிறகு உன் கதை முடிந்தது.

'சண்டாளப் பாவிகளா..' அந்தக் குடும்பத் தலைவி அனைவரையும் தன் அடிவயிற்றிலிருந்து திட்டுவாள். 'என்னைக் கொலை செய்யப் பார்த்திங்களேடா... பாவிகளா...' விரல்களில் நெட்டி முறித்து வாஷிங் மெஷின் மீது சாபம் வீசுவாள்.'

-எம்டி. வருடாந்திரக் கூட்டத்தில் இப்படிப் பேசும் போது யாரோ சிரித்தார்கள்.

"நிறுத்து அந்தச் சிரிப்பை. நான் சிரிக்கும் விஷயமா பேசிக் கொண்டிருக்கிறேன்? எந்த மடையன் சிரித்தது..

தரக்கட்டுப்பாடு முக்கியம். தரக்கட்டுப்பாடு தவறு செய்தாலும், அதை சர்வீஸ் இன்ஜினீயரிங் தரக்கட்டுப் பாட்டின் இன்னொரு சிறகு.

எங்க வாஷிங்மெஷினா.. ஷாக் அடிக்காதே. நீங்க மெஷின் ஓடற போது இந்த சொர சொரப்பான பகுதில



கை வச்சிருப்பீங்க. இணைப்பைப் பிடுங்கி விட்டு அவர்களைத் தொட்டுப் பார்க்கச் சொல். அதற்குப் பிறகு, என்ன குற்றம் என்று கண்டுபிடி, உடனே சரி செய்.

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமையெல்லாம், சர்வீஸ் இன்ஜினீயரிங் பிரிவில் கிடையாது. கஸ்டமர் அழைத்த இருபத்து நாலு மணி நேரத்தில், நமது ஆள் அங்கே இருக்க வேண்டும். இருபத்துநாலு மணி நேரம் என்பது அதிக பட்சம் 'இரண்டு மணி நேரத்தில் சரி செய்தேன்' என்று எனக்கு நீங்கள் சொல்லுவதுதான் சந்தோஷம்.

சர்வீஸ் இன்ஜினீயரிங் மிகக் கடினமானது. உள்ளே நுழைந்ததும், 'என்ன எழவு உங்க வாஷிங்மெஷின்?..' என்றுதான் ஆரம்பிப்பார்கள். விற்றது நீ அல்ல. ஆனால் உன்னைத்தான் ஏசுவார்கள். 'சிரிக்கச் சிரிக்கப் பேசி, ஏமாத்திட்டியேடா... இது வாஷிங்மெஷினா.' குப்பைத் தொட்டியா?' என்று கேட்பார்கள். மிகப் பொறுமையாய் நிலைமையைக் கையாள வேண்டும்.

நான் என் வாழ்க்கையை சர்வீஸ் இன்ஜினீய ராகத்தான் துவக்கினேன். நான் விற்றது வாஷிங்மெஷின் அல்ல. வால்வு ரேடியோ. என் சர்வீஸில் கஸ்டமரிடம் 'பளார்' என்று அறைகூட வாங்கியிருக்கிறேன். அதற்கு நன்றியும் சொல்லியிருக்கிறேன்."

அலுவலகக் கூட்டம் சிரிக்காமல் 'உர்'ரென்று இருந்தது.

"இதற்கு நீங்கள் வாய்விட்டுச் சிரிக்கலாம். நமது ஆள் ஒருவன் அடி வாங்கினால் நமக்கெல்லாம் சந்தோஷம் தானே?"

அலுவலகக் கூட்டம், விலா வெடிக்கச் சிரித்தது எகிறி எகிறிக் குதித்தது. எம்டி-யும் சிரித்தார்.

"எனவே போனமுறை சர்வீஸ் டிபார்ட்மெண்ட்டில் இரவு பகல் பாராமல் பணியாற்றிய நான்கு பேருக்கு நற்சான்றிதழும். ரூபாய் ஐந்தாயிரத்துக்கான காசோலையும் இப்போது தரப்படும்."

"மிஸ்டர் விக்டர் இமானுவேல், ராமகோவிந்தன், மகேந்திர தாக்கூர், ஆர் கண்ணன்."

பெயர்கள் படிக்கப்பட்டன.

"இதில் நண்பர் கண்ணன் கஸ்டமரிடம் 'பளார்' என்று அறை வாங்கியதாய் அறிகிறேன். இந்த விஷயத்தில் என்னைப் பின்பற்றிய கண்ணனுக்கு என் தனித்த பாராட்டுதல்கள்.

இதை அவமானமாகக் கருதாமல், தொடர்ந்து உற்சாகமாக இருக்கும் நண்பர் கண்ணனுக்கு என் வாழ்த்துகள். அவருக்கு என் பரிசாய் நான் இருபது வருடம் போட்டிருந்த இந்த மோதிரத்தை அணிவிக்கிறேன்."

அலுவலகக் கூட்டம் எழுந்து நின்று கைத் தட்டியது.

கண்ணன் அடிவாங்கியதற்குக் காரணம் கஸ்டமரல்ல, ரோஹிணி. இருபத்து நாலு வயது தங்கப்பதுமை மலையாள தேவதை. கண்ணன், நெஞ்சில் சுமக்கும் விக்ரஹம்.

## 9

"ஹலோ, வாஷிங்மெஷின் கம்பெனியா? என்னடா எழவு கொட்டறேள். வாங்கி ஒன்றரை நாளில் ஓடலைன்னா அது வாஷிங்மெஷினா- வண்ணாந்தாழியா- டி.வி-ல ஒரு பொம்மனாட்டிய நெளிஞ்சு, நெளிஞ்சு ஆடவிடறேள், அத்த பார்த்துட்டு வாஷிங்மெஷின் வாங்கினா புகையா வருது.



'ஷாக் அடிக்கறதா.. தொட்டுப் பாருங்கோ'ன்னா எம் பொண்டாட்டி. எனக்கென்ன தலையெழுத்தா? இன்னும் பத்து நிமிஷத்துல உங்க சர்வீஸ் இன்ஜினியர் இங்க இருக்கணும். ஷூவை வாசல்ல அவுத்துட்டு உள்ள வந்து ஈரத்துல கை வைக்கணும். பதினாறாயிரம் ரூபா கொடுத்து மெஷின் வாங்கி ஷாக் அடிச்சு நான் செத்துப் போகணுமா? நீ செத்துப் போடா. நன்னா சனிக்கிழமையா பார்த்து செத்துப் போ. அந்த வாஷிங்மெஷின் கம்பெனில இன்னும் ரெண்டு மூணு போய்ச் சேரட்டும். என்னாச்சு... என்னா... இரு- இதோ... வந்துட்டேன்."

போன் எடுத்தது அக்கௌன்டென்ட். அவர் திகைத்துப் போய் வசவுகளைக் கேட்டுக்கொண்டிருந்தார். ஸ்பீக்கர் பட்டனைத் தடவி அழுத்தி அந்த கஸ்டமர் குரலை ஹால் முழுக்கப் பரப்பிக் கொண்டிருந்தார்.

மறுபடி கஸ்டமரின் குரல் கர்ஜித்தது. "உங்க வாஷிங்மெஷின் கம்பெனி நாசமாப் போக. அந்தக் கம்பெனி ஆரம்பிச்சவன் அம்போன்னு தெருவுல நிக்கணும். பக்கத்தாத்துப் பையன் கை வெச்சான். விருக்குன்னு இழுத்துருத்து. பையன் கையைத் தொடைக் கிடுக்கில் வச்சு கத்திண்டிருக்கான். ஏண்டா, எங்க குடும்பத்தை கொலை பண்ணத் திட்டம் போட்டிருக்கேளா. அரசாங்கத்துல ஜனத்தொகை குறைக்கறதுக்கு மானியம் கொடுக்கறாளா? ஏண்டா- நீங்க ஏதாவது விறகு அடுப்புன்னு விக்கப்படாது? கரி, விரட்டின்னு விளம்பரம் பண்ணப்படாது?

ஜப்பான்காரனோட கூட்டு... சைனாக்காரனோட கூட்டு.. அப்படீன்னு விளம்பரம் பண்றேளே. இப்படி ஒரு பண்டம் ஜப்பான்காரன் பண்ணுவானா?

ஒரு தப்பான சாமானை வித்துட்டா அவன் நாண்டுண்டு சாவான். நீங்க மானங்கெட்ட ஜாதி. கஸ்டமர்

சாகணும்னு பின்பக்கத்தை துடைச்சிண்டு போயிடுவேன்."

அந்தக் குரலுக்கு ஐம்பது வயது இருக்கும். அந்த வாஷிங்மெஷின் கம்பெனியின் ஹால் முழுவதும் அவரின் குரல் பதறிப் பதறி ஒலித்தது.

வெகுஜன உபயோகத்திற்கு உண்டான பொருள்கள் சிலசமயம் குறைபாடு அடையும்போது கோபத்தைக் கொண்டு வந்து தருவது இயல்பு. அந்தக் கோபம் சில கஸ்டமர்களிடம் கொஞ்சம் தூக்கலாகவே இருக்கும்.

இப்படிப்பட்ட கூச்சலை எப்போதேனும் ஒருமுறை சந்திக்க நேரிடும். பதில் பேச முடியாமல் சமாதானப்படுத்த இயலாமல் வெறுமே கேட்டுக் கொண்டு நிற்க நேரிடும். பாதிக்கப்பட்ட வாடிக்கையாளரின் ஜுரம் இறங்கிய பின்னர் ஏதாவது சொல்லி சமாளித்துக் கொள்ளலாம்.

அக்கௌன்டன்ட் நிதானமாக பதில் பேச ஆரம்பித்தார்.

"உங்கள் பெயர், விலாசம் சொல்லுங்கள். இன்னும் பதினைந்து நிமிடத்தில் மூன்று அல்லது நான்கு சர்வீஸ் இன்ஜினீயர்கள் இருப்பார்கள். உடனடியாக தவறை நேர்த்தி செய்வார்கள். முடியாது போனால் இன்று மாலைக்குள் புதிய வாஷிங்மெஷின் அங்கு இருக்கும்.

எனவே, தயவுசெய்து அமைதியாக இருங்கள். வாஷிங்மெஷின் மின் இணைப்பைத் துண்டித்து விடுங்கள். இன்னும் பதினைந்து நிமிடத்தில்..." அக்கௌன்டன்ட் பேசி முடிக்கும் முன், வாடிக்கையாளரின் போன் துண்டிக்கப்பட்டது.

"பேர், ஊரெல்லாம் டெலிபோன் ஆபரேட்டர் கிட்டேயே சொல்லிவிட்டார் சார்."



"அப்போ சர்வீஸ் இன்ஜினீயர்ஸை அனுப்புங்க." கணக்கர் கையசைத்துப் பேசினார்.

"நீங்கள் யார், இதுபற்றிப் பேசுவதற்கு?"

அந்தத் தங்கப்பதுமை... கண்ணன் ஆராதிக்கிற தங்கப்பதுமை உள்ளே புகுந்தாள்.

ரோஹிணி, முதன்மை சர்வீஸ் இன்ஜினீயரின் நேர்முக உதவியாளர்.

"நீங்கள் ஒரு அக்கௌன்டன்ட். உங்களுடைய வேலை கணக்கு வழக்கு பார்ப்பது. சர்வீஸ் இன்ஜினீயரை அனுப்புவதாகச் சொல்ல நீங்கள் யார்? வாஷிங்மெஷின் மாற்றி தருவதாக உத்தரவாதம் தர உங்களுக்கு என்ன உரிமை? சில கஸ்டமர்கள் சிறிய விஷயத்தைக்கூடப் பெரிதாய் பேசுவார்கள். உங்களுக்கு அவர்கள் மனோதத்துவம் தெரிய நியாயமில்லை. இந்த போனுக்கு நீங்கள் பதில் சொன்னது பிசகு. சர்வீஸ் டிபார்ட்மெண்ட் உங்கள் பதிலுக்கு பொறுப்பேற்காது."

"முட்டாள் பெண்ணே, என்ன பேசுகிறாய்? இந்த வாஷிங்மெஷின் கம்பெனியில் நானும் ஒரு அங்கம். இதன் நல்லது கெட்டதுக்கு நானும் பொறுப்பு. கஸ்டமர்கள் எனக்கு அந்நியர்கள் அல்ல. கணக்கு மட்டுமே பார்க்க வேண்டும் என்று என்னை யாரும் உத்தரவிட முடியாது. நானாக வலியப்போய் இந்த கஸ்டமரிடம் பேசவில்லை. இந்த கஸ்டமர் என்னிடம் பேசினார். அவருக்கு பதில் சொன்னேன். நீ நேற்று முளைத்த பெண். எனக்கு புத்தி சொல்லாதே. நாவை அடக்கு..."

"நீங்கள் பேசுவது முட்டாள்தனத்தின் சிகரம். பொறுப்பேற்பவர்தான் செயலாற்ற வேண்டும். செயலுக்கு பொறுபேற்க வேண்டும். நானும் இந்த கம்பெனி அங்கம்தான் ஜூன் மாத பேலன்ஸ் ஷீட்டை என் அறைக்கு

அனுப்பச் சொன்னால் அனுப்புவீர்களா? அந்த பேலன்ஸ் ஷீட்டில் குறை கண்டுபிடித்தால் தாங்குவீர்களா? என்ன அறிவிலித்தனமான பேச்சு இது."

ஆபீஸ் இரண்டு பட்டது. பிரச்சினை கௌரவம் பார்த்தது, நீயா, நானா என்று போட்டி எழுந்தது.

இது ஏதும் அறியாமல் கண்ணன் ஒரு ட்ரை க்ளீனிங் கம்பெனியில் ஆறு வாஷின் மெஷின்களை பரிசோதித்துக் கொண்டிருந்தான். இது இரண்டாவது பரிசோதனை.

அந்த ட்ரை க்ளீனிங் கம்பெனி ஒரு ஜாலியான இடம் இருபது பெண்கள் அங்கு துணி துவைக்கும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். கண்ணனைக் கண்டதும் அவர்களுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வரும்.

"கமலஹாசன் வந்துட்டாருடி." தூரத்தில் ஒரு கீச்சுக் குரல் கேட்கும். அவனுக்கு மட்டும் கேட்கும்படி சந்தோஷமான காதல் பாட்டுகள் பாடப்படும்.

அன்று அவன் வேண்டுமென்றே பன்னிரண்டு மணிக்குப் போனான். அது அவர்கள் சாப்பாட்டு நேரம் வாஷிங்மெஷினில் துணிகளைப் போட்டு எடுத்துவிட்டு முறுக்கிப் பிழிந்துவிட்டு அவர்கள் அடுக்கி வைத்து விடுவார்கள்.

சாப்பிட்டுவிட்டு சிறிதுநேரம் ஓய்வுக்குப் பிறகு உலர்த்தத் துவங்குவார்கள்.

"கமல் நம்மளோட சாப்பிடுவாரா கேளுடி."

"ஐயோ, அது ஐயரு. அது உங்கிட்டக்கூட வராது."

"ப்ளீஸ், தயவு செய்து ஜாதி பேசாதீங்க. நீங்க கொடுங்க. நான் சாப்பிடறேன்."

கறுப்பாய் திரட்சியாய் இருந்த ஒரு பெண் அவன் உள்ளங்கையில் குழம்பு சாதம் வைத்து தொகையல் வைத்தாள்.



"கடவுளே... அவ கொடுக்கறது கருவாட்டுக்குழம்பு நெத்திலித் தொகையல். இதைப் போயா சாப்பிடப் போறீங்க."

அவன் திடுக்கிட்டான், திகைத்தான்.

அந்த இருபது பேர் கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

"சார், அவ பொய் சொல்றா சார். உங்களுக்குப் போய் அப்படி நான் கொடுப்பேனா? இது காரக்குழம்பு கத்தரிக்காய் தொகையல்."

"இல்லை - அது கருவாட்டுக்குழம்பு." கும்பலில் ஒரு பகுதி கத்தியது.

"சரி, இது என்ன வேணா இருக்கட்டும். நீங்க அன்போடு கொடுத்ததை ஆசையா சாப்பிடறேன்."

வாயில் போட்டுக் கொண்டான்.

காரக்குழம்பு, கத்தரிக்காய் தொகையல் என்று தெளிவாய்த் தெரிந்தது.

கூட்டம் கை தட்டியது. திடீரென்று தொண்டையை பிடித்துக் கொண்டு கத்தினான். பலமாய் இருமினான்.

"என்னாங்க, அதுல விஷம் இருக்கு. சாப்பிடாதீங்க" அலறினான்.

பெண்கள் கை உதறி எழுந்தார்கள். இரண்டு டிபன் பாக்ஸுகள் தரையில் உருண்டு சிதறின.

அப்படியே மயங்கிச் சரிந்தான்.

சோறு கொடுத்த பெண் அவனைத் தூக்கி சுவரில் சாய்த்து உட்கார வைத்தாள். மூங்கில் கை வைத்தாள்.

"ஏய் மூச்சு வரலைடீ" பதறினாள்.

"இரு, நான் போய் முதலாளியை கூட்டிட்டு வரேன்."

அவன் பெரிய சிரிப்போடு எழுந்து உட்கார்ந்தான்.

"ச்சே.. ரொம்ப மோசம். நாங்க பயத்துல செத்தே போயிட்டோம் தெரியுமா?"

"நீங்க பொய் சொல்லலாம். நான் பொய் சொல்லக் கூடாதா? நீங்க ஏமாத்தலாம். நான் ஏமாத்தக்கூடாதா? காரக்குழம்பு ரொம்ப நல்லா இருந்தது. கத்தரிக்காய் தொகையல் சூப்பரோ சூப்பர்."

"நான் ஒரு ஜோஸ்யம் சொல்லட்டுமா? இன்னும் பதினைஞ்சு நாள்ல உங்களுக்கு கல்யாணம். மாப்பிள்ளை துபாய்ல வேலை செய்யறவங்க. நீங்க சௌக்கியமா சந்தோஷமா இருப்பீங்க."

அந்தப் பெண் கிறங்கிப் போனாள்.

அவன் இடுப்பு பேஜர் 'கீச் கீச்' என்று அலறியது.

'உடனே தொடர்பு கொள்ளவும். அவசரம் மிக அவசரம், ரோஹினி.'

அவன் எல்லா விளையாட்டையும் சட்டென்று நிறுத்திவிட்டு டெலிபோனுக்கு ஓடினான்.

'முடிந்தபோது தொடர்பு கொள்ளவும்' என்றுதான் ரோஹிணி செய்தி தருவாள்.

இப்படி ஒரு செய்தி அவளிடமிருந்து வருவது இதுவே முதல் தடவை.

'உடனே தொடர்பு கொண்டதற்கு நன்றி. ராஜா அண்ணாமலைபுரத்தில் ஒரு கிழவர் பேய்க்கூச்சல் போடுகிறார். வாஷிங்மெஷின் வாங்கியிருக்கிறார். பார்ட்டி மெஷின் மாற்றச் சொன்னால் முடியாது என்று சொல்லிவிடு. மின் கசிவிற்கு மெஷின் காரணமாய் இருக்க முடியாது. கஸ்டமரிடம் அதிகமா பேசாதே. அவன் பேசுவதைக் கேட்காதே. என்ன தவறு என்று கண்டு பிடித்து அங்கிருந்து போன் செய். இது கௌரவப் பிரச்சினை ஆகிவிட்டது. ஜாக்கிரதை.'



"புது மெஷின் எப்படி ஷாக் அடிக்கும். வாய்ப்பே இல்லை. மெயின் ஒயர் அறுந்து தண்ணீர் தொட்டால் ஒழிய மின்கசிவு வரக் காரணமில்லை, மூன்று உறைகள் கொண்ட ஒயர் எப்படி அறும்."

அவன் மோட்டார்சைக்கிளில் கிளம்பினான். வீடு தேடினான். குமிழ் அழுத்தினான்.

"ஐயா, நான் வாஷிங்மெஷின் கம்பெனியிலிருந்து வருகிறேன்."

"வாஷிங்மெஷின் ஷாக் அடிக்கிறது"

"வாஷிங்மெஷின் ஷாக் அடிக்காது."

"அடிக்கிறதுன்னு நான் சொல்றேன். அடிக்காதுங் கறயே."

"ப்ளக்ல கைவைச்சு ஷாக் அடிச்சுதா? மெஷின் ஷாக் அடிச்சுதா?"

"மெஷின்ல ஷாக் அடிச்சுது."

"நீ வெளியே போ நீ தேவையில்லை. வெளியே போ உன் எம்.டி-யை வரச் சொல்."

"யார் வந்தாலும் வாஷிங்மெஷினை நான்தான் ரிப்பேர் பண்ணணும். வாஷிங்மெஷின் ஷாக் அடிக்காது."

"பதினெட்டு வயசுப் பையன். கையக் கொடுத்துட்டு மல்லாக்க கிடக்கிறான். என்னடா பேசறே நீ."

"அட புடான்னு பேசாதீங்க. என்னை மெஷினைப் பார்க்க விடுங்க."

டெலிபோன் மணி அடித்து அவர் கோபம் குறையாமல் டெலிபோன் எடுத்தார்.

"வந்திருக்கான்... எவனோ ஒரு பன்னாடைய அனுப்பிச்சே. இங்கே வந்திருக்கான். உள்ளே நுழையற போதே 'ஷாக் அடிக்காது'ன்னு சத்தியம் பண்றான்.

சொல்றவன் நான் மடையன், அவன் புத்திசாலியா? நீ அவனுக்கு வக்காலத்தா?"

"சார், நீங்க வாஷிங்மெஷினைத் திருப்பி கொடுங்க."

"அவள் போனைத் துண்டித்தாள்."

"மெஷினை எடுத்துண்டு போப்பா. மெஷினை எடுத்துண்டு போ."

அவர் வெறுப்போடு கையாட்டினார்.

கஸ்டமர் பற்றி ரோஹிணி சொன்னது கண்ணனுக்கு ஞாபகம் வந்தது.

மெஷினெல்லாம் எடுத்துண்டு போகமுடியாது. வேணா ரிப்பேர் பண்ணித் தரேன்.

"போடா மொள்ளமாறிப் பசங்களா. முடிச்சவுக்கிப் பசங்களா?"

"பதிலுக்கு நானும் பேசுவேன் சார், ரொம்ப அலட்டாதீங்க."

அந்த ஐம்பத்துநாலு வயது பெரியவர் எழுந்து அவன் அருகில் வந்தார். பளாரென்று அறைந்தார். அவன் அடி வாங்கியதற்கு ரோஹிணி செய்த குழப்பம் காரணம்.

ஆனால், ரோஹிணி இருபத்துநாலு வயதுத் தங்கப் பதுமை. மலையாள தேவதை. கண்ணன் நெஞ்சில் சுமக்கும் விக்ரஹம்.

## 10

"**வா**ஷிங்மெஷினை திருப்பிக் கொடுத்துருங்க சார்." வாடிக்கையாளரிடம் சள்ளென்று சொல்லி விட்டாள் அவள்.

"அவர் மெஷின் திருப்பிக்கொடுக்க முன்வந்தால் வாங்காதே. 'அதெல்லாம் முடியாது' என்று சொல்"



என்று சர்வீஸ் இன்ஜினீயருக்கு எதிர்ப்பதமான உத்தர விட்டாள்.

கோபமான பேச்சு உள்ள இடத்தில் அடிதடி ரகளைதான் நிகழும், நிகழ்ந்தது.

காதின் நடுவே விழுந்த அறை கண்ணைத் தாக்கியது. உள்வாயில் பல் குத்தி ரத்தம் கசிந்தது. வலியாலும் அவமானத்தாலும் கடுங்கோபம் ஏற்பட்டது.

சட்டையோடு கொத்தாய் பற்றி அப்படியே அள்ளிக் கொண்டு போய் சுவரில் மோதினால், இந்தக் கிழவன் செத்துப்போய் விடுவான். முகத்தில் குத்தி முழங்கையால் இடித்து நிலைகுலைய வைத்துவிட முடியும். ஆத்திரம் வலுப்பெற்றால் மிக மோசமாக தண்டிக்க முடியும்.

ஆனால், இது நம் வேலையல்ல. இவன் நிர்மூடன். மூர்க்கன். வாழ்க்கையின் ரஸமறியாதவன். மனிதரின் மதிப்பறியாதவன், பிரச்சினையின் வேர் தெரியும் முன்பே எல்லாம் தெரியும் என்று கூத்தாடும் அறிவிலி.

கோபத்தில் பேசுகிறவனை ஆத்திரத்தில் அடிப்பவனை எல்லா மறை நூல்களும் மிருகம் என்று அழைக்கின்றன. அவன் விலங்கினத்திலிருந்து வெளியே வராத ஜீவன் என்று வர்ணிக்கின்றன.

பட்டயம் எடுத்தவன் பட்டயத்தாலேயே சாவான். வன்முறையைத் தூண்டியவன் வன்முறையாலேயே வதைபடுவான். இம்சித்தவனுக்கு இடைவிடாத மரண பயமே வரமாகக் கிடைக்கும் என்றெல்லாம் நீதி நூல்கள் பேசுகின்றன.

பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது மிக உண்மையான பழமொழி. ஆள்வது என்பது அரசனாவது அல்ல, பொறுமை உள்ளவருக்குத்தான் பூமியின் உள்ள

விஷயங்களை ரசிக்க முடியும். தண்ணீரை ரசித்துக் குடிக்க முடியும், இளவெயிலை உணர முடியும், சாரலின் சந்தோஷத்தை உள்வாங்க முடியும், பூமியிலிருந்து கிடைக்கும் உணவை ருசிப்பதற்கும், பெண்போகம் அனுபவிக்கவும் பொறுமையாய் இருப்பவனால்தான் முடியும். ஆத்திரப்பட்டவனுக்கு உண்டியுமில்லை, பெண்டிருமில்லை. நாம் பதிலுக்கு செய்ய, கம்பெனிக்கு கெட்ட பெயர் வந்துவிடும். உண்மையில் தவறு யாரிடம் என்று தெரிந்துவிட்டால் அப்போது இந்தக் கிழவனை உலுக்குவது எளிதாகிவிடும்.

எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம், இந்த வீட்டிலுள்ள பெண்ணும், நாற்பது வயதுப் பெண்மணியும் இவன் அடிப்பட்டதற்கு அலறித் தவிக்கிறார்கள். பதிலுக்கு இவன் செய்ய அவர்கள் தவித்துப் போய்விடுவார்கள்.

இதையும் விட முக்கியமான ஒரு விஷயம் இவனை அங்கு அனுப்பியது ரோஹிணி.

'நீ போகச் சொன்னாய் போனேன். போனவுடன் அடி வாங்கினேன். மிக்க நன்றி..' என்று ரெண்டு வார்த்தை அவளிடம் சொல்லிவிட்டு தன் ஸீட்டுக்குப் போய் விடலாம். அவன் பின்னாலேயே ஓடி வருவாள். 'ஸாரி.. ஸாரி' என்று கெஞ்சுவாள். 'என்ன நடந்தது சொல்' என்று எதிரே உட்கார்ந்து கொள்வாள். அவன் அடி வாங்கியது கண்டு ரௌத்ரம் ஆவாள். வருத்தப்படுவாள்.

யாருக்கும் தெரியாமல் ரகசியமாய் 'டேய், இன்னிக்கு எங்கேயாவது ஹோட்டலுக்கு கூட்டிட்டுப் போடா' என்று இன்டர்காமில் கிசுகிசுக்கலாம். ஹோட்டலுக்கு வந்து கையைப் பின்னிக் கொள்ளலாம். மறுபடியும் 'ஸாரி' சொல்லலாம்.

"எந்தக் கன்னத்துல அடிச்சான்."



"இடது கன்னத்துல.."

"எங்க ரொம்ப வலிக்கிறது."

"உதட்டுக்குக் கீழே.."

"இங்கியா.. இங்கியா.." தொட்டுப் பார்ப்பாள்.

'இரண்டாவதா தொட்டியே..' அந்த இடத்துல..

கட்டை விரலால் பலங்கொண்ட மட்டும் அழுத்துவாள். ஆவென்று அவன் வலியில் பெரிதாய் கத்துவான். கன்னத்தில் குத்திக் கொள்வாள்.

"ரொம்ப நோவுதாடா..." அவனுக்கு ஊட்டி விடுவாள். அந்த ஹோட்டல் அவர்களுக்குப் பழக்கம். அந்த மேஜை அவர்களுக்குப் பழக்கம். அங்குள்ள சர்வர்கள் அவர்களுக்குப் பழக்கம்.

அவர்கள் சண்டையை, சல்லாபத்தை அந்த ஹோட்டல் பொருட்படுத்துவதில்லை. இந்த அறையின் விளைவு, பல்வேறு இடங்களில் பூவாய் மலர வாய்ப்பு இருக்கிறது. எனவே வலி தாங்குவோம். அவன் தீர்மானித்தான்.

"உங்க பிரச்சினை என்ன சார். நான் என்ன செய்யணும்." அமைதியாக வினவினான்.

அந்த அமைதி வீட்டை அசைத்தது.

"பேசிண்டே இருக்கறச்சே கை நீட்டறது ரொம்ப தப்பு மஹாபாவம்."

அந்தப் பெண்மணி கத்தினாள்.

"வயசானவர். ஏதோ கோபத்துல பண்ணிட்டாரும்மா. ஒண்ணும் பிரச்சினையே இல்லை."

"ஐயம் வெரி ஸாரி அங்கிள்." பதினைந்து வயதுப் பெண் அவன் கையைப் பிடித்துக் கொண்டு கண்களில் நீர் கோக்கப் பேசியது.

"ச்சே... என்ன ஸாரி. எந்த கிளாஸ் படிக்கறே. உன் பேர் என்ன?" அந்தக் குழந்தையின் கையைப் பற்றி உள்ளே அழைத்துப் போனான். கிழவர் ஒதுங்கிக் கொண்டார். வீடு அவனை அரவணைத்துக் கொண்டது.

"ஐயோ! ஷாக் அடிக்கும்."

"அடிக்காது. சுவிட்ச் போடுங்கோ."

அந்த பதினைந்து வயதுக் குழந்தை சுவிட்ச் போட்டாள். அவன் வாஷிங்மெஷினின் எல்லாப் பகுதிகளையும் தொட்டுப் பார்த்தான். மின்கசிவு இல்லை. சுத்தமாக இல்லை. உள்ளே முழுவதும் கை வைத்தான். ஒரு பக்கெட் தண்ணீரை உள்ளே கவிழ்த்து விட்டு, மறுபடி கைவைத்தான், நாலாபுறமும் தடவிப் பார்த்தான். ஒரு பகுதியின் எவர்சில்வர் கவர் எதனாலேயோ சொரசொரப் பாகி தொட்டபோது ஷாக் அடிப்பது போன்று ஒரு உணர்வு ஏற்பட்டது.

கண்ணன் மடமடவென்று மெஷினைப் பிரித்துப் போட்டான். முற்றிலுமாய் பரிசோதித்தான். மெஷின் சிங்கக் குட்டி போலிருந்தது. ஆயிலும் கிரீஸும் லேசாய் காய்ந்திருந்தன. மறுபடி அவைகளைத் தடவினான். சிறிய சத்தம் கூட இல்லாமல் இயந்திரம் இயங்கியது. மறுபடியும் இயந்திரத்தை பூட்டினான். சோப்புப் போட்டு ஒரு வேட்டி இரண்டு சட்டை என்று மெல்ல மெல்ல மெஷினுக்குக் கனம் ஏற்றி பதினேழு, பதினெட்டுத் துணிகளை ஒன்றாய் முக்கினான்.

வாஷிங்மெஷின் இன்னும் கொண்டா என்று ஆட்டம் காட்டியது.

"எங்க கம்பெனிலயே பெஸ்ட் மெஷின் உங்களுக்கு வந்திருக்கு."

"ஷாக் அடிச்சது...?"



"அடிக்கலை, அடிக்காது."

"அந்தப் பையன் கத்தினானே."

"பிரமை, நடிப்பு, பொய்."

"ஐயம் ஸாரி சார்."

"அதனால பரவாயில்லை சார். மெஷின் நல்ல கண்டிஷன்ல இருக்கறதுன்னு எழுதிக் கொடுங்க."

"ஒரு வாய் காபி சாப்பிடலாமா?"

"கூடாதம்மா."

"அடிச்சது கோபமா?"

"என்னை யாரும் அடிக்கவே இல்லையே. 'நாண நன்னயம் செய்து விடேல்' என்கிற வாக்கு தேவவாக்கு".

அந்த ப்ளக்கும் ஒயரும் சரியாக இல்லாமல் இருந்தது அவன் அதை சரி செய்தான்.

"வேற பல்பு மாத்திடுங்கோ. ரொம்ப இருட்டா இருக்கு."

அந்தப் பெண் ஓடிப்போய் வாங்கிவர, சரியான இடத்தில் விளக்குப் பொருத்திக் கொடுத்தான்.

"அவர் சார்பா இன்னொரு தடவை மன்னிப்பு கேட்கறேன்."

"மறந்துடுங்கோம்மா, நான் எப்பவோ மறந் துட்டேன். பாப்பா, டென்த் நல்லா படிக்கணும், அப்பதான் ப்ளஸ் டூ படிக்க ஒரு வெறி வரும்."

"பகவானே, நீ ரொம்ப நல்லா இருக்கணும்ப்பா. வாழ்க்கை முழக்க சந்தோஷம் பொங்கணும், எல்லா இடத்திலேயும் நீ ஜெயிக்கணும்."

அந்தப் பெண்மணி ஆசீர்வாதம் செய்தாள். அவன் விடைபெற்று ஆபீஸ் வந்தான்.

"அடிச்சானா... ரத்தம் வந்துதா... வக்காளி, யாருடா அவன்."

அலுவலகத்தில் இரண்டு மூன்று பேர் எழுந்தார்கள்.

ரோஹிணி, அவன் தேவதை அதிர்ச்சியில் உறைந்து போனாள். அவன் அருகே வந்து பரிசோதித்தாள். அவன் இடது கண் சிவந்திருந்தது. வலது கன்னத்தின் உள்பக்கம் காயம் தெரிந்தது. அவள் முகத்தில் கடும் கோபம் தெரிந்தது.

"டேய், இது என் தப்புடா. முழுக்க முழுக்க என் தப்புடா. வர்றியா, அந்தக் கிழவன் வீட்டுல போய் கல் அடிச்சுட்டு வரலாம்."

"வேண்டாம். அவங்க வீட்டு லேடீஸ் ரொம்ப பயந்துருவாங்க. இதை மறந்துடு ரோஹிணி"

"இல்லை சார். நாம இதுக்கு போலீஸ் ஆக்ஷன் எடுக்கணும் சார்." முதன்மை சர்வீஸ் அதிகாரியிடம் போய் குறைபட்டாள்.

அவர்கள் ஒன்றுகூடிப் பேசினார்கள். இன்னும் மேலதிகாரிகளுக்கு விஷயம் தெரிவித்தார்கள். பாம்பேயிலிருந்து போன் வந்தது.

"கஸ்டமர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நினைக்கிறாயா?" சட்ட நிபுணர் விசாரித்தனர்.

"வேண்டவே வேண்டாம். இது மறக்கப்பட வேண்டிய விஷயம். இது சொல்லாமலிருந்தால் தவறு என்னுடையது போல் தோன்றியிருக்கும். இது ஒரு தகவலாகத் தெரிவித்தேனேயொழிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல. கம்பெனிக்காக இன்னும் சில அறைகள் வாங்கத் தயாராக இருக்கிறேன். அதற்கான வலு என்னிடம் இருக்கிறது."



"ஒரு விற்பனைப் பிரதிநிதி வாடிக்கையாளரின் கோபத்துக்கு பயப்படவே கூடாது. புறக்கணிக்கக் கூடாது. எதிர்கொள்ள வேண்டும் நான் எதிர்கொள்வேன். எதிர்கொள்வது என் இயல்பு."

வரிவிடாமல் அப்படியே கம்பெனியின் உரிமையாளரிடம் சேதி போயிற்று.

"இன்று முதல் அவனைப் புலி என்று கூப்பிடுங்கள். அந்த இளைஞனுக்கு என் தனித்த பாராட்டுகள்."

ஒரு சிறிய காகிதத்தில் அவர் கைப்பட எழுதிய பாராட்டுக் கடிதம் தரப்பட்டது. அத்தோடு விட்டு விடாமல் அந்த அலுவலகம் அவனை முறையாகப் பாராட்டியது.

அலுவலகம் பாராட்டுவதற்கு முன்னால் அவள் இறுக்கிக் கொண்டு முகம் முழுவதும் முத்த மழை பொழிந்து தலையை வருடிக் கொடுத்தாள்.

"என்னாலதாண்டா பாவி அடிபட்ட" என்று தோளில் முகம் சாய்த்துக்கொண்டாள்.

"சரி... நாம எத்தினி நாள் இப்படி லவ் பண்ணப் போறோம். நான் ஐயரு, நீ நாயர் வீட்டுப் பொம்பளை. எப்படி சரியா வரும்? பிரச்சினை வராதா?"

"நிச்சயம் வரும்" அவன் கேட்க, அவள் பதில் சொன்னாள்.

"என்ன பிரச்சினை வரும் ரோஹிணி?"

"அருவா, சுத்தி, மான்கொம்பு, உருளைக்கட்டை எல்லாம் வரும்."

"என்ன பயமுறுத்தறியா?"

"எங்கப்பா என்ன மெட்ராஸ் கஸ்டமரா? ஒரு அறையோட விட்ருவாருன்னு நினைச்சியா? இருபது

HARA PUBLIC LIB

பேரோட வீட்டுக்குள்ள வருவாரு. ஏகப்பட்ட ரகளை பண்ணுவாரு."

"அப்புறம் ஏன் லவ் பண்றே?"

"நீ காப்பாத்தி கூட்டிட்டுப் போவேன்னு நினைக்கிறேன்."

"நான் மாட்டேன்னுட்டா?"

"வேற யாரையாவது லவ் பண்ணுவேன்"

"தயவுசெய்து விளையாடாதேம்மா. உண்மையைச் சொல்லு."

"நேரம் வரும்போதே உண்மை தெரிஞ்சுக்கலாமே. இப்ப ஏன் அவஸ்தைப்படறே?"

"அதுவரைக்கும் என்ன பண்ணப்போறே?"

"இப்படி ஒளிஞ்சு ஒளிஞ்சு லவ் பண்ணுவோம். யார் கண்ணுலயும் படாம ஊர் சுத்துவோம்."

அவள் சொன்ன மூன்றாவது நாள் அவர்கள் காதல் விஷயம் அவர்கள் வீட்டுக்குத் தெரிந்தது.

ரோஹிணி இருபத்து நாலு வயது தங்கப் பதுமை. மலையாள தேவதை. கண்ணன் நெஞ்சில் சுமக்கும் விக்ரஹம். அவள் தகப்பனிடம் பெல்ட்டால் அடிபட்டாள்.

# 11

"டேய் சின்னப் பையா... இன்னிக்கு எங்கேயாவது என்னை வெளியே கூட்டிண்டு போறயாடா?"

ரோஹினி இன்டர்காமில் கண்ணனை கேட்டாள்.

"என்னை 'சின்னப் பையா'ன்னு இன்னொரு தடவை சொன்னே... ரொம்ப அசிங்கமா பேசுவேன்."



அவளுக்கு, அவன் அசிங்கமாய் பேசுவது பிடிக்கும். அவனின் அந்தப் பேச்சைக் கேட்பதில் ஒரு சுதன குதூகலம்.

நுனி நாக்கு ஆங்கிலமும், பொய்யான உபசரிப்பும் நிறைய வாழ்க்கையில், இந்தக் கீழ்மட்டத்து மண் வாசனைமிக்கப் பேச்சுகள் மாறுதலாக இருக்கும். ஒரு ஆரோக்கியத்தை உணர முடியும்.

அவன் பேச இஷ்டமில்லாமல் டக்கென்று இன்டர்காமைத் துண்டித்தான்.

"பேசிக்கிட்டேயிருக்கும்போது போன் கட் பண்றியா? மகனே, இன்னிக்கு உன்னை நாஸ்தி பண்ணிடறேன்."

"சார்! மொத்தம் முப்பத்தியாறு கம்ப்ளெய்ண்ட் இந்த வாரம், அதுல இருபதுதான் அட்டெண்ட் பண்ணியிருக்காங்க. நாளைக்கு ஒருநாள்தான் ஓர்க்கிங் டே. அட்டெண்ட் பண்ண இருபதுல, ரெண்டு மறுபடி கம்ப்ளெய்ண்ட் இருக்கு."

"மிஸ்டர் கண்ணனை கேட்டா, கன்னா பின்னாவென்று மெட்ராஸ் பாஷைல அசிங்கமா பேசறார். எனக்கு அவர் பிஹேவ் பண்றது பிடிக்கலை, சார்."

"கண்ணனை இன்டர்காம்ல பேசச் சொல்லு." முதன்மை சர்வீஸ் இன்ஜினியர், 'ஹிண்டு'வில் பெண்ணுக்கு வரன் தேடிக்கொண்டு அவளுக்கு உத்தரவிட்டார்.

அவள் மறுபடியும் இன்டர்காமில் அவனோடு பேசினாள்.

"சின்னப்பையா, உன்னை மாமாகிட்ட போட்டுக் கொடுத்துட்டேன். 'முப்பத்தாறு கம்ப்ளெய்ண்ட்ல இருபதுதான் அட்டெண்ட் பண்ணியிருக்காங்க.' எவனும் இந்தக் கம்பெனியில வேலையே செய்யறதில்லை சார்.

எல்லாரும் தண்டச் சம்பளம்'னு சொல்லிட்டேன் மாமா. உம் பேர்ல செமைக் கடுப்புல இருக்கு. இந்த ரோஹிணியை பகைச்சுக்கிட்டவங்களை இந்த ரோஹிணி வாழவிடமாட்டா. சின்னப் பையா... அழுத்தமாய் கூவினாள்."

"ஏய் பஜாரி, என்ன கணக்கு நீ சொல்ற. முப்பத்தாறு கம்ப்ளெய்ன்ட்ல, நேத்தி வரைக்கும் இருபது இன்னிக்கு முப்பது. நாளைக்கு பாக்கி ஆறு". அவன் கத்த, அவள் முதன்மை இன்ஜினீயர் இன்டர்காமில் ஸ்பீக்கருக்கு மாற்றினான்.

அறை முழுவதும் அவன் கூச்சல் எதிரொலித்தது.

"உன்னைப் பத்தி இந்த மாமாக் கம்மனாட்டிக்குத் தெரியாது. ஆனா, நீ மட்டக் கேஸுன்னு எங்க எல்லாருக்கும் தெரியும் ஆபீஸ்ல எல்லாரும் சொல்றாங்க.' அந்த மலையாளத்து பொம்பளைய நம்பாத... நாய் மாதிரி அலையுது'ன்னு. ஏய் மலையாள மனோரமா... தினத்தந்தி படிச்சிருக்கியா? 'இளம் பெண்ணை வாலிபர் சதக், சதக் என்று கத்தியால் குத்தினாராம்...' படிச்சிருக்கியா, ஒரு நாள் இந்த ஆபீஸ்ல அது நடக்கப் போவுது."

"யோவ் கண்ணன், என்னய்யா பேசற?"

"சார், நான் அவங்களோட பேசிட்டிருக்கேன் சார்."

"லேடீஸோட பேசற பேச்சாய்யா இது. பேட்டை ரௌடி மாதிரி பேசற?"

"அவங்கதான் சார் அப்படிப் பேசச் சொல்றாங்க."

"**சா**ர், இந்த தடவை மன்னிச்சு விட்ருங்க சார் அவருக்கு ஏதோ உடம்பு சரியில்லை. மெண்டலா அப்செட் ஆகியிருக்கார். அதான் கொஞ்சம் கன்னா பின்னாவென்று பேசறார்."



"இப்படி நம்ம கஸ்டமர்கிட்ட பேசினா நம்ம கம்பெனி கதி என்னா ஆகறது?"

"திட்டினீங்கன்னா கம்ப்ளெய்ண்ட் ஒழுங்காப் போவாது சார். கஸ்டமர்ஸ்தான் சஃபர் ஆவாங்க. நாளைக்கு சாயந்தரம் வச்சுக்கலாம் சார். உண்டு. இல்லைன்னு பண்ணிடலாம்."

"யூ ஆர் ரைட் ஆனாலும் லேசா மிரட்டத்தான் செய்யணும். கூப்பிடு அவனை."

அவன் உள்ளே வந்தான்.

"என்னய்யா. என்னமோ பேசற நீ. என்ன மனசுல நினைச்சுண்டிருக்கே?"

"சார்... விவரம் புரியாத பேசாதீங்க. இந்தப் பொண்ணும் நானும் லவ் பண்றோம். இதுவரைக்கும் ஏழு படம் ஒண்ணா போயிருக்கோம். ஒரு சினிமா தியேட்டர்ல ஒரு பொண்ணை ஒருத்தன் என்ன பண்ண முடியுமோ, அத்தனையும் பண்ணிட்டேன். உணர்ச்சி தாங்காத இன்னிக்கும் சினிமாவுக்கு கூட்டிண்டு போடாங்கறது. 'நான் முடியாது'ன்னுட்டேன். உடனே உங்ககிட்டே போட்டுக் கொடுத்துருச்சு."

"யோவ், நீ என்ன மெண்டல் ஆயிட்டியா?"

"இந்த குரங்கு அப்படி சொல்லிச்சா? நம்ம ஆபீஸ் பேப்பர்ல, 'ஐ லவ் யூ'ன்னு டிராயிங் போட்டு அனுப்பியிருக்கா பாருங்க."

"இனிமேதான் சார் டென்ஷன். இவளைக் கத்தில குத்தி சாவடிக்கப் போறேன். நீங்கதான் போலீஸ் சாட்சி சொல்லப் போறீங்க. நான் போய் கத்தி எடுத்துண்டு வரேன்."

அவன் எழுந்து வெளியே போக... அவள் வாய் பொத்தி சிரித்தாள்.

மறுநாள் மாலை முப்பத்தாறு புகாரும் முடித்த சந்தோஷத்தை அதிகாரியுடன் பகிர்ந்து கொள்ள, "டேய், சட்டுபுட்டுன்னு கல்யாணத்தைப் பண்ணிக்கடா, பொண்ணைப் பெத்தவனுக்கு லவ்வுன்ன கலவரமாத்தான் இருக்கும். அந்தக் கலவரத்துல அவன் முரட்டுத்தனமா நடந்துக்கலாம். எனக்கு மூனு பொண்ணு. உங்களால எனக்கு ராத்திரி தூக்கம் போச்சு. என் பொண்ணை யாரோ கத்தில குத்தற மாதிரி கனா. பொண்ணைப் பெத்தவனுக்கு நீ கல்யாணம் பண்ணாக்கூட போறாது. ஒரு குழந்தை பெத்துக் காட்டினாதான் மனசு இளகும். நீங்க ரெண்டு பெரும் நல்லா இருக்கீங்கன்னு அப்பத்தான் நம்புவான்.

லவ் பண்றது ஈஸிடா. கல்யாணம் பண்றதும் கஷ்டமில்லை. அது ஒரு சடங்கு. குடித்தனம் பண்றதுதான் வாழ்க்கை. குழந்தை பெத்துக்கறதுதான் வளர்ச்சி. அந்தக் குழந்தை ஜெயிச்சு நிக்கறான் பார்... அப்பத்தான் நிம்மதி.

உன் பிள்ளை ஜெயிச்சு கம்பீரமா நிக்கறப்போ இவ அப்பன் வந்து உன் கையைப் பிடிச்சுக்குவான். 'மாப்பிள்ளை, நான் ஏதாவது தப்பா பேசியிருந்தா மன்னிச்சுக்குங்க'ன்னு இருபது வருஷம் முன்னாடி பேசினதுக்கு மன்னிப்பு கேட்பான்.

நான் சொல்றது உனக்குப் புரியும். நிதானமா யோசிச்சா புரியும். ஐ விஷ் யூ போத் ஆல் த பெஸ்ட்." கை கூப்பினார்.

அன்று மாலை அவர்கள் சினிமா போகலாம் என்று யோசித்துவிட்டு, திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோவிலுக்குப் போனார்கள். சுவாமி தரிசனத்துக்குப் பிறகு மண்டபத்தில் உட்கார்ந்து பேசினார்கள்.

"எங்கப்பா விடமாட்டார். ஒரு மலையாளி தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணித் தரமாட்டார். தமிழர்களைக் கண்டா அவருக்குப் பிடிக்காது. அதுவும், தமிழ் ஐயருங்களைக் கண்டா பிடிக்காது. அவங்க கோழைங்கன்னு நினைப்பு."

"நீயேன் மலையாளி வேண்டாங்கறே?"

"நல்லவன் வேணும். கெட்டிக்காரன் வேணும். இது பழகிதான் தெரிஞ்சுக்க முடியும். வீட்டுக்கு வந்து பெண் பார்க்கறவனை என்னால் கல்யாணம் பண்ணிக்க முடியாது."

"என்னைப் பத்தி உனக்கு என்ன தெரியும்."

"உன்னைப் பத்தி ஆபீஸ்ல மூனு பேர்கிட்ட சொல்லி மொத்தமா உன் சரித்திரத்தையே எடுத்துட்டேன்."

"கல்யாணத்துக்குப் பிறகு நான் மோசமா நடந்துக்கிட்டா..."

"உன்னை விட்டுப் போயிடுவேன். டைவோர்ஸ்தான். ஆனா, அது அவ்வளவு ஈஸியில்லை. ஒரு தடவை என்கிட்டே மாட்டிட்டே... உன்னை மயக்கி மடியில போட்டுக்க எனக்குத் தெரியும். என்னை மாதிரி ஒரு பொண்டாட்டி ஈரேழு லோகத்திலயும் கிடைக்காது. அந்த நம்பிக்கைலதான் நான் லவ்வே பண்றேன்."

"அப்படியா? அப்ப நானும் ஒண்ணு சொல்றேன். எனக்கு அடிமையால்லாம் பொண்டாட்டி வேண்டாம். தனக்கு என்ன வேணும்னு வெளிப்படையா டிராமா போடாத பேசத் தெரிஞ்சா போதும். நாடகமா இருக்கற பொண்ணுங்களை எனக்குப் பிடிக்காது."

"'எனக்குப் பட்டுப்புடவை வேணும்'னு கேளு. நான் உடனே, 'எதுக்காக பட்டுப்புடவை'ன்னு கேட்பேன். பொறுப்பா ஒரு பதில் சொல்லு. உடனே வாங்கிக் கொடுத்துர்றேன்."

"கல்யாணத்துக்கு முன்னாடி இன்னும் ஒரு விஷயம் கூட நாம பழகிக்கணும்.."

"என்னா அது?"

"நான் என்ன நினைப்பேனோன்னு பயப்படாதே. உண்மை பேசக் கத்துக்கணும். எதுவா இருந்தாலும் பரிமாறிக்கணும்."

"நல்ல ஐடியாவா இருக்கே."

"இந்த செகண்ட்லேர்ந்து அந்தப் பேச்சு ஆரம் பிச்சிருச்சு. இனிமே உண்மை. உண்மையைத் தவிர வேறு எதுவுமில்லை, ஏதாவது உண்மை சொல்லணும் போல இருக்கா."

"ஆமா."

"சொல்லு."

"விபூதி கொடுத்தானே ஒரு சின்னப் பையன். அவனைக் கிஸ் அடிக்கணும்போல இருக்கு."

"நினைச்சேன். விபூதி கொடுத்ததுக்கு 'தேங்க்யூ'ன்னு சொன்னியே... அப்பவே தெரிஞ்சு போச்சு, நீ வழிய றேன்னு.. ஏன் இப்படி அலையறே?"

"போடா சோம்பேறி. 'உண்மை சொல்லு'ன்னுட்டு இப்ப குத்தம் கண்டுபிடிக்கிறியே. நீ சொல்லுடா."

"நேத்து போய் ஒரு பொண்ணு பார்த்துட்டு வந்தேன்."

"டேய், செருப்பு பிஞ்சிடும்."

"முழுக்க சொல்ல விடு."

"சொல்லு."

"பொண்ணு சுமாராத்தான் இருந்தா. ஆனா நாப்பத்தஞ்சு சவரன் நகை போடறேன்னாங்க. 'வில்லி வாக்கத்துல ஒரு கிரவுண்ட் நிலம் எழுதி வைக்கறேன்'



னாங்க. இன்னும் நிறைய ஆசைகாட்டுவாங்க போலிருக்கு. 'அடுத்த வாரம் வரேன்'னு சொல்லிட்டு வந்திருக்கேன்."

"நீ சொல்றது பொய்தானே."

"இல்லை நிஜம்."

"என்ன தைரியத்துலடா பொண்ணு பார்க்கப் போனே?"

"நாப்பத்தஞ்சு சவரன் நகை சும்மாவா?"

"அப்ப என்னை எதுக்குடா லவ் பண்ணினே?"

"நல்லா மாடு மாதிரி இருக்கே. கூப்பிட்டவுடனே வந்துட்டே, ஓடற மட்டும் ஓடட்டும்னு லவ் பண்ணி னேன்."

"டேய், சத்தியமா சொல்லு, நேத்தி பொண்ணு பார்க்கப் போனியா?"

"யெஸ்! பொண்ணு பேர் வசந்தா பி.ஏ. லிட்ரேச்சர் நான் ஒரு சிக்னல் காமிச்சிட்டா, மேட்டர் முடிஞ்சிடும்."

"நீ என் கையால சாகப் போறே."

"பெண் பார்ப்பது என் உரிமை. எதுக்காகவும் அதை விட்டுக் கொடுக்கமாட்டேன்."

"டேய், சத்தியமா பொண்ணு பார்த்தியா."

"மருந்தீஸ்வரர் மேல ஆணையா பொண்ணு பார்த்தேன். நாற்பத்தஞ்சி சவரன். ஒரு க்ரவுண்ட் நிலம்."

"அப்புறம் என்ன மயித்துக்குடா என்கூட உட்கார்ந் திருக்கிறே..?"

"இது வேற.. அது வேற..?"

"போடா சோம்பேறி அவள் கோவில் விட்டு எழுந்து போனாள். அவன் துரத்திக்கொண்டு போனான். எல்லோரும் வேடிக்கை பார்த்தார்கள்.

கோவிலுக்கு வெளியே வந்து அவன் மோட்டார் சைக்கிள் ஏறுவதற்குள் அவள் ஆட்டோவில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

அவன் ஆட்டோவை நிறுத்துவது போல் மடக்கி வண்டியயை நிறுத்தினான்.

"ஒரு செகண்ட், நான் சொல்றதை கேளு."

"முடியாது. வண்டியை எடுய்யா."

"நேத்து பொண்ணு பார்த்தது வாஸ்தவம். நாப்பத்தஞ்சு சவரன். ஒரு க்ரவுண்ட் எல்லாம் நிஜம். ஆனா பொண்ணு பார்த்தது எனக்கில்லை. எங்கண்ணனுக்கு. எங்கண்ணன் 'சரி'ன்னுட்டார். அந்த வீடு பத்தி என்கிட்ட விசாரிச்சு சொல்லச் சொல்லியிருக்காங்க. நான் 'சரி'ன்னுட்டா மேட்டர் ஓவர்."

அவள் ஆட்டோ விட்டு இறங்கினாள். பத்து ரூபாய் கொடுத்தாள். அவனோடு மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்து கொண்டாள். வண்டி கிளம்பியது.

"என்ன கண்ணு பயந்துட்டியா?" அவன் வண்டியை இடதும் வலதும் ஆட்டிக் கேட்டான்.

"ஆமாண்டா, பயந்துட்டேன்."

"இதுக்கு அர்த்தம், இன்னும் நீ என்னைப் புரிஞ்சுக் கலை."

"நீ எதுக்கும் பயப்படமாட்டியா?"

"மாட்டேன் கண்ணு."

"இப்ப பயப்படறே பார்." வண்டியை ஓட்டுபவன் இரண்டு கண்களையும் சட்டென்று பொத்தினாள்.

அவன் "ஐயோ, ஐயோ" என்று கத்தினான். வேகமாக பிரேக் போட்டான்.



வண்டி சின்னப் பள்ளத்தில் ஏறி இறங்கி இடப் பக்கம் சாய்ந்தது. அவள் துள்ளி இறங்கினாள்.

"என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு உனக்கு. சாவடிக்கப் பாத்தியே?"

"நீ என்னை சாவடிக்க பார்க்கலை.?"

"அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் கூடியது. அவர் களைத் தாண்டி கார்களும், லாரிகளும் மெல்லப் போயின."

ஒரு காரில் ரோஹிணியினுடைய அப்பாவின் நண்பர் அவர்களை உற்றுக் கவனித்துக் கொண்டு போனார்.

'அட, ரோஹிணி' என்று நினைவு வந்தவராய் வண்டியை ஓரமாக நிற்க செய்து கீழே இறங்கினார். 'விபத்தில் மாட்டிக் கொண்டுவிட்டாளோ' என்று அஞ்சி ஓடி வந்தார்.

அவர் வருவதற்குள் அவர்கள் இருவரும் சமாதானமாகி மோட்டார் சைக்கிளில் அவள் உட்கார்ந்த விதம், அவனைக் கட்டிக் கொண்ட விதம் அவருக்குப் பிடிக்கவில்லை.

அவர் வீட்டிற்குப் போனதும் முதல் வேலையாய் ரோஹிணியின் அப்பா அச்சுதனுக்கு போன் செய்தார். மிக அழகாகப் பற்ற வைத்தார்.

அப்பா அச்சுதனின் முதல் கேள்விக்கு ரோஹிணி யால் சரியாய் பதில் சொல்ல முடியவில்லை.

"யாரோட மோட்டார் சைக்கிள்ல போனே?"

"ஏன், எதுக்கு கேட்கறீங்க?"

நான்கு கேள்விகளுக்கும் சரியாகப் பதில் சொல்ல முடியாமல் அவள் அடி வாங்கினாள்.

## 12

"அந்த ஜாதியைக் கண்டாலே வெறுப்பு எனக்கு. அவன் எப்படி எனக்கு மருமகனாக வரமுடியும்? உட்கார்ந்து பேசக் கூட லாயக்கில்லாதவர்கள் அவர்கள். அவனிடம் எவ்விதம் மனம் பறி கொடுத்தாய்? பறி கொடுக்கும்படி என்ன விசேஷம் இருக்கிறது."

அப்பா அதிசயமும், ஆத்திரமுமாய் கேட்டார்.

"நீ என்ன ஜாதி? நீ மகாவீரனா? இதுவரை எத்தனை போருக்கு போயிருக்கிறாய்? யார் மானத்தைக் காப்பாற்றி யிருக்கிறாய்? எந்தக் கொள்ளையைத் தடுத்து நிறுத்தி யிருக்கிறாய்? அடுத்த வீட்டுக்கு போலீஸ் வந்தால், இறுக்கி கதவைப் பூட்டிக் கொண்டு 'இல்லை'யென்று சொல்கிறவன்தானே? வேலைக்காரியைக் கைப்பிடித்து இழுக்கத்தானே உன் வீரம் முயற்சித்தது?"

"தயவு செய்து ஜாதி பேசாதே அப்பா. எனது நண்பர் தெளிவான நண்பர். பொய்யில்லாத ஆள். கோப மில்லாத புத்தி. செயல் முடிக்கும் திடச்சித்தம். திட்ட மிடும் சுறுசுறுப்பு. ஒரு வருடமாக உற்றுப்பார்த்துவிட்டு இந்த மனிதரை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்."

அப்பாவும், மகளும் மலையாளத்தில் பேசிக் கொண்டார்கள்.

"இல்லை... இந்தக் கல்யாணம் நடக்காது. நான் சம்மதிக்க மாட்டேன்."

"உங்க சம்மதத்தை யார் கேட்டாங்க?"

"நீ எம் பொண்ணு, என் சம்மதம் இல்லாம எப்படிக் கல்யாணம் நடக்கும்?"



"இது என் கல்யாணம். எனக்குப் பிடிச்சவங்களைத் தான் நான் கல்யாணம் பண்ணிக்கணுமே தவிர, நீங்க சொல்றவங்களுக்கு நான் கழுத்தை நீட்ட முடியாது."

"உன்னைப் பேச விட்டது என் தப்புடி. நாயைக் கிட்ட வான்னா மூஞ்சி நக்குது. பொண்ணாச்சேன்னு செல்லம் கொடுத்தா எதிர்தா பேசற."

"நீங்க என்ன சொல்றீங்களோ அதை மட்டும் கேட்கறதுக்கு நாங்க என்ன அடிமையா?"

"ஒரு மலையாளி ஒரு மலையாளியைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும். அதுதான், அதுதான் மலையாளிக்கு அழகு."

"நான் மலையாளி இல்லை. மனுஷி. நான் மலை யாளிங்கறது ஒரு விபத்து. உலகம் என்பது கேரளா மட்டுமல்ல. உலகம் மிகப் பெரிது."

"பெரிசா உலகத்தைக் கண்டுகிட்டே... ரெண்டு வார்த்தை இங்கிலீஷில் பேசத் தெரிஞ்சுட்டா எல்லாம் அர்த்தமா? உலகம் இங்கிலீஷ் புக் இல்லை."

"ஆமா, உலகம் இங்கிலீஷ் புக் இல்லை. இங்கிலீஷ் ஒரு வாசல். தமிழ் ஒரு ஜன்னல், மலையாளம் ஒரு ஜன்னல். ஜன்னல் வழியா உலகம் பார்த்தவ, வாசல் வழியா வெளியே வந்திருக்கேன். உலகம் நல்லா தெரியுது."

"உனக்கு உலகம் தெரியலை. இது உடம்புக் கொழுப்பு. வாரத்துல நாலு நாள் கோழி சாப்பிட்டா ஆம்பளை தேடத்தான் செய்யும்."

"நான் ஆம்பளை தேடலை. ஒரு புருஷனைத்தான் தேடினேன். கிடைச்சிடுச்சு. கல்யாணம் பண்ணிக்கப் போறேன்."

"அது நடக்காதுடி குட்டி நீ இனிமே வேலைக்குப் போக வேண்டாம்."

"என்னைத் தடுக்காதீங்க.. நான் உயிரோட இருக்க மாட்டேன்."

"நீ செத்தாலும் பரவாயில்லை. ஒரு மலையாளி மலையாளியைத்தான்.."

"நோ, நெவர்."

"கத்தினே.. அடி பிச்சு எடுத்துருவேன்."

"நல்லா கத்துவேன்; உரக்கக் கத்துவேன்."

"வாசல் கதவைப் பூட்டு. கொல்லைக் கதவை வெளியே தாழ்போடு. நீ எந்த ஆபீஸ் போறே, பார்ப்போம்."

"மாடிலேர்ந்து தெருவில குதிப்பேன்."

"கொழுப்பெடுத்ததுங்களால் சாக முடியாதுடி."

"அப்படியா... அப்படியா..." அவள் மாடிக்கு ஓடினாள்.

அப்பா ஓடி அவள் கூந்தலைப் பிடிக்க, அவர் நெஞ்சில் குத்தினாள். அவள் அண்ணனும், அம்மாவும், சிற்றப்பனும், சித்தியும், பெரியப்பாவும், அவர் மகனும் அவளை வளைத்துக் கொண்டார்கள்.

'இந்த முரட்டுப் பிடிவாதம் ஆகாது' என்றார்கள். 'இத்தனை நாள் திருமணம் செய்யாதது பிசகு' என்றார்கள். 'அடங்கிக் கிட' என்று அதட்டினார்கள். 'மலையாளி அல்லாத ஒருவனை எப்படி ஒரு மலையாளி நேசிக்க முடியுமா?" என்று ஆச்சரியப்பட்டார்கள்.

அவள் துணிமணிகளைப் பெட்டியில் அடைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள். 'அவனிடம் போகப் போகிறேன்' என்ற சொன்னாள்.

"இருபத்து நாலு வயது வரை என் சோற்றைத் தின்றுவிட்டு என்னை எட்டி உதைக்கிறாயா? எனக்குத் தலைக்குனிவு தருகிறாயா? உன்னை உயிரோடு இருக்க



விடமாட்டேன், இந்த வீட்டை விட்டு உன் பிணம்தான் போகும்."

அவர் இடுப்பு பெல்ட்டை உருவி அவள் முதுகில் அடித்தார்.

அடி விழுந்த இடம் நெருப்பாய் சுட்டது. அவள் ஆத்திரமும், கோபமும் அதிகரித்தன.

"நான் விரும்பியவனைத்தான் நான் திருமணம் செய்வேன். வேறு எவனாவது எனக்குத் தாலி கட்டினால், என் பிணத்திற்குத்தான் கட்ட முடியும்."

அம்மாவும் கத்தினாள்.

"ஏன் தற்கொலை? நா... கொலை செய்து விடுகிறேன். அந்தத் திருப்தியாவது எனக்குக் கிடைக் கட்டும் சந்தோஷமாக ஜெயிலுக்குப் போகிறேன். என் சமூகம் என்னைப் போற்றட்டும்."

அப்பா பாய, மற்றவர் தடுக்க, வீட்டு ரகளை தெருவை எட்டியது.

தெரு நின்று பார்த்தது.

**நீ** ஏன் மகளை வேலைக்கு அனுப்புகிறாய். இந்த நாலாயிரம் ரூபாயில் என்ன கிடைத்து விடும் உனக்கு? காலா காலத்தில் கல்யாணம் செய்யவில்லையெனில் இதுவும் நடக்கும். இதற்கு மேலும் நடக்கும். நல்லவேளை பார்த்தவன் வந்து சொல்லி பாதியில் நிறுத்திவிட்டோம். இல்லையெனில் மானம் கப்பலேறியிருக்கும்.

ஆனால் தம்பி, ஜாதியை இழிவு சொல்லாதே. தமிழ் நாட்டில் இருந்துகொண்டு தமிழரைப் பழித்துப் பேசுவது நல்லதல்ல. இந்த விஷயத்தை அப்படி அணுகக் கூடாது.

மலையாளத்துப் பெண்கள் என்றால் உலகத்தில் அத்தனை பேரும் ஆசைப்படத்தான் செய்வார்கள். தவறு

நம் பக்கம் இருக்கிறது. குறிப்பாய் உன் மீது இருக்கிறது. ஆண் அழகனாய் ஒரு மாப்பிள்ளை ஏழு நாளைக்குள் நான் பார்க்கிறேன். அடிப்பதில் லாபமில்லை. பிடித்து வை. உன்னை அறியாது எதுவும் நடக்கக் கூடாதென்று இழுத்துப் பூட்டி வை.

அவள் தமிழ்நாட்டில் வளர்ந்தவள். கேரளத்தின் மகிமை அவளுக்குத் தெரியவில்லை. மலையாளியின் மகோன்னதம் அவளுக்குப் புரியவில்லை. ஏழு நாள்... மூன்று, நான்கு பையன்களோடு வருகிறேன். உடனே திருமணம் நடத்த தயாராய் இரு.

நீ அம்மாவாய் இருந்து என்ன புண்ணியம்? அப்பாவை எதிர்த்துப் பேசும் பெண்ணை வளர்த்திருக்கிறாய். தனக்கு எல்லாம் தெரியும் என்கிற திமிரைப் பெண்ணுக்குக் கொடுத்திருக்கிறாய். நீ அவளோடு இரு. அவளோடு பேசு, அந்தத் தமிழ் ஐயர் வீட்டில் ஒரு மலையாளப் பெண்ணை மதிக்கவே மாட்டார்கள் என்று சொல்லி வை. 'கேவலமாகப் பேசுவார்கள்' என்று சொல். 'அவனுக்கு ஆபீஸில் ஒரு முகம், வீட்டில் ஒரு முகம்' அதைக் கற்றுக் கொடு. 'நாலு மாதத்தில் நாறிவிடும்' என்று சொல்லி வை.

அதையும் தவிர, அவர்கள் ரவை உப்புமா உளுந்துவடை தின்பவர்கள். ஒரு மலையாளப் பெண்ணின் மனோரதங்கள் அங்கு மலர முடியாது. பேண்ட் சட்டையில் எந்த நாயும் குளிப்பாடியது போல நன்றாக இருக்கும். ஒரு மலையாளியின் உடல் வலிமை. ஒரு தமிழனுக்கு நிச்சயம் இல்லை. ஆனால் புத்திசாலிகள்.

அந்தப் புத்திசாலித்தனம் நம்மை அலுப்படைய வைக்கும். அவர்கள் பேசுவது போல் நம்மால் பேச இயலாது. அவர்கள் வேறு வகை, நாம் வேறு வகை.



அலுவலகத்தில் வித்தியாசம் பார்க்காமல் நடந்து கொள்வதுதான் நாகரீகம், அதற்கு வித்தியாசம் இல்லாமல் இருக்கிறோம் என்று அர்த்தமல்ல.

நமது கலாசாரம் தமிழர்களுக்கு ஒத்துவராது. தமிழர்கள் கலாசாரத்தை நம்மால் நினைத்துப் பார்க்க முடியாது.

கலாசாரம் மிக முக்கியம் என்று அவளுக்குச் சொல், 'அதுதான் நம்மை வளர்த்தது' என்று சொல்.

நாம் கலாசாரமாக இருக்கிறோம். நம்மால் கலாசாரம் வளர்ந்தது. கடல் மீன் ஆற்று நீரில் உயிர் வாழாது. ஆற்று மீன் கடல் நீரில் செத்துப்போகும். ஏரி மீன் வேறு குணம். குளத்து மீன் வேறு வகை.

மீன்கள் இனம் மாறி புணராது. சங்கோடு சேராது. நண்டோடு பேசாது. ஆமைகளோடு பேசவே பேசாது. எல்லாம் நீர் வாழ்வனதான். இது வேறு. அது வேறு. நாம் வேறு. தமிழ் ஐயர் வேறு.

அவர்கள் வீட்டுக்குள் புளித்த மோர் வாசனை வீசும். நம் வீடோ மாமிச நெடி, எவர்சில்வர், எவர்சில்வர் என்று இரும்புத் தட்டில் சாப்பிடுவார்கள். நமக்கு பீங்கான் இல்லாது வாழ முடியாது.

மகளோ, மருமகளோ வீட்டுத் தலைவனுக்கு சாப்பிடும் முன் பிராந்தி கொண்டு வந்து கொடுப்பாள். மது என்பதை தமிழ் பிராமணர்கள் 'பெரிய பாவம்' என்று அலட்டுவார்கள். குடிக்கிறவனோடு பேச மாட்டார்கள். குடித்துவிட்டு ஒருவன் வீட்டுக்குப் போனால் அந்த வீடே அலறும்.

நாம் சாக்தம். தாந்த்ரிக் உபாசனை. ஈரத் துணியை இறுகக் கட்டிக் கொடு மூன்று மணி நேரம் பூஜை செய்பவர்கள். அவர்கள் சாவுக்குத்தான் ஈர வேஷ்டி

கட்டுவார்கள். 'மடிவேட்டி, மடிவேட்டி' என்று அலறு வார்கள். நமக்கு காளிதான் குலதெய்வம், அவர்களுக்கு சிவன்.

திண்ணையில் உட்கார்ந்து வேத பாராயணத் தோடு அவர்கள் பூஜை முடிந்தது. கோயிலுக்கு அவர்கள் போவது கூட அரிது.

இப்படி பல நூறு வித்தியாசங்கள் இருக்கின்றன.

நான் அவர்களை குற்றம் சொல்லவில்லை. லட்ச ரூபாயை அவர்கள் வீட்டில் கொடுத்துவிட்டுப் போகலாம். பத்திரமாய் திருப்பித் தருவார்கள். சண்டைக்கு வரமாட்டார்கள்.

மலையாளிடம் மலையாளம் பேச வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். தெலுங்கனிடம் தெலுங்கு கற்க முயற்சி செய்வார்கள். ஆங்கிலத்தில் அடிவேர் வரை அறிந்துகொள்ள முயற்சிப்பார்கள். பயந்தவர்கள், பழிபாவத்திற்கு அஞ்சியவர்கள், சிக்கனமானவர்கள், சுத்தமானவர்கள்.

அற்புதமான நிர்வாகிகள். பேச்சில் மிக வல்லவர்கள். நீ இவளுக்கு நிறைய சொல்லிக் கொடு. விரட்டாதே. யாரையும் பழிக்காதே. உண்மையைத் தெளிவாக்கு."

பெரியப்பா, அப்பா அம்மாவுக்கு உபதேசித்து விட்டு மகனைக் காவலுக்கு வைத்துவிட்டு வெளியே போனார்.

வீடு மௌனம் கொண்டது.

"**யா**ர் மலையாளி, யார் தமிழன்...? என்ன புராதன மானப் பேச்சு. நீ என்ன கஞ்சி வெள்ளமா குடிக்கிறாய்? மரமேறிக் கள்ளா இறக்குகிறாய்? யானை பிடிக்கவா போய் வருகிறாய்? அல்லது களரி கற்றுக் கொடுக்கும் தொழில் செய்கிறாயா?



நீ ஒரு அலுவலகத்து நிர்வாகி, கண்ணன் ஒரு அலுவலகத்தில் அதிகாரி. நீ படிப்பது ஹிண்டு. அவன் படிப்பது இண்டியன் எக்ஸ்பிரஸ்.

மது, மாமிசம் எல்லாம் யார் வேண்டுமானாலும் சாப்பிடலாம். சைவம், அசைவம் என்பது மனசின் விஷயம், தனிப்பட்டோர் விருப்பம். எனக்கு மது அருந்து வோரைப் பிடிக்காது. நான் மூன்று மாதமாக முட்டை கூட தொடவில்லை.

நல்லவரும், கெட்டவரும் எங்கும் உண்டு. வல்ல வரும், அல்லாதவரும் எங்கும் உண்டு.

நான் நல்லவனா என்றுதான் பார்க்கிறேன். சோம்பலற்ற வல்லவனா என்றுதான் பார்க்கிறேன்.

இந்த வீட்டில் எப்போது காளி பூஜை நடந்தது? யார் மந்திர தந்திர ஜபம் செய்தது? வடமொழியை இந்தியர் களிடமிருந்து ஆங்கிலேயர் வெகு காலத்திற்கு முன்பு பிரித்தெடுத்து விட்டனர்.

ஆங்கிலேயர்கள் அரசாங்க உத்தியோகம் கொடுத்த வுடன், பிராமணர்கள், வடமொழியை விட்டுவிட்டு ஆங்கிலம் கற்றுக் கொள்ள ஓடினார்கள்.

அவர்களுக்குப் பின்னால் நீங்கள் ஓடினீர்கள். அந்நியரின் வருகையால் இந்தியா ஒன்றாயிற்று. இல்லை யெனில் தஞ்சையும், மதுரையும் தடியால் அடித்துக் கொண்டிருக்கும். கொச்சியும், தேனியும் வெட்டி மடிந்து கொண்டிருக்கும். அதே பிரிவை இன்றும் பேசாதீர்கள்.

நான் ஆவேசப்பட்டுக் காதலிக்கவில்லை. அவசரப் பட்டு முடிவெடுக்கவில்லை. என்னுடையது வெறும் ஆசையல்ல. ஆரவாரமில்லாத அமைதியான புருஷன் வேண்டுமென்று விரும்பினேன். அதனால் அவனைத் தேர்ந்தெடுத்தேன்.

வேறு ஒரு புருஷன் இனி என் வாழ்வில் இல்லை.

எத்தனை நாள் பூட்டி வைத்தாலும் இதுவே என் முடிவு."

அவள் தன் அறைக் கதவை சாத்திக்கொண்டு ஸ்டார் மூவீஸ் பார்க்க ஆரம்பித்தாள்.

வீடு தீவிரமாய் யோசித்தது.

# 13

"உலகத்திலுள்ள எல்லா மலையாளத்துமார்களுக்கும் அடியேனின் ஆயிரங்கோடி நமஸ்காரங்கள்." பெரியப்பா உற்சாகக் கூச்சலோடு உள்ளே நுழைந்தார்.

"என்ன சமாசாரம்?"

"உலகம் முழுவதும் மலையாளிகள் இருக்கிறார்கள் என்பது இப்போதுதான் தெரிகிறது. இதோ இந்தப் பையன் கனடா, இவன் நியூஜெர்ஸி, இவன் ஆஸ்திரேலியா, இவன் மாலத்தீவு, இவன் சிங்கப்பூர்."

அழகிய, படித்த, கெட்டிக்கார மலையாளப் பெண் வேண்டுமென்று இவர்கள் தவமிருக்கிறார்கள்.

நமது பெண்ணைப் பற்றி சிலர் கேள்விப்பட்டிருக்கிறார்கள். 'அந்த வாஷிங்மெஷின் கம்பெனியில் பி.ஏ.-வா...? நான் பார்க்கவே வேண்டாம். ஆள் அனுப்பி திருமணத்திற்கு நாள் குறி' என்கிறார்கள். குறிப்பாய் இந்த சிங்கப்பூர் பையன்; பத்து நாளைக்குள் திருமணம் ஏற்பாடு செய்யச் சொல்றான்.

உன் மகள் கல்யாணம், விஷயமே இல்லை. நீயும் உன் மனைவியும் பார்க்கவேண்டும் அல்லவா? அதனால் இன்று பிற்பகல் ஒரு பையனையும், நாளை காலை ஒரு பையனையும், நாளை மாலை ஒரு பையனையும் பெண்



பார்க்க வரச்சொல்லியிருக்கிறேன். மூன்றில் ஒன்று தகைந்துவிடும்.

அப்படி மூன்றும் உங்களுக்குப் பிடிக்காவிட்டால் இன்னொரு மூன்று வரன் உடனே ஏற்பாடு செய்கிறேன்."

ரோஹிணி, ஹாலில் உள்ள இன்டர்காமை உயிர்ப்பிக்கச் செய்து, மாடியிலுள்ள இன்டர்காமை காதில் வைத்து சகல விஷயங்களையும் கேட்டாள்.

வீட்டில் எல்லோரும் பகல் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும்போது, கார்ட்லெஸ் போனை பாத்ரூமிற்கு எடுத்துக் கொண்டு போனாள். அங்கிருந்து கண்ணனுக்கு போன் செய்தாள்.

"டேய், என்னை இன்னும் காதலிக்கிறாயா..."

"நிச்சயமாய், வெகு நிச்சயமாய் காதலிக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்."

"கண்ணா, என்னை எதற்காக காதலிக்கிறாய் அறிவா, அழகா, குணமா?"

"எல்லாமும்."

"இதில் ஏதேனும் ஒன்று குறைந்தால் தொடர்ந்து என்னை நீ காதலிப்பாயா?"

"உன்னைக் காதலிப்பது தவிர வேறு எதுவும் செய்ய எனக்குத் தெரியாது. இதில் குறைதல் கூடுதல் என்கிற விஷயமே இல்லை."

"கண்ணா, நான் அழகில்லை என்று என்னை ஒதுக்க மாட்டாயே?"

"நீ எலும்புக்கூடாக இருந்தாலும் எனக்கு நீதான் மனைவி. என்ன விஷயம் ரோஹிணி?"

"என்னைப் பெண் பார்க்க இன்று பிற்பகல் வருகிறார்கள். வந்தவர்களுக்கும், வரவழைத்தவர்களுக்கும்

ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்யப் போகிறேன். மறுபடி பேசுகிறேன்." போன் துண்டித்தாள். குதியலோடு தன் அறைக்குப் போனாள்.

கண்ணாடி முன் நின்றுகொண்டாள் தலையை விரித்து பேய் போல ஆடினாள். எல்லா முடியும் முன் பக்கம் கொண்டு வந்து யானைபோல் அசைந்தாள்.

தலையைச் சுற்றி தலைமுடியால் ஆலவட்டம் போட்டாள்.

நேரே நின்று கொண்டையாக்கிக் கொண்டாள். இரண்டாய் பிரித்து ரெட்டை ஜடை போட்டாள். அவிழ்த்து ஒற்றை ஜடை போட்டாள். கத்திரிக்கோலால் கழுத்து வரை முடியை வெட்டி கிராப்புத் தலையாக்கிக் கொண்டாள். தலை முழுவதும் நீர் தடவி சோப்பு குழைத்து அப்பாவின் ரேசரால் முடியனைத்தையும் வழித்துக் கொண்டாள், மொட்டையாய் நின்றாள்.

கண்ணாடி முன் நின்று தன்னைப் பார்த்து வாய்விட்டு சிரித்தாள். குதித்தாள். நடனமாடினாள். விழிகளை உருட்டி துடைப்பத்தை, கத்திபோல் பிடித்து தன்னை அழகுப் பார்த்தாள்.

அறையைப் பெருக்கி சுத்தமாக்கி தலைக்கு ஸ்கார்ப் அணிந்து கொண்டாள்.

மூன்று மணிக்கு அவர்கள் வர வேண்டும். அம்மா இரண்டு மணிக்கு படியேறி வந்தாள்.

ரோஹிணி கதவைத் திறந்ததும் சிரிப்போடு இருந்த அம்மாவின் முகம் உறைந்து போயிற்று. வீறிட்டு அலறினாள். மாடிப்படியில் விழுந்து விடுவதுபோல் ஓடினாள்.

மகள் தற்கொலை செய்து கொண்டு விட்டாள் என்பதுபோல நடுக்கூடத்தில் உட்கார்ந்து அழத் தொடங்கி விட்டாள்.



வீடு மிரண்டு மாடிக்கு ஓடிவந்தது. பெரியப்பா, பெரியப்பாவின் மகன், அண்ணன், அண்ணி, பாட்டி எல்லோரும் ஓடி வந்தார்கள்.

அப்பா ஓடிவந்து அவள் முகத்தில் அறைந்தார். அவர் அவள் கழுத்தை நெரிக்கத் துவங்கினார். அவள் அப்பாவின் வயிற்றில் எட்டி உதைக்க, அலறிப் பின்னால டைந்தார். கண்ணாடி டம்ளரை அவளை நோக்கி வீசினார்.

கண்ணாடி டம்ளர் சுவரில் மோதி அடிப்பாகம் அவள் காலை குத்தியது. குபுக்கென்று ரத்தம் சிந்தியது. தரையில் சிதறியது.

பெரியப்பாவின் மகன் அவரை இறுக்கி இழுத்துப் போனார்.

அண்ணி அவள் காலில் ஈரத்துணி வைத்து அழுத்தினாள். "நரம்பு அறுந்துவிட்டது, தையல் போட வேண்டும்" என்று கூவினாள்.

அண்ணன் வண்டியெடுக்க, அவளை தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்கள். 'கதவு தகடு கிழித்து விட்டது' என்றார்கள்.

"ஏன் மொட்டை அடித்திருக்கிறாள்?" என்று ஆஸ்பத்திரியில் கேட்க, பதில் சொல்லாது விழித்தார்கள்.

**ரோ**ஹிணி வார்டுபாயிடம் நூறு ரூபாய் கொடுத்து கண்ணனை ரகசியமாய் அழைத்து வரச் சொன்னாள்.

"லவ் மேட்டர் வீட்டுல ஒத்துக்கல. கொஞ்சம் உதவணும்" என்றாள்.

"இதுக்காகவாம்மா மொட்டை அடிச்சுகிட்ட?

உனக்காக என்ன வேணா செய்றேம்மா" வார்டுபாய் கண் கலங்கினான்.

தமிழர்கள் காதலை உயர்வாக மதிக்கிறவர்கள். காதலுக்காக எதையும் செய்பவர்கள். காதலர்களை சோத்து வைக்க வேண்டுமென்று ஆதங்கப்படுபவர்கள்.

அந்த வார்டுபாய் ஆட்டோ பிடித்து கண்ணனைக் கூட்டி வந்தான். கண்ணன் அவளைப் பார்த்ததும் அதிர்ந்து போனான். அழுகை வராமலிருக்க உதடு கடித்தான். கண்களில் கட்டிய ஜலத்தை நிறுத்த, மூக்கு உறிஞ்சினான்.

மெல்ல அருகே வந்து அவளைப் பூவாய் அணைத்துக் கொண்டான்.

"கண்ணா, இந்த மொட்டைத் தலைச்சிய கல்யாணம் பண்ணிக்குவியா?"

"ரோஹிணி, முடி வளர்ந்திரும், முடி வளராட்டியும் கண்ணெல்லாம் வீங்கியிருக்கே?"

அவள் நடந்ததைச் சொன்னாள்.

"அந்த வீட்டுல இருக்க முடியாது கண்ணா, என்னைப் பார்க்க, பார்க்க எங்கப்பாவுக்கு ஆத்திரம் வரும். ஒண்ணு, என்னை அடிப்பாரு. இல்லை தன்னை காயப் படுத்திப்பாரு. அதனால.."

"சொல்லு, அதனால."

"என்னைக் கூட்டிட்டுப் போய் கல்யாணம் பண்ணிக்க, கண்ணா."

"தாலி கட்டுறது மட்டும் கல்யாணமில்ல ரோஹிணி. சட்டப்படி செய்யணும். நாளைக்கு என் வக்கீலைப் பார்த்து எல்லா ஏற்பாட்டையும் பண்ணிட்டு வர்றேன். ரோஹிணி பயப்படாதே. நீயில்லாம எனக்கு வாழ்க்கையில்லை. நீயில்லாம எதுவுமே இல்லை. உன்னைத் தவிர நம்ம கல்யாணத்தை வேறு யாருமே தடுக்க முடியாது."



அவன், அவள் முதுகு தடவினான். உச்சி நெற்றியில் முத்தமிட்டான்.

அவள், "அம்மா வருகிறார்" என்றதும் அறையை விட்டு வெளியே போனான்.

வக்கீலைக் கலந்து ஆலோசித்து பதிவு அலுவலகத்தில் விண்ணப்பித்து விட்டு வந்தான்.

தனது அலுவலகத்திற்குப் போய் முதன்மை சர்வீஸ் இன்ஜினீயரிடம் அவளுக்காக லீவ் சொன்னான். அவளைத் தான் திருமணம் செய்யப் போவதாய் சொன்னான். அலுவலகத்தில் எல்லோருக்கும் இந்தச் செய்தி பரவியது.

அலுவலகத்தில் உள்ள ஓர் மலையாளி, இந்த விஷயத்தை அவள் தந்தையிடம் தெரிவித்தான்.

அவள் தந்தை, அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்குப் போனார். எல்லாக் கதவுகளையும் பூட்டிக் காவலிருந்தார்.

இரண்டு அண்ணன்களையும் அலுவலகத்திற்கு அனுப்பி கண்ணனோடு பேச வைத்தார்.

"ஏதாவது காசு வேண்டுமென்றால் கொடுத்து விடுகிறோம். திருநின்றவூரில் ஒரு கிரவுண்ட் நிலம் இருக்கிறது. உன் பெயரில் மாற்றித் தருகிறோம். எல்லாவற்றையும் மறந்துவிடு. அவளை விட்டு விலகிவிடு. 'விலகிவிட்டேன்' என்று எழுதிக் கொடு.

எங்கள் பெண் மீது தவறிருப்பதால் இந்த உடன்படிக்கைகளை முன் வைக்கிறோம். இல்லையெனில் அரிவாள், கத்தி என்கின்ற விஷயங்கள்தான் உன் முன் வைக்கப்பட்டிருக்கும்."

அவர்கள் மிரட்டினார்கள். கண்ணன் சிரித்தான்.

"உங்கள் மனோநிலை எனக்குப் புரிகிறது. நீங்கள் அவளுக்கு பார்த்து வைக்கிற எந்த மணமகனையும் விட, நான் சிறப்பாக இருப்பேன். நீங்களும், நானும் சிரித்துப் பேசுகிற காலம் ஒன்று வரும். நீங்களும், நானும் ஒரே இடத்தில் உட்கார்ந்து உணவு அருந்துகிற காலம் வரும். அவளைத் தொந்தரவு செய்தீர்கள் என்றால் போலீஸ் வரும்.

என் ஜாதியில் யாருமே கத்தி எடுத்ததில்லை. சட்டம்தான் எங்களுக்கு பெரிய கத்தி. ஆங்கில மொழி தான் எங்கள் சவுக்கு. அமைதிதான் எங்கள் கேடயம். நான் ஜெயிப்பேன் என்பது உறுதி.

இவர், இவரால் எனக்கு தீங்கு நேரிடும், என்று எழுதி எனது வக்கீலிடம் சீல் வைத்துக் கொடுத்திருக்கிறேன். என் நிலையை விளக்கி பாதுகாப்பு கருதி போலீஸ் கமிஷனரிடம் விண்ணப்பித்திருக்கிறேன். நீ கத்தியால் குத்தி நான் செத்துப்போனால், அத்தோடு விஷயம் முடிந்துபோகாது. நான் செத்த மறுநிமிடமே உன் வீட்டிற்கு போலீஸ் வரும். என் நண்பர்களால் இது பெரிதுபடுத்தப்படும்.

சரி, இதுவொரு பக்கம் இருக்கட்டும். என்னைப் பற்றி என் வீடு பற்றி இதில் எழுதி இருக்கிறேன். என் படிப்பு, என் எதிர்காலத் திட்டம் எல்லாம் சொல்லியிருக்கிறேன். நான் மலையாளி இல்லை என்பதைத் தவிர வேறு எந்தக் குறையும் என்னைப் பற்றி நீங்கள் சொல்ல முடியாது.

சண்டை இடுதல் எளிது. எனக்கு ரோஹிணியை திருமணம் செய்து கொடுங்கள். அவளை மிகச் சந்தோஷமாக வைத்துக் கொள்வது என் பொறுப்பு."

அவர்கள் யோசித்தார்கள். வெளியேறினார்கள்.



"முடியாது..." அப்பா கர்ஜித்தார். "அவன் நல்லவனாக இருக்கட்டும்... கடவுளாக இருக்கட்டும்... எனக்கு அக்கறையில்லை... எனக்கு என் தளவாடம் முக்கியம். தோட்டத்தில் என்கிற தளவாடு எவ்வளவு கம்பீரம். அரசர்களுக்கு தளபதியாய் வாழ்ந்த குடும்பம், ஒரு ஐயருக்கு பெண் கொண்டு போய் கொடுக்குமா? புலி வேட்டைக்குப் போன குடும்பம், எலி வேட்டைக்குப் போகுமா? இந்தக் குடும்பத்தில் ஒரு தமிழனை நான் உள்ளே நுழைய விட முடியாது. ஒரு ஐயரை என் குழந்தை மணமகனாகத் தேர்ந்தெடுக்க முடியாது. அதைவிட அவள் வாழாவெட்டியாய் புருஷன் இல்லாது வாழ்வது மேல்.

தயவு செய்து யாரும் சமாதானம் பேச வராதீர்கள். சமாதானம் பேச யாரும் போகாதீர்கள்.

இந்த நிமிடம் வரை அந்தப் பையன் மீது எனக்குக் கோபமில்லை. என் மகள் பல் காட்டிச் சிரித்தாள் என்றால், அவனைக் குற்றம் சொல்லி என்ன பயன்? ஆனால், நான் வருந்தியது தெரிந்த பின்னாலும், என் பெண் பின்னால் சுற்றினான் என்றால் நான் சும்மா இருக்க மாட்டேன்".

"கண்ணா, இதுல ஒரு சிக்கல் இருக்கு. அந்த ஆளை நீ நேர பார்க்கவே இல்லை, போய் கை கூப்பி பொண்ணு கேட்கவேயில்லை. அந்த ஆளுக்கு நீ யாருன்னே தெரியாது. நீ போய் பொண்ணு கேட்டு அந்த ஆளு முடியாதுன்னா நல்லது. உங்க அப்பா, அம்மாவோட போயி கேட்டு உங்களை துரத்தி அடிச்சான்னு வச்சுக்க, கேஸ் படு ஸ்டிராங்காயிடும். அதுக்குப் பிறகும் உன்னை அடிச்சான்னு வச்சுக்க. பெரிய க்ரைமாயிடும். 'அட்டம்ட் மர்டர்'னு ஈஸியா கேஸ் போடலாம்." கண்ணனுடைய வக்கீல் பேசினார்.

"உன்னை அவன் அடிக்கணும்னு நான் பேசலை. உன் பக்கம் நியாயம் ஸ்டிராங்கா இருக்கணும்னு பார்க்கறேன்.

அதையும் தவிர, தனிப்பட்ட முறையில் என்னுடைய அட்வைஸ், உங்க அப்பா, அம்மாவைக் கூட்டிட்டுப் போய் பொண்ணு கேளு. அவன் உங்களைப் புரிஞ்சுக்கறதுக்கு ஒரு வாய்ப்பு கொடு.

பையனைப் பார்த்து பொண்ணை கொடுக்கறதுன்னு இந்தக் காலத்துல தீர்மானம் பண்ண முடியுமா? பெத்தவாளைப் பார்த்தா ஒரு நல்ல அபிப்பிராயம் வராதா?

சுமுகமாக முடிக்க என்ன முயற்சி உண்டோ அதை பண்ணித்தானே ஆகணும்? அதனால சொல்றேன், நீ ஊருக்குப் போயி உங்க அப்பாகிட்டப் பேசு."

**க**ண்ணன் மறுநாள் கும்பகோணம் வந்து இறங்கினான். அங்கிருந்து இருள்நீக்கி என்னும் கிராமத்திற்கு பஸ் ஏறினான்.

அப்பா வெயிலில் நின்று நேற்றைய ஹிண்டு பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். வெயிலில் நின்றால்தான் அப்பாவால் ஹிண்டு பேப்பர் படிக்க முடியும். அந்தக் கிராமத்திற்கு நேற்றைய ஹிண்டுதான் இன்றைக்கு கிடைக்கும்.

வெளிச்சத்தில் அப்பாவின் குச்சி குச்சியான கால்கள், கோவணம் எல்லாம் வேட்டியினூடே தெரிந்தன.

அப்பா ஆங்கிலப் பேராசிரியராக முப்பது வருடங்கள் இருந்து ஓய்வு பெற்றவர். உலகில் எதுவும் முக்கியமில்லை. விதிக்கும் வரை உயிரோடு இருந்துவிட்டு இறந்து போ என்கிற நிலை.

"மலையாளப் பொண்ணா...? பேஷ் பண்ணிக் கோயேன்." அப்பா சொல்ல, அம்மா முகம் தூக்கினாள்.



கும்பகோணம், நீடாமங்கலம், மன்னார்குடி, சுவாமிமலை என்கிற இடங்களில் இருந்தெல்லாம் அண்ணன்மார்களும், அக்காமார்களும் அவன் காதல் விஷயம் கேட்டுவிட்டு பஸ் பிடித்து ஓடி வந்தார்கள்.

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? மாமிசம் திங்கற மலையாளத்துப் பொம்பளைய எப்படி வீட்டுக்குள்ள கூட்டிண்டுவருவ? உடம்பப் பார்த்து அசந்துட்டாயா?"

ஒரு அக்கா, வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேசினாள்.

கண்ணன் அமைதியாகத் தான் திருமணம் பதிவு செய்து வைத்திருப்பதை சபையில் சொன்னான். அந்த தஞ்சாவூர் அசந்துபோய் அமைதியாயிற்று.

## 14

**அ**வன் உறுதியைப் பார்த்து வீடு கலவரம் அடைந்தது.

"பைத்தியமாடா பிடிச்சிருக்கு உனக்கு? யாரை யார் கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு இல்லையா?

கல்யாணம்ங்கறது என்ன நீ ஒரு பெண்ணோட படுத்துக் கட்டிப் புரள்றதா?... ஆயிரம் விஷயத்துல அது ஒரு விஷயம்.

உனக்குப் பொண்டாட்டியா வர்றவ உங்கப்பாவுக்கு பிரியமா சாதம் போடணும். உங்க அம்மாவுக்கு ஓடி ஓடி உதவி செய்யணும். எங்க நாத்தனார், எங்க மச்சினன்னு கம்பீரமா வளைய வரணும், நீர் நீரோட சேர்ந்த மாதிரி, இந்த வீட்டுக்குள்ள அவ இரண்டறக் கலந்துடணும்.

நம்ம வீட்டுல ஒரு துக்கம்னா, நம்மாத்துக்கு ஒரு கஷ்டம்னா உன் பொண்டாட்டியோட அப்பாவும்

அண்ணாவும், தம்பியும் தமக்கையும் பதறி அடிச்சுட்டு ஓடி வரணும்.

அது மட்டுமில்லடா, இந்த வீட்டுக்கு ஒரு பொண் வந்தா, அவ நன்னாருக்கான்னு தெரிஞ்சு, நம்ம வீட்டுப் பொண்ணை அவா பக்கத்துல இருந்து ஆசையா கேட்டு வரணும்.

'நாங்க எங்க பொண்ணுக்கு சுமாராதான் செஞ்சோம். நீங்க உங்க பொண்ணுக்கு சுமாரா செஞ்சா போதும்'னு சொல்லணும். 'அதெல்லாம் முடியாது. எங்க பொண்ணுக்கு நாங்க என்ன தீர்மானம் பண்ணியிருக்கமோ அந்தச் சீர் எல்லாத்தையும் நாங்க செய்வோம். கூட செய்தா ஒரு தப்புமில்ல' அப்படின்னு அவர் பேசணும். 'அடடா, எத்தனை நல்ல மனுஷா' அப்படின்னு அவா நம்மைக் கொண்டாடணும்.

'குரு பெயர்ச்சிக்கு ஆலங்குடிக்கு வரட்டுமா'ன்னு உன் மச்சினனோட மாமனார் கேட்பார். 'ஆஹா வாங்க'ன்னு நாம கடிதாசு எழுதணும். அவர் காஞ்சிபுரத்துலயோ மயிலாப்பூர்லயோ இருப்பார். நாம அங்க போறபோது ராஜ உபசாரம் நடக்கும்.

நாம கொஞ்சங் கொஞ்சமா ஒரு இறுக்கமான கூட்டமா மாறுவோம். இதுக்கு மத்தவங்களை அவமதிக்கறதாகவே அர்த்தம் இல்லை. வேற ஜாதிய இழிவுபடுத்தல. இந்த ஊர் கிராம அதிகாரி. உங்க அணணாவுக்கு ரொம்ப சிநேகிதம். தீபாவளிக்கு ஆடு வெட்டுவான். பொங்கலுக்கு கோழி அறுப்பான். நல்லதுக்கும், கெட்டதுக்கும் மாமிசம் சாப்பிட்டே ஆகணும். சந்தோஷம்னா தண்ணி போட்டே ஆகணும். ஆனா நம்ம வீட்டு மேல ரொம்ப மரியாதை. அண்ணாவும் அவருக்கு நிறைய செய்வார்.



எத்தனை சிநேகிதமானாலும் பொண்ணு கொடுத்து பொண்ணு வாங்க முடியாதுடா. உங்கப்பாவுக்கு வயித்துல கட்டின்னு ஆஸ்பத்திரில சேர்த்தப்ப கிராமத்து அதிகாரி ரத்தங் கொடுத்தான். அதுக்காக சம்பந்தம் வச்சுக்க முடியுமா? அவன் வேற, நாம வேற.

அவ பேரென்ன... ரோஹிணியா? குருப் பெயர்ச்சிக்கு கூட்டிண்டு வா. நாங்கெல்லாம் பார்க்கணும் அவ என்ன உடுத்திக்குவா... சுடிதாரா, மிடியா? இல்ல... கீழ டைட் பேண்ட், மேல தொள தொள சட்டையா? எது வேணா உடுத்திண்டு வரட்டும். நாங்க சுத்தி நின்னு ஆன்னு பார்க்கறோம்.

எந்த ப்ரா போட்டுண்டா எங்களுக்கு நன்னாயிருக்கும்னு ரகசியமா கேட்டுக்கறோம்.

ஒருவேளை அவளுக்கு சமைக்கத் தெரிஞ்சா, அவளை சமையலறைக்கு கூட்டிண்டு போய் மலையாள சமையல் தெரிஞ்சுக்கறோம். அவளோட வெளிய வாசல் சுத்தறோம். ஆனா ஹோமம் பண்றபோது அவளைப் பக்கத்துல நிக்க வைக்க முடியுமா? பாட்டி தெவசத்தின் போது சாப்பிடச் சொல்ல முடியுமா?

என்னத்த தெவசம்னு அவளுக்குத் தோணும். உனக்கும் பரவும். அவளை மடிசாரோட நிற்கவைக்க வெட்கப்பட்டுண்டு நீ தெவசமே வேண்டாம்ப. மூத்தோர் வழிபாட்டை நிறுத்தலாமா? கல்லறைத் திருநாளுன்னு கிறிஸ்தவாளுக்கு இருக்கே. முஸ்லீம்கள் சமாதியை ரொம்ப மரியாதையா வச்சுக்கறாளே. நம்ம தர்மத்தை நாம வச்சுக்கக் கூடாதா? தெவசம் கேலியா, அத கை விடுறது தப்பில்லையா.

உங்க அண்ணா தெவசம் பண்ணணுமான்னு கேட்டு, நான் ஆமா பண்ணணும்னு சொல்வேன். வேலைன்னு

பார்த்தா பெரும்பாடுதான். ஆனா- விட மனசு வரல. எங்க அப்பா பண்ணின மூத்தோர் வழிபாட்டால, நான் நன்னாருக்கேன். நான் பண்ணி, என் குழந்தைங்க நல்லாயிருக்க வேணாமா, அந்தச் சங்கிலி அறுந்து போலாமா.

அந்த ரோஹிணி, விருந்தாளியா வரலாம். மருமகளா வரவே முடியாது."

எம்.ஏ. ஆங்கிலம் படித்து இருள்நீக்கியில் குடித்தனம் பண்ண வந்த மன்னி, அவனுக்கு எதிரே தரையில் உட்கார்ந்து கொண்டு தன் கட்சியை எடுத்துரைத்தாள்.

"நீ எதுக்கு இத்தனை பேசற கமலா, அவன் ஒண்ணுந் தெரியாதவனா. அவனும் ஒரு இன்டலக்சுவல் இல்லையா. ரோஹிணி வேணும்னா, அவனை இங்க வரவேண்டானும் சொல்லு. ரோஹிணி வேண்டாம்னா, நாங்க வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணி வைக்கிறோம்னு சொல்லு."

"அப்படி அறுக்கப்படாது." கமலா மன்னி பதறினாள்.

"நீங்க இப்படிப் பேசினா, கண்ணனும் பதிலுக்குப் பேசுவார். முடிவு ரொம்ப தப்பா இருக்கும். அப்பாவை கூப்பிட்டு பேசச் சொல்லுங்களேன். எதுக்குப்பதறணும்."

அப்பா மன்னியைப் பார்த்து சிரித்தார்.

"அவனோட ஏழாம் இடம் களத்திர ஸ்தானத்தை கேது நேரடியா பாக்கறான். அவனுக்கு வேற ஜாதில திருமணம், நிச்சயம், அதனால நீங்க காயப்படாம இருக்கறதுக்கும், அவன காயப்படுத்தாம இருக்கறதுக்கும் முயற்சி பண்ணுங்கோ. இது விதி. முன்கூட்டியே எழுதப் பட்ட விஷயம். எப்பவோ முடிஞ்ச காரியம்."

"அப்படி விடலாமா." மன்னியின் கண்களில் நீர் ததும்பியது.



"வேற எதுவும் சரியா வராது கமலா. சுவாமி மேல பாரத்தப் போட்டு அவன் போக்குல விடு."

"அவன் பொண் பார்க்க கூப்பிடறான். சம்பந்தம் பேசறதுக்கு வாங்கன்றான்." அண்ணா கூச்சலாய் கத்தினார்.

"விருப்பமிருக்கிறவா போலாம்."

அப்பா அமைதியாய் பதில் சொன்னார்.

"நீங்க போப்போறேளா." அண்ணா மறுபடியும் உரக்கக் கத்தினார்.

"அவன் கூப்பிட்டா போவேன்."

வீடு துணுக்குற்றது.

"போய் என்ன செய்வேள்?" மன்னி கேட்டாள்.

"இவன் எம்புள்ள. ரொம்ப நல்லவன். மகா கெட்டிக்காரன். வாக்குத் தவறாதவன். தர்ம சிந்தனை இருக்கறவன். அவனுக்கு குரு உச்சம். சுக்கிரன் ஆட்சி, ஆயுள் காரகன் சனி. அதனால ஆயுசு கெட்டி. தாராளமா உங்க பொண்ணைக் கொடுக்கலாம்னு சொல்வேன்."

"எதையாவது கரைச்சு மூஞ்சல ஊத்துவான்." அண்ணா சீறினார்.

"பெரியவாளை அப்படிப் பேசப்படாது." மன்னி கண்டித்தாள்.

"நான் தொடச்சுண்டு வந்துருவேன் கணேசா." அப்பா நிதானமாகப் பேசினார். கோபமே இல்லாமல் சிரித்தார்.

"அப்ப நான் பேசினதெல்லாம் தப்பா- நம்ம குடும்ப பழக்க வழக்கங்கள் முக்கியமில்லையா?" மன்னி அப்பாவைப் பார்த்து கேட்டாள்.

"நம்ம குலத்து வேதம் ரிக் வேதம். எங்க தாத்தாவுக்கு அது முழுக்க தெரியும். எங்கப்பாவுக்கு பாதி தெரியும்.

எனக்கு ரெண்டு சாகைதான் தெரியும். உன் புருஷனுக்கு அதுவும் தெரியாது. எல்லா கலாசாரமும் மாறும். எல்லா மொழியும் மாறும். வாழ்க்கைங்கறதே மாறுதல் அடையறதுதான்."

ஒரு மாறுதலுக்கு எதிர்ப்பான புலம்பலும், ஆதரவான கூச்சலும் எப்பவுமிருக்கும். மாறுதலை தடுத்து நிறத்தவே முடியாது."

"கடைசியா என்ன சொல்றேள்?

"நாம் எல்லாரும் போய் அந்தப் பெண்ணை பார்ப்போம்."

அப்பா அப்படிப் பேச - சிவந்த உதடுகளோடும், அழகிய கண்களோடும், மழித்த தலையோடும் இருக்கிற ரோஹிணியின் உருவம் அவன் மனதில் தோன்றியது.

"அப்பா" என்று மெல்ல கூப்பிட்டு விஷயம் சொன்னான்.

"எதுக்கு இத்தனை முரட்டுத்தனம்?" அதை கேட்டு விட்டு அப்பா கவலைப்பட்டார்.

"சரி, பெற்றவனை உறவுகளை அந்தப் பெண் ஆத்திரம் மூட்டியிருக்கிறாள். இப்ப போனா அவா உரத்தக் குரலில் பேசத்தான் செய்வா, ஆறு மாசம் கழிச்சு போவோம்.

அவளை நீ பார்க்க நேர்ந்தா என் சம்மதத்தை, என் ஆசீர்வாதத்தைச் சொல்லு. இந்தா நான் ஆறு வருஷமா குரு சக்கரத்தோட போட்டுண்டிருக்கிற ஆலங்குடி குருபகவான் டாலர். இதை அவ கழுத்தில இருக்கிற செயின்ல கோத்துக்கச் சொல்லு. அமைதியாக இருக்க வழி சொல்லிக் கொடு. எல்லாம் நல்லபடியாக முடியும்னு உற்சாகப்படுத்து. அவளுக்கு ஒரு கெடுதலும் நேர்ந்துடக் கூடாது. நான் பிரார்த்தனை செஞ்சு சங்கற்பம் பண்ணி



தினமும் ஆயிரத்தெட்டு காயத்திரி சொல்வதாக அவகிட்ட சொல்லு. ஏதாவது ஒரு பிள்ளையாருக்கு அவளை நேர்ந்துக்கச் சொல்லு.

மடியில் நீல சரஸ்வதியோட உட்கார்ந்துண்டிருக்கற வல்லப கணபதி கல்யாணத்தை கூட்டி வைக்கும் தெய்வம். அந்தப் படம் வாங்கிக் கொடு. அதற்கு தினமும் பூப்போடச் சொல்லு. அவ கஷ்டம் தீரும். நல்லது நடக்கும்.

கண்ணா, என் எதிர்ல வந்து உட்கார்ந்துக்கோ. உன்ன யாரும் எதுவும் செய்யாம இருக்கறதுக்கு உச்சிஷ்ட மகா கணபதி மந்திரம் சொல்லித் தரேன். காத்தால, மத்தியானம், சாயங்காலத்துல சொல்லு. பிருமச்சர்ய விரதம் இரு. உன் மனசுல அமைதி படியும். அந்த அமைதி உனக்கு சரியான வழியைக் காட்டும். கொந்தளிப்பான சமயத்திலும் கோபப்படாம இருக்க பயிற்சி கிடைக்கும்.

கண்ணா, போராடறதுங்கறது இடைவிடாம முட்டி மோதறது இல்ல. கவனமா காத்திருக்கறதுதான், சரியான நேரம் அமையற வரைக்கும் வரை காத்திருக்கணும். விழிப்போடு காத்திருக்கறவனுக்கு சரியான நேரம் எதுங்கறது சந்தேகத்துக்கு இடமில்லாம தெரிஞ்சுடும். நீ சென்னைக்குப் போ, கண்ணா. தாங்கவே முடியாத பிரச்சினைன்னா அவளை அழைச்சிண்டு இங்கே வந்துரு இந்த இருள்நீக்கி கிராமத்திலிருந்து அவளை யாரும் தூக்கிண்டு போக முடியாது. நாங்க உன் பின்னால இருக்கோம். கவலைப்படாமல் போயிட்டு வா."

ஊருக்குப் போகும் முன் அப்பாவை கண்ணன் நமஸ்கரித்தான். நமஸ்கரிக்கும்போது விம்மி விம்மி அழுதான்.

"அப்பா, உங்க மனசை எந்த வகையிலாவது புண்படுத்தியிருந்தால் தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள்" என்றான். அவர் சிரித்து அவன் முதுகு தடவி வழியனுப்பினார்.

கண்ணன் சென்னைக்குப் போன பிறகு அந்த இருள்நீக்கி வீடு மௌனத்தில் ஆழ்ந்தது.

மன்னி அந்த மௌனம் கலைத்தாள்.

"என்ன அநியாயமிது? நீங்க பெரிய அத்வைதியா இருக்கலாம். உலகத்துல இருக்கற எல்லா உயிரும் ஒண்ணுன்னு நினைக்கறவரா இருக்கலாம். அதை கண்ணன் கல்யாணத்துலதான் காமிக்கணுமா? குழந்தை விளக்கைத் தொட ஆசைப்பட்டா விட்டுறலாமா? எங்கயோ பத்தி பொசுங்கிப் போயிட்டா, நம்ம குழந்தைக்குதானே வேதனை? அதுக்கு இப்பவே கண்டிச்சா என்ன தப்பு?"

"எதுக்குப் பொண்ணைப் பார்க்கணும்?" அப்பா கேட்டார்.

"அவ நல்லவளா, கெட்டவளான்னு தெரிய வேண்டாமா?"

"இன்னும் ஒரு வாரத்துல தெரிஞ்சுரும்." அப்பா பேசினார்.

"எப்படித் தெரியும்?" மன்னி நொந்துபோய் கேட்டாள்.

"அவன்கிட்ட வேண்டாம்னு சொன்னா, செய் வேன்னு சொல்வான். அந்தப் பொண்ணை மறந்துருன்னா முடியாதும்பான். விட்டுடுடான்னா மாட்டேம்பான். அதுனாலதான் இதமாப் பேசி அனுப்பிச்சேன். இந்த வீடு உன் பின்னால நிற்கும்னு சொல்லி அனுப்பிச்சேன்.



இவ்வளவு நல்ல குடும்பத்துக்கு தப்பான ஒரு பொண்ணைக் கொண்டு வர்றமேன்னு அவன் நாலு தடவை யோசனை பண்ணுவான். அதுக்கும் மீறி அவசியம்னா புடிச்சுக்குவான். இல்லைன்னா விட்டுரு வான்.

விளக்கு சுட்டுத்துன்னு வச்சுக்கோ. குழந்தை கிட்ட போகவே போகாது. அலறும். எண்ணெய் தடவி மடில போட்டு தூங்க பண்றதுக்குத்தான் நாம இருக்கமே. மறிச்சு சண்டை போடுறதைவிட, இந்த வீட்டு மதிப்பை அவனுக்கு எடுத்துச்சொல்லி அனுப்புறது நல்ல தில்லயா?"

அவன் சென்னைக்கு வந்தான். அறையைத் திறந்து கடன்கள் முடித்து அழுக்குப் போக குளித்து, உச்சிஷ்ட மகா கணபதி மந்திரம் சொல்ல உட்கார்ந்தான்.

யாரோ கதவு திறந்தார்கள். "நாயிண்ட மகனே" என்று பாய்ந்தார்கள்.

அடுத்த ஏழு நிமிடத்தில் அவன் அறை முழுவதும் குலைந்து போயிற்று.

## 15

"டேய் கண்ணா, பதிலுக்கு அடிக்காத, இது முடியாதுடா. உன்னை அடிச்சவங்க, முட்டாளுங்க, பட்டுன்னு அடிச்சுடுவாங்க. திரும்பி நாம சட்டையப் பிடிச்சா 'ஸோரி... ஸோரி'ன்னு ஸாரி கேட்பாங்க. அடிக்காம விட்டோம்னு வச்சுக்க... பயந்துட்டோம்னு நினைச்சுக்கிட்டு பேசிப் பேசி அடிப்பான்.

பன்னெண்டாயிரம் ரூபா டி.வி.-யை உடைச்சுட் டானேடா. எனக்கு வயிறெரியுது. வா... இப்பவே

போவோம். சரசரன்னு நாப்பது அம்பது கல் உட்டுட்டு வரலாம்."

"அதெல்லாம் வேணாம்ப்பா. போலீஸுக்கு சொல்லலாம். கண்ணனுது லவ் மேட்டர். இப்ப கம்ப்ளெயிண்ட் பண்றது பின்னாடி உதவும். அந்தப் பொண்ணை ரைட்ராயலா கூட்டிட்டு வந்துடலாம்."

"எப்படிப்பா கூட்டிட்டு வர்றது..?"

மேன்ஷன் நண்பர்கள் அதிர்ந்து போய் தலைக்குத் தலை பேசினார்கள்.

"நண்பர்களா அடுத்து செய்யற வேலை கண்ண னோட லவ்வுக்கு இடைஞ்சல் இல்லாத இருக்கணும். போலீஸ்ல சொல்றது சுலபம். ஆள் காமிச்சு, ரெண்டு நாள் உள்ளே உட்கார வச்சுடலாம். ஆனா லவ்வுக்கு இடைஞ்சல் வருமா? அதைப் பார்க்கணும். நாம ரௌடின்னு காமிக்கிறதா முக்கியமான விஷயம்? இல்லை."

ஒரு நண்பர் நிதானமாகப் பேசினார்.

"இப்ப போய் மலையாளி, தமிழன்னு பேசக்கூடாது. கண்ணா, நீயும் அப்படி நினைக்கக் கூடாது. பொண்ணைப் பெத்த அப்பன் கோவத்துல இருக்கான். அது ரொம்ப நியாயம்.

ஊர்ல இருக்கிறவங்கெல்லாம் லவ் பண்றதுக்காக எவனும் பொண்ணு பெக்கலை. தான் பெத்த பெண்ணுக்கு தானே முன் நின்று கல்யாணம் பண்ணி வைக்கணும்னு தான் ஒவ்வொரு மனுஷக்கும் ஆசை.

ஜாதி, மொழி, ஊர் வித்தியாசம் மட்டுமில்லை. கண்ணன் யாருன்னு அவருக்குத் தெரியாது.

'தன் பொண்ணு தப்பு பண்றாளோ? அவ சரியா வாழாத போயிடுவாளோ?' அப்படிங்கற பயம். அதனாலயும் வன்முறையில இறங்கியிருக்கலாம். வீட்டுக்குப் போலீஸ் வரும்னு பெண்ணைப் பெத்தவன் ஒரு பயத்துல காத்துட்டிருப்பான்.

ஒண்ணும் பண்ணாத, விட்டுரு. ரெண்டு நாள் கழிச்சு அவனுக்கு போன் பண்ணு. 'நான் போலீஸுக்கு போன் பண்ணலை. ஏன்னா, நீ என் வருங்கால மாமனார். உன்னை அசிங்கப்படுத்த விரும்பலை'ன்னு சொல்லிடு. இப்ப நீ நிதானமா இருக்கறது அவரையும் நிதானப் படுத்தும்.

ஆமா, என்ன சொல்லி அடிச்சான்?" நிதானமா நண்பர் யோசனையோடு கேட்டார்.

"'எல்லாத்தையும் நிறுத்திடுவியா... எல்லாரையும் நிறுத்திடுவியா'ன்னு அடிச்சாங்க."

கண்ணன் பதில் சொன்னான்.

"நீ எதை நிறுத்தினே?"

"நான் எதையும் நிறுத்தலையே..."

"அப்ப யார் நிறுத்தினா?"

"ரோஹிணி நிறுத்தியிருக்கணும்."

"எதை?"

"பெண் பார்க்க வர்றதை."

"அந்தப் பொண்ணு மொட்டையடிச்சிக்கிட்டான்னு சொன்னியே?"

"அதுக்கப்புறமும் ஏதோ தொந்தரவு பண்ணியிருக்கணும்."

"உன் நிலைமையே இப்படின்னா, அவ நிலைமை எப்படியோ? பாவம்."

கண்ணன் ஆடிப்போனான்.

உள்ளிருந்த கோபம் சட்டென்று அழிந்தது. அவளைப் பார்க்கும் தாபம் பெரிதாய் எழுந்தது.

என்ன வேதனைப்படுகிறாளோ? என்னென்ன கஷ்டங்கள் அனுபவித்தாளோ? எனக்கு நடந்த விஷயங்கள் அவளுக்குத் தெரியுமோ? தெரியாதோ? இன்று எப்படியாவது அவளைப் பார்த்தாக வேண்டும்.

என்ன செய்யலாம்- எப்படிப் பார்க்கலாம்?

இரவோடு இரவாக காம்பௌண்ட் சுவர் தாண்டிக் குதித்து உள்ளே போய், குழாயைப் பிடித்து ஏறி மேல் மாடிக்கு போய் அங்கிருந்து அவள் அறைக்குள் இறங்கி விடலாமா?

என்னால் முடியுமா? இப்படிச் செய்வது சரியா?

என் படிப்பு, என் உத்தியோகம், என் குல கௌரவம் எல்லாம் இதை அனுமதிக்குமா...? என்னால் குழாய் பிடித்து ஏற முடியுமா- மாட்டிக் கொண்டால் அடி தாங்க முடியுமா?

ரொம்ப சின்னப் பையன் போல் உணர்ச்சிவசப்படுகிறேனோ...? அளவுக்கு மீறி தவிக்கிறேனோ?

எப்படி அவளைச் சந்திப்பது? எப்படிப் போவது?

கண்ணன் தீவிரமாக யோசித்தான். அடுத்த அறைக் கதவு தட்டினான்.

"சுந்தரம்" என்று கூப்பிட்டான்.

நிதானமாய் பேசிய அந்த நண்பர் கதவு திறந்தார்.

"சுந்தரம். நான் ரோஹிணியை பார்க்கப் போகப் போறேன். ராத்திரி காம்ப்பௌண்ட் சுவர் தாண்டி, பைப் வழியா மாடிக்கு ஏறப் போறேன். ரோஹிணியோட பேசிட்டு அடுத்த நடவடிக்கை எடுக்கப் போறேன்.

ஒரு வேளை காலைல நான் வராட்டி போலீஸுக்கு போன் பண்ணு."



"டேய், நானும் வேணா வரேன்டா, வாசல்ல நிக்கறேன்."

"அந்த மாதிரி மாட்டாதீங்க. வாசல்ல நின்னா உங்களுக்கும் வம்பு வரும். நான் எப்படியாவது வந்துருவேன்."

- கண்ணன் உறுதியான ஷூக்களை அணிந்து கொண்டு மோட்டார் சைக்கிளில் ரோஹிணியின் வீடு நோக்கிப் போனான்.

சுந்தரம், மேன்ஷனில் இன்னொரு ஆளிடம் கண்ணனைப் பற்றி சொல்லிக் கவலைப்பட்டார்.

கண்ணன் போன பதினைந்தாவது நிமிடம், மேன்ஷன் வாசலில் ஆட்டோ வந்து நின்றது. ரோஹிணி அதிலிருந்து இறங்கினாள்.

சுந்தரம் திகைத்தான்.

"ரோஹிணி, ரோஹிணி" என்று கத்தினான்.

ரோஹிணி திகைத்து நின்றாள்.

"என் பேரு எப்படி உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நீங்க மொட்டை அடிச்சிருக்கீங்களே. இங்க வந்திருக்கீங்களே."

"எல்லாம் சொன்னாரா?"

"அவன் சொல்லாமதான் இருந்தான். உங்க வீட்டு மனுஷங்கதான் என்ன ஏதுன்னு நாலு பேருக்குச் சொல்லும்படி வச்சுட்டாங்க."

"எங்க அப்பா வந்தாரா?"

"எந்த நாய் வந்ததுன்னு தெரியலை. பெரிய ரௌடி மாதிரி, கண்ட மேனிக்கு எல்லாத்தையும் உடைச்சுட்டுப் போயிட்டான். உள்ள வாங்க."

கண்ணனின் அறைக் கதவைத் திறந்து உடைக்கப் பட்ட சாமான்களைப் பார்த்தாள்.

"கண்ணன் எங்கே? சாப்பிட போயிருக்காரா?"

அவள் உள்ளே நுழைந்தாள்.

"கடவுளே.. மறந்தே போயிட்டேன். அவன் இப்ப உங்க வீட்டுக்கு இல்ல போயிருக்கான்."

"என்ன.." அதிர்ந்தாள்.

"அங்க போயி என்ன பண்ணப் போறார்?"

"உங்களைப் பார்க்கறதுக்கு குழாய புடிச்சு மாடியேறி.. என்னவோ சொன்னான்."

"ஐயோ என்ட அச்சன் கொன்னு களையும்." அவள் பதட்டத்தில் தமிழ் மறந்தாள்.

"ஒரு ஆட்டோ பிடிக்கணுமே." பதட்டப்பட்டாள்.

"வேணாங்க. நீங்க இருங்க. அவன் வந்துரட்டும்."

"எப்படி வருவார்?"

"போய் பார்த்துட்டு நீங்க இல்லேன்னு தெரிஞ்ச பிற்பாடுதான் வரணும்."

"அதுக்குள்ள மாட்டிட்டாருன்னா?"

"பேசாம போலீஸுக்கு சொல்லிடலாமா?"

"வேணாம். நுழைஞ்சு பெரிசு பண்ணிடுவாங்க. நுழையாம தடுக்கலாம் வாங்க."

"நீங்க வெளியே வந்தது தெரியுமா?"

"தெரியாது. இருட்ல தப்பிச்சு ஓடி வந்தேன்."

"கடவுளே... நீங்க இப்ப உள்ள போனீங்கன்னா, உதை வாங்குவீங்களே."

"அது பரவாயில்லே. கண்ணன் மாட்டக்கூடாது. தயவு செய்து ஆட்டோ பிடிங்க."



"தான் ஆறேழு பேரைக் கூட்டிக்கறேனே?"

"வேணாம். ஆத்திரம் அதிகமாவும், நீங்க மட்டும் வாங்க, போதும். அதுவும் விலகி நில்லுங்க போதும்."

அவள் தெருவில் இறங்கி விரைந்து ஓடினாள். சுந்தரம் தொடர்ந்து ஓடினார். மேன்ஷன் நண்பர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தனர்.

ஓடுகிற ஆட்டோவில் அவள் நிலைகொள்ளாமல் தவித்தாள்.

அவன் காம்ப்பௌண்ட் சுவர் ஏறினான்.

"இன்னும் கொஞ்சம் சீக்கிரமா போப்பா." ஆட்டோகாரனைக் கெஞ்சி கேட்டாள்.

அவன் செம்பருத்திச் செடி மறைவினில் உட்கார்ந் தான்.

ஆட்டோ சினிமா தியேட்டரிலிருந்து வெளிவந்த கும்பலில் சிக்கிக் கொண்டது.

அவன் உட்கார்ந்தபடியே கூட்டத்தை நெருங்கினான்.

ஆட்டோ அவசரப்பட்டு ஒரு சைக்கிளை இடித்து விட, சைக்கிள்காரன் ஆட்டோக்காரனைக் கொத்தாய் பிடித்துத் தூக்கினான்.

"வேணாம்ப்பா, வேணாம்ப்பா. ப்ளீஸ் விட்டுடு." அவள் கெஞ்சினாள்.

அவன் சாக்கடைப் பைப்பை அசைத்துப் பார்த்து விட்டு மூன்றே எக்கில் முதல் மாடி வராண்டாவைப் பற்றிக் கொண்டு நின்றான்.

கம்பி வளையத்தில் கைவிட்டு உள்பக்கம் தாழிட்டிருந்த கதவைத் திறந்தான்.

நல்லவேளை, மேல் மாடிக்குப் போக வேண்டிய அவசியமில்லை, கதவு திறந்து சட்டென்று வராண்டாவில் உட்கார்ந்து கொண்டான்.

"ரோஹிணி.." மெல்லக் கூப்பிட்டான்.

ரோஹிணியின் அம்மா, ரோஹிணியின் அறைக்குள் படுத்திருந்தாள். கண்ணனின் குரல் கேட்டு பயந்தாள். எழுந்து ஜன்னல் வழியே, யார் என்று தேடினாள்.

"தோ பார்டா.. மொட்டை ஆட்டோகாரனுக்கு சப்போர்ட்டு வருது."

சினிமா பார்த்துவிட்டு வந்த அலட்டல் கூட்டம் ஆரவாரித்தது.

"கேஸு.. கேஸு.." ஒருவன் கூவினான்.

"த்தோடா.. மாமா இறங்கறான்."

கும்பலாய் இருந்ததாலேயே அந்தக் கூட்டம் அதிகமாய் பேசியது.

மதுவின் போதையும் சினிமா வெப்பமும் இருட்டும் அவர்களை அப்படிப் பேச வைத்தன.

"ரோஹிணி." எழுந்து நின்று கண்ணன் கூப்பிட்டான்.

ஜன்னலுக்குப் பின்னே ஒரு ஆண் உருவம் நிற்பதைப் பார்த்து ரோஹிணியின் அம்மா 'ஐயோ' என்று கத்தினாள்.

கீழே கவலையோடு உலவிக் கொண்டிருந்த ரோஹிணியின் தந்தையின் காதில் கூச்சல் கேட்டது.

"அம்மா, நான் கண்ணன்."

"எதுக்கு இங்கே வந்தே."

"ரோஹிணி இருக்காளாம்மா."

"அவ உன்னைப் பார்க்கறேன்னு போனாப்பா. அவங்கப்பாவுக்குத் தெரியாம போயிருக்கா."

"ஐயோ.." இந்த முறை கண்ணன் கத்தினான்.

அந்தக் குரல், கீழே உள்ள ரோஹிணியின் தந்தை காதில் விழுந்தது.



"யாருடி அது?.." அவர் கீழிருந்து கூவினார்.

"ஒண்ணுமில்லை. இடிச்சுக்கிட்டேன்." அம்மா மறுமொழி சொன்னாள்.

"மேன்ஷனுக்கா போனா?"

"ஆமாம்."

அவன் பைப் வழியே கீழே இறங்கினான்.

தபதப என்று சுவர் நோக்கி ஓடினான். தாண்டிக் குதித்தான்.

"யாருடா அது?..." ரோஹிணியின் அப்பா எழுந்திருந்தார். தோட்டப்பக்கம் விளக்குப் போட்டார். மோட்டார் சைக்கிள் சீறியது. அவர் வாசலுக்கு ஓடி வந்தார். அதற்குள் தெரு திரும்பி விட்டது.

"பட்டா...லாட்ஜுக்கு பெண்ணை இட்டுனு போறது.. வழியில எவனாவது இளிச்சவாயன் கிடைச்சா சதாய்க்கறதா?... உங்களை ஒழிச்சாதாண்டா ஊரு உருப்படும். அடக்கி வச்சாதான், நாடு நாடாயிருக்கும்."

அந்த வழிப்போக்கன், அவளையே பார்த்துக் கொண்டு ஆட்டோக்காரன் தலையிலடித்தான்.

ஆட்டோக்காரன் அவனை பிடித்துத் தள்ள... அவனைச் சேர்ந்தவர்கள் ஆட்டோக்காரனைத் தாக்கினார்கள்.

"சுந்தரம், நான் வேற ஆட்டோல போறேன்." அவள் இறங்கி கூட்டத்துக்குள் நடந்தாள்.

இன்னொரு ஆட்டோவில் ஏறி உட்கார்ந்து கொண்டு தன் வீடு சொன்னாள்.

"மாமூ.. புறாவைத் துரத்து மாமு. ஆட்டோக்காரன் இன்னாத்துக்கு?"

"மொட்டை அடிச்சிருக்கேடா?"

"இப்பல்லாம் ஸ்டேஷன்ல பலான பொண்ணுங்களுக்கு மொட்டையடிச்சிடறாங்களாம்."

"இது பலானதுன்ற?.."

அவர்கள், அவளைத் தொடர்ந்தார்கள்.

அவன் வண்டி, சினிமா தியேட்டரை நெருங்கியது.

# 16

**வீ**ட்டை விட்டு ஒரு பெண் வெளியே வருவது மிக எளிது.

ஆனால், அதற்குப் பிறகுதான் இருக்கிறது உண்மையான சோதனை. தன் வீட்டை ஒரு பெண் புறக்கணித்து விட்டாள் என்று தெரிந்தால் ஊர் அவளை மதிப்பதில்லை. அவளை சந்தேகத்தோடு சமூகம் பார்க்கத் துவங்குகிறது. ஊரிலுள்ள உதவாக்கரைகள் அவளை உபயோகப்படுத்திக் கொள்ள பேயாய் பறக்கிறார்கள்.

சுயமாய் ஒரு பெண் போராடத் தனித்து நிற்க மிகுந்த மன உரம் தேவை. இந்த மன உரம் வீடால் வளர்க்கப்பட்ட பெண்ணுக்கு இருப்பதில்லை. வீட்டை விட்டு வெளியேறிய எல்லாப் பெண்களுக்கும் முகத்தில் இடைவிடாத ஒரு மிரட்சி வந்துவிடுகிறது. இந்த மிரட்சியை சூட்சுமம் உள்ளவர்கள் புரிந்துகொள்கிறார்கள். அத்துமீற ஆரம்பிக்கிறார்கள்.

வீட்டை விட்டு வெளியேறிய பெண், அடுத்த பாதுகாப்புக்குத் தெளிவாய் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

வினோதமாய் அவள் அலைக்கழிந்தது அங்குள்ள சிலருக்கு ஆவலைத் தூண்டியது. ஆண்கள் நாடகக்காரர்கள். பெண்கள் பாதுகாப்பாய் இல்லை என்றால்



எல்லா அங்கங்களையும் உற்றுப் பார்ப்பார்கள். கூட துணையிருப்பது தெரிந்தால், 'அடடே... லேடீஸ் இருக்காங்களா' என்று பம்முவார்கள். கூட வந்த துணை வசதியாக, வலிமையாக இருப்பின் சட்டென்று அந்தப் பெண்ணை ஆண்கள், 'சகோதரி' என்று அழைப்பார்கள்.

**ஆ**னால், நல்லவேளையாக அடுத்த பத்து நிமிடத்தில் அதே தியேட்டர் வாசலில் கூட்டத்திலிருந்து ஆட்டோ கிளம்பும்போது கண்ணன் வந்துவிட்டான். வேற்று முகங்கள் சூழ்ந்த அந்த பத்து நிமிடத்தில் ஒரு பாதுகாப்பின்மையும், பாதுகாப்பின் அவசியத்தையும் அவள் தெளிவாக உணர்ந்தாள். கண்ணனை இன்னும் இறுக்கிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்கிற விஷயத்தை புரிந்துகொண்டாள். தன் காதல் பற்றி இன்னும் திடமானாள்.

அவளை "இன்னாம்மே..." என்று அந்த தெருவோரப் பொறுக்கி கூப்பிட்டபோது கண்ணன் வந்துவிட்டான்.

ஆட்டோவிலிருந்து துள்ளி இறங்கி, கண்ணனுடைய மோட்டார் சைக்கிளில் தாவி உட்கார்ந்து கொண்டாள்.

"இந்த நாய் என்னைத் தொடர்கிறான். ஏளனமாய் பேசுகிறான்." ஆங்கிலத்தில் சொன்னாள்.

"என்னடா...?" கண்ணனுக்கு எல்லா கோபமும் சேர்ந்து கண்பார்வையில் வெறியாய் நின்றது.

"நாஸ்தி பண்ணிடுவேன்." பல் கடித்து முஷ்டி மடக்கினான்.

எல்லாச் சண்டையிலும் வலுவைவிட வெறிதான் முக்கியம். அந்த வெறியைக் கண்டு, தொடர்ந்தவர்கள்

ஒதுங்கினார்கள். மோட்டார் சைக்கிள் ஜனக் கூட்டத்தைப் பிளந்துகொண்டு மறுபக்கம் போயிற்று.

சுந்தரம் இதை ஆட்டோவிலிருந்து பார்த்தார். நிம்மதியானார். ஆட்டோவில் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

மோட்டார் சைக்கிள் பின்னே அவனை இறுக்கக் கட்டிக்கொண்டு அவன் முதுகில் முகம் சாய்ந்தபடி அழுதாள். சிக்னலில் நிற்கும்போதுகூட அவள் மொட்டைத் தலையை வினோதமாகப் பார்த்தார்கள்.

'அவசரப்பட்டு கோரமாக்கிக்கொண்டு விட்டோமா?' என்று ஒருகணம் யோசித்தாள். மேன்ஷனுக்கு வந்து சேர்ந்ததும் நண்பர்கள் சூழ்ந்துகொண்டார்கள்.

"எதுக்குங்க மொட்டையெல்லாம் அடிச்சிக்கணும்? நீங்க என்ன படிக்காதவங்களா? போலீஸுக்கு போன் பண்ணி, 'எங்கப்பா கொடுமைப் படுத்தறாரு'ன்னு ஒரு வார்த்தை சொன்னா அழகா இட்டாந்து இங்க விட்ருப் பாங்களே?"

"சரி, மேன்ஷன்ல இருக்கலாம். ஆனா, எவ்வளவு நாளைக்கு? பகல்ல எல்லாரும் வேலைக்குப் போயிரு வோம். அப்ப சரியான காவல் இருக்காது. கண்ணா, இவங்களை வைக்கறதுக்கு சரியான இடம் எது தெரியுமா? உங்க வீடுதான். உங்க கிராமம்தான்.

நாட்டுப்புறத்துல ஐயரு வீட்டுக்குப் படியேறி எவனும் எதுவும் செய்துவிட முடியாது. உன் சொந்த ஊர் எதுன்னு யாருக்கும் தெரியாது. கூட்டிட்டுப் போ. கல்யாணம் பண்ணிக்க. அப்புறம் திருவல்லிக் கேணிலேயோ, மாம்பலத்திலேயோ குடித்தனம் வச்சுக் கலாம். உடனே சரியாகாது."



"ஏங்க ரோஹிணி, வேற டிரஸ் இருக்கா? இல்லை இதானா? தயவு செய்து ஒரு ஐயர் வீட்டுக்கு இப்படிப் போகாதீங்க. அங்க காலா காலத்துக்கும் குத்திக் காமிப்பாங்க. நான் ஐயரு. அதனால சொல்றேன். கல்யாணம் ஆகி முத முதல்ல மாமியார் வீட்டுக்குப் போகும்போது, நல்லா விருந்து சாப்பிடணும்கிறதுக்காக ஒரு பெக் பிராந்தி சாப்பிட்டுப் போயிட்டேன். இன்னிக்கும் எங்க மாமியார் இதைச் சொல்லி அலம்பல் பண்ணுவா."

"கண்ணா... புடவை, வேஷ்டி வாங்கி கூட்டிட்டுப் போ. நீங்க மொட்டையடிச்சது எனக்குப் பிடிக்கவே யில்லை."

"கண்ணன் வீட்டுக்குப் போய் எப்படிச் சமாளிக்கப் போறீங்களோ தெரியலை. அது கிராமம். எதையும் எடக்காகவே பேசும்."

நண்பர்கள் மாறி, மாறி ஆலோசனை சொன் னார்கள். அவரவர் வேதனைப் போல அவஸ்தைப் பட்டார்கள்.

கண்ணன் தன் துணிகளைப் பெட்டியில் திணித்துக் கொண்டு வெளியே கிளம்பினான். நண்பர்கள் ஒரு டாக்ஸி கொண்டு வர, மவுண்ட்ரோட்டில் புடவைத் துணிமணிகள் வாங்கினான்.

ஊரில் மொட்டைத் தலையைப் பார்த்து மன்னியும் அம்மாவும் என்ன சொல்வார்களோ என்று கவலைப் பட்டான். 'யார் என்ன சொன்னாலும் இவள் என் மனைவி' என்று சமாதானம் செய்து கொண்டான்.

தாம்பரத்தில் வண்டி ஏறினான். வண்டி வரும் வரை நண்பர்கள் துணையாக இருந்தார்கள். கும்பகோணத்தில் இருந்து விடியற்காலையில் மன்னார்குடி பஸ் பிடித்து,

மன்னார்குடியிலிருந்து வேறு பஸ் மாறி இருள்நீக்கிக்கு போனான். குளம் தாண்டினான். ஊருக்குள் நுழைந்தான்.

குளத்தில் மாரியம்மன் கோயில் பூசாரி குளித்துக் கொண்டிருந்தார்.

"வாங்க தம்பி" என்று அவனைக் கூப்பிட்டு விட்டு அவளையே வினோதமாகப் பார்த்தார்.

மண்சாலையில் மாரியம்மன் கோயில் தாண்டி, வலப்பக்கம் திரும்பினான். முழங்கை அகலத் துணிபோல ஒரு அக்ரஹாரம் அவள் கண்களுக்குத் தெரிந்தது. கொஞ்சம் பயமாக இருந்தது.

அவள் கேரளத்தையே சரியாகப் பார்த்ததில்லை. சுமாரான டவுனிலே இருந்ததில்லை சென்னைதான் அவளுக்கு எல்லாம். பாம்பேயும், டெல்லியும் நன்கு தெரியும். பெங்களூர் மிகவும் பிடிக்கும். இந்தக் கிராமத்தில் எத்தனை நாள் இருப்பது...? எப்படி இருப்பது...?

ஒரு வேளை அப்பா தேடி வந்தால் இங்கிருந்து எப்படித் தப்புவது?

அவளை வாசலில் நிற்க வைத்துவிட்டு உள்ளே போனான்.

"அப்பா, ரோஹிணி வந்திருக்கா."

ரெண்டு நிமிடத்தில் வீடு மொத்தமும் வாசலுக்கு வந்தது. அவளை வினோதமாய் பார்த்தது.

'ஏன் என்னாச்சு?' அவள் தலையைப் பார்த்து திகைத்தது.

"உள்ளே வா... உள்ளே வா... வலது கால் எடுத்து வச்சு உள்ளே வா."

அப்பா அழைத்தார்.

அவள் உள்ளே வந்து, அப்பாவை நிமிர்ந்து பார்த்து கண் கலங்கினாள்.



"பயப்படாதே- நான் இருக்கேன். குளிச்சிட்டு காபி சாப்பிடு. அவசியம்னா ரெஸ்ட் எடுத்துக்கோ. இல்ல... எங்காத்து மனுஷாளோட சகஜமாப் பழகு. நீ சகஜமாப் பழகினா, அவா ரொம்ப நன்னா பேசுவா. நிறைய அரட்டை அடிப்பா-

மனசு விட்டுப் பேசு. இந்தப் பக்கத்து மனுஷாளைக் கெட்டியாப் பிடிச்சுக்கோ. இந்த வீடு உனக்குப் பின்னால நிற்கும். நான் வாக்கு தரேன். இந்தா..." அவர் மன்னியை கை நீட்டி அழைத்தார்.

மன்னி முன்னேறி வந்து நின்றாள்.

"நம்மாத்துப் பையன் கூட்டிண்டு வந்துட்டான். அப்படி கூட்டிண்டு வந்த பிறகு அது பத்தி விமர்சனமே பண்ணப்படாது. இவ கொஞ்சநாள் இங்கே இருப்பா. அதுவரைக்கும் அவளைப் பிரியமா பார்த்துக்க வேண்டியது உன் பொறுப்பு. அவளுக்கு குழம்பு செய்யத் தெரியலை. கோலம் போடத் தெரியலைன்னு பின்னால சிரிக்க வேண்டாம்.

அவளுக்குத் தெரிஞ்சது உனக்குத் தெரியாத இருக்கும். உனக்குத் தெரிஞ்சது அவளுக்குத் தெரியாத இருக்கும். பரஸ்பரம் சுத்துக்கறதுதான் கெட்டிக்காரத் தனம்".

அவள் குளித்து புடவை உடுத்தி வந்த பிறகு அப்பா சகல விஷயமும் கேட்டார். இருள்நீக்கி கிராம அதிகாரியை அழைத்து அவளைப் பற்றி சொன்னார். கிராமத்தில் முக்கியமான மனிதர்களிடம் உதவி கேட்டார்.

"கண்ணன் மனசுக்குப் புடிச்சுக் கூட்டியாந் துட்டான். நீங்களும் சரின்னு சொல்லிட்டீங்க. அத்தோட விஷயம் முடிஞ்சு போச்சுல்ல? வேற எவன் வந்துருவான்.

பொண்ணைத் தேடிக்கிட்டு வந்தா வுட்ருவமா? இனி ஒரு குருவி இடம் மாறினாலும் உத்துப் பார்ப்போமில்ல..."

"யாரும் வரப் போறதில்லை. வந்தாலும் கவலையில்லை. ஆனா, வேற யாரும் வர்றதுக்கு முன்னாடியே நானும் என் பெரிய புள்ளையும், மருமகளும் பட்டணம் போலான்னு இருக்கோம்."

"அது ஏன்?"

"பொண்ணு பெத்தவன் கலவரப்படுவான்யா. 'கலவரப்படாத. உன் பொண்ணு இங்க இருக்கா'ன்னு தந்தி கொடுத்துட்டு, அவன் எதிரப் போய் 'என்ன சொல்றே'ன்னு நிக்கவேண்டியததான்."

"ஜாக்கிரதையா போயிட்டு வாங்க." ஊர் விடை கொடுத்தது.

அப்பா, மறுநாள் ரோஹிணி வீட்டு வராண்டாவில் ஏறி நின்றார்.

"ஒரு அடி தாங்குவியாடா நீ? எம்பொண்ணு வீட்ல இருக்காளா.. இல்லே பாம்பேல வித்துட்டியா?" பத்து நிமிடம் அந்த மனிதன் கத்தி ஓயும் வரை யாரும் பேசவில்லை.

அவருடைய மனைவி மெல்ல வந்து முதுகில் கை வைத்து "போதும்" என்று சொன்ன பிறகு அடங்கினார்.

"இந்தக் கல்யாணத்துக்கு நான் ஒத்துக்க மாட்டேன். நீங்க போயிட்டு வரலாம். பொண்ணு ஓடிப் போன கோபத்துல என்னன்னமோ பேசிட்டேன். எனக்கு உங்க மேலயும் கோபமில்லை. உங்க புள்ளை மேலயும் கோபமில்லை. எனக்கு என் பொண்ணு மேலதான் கோபம், அவ மேல வருத்தம்.

நாம பாத்துக்கறதுக்கோ, பேசிக்கறதுக்கோ ஏதுமில்லை. நீங்க போகலாம்." கை கூப்பினார்.



ரோஹிணியின் தாயார் பின்னிருந்து, "அவள் உடைகளைக் கொடுத்து விடலாமா?" என்று கேட்டதற்கு, "வெட்டிக்கொலை பண்ணிடுவேன்" என்று சீறினார்.

பிறகு சிறிது நேரம் மௌனமாக இருந்தார். "சரி, கொண்டு வந்து கொடு" என்றார்.

அந்த அம்மாள் மன்னியை உள்ளே வரச் சொன்னாள். மன்னி தயங்கினாள்.

அப்பா உள்ளே போகச் சொன்னார்.

இரண்டு பெட்டித் துணிகள் தயாராக எடுத்து வைக்கப்பட்டிருந்தன.

அந்த அம்மாள் ஒரு சிறிய லெதர் பேக்கை மன்னியிடம் கொடுத்தாள். "இதுல இருபத்தோரு சவரன் நகை இருக்கு. இதை ரோஹிணிகிட்ட கொடுத்திடணும்."

மன்னி "ஐயையோ.." என்று பின்னால் போனாள்.

"எல்லாம் சரியாப் போகும். அப்படிச் சரியாப் போகுங்கற எண்ணத்துலதான் இதெல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்யறேன்."

"கண்ணன் அப்பாகிட்ட கேட்கணும்." மன்னி மறுத்தாள்.

"அனுமதி கேட்டா கிடைக்குமா? கௌரவம் பாக்கற ஆண்களுக்கு நடுவுல நாம வாழ்க்கை நடத்தறோம். என் நிலைமை உனக்கு புரியலையா? அவ தனிக்குடித்தனம் நடத்தணும்னா ஏதாவது வேண்டாமா? இந்த நேரத்துல தைரியமா உதவி செய். நான் உன்னை வாழ்க்கை முழுக்க மறக்க மாட்டேன்."

அவர்கள் வேலைக்காரனை விட்டு ஆட்டோ கொண்டு வரச் சொன்னார்கள். பஸ் ஏற்றி அனுப்பினார்கள்.

அவர்கள் வரும்வரை கண்ணனும், ரோஹிணியும் கோயில், கோயிலாய் சுற்றினார்கள். வயல் வயலாய் அலைந்தார்கள். வயலுக்கு நடுவே இருக்கற கருப்புசாமி கோயிலுக்குப் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

பெட்டியையும், துணிமணிகளையும் பார்த்ததும் அப்பா சமாதானமாகிவிட்டார் என்பதைப் புரிந்து கொண்டாள். பெட்டியைத் திறந்து அழுதாள். பெட்டிக் குள்ளே அடிப்பாகத்தில் ஐம்பதாயிரம் ரூபாய் காசு கற்றைக் கற்றையாய் இருந்தது. அம்மாவின் கடிதமும் இருந்தது.

'அங்கேயாவது பெரியவர்கள் பேச்சைக் கேட்டு அடக்கமாய், அமைதியாய் இரு. பலரறிய திருமணம் செய்து கொள். சடங்குகளுக்கு மதிப்பு கொடு. தெய்வத்தை மறுக்காதே. குழந்தை பெறுதலே திருமணத்தின் லட்சியம். குழந்தை பெறுதலைத் தடுக்காதே, தள்ளிப் போடாதே.

ஆணும், பெண்ணும் சமமல்ல... ஆனால், சமமாய் நடத்தப்பட வேண்டும். ஒரு சமயம் உயர்ந்தும், மறு சமயம் தாழ்ந்தும் பணியாற்ற முடியும். பணிவிடைகள் செய்ய முடியும். பணிவிடைகள் பரஸ்பரமானவை.

மறுபடி நம் வீடு சமாதானமாகி அழைத்தால் வரத் தயாராக இரு. அப்போது கௌரவம் பார்க்காதே. நம் வீட்டிலிருந்தது போல புகுந்த வீட்டில் காலாட்டி அதிகாரம் செய்யவேண்டாம். உள்ளே புகுந்து வேலை செய். பிரியமோடிரு. உன் திருமண நாளையும், சாந்தி முகூர்த்த நேரத்தையும் குறித்தனுப்பு. அதற்கு முன் ஈடுபட வேண்டாம்.

கடவுள் அருளால் நீ சூலுருவாய். அப்போதும் எனக்கெழுது, மறக்காதே, அலட்சியம் செய்யாதே இருபத்துநாலு வயது வரை உன்னை வளர்த்துவிட்டு, ஏதோ ஒருவிதமாய் உன் திருமணம் நடப்பதைப் பார்க்கக் கூட பாக்கியமில்லாத பாவி நான். என் நிலையில் இருந்து பார்க்கக் கற்றுக் கொள்.

நம் ஊர் பகவதி உனக்குத் துணை நிற்பாள்.'

ரோஹிணி படித்துவிட்டு அழுதாள்.

அப்பா அந்தக் கடிதத்தை தன் தலை மீது வைத்துக் கொண்டார். கண்ணனை சென்னைக்கு அனுப்பினார். ஊர் மாற்றிக் கொள்ளச் சொன்னார். அடுத்த ஆறு மாசம் வரை அவள் இருள்நீக்கியில் சமையல் செய்யவும், துணி துவைக்கவும் பாத்திரம் தேய்க்கவும் கற்றுக் கொண்டாள். தியானம் பழகினாள். கோலம் போட்டாள். அப்பாவிடம் தத்துவ விசாரம் செய்தாள்.

பெங்களூருக்கு வீடு பார்க்கப் போகும்போது, வேறு மனுஷியாக இருந்தாள்.



# 17

"இந்தக் கல்யாணத்திற்குப் பேர் காந்தர்வம். இதற்கு ஒரு சடங்கும், சம்பிரதாயமும் இல்லை.

பொம்மனாட்டிக்கு ஆம்பளையப் பிடிச்சிருக்கு. ஆம்பளைக்கு பொம்மனாட்டியப் பிடிச்சிருக்கு. அது போதும். இதுல வயது வித்தியாசங்கூட பார்க்க வேண்டிய அவசியமில்லை. பெண் ரெண்டு வயது பெரியவளாகக் கூட இருக்கலாம். ஆண், பத்துப் பதினஞ்சு பெரியவனாகக் கூட இருக்கலாம்.

மறுபடியும் பெங்களூர்ல உன் கல்யாணத்த ரிஜிஸ்டர் பண்ணு. உன்னோட சினேகிதாள வச்சு பெங்களூர்லேயே கல்யாணத்த முடி. அவா வீடு வராத போது நம்ம வீடும் கல்யாணத்துக்கு வராது. வந்தாலும் நன்னாயிருக்காது.

'ஐயோ! புள்ளையப் பெத்தவன் வர்றானே. பொண்ணைப் பெத்த என்னால போக முடியலேயே'ன்னு அந்த அம்மா மனசு கொதிச்சா அது என்னை, உன்னை பாதிக்கும். அதுனால நாங்க வரலை.

ஆனா, நீ வரலாம். எப்ப வேணா இருள்நீக்கி வரலாம். ரோஹிணிக்கு நம்ம வீடு பிடிச்சிருக்குன்னு நினைக்கிறேன்.

அவளை வேலைக்கெல்லாம் அனுப்பாதே. நீ சம்பாதிச்சு நிறைஞ்சா போதும். குடித்தனம் பண்ணறது பெரிய வேலை. ஒரு பெண்ணுக்கு அதைவிட பெரிய வேலை எதுவுமில்லை.

வேற வழியில்லை. கூட காசு வேணும்னா மட்டும் அவளை வேலைக்குப் போகச் சொல்லு.

இன்னொரு உபதேசமும் பண்றேன். கேட்டுக்கோ.

எந்தக் காரணம் கொண்டும் குழந்தைப் பிறப்பை தள்ளிப் போடாதே. உதவிக்கு நான் உங்க மன்னிய அனுப்பறேன். அம்மாவ அனுப்பறேன். 'இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும். அப்புறம் பாத்துக்கலாம்'னு அசடு மாதிரி நினைக்க வேண்டாம்.

ஒரு மனுஷனுக்குப் பொண்ணைப் பிடிக்காது போகலாம். பிள்ளயப் பிடிக்காது போகலாம். பேரனையோ பேத்தியையோ பிடிக்காது போகாது.

இது ஏன்னு உனக்குத் தெரியுமா?

தன் வம்சம் தொடரப் போகறதுங்கற நம்பிக்கை தான் சாக மாட்டேங்கற உறுதி.

இந்தக் குழந்தை பெரியவனாகற வரைக்கும் நாம இருப்பமோ, மாட்டமோ? இப்பவே இவனை நன்னாப் பார்த்துப் பார்த்துக்குவோம். இவன் என்னை நன்னாப் பார்த்துக் கட்டும்ங்கற நினைப்பு.



ரொம்ப வினோதமான ஒரு உணர்வு அது. பேரனை மடியில வச்சுக் கொஞ்சற நிறைய கிழவாளுக்கு அது புரியாது. ஆனாலும் அவாளுக்குள்ளேயும் இது இருக்கும்."

கண்ணனின் அப்பா, ரோஹிணியோடும் பெங்களூர் வந்து நிறைய விஷயங்கள் சொன்னார்.

அவள் வாழ்ந்த வீட்டினோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த பெங்களூர் வீட்டில் சௌகர்யங்களே இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

ஆனால், அந்த வீட்டில் சந்தோஷம் நிறைந்திருந்தது. சுதந்திரம் நிறைந்திருந்தது. நண்பர்கள் அவ்வப்போது வந்து வாழ்த்தினார்கள்.

எதிர் வீடும், பக்கத்து வீடும் அதிசயமாய் பார்த்தது, பிறகு நெருக்கமாயிற்று.

சிறிய வீட்டை அவள் மிக நேர்த்தியாகப் பராமரித்தாள். அவனுக்கு வேண்டிய உதவிகளைப் பார்த்துப் பார்த்துச் செய்தாள்.

பிற்பகல் வெறுமே தூங்காமல் யோகா பயிற்சிக்கும் வீட்டு அலங்கார வகுப்பிற்கும் போனாள். நாலு மாதத்தில் ஹிந்தி பேசக் கற்றுக்கொண்டாள். சென்னையிலும், இருள் நீக்கியிலும் அவ்வப்போது காமம் வந்து தொந்தரவு செய்யும். இப்போது கண்ணனுக்கு அருகே இருந்த போதும், காதல் கிளர்ந்ததே தவிர காமம் வரவே இல்லை.

கண்ணனின் விருப்பமாகத்தான் இணங்க முடிந்ததே தவிர அவளுக்குள் ஜுர வேகம் எதுவும் இல்லை. வாழ்க்கை முடிந்துவிட்டது போல் அவளுக்குள் ஒரு நினைப்பு ஏற்பட்டது. ஒரு நிறைவான அமைதி அவளுக்குள் படர்ந்திருந்தது.

அவள் கருவுற்றாள். உடம்பில் மாற்றங்கள் தெரிந்ததும் சற்று பயந்தாள்.

தரையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கொண்டாள்.

அவன் ஆறுதல் சொல்ல வந்தபோது, 'தயவுசெய்து என்னைத் தனியே விட்டுவிடுங்கள்' என்றாள்.

ஒரு பெண் கன்னித்தன்மையை இழக்கும்போது கூட பெரிதாய் கவலைப்படுவதில்லை. ஆனால், அவள் கன்னித்தன்மை இழந்ததற்கு ஒரு சாட்சி ஏற்படுகையில், எல்லோரும் அறியும் வண்ணம் உடம்பில் ஒரு உரு மாற்றம் ஏற்படப் போகிறது என்று தெரியும்போது திருமணமான பெண்ணும் கலவரப்பட்டு விடுகிறாள்.

இதுவரை இருந்த நிலை இனி இல்லை. இனி வாழ்க்கை வேறு என்பது தெரிய சிறிது நேரம் வரை கலவரமாகத்தான் இருக்கிறது.

இதிலிருந்து மனம் விடுபட்டு இது எவ்வளவு அற்புதமான ஒரு வாய்ப்பு, உயர்ந்த ஒரு நிலை, தாயாகும் தன்மை தனக்குக் கிடைத்திருக்கிறது என்பது புரிய சில நாட்களாகும்.

அந்த நேரம் புருஷனின் அரவணைப்பு தேவைப் படும். புருஷன் அரவணைப்பு கிடைத்தவுடன் அம்மாவிற்கு மனசு ஏங்கும்.

வீட்டை எதிர்த்துக் காதலித்து வெளியே வந்து வாழ்கிற பெண்ணிற்கு ஏற்படுகிற மிகப் பெரிய சோதனை இந்த தாயாகும் நிலை.

இப்போது தாங்க யாருமே இல்லையே என்கிற வேதனை அவளை வாட்டி எடுக்கும்.

தாயைப் போல பலர் அருகே இருந்தாலும், தாய் போல் ஆகாது.



வயிறு புரட்டுவதையும், நெஞ்சு கரிப்பதையும், தலை சுற்றுவதையும், எது உண்டாலும் எகிறி வெளியே வருவதையும், அப்படி வரும்போது ஏற்படும் மூச்சுத் திணறலையும் அம்மாவிடம் பகிர்ந்து கொள்வது போல் வேறு யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாது.

'என்னா வயித்தைப் புரட்டுதா? புருஷன் கூட படுத்தபோது நல்லா இருந்ததுல்ல..?' அனத்துகிற போது வேறு யாரும் அவமானப்படுத்தலாம். ஆனா, அம்மா அவமானப்படுத்த மாட்டாள்.

'பகவானே, நல்லபடியாய் பெத்துப் பிழைக் கணுமே.' காதுபட இடைவிடாது வேண்டுவாள். அந்தக் கவலை, ஒரு ஆதரவு அந்த கரிசனமே ஒரு பிடிப்பு.

காதல் என்பது ஆணும், பெண்ணும் கை கோத்துத் திரிவதோடு முடிந்து விடுவதில்லை. கட்டில் சுகத்தோடு தீர்ந்து விடுவதில்லை.

பிள்ளைப்பேறு என்கிற அற்புதம் நிகழத்தான் வேண்டும். நிகழ்ந்தால்தான் காதலுக்கு மரியாதை.

காதல் இனிதாவது ஒரு குழந்தையாக வெளி வரும் போதுதான்.

அந்தக் குழந்தை வளர்ந்து வல்லவனாகின்ற போதுதான் காதல் பூரணமாகிறது.

மரம் கனிந்தால் மட்டும் போதாது, கனியிலிருந்து விதை தப்பி மண்ணுக்குள் விழுந்து வேர் விட்டு முளைத்துக் கன்றாகி, அந்தக் கன்றும் கனி மரமாய் நிற்கையில்தான் பெரிய வட்டம் பூர்த்தியாகிறது.

நாம் காதலித்தது வீண் போகவில்லை. வாழ்க்கையில் நாம் சந்தோஷப்பட்டோம். சந்தோஷத்தின் விளைவாகப் பிறந்த மகன் சான்றோன் ஆனான். தொடர்ந்து சந்தோஷப்

பட்டோம். இதோ அந்தச் சான்றோனுக்கு ஒரு சான்றோன் பிறந்திருக்கிறான்.

எத்தனை அடி, எத்தனை உதை? எல்லாம் இந்தச் சான்றோர்களுக்குத்தானே...? மனம் பூரிப்படையும். ரோஹிணி ஒரு மணி நேரத்தில் தெளிந்தாள்.

வாழ்க்கையில் வேறொரு பகுதிக்குள் நுழைந்து விட்டோம் என்பதைப் புரிந்து கொண்டாள்.

தன்னைப் பற்றி தெளிவாக யோசித்தாள். அப்பா விடம் உண்மையாக இல்லை. அம்மாவிடம் உண்மையாக இல்லை. அதனால்தான் வீட்டை விட்டு ஓடிவந்து விட்டோம். புருஷனிடமாவது உண்மையாக இருக்க வேண்டும். 'என்னைத் தனியே விடு' என்று விரட்டி யிருக்கக் கூடாது. இனி தனியே இருக்கக் கூடாது என்பது தான் உண்மை.

'என் தகப்பன் யார்?' என்று வயிற்றிலிருந்து வரும் என் குழந்தை கேட்கும். நான் பதில் சொல்ல வேண்டும்.

நல்ல வேளையாக என் புருஷன் முன்கோபி இல்லை. ஆத்திரக்காரன் இல்லை. அறிவற்றவன் இல்லை.

கண்ணன் ஆதரவானவன். அவன் வீடு அதைவிட ஆதரவானது. எனவே இங்கே இன்னும் இணைந்து கலந்துவிட வேண்டும். என் பிள்ளைப் பேறுக்கு இனி யார் வந்தாலும் அவர்களை தெய்வமாய் வணங்க வேண்டும்.

அம்மாவிற்கு ஒரு தகவல் அனுப்பலாமா? வேண்டாம். தேவையில்லை.

அம்மா வேதனைப்படுவாள். தன்னால் ஏதும் செய்ய முடியலையே என்று மனம் மருகுவாள். அவளைத் துன்புறுத்துவதில் லாபமில்லை. அம்மாவிற்கு ஏங்காமல் இருப்போம். அம்மாவாய் வருவோரிடம் ஒட்டிக் கொள்வோம்.



அவள் அவ்விதமே செய்தாள்.

இருள்நீக்கியிலிருந்து மன்னியும், அண்ணாவும் வந்தார்கள். நேரம் பார்த்து நர்ஸிங்ஹோமில் சேர்த் தார்கள். அவளுக்கு மகன் பிறந்தான்.

அவள் புருஷனின் கைகளைக் கோத்துக் கொண்டாள்.

"எங்க அப்பாவுக்கு லெட்டர் எழுதுங்க. பையன் பிறந்திருக்கான்னு லெட்டர் எழுதுங்க. நாம சௌக்கியமா இருக்கோம், சந்தோஷமா இருக்கோம்னு எழுதுங்க. அண்ணாவும், மன்னியும் வந்து பிரசவம் பார்த்தாங்கன்னு எழுதுங்க. வந்து பார்க்கலாம்னு சொல்லுங்க. வர்றாங் களான்னு பார்ப்போம்."

அவன் தனக்கென்ன எந்த அபிப்பிராயமும் கொள்ளாது அவள் சொன்னதை நிறைவேற்றினான்.

அந்தப் பக்கத்திலிருந்து பதிலே வரவில்லை. கிணற்றில் கல் போட்டது போல் இருந்தது.

பத்து நாட்கள் கழித்து அவள் குழந்தையை தொட்டிலில் இடும்போது அவள், அவன் தோளில் சாய்ந்து அழுதாள்.

"வரணும்னு நீ எதிர்பார்க்கறயே அதான் தப்பு, வந்தா சரி. வரலைன்னாலும் சரின்னு இரு" அவளைச் சமாதானப்படுத்தினான்.

மன்னியும், அண்ணாவும் ஊருக்குப் போன ஒரு பகல் பொழுதில் அவள் தாய் மாமன் வீடு தேடி வந்தார்.

"என்டே மோனே..." மிருதுவாய் அழைத்தார்.

அவள் எழுந்து வந்து அந்தக் கிழவரைத் தாவி அணைத்துக் கொண்டாள். வாய்விட்டுக் கதறினாள். அவரை உள்ளே வரவேற்றாள் குழந்தையைக் காட்டி னாள்.

"தந்தை நலம், தாய் நலம். வெளிப்பார்வைக்கு வீறாப்புக் காட்டினாலும் உள்ளுக்குள் அந்த வீடு அவளுக்காக உருகிக் கொண்டிருக்கிறது.

இங்கு வர வெட்கப்பட்டு, நீ அழைப்பாய் என்று காத்துக் கொண்டிருக்கிறது."

"அப்படியா..." கண்ணன் திகைத்தான்.

"எனக்கு ஒரு வெட்கமும் இல்ல. உங்க மாமா உனக்குத் துணையா இருக்கட்டும். நான் போய் உங்க அப்பாகிட்டே சொல்லிட்டு வர்றேன்!"

"ஐயோ!" அவள் பயந்தாள்.

அவன் இனிப்பும், காரமும் வாங்கிக் கொண்டு சென்னைக்கு வந்தான்.

நண்பனிடம் மோட்டார் சைக்கிள் எடுத்துக் கொண்டு அந்த வீட்டிற்குப் போய் இறங்கினான்.

"நான் யார் தெரிகிறதா?" என்று கேட்டான்.

ரோஹிணியின் அப்பாவிற்கு தெரிந்தது. அவர் முகம் திருப்பிக் கொண்டு அழுதார்.

"என்ன இது முட்டாள்தனம்?" அவர் மனைவி கடிந்து கொண்டாள்.

"ஒன்று வா என்று சொல்லுங்கள். அல்லது போ என்று சொல்லுங்கள். வெறுமே அழுதால் என்ன அர்த்தம்?" அவர் மனைவி அவரை உலுக்கினாள்.

அவன் வராண்டா நாற்காலியில் உட்கார்ந்தான்.

அவர் எழுந்து விரைந்து வந்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு உள்ளே அழைத்து வந்தார்.

"எல்லோரும் சௌக்கியமா?" என்று கேட்டார்.

பாயசமும், ஆப்பமும், அவியலும் சாப்பிட்டான். கால் தொட்டு வணங்கி வீட்டிற்கு அழைத்தான்.



"நான் வெறுங்கையோடு வர முடியாது. என் உறவு கலந்து ஆலோசித்துவிட்டு வருகிறேன்" என்றார்.

ஒரு வாரம் கழித்து ஆறேழு உறவினர்களோடு வந்தார்.

வீடு அழுகையும், சிரிப்பும், சந்தோஷமும் துக்கமுமாய் தள்ளாடியது.

உணர்வுகள் அமைதியாக இரண்டு மூன்று நாட்கள் பிடித்தன.

"நான் கூட்டிக்கொண்டு போகட்டுமா?" கண்ணனின் மாமியார், சமையல் அறையிலிருந்து தயங்கித் தயங்கி கேட்டார்.

"எங்கே?" கண்ணன் கேட்டான்.

"சென்னைக்கு, அங்கிருந்து பத்து நாட்கள் கோழிகோடுக்குப் போக வேண்டும். அங்கே எங்கள் தரவாட்டில் சில பிரார்த்தனைகள் இருக்கின்றன."

"சரி. அழைத்துப் போங்கள். டேய் பையா, மலையாளத்தில் பேச வேண்டும். பாட வேண்டும். கதகளி, மோஹினியாட்டம் ஏதாவது ஒன்று கற்று வரவேண்டும். போய் வா."

"நன்றாய் இருக்கிறதே கதை, கதகளி சுமாராய் கற்றுக் கொள்ள பதினான்கு வருடங்கள் ஆகும்." ஒரு உறவினர் சொன்னார்.

"எனக்கும் தெரியும்." கண்ணன் பதில் சொன்னான்.

"நீங்கள் எப்போது திரும்பி வருவோம் என்று சொல்லவே இல்லையே? அதனால்தான் கதகளி கற்றுக் கொண்டு வா என்று சொன்னேன்."

அந்தக் கூட்டம் திகைத்தது. வாய்விட்டுச் சிரித்தது.

"மாப்பிள்ளை ரொம்பக் குறும்பு" என்று சிணுங்கியது.

"அதிகபட்சம் மூன்று மாதங்கள் அதற்குள் திருப்பியனுப்பி விடுகிறேன்." அவள் அப்பா உத்தரவாதம் கொடுத்தார்.

"அவரையும் நம் வீட்டிற்கு கூப்பிட்டால் ஒழிய, நான் அங்கு வருவது நிறைவாகாது." ரோஹிணி உரக்கச் சொன்னாள்.

அந்த வீடு தனித்தனியே கைகூப்பி அவனை வரச்சொல்லி அழைத்தது.

தாய், தந்தை, உற்றார், உறவினர், அண்ணா, மன்னி அனைவரோடும் அங்கு விருந்திற்கு வரவேண்டும் என்று கூப்பிட்டது.

அவன் ஒரு மாதம் கழித்துப்போனான். அந்த மாடி வராண்டாவில் சிலுசிலுவென்று காற்றடிக்கும் பளிங்குத் தரையில் அவளை படுக்கை போடச் சொல்லி அன்று இரவு அவளை கட்டிக்கொண்டு தூங்கினான்.

மறுநாள் பைப் வழியே மாடி ஏற முயற்சித்தான். மாமனார் பதறி ஓடி வந்தார். மாமியார் தலையில் அடித்துக் கொண்டார்.

"என்டே பகவானே." மனைவி வாய்விட்டு சிரித்தாள்.

அவனால் அந்த பைப் வழியே பாதி தூரம்கூட ஏற முடியவில்லை. அவசியமில்லாதபோது எந்தச் சாதனையும் எவராலும் செய்ய முடியாது.

அந்த வீடு கண்ணன் என்கிற இளைஞனை தலையில் வைத்துக் கொண்டு கொண்டாடியது. பதிலுக்கு அவனும் கொண்டாடினான்.

அவனுடைய குழந்தை தமிழ் பேசினான். மலையாளம் பேசினான். ஆங்கிலம் பேசினான். மிகக் கெட்டிக்காரனாய் வளர்ந்தான்.



கண்ணன் அப்பாவிற்கு நன்றி சொன்னான்.

"நான் எதுவும் செய்யவில்லை. கடவுள், கடவுள்" என்றார்.

"பதிலுக்கு கடவுளைக் காதலி" என்றார். கண்ணன் காதலித்தான்.

# 18

**ப**ன்னிரண்டு வயதிலேயே, குரு தவறு செய்கிறார் என்பது புரிந்துவிட்டது. 'சற்றும் தகுதியில்லாத தன்னை ஏன் மடத்துக்கு கூட்டிக்கொண்டு வந்தார்?' என்று வியப்பாகப் போயவிட்டது.

வெளிப்பார்வைக்குத் தான் அப்பாவும், அம்மாவும், வீடும் அற்புதமாகத் தெரிகிறார்கள். உள்ளே ஏகப்பட்ட குழப்பம், சண்டை, இறுமாப்பு, கர்வம் இருக்கின்றன.

இப்போது பணிவாய் நிற்கின்ற இந்த அப்பா, நேற்று முன்தினம் இதே குருவை கேலி செய்து பேசினார். அம்மா அதற்கு வாய்விட்டுச் சிரித்தாள்.

ஆனால், இப்போது இவர்கள் ரெண்டு பேரும் குருவின் முன் மெய்மறந்து நிற்பதுபோல் நடிக்கிறார்கள். சகலத்தையும் குருவின் காலடியில் கொட்டியதுபோல் பேசுகிறார்கள். சரணடைவது எளிதே அல்ல. சரணடைய மிகப் பெரிய மனம் வேண்டும். எல்லாம் துறந்த புத்தி வேண்டும். எதையும் இறுக்கிக் கொள்ளாத வாழ்க்கை வேண்டும்.

இது பற்றி அந்தப் பன்னிரண்டு வயதில் சந்தேகம் வந்தது. இந்த நாற்பது வயதில் தெளிவாகத் தெரிகிறது. இருபத்தெட்டு வருட மடாதிபதி வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் நடைபெறவில்லை. எந்த விஷயமும்

தெளிவாகவில்லை. தெளிவானது போல் நடிக்கலாம் கம்பீரம் காட்டலாம்.

ஆனா, உண்மையில் தெரியவில்லை.

பல பேர் கடவுள் தெரிந்துவிட்டதுபோல் நடிக்கிறார்கள். மிகக் கொடூரமாக, கேவலமாகப் போய் சொல்கிறார்கள். மலம் தின்றுவிட்டு அமிர்தம் என்கிறார்கள். கடவுளை எதிர்க்கிறவனோடுகூட சந்தோஷமாகப் பேசலாம். ஆனால், 'கடவுளைத் தெரியும்' என்று பொய்யாய் சொல்லுகிறவன் பெயரைச் சொல்வதுகூட அருவருப்பாய் இருக்கிறது. அவனது அண்மைகூட உடம்பை வீங்க வைத்துவிடுகிறது.

கடவுளைத் தெரிந்தவரின் சந்நிதி மிக அற்புதமானது. அவரது அண்மை உடம்பில், மனதில் ஒரு அமைதியை எற்படுத்துகிறது.

இருபத்தெட்டு வருடங்கள் பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டர் போல, மளிகைக்கடை முதலாளி போல, கிராமத்து முன்சிப் போல இந்த மடத்தை நன்கு நிர்வாகம் செய்ய முடிந்ததே தவிர, கடவுளைத் தேடுகின்ற வேலையே நடைபெறவில்லை.

வேதானந்தா அந்த ஆற்றங்கரைத் தட்டைப்பாறை மீது தர்ப்பை பாய் விரித்து, அதன்மீது உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தார்.

இது ஜெபம் செய்யும் வேளை. ஆனால், ஜெபத்தில் மனம் ஒட்டவில்லை. ஐந்து நிமிடம் ஜெபம் செய்துவிட்டு நிறுத்திவிட்டார். மனம் விசாரத்தில் இறங்கிவிட்டது.

'என்ன செய்து கொண்டிருக்கிறோம்?' என்கிற பெருங்கவலை வேதானந்தாவை சூழ்ந்துகொண்டது. இப்படி உண்மையாய் யோசிப்பதற்கே இருபத்தெட்டு வருடங்களாகிவிட்டன. யோசனையைச் செயல்படுத்த



எத்தனை வருடங்களாகும்? செயல்படுத்தப்பட்ட யோசனை, முதிர்வடைய எத்தனை வருடங்களாகும்?

எதற்கு இந்த விசாரமெல்லாம்? நடிக்க வந்துவிட்டாய். நடித்துக் கொண்டிரு. அதுவும் நல்ல கதாபாத்திரம் கிடைத்துவிட்டது. அன்பான சாமியார் வேஷம் கிடைத்திருக்கிறது. இதைச் செய்து கொண்டிரு.

மடத்திற்கு பெரும் பணக்காரர்கள் வருவார்கள். அவர்களுக்கு மாலை போட்டு பட்டுப் போர்த்தி பெரிசு, பெரிசாய் ஆசீர்வாதம் செய்.

"என்ன பிரச்சினை...? இன்கம்டாக்ஸா? ரெய்டு நடக்கும் என்ற பயமா?"

கவலையே படாதே- நானிருக்கிறேன்.

தங்கத்தட்டில் யந்திரம் ஒன்று வரைந்து தருகிறேன். வீட்டு வாசலில் தாமிரப் பாத்திரத்தில் போட்டுவை. தினம் தண்ணீர் மாற்றச் சொல். தண்ணீரின் மீது சாமந்தியோ, ரோஜாவோ, மல்லியோ மிதக்கட்டும்.

உன் வீட்டில் எந்த தீயசக்தியும் கால் வைக்க முடியாது.

ஏய்- இவரை வாசல்வரை கொண்டுபோய் விட்டு வா."

"நான் என்ன செய்ய வேண்டும்?" பணக்காரர் பவ்யமாகக் கேட்பார்.

"ஒன்றும் செய்ய வேண்டாம். வந்து போய்க் கொண்டிருந்தால் போதும். நான் சென்னை வரும்போது என்னைச் சந்தித்தால் போதும்."

ஆனால், வாசல் வரை கொண்டுபோய் விடுபவன், "ஸ்வாமி நதிக்கரைக்குப் படிக்கட்டுகள் கட்ட வேண்டுமென்று விருப்பப்படுகிறார். இப்போது பாறைகளில் கால்

வைத்துதான் போக முடிகிறது. பக்கா படிக்கட்டுகள் கட்டிவிட்டால்...'

"கட்டலாமே..." பணக்காரர் ஆவலுறுவார். "என்ன செலவாகும்?" கேள்வி கேட்பார்.

"ஐந்து லட்சம் என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள்." "நான் ஏற்றுக் கொள்கிறேன். முதல் தவணையாக இரண்டு லட்சம். ஒரு மாதத்தில் மீதி தந்துவிடுகிறேன், படிக்கட்டில் ஒரு ஓரத்தில் என் தாயார் பெயர் வைக்கலாமா?"

"பதினெட்டுப் படிகள் வரப்போகின்றன. ஒவ்வொரு படிக்கட்டிலும் உங்கள் பெயர்தான் இருக்கும்."

"ஸ்வாமி வேதானந்தாவிடம் அனுமதி பெற வேண்டாமா?"

"ஸ்வாமி ஏற்கெனவே சொல்லிவிட்டார்."

தினம் சில பணக்காரர்கள். தினம் பல ஏழைகள். தினம் சில பிரச்சினைகள். தினம் பல சச்சரவுகள்.

"சுப்புணி வேலைய விட்டுர்றேங்கறான்."

"ஏன்?"

"சம்பளம் போறலையாம். போனஸ் தரமாட்டேங்கறேளாம்."

"நான் என்ன ஹோட்டலா நடத்தறேன்? இது மடம்டா."

"எதுவா இருந்தாலும் வேலை ஒண்ணுதானேங்கறான். ஆயிரம் ரூபா கூட கேட்கறான்."

"பேசிப் பாரு. ஒரு முந்நூறு ரூபா கூட கொடுத்துடலாம்."

"பொட்டிப் படுக்கையோட ரெடியா நிக்கறாண்ணா. ஆயிரம் ரூபாய்க்கு ஒரு சல்லிக்காசு குறைய மாட்டேங்கறான்."



"உனக்கு சமைக்கத் தெரியுமோ?"

"அண்ணா, நான் காரியஸ்தன்."

"எனக்கு சமைக்கத் தெரியும்னு சுப்புணியைப் போகச் சொல்லு. நான் சமைக்கிறேன்."

"அண்ணா, முந்நூறு பேருக்கு சமைக்கணும்."

"ரொம்பச் சுலபம்டா. மெட்ராஸ்ல யார் சமையக்காரரா கிடைச்சாலும் ஒரு பதினைஞ்சு நாளைக்கு இங்க வரச்சொல்லு. ஆனா இன்னிக்கு சமையல் நான்..."

ஸ்வாமி வேதானந்தா களத்தில் இறங்க, மடம் அமளிப்பட்டது.

சாமியே சாதம் வடிக்கிறாரா? குருவே சாம்பார் பண்றாரா?

சுப்புணியின் உதவியாளன் காலில் விழுந்து வணங்கினான். முன்னின்று எல்லா உதவிகளையும் செய்தான்.

ஸ்வாமி கத்தியால் பூசணிக்காயை வகுந்து மடமடவென்று துண்டுகள் போட்டார். மடத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லாம் காய் திருத்த வந்துவிட்டார்கள். பெண்கள் கோஸ் நறுக்கினார்கள். பட்டாணி உரித்தார்கள், தேங்காய் துருவினார்கள்.

மடத்திலிருந்த பல பேரும் வேலையில் இறங்க, இருபது நிமிடத்தில் முந்நூறு பேருக்கான சமையல் முடிந்தது.

ஸ்வாமி நடுவே நின்று ராம நாமம் சொன்னார்.

எல்லோரும் சந்தோஷமாக வேலை செய்தார்கள். மறுநாள் சென்னையிலிருந்து ஆள் வந்துவிட்டது. சுப்புணிக்கு கெட்ட பெயர் வந்துவிட்டது.

"ஸ்வாமிகிட்ட எகத்தாளமா பேசிட்டு வந்துட்டியாமே? மடத்துலேயே வேலை செய்ய முடியாதவன்

ஹோட்டல்ல எப்படி வேலை செய்வே? ஹோட்டல்ங் கறது சாம்பார், ரசம் இல்லை. சமையலெல்லாம் மாறிப் போயிடுத்து. பானிப்பூரி, சமோசா, சென்னா அப்படீன்னு விதம்விதமா மாறிடுத்து. சாம்பாருக்கு ஒருத்தன், சென்னாக்கு ஒருத்தன்னு நான் வேலைக்கு வச்சுக்க முடியாது. நீ வேற இடத்துல வேலை பார்த்துக்கப்பா." சுப்புணியைத் தள்ளிவிட்டார்கள்.

சுப்புணி கதறிக் கொண்டு மறுபடி மடத்துக்கு வந்தான்.

"உனக்கில்லாத வேலையா சுப்புணி? காசு வேணும்னு போனே... கூட ஐந்நூறு ரூபா தரேன். சந்தோஷமா இங்கேயே இரு."

எல்லோரிடமும் எப்போதுமே ஒரு மடாதிபதி தந்திரமாக இருக்க வேண்டியிருந்தது.

கணக்கு வழக்கு, நிதி நிலைமை, கட்டிட வேலை, தினசரி பூஜை ஊழியர் சம்பளம், மாத வரும்படி, வருடாந்திர விழா, பண்டிகைகள், குரு பூஜை, வாகன பராமரிப்பு, மின்சார செலவு, தத்துவ உபதேசம், குட்டிக் கதைகள், பக்தர்களின் வீட்டு தினசரிப் பிரச்சினைகள், ஊழியர்களின் கோபதாபங்கள் மடங்களுக்கு நடுவே தோன்றும் அபிப்பிராய பேதங்கள்.

ஒரு நாளின் எல்லா மணித்துளியும் இடையறாத பிரச்சினைகளே ஆட்கொண்டன. இருபத்தெட்டு வருடங் களும் இதே போராட்டமாய் போயிற்று.

ஒரு நாள் ஊழியர்கள் சண்டையைத் தீர்க்க முடியாமல் திணறியபோது ஒரு வெறுப்பு ஏற்பட்டது. 'என்ன செய்து கொண்டிருக்கிறோம்?' என்று தெரியாத பிரமிப்பு ஏற்பட்டது.

அன்று மாலை ஒரு சிறுமி கேள்வி கேட்டாள்.



'ஸ்வாமி. கடவுள் என்றால் என்ன? அவர் எங்கிருக் கிறார்? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?"

"ச்சு- சும்மா இரு" குழந்தையை பல பேர் அதட்டி னார்கள்.

அவர் திகைத்துப் போனார். குழந்தையைக் கூர்ந்து கவனித்தார். அவளை அருகே வரவழைத்து எதிரே உட்காரச் சொன்னார்.

கூட்டம் அவர்களையே அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தது.

"கடவுள் என்பவர் எங்கும் இருக்கிறாரம்மா. உடம்பின் சக்தி உயிர். உயிரின் சக்தி கடவுள். உன் உடம்பில் உயிர் எங்கிருக்கிறது?"

"தெரியவில்லையே."

"நான் நல்லவள் என்று சொல்."

"நான் நல்லவள்." அந்தச் சிறுமி நெஞ்சு தொட்டுச் சொன்னாள்.

"நான் என்று ஏன் நெஞ்சு மத்தியைத் தொடுகிறாய் அம்மா? கால்கட்டை விரலைத் தொடலாமே? உச்சந் தலையே தொடலாமே, முதுகைத் தொடலாமே? மூக்கைத் தொடலாமே? நான் என்று ஏன் நெஞ்சைத் தொடுகிறாய் அம்மா?"

"தெரியவில்லையே ஸ்வாமி."

"ஏனெனில், 'நான்' என்று நீ சொல்கின்ற அந்தச் சக்தி, அதாவது உடம்பின் சக்தியாகிய உயிர் அங்கே இருக்கிறது.

உயிரை, உயிரின் சக்தியை தியானத்தின் மூலம் அறியலாம். உயிரைத் தெரிந்துகொள்வது உன்னைத் தெரிந்துகொள்வது. உயிரின் சக்தியைத் தெரிந்து கொள்வது கடவுளைத் தெரிந்துகொள்வது."

அவர் கனிவோடு சொல்ல... கூட்டம், 'ஆஹா,' 'ஆஹா,' என்று நுனி நாக்கால் சில்லிட்டது.

"கடவுள் பக்தியை இத்தனை அழகா சொல்லித் தரதுக்கு உங்களை விட்டா வேற யார் இருக்கா? நீங்க எங்களுக்கு குருவா வந்தது நாங்க செய்த புண்ணியம்."

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் புகழ்ந்தார்கள்.

அவர் குழந்தையின் உச்சந்தலையில் கை வைத்துவிட்டு மெல்ல ஆற்றங்கரை நோக்கி நடந்தார்.

ஆற்றங்கரைக்குப் போகும்போது அவரைத் தனியே விட்டு விடுவது மடத்து சிப்பந்திகளின் வழக்கம். அடர்ந்த புன்னை மரங்களின் இடையே ஒற்றையடிப் பாதையில் நடந்து போகும்போது கேள்வி கேட்ட அந்த பெண்ணும், அவளுக்கருகே அவள் மூத்த சகோதரி போன்ற சற்று முன் தலை நரைத்த ஒரு முப்பது வயதுப் பெண்ணும் தரையில் மண்டியிட்டு வணங்கினார்கள்.

அவர் நின்று கை தூக்கி ஆசீர்வதித்தார்.

"ஸ்வாமி, என்னை மன்னிக்க வேண்டும்."

"அந்த முதிர்ந்த பெண்மணி நாக்கு குழறிப் பேசினாள்.

"என்ன சொல்கிறாய் அம்மா?"

"நான் ஒரு தவறு செய்துவிட்டேன். தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும்."

"என்ன தவறு அம்மா?"

"உங்களிடம் ஒரு பொய் சொல்லிவிட்டேன்."

"புரியவில்லையே?"

"உங்களிடம் இவள் ஒரு கேள்வி கேட்டாள் அல்லவா? அந்தக் கேள்வி என்னுடையது. இவளைக் கேட்க வைத்தேன். ஆனால், நீங்கள் பொறுமையாக பதில் அளித்தது எனக்கு சந்தோஷமாக இருந்தது. நான் கேட்காமல் இவளை வைத்துக் கேட்டதற்கு மன்னிப்புக் கோருகிறேன். தொடர்ந்து நானே கேட்கிறேன். உயிரின் சக்தியை அறிந்ததுண்டா? உங்கள் உயிரை நீங்கள் தரிசித்ததுண்டா?

கடவுள் என்பவர் உணரப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எதனால் உணரப்படவேண்டும்? எப்போது உணரப்பட முடியும்? ஆவலால் கேட்கிறேன். அறிந்துகொள்ளக் கேட்கிறேன். ஸ்வாமி என்னை கை தூக்கி கரை சேர்க்க வேண்டும்."

அவள் மறுபடி மண்டியிட்டு நமஸ்கரித்தாள்.

அவருக்கு உள்ளே ஆடியது. கால்கள் நடுங்கின. கண்கள் லேசாய் இருட்டிக் கொண்டு வந்தன.

'கடவுளே, நான் இப்போது என்ன செய்ய வேண்டும்? மறுபடியும் நடிக்கவேண்டுமா? எல்லாம் தெரிந்தது போல் சிரிக்க வேண்டுமா?'

கடவுளை எப்படி உணர்வது? எப்போது உணர்வது? எனக்குத் தெரியாதே? இதுவரை அதுபற்றி தெரிந்து கொண்டதில்லையே. நான் மடாதிபதிதானே ஒழிய ஞானியில்லையே.

அவர் பரிதாபமாக அந்தப் பெண்மணியைப் பார்த்தார்.

அவள் கண்களில் ஆவல் சுடர் விட்டது. அவள் முகத்தில் ஒரு அமைதி இருந்தது.

அவர்கள் சென்னையிலிருந்து வந்தவர்கள் என்பது ஞாபகமிருந்தது. இன்று காலை அந்தப் பெண்ணின் தகப்பன் ஒரு லட்ச ரூபாய் மடத்துக்கு நன்கொடை

கொடுத்தார். 'நான்கு நாட்கள் தங்கிவிட்டுப் போகலாம்' என்று சொல்ல, 'சரி'யென்று சொன்னார்.

"எனக்கு உடனடியாகப் பதில் தெரியவில்லை தாயே. இன்று மாலை பதில் சொல்கிறேன்."

அவர் அவளை நோக்கி கைகூப்ப, அவள் பின்னடைந்தாள்.

அவர் தொடர்ந்து நடந்து நதிக்கரைக்குப் போனார். நதிக்கரை ஓரத்தில் உள்ள தட்டைப் பாறையில் தர்ப்பை பாய் விரித்திருந்தது. அமர்ந்து ஜெபம் செய்யத் துவங்கினார்.

மனம் ஜெபத்தில் ஈடுபடவில்லை தவித்தது.

'எது உயிர்? எது உயிரின் சக்தி?' அவர் புதிதாய் கேட்டுக் கொள்ளத் துவங்கினார்.

## 19

**உ**ன்னுள் நீ நிலைக்கும் வரை உனக்கு போதிக்க அதிகாரம் இல்லை.

கடவுள் பற்றி ஒரு நூலிழையும் தெரியாமல் நிறைய பேர் போதிக்கிறார்கள். ஏகப்பட்ட மேற்கோள்கள் காட்டுகிறார்கள். தங்களுக்குச் சொல்லப்பட்ட கதைகளையே திரும்பச் சொல்லி, தாங்களே பதில் கண்டுபிடித்ததுபோல கர்வமாய் சிரிக்கிறார்கள்.

இருபது வயதில் கையில் கமண்டலமும் தண்டமும் ஏந்தி ஒரு ஜீப்பில் தென்னிந்தியா முழுவதும் சுற்றினார். பல மடாதிபதிகளை தரிசித்தார். பல சாதுக்களோடும், சந்நியாசிகளோடும் பேசினார்.

ரத்தின சிம்மாசன கம்பீரங்கள், பட்டுத்துணி பளபளப்புகள், தங்கம் போர்த்திய உருத்திராட்சங்கள், வைரம் பதித்த மோதிரங்கள், சலவைக்கல் மண்டபங்கள், ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அறைகள் என்று பலதும் பார்த்தார். எளிமையிலும் எளிமை என்று சொல்லப்பட்ட துறவி, எண்பது வேலி நிலத்திற்காக உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். தீர்ப்பு தனக்குச் சாதகமாக வேண்டும் என்பதற்காக அரசியல்வாதிகளைப் புகழ்ந்து கொண்டிருந்தார்.



கடவுளைப் பற்றிக் கேள்வி கேட்டபோது சில மடாதிபதிகள் கனத்த புத்தகங்களை கொடுத்து 'படித்துக் கொள்' என்றார்கள்.

வேறு சிலர், 'தெளிவாய் சொல்லித் தரேன். இப்போது நேரமில்லை' என்றார்கள்.

வேறு ஒருவர், 'நான் சொல்லிக்கொடுத்துவிடுவேன். உனக்குப் புரியுமா? புரிந்துகொள்ளும் பக்குவம் எல்லோருக்கும் வருவதில்லையே' என்று டபாய்த்தார்.

"அந்தாள்கிட்ட ஏன் கடவுள் பத்தி கேட்டீங்க? அவர் அப்பா மடாதிபதியா இருந்தாரு. முத ரெண்டு பசங்களையும் படிக்க வச்சாரு. பொண்ணைப் பிரமாதமா கல்யாணம் பண்ணிக் கொடுத்தாரு. இவனுக்கு படிப்பு வரலை... மடாதிபதியாக்கி விட்டுட்டாரு. இவன் நல்லா சாப்பிடுவான். பத்து மணி நேரம் நல்லா தூங்குவான். மத்தபடிக்கு வேற ஒன்றும் தெரியாது."

"இப்பல்லாம் மடாதிபதிகளைவிட குடும்பிகள் கடவுள் விஷயத்தில தெளிவா இருக்காங்க. ஒரு சதஸ் ஏற்பாடு பண்ணுங்க. நாற்பது அம்பது பண்டிதர்களைக் கூப்பிடுங்க. எல்லோரும் பொண்டாட்டி குழந்தைகளோட வந்து தங்கட்டும். ஒரு நாளைக்கு நாலு மணி நேரம், காலைல ரெண்டு மணி நேரம், சாயந்திரம் ரெண்டு மணி நேரம் சதஸ் வைக்கலாம்.

பண்டிதர்கள் நிரம்பியது அந்த சபை, பரஸ்பரம் தங்களுக்கு கேள்விகள் கேட்டுக்கொள்ளலாம். அவர்கள் பேசுவதை உற்றுக் கவனிக்கிறபோது உங்களுக்கே பல விஷயங்கள் புரிபட்டுவிடும். அதில் தெளிவு மிகுந்தவரைத் தனியே அழைத்து இன்னும் விளக்கங்கள் நீங்கள் கேட்டு கொள்ளலாம்.

இருபது வயதில் மடத்தையும் நிர்வாகம் செய்து, கடவுள் தேடலையும் மும்முரமாக வைத்துக் கொண்டிருக்கிற ஒரு இளைய மடாதிபதி இந்தியாவில் இருக்கிறார் என்பதே சந்தோஷம். உங்களைப் போன்றவர்களால்தான் மழையே பெய்கிறது.

பெண்களின் பத்தினியர் பூமிக்கு எவ்வளவு அவஸ்யமோ அத்தனை அவஸ்யம் உண்மையான ஆண்கள். உண்மையோடிருத்தல்தான் கற்போடிருத்தல். ஏதோ எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னேன். நீங்கள் சிந்தித்து முடிவெடுங்கள்."

அந்த சதஸ் நடந்த காலம் அப்படியே மனதில் இருக்கிறது. மாசி மாத நவராத்திரி போல அத்தனை சந்தோஷமாக இருந்தது. வெறும் பரபரப்பாய் விழாக்கள் நடந்தன. மடத்துக்கு நிறைய நன்கொடைகள் வந்தன. அழைக்காமலேயேகூட பல பெரியோர்கள் வந்திருந்தார்கள்.

வந்தவர்களுக்கு உண்டான சௌகர்யங்களை திறமையான வாலிபர்களை விட்டு செய்யச் சொன்னார். அவர் பண்டித சபையோடு அழுத்தமாய் உட்கார்ந்து கொண்டார்.

"இதுவே அது... என்ன உள்ளிருக்கிறதோ அதுவே வெளியேயும் இருக்கிறது. எங்கும் நிறைந்திருக்கிறது. அதைத் தேடி... அதாவது கடவுளைத் தேடி எங்கும் அலைய வேண்டியதில்லை.



உள்ளே பார்.

உள்ளே பார்க்கும் முயற்சிக்கு 'தியானம்' என்று பெயர். தியானம் எளிதில் கைவராத விஷயம். அதற்கு ஜெபம் உதவும். மந்திர ஜெபம் செய்யச் செய்ய மனம் ஒருமைப்படும்.

மந்திர ஜெபம் செய்ய பிராணாயாமம் முக்கியம். பிராணாயாமம் என்கிற மூச்சுப் பயிற்சி செய்தால் அமைதியாய் உட்காரும் ஆசன ஸித்தி கிடைக்கும், அதாவது எந்தப் பரபரப்புமின்றி ஒரு இடத்தில் அமைதியாய் உட்கார முடியும்.

ப்ராணாயாமம் செய்ய நல்ல குரு அவஸ்யம். தவறாக செய்வது சிரமங்களை ஏற்படுத்தும்.

இதைத் தவிர அடிப்படையாய் கடவுளை அறிந்து கொள்ளும் ஆர்வம் அவஸ்யம். இது ஒருபொழுது போக்கு அல்ல. தியானம், ஜெபம் போன்றவை அலட்டல்கள் அல்ல.

மிகமிக உண்மையோடு ஈடுபட இது பற்றி வெளியே பேசவேண்டிய அவசியமே இருக்காது. 'நான் செய்கிறேன்' என்ற அலட்டலே தோன்றாது.

மந்திர ஜபத்தால் கனிந்த மனதை மெல்ல தியானத்துக்கு திருப்ப வேண்டும், அப்பொழுது மந்திர ஜபம் நின்று போகும்.

மனம் இடையறாது மனதையே பார்த்துக் கொண்டிருக்கும். மனம் தன்னையே பார்ப்பதால் தொழில் செய்யாது. பார்ப்பதே தொழிலாக இருக்கும்.

அப்போது ஏதோ ஒரு நொடி எதனாலேயோ எதுவோ மனதை உள்ளிழுக்கத் துவங்கிவிடும். உள்ளே ஒரு பொட்டல் வெறுமை உண்டாகும். அந்த வெறுமை தான் உயிர்சக்தி.

உடம்பு பற்றி மனம் பற்றி அந்த உயிர்சக்திக்கு எந்த அபிப்பிராயமும் இல்லை.

இங்குள்ள எந்த விஷயங்களையும் அது கண்டு கொள்வதில்லை. அதற்கு நல்லது, கெட்டது இல்லை. சரி, தவறு இல்லை.

அது வெறுமே கிடக்கிற சக்தி. இதுதான் உயிர் தரிசனம்.

ஆனால், இத்தோடு விவகாரம் முடியவில்லை. அந்த உயிர்சக்தியை இடைவிடாது கவனித்துக் கொண்டிருக்க, அந்த உயிரை இயக்குகிற சக்தி எதுவென்று தெரியும்.

இங்கு பேச்சு நின்று போகிறது.

இதை விளக்க முடியாது.

இது சொல்லில் வசப்படாது.

சொல்லவும் தோன்றாது.

மற்றவர் பார்த்தேயிராத பொருளை ஒருவர் எப்படி விளக்க முடியும்?

மற்றவர் பார்த்துவிட்டார் என்றால் எதற்கு விளக்க வேண்டும்?

இந்த இடத்திலிருக்கும் போதுதான் நமக்கும், இந்தப் பூமிக்கும் சம்பந்தமே இல்லை என்பது தெரிகிறது.

ஒவ்வொரு மனிதனும் தனி ஒருவரோடு ஒருவருக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது தெளிவாகப் புரியும் நாமெல்லோரும் இந்தியன். நாமெல்லோரும் இந்துக்கள் நாமெல்லோரும் முஸ்லீம், நாமெல்லோரும் ஒரு ஜாதி என்பதெல்லாம் பயத்தால் வருபவை.

உயிரின் சக்தியை தரிசிக்கப் பிரிவே இல்லை இரண்டானதேயில்லை. எல்லா உயிர்களிலும் தன்னைப் பார்க்க முடியும். தானே எல்லா உயிரும் என்பது புரியும்.



இப்படிச் சொல்கின்ற வார்த்தைகளெல்லாம் வீண், முழுமையற்றவை. உயிரின் சக்தியை அது விளக்குவதே யில்லை. இது தெரிந்த பிறகு பேச்சடைத்துப் போகிறது மக்களோடு வாழ முடியாமல் போகிறது.

கடவுளைப் பற்றி பேசுகிறவர்களைப் பார்த்து பெரிதாய் சிரிக்கத் தோன்றுகிறது. அல்லது அழத் தோன்றுகிறது மனிதர்களின் ஆரவாரங்களைப் பார்த்து விலகிப் போகத் தோன்றுகிறது.

இந்த நிலையை அடைந்தவனுக்கு 'ஞானி' என்று பெயர். இதைத் தெரிந்தவன் நடவடிக்கைகள், சற்று முன்பின் முரணாக இருக்கும். இன்று திட்டியவனை ஞானி, நாளை அணைத்துக் கொள்வான், அவனுக்கு எது பற்றியும் எந்த குறிக்கோளும் இல்லை.

கடவுள் தெரிந்தவனுக்கு லட்சியங்கள் இல்லை. 'இப்படிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்ய வேண்டும்' என்கிற உத்வேகம் இல்லை. ஏதும் செய்ததையும் தான் செய்ததாக உயிரின் சக்தியைத் தெரிந்தவன் நினைக்க மாட்டான், இதனால்தான் ஞானியை 'பல்லவர்', 'பேயர்', 'பித்தர்' என்று சொல்கிறார்கள்.

அவன் குழந்தை போல் மனம் கொண்டவன். இருக்கிற பிரிவு தாங்காமல் அவன் பேய் போல் கத்துவான். பிரித்து அலட்டுகிறவர்களைப் பார்த்து தலையிலடித்துக் கொள்வான், விக்கி விக்கி அழுவான், வாய்விட்டுச் சிரிப்பான்.

கடவுளை அறிதல் எளிதல்ல. உலக வாழ்க்கையைக் கண்கொண்டு பார்க்கையில் அது சுகமானதோ இதமானதோ அல்ல.

ஆனால், அவனால் எதுவும் செய்யவும் கூடும். ஒரு கடவுளைப் போல் அவனால் செயல்படவும் முடியும்.

அப்படிச் செயல்பட்டது பற்றி அவன் பிரகடனப்படுத்த மாட்டான்.

மூச்சுவிடும் அளவுக்கு எளிதாய் அவன் அதிசயங்கள் செய்துவிட்டு அதைப் பற்றி பிரக்ஞையின்றி இருப்பான். நானா அதிசயங்கள் செய்தேன் என்று தன்னைத்தானே வியப்பான், இடையறாது ஆத்ம தரிசனத்தில் இருப்ப வனுக்கு உயிரின் சக்தியில் உறைந்து கிடக்கிறவனுக்கு எதுவும் முக்கியமில்லை. நான் 'செய்தேன்' என்று அவனுக்குத் தோன்றுவதில்லை.

எல்லா மனிதர்களும் அடைய விரும்பும் சந்தோஷம் இதுதான்,

காமம், காதல், உடை, உணவு, வீரம், வெற்றி இசை, நாடகம், நாட்டியம், ஓவியம், பாட்டு, கவிதை, உரைநடை, பூஜை, புனஸ்காரம், தொழுகை, பண்டிகை, யாகம், எல்லாமும் மனிதனுக்கு சந்தோஷமாவது இந்த உயிரின் சக்தியை வினாடிக்கும் குறைவாகத் தொட்டுவிட்டு திரும்புவதால்தான்.

பெண்ணோடு கூடுவதும், கடுந்தாகத்திற்கு நீர் குடிப்பதும், பசியில் பிடித்த உணவை உறிஞ்சி உண்பதும் முங்கிக் குளித்து எழுகின்ற சந்தோஷமும், மதுபோதையில் டக்கென்று கூடுதல் போதை வருவதும், மனம்விட்டுச் சிரிப்பதும், புத்தி கரைய அழுவதும் உயிர்சக்தியைச் சற்று தொட்ட விஷயம்தான்.

இவையும் தியானமும் ஒன்றே.

சரி. எப்போது இந்த உயிர்சக்தியைப் பார்க்க முடியும்? எத்தனை நாள் தியானத்தில் இது கைகூடும்?

பிரச்சினை இங்குதான் இருக்கிறது.

உங்கள் ஈடுபடலின் உண்மையைப் பொறுத்து இது அமைகிறது. நீங்கள் உண்மையா, இல்லையா என்பது பற்றி உங்களுக்கே தெரியாது.



உங்கள் மனம் ஒரு குள்ள நரி, செந்நிற ஓநாய். உங்களை இடையறாது உங்கள் மனம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

தனக்கு எல்லாம் தெரியும் என்ற கர்வம்தான் அறியாமையின் ஆரம்பம்.

கடவுள் இல்லையென்று ஒருவன் மறுக்கிறபோது அவனுக்கு அதுபற்றி தெரியும் என்கிற கர்வம் உள்ளூர தொக்கி நிற்கிறது. சிறிதளவு கூட சிந்திக்காத முட்டாள் தான், மிகப் பெரிய நிர்மூடன்தான், கடவுள் இல்லை யென்று சொல்வான்.

கடவுளைத் தெரியும் என்பவன் பொய்யன். கடவுள் இல்லை என்பவன் மூர்க்கன். கடவுள் இதற்கு அப்பாற் பட்ட ஒரு விஷயம். மிக மிக ஆழ்ந்த அமைதியில் முகிழ்ந்து மலரும் விஷயம்.

நம்பிக்கை, நம்பிக்கையின்மை இரண்டுமே இங்கு வேலை செய்யாது. வெறுமே காத்துக் கிடத்தல், தன்னை அவதானிப்பவருக்குக் கிடைக்கும்.

'அவதானித்தல்' என்றால், எந்த விருப்பும் வெறுப்பு மில்லாமல் பார்த்துக் கிடத்தல்.

இந்த நிலைக்கு வர பல கர்வங்களை விட்டுத் தொலைக்க வேண்டியிருக்கிறது. ஏகப்பட்ட பொய்களைப் புறம் தள்ள வேண்டியிருக்கிறது. மனசின் பல இச்சைகளை வெறுமே பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.

இச்சைகளை அடக்கினால் கடவுள் கிடைத்து விடாது. அடக்கியது சீறி எழும்.

உதாரணமாக, காமத்தை வெறுத்து ஒதுக்குவதால் கடவுள் தன்மை தெரிந்துவிடாது. எதை நீ வெறுத்து ஒதுக்குகிறாயோ அந்தக் காமத்தைப் பற்றியே மனம் இடைவிடாது சிந்திக்கும். தள்ளத் தள்ள முன்னுக்கு வந்து

நிற்கும். வெளியே துறவியாகவும் உள்ளே காமாந்தகனாகவும் நீ வளைய வருவாய்.

அப்படியானால் என்ன செய்ய?...

காமம் என்றால் என்ன, அது யாருக்கு ஏற்படுகிறது, மனதில் எப்போது எந்த மூலையில் உருவாகிறது என்று உற்றுப் பார்.

மனதால் மனதைக் கவனி.

இப்படி மனதைக் கவனிப்பதற்குப் பெயர்தான் தியானம்.

தியானத்தில் ஆழ்ந்து உட்கார மந்திர ஜபம் உதவும்.

மந்திர ஜபம் பயில உடல், மன அமைதி அவசியம்.

பிராணாயாமம் தெரிய நல்ல குரு அவசியம்.

நல்ல குரு கிடைக்க, பணிவு வேண்டும். கற்கின்ற உண்மையான ஆர்வம் வேண்டும்.

ஆர்வத்திற்கு அடிப்படை கடவுள் இருக்கிறார் என்கிற வெற்று நம்பிக்கை. 'கடவுள் இல்லை'யென்று சொன்னால் முடிந்துவிட்டது. தேடல், ஆர்வம் எல்லாம் நின்றுவிட்டது. வெறும் உலகாயதமான பேராட்டமே பெரும் விஷயமாகப் போய்விடும். வெறும் உலகாயதமான போராட்டம் முரட்டுத்தனத்தைக் கொடுத்துவிடும். வெற்றிக்கு எந்த வழியையும் கைகொள்ளும் வெற்றியை ஏற்படுத்தும்.

மரணத்தின்போது இந்த வெற்றி எதுவும் நினைவுக்கே வராது. மரணபயம்தான் மனதைக் கவ்விக் கொள்ளும். எல்லோரும் சாக பயந்துதான், சாகிறார்கள்.

தன்னை அறிந்தவன் மட்டுமே மரணம் பற்றிய பயமில்லாமல் இருக்கிறான் தன்னைத் தேடலும், கடவுளைத் தேடலும் ஒன்றே.



தானே அது. அதுவே தான்.

உள்ளிருப்பதே வெளியிருப்பதும், வெளியே இருப்பதுவே உள்ளிருப்பதும்.

அகம், புறம், சிதம்பரம். ஒன்றுமில்லாத வெறும் வெளியே சிதம்பர ரகசியம்.

சட்டமிடப்பட்ட ஒரு படத்தில் ஒரு புள்ளி இருந்தால் அதை மனம் பார்க்கும். பற்றிக் கொள்ள புள்ளியோ, பொருளோ எதுவுமில்லாத வெட்ட வெளியை மனம் சிந்திக்க முடியுமா?

மனம் தான் பிடித்துக் கொண்டிருப்பவைகளை உற்று உற்றுப் பார்க்க ஒவ்வொன்றாய் மனத்திலிருந்து நழுவிப் போய்விடும்.

உன் பணத்தாசை, பெண்ணாசை, புகழ், கௌரவம், எல்லாவற்றையும் உற்றுப் பார்த்தே விசிறி எறிந்துவிட முடியும்.

இருபது வயதில் தெளிந்த இந்த விஷயத்தை, ஒரு சதஸ் கற்றுக் கொடுத்த இந்த விஷயத்தை, ஒரு பண்டித சபை முழங்கிய இந்த விஷயத்தை, இருபது வருடமாய் அனுபவபூர்வமாய் அறிய அவரும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார். விஷயம் வசப்படவில்லை.

"உயிர் எது? உயிரின் சக்தி எது? நீங்கள் அறிந்திருக்கிறீர்களா குருவே?" - ஒரு பெண்மணி, அறியும் ஆவலோடு கேட்கிறாள். அவளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

கடவுளைப் பற்றி பதில் சொல்ல முடியாதவர் குருவாக இருக்க முடியுமா? தெரியவில்லை. ஒரு குரு 'தெரியாது' என்று சொல்லலாமா?

அதுவும் தெரியவில்லை.

"உனக்கு இதெல்லாம் புரியாதம்மா, போ. போய் மாங்காய் பச்சடி செய். ஊற வைத்த வெந்தய தோசை வார்த்துப் போடு.

ஆஸ்ரமத்துப் புழக்கடையில் மாட்டுத் தொழுவம் இருக்கிறது. சுத்தம் செய். பகவான் உனக்கு நிச்சயம் பிரசன்னமாவார்."

ஏமாற்றி விடலாம். ஆனால், இந்தப் பெண்ணைப் பார்த்தால், ஏமாற்றத் தோன்றவில்லை. உண்மையாய் தாபத்தோடு, அறிந்து கொள்ளும் ஆவலோடு இருக்கிற யாரையும் ஏமாற்றுவது பாபம். மிகப் பெரிய நம்பிக்கை துரோகம்.

அவர் 'கடவுள் யார்?' என்று சிந்திக்கத் துவங்கினார். அவள் கேள்வியை தன் கேள்வியாக்கி பதில் தேடத் துவங்கினார்.

## 20

தங்களைக் கரையேற்ற மகன் வேண்டும் என்று அவள் பெற்றோர்கள் இடைவிடாது முயற்சி செய்தார்கள்.

நான்கும் தொடர்ந்து பெண்களாகப் பிறந்தபோது மனம் இடிந்து போனார்கள். மடத்திற்கு வந்து இப்போது இருக்கும் குருவிற்கு முந்தைய குருவின் பாதத்தில் விழுந்து அழுதார்கள்.

"நான்கும் பெண்ணாயிற்றே" என்றார்கள்.

"பெண் என்பது அத்தனை துக்கமா? சரி_ கவலை வேண்டாம். உங்களுக்கு அடுத்தது மகன் பிறப்பான் உங்கள் ஆசை பூர்த்தியாக நாம் இறைவனை வேண்டு வோம். நம்பிக்கையோடு போய் வாருங்கள்."

அவர்கள் நம்பிக்கையோடு போனார்கள்.



ஒரு வருடத்திற்குள் அவர்களுக்கு ஆண்குழந்தை பிறந்தது. ஆண்குழந்தை பிறந்ததால் அதற்குமுன் பிறந்த நாலு பெண்குழந்தைகளும் அலட்சியமானார்கள்.

நான்காவதாகப் பிறந்த அவள் மோசமாய் அலட்சியம் செய்யப்பட்டாள் பெற்றோர்களாலேயே புறக்கணிக்கப்பட்ட குழந்தை அவள். யாராலும் சீராட்டப் படாத பெண் அவள். அன்பாய் அவளிடம் பேசியவர்கள் மிகமிகக் குறைவு. ஆரோக்கியமான சூழ்நிலை அவளுக்குக் கிடைத்ததில்லை. மடம்தான் அவளை சற்று மரியாதை யுடன் நடத்தியது.

ஆனால், எல்லா மடத்தையும் போல அந்த மடத்திலும் பெண்கள் என்பவர்கள் இரண்டாந்தர குடிமக்களாகவே இருந்தார்கள். எப்போதாவதுதான் பூஜையில் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது.

ஆண்களுக்குப் பிரம்மச்சரியம் வலியுறுத்தப் பட்டது. அதனாலேயே பெண்கள் அமைதியாகவும் அடக்கமாகவும் இருக்கவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டார்கள்.

அவள் நினைத்தபோதெல்லாம் பஸ் பிடித்து மடத்துக்கு வந்துவிடுவாள். அந்த மடத்து சூழ்நிலை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவளை அழகாய் பக்குவப்படுத்தியது. அற்புதமான ஒரு ஜீவநதியும், வயல் வெளியும், படர்ந்த புல்வெளியும், அடர்ந்த தோப்புகளும், மலையும், பள்ளத்தாக்கும் அவளை கிறங்கடித்தன.

மடத்துக்கு வரும் யாத்ரீகர்களை அவள் கவனித்துக் கொள்வாள். அவர்களுக்கு உணவு கொடுப்பதும் உடைகளைத் துவைத்துக் கொடுப்பதும் விருப்பத்தோடு செய்வாள். கிழிசல்களைத் தைத்துக் கொடுப்பாள்

மடத்துக்குப் பெண் துறவிகள் வரும்போது அவளுடைய சேவை மிக முக்கியமாயிற்று.

முதல் பெண்ணுக்கு நிறைய பணம் செலவு செய்து ஒரு இன்ஜினீயரைத் திருமணம் செய்து வைத்தார்கள். இரண்டாவதுபெண்ணை ஒரு உறவுக்காரப் பையன் திருமணம் செய்து கொண்டான். மூன்றாவது பெண் அதிகம் படித்து சென்னைக்குப் போய் வேலையில் சேர்ந்து அங்கிருந்து சிங்கப்பூர் போனாள். ஜாதி விட்டு ஜாதி மாறி ஒரு மிகப் பெரிய தொழிலதிபரைக் கல்யாணம் செய்து கொண்டாள்.

இந்தத் திருமணங்களின் எல்லா விளைவுகளும் இவள் தலையில்தான் விழுந்தன.

"உனக்கும் உறவுலதான் பார்க்கணும். எவன் எங்க இருக்கான்னு தெரியலை."

அம்மா ஒருமுறை அலுத்துக்கொண்டாள். "கல்யாணம் பண்ணிண்டுட்டாளா... வேற ஜாதியா... அப்புறம் ஏன் இங்க வரா? நான் கருமாதி பண்ணியாச் சுன்னு சொல்லு. நீ ஏன் நிக்கறே? நீயும் ஓடிப்போக வேண்டியதுதானே, எவனோடயாவது."

"என்ன... உள்ளே அப்படி ஒரு எண்ணம் இருக்கா? அரிவாமணையால் ஒரே போடு.. உன்னைக் கொன்னுட்டு நேரே ஜெயிலுக்குப் போயிடுவேன்."

பெற்றோர்கள் காரணமின்றி சிடுசிடுத்தார்கள்.

தம்பி சாப்பிட்ட பிறகுதான் அவள் சாப்பிட வேண்டும் என்றார்கள். இத்தனைக்கும் அப்பால் அவள் பெரியப்பாவின் கடைசிப் பெண்குழந்தை, பெரியப்பாவின் மரணத்திற்குப் பிறகு அவளிடம் வந்து சேர்ந்தது. ஆதரவற்ற அந்தக் குழந்தையை வளர்க்கலாம் என்று அவள் சொல்ல, அதற்கும் திட்டு விழுந்தது.



"எப்படி வளர்க்க முடியும்? யாரால வளர்க்க முடியும்? உனக்கு சேர்த்து வச்சிருக்கிற காசிலேருந்துதான் இவளுக்கும் சோறு போடணும். ஒரு வேளை சோறு குறைச்சுப்பியா நீ?" - அம்மா கூவினாள்.

"சரி... நான் குறைஞ்சுக்கறேன்..." - அவள் அமைதியாகப் பதில் சொன்னாள்.

"சோத்தக் குறைச்சுப்பே. சரி... கல்யாணம்...? கல்யாணம் வேண்டாம்னுவியா?"

"சரி.. கல்யாணம் வேண்டாம்.."

"என்ன நீ பெரிய தியாக தீபமா?" அப்பா சீறினார்.

"நம்ம குடும்பத்துப் பொண்ணு கண்ணெதிர்க்க அநாதையாறதைவிட நான் கல்யாணம் பண்ணிக்காம இருக்கிறது பெட்டர் இல்லையா?"

"இப்படியெல்லாம் பேசிட்டு கடைசில ஜாதி விட்டு ஜாதி எவனையோ இழுத்துட்டு ஓடப்போறா.. அதான் நடக்கப் போறது.."

"இல்லேப்பா. நான் அப்படி பண்ண மாட்டேன். உங்க அனுமதி இல்லாம யார்கூடவும் பேசக்கூட மாட்டேன்."

அந்த பெரியப்பாவின் மகள் வந்து ஏழு வருடங்களாகின்றன. படிப்பிலும், வீட்டு வேலையிலும் மகா கெட்டிக்காரியாக அந்தப் பெண் இருந்தது. அவளோடு 'அக்கா.. அக்கா' என்று ஒட்டிக் கொண்டது.

அக்கா ஸ்ரீமதியால்தான், அவள் தியாகத்தால்தான் இந்த அளவுக்கு இருக்கிறோம் என்று அந்தப் பெண் குழந்தைக்குத் தெளிவாய் தெரிந்திருந்தது.

பெரியப்பாவின் மகள் வித்யாவுக்கு இரண்டு அண்ணாக்கள் இருந்தார்கள். வெளியூரில் மடம் நடத்திய

பள்ளிக்கூடத்தில், ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களும் லீவுக்கு மடத்துக்கு வருவார்கள்.

வித்யா இந்த வீட்டுக்கு வெறும் கையோடு வரவில்லை. பெரியப்பாவின் நிலம் நீச்சுகளோடுதான் வந்தாள். இன்ஷுரன்ஸ் பணம், நிலம் விற்ற காசு என்று மெல்ல மெல்ல வீட்டிற்குள் காசு வந்தது. வசவுகள் குறைந்தன.

ஆயினும் ஸ்ரீமதியின் கல்யாணத்திற்கு மிகப் பெரிய முயற்சிகள் எதுவும் நடக்கவில்லை. வந்த காசை வியாபாரத்தில் போட்டு கம்பெனியைப் பெரிதாக்கி பிள்ளையிடம் கொடுக்கலாம் என்று திட்டம் தீட்டப் பட்டது. இவள் கல்யாணம் பற்றி அக்கறையே காட்டாமல் இருந்தது.

அந்தக் குற்றவுணர்வினால் எப்பொழுதெல்லாம் மடத்துக்குப் போக வேண்டும் என்று இவள் நினைக் கிறாளோ அப்பொழுதெல்லாம் அவள் அனுமதிக்கப் பட்டாள். ஒரு வாரம், பத்துநாள் என்று மடத்தில் தங்கி மடத்துக்கு சேவை செய்தாள். கூடவே வித்யாவும் வருவாள்.

மடத்தின் அதிகாரிகளோடு சந்தோஷமாய் பேச துவங்கினாள் ஸ்ரீமதி. மடத்து நியதிகள் தெரிந்ததால், பழகிப் பழகி அத்துப்படியானதால் அவள் இருப்பு அங்கீகரிக்கப்பட்டது.

குழந்தை வித்யா கணீரென்று பாடுவாள். ஆனால், அப்படிப் பாட ஸ்ரீமதி அருகே இருக்கவேண்டும். ஸ்வாமி சபையில் இருக்கிறார் என்றால் இருவரும் போய் தூண் மறைவாய் உட்கார்ந்து கொண்டு ஆரத்தி எடுத்ததும் பாட ஆரம்பித்து விடுவார்கள்.



ஒரு கோடை விடுமுறையில் அவளுடைய அப்பாவும், அம்மாவும்கூட மடத்துக்கு வந்தார்கள். மடத்துக்கு நன்கொடை தர விருப்பம் தெரிவித்தார்கள். வியாபாரம் நன்றாக நடக்கிறது என்று சொன்னார்கள்.

ஸ்வாமிக்கு சட்டென்று அவள் நினைவுதான் வந்தது. வியாபாரம் நன்றாக நடக்கிறது என்றால் ஸ்ரீமதியை கரையேற்றி இருக்கலாமே.

காசு வாங்கும்போது அவருக்கு நெஞ்சு கனத்தது.

'சரி... இது அவர்கள் குடும்பக் கவலை. ஒரு தகப்ப னுக்கும் தாய்க்கும் இல்லாத அக்கறையா? திருமணம் என்பது காசால் மட்டுமே நடக்கும் விஷயமா?' என்று சிந்தித்தார்.

'பாதையில் மடக்கி அந்தக் கேள்வியைக் கேட்டது நான்' என்று சொன்னபோது 'அடடே' என்று தோன்றியது.

இது உன் கேள்வியா? ஊர் கேள்வியா? நீ கேட்கிறாயா? அல்லது யாரேனும் கேட்டுவிட்டு அதை என்னிடம் கேட்கிறாயா?

இது பதில் எதிர்பார்க்கும் கேள்வியா? அல்லது கர்வத்தைக் காட்டும் கேள்வியா?

'உயிரை தரிசித்திருக்கிறீர்களா ஸ்வாமி... உயிரின் சக்தியை அறிந்திருக்கிறீர்களா?'

இல்லை என்று அவருக்கு நன்றாகத் தெரிந்து விட்டது.

ஆற்றங்கரையில் உட்கார்ந்து உயிரை உற்றுப் பார்க்கும்போது தொடர்ச்சியாய் யோசிக்க முடியாது போயிற்று. சிந்தனைகள் அறுந்து விழுந்தன. வெறும் ஜபம் மட்டும் செய்துவிட்டு குருவின் சமாதி நோக்கிப் போனார்.

"எனக்கு சொல்லிக் கொடுக்காமல் போய்விட்டீர்களே? இப்படி ஒரு கேள்வி வருகிறதே... எனக்கு பதில் சொல்லத் தெரியவில்லையே." என்று நொந்து கொண்டார்.

நின்றுகொண்டிருந்தவருக்கு உடம்பு லேசாய் தள்ளாடிற்று. உட்கார்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

மடத்து சிப்பந்திகளை அழைத்து தன் முதன்மைச் சீடரை வைத்து தொடர்ந்து வேலைகளைச் செய்யச் சொன்னார். எத்தனை முக்கியமான வேலையாக இருந்தாலும் தன்னைத் தொந்தரவு செய்யவேண்டாம் என்று கட்டளையிட்டார்.

ஆற்றங்கரையை விட குருவின் சமாதி அருகே மனம் அமைதி அடைந்தாற்போல் இருந்தது.

மனசு குதிரையில் சட்டென்று ஏறி உட்கார்ந்தார். குதிரையை ஒரே நேர்கோட்டில் செலுத்தினார். அதிகம் விரட்டாமல் நடக்கவிட்டார். குதிரை நடையையே கவனித்துக் கொண்டிருந்தார்.

நடந்து கொண்டிருந்த குதிரையை மெல்ல நிறுத்தினார். குதிரையில் உட்கார்ந்தபடி குதிரையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

மனசு என்கிற குதிரையை, மனசு என்கிற இவர் ஏறி உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தார். அவர் அசைந்தால் குதிரை அசைந்தது. குதிரை அசைந்தால் அவர் அசைய வேண்டியதாயிற்று.

குதிரையும், அவரும் ஒருவரை ஒருவர் கவனித்தபடி அசையாது இருந்தார்கள்.

இரண்டு ஒன்றைப் போல, ஒரே கல்லால் ஆன சிலை போல, ஒன்றுடன் ஒன்று கலந்தாற்போல் இருந்தார்கள்.



குதிரையாய் இருந்த மனமும் பார்த்துக் கொண்டிருந்த மனமும் இப்போது ஒன்றாயிற்று. ஒட்டுமொத்தமாய் உணரப்பட்டது.

சட்டென்று அந்த அனுபவம் சுருங்கத் துவங்கியது. உடம்பு ஏதோ மயக்கத்தில் ஆழ்ந்தது. மனம் பற்றிய நினைப்பு காற்று போக கரைந்தது. காது அடைத்துக் கொண்டு ஏதோ அதல பாதாளத்தில் விழுவது போல் ஒரு உணர்வு ஏற்பட்டது. நெருப்பினுடைய வீச்சு உணரப்பட்டது. தணலின் தகிப்பு இருந்தது.

தான், தனது என்கிற உணர்வுகளையெல்லாம் யாரோ பறித்துக் கொண்டு போவதுபோல் அவர் உணர்ந்தார். திடீரென்று மரண பயம் கவ்வியது.

உதறி எழுந்துவிட வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. 'வீடு...' குரு கட்டளையிட்டதாய் உணர்ந்து விட்டார்.

அது மிகப்பெரிய பயணம். சில நொடிகளுக்கு நடந்த மிக நீண்ட பயணம்.

உடம்பின் காலம் வேறு, மனதின் காலம் வேறு. உடம்பின் வாழ்க்கை வேறு, மனதின் வாழ்க்கை வேறு.

மனம் ஒரு சக்தியாகி, ஒரு பந்தாகி எங்கோ தொலைதூரம் நழுவிப் போய் எந்தப் பிடிப்புமில்லாமல் படர்ந்து மோதி நிறுத்த எந்தத் தடையுமில்லாமல், ஓடி வேகம் குறைந்து நிதானமாகி நின்றது. வெறும் ஒளியில் ஒளியாகிக் கிடந்தது. கரையத் துவங்கியது. காணாமற் போயிற்று. காலம் நழுவிற்று.

உடம்பின் காலம் வேறு, மனசின் காலம் வேறு.

நொடியில் நீண்ட பயணம் செய்த மனது. ஏழு மணி நேர இரவை முற்றிலும் மறந்து போயிற்று. தும்மி, மூக்கு

உறிஞ்சின நேரத்தில் ஏழு மணி காலம் கடந்தது போல் ஆயிற்று.

அவர் கண் திறந்தார்.

ஊ...வே...ஆ.. என்று சந்தோஷத்தில் வார்த்தை இல்லாது கூவினார். எழுந்து நின்று விழுந்தார். நிற்க முடியாமல் தவழ்ந்து போய் குருவின் சமாதியை கட்டிக் கொண்டார்.

"எனக்கு என்னைக் காட்டினாயே அப்பா.." என்று விம்மினார். எழுந்து வலம் வந்து பலமுறை நமஸ்கரித்தார்.

அந்த விடியல் வேளையில் குருவின் சமாதி விட்டு இறங்கி தோப்புக்களூடே மடம் நோக்கி ஓடினார்.

ஆரா அமுதனைப் பாடிப்பற, அயோத்தி வேந்தனைப் பாடிப்பற.

மனம் கும்மாளமிட்டது. பறவை போல் பறந்தது மான்போல் துள்ளியது. பூக்கள்போல விரிந்தது. நிலவு போல் குளிர்ந்து இருந்தது. நீரில் இறங்கிய உடம்பு போல் சுட்டது. சிரிப்பு வந்தது. அழுகை பொங்கியது.

*தந்தது உந்தன்தன்னை*
*கொண்டது எந்தன்தன்னை*
*சங்கரா-யார் கொலோ சதுரர்*

எதற்கும் உபயோகமில்லாத என்னை எடுத்துக் கொண்டு உன்னை எனக்குக் கொடுத்தருளினாயே அப்பா.. நம்மில் யார் கெட்டிக்காரர்?

நான்தானேயப்பா கெட்டிக்காரன்.. மனம் பெருமிதத்தால் புளகாங்கிதம் அடைந்தது.

அவருக்கு இயல்பில்லாத வீறுகொண்ட நடையோடு மடத்தின் சிமெண்ட் தளத்தில் நடக்க மெல்ல கீழ்வானம் வெளுத்தது.



அவள் கைகால் அலம்பிக் கொண்டு முகம் கழுவிப் பொட்டிட்டு உதயத்தை வணங்குவதற்காக வெளியே வந்தாள்.

காற்று முகத்தைத் தாக்கிற்று, குளிர்காற்றை நுரையீரல் முழுவதும் உள்ளிழுத்தாள். இரண்டு கைகளையும் விரித்து காற்றைத் தழுவிக் கொள்வதுபோல் நின்றாள். உடம்பின் எல்லா இடங்களிலும் சில்லிப்புப் படவேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

ஸ்வாமி பத்தடி தொலைவில் அவளைப் பார்த்தார். அவர் சந்தோஷம் கரைபுரண்டது. சம்பிரதாய மதகைத் தாக்கி உடைத்தது. மரபுக் கதவுகள் பிளக்கப்பட்டன. உற்சாகம் சீறிப் பொங்கியது.

இவளால் அல்லவோ இது நேர்ந்தது. மனசு நன்றியில் விம்மிற்று. இந்தப் பெண்ணால் அல்லவோ கடவுள் தரிஸனம் கிடைத்தது.

நன்றியில் நனைந்த மனசு கருண்டு கனக்கத் துவங்கியது.

தாயே.. பராசக்தி.

அவர் அவளைக் கையெடுத்துக் கும்பிட்டார். நெடுஞ்சாண்கிடையாய் அவள் காலில் விழுந்தார்.

## 21

அடையாளம் தெரிந்ததும் அவளுக்கு உதறிப் போட்டது.

"ஸ்வாமி... பகவானே" பதறி, நிலம்பட நமஸ்கரித்தாள்.

"எதற்கு என்னைப் போய் பாவியாக்குகிறீர்கள்? நான் என்ன தவறு செய்தேன்?" முகம் பொத்திக் கொண்டாள்.

"எது தெரிய வேண்டுமோ அது தெரிந்துவிட்டது. உன்னால் தெரிந்தது. உன் கேள்வியால் தெரிந்தது.

என்னென்ன விதமாகவோ நம் முன்னோர்கள் எழுதி வைத்தவை எல்லாம் எனக்கு வார்த்தைகளாக இருந்தன. இன்று சம்பவமாகிவிட்டது. அது உள்ளே நிகழ்ந்து விட்டது. நான் நமஸ்கரித்தது உன்னை அல்ல. உன்னுள் இருக்கிற பரம்பொருளை. இன்று காலை பூஜை முடிந்த பிறகு என்னிடம் பிரசாதம் வாங்கிப்போக வேண்டும்."

சொல்லிவிட்டு தொடர்ந்து நடந்தார். அவர் நடையில் துள்ளல் இருந்தது. அந்தத் துள்ளலை அவள் வியப்போடு பார்த்தாள்.

'என்ன ஆயிற்று இவருக்கு- இவர் இப்படித் துள்ளி நடப்பது நல்லதா, கெட்டதா?' கவலைப்பட்டாள்.

அவர் பல் விளக்கினார். கை, கால் சுத்தம் செய்து கொண்டார். திருச்சின்னங்கள் இட்டுக் கொண்டார். சீடர்கள் குருவுக்கான சுப்ரபாதம் பாடினார்கள்.

அவர் அறைக்குள் இருந்து வெளியே வர, குழல் விளக்கொளியில் நிறைய பேர் தரிசனம் செய்து காலில் விழுந்து நமஸ்கரித்தார்கள்.

குரு ஸ்நானம் செய்து தன் உடுப்பைத் தானே அலசி, அதை யாரேனும் சீடரிடம் கொடுத்துப் பிழியச் சொல்லி உலர்த்தக் கொடுப்பார். முங்கி நீராடுவார். கரையேறி உலர்ந்த வஸ்திரம் அணிந்து, கல்மேடையில் அமர்ந்து ஜெபம் செய்வார். நீரெடுத்து கோயிலுக்கு வருவார். ஆஸ்ரமத்தை சுற்றி நடந்து யாரோடும் எதுவும் பேசாமல் ஆனால், எல்லாவற்றையும் கவனித்தபடி போவார்.

ஸ்வாமி தரிசனம் முடிந்தவுடன் நைவேத்ய பிரசாதமாய் சிறிது மறைவிடத்தில் உண்டுவிட்டு மற்றவர்களுக்குக் கொடுக்கச் சொல்வார்.



பக்தர்கள் பிரசாதம் வாங்கும்போது பேசுவார். குசலம் விசாரிப்பார். யார், யார் அந்த மடத்திற்குப் புதிதாக வந்திருப்பது என்று உற்றுப் பார்ப்பார்.

பிறகு உள்ளே போய் மடத்து விஷயங்களைப் பற்றி பேசுவார். பிறகு ஒன்றரை மணி நேரம் நீண்ட பூஜை நடக்கும். உலக க்ஷேமத்திற்காய் பூஜை நடக்கும்.

பெரிய ஹாலில் முந்நூறு, நானூறு பேர் அமர்ந் திருக்க எல்லாவித உபசாரங்களுடன் ஸ்வாமிக்கு பூஜை நடக்கும். அந்த மடத்தில் இந்தப் பூஜைதான் மிக விசேஷமானது. வெளி உலகம் எங்கும் பரவசமாய் பேசப்படுவது. பத்தடி தூரத்திலிருந்து ஸ்வாமி மேல பூப்போடறபோது, ஒவ்வொரு பூவும் சொல்லிவச்ச மாதிரி போய் விழும். எல்லாம் நானூறு, ஐந்நூறு வருஷத்து விக்ரஹங்கள், ஆயிரம் வருஷத்து சாளக்கிராமம் ஸ்ரீ சக்கரம்.

அபிஷேகம் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். எல்லோரும் நன்றாய் பார்க்க வேண்டும் என்று வாத்திய கோஷத்தை அடக்கி ஒரே ஒருவர் மட்டும் வேதம் சொல்ல, வெள்ளிப் பீடத்தில் வைக்கப்பட்ட சாளக் கிராமத்திற்குத் தங்கக கிண்டியால் பாலபிஷேகம் நடக்கும். சிங்கமுக வாயுள்ள அந்தப் பாத்திரத்தை உயரத் தூக்கிப் பிடித்து ஒற்றைக் கோடாய் பால் வழிய குளிரக் குளிர சாளக்கிராமம் நனையும்போது, உயிர் உறைந்து போகும், யோசிப்பு நின்று போகும்.

அவர் குதூகலத்துடன் பூஜைக்கு உட்கார்ந்தார். 'என் ஐயனே- என் ஐயனே' என்று அரற்றினார். விடியலில் அவர் கண்ட தரிசனமே நெஞ்சு முழுவதும் நிறைந் திருந்தது. கைகள் பழக்கத்தினால் வேலை செய்து கொண் டிருந்தன. அடுத்த வேலை, அடுத்த வேலை என்று மனம்

ஞாபகத்திலிருந்து கட்டளையிட்டாலும் மனம் அந்த ஆனந்தத்திலேயே லயித்திருந்தது.

'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற குதூகலப் பட்டுக் கொண்டிருந்தது. இவ்வளவு எளிதா இறைத் தன்மை, மனிதருக்கு இவ்வளவு அருகிலா இறைவன்?_ இந்த முட்டாள் ஜனம் எங்கெல்லாம் தேடுகிறது. இறைவனைத் தேடுகிறேன் என்ற பெயரில் என்ன ஆட்டமெல்லாம் போடுகிறது.

இறைவனை தேடுவதா_என்ன அபத்தம்? தன்னையே யாராவது தேடிக் கொள்வார்களா? தன்னையே காணோம் என்று யாராவது மறந்து போவார்களா?

இதில் இன்னொரு முட்டாள்தனம் வேறு. 'இறைவன் இல்லை... இல்லை... இல்லவே இல்லை. தான் இல்லை என்று உரக்கச் சொல்வதில் பைத்தியக்காரத் தனம் தெரியவில்லையா? எல்லா இடத்திலும் எல்லா உருவத்திலும், எல்லா அசைவிலும் அந்த மாபெரும் சக்தி இடைவிடாது உயிர்ப்போடு இருக்கிறது. அது இருப்பது இப்போதும் தெரிகிறது. இல்லையென்று சொல்வதில் கூட ஒரு நியாயம் இருக்கிறது அறிவீனத்தால் சொல் கிறார்கள் என்கிற சமாதானம் இருக்கிறது.

ஆனால், அறியாமலேயே அறிந்தேன் என்று சொல்லும் அலட்டல்தான் அயோக்கியத்தனம். அது பற்றி எந்தச் சந்தேகமும் கொள்ளாது படித்ததை ஒப்பிக் கின்ற திமிர்தான் மிகப் பெரிய கேவலம்.

ஆனால், அறிவிலிகளைப் பற்றியோ, அ[illegible]ர் களைப் பற்றியோ கவலைப்படாது அவர் ச[illegible] மலர்ந்து நிற்கிறது. அதற்கு குறையே இல்லை[illegible]ற்கு கோபமே இல்லை. அது எதுவும் கேட்கவில்லை [illegible] அது உள்ளேயும், வெளியேயும் அப்படியே இருக்கிறது.



உள்ளே அது இப்படி ஆனந்தமாய் இருக்க, வெளியே ஜனங்கள் துக்கப்படுவதேன்?

உண்மையில் துக்கமே இல்லை. இயல்பை ஏற்றுக் கொள்ள மறுப்பதுதான் துக்கம். நோய், மரணம் எல்லாம் இயல்பு. காமமும், காதலும் இயல்பு. செல்வமும், வறுமையும் இயல்பு.

ஒரு பசுவுக்கு வைக்கோல் போர் உணவாகக் கிடைக்கிறது. ஒரு பசுவுக்கு தார் சாலை வெயில் இயல்பாய் ஏற்படுகிறது. இதில் எந்தக் கணக்கும் இல்லை. எந்தக் கல்மிஷமும் இல்லை. எந்த விளைவாலும் ஏற்பட வில்லை. இதற்கு முன் பின் இல்லை விகிதத்தை ஏற்றுக் கொண்டு விட்டால் சச்சரவே இல்லை. மறுக்கிறபோது தான் மனக்கவலை. ஒப்பிட்டுப் பார்ப்பதுதான் உபத்திர வத்தின் ஆரம்பம்.

நான் என்று உடம்பைக் கொள்கிற போது வெற்றியும் தோல்வியும், வலியும் செல்வமும் வந்துவிடுகின்றன. உடம்பு என்கிற கண்ணாடி வழியே பார்க்கிறபோது எல்லாம் இரட்டை இரட்டையாகத் தெரிகிறது. இந்த ரெட்டைகள் ஒன்றுக்கொன்று சண்டை போடுகின்றன. நேற்று வெற்றி, இன்று தோல்வி என்று மயக்கத்தில் ஆரவாரிக்கின்றன. ஆனால், இருப்பது ஒன்றுதான்.

இங்கு பார்வை தவறாகிவிட்டது. மனசு பிழன்று விட்டது. இங்கு இருக்கின்ற எல்லா விக்ரஹங்களும் இறைவன்தான். பால் சொரிந்தாலும் சொரியா விட்டாலும் ஒன்றுதான். பூஜை செய்தாலும் செய்யா விட்டாலும் அவன் இருப்பு, இருப்புதான்.

அவர் ஒரு பூவை எடுத்து விக்ரஹத்தின் மீது வட மொழியில் வணக்கம் சொல்லி வீசினார். அது விக்ர

ஹத்தின் உள்ளங்கையில் போய் உட்கார்ந்தது. கூட்டம் 'ஈஸ்வரா' என்று கை கூப்பியது.

அடுத்த பூவை எடுத்து சுண்டினார். அது விக்ரஹத்தின் தலையில் போய் உட்கார்ந்தது. ஒவ்வொரு பூவும் போடுவது போல் அல்லாமல் இறைவன் வாங்கிக் கொள்வது போல் விழுந்தது.

"இவர் மகான் ஐயா..."

"இவர்தான் மகான். வில்லு வச்சு அம்பு தொடுத்தா கூட தப்பா போகும். உக்காந்த இடத்துலேர்ந்து ஒவ்வொரு ஸ்வாமிக்கும் என்ன அழகாப் பூ போடறார் பாருங்கோ, ஸ்வாமி மேல அத்தனை ஈடுபாடு. பூஜைல அத்தனை ஏகாக்கிரஹம்."

எங்கோ தொலைவில யாரோ பேசுவது அவருக்கு மிக அருகே கேட்டது. எந்த வாய் கொண்டாடுகிறதோ, அந்த வாய்தான் இடித்துப் பேசும். எவர் மிகவும் பாராட்டுகிறாரோ, அவர்தான் வேகமாய் குறைகூறுவார்.

இங்கே பூ போட்டதில் எதுவும் என் செயலல்ல, இது தானே நிகழ்ந்தது. இதைப் போய் வெளியே சொல்லி ஒவ்வொரு நாளும் இப்படியே நடக்கும் என்று எதிர் பார்த்து பூஜை மறந்து போய், பூ போடும் பந்தயம் ஆரம்பமாகி விடும். விழுமா, விழாதா... படுமா படாதா... என்று இருமையில் மனம் மாட்டிக் கொள்ளும். இருமையில் மாட்டிக் கொண்ட மனம் ஒருமைக்கு வரவே வராது. 'விழும்... விழாது' என்கிற சண்டையில் மாட்டிக் கொண்டால் சமாதானம் அறவே போய்விடும், எந் நேரமும் ஆரவாரம்தான் இருக்கும்.

நான் விக்ரஹத்திற்கு பூ போடவேயில்லை. இறைவனுக்குப் போடுகிறேன். இறைவன் எங்கும் இருப்பவன். இந்தப் பூக்களை நாலா பக்கமும் தூவலாம். மேலும் கீழும் தூவலாம். தன் மீது தூவிக் கொள்ளலாம்.



ஆனால், இப்படிச் செய்தால் இந்தக் கூட்டம் மிரளும். 'பூஜையைக் கெடுத்துவிட்டான்' என்று சொல்லும். 'மடாதிபதி சரியில்லை' என்று மடத்தை குறை பேசும். ஆனால், இத்தனை பூக்களையும் வாரித் தலையில் போட்டுக் கொண்டால்தான் ஆறும் போல் இருக்கிறது.

தங்கக் கிண்டியை உயரத் தூக்கி தன் பக்கம் திருப்பி, சிங்க முகத்தின் வழியாகப் பாலைத் தனக்கே அபிஷேகம் செய்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. 'உள்ளே தோன்றிய வெளிச்சத்திற்கு ஆரத்தி காட்ட வேண்டும்' என்று ஆசை வந்தது.

வேண்டாம். கூட்டம் சிரிக்கும். அவர் சாளக்கிராமத் திற்கு பாலபிஷேகம் செய்தார். சூரியனாய் பால் தெளித்து விழுந்தது.

"சத்குரு..." யாரோ அலறினார்கள்.

"இப்படி ஒரு அபிஷேகம் இந்த ஜென்மத்தில் நான் பார்த்ததில்லையா. இப்படி வட்டமா காம்பஸ்ல போட்ட மாதிரி சந்தனம் யாரய்யா வைப்பா? இதுக்குப் பேர்தான் பர்ஃபெக்ஷன்."

இப்படி ஒரு நிதானம் ஒரு துறவிக்குத்தான் வரும். குடும்பிக்கு வராது. அவர் தூப தீபம் காட்டி நைவேத்திய உபசாரம் செய்தார். பாடம் சொல்லித் திரும்பினார்.

வேறு யாரோ பாடினார்கள்.

மிக அழகாக சங்கீதம் தெரிந்து பாடினார்கள். சங்கீதம் அங்கே தூக்கலாக இருந்ததே தவிர, பக்தி இல்லை. குழைவும் சுகமும் இருந்ததே தவிர, கும்பிடுதல் இல்லை.

அவர் மனது அவளையே நினைத்துக் கொண் டிருந்தது. அந்தப் பெண் பாடும்போது மனதை ஒரு புள்ளியில் நிறுத்துவாள்.

இந்தப் பாடகி பாடி முடித்தபிறகு தன்னை யார், யார் பாராட்டுவார்கள் என்று மனசுக்குள் அலைந்து கொண்டிருக்கிறாள். முடிக்கும்போது கைதட்டல் வர வேண்டுமென்று ஆசைப்படுகிறாள், பாட்டு முடிந்ததும் சுற்பூர ஆரத்தி காட்டினார். விழுந்து நெடுஞ்சாண் கிடையாக வணங்கினார்.

'இறையே. எனக்கு இன்னமும் பணிவைத் தா. எந்நேரமும் உன்னோடு இருக்கும் அறிவைத் தா. வேறு எது குறித்தும் அலட்டாத தெளிவைத் தா.

இறையே, உன்னை நான் பற்றிக் கொண்டேன். இனி எங்கு எழுந்தருள்வது? அடுத்து என்ன செய்வது? எனக்கு வழிகாட்டு.'

மனசுக்குள் பேசும்போதும், கும்பிடும்போதும் அவர் தன்னையே கும்பிட்டார்.

இரண்டு கைகளாலும் பூக்களை வாரி தன்னை ஒரு முறை சுற்றி அருகே இருந்த அம்மன் விக்ரஹத்தின் மீது சொரிந்தார்.

சிவப்பும், மஞ்சளும், வெள்ளையும் அழகாய் ஆங்காங்கே அமர்ந்தன. கூட்டம் மறுபடி 'ஆஹா'காரம் செய்தது.

அவர் மனம் மிக உன்னத நிலையில் இருந்தது. உள்ளே வெகு ஆழத்தில் இருந்தபடியே உலகத்தைப் பார்த்தது.

"ஊருக்குப் போகலாமே, ஊருக்குப் போகணும்னு தோணித்துன்னா போயிடணும். ஊருக்குப் போயிட்டு வாங்கோ." பழம் கொடுத்தபடியே ஆசீர்வாதம் செய்தார்.

'எப்படித் தெரிந்தது இவருக்கு?' வாங்கியவருக்கு வியப்பில் மூச்சடைத்தது.



"உங்க தாயார் உடம்பு சௌக்கியமாயிடும். எப்ப யாருக்கு உடம்பு சரியில்லைன்னாலும் ஞான சம்பந்தர் பதிகம் ஒண்ணு இருக்கு.

'மறையுடையாய், தோலுடையாய்'னு ஆரம்பிக்கும். நெடுங்களம்கற ஊர்ல இருக்கற ஸ்வாமியை வேண்டிட்ட பதிகம்.

நீங்கள் நெடுங்களம் போக வேண்டிய அவசியமில்லை. இங்கே உட்கார்ந்தபடியே இருபது தடவை பாடுங்கோ. அம்மாவுக்கு உடம்பு, தானா சரியாயிடும்."

கேட்டவர், கண்ணில் ஜலம் வழிய, காலில் விழுந்தார். 'சத்குரு' என்று அரற்றினார்.

'இறைவா. நோய் நீ கொடுத்தது. ஆனாலும் இவர்களால் தாங்க முடியவில்லை. இவர்கள் துன்பத்தை நீக்கி விடேன். இவர்கள் விரும்பிய வண்ணம் சந்தோஷத்தைக் கொடேன்.' மனசுள் பேசினார்.

"இவர்தான் பாடினது.."

"சந்தோஷம். இன்னும் நன்னா பாடணும். பாட்டுங்கறது ராகம், தாளம் இல்லை, இது இரண்டு இல்லாமலே கூட பாட்டு உண்டு. கடும் அபஸ்வரத்துலகூட பாடலாம். ஆனா, பாவம் இல்லாம பாடவே கூடாது. உள்ளே, ஸ்வாமியை நினைச்சுக்கணும். பக்கத்துல இருக்கிற மாமியை நினைச்சுக்கப்படாது. குரல் ரொம்ப இனிமை."

பழம் கொடுத்தார். பாடகி முகம் இருண்டு நடந்தாள்.

அவர் மனது அவளைத் தேடியது.

கேள்விக்குப் பதில் தெரிய வேண்டாமா?

'ஸ்வாமி.. உயிர் எது? உயிரின் சக்தி எது? நீங்கள் அறிவீரா? உங்கள் உயிரை நீங்கள் தரிசித்தது உண்டா?'

...MARA PUBLIC LIB...

அவளுக்குப் பதில் சொல்ல அவருக்கு விருப்பமாக இருந்தது. அவளுக்குச் சொல்வதன் மூலம் தனக்கே இன்னொரு முறை சொல்லிக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

# 22

உண்மை பல சமயம் கசக்கும். நிஜத்தை சந்திக்க, வாழ்க்கை விமர்சனத்தை எதிர்கொள்ள, பிரச்சினைகளை தத்துவ ரீதியாக அணுக மிகுந்த புத்திக்கூர்மையும், மனோபலமும் தேவை.

வாழ்க்கையை மயக்கமாய் எடுத்துக் கொள்கிறவருக்கு புத்திபலம் மிகக் குறைவு. மனோபலம் அறவே இருக்காது. ஆனால், உலகில் இவர்கள் சதவிகிதம்தான் அதிகம்.

பெரிய கும்பலாய் சேர்ந்து அபிப்பிராயம் சொல்லி எல்லா உயர்ந்த விஷயங்களையும் இவர்கள் சாகடித்து விடுவார்கள். நாகரீகம் உச்சகட்டத்தைத் தொட்ட இந்த பரத கண்டத்தில் வேதங்களும் சாத்திரங்களும் வீணாகிப் போனது இவர்களால்தான்.

இவர்கள் பரபரப்பானவர்கள். அமைதியான இடத்தில் உரக்கப் பேசுவார்கள். உரக்கப் பேச வேண்டிய இடத்தில் வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருப்பார்கள். இவர்கள் திருடர்கள், தந்திரசாலிகள். ஆட்டு மந்தைகள். எல்லாம் தெரிந்தது போல நடக்கும் பக்தர்கள். எதையும் கற்றுக் கொள்ளும் பக்குவம் இவர்களுக்கு அறவேயில்லை. வரவும் வராது.

'இன்னும் நன்னா பாடணும்' என்று ஸ்வாமி சொன்னவுடன் அந்த திருச்சிராப்பள்ளிக் கூட்டம் அதிர்ந்து போயிற்று. பெயரிடப்படாத குழு அது. நாலு அரட்டைகள் சேர்ந்து, அவரவர் இட்லி அவரவர்களுக்கு அவரவர் காசு அவரவர் செலவுக்கு.. என்று ஒன்றாய் டூர் வந்த கும்பல் அது.



அந்தப் பெண்மணி அழத் துவங்கினாள். அவர்கள் ஏசத் துவங்கினார்கள்.

"நான் கண்ணை மூடிண்டு கேட்கிறேன். யார் யாரோ பெரிய பாடகர்கள் ஞாபகம் வர்றது. அற்புதமா பாடறாளேன்னு மயங்கி நிக்கறேன். ஒரு பெரியவா தடக்குன்னு இப்படிப் பேசலாமா- தப்பில்லையா அது? நன்னாவே பாடலைன்னாகூட, ரொம்ப நன்னா பாடினதாதானே சொல்லணும்?"

"வாய்யா, இங்க ஒண்ணும் சாப்பிட வேண்டாம்."

"அதெல்லாம் முடியாது. நான் இருந்து சாப்பிட்டு ஒரு வார்த்தை கேட்டுட்டுதான் வருவேன்."

"ஸ்வாமியையா?.."

"என்னத்த ஸ்வாமி- வெறும் ஆசாமி."

"இப்ப பேச விடமாட்டாய்யா?"

"உள்ள பூந்து பேசுவேன்."

அவர்கள் ஸ்வாமியை தேடி அலைந்தார்கள். பெரிய பாதுகாப்பான கட்டடம். எங்கு யார் இருக்கிறார் என்று தெரியவில்லை. மடத்து சாப்பாட்டை வண்ணமாகத் தின்றுவிட்டு அந்தக் குழுவில் நான்கு பேர் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு அலைந்தார்கள்.

'ஏன் இந்தப் பக்கம்?' என்று யாரேனும் இருந்தால் ஒரு விரல் காட்டத் தயாராக இருந்தார்கள்.

சட்டென்று பின்பக்க தோட்டக்கதவு திறந்தது. நான்கு பேரும் எருக்கஞ்செடி மறைவில் வழித்துக் கொண்டு உட்கார்ந்தார்கள்.

சுதவு திறந்து ஸ்வாமி வந்தார்.

வேலி தாண்டி ஒரு வேப்பமரத்து மேடையில் வந்து அமர்ந்து கொண்டார்.

"இப்ப எழுந்து போய் கேட்கலாமா?"

"இரு- என்னமோ நடக்கப் போகிறது."

அவள் வெயிலில் வேகமாக நடந்து வந்தாள்.

"ஸ்வாமி கூப்பிட்டேளாமே?"

"ஆமாம். நீ கேள்வி கேட்டாயே... அதுக்கு பதில் தெரிஞ்சுடுத்து."

"அதுக்காக கார்த்தால அப்படியா பண்றது? எனக்கு என்னமோ போல ஆயிடுத்து."

"மனசு தாங்கலை. எப்பேர்ப்பட்ட அற்புதம் அது?.."

"என்ன நடந்தது?"

அவர் வியப்புக்கு எதிரொலியாய் அவள் கேட்டாள்.

அவர் அவளை எதிரே உட்கார வைத்து ரகசியக் குரலில் தன் இறை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

வாழ்க்கையைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் அந்த நான்கு துரியோதனர்களுக்கும் எல்லாம் தவறாகத் தெரிந்தது.

"யார்ரா இவ?"

"பக்தை."

"மத்தியானம் கூப்பிட்டு வச்சு என்ன பேசறான்?"

"ராத்திரி என்னமா இருந்ததுன்னு சொல்வானா இருக்கும்.'

"எனக்கு தப்பா தெரியலைடா."

"நீ அப்பாவி. விறுவிறுன்னு இங்க வந்து பொட்டச்சியோட பேச்சு என்னத்துக்கு?"



"இவதான்டா, இங்க தினம் பாடறவ."

"அத்த சொல்லுடான்னானாம். இவளைக் கொண்டாடறத்துக்குத்தான் நம்ம பொம்பளைய மட்டம்னானா?"

"நம்ம பொம்பளையா... என்ன சொல்ற நீ?"

"நமக்குத் தெரிஞ்ச பொம்பளைடா... அவளைக் கேலி பண்ணிட்டு, வழக்கமா பாடறவளோட கால் மேல் கால் போட்டு பேசிட்டிருக்கான்."

"இப்ப என்ன பண்றது?"

"உக்காந்து வேடிக்கை பார்க்கலாம்."

"ஆனால், இது வார்த்தையால் விளக்கக்கூடிய அனுபவமல்ல." அவர் அவளிடம் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

"இது சொல்லில் அடங்காத விஷயம். ஆனாலும் சொல்ல முடியும்."

"எவ்விதம்?" அவள் ஆவல் பொங்கக் கேட்டாள்.

"எனக்கு உள்ளே தொடத் தெரிந்துவிட்டது. அடி ஆழத்தில் போய் அசையாது அமரத் தெரிந்துவிட்டது. அப்படிச் செய்ய என் சுற்றுப்புறம் முழுவதும் நான் தொடுகிறேன். என் உயிர் பிரகாசமாகி எல்லாவற்றையும் பார்க்கத் துவங்குகிறது. என் உடம்பு உன் உடம்பைப் பார்ப்பதாக இல்லாமல், என் உயிரின் அடிப்புறத்திலிருந்த உன் உயிரைக் தொடுகிறேன். அப்போது உன்னிலும் மாற்றம் ஏற்படுகிறது."

"அவ்விதம் எனக்குள் மலர்ச்சி ஏற்படுத்த வேண்டும்." அவள் பணிவோடு தலைகுனிந்து கைகூப்பினாள்.

அந்தப் பாவனைக்கு தொலைவே இருந்தவர்கள் தனியே வசனம் எழுதிக் கொண்டார்கள்.

"ஐயையோ! அதெல்லாம் வேண்டாம். தயவு செய்து என்னை மன்னிச்சிடுங்க. இந்த வம்புக்கெல்லாம் நான் வரமாட்டேன்."

அவள் கிழக்கு பார்த்து அமர, அவர் அவளைப் பார்த்து அமர, அவர் ஆழ்ந்து தன் உயிரை நோக்கினார்.

"எல்லா உயிரும் நானே..." என்று விரிந்தார்.

"இப்ப என்ன செய்யறது?"

"வா, போயிடலாம்."

அவர்கள் நகர்ந்தார்கள்.

"பாவம். வெறும் தியானம்தான் பண்றா."

"ஏன்... அதை ஆம்பளை முன்னாடி பண்ணா ஆவாதோ? சந்நியாசிக்கு தியானம் பண்றதுக்கு கட்டை குட்டையா பொம்மனாட்டி தேவைப்படறதோ?"

"மெள்ள ஆஸ்ரமத்துல பரப்புவோம். அந்தப் பொம்மனாட்டி பாட வருவாளோன்னோ... 'நேத்து மத்தியானம் நன்னா இருந்துதா.' நீயும் ஸ்வாமியும் ஒன்னா இருந்ததைப் பார்த்தோம்'னு சொல்லுவோம்."

"திருச்சிக்கு உடனே போக வேண்டாம். இவங்க சாப்பாடு சாப்பிட்டுட்டு இவங்களையே ஒருவழி பண்ணிட்டுப் போவோம்."

"எதுக்கு இதெல்லாம்..."

"நம்ம பொம்பளைய மட்டம்னு சொல்லலையா?"

"கடவுளே.. ஏதோ ஒரு மாற்றம் உள்ளே நிகழ்கிறது. என்னவென்று புரியவில்லை. அடிமுதுகு சூடாகி வலிக்கத் துவங்கிவிட்டது, உடம்பின் மேல்பகுதி லேசாக இருக்கிறது. அடிப்பகுதி மிகுந்த கனம். நேரம் போனதே தெரியவில்லை, இப்படி நிகழ்ந்ததேயில்லை."

"மறுபடி இன்று மாலை அமர்வோம்."



"எதற்கு?"

"உன்னெதிரே அமரும்போது எனக்குள் அது மறுபடி நிகழ்கிறது. மறுபடியும் நான் இறை தரிசனம் பெற்றேன். இந்த முறை, 'மரணம், சந்தோஷம்' என்பது எனக்குப் புரிந்து போயிற்று. உயிர் வழியே பார்க்க மரணம் விடுதலை. உடல் வழியே பார்க்க மரணம் அழுகை.

ஒரு குழந்தை தும்பியை நூலில் கட்டிப் பிடித்திருக்கிறது. அது தும்பிக்கு மரண அவஸ்தை. குழந்தை பரமானந்தம். தும்பி நழுவிப் பறக்கிறது. குழந்தை 'போகாதே, போகாதே' என்று பின்னால் ஓடுகிறது. குழந்தை கூப்பிட்டால் தும்பி வருமா? போனது போனதுதான்.

தியானத்தின் உச்சகட்டம் மரணம். உள்ளே எது எழுந்தாலும் விடு. என்ன உணர்வு வந்தாலும் அலட்சியம் செய். யாருக்கு இந்த உணர்வு தோன்றுகிறது என்று பார். உணர்வு தானாய் செத்துப் போகும். உணர்கிறவர் வெறுமே உட்கார்ந்திருப்பது தெரியும். அவனும் காணாமல் போக மரணம், அதாவது மரணம் போலும் ஒரு வெறுமை. அந்த வெறுமையிலிருந்து வாழ்க்கையை பார்த்தால் எதுவுமே முக்கியமில்லை. எல்லாமே நாடகம். சிரிப்பு நாடகம்."

"பூஜைகூட சிரிப்பாகி விடுமா?"

"அதுதான், பெரிய சிரிப்பு."

உடம்பு கடவுளை உணராது. அதை வணங்க வேண்டிய தேவையே இல்லை. உள்ளே இருக்கிற உயிர் உணர்ந்துவிட அதுவே கடவுள் என்று புரிந்துவிடும்.

தன்னையே யாரும் வணங்குவதுண்டா? இரண்டாக பிரிந்தாலல்லவோ வணங்குவதும் வணக்கத்திற்குரியதும்- எல்லாம் ஒன்று சேர்ந்தால் எது எதை வணங்கும்?

என்னால் இனிமே அடங்கியிருத்தல் முடியாது. அது ஒரு வேடம்."

"ஏதாவது செய்துவிடப் போகிறீர்கள்" என்று கலவரப்பட்டாள்.

"அப்படித்தான் நிகழப் போகிறது. அதற்கான ஏற்பாடுகள் தயாராகின்றன."

"என்ன சொல்கிறீர்கள்?"

"ஏதோ உளறுகிறேன். இந்த வேப்பமர மேடை அற்புதமான இடம். முடிந்தால் மாலை வா."

அவர்கள் பிரிந்தார்கள்.

"எங்க ஸ்வாமியை ஏதாவது சொன்ன.. வெட்டி பொலி போட்டுருவேன்."

"சொன்னது உண்மையா இருந்தா உங்க ஸ்வாமியை வெட்டுவியா?"

"நன்னா பாடின பொம்பளைய கேலி பண்ணினானே, அவன் உருப்படுவானா.."

"நன்னாத்தான் அந்தப் பொம்மனாட்டி பாடினா. ஏன் அப்படிச் சொன்னார்.. தெரியலையே"

"உங்க ஸ்வாமி மேல ஒரு கண் வச்சுக்கோப்பா.. சந்தி சிரிச்சுடப் போறது."

**அ**ன்று மாலை சிரித்தது.

மடத்து அதிகாரிகள் அதிர்ந்தார்கள்.

"எட்டுப் பத்துக்கு ரெண்டு பேரும் எதிரும் புதிருமா உட்காாந்தாப்பா. மணி பதினொன்று அசையலையே."

"தியானம்ப்பா."

"அர்த்த ஜாம பூஜைக்கு வரலையே. அதை விடவா தியானம் முக்கியம்"



"நல்லதே நினைப்போம்."

"பொம்மனாட்டிக்கு எதிர்க்க, அதுவும் முப்பது வயது பொம்மனாட்டிக்கு எதிர்க்க உட்கார்ந்து, எப்படி நல்லது நினைக்க முடியும்? அந்த திருச்சி கும்பல் மண்ணை வாரி தூத்திட்டுப் போறது."

"அது வெறும் அரட்டைக் கும்பலுப்பா. எதிலேயும் ஈடுபாடு இல்லை. எல்லாம் தெரிஞ்ச மாதிரி திமிருதான். விட்டுருப்பா."

"நான் விட்டுருவேன். திருச்சி கும்பல் விடாது. நாலா பக்கமும் போய் கொளுத்தும். 'நாங்க கண்ணால பார்த்தோம்'னு சத்தியம் பண்ணும்."

"இப்ப என்ன செய்யலாம்?"

"அந்தப் பொண்ணை வீட்டுக்கு அனுப்பு"

விஷயம், போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தது.

"வீடா.. அவளுக்கு ஏது வீடு? அவள் மடத்தில் ஓர் அங்கம்." குரு சிரித்துக் கொண்டே சொன்னார்.

"இல்லை, குருவே. அப்படி இருக்க இயலாது என்று மடத்து விதிகள் சொல்கின்றன."

"அப்படியா? மடத்தில் பல விதிகள் மீறப்பட்டு விட்டன. மிளகாய் உபயோகப்படுத்தக்கூடாது. ஆமணக்கு எண்ணெய் தவிர வேறு எண்ணெய் விளக்குக்குப் பயன்படுத்தக்கூடாது, குடுமி இல்லாதவர் மடத்துக்கு வரக் கூடாது. பிரம்மசாரிதான் சமைக்க வேண்டும். துறவிதான் பரிமாற வேண்டும். இன்னொரு விதி உண்டு. வேதம் எழுதப்படக் கூடாது. இவற்றையெல்லாம் எப்போதோ மீறி விட்டோம்."

"அவற்றைப் பற்றி எங்களுக்குத் தெரியாது குருவே. மடத்தில் பெண் என்பவள் அங்கமாக முடியாது. மடத்தில் மனிதர்கள் முக்கியமல்ல, விதிகள் முக்கியம்."

"இந்த விதிகள் கடவுளைத் தேடத்தானே தவிர, வேறு எதற்கும் இல்லை."

"என்ன சொல்கிறீர்கள் குருவே- அந்தப் பெண்ணால் கடவுளை அடைய முடியுமா?"

"நான் அடைந்தேன்."

"எங்களுக்கு நீங்கள் வேண்டும் குருவே. உங்களை இழக்க முடியாது. உங்களையும், மடத்தையும் கேவலப் படுத்தும் அந்தப் பெண்ணை வன்முறையில் அப்புறப் படுத்துவோம்."

"உங்களை எனக்குப் புரிகிறது. இன்னொரு குருவை தயார் செய்யுங்கள். உங்களால் அதுவும் முடியும். நான் நகர்ந்து கொள்கிறேன். இந்தப் பூஜைகளால எது எனக்குள் நிகழுமோ அது அவளால் எனக்குள் நிகழ்ந்துவிட்டது. எனவே நான் விலகிக் கொள்கிறேன். இது என் தீர்மான மான முடிவு."

மடம் வேதனை தாங்காமல் அலறியது.

"நமக்கு கெட்ட பேர் கொண்டு வந்த அந்தப் பொம்மனாட்டிய அழிச்சுட்டா. இவரை மெள்ள சமாதானப்படுத்திக்கலாம்."

"அவளை அழிப்பாயா.. அப்போது நான் எதற்கு பூஜை செய்ய வேண்டும்? நான் எதற்கு அட்சதை போட வேண்டும்? இறை இருப்பது உண்மையானால் அவளை அழிக்க நினைப்பவன் வெட்கப்படுவான். மனம் மாறுவான்."

குரு சிரித்தார்.



"அவளைத் ஆத்தோட தள்ளிடலாம்னுதான் நினைச்சேன், கடுமையான வயத்து வலி சார். புதர் பக்கம் உட்கார்ந்தேன். சுருக்குன்னு ஏதோ கடிச்சுடுத்து. பயந்து போய் வந்தேன். அப்புறம் அவளைக் காணோம். இன்னிக்கு ராத்திரி தள்ளிடறேன் சார்."

நடுநிசியில் அவன் மறுபடி வந்தான். பயத்திலும் குளிரிலும் நடுங்கிக் கொண்டிருந்தான். "அவளைத் தள்றதுக்கு ப லொ நானே விழுந்துட்டேன் சார்."

"அவ நதிப்பக்கம் போகவேயில்லையே. மண்ட பத்துல உட்கார்ந்துல்ல பாடிண்டே இருந்தா?"

"இல்லியே... நதிப்பக்கம் போனாளே. மொட்டைப் பாறைல நின்னாளே. கரையேறும்போதுகூட பார்த்தேனே."

"ஐயா! அதிகாரி, யாரும் யாரையும் கொலை பண்ண வேண்டாம், வேறு குரு பாருங்கோ. இவருக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்விடுவோம்."

வேறு மடங்களின் ஆலோசனை நாடப்பட்டது.

அவர்கள் இருவரும் வேப்பமரத்து மேடை மீது எதிரும் புதிருமாய் அமர்ந்திருந்தார்கள்.

வெளியூர் சந்நியாசி ஒருவர் வந்து பார்த்துவிட்டு "இது உன்னதமான நிலை. உங்கள் மடத்துக்கு ஒத்துவர வில்லையெனில் மரியாதையுடன் அவரை வெளியேற்றுங் கள். தவறாகக் கை வைத்தால் மடத்துக்கு வேதனை வந்து சேரும்".

இருபது வயது இளைஞனை அவரெதிரே கொண்டு வந்தார்கள். அவர் ஆசிர்வதித்துப் பட்டம் கட்டினார்.

கடைசி முறையாய் மனம் கனிந்து விக்ரஹத்திற்கு பூஜை செய்தார். 'மடம் தழைத்தோங்கி வளரும்' என்று ஆசீர்வாதம் செய்தார்.

வெள்ளைப் பைஜாமாவும், ஜிப்பாவும் போட்டுக் கொண்டு இரவோடிரவாக மடம் விட்டு வெளியேறி அவளோடு அவள் வீட்டிற்கு போனார்.

வீட்டுக் கூடத்தில் நிற்க வைத்து தாலி கட்டச் சொன்னார்கள். அவளுக்கென்று சிறிது காசு கொடுத்தார்கள்.

அவர் வடக்கு நோக்கி ரயில் ஏறி, தன் மனைவியோடு ஜன சமுத்திரத்தில் கரைந்து போனார்.

இமயமலைச் சரிவில் பத்து வருடத்தில் அவர் அழகான ஆசிரமம் கட்டியிருப்பதாகச் சொல்கிறார்கள்.

கடவுளோடு இருத்தல் என்பது தொடர்கிறது.

நிறைய நல்ல மனிதர்களை, தியான ஆசிரியர்களை அவர் உருவாக்கி வருகிறார்.

அந்த ஆசிரமத்துக்கு அவள் பெயர்தான் வைத்திருக்கிறார். துறவு யார் கேட்டாலும், 'அது இயல்பாய் வரவேண்டும்' என்று சொல்கிறார்.

அவர் மடத்தில் இருந்ததைவிட தேஜஸ்வியாய் இருப்பதாகச் சொல்கிறார்கள், காதலைப் பற்றி பேசும் போது, 'அதுவும் இயல்பாய் வரவேண்டும், என்று சொல்கிறார். இயல்பாய் இருக்க வேண்டும் என்றால் அமைதியாக இருக்கவேண்டும். அமைதியாக இருக்க பிரார்த்தனை மிக அவசியம்' என்கிறார்.

காதல் என்பது எங்கு வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் தாக்கும்.

# 23

"**வி**வாகரத்து ஆனவனுக்கு பொண்ணு கிடைக்கிறது கஷ்டம் சார். என் அனுபவத்துல சொல்றேன்.



பொண்டாட்டி இறந்தவர்க்குக்கூட கல்யாணம் ஆயிடும் சார். கல்யாணமே ஆகாத நாற்பது வயது ஆனவருக்குக்கூட கல்யாணம் ஆயிடும் சார். விவாகரத்து ஆனவர்னா ஏன்னு கேக்கறாங்க. எதனால ஆச்சுங்கறாங்க. ரொம்ப சந்தேகப்படறாங்க, ஆயிரம் கேள்வி கேக்கறாங்க. அதுவும், தவிர, கல்யாணங்கிறது லக் சார்.

சில பேருக்கு பதிஞ்சு பதினைஞ்சாம் நாள் செட்டில் ஆயிடுது. சில பேருக்கு ஒரு வருஷம், ரெண்டு வருஷம் ஆயிடுது.

நீங்க பரவாயில்லை சார். வேற ஒரு டைவர்ஸி என்கிட்ட பதிஞ்சு மூணு வருஷம் ஆச்சு. ஒரு என் கொயரியும் வரலை சார். வாரா வாரம் வந்துட்டுப் போவார். பாவமாயிருக்கும்.

இப்போ.. உங்களைப் பத்தின விவகாரமெல்லாம் நீங்க சொன்ன விவரங்கதான். நாங்க அதை செக் பண்றது கிடையாது. அது எங்க வேலை இல்லை. ஆனா, வர்றவங்க செக் பண்ணுவாங்க.

'நீங்க செக் பண்ணீங்களா?'ன்னு எங்களைக் கேப்பாங்க. நாங்க 'இல்லை'ன்னுவோம். ஏன்னா, அது எங்க வேலை இல்லை. ஆனா, வர்றவங்களுக்கு சந்தேகம் அதிகமாயிடும். 'நீங்க செக் பண்ணி சொல்லுங்க'ம் பாங்க. நாங்க மாட்டேன்னுடுவோம். சந்தேகம் இன்னும் அதிக மாயிடும்.

'ஏம்பா, டைவர்ஸில்லாம் எடுத்துக்கிட்டு.. ஏழைப் பையனாயிருந்தாலும், வேலையில்லாப் பையனா இருந்தாலும் பரவாயில்லை. இந்த மாதிரி சந்தேகமான ஆளு வேணாம்' அப்பிடின்னு சொல்லிடுவாங்க.

நானும் யோசனை பண்ணிப்பார்த்தேன், இன்னாடா இதுன்னு. 'ஒரு பெண்ணோட குடித்தனம் பண்ண

முடியாதவன், நம் வீட்டுப் பொண்ணோட எப்படிக் குடித்தனம் பண்ணுவான்...' அப்படின்னு ஒரு மிரட்சி. 'காசு கேட்டு அடிப்பானோ, கொடுமைப்படுத்துவானோ குடிச்சிட்டு வந்து ரகளை பண்ணுவானோ, இல்லை. வேற பொண்ணுங்களோட தொடர்போ?...' அப்படின்னு அனத்த ஆரம்பிச்சிடுவாங்க.

நீங்க கவலைப்படாம இன்னொரு வருஷத்துக்கு காசு கட்டுங்க, அந்த ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் லக்கில்லை. வேற நம்பர் மாத்திடுவோம். புதுசா ஒரு ஃபாரம் எழுதிக் கொடுங்க. ஒரு வருஷத்துக்கு ஐந்நூத்தி அம்பது ரூபா. புது ஃபாரம் இருபத்தஞ்சு ரூபா.

உங்க ரிஜிஸ்டர் நம்பருக்கு என்கொயரி வந்தா உடனே அனுப்பி வைக்கறேன், இல்லேன்னா, 'என்கொயரி ஏதும் வரவில்லை'ன்னு தகவல் அனுப்பி வைக்கறேன்."

மூர்த்தி எழுதிக் கொடுத்தார். காசு கொடுத்தார். மௌனமாய் எழுந்து நின்றார்.

"நம்மகிட்ட ரிஜிஸ்டர் பண்ணதோட விட்டுறாதீங்க இன்னும் ரெண்டு மூணு மாட்ரிமோனியல் ஆபீஸ் லேயும் பேர் எழுதி வையுங்க. எங்க கம்பெனி பெரிய கம்பெனிதான். இருந்தாலும் உங்களுக்கு சீக்கிரம் கல்யாணம் ஆகணுமேன்னு இதுவும் சொல்லி வைக்கிறேன்.

ஆனா, நானும் பார்த்துட்டேன் சார். புள்ளைப் பேறுகூட நம்ம கையில் இருக்கு. எட்டு மணி நேரம் பத்து நிமிஷத்துக்கு குழந்தை வரணும்னா, வயித்தை அறுத்து குழந்தையை கொண்டாந்துடறாங்க. பிறப்பை ஜெயிச்சுட்டோம்.

அதே மாதிரி இறப்பைத் தள்ளிப் போடறோம். என்ன சார் அப்பிடிப் பார்க்கறீங்க?



நாப்பது நாள் மெஷின்ல இருந்தார் சார், எங்க மாமா ஒருத்தர். நுரையீரல் மெஷின்னு சொன்னாங்க. அதை எடுத்தா செத்துடுவாராம். நாப்பது நாள் கழிச்சுப் போதும்னு எடுத்துட்டாங்க. செத்துட்டார். அதாவது, நாப்பது நாள் மரணத்தைத் தள்ளிப்போட்டுருக்காங்க. அதுவும் மனுஷனால முடிஞ்சிருக்கு.

அப்போ, மனுஷனால முடியாதது என்ன? கல்யாணந் தான். எப்பக் கல்யாணம்? யார்கூட கல்யாணம்னு சொல்லவே முடியலை. ஆச்சரியமாயில்லை. நீங்க போங்க சார். நான் லெட்டர் போடறேன்."

அந்த ஆள் நிறையப் பேசினான். மூர்த்தி மௌனமாக கேட்டுக் கொண்டு வந்தார். அந்த விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்தது, அவர் மனதில் ரீங்கரித்துக் கொண்டிருந்தது.

"நீங்கள் மனைவியை இழந்தவரா?"

"இல்லை."

"விவாகரத்து ஆனவரா?"

"ஆமாம்."

"விவாகரத்து ஆகி எத்தனை வருடங்கள் ஆயிற்று?"

"ஆறு வருடங்கள்."

"திருமணமாகி எத்தனை வருடங்கள் மனைவியோடு வாழ்ந்தீர்கள்?"

"நான்கு மாதங்கள்."

"விவாகரத்துக்கு காரணம் என்ன?"

"என் மனைவியின் நடத்தை சரியில்லை."

"சார்! இது போதாது சார். இன்னும் தெளிவா எழுதுங்க."

"அந்தக் கண்றாவியை எப்படி விவரித்து எழுதுவது? இவ்வளவுதான் சூசகமாகச் சொல்ல முடியும். இதைப் புரிந்து கொண்டு பெண் கொடுப்பவர் கொடுக்கட்டும். அதைப் பற்றி நான் எழுத விரும்பவில்லை. சொல்ல விரும்பவில்லை. அதை மறைக்கவே விரும்புகிறேன்" என்று அவர் தெரிவித்து விட்டார்.

"அதுதான் காரணமா - இல்லை வேறு ஏதாவதா?"

அவருக்கு விண்ணப்பங்கள் வரவேயில்லை.

இருபத்தேழு வயதில் கல்யாணமாகி, நான்கு மாதத்தில் விவாகரத்தைத் தேடி, முப்பத்து மூன்று வயது வரை தனியாக இருந்து மறுபடியும் மனம் திருமணத்திற்கு ஏங்க, அவர் மிகுந்த தயக்கத்தோடு திருமணப் பதிவு கம்பெனியில் எழுதி வைத்தார்.

அலுவலக நண்பர்களிடம் திருமணம் பற்றி சொல்ல வெட்கமாக இருந்தது.

ஏன் விவாகரத்து வாங்கினார் என்று அங்கு யாரிடத்திலும் சொல்லவில்லை. ஒருவரிடம் சொன்னால் ஊர் முழுவதும் பரவிவிடும் என்றுதான் போகவில்லை.

அவளை பி.காம். படித்தவள் என்று சொன்னார்கள். சென்னையில், பெரிய கல்லூரியில் தங்க மெடல் என்று சொன்னார்கள்.

முதலிரவன்றே அவரைப் பார்த்து அவள் தலையில் அடித்துக் கொண்டாள்.

"என்ன, எதுக்கு தலையில் அடிச்சுக்கறே."

"இந்த கட்டில், பூ, படுக்கை, ஊதுபத்தி எல்லாம் அபத்தமா இல்லை."

"ஏதோ காலம் காலமாய் இருந்து வர்ற பழக்கம்."

"எத்தனையோ விஷயங்களை விட்டோமே, அதே மாதிரி இதையும் விட்டா என்ன?"



"எப்படி விட முடியும்?"

"விடாதீங்க. பிடிச்சுக்கங்க." அவள் சிரித்துத் தழுவிக் கொண்டாள்.

"ஏன் ஒருமாதிரி எலும்பாயிருக்க?" அவர் அவளைக் கேட்டார்.

"நான் அத்லீட். அதனால்தான். நானூறு மீட்டர் ஓட்டப் பந்தயம் என் ஸ்பெஷாலிட்டி"

"நிறைய பரிசு வாங்கியிருக்கியா?"

"வாங்கினேன். ஒரு காலத்துல..."

"இப்ப?"

"ஒண்ணும் முடியல..."

"ஏன்?"

"வாழ்க்கை திசைமாறிப் போய்டுச்சு."

"கல்யாணத்தைச் சொல்றியா?"

"எல்லாத்தையுந்தான்."

"ஏன் ஒருமாதிரி அலுப்பாவே இருக்கே. கல்யாணம் பிடிக்கலையா?"

"நாமளா செய்துக்கற கல்யாணந்தான் நல்லா யிருக்கும். 'பண்ணிக்க, பண்ணிக்க'ன்னு கொண்டாந்து தள்ளினா?"

"கட்டாயப்படுத்தி கல்யாணம் பண்ணிட்டாங் களா?"

"ஆமாம்."

"கவலைப்படாதே, உன்னை நல்லா வச்சுக்குவேன்."

"சரி, ட்ரை பண்ணுங்க."

"ட்ரை பண்ணுங்களா? உன்னை நல்லா வச்சுக்க மாட்டேன்னு நினைக்கிறியா?"

"உங்களை ஏமாத்திட்டாங்க. அது உங்களுக்குத் தெரியலை."

"என்ன, என்ன சொல்றே?"

"சொன்னா என்னை அடிப்பாங்க. பொலி போட்டுடுவாங்க. முதுகுலயே இருபது முப்பது தடவை எங்கண்ணன் அடிச்சான். இப்ப ஏதாவது பேசினேன், பெல்ட்டால அடிப்பான்."

"நீ என் பொண்டாட்டி. உன்னை யாரும் அடிக்க முடியாது. உன்மேல விரல்கூட வைக்கமுடியாது."

"'அந்த மாதிரி ஏமாளியாத்தாண்டி பார்த்துட்டிருக்கேன்'னு சொன்னான்."

"என்னையா சொன்னான்?"

"உங்களைத்தான். பொண்ணு பாத்துக் கல்யாணம் பண்ண வந்தீங்கன்னா, விசாரிக்க மாட்டீங்களா? எல்லாத்துக்கும் 'சரி, சரி'ன்னு தலையாட்டி தாலி கட்டிடுவீங்களா?"

"நான் வரதட்சணை கேட்காததைச் சொல்றியா? அது என் லட்சியம், என் பதினாறு வயசுலருந்தே ஏழைப் பொண்ணுக்கு வாழ்வு கொடுக்கணுங்கறதுதான் என் லட்சியம்."

"இப்டி எல்லாம் பேசிதான் பெரிய தப்பு பண்ணிட்டீங்க."

"புரியும்படியா சொல்லேன்."

"சொன்னா அடிப்பாங்க. என்னை விட்டுடுங்க."

"சரி, அப்படி என்னம்மா பெரிய தப்பு பண்ணியிருக்கப் போறே? யாரையோ லவ் பண்ணியிருப்ப. யார் கூடவோ ஊர் சுத்தியிருப்ப. சினிமா, பீச்சுன்னு அலைஞ்சிருப்பே. ரகசியமா கிஸ் அடிச்சிருப்பே. இன்னும் கொஞ்சம் அத்து மீறிப் போய் படுத்திட்டிருப்பே. அவ்வளவுதானேம்மா, பரவாயில்லை. மறந்துரு. எல்லாத்தையும் மறந்துரு. நீயும் நானும் புதுசா ஒரு வாழ்க்கை துவங்குவோம்."



"மறக்க முடியலைன்னா?.."

"அவ்வளவு ஆழமான லவ்வா?"

"எனக்கு யார் மேலயும் லவ் கிடையாதுங்க."

"லவ் இல்லேன்னா வேற என்ன பிரச்சினை?"

"எனக்கு தூக்கம் வருது."

"ஏன் இப்படிப் பேசற?"

"முதலிரவு கொண்டாடறதா இருந்தா கொண்டாடலாம், வாங்க. இல்லேன்னா தூங்க விடுங்க."

கூடலின் பாதியில் அவள் தன்னை மறந்து சிரித்தாள்.

"உங்களுக்கு சிரிப்பா வரலை? மல்லிகைப் பூவுல டெனட் பண்ணி அதுக்கு மத்தியில் ஆம்பளையும் பொம்பளையும் படுத்துக்கறது. உங்களுக்கு சிரிப்பா வரலை?"

அவள் சிரிப்பில் ஒரு விகாரம் இருந்தது. கொஞ்சம் வினோதம் இருந்தது. ஒவ்வொருவர் சிரிப்பும் ஒவ்வொரு மாதிரி என்று அவர் நினைத்துக் கொண்டார்.

"காலைல வெளியே போனா, 'எப்படி... எப்படி?'ன்னு உங்களைக் கேட்பாங்க. 'ரொம்ப நல்லபடியா இருந்தா'ன்னு சொல்லிடுங்க, இல்லேன்னா... எங்கண்ணன் 'சுள்ளு சுள்ளு'ன்னு அடிப்பான். இனிமே என்னால அடி தாங்க முடியாது."

"உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு கண்ணம்மா."

"உங்களைப் பார்த்தாலும்தான்."

"நீ பேசறதே புரியலையே?"

"புரியாத வரைக்கும் குடித்தனம் பண்ணுவோம். புரிஞ்சா பிரிஞ்சிடுவோம்."

"நான் யாருன்னு உனக்கு தெரியலை தாயே! நான் நல்லவன். ரொம்ப நல்லவன், அடுத்த வீட்டுக்காரர் சண்டைக்கு வந்தா, 'வாங்க காபி சாப்டுட்டு சண்டை போடுவோம்'னு சொல்லுவேன். பர்ஸை பிக்பாக்கெட் அடிச்சிட்டான். நான் அவன் கையைப் பிடிச்சிட்டேன். 'அந்த பர்ஸ்ல அம்பது ரூபாதான் இருக்கு. நான் உனக்கு நூறு ரூபா தர்றேன். பர்ஸை கொடுத்துடு'ன்னேன். அவன் முழிச்சான். அவன் கூட ஹோட்டல் போனேன். அவன் தன் வாழ்க்கையைச் சொன்னான்.

'நீ பிக்பாக்கெட் அடிக்கறது நியாயம்'னு சொன்னேன். 'உன் அட்ரஸ் கொடு. எப்பவாவது மாட்டினா, நான் வந்து ஜாமீன்ல எடுக்கறேன்'னேன். அழுதுட்டான்.

அவனுக்கு எங்க ஆபீஸ்ல பேக்கர் வேலை வாங்கிக் கொடுத்தேன். ரெண்டாயிரத்து நானூறு ரூபா சம்பளம். இப்ப மத்தியானம் லஞ்ச் அவர்ல உட்கார்ந்து, எப்படியெல்லாம் பிக்பாக்கெட் அடிச்சான்னு சொல்வான். ஒரே சிரிப்பாயிருக்கும்.

என்கூட வேலை செய்யறவன் சூதாடி. நிறைய தோத்துட்டு வருவான். ஊரைச் சுத்திக் கடன் அவனுக்கு, நான் கடன் கொடுத்து ஜெயிக்கும்படியா ஆடறதுக்கும் சொல்லிக் கொடுத்தேன். ஜெயிச்சான்.

இத்தினி நாள் தோத்தவன் ஜெயிச்சவுடனே கிளப்புல சண்டை வந்துடுச்சு. பத்து பேர் சேர்ந்து பொக்கு பொக்குன்னு அடிக்கறாங்க. வாயெல்லாம் ரத்தம். மூஞ்சியெல்லாம் வீங்கிப் போச்சு. 'இனி சூதாட மாட்டேன்'னு அவனே சத்தியம் பண்ணினான்.



அவங்க வீட்ல எல்லோருக்கும் துணிமணி, கலர் டி.வி., டேப்ரிக்கார்டர் எல்லாம் வாங்கிக் கொடுத்தேன். சாயந்திரம் இன்னொரு மளிகைக் கடைல கணக்கு எழுதறதுக்கு வேலை வாங்கிக் கொடுத்தேன்.

எனக்கு இது பிடிச்சிருக்கு. இப்படிச் செய்யறதுல ரொம்ப இஷ்டம். உதவி பண்றதுல எனக்கு ரொம்பப் பெருமை, கர்வம்.

இன்னொன்று தெரியுமா? நான் உதவி பண்ணப் பண்ண எனக்கு வருமானம் நல்லா வருது. வாழ்க்கை சந்தோஷமா இருக்கு. எது எப்படியிருந்தா என்ன? நீ என் மனைவி."

"எங்கண்ணன் சொன்னது சரிதான்."

"என்ன சொன்னார் உங்கண்ணன்?"

"அரை லூஸுன்னார்."

"என்னையா? எதனால?"

"உதவி பண்ணினா எனக்கு வருமானம் அதிகமாக வருதுன்னு சொல்றவன், அரை லூஸுதான்."

"சரி, இருந்துட்டுப் போறேன்."

"வெளியே போய் போட்டுக் கொடுத்துடாதீங்க."

"மாட்டேன். பயப்படாதே."

ஆனால், ஒரு குடும்பம் முழுவதுமே எப்படி அயோக்கியத்தனமாக இருக்கமுடியும்? ஒரு குடும்பத்தின் ஒவ்வொரு நபரும் கர்வம் கொப்பளிக்கிற காட்டு மிராண்டிகளாக எப்படி இருக்க முடியும்?

பெண்கள் உட்பட எல்லோரும் உயரமும் அகலமுமாய் இருந்தார்கள். அசட்டுச் சிகப்பை அழகு என்று நினைத்துக் கொண்டார்கள். எல்லோருக்கும் கனத்த தொண்டை இருந்தது. ஆண்கள் பெரிய தொந்தியோடு கால் அகட்டி நின்றார்கள்.

எல்லோரிடமும் 'என்னா' என்று ஏகவசனம் பேசினார்கள். சட்டென்று மிகுந்த பணிவுக்கு மாறினார்கள். நண்பருக்கு நண்பர் சொல்லி ஏற்பாடு செய்த திருமணம் இது. நண்பரின் வார்த்தையை அப்படியே எடுத்துக் கொண்டது தவறாகப் போய் விட்டது. அந்தக் குடும்பத்தின் தவறு தெரிய ஒரு மாதம் ஆயிற்று. அவருக்கு வாய்த்தவளின் புத்தி தெரிய இருபது நாளாயிற்று.

"ஒலிம்பிக் கேம்ஸ்லதான்டி மெடிக்கல் செக்கப்லாம். இன்டர்காலேஜ் லெவல்ல அதெல்லாம் கிடையாது. ரெண்டு ஸி.ஸி. போட்டுக்க. உடம்புக்குள்ள ஒரு காட்டெருமை வந்துடும். நிமிர்ந்து அந்தக் கயிறு பாரு. அதை நீதான் தொடணும்னு ஒரு வெறியேத்திக்க. கன் சத்தம் கேட்டதும் பேய் மாதிரி ஓடு."

"தொடையைக் காட்டு, ஊசி போடறேன். நீ ஜெயிக்கணும், நீ ஜெயிக்கணும்."

"இன்னாங்க இது, நானூறு மீட்டருக்கு அந்தப் பொண்ணு அறுநூறு மீட்டர் ஓடறா.. தண்ணி போட்டிருக்காளா?"

"தண்ணி போட்டா ஓட முடியுமா? நானூறு மீட்டருக்கு அறுநூறு மீட்டர் ஓடறது அவ டெக்னிக். கடைசி கயிறு பாத்தவுடனே எல்லோரும் ஸ்லோ ஆவாங்க. இவ ஸ்பீடு ஆவா."

"ஏங்க அந்தப் பொண்ணுக்கு போதை ஊசிப் பழக்கமெல்லாம் இல்லியே?"

"தமிழன் புத்தி இதான்பா. அவனும் ஜெயிக்க மாட்டான், ஜெயிச்சவனையும் நம்ப மாட்டான்."

ஆனால், அவளின் எல்லா வெற்றிக்கும் போதை ஊசிதான். அடிப்படைத் தோல்விக்கும் அதுவே.



# 24

ஓட்டம் இல்லாதபோதும் ஊசி தேவைப்பட்டது. ஊசி போட்டுக் கொண்ட பிறகு ஓட ஆசை வந்தது. ஓடத் தேவையில்லாதபோது ஆட கூட்டிக் கொண்டு போனார்கள்.

டிஸ்கொதே என்கிற இடத்தில் அவள் சந்தோஷமாக ஆடினாள். ஆடி ஆடிக் களைப்படைந்தாள். ஓட்டத்தை விட ஆட்டம் சந்தோஷமாக இருந்தது. எனவே ஓட்டத்தை மறந்தாள். ஆடுகின்ற இடத்தில் வேறு நண்பர்கள் கிடைத்தார்கள்.

"இன்னொரு ஸி.ஸி. போட்டுக்கறியா..." என்று மருந்து பாட்டிலைக் காட்டினார்கள்.

"வேற விஷயமும் இருக்கு சிஸ்டர்." ஒருவன் பொடி கொடுத்தான். மூக்கில் வைத்து உறிஞ்சச் சொன்னான். புகைக்க வேறு சிகரெட் கொடுத்தான்.

பத்து நாளில் அவள் ரத்த ஓட்டம் பாழாகியது. அடுத்த முறை ஓட்டத்துக்குத் தயாராகிவிட்டு படீரென்று வெடிச் சத்தம் கேட்டவுடன் அவள் ஓடவில்லை. திரும்பி தன் உடைகளுக்காய் நடந்தாள். இனி ஓட முடியாது என்று அவளுக்குத் தெரிந்து போயிற்று. அப்படி ஓட வேண்டுமெனில் அதிக அளவு மருந்து வேண்டும். அதிக அளவு மருந்து அவள் நடப்பதைக்கூட நிறுத்திவிடும். அவளுக்கு, 'மாட்டிக் கொண்டு விட்டோம்' என்று தெரிகிறது. இரண்டு நாட்கள் பல்லைக் கடித்துப் போராடிப் பார்த்தாள்.

ஐந்தாயிரம் நம்பர் பீர் வாங்கி குடித்துப் பார்த்தாள். அவை எல்லாம் வெறும் கொசுக்கடியாகவே இருந்தன.

அவன் வீடு அவனை முற்றிலும் நம்பியது. அவன் முழுமையாய் ஏமாற்றினான்.

ஆனால், போலீஸிலிருந்து வீட்டிற்கு அழைப்பு வந்தபோதுதான், 'அவன், மேல் துணியில்லாமல் நடனமாடினான்' என்பது தெரிய வந்தது.

அவனை வீட்டில் மடக்கிப் போட்டார்கள், மிரட்டினார்கள், அவன் தவித்தான். டாக்டரிடம் கூட்டிப் போய் மனமாற்றம் செய்தார்கள். அவனுக்குத் திரும்பவும் அமைதியான வாழ்க்கைக்கு வர விருப்பமேயில்லை. அவன் மனதிலும் உடம்பிலும் சதா ஒரு பரபரப்புக்கு ஆவல் இருந்தது. அது விதம் விதமான கற்பனையாய் மூளைக்குள் உருவெடுத்தது.

ரோடு ரோலரால் நசுக்கப்பட வேண்டும். ஈட்டியால் குத்தப்பட வேண்டும். மின்சார ரயில் மோதி தூக்கி யெறியப்பட வேண்டும். கூவத்தில் புதைந்து சாக வேண்டும். விமானத்திலிருந்து பாராசூட் இல்லாமல் தரையில் குதிக்க வேண்டும் என்கிற ஆத்திரங்கள் இருந்தன. அவைகளைப் பலமுறை மனசுக்குள் அரங்கேற்றிப் பார்ப்பான். சில சமயம் பயந்து கத்துவான். சில சமயம் செத்தது போல் கிடப்பான்.

ஏனோ அவனுக்கு செக்ஸ் பிடிக்கவில்லை. ஆனால், பல பேர் பாய்ந்து அவனைக் கற்பழிப்பது அவனுக்குப் பிடித்திருந்தது. ஒரு ஆள் கற்பழிப்பது பிடிக்கவில்லை. நான்கு மூலைகளிலும் தூக்கித் தூக்கி கற்பழிப்பது பிடித்திருந்தது. மனசுக்குள் நடந்த இந்தக் கற்பனையெல்லாம் வெளியே எவரிடமும் சொல்ல முடியாது உள்ளுக்குள்ளேயே திரும்பத் திரும்ப இவை வர, மன அழுத்தம் பலமாயிற்று. போதை ஊசி இல்லாமலேயே பேசத் துவங்கினான்.



குளிக்கும்போதும், கண்ணாடி முன் நிற்கும்போதும், நடக்கும்போதும் உரத்த குரலில் பேசத் துவங்கினான். இந்தியாவின் நாலு மூலைகளிலும் காசுக்கு அலைந்து கொண்டிருந்த அவனது அண்ணன்களும், தம்பிகளும் வீடு வந்தார்கள். அவனைப் பார்த்து அதிர்ந்து போனார்கள்.

'கல்யாணம் பண்ணி வச்சிடும்மா' என்றார்கள். ஒரு புரோக்கரை அழைத்து உண்மையைச் சொன்னார்கள்.

"எவனாவது இளிச்சவாயனா ஒரு தியாகி இருப்பான். அவனைப் பார்த்து இட்டா. மிச்சத்தை நாங்க பாத்துக்கறோம்."

அவன் மூர்த்தியை அடையாளம் காட்டினான்.

"எங்க வீட்ல காந்தி ஜெயந்தி வருஷா வருஷம் கொண்டாடுவோம் சார்." மூர்த்தியிடம் தாண்டிலாய் பேசினார்கள்.

"அப்படியா... காந்தி ஜெயந்தியா? வருஷா வருஷமா?" விழி விரித்தான். கொஞ்சம்கூட சந்தேகம் இல்லாமல் பேசினான்.

"அன்னிக்கு மட்டும் நூல் நூற்போம் சார். காலைல காந்தி பத்தி பேசுவோம். மத்தியானம் நூறு பேருக்கு சர்க்கரைப் பொங்கல் தருவோம். வீட்டுக்குள்ள கூப்பிட்டு வச்சு தருவோம். சர்க்கரைப் பொங்கலை எடுத்துட்டு வெளியே போகக்கூடாது. வாசல் தாண்டறத்துக்குள்ள பிரிச்சு சாப்பிட்டுடணும்."

மூர்த்தி வளர்ந்த விதம் அப்படி. அவன் தாயும் தந்தையும் ஒற்றுமையானவர்கள். ஒருவரையொருவர் இடைவிடாது கொண்டாடி வாழ்ந்தவர்கள்.

"டேய் கண்ணு, அங்க என்னடா பண்ற...?" ஐந்து வயது மூர்த்தியை அப்பா கேட்பார்.

"அம்மாவுக்கு முத்தம் கொடுக்கறேம்ப்பா."

"அப்ப நானும் கொடுப்பேன்."

அப்பா மறுபக்கம் வந்து உட்கார்ந்து அம்மாவை அணைத்துக் கொள்வார். இந்த தேசத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய சில குழந்தைகளுக்கே 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி..' என்கிற வரிகளின் உண்மை தெரியும்.

அப்பாவும், அம்மாவும் ஒருவர் மீது ஒருவர் பிரியமாய் இருப்பதை பார்த்த குழந்தைகள் அத்தனை சாமர்த்தியமாய் இரா து. அப்பாவின் கைகளுக்குள் அம்மா அடைக்கலம் புகுந்துவிட, அம்மாவின் கைகளுக்குள் பிள்ளை சரணடைய, அன்பின் கதகதப்பு அனுபவித்து அனுபவித்து குழந்தை ஒரு மயக்கத்தில் இருக்கும்.

வெகுளித்தனம் நீங்கி உலகத்தின் விஷமும், வெகண்டையும் புரிந்து கொள்ள அந்தக் குழந்தைகளுக்கு நாளாகும். படிப்பும், பாட்டும் அற்புதமாக வரும். பள்ளிக் கெட்டிக்காரத்தனங்களால் குழந்தை தகதகவென பிரகாசிக்கும்.

ஆனால், ஏட்டுக்கல்வி வேறு. நாட்டு நடப்பு வேறு என்று புரிய தாமதமாகும்.

பிரகாசமான படிப்பால் நல்ல உத்தியோகம் கிடைத்துவிட்டது. நல்ல உத்தியோகம் எளிதில் பிடிப் பட்டு உயர்ந்த பதவி கிடைத்து விட்டது. ஆனால், ஆளைப் பார்த்தவுடன் எடை போடும் சாமர்த்தியம்தான் மூர்த்திக்கு வரவேயில்லை.

வீட்டை விட்டு தொலைவில் மாற்றிக் கொண்டு போனால் தாய் தந்தையரைப் பிரிய நேரும் என்று பதவி உயர்வைப் புறக்கணித்து அலுவலகத்தில் வளைய வந்தான்.

எந்தக் காரணமும் இல்லாமல் அப்பாவுக்கு சிறுநீரகம் பாதிக்கப்பட்டது. மெல்ல மெல்ல பாழாயிற்று. சில நாட்கள் இயந்திரங்கள் ரத்தத்தை சுத்தப்படுத்தின.



அப்பாவுக்கு தன் முடிவு தெரிந்து விட்டது. மகனை அருகே அழைத்து, 'அம்மாவை கவனித்துக் கொள்' என்றார்.

"யாரும் என்னைக் கவனிச்சுக்க வேண்டாம். நீங்க போன மூணாவது நிமிஷம் நானும் இருக்கமாட்டேன்."

"அசடு, தற்கொலை பண்ணிக்கக் கூடாது."

அவள் பதில் பேசவில்லை. அப்பா இறக்க, அழவில்லை.

ஆனால் மூன்றாம் நாள், படுக்கையில் உறங்குவது போல் இறந்திருந்தாள்.

ஊர் வியந்தது.

மூர்த்தி வியக்கவும் முடியாமல், விம்மவும் முடியாமல் அல்லாடினான். அன்பு, கலகலப்பு, இல்லாமல் தனியே இயங்கினான்.

"டேய் குட்டி, சாப்பிட வாடா" என்று கூப்பிட்டால் தான் அவனால் சாப்பிட முடிந்தது. கூப்பிட யாரும் இல்லாதபோது தன்னைத் தானே கூப்பிட்டுக் கொண்டான்.

அம்பதுக்கும், நூறுக்கும் மூர்த்தியைச் சுற்றி பலபேர் ஏமாற்றினார்கள்.

"நெஞ்சு வலி சார். டாக்டர்கிட்ட போகணும்" என்று ஐம்பது ரூபாய் வாங்கிக் கொண்டு சினிமாவுக்குப் போனார்கள்.

"என் குழந்தைக்கு நிமோனியா. பெரியவளுக்கு ஃபீஸ் கட்டணும். என்ன பண்றதுன்னே தெரியலை. ஒரு ஐந்நூறு ரூபா இருந்தாதான் நான் மனுஷனாவே இருப்பேன்."

மூர்த்தியின் காதுபட சொன்னால் போதும், காசு கிடைத்துவிடும்.

"நான் கடனே வாங்க மாட்டேம்பா. மூர்த்தியா கொண்டாந்து திணிக்கிறான். என்ன பண்றது? பகவான் ஏன் என்னைக் கடன் வாங்கும்படியா பண்ணிவிட்டான்னு தெரியலை."

தந்திரம் மிக்க அந்த நரி பெரிதாய் ஊளையிடும்.

அது ஒரு நரி. அது ஊளையிடுகிறது என்று மூர்த்திக்கு தெரியாது.

மூர்த்தியைச் சுற்றி சில நல்லவர்களும் இருந்தார்கள்.

ஒரு மாமி வீட்டில் உணவுக்கு ஏற்பாடாயிற்று. ஒரு ஒன்றுவிட்ட தங்கை வந்து போய்க் கொண்டிருந்தாள்.

திருமணத்திற்கு அவன் யாரைக் கேட்பது என்று தெரியாமல் தவித்தான். தானே பெண் பார்த்துவிட்டு வந்தான். பெண்ணின் அண்ணனையே தன் உறவுகளிடம் போய் பேசச் சொன்னான்.

"எங்ககிட்ட சொன்னா நாங்க பார்க்க மாட்டமா? யாரோ ரெண்டு பேர் தடிதடியா வந்தாங்க. கல்யாணம் முடிவாயிடுச்சுங்கறான்."

அவர்கள் லேசாய் கோபமானார்கள். ஒரு விலகலாய் கலந்துகொண்டார்கள். கல்யாணம் முடிந்ததும் வழிச் செலவுக்குக் காசு வாங்கிக் கொண்டு ஊருக்குப் போனார்கள்.

"இது நம்ம ஃப்ளாட்டா? எதிரே இருக்கறதும் நம்மளுதா? த்தோ பாருப்பா. தான் இருக்கறதுக்கு ஒரு ஃப்ளாட்டும், தன் புள்ளை இருக்கறதுக்கு ஒரு ஃப்ளாட்டுன்னு செத்துப்போன சம்பந்தி எதிரும் புதிருமா வாங்கியிருக்காரு."

"ஐயோ. அந்த சம்பந்தியை நான் பார்க்காத போயிட்டேனே. அவரு இருந்திருந்தா என் தங்கச்சிக்கும் ஒரு ஃப்ளாட் வாங்கிக் கொடுத்திருப்பாரே."



"ம்க்கும். உனக்கும் வாங்கிக் கொடுத்திருப்பாரு."

அவர்கள் பரஸ்பரம் உரத்துப் பேசிக்கொண்டார்கள். தங்கையை நோக்கித் திரும்பினார்கள்.

"த்தோ பார்... இந்தக் கல்யாணம் எங்க சாமர்த்தியத்தால நடந்ததா நான் சொல்லமாட்டேன். நான் நல்ல பையன் வேணும்னு தேடினேன். ரொம்ப ரொம்ப நல்ல பையன் கிடைச்சுட்டான்.

இதுக்கு மேலயும் நீ அயோக்கியத்தனம் பண்ணினே. நீ அழிஞ்சுதான் போவே. இவ்வளவு நல்ல ஆம்பளைய அழ வைச்சே... அடுத்த ஜென்மத்துலயும் உனக்கு கேவலமான வாழ்க்கைதான் கிடைக்கும்.

போறும். உன் ஆட்டத்தை இத்தோட நிறுத்திக்க. நீ ஓடவும் வேணாம். இதுக்குப் போய் ஊசி போட்டுக்க வேணாம். நின்னு நடந்து வீட்டுக்குள்ளே ஓடியாடி புருஷனை சந்தோஷப்படுத்தினா போதும்.

எதுனா பாதை மாறதா தெரிஞ்சுது. நானே கூட்டிட்டுப் போய் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்துருவேன். அதுக்கு அடுத்த இடம் சுடுகாடுதான்.

உன் மேல கருணையா... அல்லது எங்க மேல கருணையா தெரியலை. கடவுள் ரொம்ப நல்ல இடமா கொடுத்திருக்கார். சில சமயம் அவன்கிட்ட பொய் சொல்லவே கூச்சமா இருக்கு. அவன் முகத்தைப் பார்க்கவே வெட்கமா இருக்கு.

'என்னாங்க... உங்க பொண்ணுக்கு போதைப் பழக்கமாமே.' அவன் கேட்பான். நான் வெட்கப்பட்டு தலை குனிஞ்சு நிக்கற மாதிரி நடிச்சா, 'போனா போவுது விட்ருங்க. நான் மாத்திக் கொண்டாறேன்'னு அவன்தான் சொல்வான்.

திரும்பவும் சொல்றேன். தெய்வம் கடைசியா உனக்கு வாய்ப்பு கொடுத்திருக்கு. காப்பாத்திக்க. நீயும் நல்லபடியா வாழ்ந்து, எங்களையும் காப்பாத்து. இதுவரைக்கும் நடந்த எல்லா கெட்ட சமாசாரங்களையும் மறந்துரு."

"என்னம்மா மறந்துட்டியா?"

அவளை போதைக்கு இழுத்த நண்பர்கள் கூப்பிட்டார்கள்.

"எப்படி இருக்கு வாழ்க்கை." விசாரித்தார்கள்.

"வீட்டுக்காரரோடு கட்டிப் புரண்டுட்டு, 'இடுப்பு நோவுது'ன்னு ஆஸ்பத்திரில சேர்ந்துரு. அங்க வந்து ஊசி போட்டுக்கலாம். கொஞ்சம் காசு எடுத்தாம்மா. நிறைய கடனாயிப் போச்சு."

அவள் சகோதரர்கள் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

புதுப்பெண்ணுக்கு இப்படி நடக்கறதுதான் என்று பெண்கள் சொன்னார்கள்.

யாருமில்லாதபோது அவள் ஊசி போட்டுக் கொண்டாள். போதை ஏறியபோது மூன்று சவரன் கை வளையல்களை கழற்றிக் கொடுத்தாள். புருஷனைப் பார்த்து வாய்விட்டு சிரித்தாள்.

மூர்த்திக்கு சந்தேகம் வந்தது. அவளுடைய சகோதரர்கள் சமாதானப்படுத்தினார்கள்.

'நாங்க சரிபண்ணி கூட்டிட்டு வரோம்' என்று வாக்குறுதி கொடுத்தார்கள்.

அவன் குழம்பினான்.

"உன்னைக் கொலை பண்ணிடுவேன். கொலை பண்ணிட்டு ஜெயிலுக்குப் போயிடுவேன். இன்னும் உன் நாய் புத்தி போகலையா. எங்களை விடுடி. அந்த நல்ல மனுஷன் மூஞ்சியைப் பாருடி. இந்த வழிக்கு போவாதடி"

மறுநாள் அவளுக்கு பாத்ரூமில் ஊசி தரப்பட்டது.



அவள் காது தோட்டை அவிழ்த்துக் கொடுத்தாள்.

"எந்தச் சோம்பேறி என் தங்கச்சியக் கெடுக்கறது."

அவர்கள் இரவு பகலாய் காவல் காத்து, வந்தவனை மடக்கிப் பிடித்தார்கள். நாயடி, பேயடி, அடித்தார்கள், போதை ஆட்களைத் தாக்குவது எளிதாய் போகாது, அதற்கு எதிரொலி நிச்சயம் இருக்கும்.

பதிலுக்கு அவள் சகோதரர்கள் பலமாய் தாக்கப்பட்டார்கள்.

"நாங்களாடா உன் தங்கச்சிய கூப்பிட்டோம்? உன் தங்கச்சி கூப்பிட்டாடா நாயே. அவளுக்கு இடுப்புல ஒரு கோளாறும் இல்லை. தேவையில்லாம எங்க ஆள் மேல கை வச்சே- நாஸ்தி பண்ணிடுவேன்." அடித்து நாசமாக்கினார்கள்.

மூர்த்தி திகைத்துப் போனான்.

என்ன செய்வது என்று தெரியாமல் அலைந்தான். கதவைப் பூட்டிக்கொண்டு 'அம்மா, அப்பா' என்று கதறினான்.

'என் பொண்டாட்டிய காப்பாத்திக் கொடுப்பா' என்று கெஞ்சினான்.

நல்லவர்களின் அழுகை, பிரபஞ்சத்தின் எல்லாப் பக்கங்களிலும் எதிரொலிக்கும், சூட்சுமமானவர்களையும் அசைக்கும்.

பாதுகாக்க அண்ணன்கள் இல்லாதபோது அவள் ஏழு சவரன் தாலிக்கு ஆறு பாட்டில் மருந்தும் ஒரு கொத்து இன்ஜெக்ஷன்களுமாய் வீட்டுக்கு வந்தாள்.

புருஷன் வேலைக்குப் போனபிறகு ஊசி போட்டுக் கொண்டாள்.

அடுத்த வீட்டுக்காரர் பயந்து நடுங்கும்படி நடந்து கொண்டாள்.

வயசான ஒருவரிடம் போய் 'நான் ராஜா மகள், புது ரோஜா மலர்' என்று பாடினாள்.

தெரு சிரித்தது.

மூர்த்தி ஏமாற்றப்பட்டதை உணர்ந்தான். சகோதரர்களை லேசாகக் கடிந்து கொண்டான்.

"சரி, நடந்தது நடந்து போச்சு. இதை எப்படி ரிப்பேர் பண்ணலாம். அதைப் பார்க்கணும். இதை சரிபண்ண ஒரு இடம் சொல்வாங்க. ஒரு பெரிய குடும்பத்து அம்மா பேர் சொல்வாங்க. அங்க இவளைக் கொண்டு போயிடலாம்."

அவள் சிறிதுகூட ஒத்துழைக்கவில்லை. சகோதரர்கள் அவன் முன்பு கை கூப்பினார்கள்.

"வேணாம். அவளை விட்டுருங்க. அவ போதைலயே சாவட்டும். உங்களை ஏமாத்தினதுக்கு கடவுள் எங்களைத் தண்டிப்பார். நாங்களே டைவோர்ஸ் வாங்கித் தரோம். இவ வேணாம்."

மூர்த்தி அழுதான்.

"எந்த ஜென்மத்திலே யாரை நான் ஏமாத்தினேனோ, என் கல்யாணம் இப்படிச் சிரிச்சுப் போச்சு.

இது ஒரு சோதனை.

'நல்லவன் நல்லவன்னு அலட்டிக்கறியேடா கெட்டது நடந்தாலும் நீ நல்லவனா இருப்பியா?' அப்படின்னு கடவுள் கேட்கறார்.

எனக்கு யார் மேலயும் கோபம் இல்லை.

அவளுக்கு என்னைக் கண்டா பிடிக்கலை. என்னைப் பார்த்தா அவளுக்கு கேலி. பெரிசா சிரிக்கறா. என்னைப் பிடிக்கலைன்னு தெளிவா சொல்றா அதனால டைவோர்ஸ் பேப்பர்ல கையெழுத்துப் போடறேன்.



"டைவோர்ஸ் ஆனா என்ன... எதுனா மருந்து செலவுக்கு காசு வேணும்னா கேளுங்க. நிச்சயமா தரேன்."

அவன் சாதாரணமாகச் சொன்னான். தியாகம் அவன் இயல்பு. சிநேகம் அவன் பழக்கம். அன்பு அவன் படிப்பு. வாழ்க்கை அவனைத் தண்டித்தாலும், அவன் மறுபடி எழுந்தான். இந்தப் பொறுமைக்குப் பரிசாய் மிக அற்புதமான ஒரு பெண் வந்து சேர்ந்தாள்.

# 25

**அ**வள் வீட்டில் வரும் சண்டைகளுக்குக் காரணமே வறுமைதான்.

அப்பா, அம்மா, தம்பி, தங்கை என்று அவளையும் சேர்த்து ஐந்து பேர் கொண்ட வீடு அது. அவளுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் சம்பளம் ஒரு தனியார் கம்பெனியில் குமாஸ்தா வேலை. அவள் அப்பாவுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம். கட்டடம் கட்டும் கம்பெனியில் கணக்கு எழுதும் வேலை. காசு வந்தால் அந்த வீடு கலகலவென்றிருக்கும். காசு இல்லையென்றால் முகம் தூக்கி வைத்துக் கொள்ளும்.

"காசா முக்கியம். மனுஷாதான் முக்கியம். அன்பு தான் சாசுவதம். காசு இருந்து பிரியமில்லாதவா உலகத்துல எத்தனை பேர் இருக்கா தெரியுமா? காசு வரும், போகும். நல்ல அம்மாவுக்கும், நல்ல குழந்தைக்கும் தபஸ் பண்ணியிருக்கணும்."

இவ்விதம் அடிக்கடி அந்த வீட்டில் வசனங்கள் பேசப்படும். ஆயினும் காசு இல்லாமல் அந்த வீட்டில் சண்டைகள் அடிக்கடி வரும்.

"சுள்ளுன்னு உறைக்கறதும்மா குழம்பு. கொஞ்சம் நல்லெண்ணெய் விடேம்மா."

அம்மா இரண்டு ஸ்பூன் நல்லெண்ணெய், தம்பி இலையில் நல்லெண்ணெய் விழும்வரை தங்கை காத்திருப்பாள்.

"நல்லெண்ணெய் கிலோ என்ன விலை தெரியுமா? இப்படி தினம் ரெண்டு ஸ்பூன் நல்லெண்ணெய் விட்டுண்டா, கூட ஒரு கிலோ நல்லெண்ணெய் செலவாகும். அதனால வாயைக் கட்டு. மோந்து பார்த்து சாப்பிடாதே. ருசிக்கு அலையறது நல்லதில்லை."

'எனக்கு வேண்டாம்' தம்பி தட்டை தள்ளினான். "இந்த வீட்ல இனிமே எனக்கு சோறே வேண்டாம். இன்னொரு தடவை இந்த வீட்ல கை நனைச்சா என்னை நாயேன்னு கூப்பிடு."

அவர்கள் வீட்டில் எல்லோருடைய பேச்சும் இப்படித்தான் உச்சஸ்தாயியில் இருக்கும். எல்லா கோப வசனங்களும் யானை பிளிறளாய்தான் இருக்கும்.

"அவ்வளவு கோபமா இருந்தா ஒழி. எங்காவது ஒழிஞ்சு போ. நக்கி திங்கறதுல குறைச்சல் இல்லை. இதுல கோபம் வேறயா?" தங்கை சீறுவாள்.

"ஐயோ- அவன் ஏதோ சாப்பிட்டு போகட்டுமேடி"

"அப்போ எனக்கும் ரெண்டு ஸ்பூன் நல்லெண்ணெய் விடு." தங்கை அவள் தட்டை நீட்டினாள்.

"எச்சக்கலை நாயே... உனக்கு வேண்டியதை நீ கேட்டு வாங்கி சாப்பிடு. அடுத்தவா இலையப் பார்க்காதே."

"பார்க்கும்படியா ஏன் வைக்கறே? போட்டா எல்லார்க்கும் போடணும். இல்லை சும்மா இருக்கணும். ஒருத்தருக்கு போட்டு இன்னொருத்தருக்கு போடலைன்னா எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம்."

"ஆமாம். கல்யாணம் ஆகி முப்பது வருஷம் ஆச்சு. மூணு பெத்துட்டு இப்ப நான் அயோக்கியத்தனம் பண்றேன்.



அவன் கேட்டானேன்னு எண்ணெய் விட்டேன். நீ கேட்டிருந்தா உனக்கும் எண்ணெய் விட்டிருப்பேன்."

வெறும் இரண்டு ஸ்பூன் நல்லெண்ணெய்க்கு வீட்டில் மூன்று நாள் யுத்தம் நடக்கும்.

'நீ பண்ணது தப்பு' என்று அம்மாவிடம் சொல்ல, அம்மா பிழியப் பிழிய அழுவாள்.

"சின்னக் குழந்தை... காரம் தாங்காத கேட்டான். அதுக்கு இத்தனை சண்டையா?"

"இன்னொருத்தருக்கு போடக்கூடாதுன்னு சொல்ல நீ யார்?"

"சரி, இத்தோட பேச்சை நிறுத்துங்கோ. ஒருத்தரோட ஒருத்தர் தேவையில்லாம பேசவேண்டாம்."

அப்பா கடைசியாய் கட்டளையிடுவார்.

சித்ராவுக்கு 'ஐயோ' என்றிருக்கும்.

ஒரு வீடு எந்நேரமும் சந்தோஷமாய் இருக்க வேண்டும். கலகலப்பாய் இருக்கவேண்டும். ஒருவரையொருவர், "அடி என் கண்ணே" என்று கொஞ்சி கொண்டிருக்க வேண்டும். தம்பியை இவள் வருடி தூங்கச் செய்ய- தங்கையை அம்மா முதுகு தட்டி பாட்டுப்பாட இவள் அப்பாவின் மடியில் படுத்து மகாபாரதக் கதைகள் கேட்க வேண்டும்.

அப்பா கதை சொன்னால் யாரும் 'ஆ' என்று வாய் பிளந்து கதை கேட்பார்கள். அப்பாவுக்கு சம்பாதிக்கிற சாமர்த்தியத்தை தவிர ஏகப்பட்ட சாமர்த்தியங்கள் இருந்தன. அதில் ஒன்று 'கதை சொல்லல்' வெறும் கதை மட்டுமல்ல, கதைக்கு உட்புகுந்த நீதியையும் அவரால் தெளிவாகச் சொல்ல முடியும்.

அப்பா கீசகவதம் சொல்லும்போது கண்ணில் நீர் பெருகும்.

“திரௌபதியோட புருஷர்கள் யாரு.... மஹா வீரர்கள். அவர்கள் மாதிரி பலிஷ்டர்கள் யாருமில்லை, செல்வம் மிக்க அரசர் குடும்பத்து இளைஞர்கள்.

திரௌபதி என்ன சாதாரணமா? அவ அப்பா அகத்தில காசு பணத்துக்கு என்ன குறைச்சலா? ‘ஒரு வருஷம் உன்னோட ஊர்ல வந்து ஒளிஞ்சுக்கறேன்’னா ஏற்பாடு பண்ண மாட்டாளா?

கேட்கப்படாது. கேட்டா புருஷாளுக்கு அவமரியாதை. நல்ல பெண்டாட்டி, புருஷனுக்கு அவமரியாதையா ஒரு காரியமும் பண்ணமாட்டா.

உங்கம்மாவோட அப்பா வந்து விஸ்வநாதா... எம்பொண்ணை இப்படி வச்சிருக்கயே’ன்னு அழுதார். அஞ்சாயிரம் ரூபா பணத்தை நிட்டி வச்சுக்கோன்னார். நான் ‘வேண்டாம்’னேன். உங்கம்மாகிட்டே நீட்டினார். அவளும் வாங்கமாட்டேனுட்டா.

அதுதான் அழகு. அதுதான் உத்தமி குணம்.

கையை நீட்டி வாங்கியிருந்தா, ‘விஸ்வநாதன் சோத்துக்கே திண்டாடிண்டிருந்தான். நான்தான் அஞ்சாயிரம் ரூபா கொடுத்தேன்’னு ஊர் முழுக்க பேசுவா. எல்லா உறவுக்காரக்கிட்டேயும் போய் போய் அலட்டுவா.

நாம என்ன சாப்பாட்டுக்கா கஷ்டப்படறோம்... தினம் தட்டு நிறைய மோர் சாதமும் கடாரங்கா ஊறுகாயும் சாப்பிடறமே? எத்தனை சந்தோஷம் அது? அத்தனை சௌகர்யமாய் இருந்த திரௌபதி... ஒரு மஹாராணியா பொறந்தவ வேலைக்காரியா போக வேண்டியிருந்தது. அவ ஆறு பேரும் அலுத்துக்கலை. அதான் பாயிண்ட். ஒருத்தரை ஒருத்தர் பார்த்து. நொந்துக்கலை கோபப்படலை. சண்டை போடலை, உன்னாலதான், என்னாலதான்னு கூச்சல் போடலை.



விதி வலிது. என்னமோ இப்படி நேர்ந்துடுத்துன்னு ஒருத்தரையொருத்தர் பார்த்து அதே சமயம் பேசிக்காம வ்ளைய வர முடிஞ்சது.

என்ன அற்புதமான சூழ்நிலை பார். அவா யுத்தத்துல ஜெயிச்சதுக்கு இந்த ஒரு வருஷம் ஒருத்தரோட ஒருத்தர் பேசாம பக்கத்துல பக்கத்துல வசிச்சது காரணம்.

நம்ம வீட்ல உன் தங்கையும், தம்பியும் பேசிக்கறதில்லை. அதனால என்ன.. பிரியமில்லாமலா இருக்கு.

உன் தம்பி பீமன் சாப்பிட்டு, சாப்பிட்டு குண்டா இருக்கான். உன் தங்கை திரௌபதி எப்பவும் தலையை விரிச்சு போட்டுண்டே இருப்பா.”

வீடு அவர் உவமைக்கு வாய்விட்டுச் சிரிக்கும்.

“அவாளுக்கு நிர்ப்பந்தம். பேசாத இருந்தா, நம்மாத்துல நல்லெண்ணெய் சண்டை மூஞ்சி திருப்பிண்டிருக்கோம்.

ஆனா, உண்மையிலேயே திரௌபதிக்கு ஒரு கஷ்டம்னா பீமனால பொறுத்துக்க முடியுமோ? அவளை ஒருத்தன் தொந்தரவு பண்றான்னா தாங்கிக்க முடியுமோ? முடியாது. பீமன் தொடை தட்டி எழுந்துட்டான். திரௌபதியும் வேற யாரையும் நம்பலை. பீமனைத்தான் நம்பி அவன்கிட்ட போய் அழுதா. கஷ்டம் வரும்போது தான் ஒரு குடும்பம் ஒத்துமையா இருக்கணுங்கறதுக்கு தர்மரோட ஃபேமிலி ஒரு எக்ஸாம்பிள்.

அதேமாதிரி இன்னிக்கு நாம கஷ்டப்பட்டாலும் நாளைக்கு நாம ஜெயிப்போம். நிச்சயமா ஜெயிப்போம். உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணமாகி ரொம்பப் பணக்கார இடத்தில வாழ்க்கைப்பட்டு காரும், பங்களாவுமா இருக்கற காலம் வராதா. உன் தம்பி நன்னா படிச்சு இஞ்ஜினீயராகி ஃபாரின் போக மாட்டானா.

அவன் திரும்பி வரும்போது நாம எல்லாரும் போய் ஏர்போர்ட்டுல ரிஸீவ் பண்ண மாட்டோமா?

எனக்கு ஒரு ஆசை இருக்கு சித்ரா. உன் ஃபேமிலி உன் தங்கை ஃபேமிலி, உன் தம்பி ஃபேமிலி... மூணு ஃபேமிலியும் எங்க ரெண்டு பேரையும் அழைச்சிண்டு காசிக்கு போகனும். நீங்கள்லாம் நன்னா இருக்கணும்னு நான் அங்க நம் மூதாதையர்களுக்கு சிரார்த்தம் பண்ணணும்.

பிராமணர், பூஜைய விட்டாலும் விடலாம், சிரார்த்தத்தை விடப்படாது. நமக்கு தேவதைகள் நமது பித்ருக்கள். குரு மூலமா தெய்வத்தை பார்க்கறது கஷ்டம். பித்ருக்கள் மூலமா தெய்வத்தை பார்க்கறது சுலபம்.

எங்கப்பா மகா பண்டிதர். எனக்கு மந்திரம் சொல்லிக் கொடுத்தார். நான் சொல்லாம சதிர் கச்சேரிக்கு ஓடிப் போயிடுவேன், நாதஸ்வரத்தில் எனக்கு அப்படி ஒரு மயக்கம். ராப்பூரா பின்னாடியே ஓடிண்டிருப்பேன்.

ஸரிகபதஸ அப்படின்னு எடுப்பான். 'மோகனம்'னு உடனே கத்துவேன். அவனும் சந்தோஷமா எனக்காகவே வாசிப்பான்.

'மந்திரஜபம் பண்றவன் இத்தனை சங்கீதம் கேட்கப்படாது' அப்படீன்னு எங்கப்பா கத்துவா. நான் கேட்பேன். அந்தத் தப்புதான் இப்ப அல்லாடறேன். ஒருவேளை மந்திரஜபம் சொல்லியிருந்தா, காசு பணத் தோட சௌகர்யமா இருந்திருப்பேனோ என்னவோ."

"ஏம்ப்பா இப்ப சொல்லேன்." தம்பி எழுந்து உட்கார்ந்து கேட்டான்.

"என்னது?"

"மந்திர ஜபம் இப்ப சொல்லேன்."

"நாளைக்கு கார்த்தால ஆறு மணிக்கு அஞ்சு பேரும் மஹாகணபதி மந்திரம் சொல்றோம்."



எல்லா சண்டையும் மறந்துவிட்டு அந்த வீடு உற்சாகமாகியது.

அம்மா உட்பட குழந்தைகள் மூவருக்கும் அப்பாவால் மந்திரஜபம் சொல்லித் தரப்பட்டது ஐந்தேகாலிலிருந்து ஆறேகால் வரை எல்லா ஜனங்களும் எனக்கு வசமா கட்டும் என்று விநாயகப் பெருமானைத் துதித்தது.

அன்று மோர் சாதமும் வத்தல் குழம்பும் சாப்பிடும் போது மனசும் நிறைந்தது. அன்று தலைப் பின்னல் நேராக அமைந்தது. புடவையும் ஜாக்கெட்டும் சரியான நிறத்தில் இருந்தன. பஸ்ஸில் உட்கார இடம் கிடைத்தது. எதற் கெடுத்தாலும் கூச்சலிடுகிற ஆபீஸ்காரி 'குட்மார்னிங் சித்ரா' என்று கொஞ்சினாள். மேலதிகாரி அறைக்குள் அழைத்து 'அற்புதம்' என்று அவள் வேலையைப் பாராட்டினாள்.

வீட்டுக்குத் திரும்பும்போது ஆஞ்சநேயர் கோயிலுக்குள் நுழைந்து மகாகணபதி மந்திரம் சொல்ல உலகமே மறந்துவிட்டது.

எழுந்திருக்கும்போது கால் மரத்து விட்டது. வேலிக் கம்பியைப் பிடித்துக் கொண்டு சற்றுநேரம் நின்றாள். அருகே ஒரு முதியவள் வந்து வியந்து பார்த்தாள்.

"உனக்கு என்னம்மா வயது?"

"இருபத்தஞ்சு."

"இந்த வயசுல, அடிச்சு வச்ச சிலை மாதிரி ஒருமணி நேரம் தியானத்துல உட்கார்றயே. எப்படி முடியறது?"

சித்ராவுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. வீட்டுக்கு போய் என்னவெல்லாம் சொல்லவேண்டும் என்று பட்டியல் போட்டுக் கொண்டு விரைந்தாள்.

வீடு பூட்டியிருந்தது அந்த பூட்டு பயம் கொடுத்தது.

உங்க தம்பி, மோட்டார் சைக்கிள்ள மாட்டிக் கிட்டானாமே... உங்க அம்மாவும் தங்கையும் ஓடிருக் காங்க.' மருத்துவமனையின் பெயர் சொன்னார்கள்.

அவள் படியிறங்கி தெருவில் ஓடினாள். ஓடும் போதே பையைத் திறந்து பார்த்துக் கொண்டாள். பதினேழு ரூபாய் ஐம்பது பைசாதான் அதில் இருந்தது.

இது எந்த மூலைக்கு? அவள் பஸ் ஏறினாள். மருத்துவமனையில் தம்பியைத் தேடினாள். வயிறு பசியில் தவித்தது, தலை சுற்றி மயக்கம் வந்தது. ஒரு வாய் காபிக்கு தொண்டை ஏங்கியது.

"முரளிதரன். வயது பதினெட்டு ஆக்ஸிடெண்ட் கேஸ்... எங்க இருப்பாங்க?"

"மண்டை காயம்னா மூணாம் மாடி, கைகால் ஃபிராக்சர்னா அடுத்த பில்டிங். லேசான காயம்னா மேற்கு பக்க வராண்டா. பார்ட்டி புட்டுக்கிச்சுன்னா ஆஸ்பத்திரி கடைசில மார்ச்சுவரி இருக்கு. அங்க போயிடுங்க."

யாரோ பதில் சொன்னார்கள்.

அவள் கண்ணில் நீர் வழிந்தது. பதட்டத்தில் எங்கு போகிறோம் என்று தெரியாமல் அலைந்தாள். சுற்றிய இடத்தையே சுற்றிக் கொண்டு அலைந்தாள்.

"இப்படித் தேடக்கூடாதுங்க." கையில் கட்டுப் போட்ட பெண்மணி அவளுக்கு வழி காட்டினாள்.

"வாசல்ல ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கு. ஆக்ஸிடெண்ட்னா அங்க ரிப்போர்ட் ஆயிருக்கும். அங்க கேட்டா என்ன ஏதுன்னு தெரிஞ்சிரும்."

"முரளிதரனா?... வலது கால் முறிவு, நாலாவது பில்டிங், ஆறாவது வார்டு, ரெண்டாவது படுக்கை. உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லை. ஆனா, பார்ட்டி மயக்கமா இருக்குது."



வயசான போலீஸ்காரர் சொல்ல, அவள் அங்கு ஓடினாள்.

தொலைவிலேயே அம்மாவும், தங்கை கிருத்திகாவும் இருப்பது தெரிந்தது.

"என்னம்மா?" பதற்றத்தோடு ஓடிப்போய் கட்டிக் கொண்டாள். மூச்சு இரைத்தது. அழுகை பொங்கிப் பொங்கி வந்தது.

"பயப்படாதே பதறாதே. ஒண்ணுமில்லை. வலது முழங்காலுக்குக் கீழே காம்பவுண்ட் ஃப்ராக்சர். தியேட்டருக்கு எடுத்துண்டு போய் சின்னதா ஒரு சர்ஜரி பண்ணப் போறா. உள்ளுக்குள்ள ப்ளேட் வச்சு போல்ட் நட் போடப் போறா. மூணு மாசம் நடக்க முடியாதாம்."

"எப்படிடீ ஆச்சு."

"பள்ளிக்கூடத்துலேர்ந்து யாரோ ஒரு பையன் தொரத்தினான்னு வெளியே ஓடிவந்துருக்கான். மோட்டார் சைக்கிள் வந்து கெந்திப் போட்டுடுத்து. யார் இடிச்சானோ அவனே ஆட்டோவுல கொண்டுவந்து ஆஸ்பத்திரில சேர்த்திருக்கான்."

முரளி வலி தாங்காம அழுததால மயக்க ஊசி போட்டிருக்கா. ஆஸ்பத்திரில இருக்கற ப்ளேட் சுமாரான க்வாலிடிதானாம். இம்போர்ட்டட் ப்ளேட் ஆயிரத்தி இருநூறு ரூபா விலையாம். 'அதை வாங்கிட்டு வந்தா, அதையே போட்டுடலாம்'னு டாக்டர் சொன்னார், நாங்க 'சரி'ன்னு சொல்லிட்டு சும்மா நின்னுண்டிருக்கோம்."

"இடிச்சவன் எங்கே?"

"அப்பாவைக் கூட்டிண்டு வர ஆபீஸ் போயிருக் கான்."

"புடிச்சு வாங்கு வாங்குன்னு வாங்கறதுதானே?"

"நல்லவனா தெரியறான்டீ..."

"பேர் கேட்டுண்டியா."

"இல்லை."

"மோட்டார் சைக்கிள் நம்பர் பார்த்துண்டியா?"

"இல்லை."

"அப்புறம் எதுக்குடி அவனை போகவிட்டேள்."

"அவனா அப்பா அட்ரஸ் கேட்டான். கொடுத்தோம். போய் கூட்டிண்டு வரேன்னு கிளம்பினான்."

"எப்ப போனான்?"

"ஒன்றரை மணி நேரம் ஆச்சு."

"பைத்தியமா உங்களுக்கு. இடிச்சவனைப் புடிச்சு உட்கார வைக்காம விட்டுட்டு நிக்கறாளே."

"சரி. இப்ப பிளேட்டுக்கு என்ன பண்றது?" தங்கை கேட்டாள்.

"என் செயின் இருக்கு. ரெண்டேகால் பவுன். அதை வச்சு காசு வாங்கிட்டு வரேன்."

"பசிக்கறதுடி. அவன் கண் முழிச்சதும் காபி கொடுக்க சொல்றா. என்கிட்ட நாலு ரூபாதான் இருக்கு. ஆட்டோவுக்கு இருபத்தாறு ரூபா போயிடுத்து."

சித்ரா பையிலிருந்து பதினேழு ரூபாய் எடுத்து தங்கையிடம் நீட்டினாள்.

'என்ன மந்திர ஜபம்... எதற்கு கடவுள் சிந்தனை? யாருக்கு நீதிநெறிக் கதைகள்? இந்த பூமியில் கஷ்டப் பட்டவர்களேதான் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. வறுமையில் வாடுபவர்களுக்குத்தான் சோதனை அதிகம்.

இந்த வீட்டிலுள்ள ஒரே நகை, ரெண்டேகால் பவுன் சங்கிலி. அதையும் அடமானம் வைக்க வேண்டும். அடமானம் வைக்கப்பட்ட எந்த நகையும் மீட்கப்பட்டதில்லை.



வறுமை... வறுமை... வறுமை...

சாண் ஏறினால், முழம் மட்டுமில்லை, முப்பதடி சறுக்குகிறது.

சித்ராவுக்கு எங்கேயாவது உட்கார்ந்து வாய்விட்டு அழவேண்டும் போல் இருந்தது.

அவள் மருத்துவமனை வாசலுக்கு வர... அப்பாவும் ஒரு ஆளும் மோட்டார் சைக்கிளில் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.

அப்பா அவளைப் பார்த்து கைகாட்டினார். அந்த ஆள் மோட்டார் சைக்கிளை நிறுத்தினான்.

"யாரோ மோட்டார் சைக்கிள்ல முரளியை இடிச்சுட்டாளாம்ப்பா," பதற்றமாய் சொன்னாள்.

"யாரோ இல்லைம்மா... இவர்தான். இவர் பெயர் மூர்த்தி. ஏதோ இம்போர்ட்டட் பிளேட் மாத்தணுமாமே? அதைப் போய் வாங்கிண்டு வந்தோம். கொஞ்சம் லேட்டாயிடுத்து."

"கடவுளே..." சித்ராவுக்கு பாதி பாரம் குறைந்தது போலிருந்தது.

"நமக்கு ஏம்ப்பா இப்படி நடக்கறது?" அப்பாவின் கைகளைப் பிடித்து கண்கலங்கி கேட்டாள்.

"எல்லாம் நல்லதுக்குத்தான் சித்ரா."

"நாம கெடுதல்னு நினைச்சிண்டிருக்கறதுகூட நமக்கு நல்லது பண்ணத்தான் வந்திருக்கு."

அப்பா அவள் தலையை தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

மூர்த்தி அமைதியாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

-

# 26

"உயிருக்கொண்ணும் ஆபத்து இல்லே. அதே நேரத்துலே ரொம்ப ஈஸியான விஷயமும் இல்ல. ஒரு மாசம் பெட்லயே இருக்கணும். அதுக்குப் பிறகு ரெண்டு மாசம் ரொம்ப கவனமா இருக்கணும்.

எங்கியாவது ஆடி, போல்ட் போட்ட இடத்துல கிராக் விட்டதுன்னு வெச்சுக்கங்க. ஏகப்பட்ட குளறுபடி ஆயிடும். இன்னும் ஒரு வருஷத்துக்கு ஆடாத, ஓடாத இருக்கணும்.

ஒரு மணி நேரம் ஆகும்றதனால 'ஜென்ரல் அனஸ்தீஸியா' கொடுக்கறோம். 'போய் உங்க தம்பிக்கு தைரியம் சொல்லுங்க. ஒரு மூணு நாள் வலியோட போராட வேணும். அதுக்கு தயார் படுத்துங்க. தயவு செய்து நீங்க பயந்துடாதீங்க." டாக்டர் சொல்ல, அந்த குடும்பம் அடிபட்டு கிடக்கும் முரளிதரனை சூழ்ந்து கொண்டது.

"குட்டி... என் தங்கப்பா..." சித்ரா பாய்ந்து ஓடினாள்.

"வலி தாங்க முடியலக்கா... ஒண்ணு கத்தணும் போல இருக்கு... மயக்கஊசி போடுங்கன்னா டாக்டர் மாட்டேன்றார்." தம்பி புலம்பினான்.

"ஒரு மூணு நாள் பொறுத்துக்கடா... நீபாட்டுக்கு ஓடியாடிட்டு இருந்தே. தேவையில்லாத வேதனை, தேவை இல்லாத வலி..."

"நான் குறுக்கே போகலக்கா... பிளாட்பாரத்துல ஏறி இடிச்சான். விழுந்து திரும்பறேன், கால்ல ஏத்திட்டான் மழுக்குன்னு சத்தம் கேட்டுது... கத்தி மயங்கிட்டேன். எங்க அந்த சோம்பேறி?"

"டேய், சும்மாருடா... உன்னைக் கொலை பண்ணணும்னா வந்தாங்க... ஒரு கிரக்கார பொம்பள



முன்னியும் பின்னயும் அல்லாடிருக்கா... இவரு என்னா பண்றதுன்னு தெரியாத வண்டிய இடது பக்கம் திருப்பியிருக்காரு... இடதுபக்கம் திரும்பின உடனே நடைபாதைல இடிச்சுடுச்சு... நடைபாதைல இடிச்ச உடனே மூர்த்திக்கு கண்ட்ரோல் இல்ல..."

"யாரு மூர்த்தி...?" தம்பி முரளிதரன் கேட்டான்.

"மோட்டார் சைக்கிள் ஓட்டினவர்..." அப்பா சொன்னார்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்பா..."

"வாசல்ல இருக்காரே... அவருதானே உனக்கு போடறதுக்கு பிளேட் வாங்கிட்டு வந்தாரு..."

"எங்க அந்த ராஸ்கல்..." முரளிதரன் தன்னை மறந்து எழுந்தான். கட்டில் விட்டு காலிறக்கினான்.

நர்ஸ், "ஏசுவே..." என்று கத்தினாள். அப்பா பாய்ந்து பிடித்தார். சித்ரா பாய்ந்து நடுங்கி ஒதுங்கிக் கொண்டாள்.

"நான்பாட்டுக்கு நிக்கறேன். வந்து நங்குன்னு இடிச்சுட்டு... வந்து வாசல்ல நிக்கறானா?"

"படுறா... படுறா." அப்பா கத்தினார்.

"இதொண்ணும் மார்க்கெட் ஸ்தலமல்லா..." நர்ஸ் கோபித்துக் கொண்டாள்.

"டேய், எச்சக்கல பொறுக்கி... தைரியமிருந்தா நேரா வாடா... இடிச்சுட்டு ஒளிஞ்சுக்கின சோம்பேறி, நேரா வாடா..."

அவன் ஆஸ்பத்திரி வராந்தாவை பார்த்துக் கூச்சலிட்டான். வேறு ஏதோ யோசித்துக் கொண்டிருந்த மூர்த்திக்கு முதலில் அந்தக் கூச்சல் புரியவில்லை பிறகு தெரிந்தது. அவன் எழுந்து அந்த வார்டு நோக்கி நடந்தான் அதற்குள் முரளிதரனை எல்லோரும் சூழ்ந்து சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார்கள். அவன் போய் அருகே நின்றான்.

"ஞான் டாக்டர்ட்ட பறையும். நீ எந்தா செய்யணும் இப்போது... ஒரு அடி எடுத்து வெச்செங்கில் கால் துண்டாய் முறியும்.. கட்ட வெச்சு நடக்கும் படியாகும்.." நர்ஸ் திட்டிக் கொண்டிருந்தாள்.

"நீ ஏம்மா அவன்கூட பேசிக்கினு.. போய் டாக்டர கூட்டியா.. முழங்காலுக்கு கீழே ஒரு அங்குலம் விட்டு அறுத்துப் போட்டாருன்னா... அப்புறம் எங்க வேணா ஓட்டும்.. சும்மா ஊளைக் கூச்சலிது.." ஒரு ஆயா அவனை பார்த்து சீறினாள்.

"கத்தாத, பிளட் பிரஷர் ஜாஸ்தியாகப் போறது.."

"அது ஜாஸ்தியானா குளோரோஃபார்ம் குடுக்க முடியாது. குளோரோஃபார்ம் குடுக்கலேன்னா ஆபரேஷன் சரியா வராது. டாக்டர் கைய வாஷ் பண்ணிண்டு இருக்கார். இன்னும் அஞ்சு நிமிஷத்துல தியேட்டருக்கு கூட்டிண்டு போயிடுவாங்க. தயவு செய்து கத்தி கூச்சல் போடாத..." சித்ரா கெஞ்சினாள்.

"குளோரோஃபார்மா.. வாந்தி வருமா?" முரளிதரன் மிரட்சியாய் கேட்டான்.

"தெரியலையே.."

"லோக்கல் அனஸ்தீஷியா போறாதா? டாக்டர்ட்ட கேட்டு சொல்லு.." அவள் திரும்ப.. அங்கு மூர்த்தி வந்து நின்றான். சித்ரா திரும்பி 'சார்' என்று திகைக்க... முரளிதரன், மூர்த்தியை டாக்டர் என்று நினைத்துக் கொண்டான்.

"குளோரோஃபார்ம் தரப் போறீங்களா டாக்டர்.. எனக்கு ஒரு பத்து நாளா இருமல். லங்ஸ்ல நல்லா சளி இருக்கு. ரொம்ப வேர்வை வந்தா எனக்கு சளி புடிச்சுக்கும். நுரையீரல் மோசமா இருக்கும்போது குளோரோஃபார்ம் தரலாமா டாக்டர்.."



மூர்த்தியின் கம்பீரத்தை, வயதை, முக முதிர்ச்சியை வேகமாய் கணக்கிட்டு முரளிதரன் 'டாக்டர்' என்று அழைத்தான்.

"நான் டாக்டர் இல்லை. நான்தான் மூர்த்தி.. உங்க மேல மோட்டார் சைக்கிள் ஏத்தினவன்."

ஏற்கெனவே கோபப்பட்டு அசைந்து கால்வலி ஏற்பட்டதால் முரளிதரனால் கத்த முடியவில்லை. அந்தக் கோபம் உயரப்பொங்கி வழிந்துவிட்டதால் சட்டென்று முகத்தை திருப்பிக் கொண்டான்.

"நீங்க ஏதாவது திட்டறதா இருந்தா, திட்டிடுங்க.. டென்ஷனோட ஆபரேஷன் தியேட்டருக்கு போகாதீங்க."

மூர்த்தி மெல்ல முரளிதரனின் தோளைத் திருப்பினான். முரளிதரன் தன் கோபத்தை மௌனத்தில் காண்பித்தான்.

"அமைதியா இரு முரளிதரன்." அப்பா தலையைத் தடவிக் கொடுத்தார்.

"இருக்கேன். அவர வெளிய போகச் சொல்லு.." முரளிதரன் கரகரப்பாய் பேசினான். சித்ராவுக்கு அந்த பேச்சு பிடிக்கவில்லை. என்ன காரணமிருந்தாலும் ஒருவரை அவமதிப்பாக நடத்துவது அவள் வீட்டில் சொல்லி தரப்படவில்லை. அதுவும் தானே முன்வந்து தான் செய்த தவறுக்கு ஈடு செய்கிற ஒருவரை அவமானப் படுத்துதல் தகாது.

"நீ பண்றது தப்புடா.. ரொம்ப சுள் சுள்ளுன்னு பேசறேனுதான் உனக்கு இது நடந்துருக்கு.."

"இதவிட மோசமா நடக்காம இருந்ததே.. அதுக்கு நன்றி சொல்லத் தெரியல.."

"இடிச்சிட்டு எங்கயும் ஓடிப்போகாத, கூடவே நிக்கற ஆளை இழிவுபடுத்தறதும் தப்பு. நடந்தது நடந்து

போச்சு. பேசாத இரு..." அவள் அதட்ட, மூர்த்தி வெளியேறினான்.

முரளிதரன் தியேட்டருக்குள் கொண்டு போகப்பட்டான்.

"சும்மா இங்கயே நிக்க வேணாம். வெளிய போய்ட்டு ரெண்டு மணி நேரம் கழிச்சு வாங்க. இது கொஞ்சம் நிதானமாதான் செய்யணும். மாணவர்கள் ஆறு பேர் வரணும். அவங்களுக்கு எக்ஸ்ரே காட்டி பாடம் நடத்தினத்துக்கு அப்புறம்தான் குளோரோஃபார்ம் ஆரம்பிப்பேன்."

சித்ராவின் குடும்பம் வெளியே வந்தது.

"அதுக்குள்ள வீட்டுக்குப் போயிட்டு வந்துடலாம். வெளிய வந்தபிறகும் முரளிதரன் மயக்கமாதான் இருப்பான். அப்பா இருக்கட்டும்... நாம போயிட்டு வந்துடலாம் வா.." அம்மா சித்ராவை அழைத்தாள்.

"நான் வரலைம்மா... அப்பாவ கூட்டிட்டுப் போ. அவர் குளிச்சு சாப்டுட்டு ராத்திரி தங்கறா மாதிரி வரட்டும். இருட்டின பிறகு நான் வீட்டுக்கு வந்துடறேன்."

"அது வரைக்கும் தனியாவா இருப்பே.."

"இல்ல... மூர்த்தி இருப்பாரே..."

ஏன் அப்படிச் சொன்னோம் என்று சித்ராவிற்கு தெரியவில்லை. சற்று பயந்து மூர்த்தியை பார்த்தாள்.

"அவரும் போகணுமோ என்னவோ... அவரை நம்பி நீ இருக்க முடியுமா?"

"அவர் போனாலும் நான் இருப்பேன்மா... இங்க யாராவது இருக்க வேண்டாமா."

"நான் போலீஸுக்கு ஆக்ஸிடெண்ட்னு ரிப்போர்ட் பண்ணிட்டேங்க... அவங்ககிட்டேருந்து எஃப்.ஐ.ஆர். வேணும். அதைக் கொண்டுபோய் இன்ஷூரன்ஸ் கம்பெனிக்கு கொடுக்கணும். இன்ஷூரன்ஸ் கம்பெனில விபத்து பத்தி எழுதிக் கொடுக்கணும். முரளிதரனை அவங்க வந்து பார்க்கணும்."



"நீங்க உங்க வேலைய கவனிங்க. நான் இங்க இருக்கேன்.." சித்ரா தோல் பையை இறுக்கிக் கொண்டு பின்னடைந்தாள். சட்டென்று நினைவுக்கு வந்து மூர்த்தியின் விலாசம் கேட்டாள். குறித்துக்கொண்டாள். வீடு அவளை தனியே விட்டுப் போகத் தயங்கியது.

"ஒண்ணும் கவலைப்படாத போப்பா. ஆஸ்பிடல் ஜேஜேன்னு இருக்கு. நான் ரெண்டு மாத நாவல் வச்சுண்டு இருக்கேன்."

"பசிக்கலியா..?"

"பயத்தால ஒரு பசி வந்தது. ஒரு கப் காபி குடிச்சா போதும். நீங்க கிளம்புங்க.."

அவள் வீடு ஆட்டோ தேடியது. ஏறி உட்கார்ந்து பறந்தது.

"நாம போலாங்களா..." மூர்த்தி, சித்ராவை மிருதுவாகக் கேட்டான்.

"நான் இங்கேயே இருக்கேன்."

"தேவையில்லீங்க. எதிர்ல ஒரு ஹோட்டல் இருக்கு. காபி சுமாரா இருக்கும். ஒரு கப் காபி சாப்டுட்டு வந்து உட்காரலாம்." அவன் அழைக்க... அவள் தயங்கினாள். தாகம் வறட்ட, 'சரி' என்று தலையசைத்தாள்.

அவர்கள் பேசாது காபி குடித்தார்கள்.

"நீங்க எங்க வேலை செய்யறீங்க..?" என்று வெளியில் வரும்போது கேட்டான். அவள் ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னாள். அவள் ஆஸ்பத்திரி வராண்டாவிற்கு போக... அவன் வெளியே மோட்டார் சைக்கிளில் அமர்ந்து கொண்டான்.

"நீங்க போகலை..?" அவள் கேட்டாள்.

"இல்லீங்க.."

"ஏன்?"

"உங்க வீட்லருந்து யாராவது வரட்டும். நான் போறேன்."

"எதனால?"

"ஆஸ்பத்திரியில ஆளிருந்தாலும் உங்கள தனியா விடறதுக்கு மனசில்ல.."

"நான் என்ன சின்னக் குழந்தையா..?"

"பெரியவங்கதான். எதுனா சிரமம் ஆயிப்போச்சுன்னு வெச்சுக்கங்க.. ரெண்டாவதா ஒரு பழி எம்மேல விழும். அதான் போகாத இருக்கேன்."

அவன் காதோரம் நரைத்திருப்பதைப் பார்த்தாள். முகத்தில் ஓடிய கவலைகளைப் பார்த்தாள். அவனிடம் இருந்து துள்ளுகிற இளமை நகர்ந்து கொண்டிருந்தது நன்கு தெரிந்தது. மத்திம வயதின் சின்னங்கள் அவனிடம் அதிகம் இருந்தன.

"போலீஸ் ஸ்டேஷன் போகணும்னீங்களே.."

"நாளைக்குககூட போயிக்கலாம்."

"இன்ஷூரன்ஸ் கம்பெனி..?"

"ஒரு வாரத்துக்குள்ள எப்ப வேணா போயிக்கலாம்."

"நான் இங்க நிக்கறதால நீங்க நின்னுட்டீங்களா.."

"ஆமா.."

"வாங்க போவோம்."

அவன் இதை எதிர்பார்க்கவில்லை.

"ஒருவேளை இங்க ஏதாவது தேவையா இருந்தா.."

"இருக்காது."



சித்ரா அவன் வண்டியை ஸ்டார்ட் செய்ததும் பின்னால் ஏறி உட்கார்ந்தாள். அவர்கள் முக்கால் மணி நேரத்தில் இரண்டு வேலைகளையும் முடித்துவிட்டு மறுபடியும் ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள்.

"இப்பதான் டாக்டர் ஒப்பன் பண்ண ஆரம்பிச்சு இருக்கு..." என்று கேள்விப்பட்டு நிம்மதியானார்கள் எதிரும் புதிருமாய் உட்கார்ந்து ஒருவரை ஒருவர் விசாரித்தார்கள்.

"டைவர்ஸியா.. ஏதாவது கொடுமை பண்ணியிருப்பீங்க. அதான் டைவர்ஸ் வாங்கிட்டுப் போயிட்டாங்க."

"இல்லீங்க. நான் ஒரு கொடுமையும் பண்ணல. நான் கொஞ்சம் ஏமாளி.. யார் எது சொன்னாலும் நம்புவேன். மனுஷங்க பொய் சொல்ல மாட்டாங்கன்னு நம்புவேன். ஒருத்தரை ஒருத்தர் ஏமாத்த வேண்டிய அவசியமில்லையேன்னு நினைப்பேன். நாம நினைக்கிற மாதிரி உலகம் இல்ல. என்னை ஏமாத்தினாங்க. மூணு மாசம் நான் கஷ்டப்பட்டுட்டேன். இப்ப ஒண்ணரை வருஷமா அவங்க கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்காங்க."

"என்ன கஷ்டம்?"

"அவளை சமாளிக்க முடியல. 'நான்தான் சாவப் போறேனே. எனக்கு மருந்து குடு'ன்னு அழுவறா.. இப்ப அவங்களே போதை ஊசி போட்டுக்கிட்டு இருக்காங்க. அவங்களே கொஞ்சம் கொஞ்சமா கொன்னுகிட்டு இருக்கிறாங்க."

"நீங்க ஏன் அவங்கள மாத்த முயற்சிக்கக் கூடாது?"

"மாத்த முயற்சிக்கிறதுக்கு ஒரு எல்லை இருக்குதுங்க. என்கிட்ட வரும்போதே அவங்க எல்லைய தாண்டிட்டாங்க."

"இப்ப நீங்க தனியாதான் இருக்கீங்களா?"

"ஆமா.."

"சாப்பாடு.."

"ஹோட்டல்."

"ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணக் கூடாது?"

"பயமாயிருக்கு.."

"உலகத்துல நிறைய பேர் நல்லவங்க இருக்காங்க சார்.."

"அப்படி யாரும் பார்த்ததே இல்லியே.."

"எங்கப்பா ரொம்ப நல்லவர் சார்... எங்க வீடு வறுமைதான். ஆனா எங்கப்பா யாரையும் கோவிச்சுக்கவே மாட்டார். நிறைய பூஜை பண்ணுவார். பொம்மைய பூஜை பண்ணிட்டு பொண்டாட்டிய கோவிச்சுக்கறது தப்புன்னு சொல்வார். 'நான் பொண்டாட்டிய பூஜை பண்ணினவன். குழந்தைகள வரமா வாங்கினவன். எனக்கு ஒரு குறையும் இல்லே'ன்னு சொல்லுவார். கோபப்படறதுக்கு விஷயமே இல்லேன்னுவார். நாங்க கோபப்பட்டா சிரிப்பார்.

எதுக்கு சிரிக்கிறேன்னு கேட்டா, 'அகங்காரம்தான் கோபப்படும். உன் அகங்காரம் நன்னா தெரியறது' அப்படிம்பார். எங்களுக்குப் பொசுக்குனு போய்டும்.

என் தம்பி அப்படி கோபப்பட்டது பிசகு. அந்த மாதிரி சீறி விழறது எங்கப்பாவுக்கு பிடிக்காது. அவனை முறைச்சு பார்த்தவுடனே அவன் அடங்கிட்டான்."

"என்மேல தப்பிருக்கே... அதான் நேரா வந்து நின்னேன்."

"எனக்கு அதுவும் பிடிச்சிருந்தது. திட்டினா திட்டிக்கோன்னு வந்து நின்னீங்க. நல்ல மனசுதான் அப்படி வந்து நிக்கும். நீங்க இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம்."



"இல்லீங்க. எனக்கு வேற எண்ணம் இருக்கு. என்னுடைய சிநேகிதர் ஒருத்தர் சொந்த வாழ்க்கை சரியில்லாம டைவர்ஸ் வாங்கினப்போ.. அவருடைய ஒரே பையனையும், பொண்டாட்டி எடுத்துக்கிட்டுப் போனப்போ.. நேரா 'உதவும் கரங்கள்' வித்யாகர்கிட்ட போய் நின்னுட்டார்.

அங்க் தங்கி வேலைக்கு போய் வந்துகிட்டிருந்தார்.

அப்புறம் தன் வேலைய விட்டுட்டு, உதவும் கரங்களே வேலையா உட்கார்ந்துட்டார். போன மாசம் அவரை பார்த்தேன், எவ்வளவு சந்தோஷமா இருக்கார் தெரியுமா? 'நானூத்தி நாற்பது குழந்தைங்க இருக்கு எனக்கு. நான் ரொம்ப நல்லாருக்கேன்'னு சொல்றார்."

"கேட்க நல்லாத்தான் இருக்கு. ஆனா எல்லாரும் திருமணத்த வெறுத்தா அது தப்பாகாதா...?" சித்ரா வியப்போடு கேட்டாள்.

"முரளிதரன் வெளிய வராரு. நீங்க பாத்துட்டு வீட்டுக்குப் போங்க..." நர்ஸ் கூவினாள். முரளிதரன் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருந்தான். காலில் பெரிதாகக் கட்டுப் போடப்பட்டு இருந்தது. ஸலைன் ஏற்றப்பட்டு இருந்தது.

"எட்டு மணி நேரம் கழிச்சுதான் முழிப்பாரு.. காலைல வாங்க, போதும்."

அப்பா அரக்க பரக்க ஓடிவந்தார்.

"பிளேட் போட்டுட்டாங்களாம். ரெண்டு மூணு நாள் வலியிருக்கும். மத்தபடி பயமில்லேன்னாங்க. மூர்த்தி சாரோட நான் போய் இன்ஷூரன்ஸ் கம்பெனிக்கு ஒரு லெட்டர் கொடுத்துட்டு வந்தேன். மூர்த்தி சார் வக்கீல் ஏற்பாடு பண்றேன்னு சொல்றார்.

"நீங்க வீட்டுக்கு போயிட்டு வாங்க சார்.. காலைல இருந்து நீங்களும் இங்கேயே இருக்கீங்க."

அப்பா, பிள்ளைக்கு அருகில் போனார், அவள் வீட்டிற்கு போக பஸ் ஏறினாள். அவர்கள் போன பிறகு மூன்று ஆயாக்களுக்கும், இரண்டு நர்ஸ்களுக்கும் காசு கொடுத்துவிட்டு அவன் மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தான். உடம்பில வலுவே இல்லாதது போல் ஒரு வேதனை இருந்தது.

ஆஸ்பத்திரி வாசலைத் தாண்டுகிறபோது எதிரே இரண்டு கார்கள் விரைந்து வந்தன. அவன் ஒதுங்கினான்.

“டேய், மூர்த்திடா... நிறுத்து, நிறுத்து...” யாரோ கூவினார்கள்.

அந்தக் குரல் அவனுக்கு பரிச்சயமாக இருந்தது. அவன் வண்டியை திருப்பி காரருகே வந்தான். காரில் இருந்து ஒரு பெண்ணை இறக்கி ஒரு ‘ஸ்ட்ரெட்சரில்’ படுக்க வைத்தார்கள்.

அது அவன் மனைவி. பழைய மனைவி.

அவள் பெண்ணல்ல- கிட்டத்தட்ட பிரேதம். எல்லா நினைவுகளையும் இழந்த பிரேதம். வாழ்வின் கடைசியில் அவள் புருஷனைப் பார்க்க வந்துவிட்டாள் அவளை அவசரப் பிரிவிற்குள் எடுத்துப் போனார்கள். ஐந்து நிமிடத்தில் வெளியே வந்தார்கள். ஹிருதயம் மெல்லிய தாய் துடித்துக் கொண்டிருக்கிறது என்றும், இன்னும் சிறிது நேரத்தில் அவள் இறந்துவிடுவாள் என்றும் அவனுக்கு தெரிவிக்கப்பட்டது. விதி வலிது.

அவள் இங்கே முடிவுக்காக வருவாள் என்று தெரிந்தே இவனை விதி ஒரு விபத்து மூலம் இங்கே வரவழைத்திருக்கிறது.

அவளோடு அவன் புரிந்த போர்கள் ஞாபகம் வர, அவன் உடம்பு நடுங்கி உட்கார்ந்தான். யாராவது தன்னை அணைத்துக் கொள்ள மாட்டார்களா என்று ஏங்கினான்.



“பல்லக் கடிச்சுகிட்டு ஒண்ணரை வருஷம் அவகூட இருந்திருக்கக்கூடாதா...? டைவர்ஸ் வாங்கிட்டுப் போனீங்களே டைவர்ஸ்- என் பொண்ணு கெட்டிக்காரி- இட்டாந்துட்டா பாரு உன்னை...” அவள் வீடு எகிறி எகிறிப் பேசியது.

அவன் நொந்து போய் எல்லா வசவுகளையும் கேட்டு கொண்டு இருந்தான்.

“மறுபடியும் தனக்கு ஏன் நல்ல மனிதர்களின் தொடர்பு ஏற்படவே இல்லை?” என்கிற ஏக்கம் எழுந்தது.

“எனக்கு பொண்டாட்டி தெய்வம். குழந்தைகள் பெரிய வரம்.. கோபப்படறதுக்கு என்ன இருக்கு..’

ஒரு குரல் காதில் விழுந்தது.

“என் பொண்ண அநாதைய சாவடிச்சுட்டியேடா பாவி...” ஒரு முதிர்ந்த பெண்மணி, அவன் முதுகில் ஓங்கி அறைந்தாள். மூர்த்தி வலியால் துடித்தான்.

# 27

‘**பி**ராரப்த கர்மா’ என்று வடமொழியில் அதை சொல்கிறார்கள். முன்வினைப்பயன் என்று தமிழில் சிலம்பு உள்ளிட்ட பல நூல்கள் அதைப் பேசுகின்றன.

இவன் அருகே இவள் இறந்துபோக வேண்டும் என்று எழுதி வைத்ததுபோல் நடக்கிறது. வேண்டாம் என்று அவர்களே விலகிப்போன பின்னும் இவர் மரணத்தை காணும்படி நேர்கிறது. அந்த மரணத்தை காண்பதிலும் அவமானம் வருகிறது.

ஏதோ அவனால் இந்த அவலம் நேர்ந்தது போல- அவன் மரணத்திற்கு அவன்தான் காரணம் என்பதுபோல கூச்சலும், குழப்பமும் தேவையற்று கிளம்புகின்றன.

பெண்ணைப் பெற்றவள் பைத்தியம்போல் நடந்து கொள்கிறாள். பெண்ணின் சகோதரர்கள் அதனைக் கண்டு கொள்ளாது நடந்து கொள்கிறார்கள்.

ஆஸ்பத்திரியில் இருக்கும் நூற்றுக்கணக்கான கூட்டம் அவனைப் பார்த்து முகத்தை திருப்பிக் கொள்கிறது. இப்போது என்ன செய்வது? இந்த இடத்தை விட்டு ஓடிவிட வேண்டும்? இவளை எனக்குத் தெரியாது. இவளுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று கத்த வேண்டுமா?

எதற்கு... எதற்கு இந்தக் கூச்சல்? இவர்கள்தான் அறிவில்லாத ஜனங்கள். நாகரீகமில்லாத பெண்கள். ஆத்திரமே வார்க்கையாகக் கொண்டவர்கள். அந்த ஆத்திரத்தை ஆபாசமாக வெளிப்படுத்துவார்கள்.

இவர்கள் முக்கியமில்லை. இறந்துபோய்க் கொண்டிருக்கும் அந்த பெண் முக்கியம்.

எந்த ஜென்மத்து கடனோ.... எந்தப் பிறவியில் ஏற்பட்ட உறவோ... என்ன மிச்ச மீதியோ... இங்கே ஒரு தொடர்பு ஏற்பட்டுவிட்டது. இந்தத் தொடர்பு இப்போது மரணமாகவும் வந்து நிற்கிறது. இந்த மரண நேரத்தில் இந்தப் பெண்ணுக்கு அருகே இருப்பதில் என்ன தவறு?

விதிவசத்தால் ஒரு கெட்ட பழக்கத்தில் மாட்டிக் கொண்டாள். ஒருவேளை மூச்சு பிரியும் நேரம் கண் விழித்தால், உன் மீது எனக்கு கோபமே இல்லை என்று நான் சொல்லலாம். கடவுள் உன்னை காப்பாற்றுவார் என்று ஆறுதல் சொல்லலாம். பிரியமாக நான்கைந்து வார்த்தைகள் பேசலாம். இந்தக் கூச்சல்கள் அந்த பெண்ணை கலவரப்படுத்தும்.

எனவே, யார் என்ன கூச்சலிட்டாலும், எவ்வளவு முரட்டுத்தனமாக நடந்துகொண்டாலும் அந்தப் பெண்ணிற்கு அருகே இருப்பது நல்லது.



மூர்த்தி அவளுக்கு அருகே போய் அவள் விரல்களை கோத்துக் கொண்டான்.

டாக்டர்கள் 'யார்' என்று கேட்க, 'விவாகரத்து செய்த கணவன்' என்று சொன்னான். டாக்டர்கள் அவனை அதிசயமாகப் பார்த்தார்கள். அவன் நினைத்தது போலவே அவள் கண் விழித்தன். அவனை உற்று பார்த்தாள்.

"யாரது..." என்று வியப்போடு தேடினாள். புரிந்து கொண்டாள், உதடு கோணி அழுதாள். போய் வருகிறேன் என்பது போல் தலையாட்டினாள். யோசித்த அயர்ச்சியில் கண் மூடினாள். ஒருமுறை உடம்பு தூக்கிப்போட இறந்தாள்.

அவன் கைகளை விடுவித்துக் கொண்டான். விலகினான், வராண்டாவிற்கு வந்து, 'விதி ஏன் இத்தனை வேகமாய் என்னிடம் விளையாடுகிறது?' என்று வியந்தான். அவன் கண்களில் நீர் வழிந்தது.

"என்ன மூர்த்தி... என்னாச்சு?" சித்ராவின் அப்பா முதுகு தொட்டார்.

"என்னமோ நாடகம் நடக்குது சார்! என்னன்னு புரியலை. நான் டைவர்ஸி சார். என் மனைவியைக் கொண்டாந்து அட்மிட் பண்ணினாங்க. அஞ்சு நிமிஷம் முன்னால செத்துட்டா சார். என் மடியில்... என் கைய புடிச்சுக்கிட்டே அவங்க உயிர் போச்சு சார். அவங்கள பாக்கத்தான் நான் ஆஸ்பத்திரிக்கு வந்தேன்னு தோணுது சார்! அதுக்காகத்தான் இந்த ஆக்ஸிடெண்ட் நடந்து தோன்னு நினைக்கறேன் சார்."

"இருக்கலாம். இருக்கலாம். பொண்டாட்டி புருஷன் உறவு சாதரணமானதா... நான் உனக்கு என்ன ஹெல்ப் பண்ணணும்?"

"நான் கூடப் போகணுமா... இல்லை, வீட்டுக்குப் போயிடலாமா? அவங்க வீட்டு லேடீஸ் கொஞ்சம் கோபமா கத்தறங்க சார்..."

"ஒண்ணு செய். நீ என் பிள்ளைகிட்ட போ. நான் இந்தக் கூட்டத்துல பேசி அபிப்பிராயம் கேட்டு உனக்குச் சொல்றேன்."

"இங்க நீ யார்றான்னு மோசமா பேசுவாங்க சார்_ அவமானப்படுத்துவாங்க."

"நிறைய அவமானம் பார்த்தாச்சு. அதனால இதெல்லாம் கஷ்டமில்லே."

இரவு முழுவதும் அவர்கள் உடல் வாங்குவதற்காக காத்திருந்தார்கள், மறுநாள் காலை எட்டு மணி வரை காத்திருக்க வேண்டுமென்று அவர்களுக்கு சொல்லப் பட்டது. இடைப்பட்ட நேரத்தில் சித்ராவின் அப்பா இறந்தவளின் உறவினர்களோடு பேசி 'மூர்த்தியே எரியூட்டட்டும்' என்று சொன்னார். பலத்த விவாதத் திற்குப் பிறகு அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

அவன் தன்னுடைய இடத்திற்குப் போய் உடை மாற்றிக் கொண்டு சித்ரவின் அப்பாவிற்கு அருகே வந்து உட்கார்ந்து கொண்டான்.

"சுடுகாட்ல போய். மறுபடி கோபப்படுவாங் களோன்னு தேணுது சார். நீங்க கூட வர முடியுமா..?"

"வர்றேனே.."

"கடவுளே-எவ்வளவு சுலபமா சரின்னு சொல்றீங்க.."

"இதெல்லாம் முக்கியமான நேரம். நல்லதுக்குப் போறமோ, இல்லியோ, கெட்டதுக்கு துணை நிக்கணும். மோசமான நேரத்துல நிச்சயமா உதவி செய்யணும்."

அப்பாவிற்கு டிபன் கொண்டு வந்த சித்ராவிற்கு சகலமும் சொல்லப்பட்டது.

"அடடா... தெரியாம போய்ட்டுது. இல்லைன்னா இவருக்கும் டிபன் கொண்டு வந்திருக்கலாம்."



"அதனால என்ன... என் டிபனை இவர் சாப்பிடட்டும். நைட்டே இவரு சரியா சாப்பிடலை."

அவள் டிபன் பாக்ஸைப் பிரித்து எதிரே வைத்தாள்.

"அப்பா காட்டுக்குப் போயிட்டு.. அவரு எங்க போவார்? எங்கே குளிப்பார்?"

"ரூமுக்குப் போவேன். ஹோட்டல்ல சாப்பிடுவேன்."

"வேணாம். எங்க வீட்டுக்கு வந்திருங்க. வந்து எங்கப்பா வேட்டிய உடுத்திக்கங்க. எங்க வீட்ல சாப்பிடுங்க."

"சே, அப்படி வரலாமா?"

"சம்பிரதாயமா கேக்கறியா? எனக்குத் தெரியாது? ஆனா, நீ எங்க போவே? நீ எங்கியோ போறத்துக்குப் பதிலா எங்க வீட்டுக்கு வந்தா என்ன?"

"சார்... என்னால உங்களுக்கு கெடுதல் நடந்து இருக்கு. எனக்குப் போய் சோறு போடறீங்களே_"

"எனக்கு யாரும் கெடுதல் பண்ண முடியாதப்பா. ஏன்னா.. நான் யாருக்கும் கெடுதல் பண்ணலை."

"உடம்பெல்லாம் அம்மை வார்த்த குழந்தை, வேற வீட்டுக்குப் போகலாமா? பக்கத்து வீட்ல துக்கம் நடந்தது. குழந்தைக்கும் அம்மை போட்டிருந்தது. நான் குழந்தைய கொண்டு வந்து எங்க வீட்டு ஹால்ல போட்டு விசிறி, விசிறி தண்ணி கொடுத்துண்டு இருந்தேன். பத்து நாள்ல எல்லாம் சரியாயிட்டுது. எல்லாம் மனசுதான். சடங்கு சம்பிரதாயத்தைவிட அன்புதான் அடிப்படை."

அவன் விவாகரத்து செய்த மனைவியை காட்டில் எரித்துவிட்டு இவர்கள் வீட்டிற்கு வந்தான். குளித்தான். அவர்கள் கொடுத்த உடையை உடுத்திக் கொண்டான். அவர்கள் பரிமாறிய உணவை சாப்பிட்டான்.

சித்ராவின் அம்மா, விவாகரத்து விஷயங்களை கேட்டு தலையிலடித்துக் கொண்டாள்.

"நல்ல மனுஷனுக்கு மேசமான பொண்டாட்டி, நல்ல பொண்ணுக்கு மோசமான புருஷன். எனக்கு நல்ல புருஷன் கிடைச்சான். ஆனா பாருங்கோ, சம்பாதிப்பு போறலை.

இவருக்கு வியாபாரம் பண்ணத் தெரியலை. ஏமாத்தறா. வியாபாரம் நமக்கு சரிபட்டு வராதுன்னு தெரிஞ்சப்போ. வயசாயிட்டது. ஒரு ஆபீஸ்ல சேர முடியலை. எங்கியோ கூலி வேலை மாதிரி போயிண்டு இருக்கார். எங்க சித்ராவுக்கு தலையெழுத்து. காசு கொண்டு வரா... காலட்சேபம் ஓடறது. இல்லைன்னா வறுமை. தூக்கு மாட்டிண்டு தொங்கறமாதிரி வறுமை.

அஞ்சு ரூபா, ரெண்டு ரூபா... முக்கியமான காசு எங்களுக்கு. இதுக்கு நடுவிலதான் சித்ரா படிச்சு வேலைக்குப் போனா. இன்னும் அவளுக்கு கல்யாணம் நடக்கணும். என்ன பண்ணப் போறோம்னு தெரியலை. கைக்கும் வாய்க்கும் சரியா இருக்கு.

குழந்தை அடிபட்டுட்டான்னு தெரிஞ்ச உடனே எம்மனசுல 'ஐயோ, காசுக்கு என்ன பண்ணுவோம்... யாருகிட்ட கடன் வாங்குவோம்?'னுதான் தோணுச்சு."

சித்ராவின் அம்மா கண்களின் ஓரம் கண்ணீர் கட்டப் பேசினாள்.

"இல்லீங்க மாமி... பையனை பத்தி கவலைப்பட வேண்டாம். அவனை நடக்கிற மாதிரி வீட்டுக்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டிய பொறுப்பு என்னுடையது. ஜெனரல் ஆஸ்பத்திரிகூட வேண்டாம். எந்த டாக்டர் ஆபரேட் பண்ணினாரோ அவருடைய கிளினிக் போயிடலாம். அது நம்ம வீட்ல இருந்து கிட்ட இருக்கு. சித்ரா அனாவசியமா அலைய வேண்டாம்."

சித்ராவின் தம்பியை ஆஸ்பத்திரி மாற்றினார்கள். சித்ராவின் அப்பா இரண்டு நாள் லீவு போட, சித்ரா



மூன்று நாள் லீவு போட்டாள். அவன் கதையை கேட்டாள். மூர்த்தியின் அமைதி அவளுக்குப் பிடித்து இருந்தது.

சித்ராவின் தம்பி கால் காயம் ஆறியதும் நடக்கச் சொன்னார்கள். வீட்டிலேயே இன்னொரு பத்து நாள் தங்கி ஓய்வெடுக்கச் சொன்னார்கள்.

அவன் வீட்டிற்கு வந்த மறுநாள், சித்ராவிற்கும் சித்ராவின் அம்மாவிற்கும் மூர்த்தி பட்டுப் புடவைகள் வாங்கிக் கொடுத்தான்.

"ஏன்... எதுக்கு...?"

"என் பொண்டாட்டி செத்துப்போய் பதிமூணு நாள். அவ நெனப்பா உங்களுக்கு தர்றேன்."

வீடு வியந்து போய் நின்றது.

"என் வாழ்க்கையில இதுதான் முதல் பட்டுப் புடவை." சித்ரா திகைத்தாள்.

"உங்களுக்கு போய் இப்படி ஒரு பொண்டாட்டி கிடைச்சுது பாருங்க. எனக்கு அதான் ஆச்சர்யமா இருக்கு."

"சித்ரா டெலிபோன் டிபார்ட்மெண்ட்ல கிளார்க் வேலைக்கு ஆள் எடுக்கறாங்க. அதுக்கு அப்ளை பண்ணுங்க. எக்ஸாம் எழுதுங்க. நான் மாடல் பேப்பர் கொண்டு வந்து தர்றேன்."

ஏதாவது சாக்கிட்டு வந்தான். அவன் வந்த போதெல்லாம் அந்த வீடு சந்தோஷத்தில் குதித்தது.

அவன் நாலு நாள் வரவில்லை என்றால், அவன் அலுவலகத்திற்கு போன் பேசினார்கள். அவனை வரச் சொல்லி கெஞ்சினார்கள்.

"ரொம்ப உரிமை கொண்டாடறேனோன்னு பயமா இருக்கு சித்ரா. ஒரு வயசுப் பொண்ணு இருக்கிற வீட்டுக்கு அடிக்கடி வந்தா யாராவது ஏதாவது சொல்லலாம். சொன்ன பிறகு பின்னடையறதவிட சொல்றதுக்கு முன்னாடியே விலகிடறது பெட்டர் இல்ல?"

"யாராவது எதுனா சொல்லிட்டுப் போகட்டும். நீங்க வாங்க."

"நான் வெறுமனே வரமுடியாது சித்ரா. நான் வர்றதுக்கு ஏதாவது உரிமை வேணும்."

"என்ன உரிமை?"

"உலகப் பார்வையில ஒருத்தன், ஒரு பொண்ணுக்கு உறவா இருக்கணும். ஒண்ணு அண்ணனா இருக்கலாம் இல்ல கணவனா இருக்கலாம். எனக்கு என்னவா இருக்கிறதுன்னு தெரியலை. அதனால வர்றத நிறுத்திட்டேன்."

"எனக்கு நல்ல தம்பி இருக்கான். அண்ணா இல்லை. ஆனா, அண்ணா வேண்டாம். எனக்கு வீட்டுக்காரரா இருங்களேன். என்னை கல்யாணம் பண்ணிக்கோங்களேன்."

"தேங்க்யூ சித்ரா! நெஜமாகவே உனக்கு ரொம்ப பெரிய மனசு. வெட்கங்கிற போர்வையில நிறைய பேர் பொய் சொல்லுவா. உனக்கு பொய் சொல்லத் தெரியலை. அதனால பொய்யான வெட்கமும் படலை. பிரச்சினையைச் சொன்ன உடனே எளிமையா, கம்பீரமா உன் அபிப்பிராயத்தைச் சொல்றே... உனக்கு ஏமாத்த தெரியலை சித்ரா. உங்க வீட்ல யாருக்குமே தெரியலை. இதுதான் வீடு. இதுக்கு பேர்தான் வீடு. நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன் சித்ரா...

ஆனா உன்னைவிட நான் பதினோரு வயசு ஜாஸ்தி. காதோரம் நரைக்க ஆரம்பிச்சுடுச்சு."

"கவலையே படாதீங்க. எங்க வீட்ல எல்லோருக்கும் சீக்கிரம் நரைச்சுடும். இன்னும் பத்து வருஷத்திலே உங்களைவிட கிழவியாயிடுவேன்."

"நீ கிழவியாகணும்னு நான் ஆசைப்படல சித்ரா."

"நான் ஆசைப்படறேன். சின்ன வயசுலேயே நிறைய தெரிஞ்சுக்கணும்னு ஆசைப்படறேன். உடம்பு தடுமாறி



காது கேட்காம, கண்ணு தெரியாம அவஸ்தைபடறதுக்கு முன்னாடி இதுதான் வாழ்க்கைன்னு தெரிஞ்சுக்க ஆசைப்படறேன். ஒரு ஐம்பது வயசுல கஷ்டப்படறவாளோட பேசி ஆறுதல் சொல்றதுக்கு ஆசைப்படறேன்.

எனக்கு நல்ல அப்பா, அம்மா கிடைச்சிருக்கா. நல்ல புருஷன் கிடைச்சுட்டான்னு வெச்சுக்கங்க... ஒரே ஒரு பிள்ளைய பெத்து அவனை வேலைக்கு அனுப்பிட்டு... அல்லது வெளிநாட்ல படிக்க அனுப்பிச்சுட்டு உலகத்துல மனசு வேதனைப்பட்டவாளோட பேசணும்.

எங்கம்மா என்னை மாதாஜி, மாதாஜின்னு கேலி பண்ணுவா. எல்லோருக்கும் அம்மாவா இருக்கணும்னு எனக்கு ஆசை.. பேராசை. இது ஒரு மாதிரி கர்வமோன்னு ஒரு பயம் வர்றது. நடிகையாகி எல்லோரையும் கவர முடியாது. அதனால் மாதாஜி ஆகறமோன்னு தோன்றது."

"அப்படி இல்ல சித்ரா, எங்கியாவது யார்கிட்டயாவது வேதனைய அனுபவிச்சுட்டு இருக்கிற பெண்கள். இன்னொருத்தருக்கு உதவி செய்ய முடியாது. ஆசை இருந்தாலும் முழுசாக முடியாது. சந்தோஷமா இருக்கறவங்க கர்வமில்லாம இருந்தா, அன்புள்ளவங்களா மாறிடலாம். நல்ல அப்பா, அம்மா, நல்ல புருஷன் கிடைச்ச எல்லோருமே மாதாஜிதான். ஆனா, லட்சம் பேரில் ஒரு பெண்மணிக்குதான் கிடைக்குது.

நீ ஐம்பது வயசுல மாதாஜி ஆகறதுக்கு நான் உன்னை இப்பவே தயார் பண்றேன்! ஒரு சின்ன பொய்கூட இல்லாம சுத்தமா மனசை வச்சுக்கிறதுக்கு நான் உதவி பண்றேன்.

புடவை வாங்கணும், கார் வாங்கணும், வீடு கட்டணும்னு சொல்லாம... மாதாஜி ஆகணும்னு சொல்ற

பெண்… எனக்கு தோணுது. அப்பாகிட்ட சொல்லிடு சித்ரா."

"கடவுளே.. நீங்களே சொல்லுங்க.."

"ஏன்.."

"கொஞ்சம் வெட்கமா இருக்கு."

"என் கிட்டே வெட்கமில்லாம சொல்லிட்டே…?"

"நீங்க சரின்னு சொன்ன உடனே ஒரு வெட்கம் வந்துடுச்சு. அப்பாகிட்ட நீங்களே சொல்லுங்க ப்ளீஸ்.."

மூர்த்தி சொன்னான். சித்ராவின் அப்பா திருமண தேதி குறிக்க ஜோஸியரிடம் போனார்.

"ஒரு வருஷத்துக்குள்ளே கல்யாணம் நடக்கலாம்.. நடக்கணும்."

உறவுகள் வந்து பேசினார்கள். அந்த வீடு களை கட்டத் துவங்கியது.

சித்ராவும் மூர்த்தியும் பொங்கிப் பொங்கி காதலிக்க ஆரம்பித்தார்கள். காதல் மிகச் சரியாக மலர்ந்துவிட.. கல்யாணம் வெறும் சடங்காகத்தான் போய்விடுகிறது ஒரு விளம்பரமாகத்தான் எஞ்சி நிற்கிறது. ஒரு அறிவித்த லாகத்தான் நடத்தப்படுகிறது.

மூர்த்தியின் வயசு.. அதன் அனுபவம் சித்ராவிற்கு பெரும் விருந்தாக அமைந்தது. விவாதிக்க விவாதிக்க மனம் மலர்ந்து முகம் பிரகாசமாயிற்று. அவர்கள் திருமணம் மிக எளிமையாகவும், மிகுந்த நிறைவாகவும் இருந்தது. அவர்கள் மிக, மிக சந்தோஷமாக வாழ்ந் தார்கள்.

-: முற்றும் :-

CPL 694753

p. 264
26/7/10

26 JUL 2010